இறை செய்திகள்

Lockdown - I

Bro Johnson Victor

St. MARY'S MISSION

ஊழியர் காணொளி கூடுகை

செய்தி: சகோ. ஜான்சன் விக்டர்

Table of Contents

1. ஆண்டவர் திருத்துவதை தள்ளி விடாதீர்கள்
2. ஆண்டவரின் நற்சான்று பெற்றவரே ஏற்புடையவர்
3. ஆசிரியர்களாயிருக்க ஆவிக்குரியவர்களாய் இருக்க வேண்டும்
4. இயேசுவை பின்பற்றுதல் (சுயத்தை மறுத்து சிலுவை சுமத்தல்)
5. இயேசுவைப் போன்று முதிர்ச்சி அடைய வேண்டும்
6. இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்ய முடியாது
7. இறைவார்த்தையைக் கேட்டு, நடப்போர் பேறுபெற்றோர்
8. மன மாற்றமே உண்மையான எழுப்புதல்
9. கடவுளின் சமூகத்தில் காத்திருத்தல்
10. கடவுளின் நம்பிக்கைக்குரியவர்களாக இருத்தல்
11. தந்தையின் திருவுளம்
12. தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்
13. நற்செய்தி பரவுவதற்கு எப்பொழுது எல்லாம் ஏதுவாகும்
14. மணிமுடியை யாரும் பறித்து கொள்ளபடி பார்த்துக் கொள்
15. மனத்தாழ்மை
16. மனநிறைவு
17. துன்புறும் இறைவாக்கினரே நமக்கு முன்மாதிரி
18. ஆண்டவருக்கு அஞ்சி நட
19. இயேசு தரும் பேரமைதி
20. இரக்கமுடையோர் பேறுபெற்றோர்
21. இறைவார்த்தை இல்லாத பஞ்சம் நிறைந்த காலம்

22. உள்ளம் புதுப்பிக்கப் பெற்று மாற்றம் அடைதல்
23. ஒருவருக்கொருவர் ஊக்கமூட்டுங்கள்
24. சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை நன்று
25. சான்றோர் சான்றாண்மையில் நிலைத்து நிற்பர்
26. தந்தையின் திருவுளமும், ஆன்ம மீட்பும்
27. தாழ்த்துகிறவர் எவரும் உயர்த்தப்பெறுவர்
28. தீமை செய்கிறவரிடமும் அன்பு கூறுங்கள்
29. துயருறுவோர் பேறுபெற்றோர்
30. துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர்
31. நமக்காக வாழாமல் இயேசுவுக்காக வாழுவோம்
32. நீங்கள் நம்பியபடியே உங்களுக்கு நிகழட்டும்
33. பிள்ளைகளுக்குரிய உரிமை
34. புளிப்புமாவு
35. வலுவின்மையில் வல்லமை நிறைவாய் வெளிப்படும்
36. விசுவாசத்தின் வழியாகத்தான் மீட்பு
37. விண்ணக ஞானம்
38. கடவுளின் பார்வையில் நான் அருவருப்பானவனா(ளா)?

17/05/2020

ஆண்டவர் திருத்துவதை தள்ளி விடாதீர்கள்

எபிரேயர் 12:5-11 - தம் பிள்ளைகளிடம் பேசுவதுபோல் இறைவன் உங்களுக்குத் தந்த பின்வரும் அறிவுரையை நீங்கள் மறந்து விட்டீர்கள்: "பிள்ளாய், ஆண்டவர் உன்னைக் கண்டித்துத் திருத்துவதை வேண்டாம் எனத் தள்ளிவிடாதே. அவர் கண்டிக்கும் போது தளர்ந்து போகாதே."

“தந்தை தாம் ஏற்றுக் கொண்ட மக்களைத் தண்டிக்கிறார்; ஆண்டவர் தாம் யாரிடம் அன்பு கொண்டிருக்கிறாரோ அவர்களைக் கண்டிக்கிறார்.” திருத்தப்படுவதற்காகத் துன்பங்களைத் தாங்கிக் கொள்ளுங்கள். கடவுள் உங்களைத் தம் பிள்ளைகளாக நடத்துகிறார். தந்தை தண்டித்துத் திருத்தாத பிள்ளை உண்டோ? எல்லாப் பிள்ளைகளுக்கும் அளிக்கப்படும் தண்டனை உங்களுக்கு அளிக்கப்படாவிட்டால், நீங்கள் உண்மையான பிள்ளைகளாய் இருக்க மாட்டீர்கள்; முறை தவறிப் பிறந்த பிள்ளைகளாகவே இருப்பீர்கள். இவ்வுலகத் தந்தையர் நம்மைத் தண்டித்துத் திருத்தினார்கள். நாமும் அவர்களுக்கு மதிப்புக் கொடுத்து வந்தோம். அவ்வாறாயின், விண்ணகத் தந்தைக்கு நாம் எவ்வளவோ பணிந்து வாழ வேண்டும் அன்றோ? மேலும், இவ்வுலகத் தந்தையர் தங்களுக்கு நலமெனத் தோன்றின வகையில் சிறிது காலம் நம்மைத் தண்டித்துத் திருத்தினார்கள். ஆனால் கடவுள், நமது நலனுக்காக, நாமும் அவருடைய தூய்மையில் பங்குகொள்ள வேண்டுமென்பதற்காகவே நம்மைத் தண்டித்துத் திருத்துகிறார். இவ்வாறு திருத்தப்படுவது இப்போது மகிழ்ச்சிக்குரியதாய் இராமல், துயரத்துக்குரியதாகவே தோன்றும். ஆனால் பின்னர், இவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் அமைதியையும் நேர்மையான வாழ்வையும் பயனாகப் பெறுவர்.

திருத்தப்படுவதற்காகத்தான் துன்பம்

இப்படி தண்டித்து திருத்தப்படுவது இப்பொழுது கஷ்டமாக இருக்கும்; துன்பமாக தோன்றும்; பின்னர் அமைதியான வாழ்வையும் நேர்மையான வாழ்வையும் பயனாக பெறுவார்கள். கடவுள் தான் ஏற்றுக்கொண்ட பிள்ளைகளை தண்டிக்கிறார். திருத்தப்படுவதற்காக துன்பங்களை தாங்கிக் கொள்ளுங்கள். எப்படி திருத்துகிறார் என்றால் துன்பங்கள் வழியாகத்தான் திருத்துகிறார். துன்பங்கள் வரும்போது திருத்தப்படுவதற்காக துன்பங்களை தாங்கிக் கொள்ளுங்கள். திருந்த வேண்டும் என்று விரும்புகிறவர்கள் திருத்தப்படுவதற்காக துன்பங்களை தாங்கிக் கொள்ளுங்கள். கடவுள் மனிதனை திருத்தக்கூடிய வழியும் அதுதான்; பாடுகள், துன்பங்கள் வழியாகத்தான் ஒரு மனிதரை அவர் திருத்துகிறார். துன்பங்கள் வரும்போது நாம் திருத்தப்பட வேண்டும் என்பதற்காகவே அதை

தாங்கிக் கொள்ள வேண்டும். துன்பங்கள் வரும்போது முறைப்பாடு சொல்வதற்கு பதிலாக கடவுள் நம்மை திருத்துகிறார் என்ற உணர்விலே அதை எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்த வேண்டும்.

திருத்துவதை தள்ளி விடாதீர்கள்

இரண்டு காரியங்கள் போடப்பட்டிருக்கிறது. ஒன்று “ஆண்டவர் நம்மை தண்டித்து திருத்துவதை வேண்டாம் என தள்ளி விடாதே” அதற்கு அர்த்தம் என்ன? ஒரு துன்பம் வரும்போது இது வேண்டாம் என்று தள்ளி விடக் கூடாது, ஒரு பாடு வரும்போது வேண்டாம் என்று தள்ளி விடக் கூடாது கடவுள் நம்மை திருத்துகிறார்; அதை புரிந்து கொள்ளுங்கள். துன்பங்களை கடவுள் நம்மை திருத்துவதற்காக அனுமதிக்கிறார்; அப்படி அனுமதிக்கும் போது இதை வேண்டாம் என்று தள்ளி விடக் கூடாது. நிறையபேர் என்ன செய்கிறார்கள் என்றால் இதை வேண்டாம் என்று தள்ளி விடுகிறார்கள்; துன்பம் வேண்டாம்; கஷ்டம் வேண்டாம் என்று தள்ளி விடுகிறார்கள் அப்படித் தள்ளி விடும் போது, கடவுள் நம்மை திருத்துவதை வேண்டாம் என்று தள்ளி விடுகிறோம். இன்னும் சில பேர் என்ன செய்கிறோம் என்றால் முடிந்தாலும் வேண்டாம் என்று தள்ளி விடுகிறோம். இயேசு கூட சிலுவையை வேண்டாம் என்று தள்ளிவிட்டிருக்கலாம். ஆனால் அவர் அப்படி செய்யவில்லை. நமக்கும் ஆண்டவர் சில பாடுகளைக் கொடுத்திருக்கிறார். நமக்கும் சில வேளைகளில் வேண்டாம் என்று தள்ளி விடக்கூடிய பாடுகள் தான் வருகிறது. ஆனால் “திருத்தப்படுவதற்காக துன்பங்களை தாங்கிக் கொள்ளுங்கள்” என்று சொல்லப்பட்டிருக்கிறது. திருத்தப்பட வேண்டும் என்பதற்கு துன்பங்களை மன உறுதியோடு தாங்குங்கள்; வேண்டாம், வேண்டாம் என்று தள்ளி விடாதீர்கள். தள்ளி விடுகிறீர்கள் என்றால் திருந்த வேண்டும் என ஆசைப்படவில்லை என்று அர்த்தம். உண்மையிலேயே திருந்த வேண்டும் என்று விரும்புகிறவர்கள் திருந்துவதற்காக துன்பங்களை தாங்கிக் கொள்ளுவார்கள். ஏதோ ஒரு காரியங்களில் நம்மை சரி செய்வதற்காக பாடுகள் நமக்கு அனுமதிக்கப்படுகிறது.

திருத்தப்படும் போது பிள்ளைகளாக இருங்கள்

பெற்றோர்கள், பிள்ளைகளை தண்டிக்கும் பொழுது பெற்றோரை ஏமாற்றி விட்டு சில பிள்ளைகள் தப்பி விடுவார்கள். பள்ளியில் மதிப்பெண் குறைவாக இருந்தால் அவங்களே பெற்றோர் கையெழுத்தைப் போட்டு கொடுத்து விடுவார்கள். அதுவும், கடவுள் நம்மை திருத்துவதற்காக கொடுக்கிற பாடுகளை தள்ளி விடுவதும் ஒன்றுதான். இரண்டுக்கும் என்ன வித்தியாசம்? அங்கே வீட்டில் திட்டுவார்கள் என்று நினைத்து பையன் குறுக்கு வழியைப் பார்க்கிறான். தேவன் நம்மை திருத்துவதற்காக சில துன்பங்களை கொடுக்கும் போது ஏமாற்றிவிட்டு தப்பிக்க பார்க்கிறோம். சில நேரங்களில் தப்பிக்கலாம் ஆனால் அது நல்லதல்ல. அதனால் தான் பவுல் சொல்கிறார், "அவர் கண்டித்துத் திருத்துவதை வேண்டாம் என்று தள்ளி விடாதீர்கள்". வேண்டாம் என்று தள்ளினால் நாம் அவருடைய பிள்ளை இல்லை பிள்ளை என்கிற அடையாளம் இல்லாமல் போய்விடும். அந்த ஆசீர்வாதம் நமக்கு கிடைக்காமல் போய்விடும். பிள்ளைக்குரிய உரிமை, மேன்மையான காரியங்கள் எல்லாம் இல்லாமல் போய்விடும். அப்படியே அந்தப் பாடுகளில் அவர் தண்டித்தாலும் கூட ஆண்டவர் தண்டிக்கிறார் என்று தளர்ந்து போகக் கூடாது. அவர் உங்களால் எவ்வளவு தாங்க முடியுமோ அவ்வளவு தான் கொடுத்து தண்டிப்பார். அதனால் நீங்கள் உடனே சோர்ந்து போய் தளர்ந்து போக வேண்டிய அவசியமில்லை. சிலர் தளர்ந்து போய் விடுகிறார்கள்; கஷ்டம் வந்தவுடன் மனம் தளர்ந்து சோர்ந்து விடுகிறார்கள். அது எல்லாம் நம்மை திருத்துவதற்காக தான், தேவன் நம்மை திருத்துகிறார் என்று நன்றி சொல்ல வேண்டும். பாடுகள் வரும்போதும் கஷ்டங்கள் வரும்போதும் ஆண்டவர் நம்மைத் திருத்த முயற்சிக்கிறார்.

திருத்தப்படுவதற்காகவே துன்பங்களை தாங்கிக் கொள்ளுங்கள். தாங்கிக் கொள்வது என்றால் முணுமுணுக்காமல், சண்டை போடாமல், ஆண்டவருக்கு எதிராகப் பேசாமல் அதை தாங்கிக் கொள்ளுதல். "இதோ நம்மை திருத்துவதற்காக அனுமதித்திருக்கிறார்" என்று சந்தோஷத்துடன் தாங்கிக் கொள்ள வேண்டும். அவர் நேசிக்கிற எல்லாரையும் அவர் தண்டிக்கிறார். ஒருவரை கூட தண்டிக்காமல் விடுவது இல்லை. அவருடைய பிள்ளைகளில் எல்லா பிள்ளைகளையும் அவர் தண்டிக்கிறார். அவர் என்னை மட்டும் தண்டிக்கக் கூடாது என்று நினைத்தால் நீங்கள் அவருடைய பிள்ளையாக இருக்க முடியாது. நாம் தேவனுடைய

பிள்ளையாக இருப்பதால் அவர் தண்டித்து திருத்துகிறார். அதனால் தண்டிக்கும் போது சோர்ந்து போகாதீர்கள் தண்டிக்கக் கூடாது என்று தள்ளிவிட்டும் போய்விடாதீர்கள். திருத்தப்படுவதற்காக துன்பங்களை தாங்கிக் கொள்ளுங்கள். அதுதான் கடவுளுடைய பிள்ளைகளுக்கு அழகு. அப்படி திருத்தப்படுகிறவர்கள் தான் அமைதியான வாழ்க்கையை பிற்காலத்தில் பெற முடியும். அதை வேண்டாம் என்று தள்ளி விட்டால் அந்த அமைதியான வாழ்க்கை கிடைக்காது. நிலைவாழ்வும் கிடைக்காமல் போய்விடும். அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட பிள்ளைகள் யாராயினும் அவர் தண்டித்து திருத்துகிறார். தந்தை தண்டிக்காத பிள்ளை இல்லை. எல்லாருக்கும் கஷ்டங்கள் பாடுகள் ஒரே மாதிரி இல்லை. ஆண்டவரும் ஒரே மாதிரி திருத்துவதில்லை. ஒவ்வொருவரையும் ஒவ்வொரு மாதிரி திருத்துவதற்கு அவர் முயற்சி செய்கிறார். இந்த நிலையிலே நாம் முணுமுணுக்காமல் அதை எதிர்த்து நிற்காமல் திருந்த வேண்டியிருக்கிறது. கடவுள் நம்மை திருத்துகிறார் என்ற உணர்வோடு நன்றி சொல்லுங்கள்.

திருத்துவதை ஏற்றுக்கொண்டதால் நடந்த அற்புதம்

குடிகாரனாக இருந்து மனம்மாறின ஒரு சகோதரரிடம் “எப்படி நீங்கள் மனம்மாறினீர்கள்?” என்று கேட்கும் பொழுது அவர் கூறினது, “பொதுநிலை இறைவாக்கு பயிற்சியில் சேர்ந்து நானும் இறைவாக்கு பணியாளர் ஆனேன். ஆனாலும் அரசாங்க வேலையில் இருந்த என்னிடம் குடிப்பழக்கம் இருந்தது. வேலைக்கு போய் விட்டு வரும்போது குடித்துவிட்டு தான் வருவேன்” என்றார். குடிகாரர்கள் பொதுவாக இருமிக் கொண்டு தடுமாறி யாராவது ஒரு வீட்டு வாசலில் உட்காரும் போது அந்த வீட்டு உரிமையாளர்கள் திட்டுவார்கள். அப்படித் திட்டும் போதெல்லாம் இவர் சொல்வாராம் “ஆண்டவரே உமக்கு நன்றி என்னை இப்படி திருத்துகிறீரே” என்று நன்றி சொல்வாராம். கடவுள் திருத்துகிறார் என்று ஏற்றுக் கொண்டு நன்றி சொன்னதால் அவருடைய பாவ வாழ்க்கை மாறிவிட்டது. உண்மையாகவே அந்த பழக்கத்தில் இருந்து அவர் திருந்தினார். எப்பொழுது ஆண்டவர் என்னை திருத்துகிறார் என்ற உணர்விலே நன்றி சொல்கிறோமோ அப்போது நம் பாவங்களில் இருந்து நாம் விடுதலை அடைகிறோம். ஆனால் முணுமுணுத்துக் கொண்டு

எப்படியாவது இதிலிருந்து தப்பித்து விட வேண்டும் என்று நினைக்கும் போது, பாவத்தைச் செய்ய ஆரம்பித்து விடுகிறோம். திருந்துவதற்கு வழி இல்லாமல் போய்விடுகிறது. ஆகையினால் வாழ்க்கையில் சில பிரச்சினைகள் சில போராட்டங்கள் சில துன்பங்கள் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தால் தேவன் உங்களை திருத்துகிறார் என்பதை புரிந்து கொள்ளுங்கள். பாடுகளை தாங்கிக் கொள்ளும் போது அது வேதனையாக கஷ்டமாக தோன்றலாம்; அதுதான் பிற்கால வாழ்க்கையில் ஆசீர்வாதமாக மாறுகிறது திருத்தப்படுவதற்காக துன்பங்களை தாங்கிக் கொள்ளுங்கள்.

துன்பங்கள் ஆண்டவரால் அனுமதிக்கப்பட்டவையே

யோசித்துப் பாருங்கள், சில துன்பங்கள் வரும் போதெல்லாம் நாம் எப்படி இருக்கிறோம்? என்ன செய்கிறோம்? அவருக்கு தெரியாமல் துன்பங்கள் நம்முடைய வாழ்க்கையில் வருவதில்லை. அவர் நம்மை நேசிக்கிறார் நம் தலைமுடி எல்லாம் எண்ணி வைத்திருக்கிறார்; அவர் அனுமதிக்காமல் ஒன்றும் வருவதில்லை. அதற்காக, நாம் செய்கிற தவறுகளை எல்லாம் அவர் அனுமதிக்கிறார் என்று நினைக்கக் கூடாது. சிலருக்கு பிசாசு அப்படித்தான் சொல்லி கொடுப்பான். அவர் அனுமதிக்காமல் ஒன்றும் வருவதில்லை. நாம் செய்த பாவங்கள் எல்லாம் அவர் அனுமதிப்பதால் வருகிறது என்று நினைப்பது தவறு. பாவம் செய்வதற்கெல்லாம் அவர் சொல்லவில்லை அதற்கு அவர் அனுமதியும் கொடுக்கவில்லை. நம் வாழ்க்கையில் நாம் அனுபவிக்கக் கூடிய பாடுகள் துன்பங்கள் எல்லாம் அவர் அனுமதிக்காமல் வருவதில்லை. அந்தஅளவிற்கு அவர் நம் மேல் அக்கறை உள்ளவராக இருக்கிறார். அப்படி இருக்கும் போது ஒரு துன்பம் வருகிறது என்றால் “ஆண்டவரே நீர் என்னை திருத்துகிறீர்” என்று சொல்லி நன்றி சொல்லுங்கள். அதை விட்டுவிட்டு “நான் இப்படி கஷ்டப்படுகிறேன்” என்று புலம்பிக் கொண்டிருக்காதீர்கள். புனிதர்கள், ஊழியர்கள் இதைவிட எவ்வளவோ கஷ்டப்பட்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் அந்த வேதனையில் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

நீங்கள் சொந்த பிள்ளையா? பக்கத்து வீட்டு பிள்ளையா?

ஒரு குழந்தையை அடித்தவுடன் அழுது கொண்டே இருக்கிறது என்றால் எப்படி இருக்கும் என்று நினைத்து பாருங்கள் அல்லது ஒரு வாரமாக சோகமாகவே இருக்கிறது என்றால் எப்படி இருக்கும். இதைப்போல தான் ஒரு வாரம் ஒரு மாதம் சோர்ந்து போய் விடுகிறார்கள். அப்படி இருந்தால் அது சொந்த பிள்ளை இல்லை. பக்கத்து வீட்டு பிள்ளை தான் அடித்தால் இப்படி சோகமாக இருக்கும். உங்கள் பிள்ளையாக இருந்தால், காலையில் அடித்தால் அது சாயங்காலம் சேர்ந்து கொள்ளும்; நல்லது தான் நம்மை திருத்துகிறார்கள், அப்படியென்று நினைத்து கொள்ளும். அதே போல தேவ சமூகத்திலேயே தேவனுடைய பிள்ளைகளுக்கு இதே மனநிலை தான் இருக்க வேண்டும். ஒரு கஷ்டம் வரும் போது வித்தியாசமாக இருக்காதீர்கள். உடனே வார்த்தைகளை கொட்டாதீர்கள்; எல்லாரையும் தாறுமாறாக பேசாதீர்கள்; உடலில் ஏதாவது கஷ்டம் வந்தால், வீட்டில் இருக்கிற அத்தனை பேருக்கும் பிரச்சனை, ஒரு வாரம் முகத்தை கூட பார்க்க சகிக்காது. யாரை பார்த்தும் சிரிக்கக் கூடமாட்டோம். இப்படி எல்லாம் இருக்கக் கூடாது. கடவுள் நம்மை திருத்துகிறார் என்று நினைக்க வேண்டும். இன்னும் நாம் திருந்த வேண்டியிருக்கிறது.

திருந்த தாமதமானால் துன்பங்கள் தொடரும்

ஆண்டவர் முதலில் சொல்லிச் சொல்லி பார்ப்பார். நாம் அவ்வளவு எளிதாக திருந்த கூடிய ஆட்கள் அல்ல. காது கொடுத்து கேட்க கூடமாட்டோம். அதனால் சில பாடுகளை அனுமதிக்கிறார். அப்பொழுதான் திருந்துவதற்கு முயற்சி செய்வோம். கஷ்டம் வரும்போது யாரையும் தீர்ப்பிடாதீர்கள். நீங்கள் திருந்துவதற்காக இந்தப் பாடுகள், வேலையில் பிரச்சனைகள் வரலாம், வீட்டில் பிரச்சனைகள் வரலாம். “நாம் திருந்துவதற்காக வருகிறது; எங்கேயோ நாம் திருந்த வேண்டி உள்ளது” என அதை கண்டுபிடித்து அதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதற்கு பதிலாக மற்றவர்களை காரணம் சொல்லிக் கொண்டே இருக்கக் கூடாது. “கணவன் சரியில்லை, மனைவி சரியில்லை, உடன்பிறந்தவர்கள் சரியில்லை, பிள்ளைகள் சரியில்லை” என்று சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. எல்லாரும் சரியில்லை நான் ஒரு ஆள்தான் புனிதர் என்று நினைக்கும் போது நீங்கள் தான் சரியில்லை என்று அர்த்தம். அதனால் சில

கஷ்டங்கள் பாடுகள் இருந்தாலும் தேவனிடத்தில் தாழ்த்துங்கள். கடவுள் நம்மை எங்கேயோ திருத்துகிறார்; அதை நாம் கண்டுபிடிக்காமல் சட்டை பண்ணாமல் போய்க் கொண்டிருக்கிறோம். சில பிள்ளைகள் கேட்பார்கள் "எப்பொழுதும் என்னை திட்டி கொண்டே இருக்கிறீர்கள்" என்று, ஏன் திட்டுகிறோம்? எவ்வளவு திட்டியும் திருந்தவில்லை, அதனால் திட்டுகிறோம். கடவுளும் இதைத்தான் செய்கிறார். திருந்தாததால் அந்த பாடுகளை அனுமதித்துக் கொண்டே இருக்கிறார். எந்த காரியங்களில் திருந்த வேண்டியுள்ளது என்பதை பார்த்து திருந்துங்கள். கடவுள் மனிதனை தண்டித்து திருத்துகிறார். அவருடைய பிள்ளைகளாக இருக்க ஆசைப்படுவீர்களானால், கட்டாயம் அவர் உங்களை தண்டித்து திருத்துவார். அந்த நேரத்தில் நீங்கள் தளர்ந்து போகக் கூடாது சோர்ந்து போகக்கூடாது அதே நேரத்தில் என்னை திருத்தக் கூடாது என்று சொல்லி ஓடவும் கூடாது. திருந்துவதுதான் ஒரே ஒரு வழி. ரொம்ப நாள் தப்பித்து ஓட முடியாது; இதை புரிந்து கொள்ளுங்கள். அவர் கண்டித்து திருத்தும் போது நாம் ஏமாற்றிக் கொண்டே ஓடுகிறோம். யூதாஸ் அப்படித்தான் இருந்தான். யூதாசுக்கு எத்தனையோ எச்சரிக்கை கொடுத்திருந்தார். அவன் எதையும் சட்டை பண்ணவே இல்லை தன்னை புத்திசாலியாக நினைத்துக் கொண்டான். இறுதியாக மாட்டிக் கொண்டான். அவனது முடிவைப் பாருங்கள். எல்லாரையும் அவர் திருத்துகிறார். திருத்தும் போது அவரோடு ஒத்துழைக்க பாருங்கள் புத்திசாலித்தனமாக தப்பித்து விட்டதாக மட்டும் நினைக்காதீர்கள். அவரது கையை மீறி தப்பித்துக்கொள்ள யாராலும் முடியாது அவர் திருத்த வேண்டும் என்று நினைக்கும் போது ஒருவரும் தப்பித்துக் கொள்ள முடியாது; ஏமாற்றவும் முடியாது; ஒரே ஒரு வழி, திருந்துவது ஒன்றுதான்.

யோசித்து பாருங்கள் தேவன் நம்மை இப்படி திருத்த முற்படும் போதெல்லாம் நாம் எப்படி செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். மற்றவர்களை காரணம் சொல்லிக் கொண்டிருக்கிறோமா? அல்லது திருந்தாமல் தப்பி ஓட பார்க்கிறோமா? அல்லது தளர்ந்து போகிறோமா? அல்லது எதிர்க்கிறோமா? அவரைப் போன்று தூய்மை அடைவதற்காகவே நம்மை திருத்துகிறார். யோசித்துப் பாருங்கள் இப்படியெல்லாம் செய்திருந்தால் ஆண்டவரிடத்தில் மன்னிப்பு கேட்போம். "ஆண்டவரே இனி நான் உம்முடைய பிள்ளை நீர் என்னை கண்டித்து திருத்தும்" என்றும் "நீர் என்னை

திருத்துவதற்கு ஒத்துழைப்பேன்" என்றும் நம்மை ஒப்புக் கொடுப்போம்.

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவிக்கும் மகிமை உண்டாவதாக!!!

06/05/2020

ஆண்டவரின் நற்சான்று பெற்றவரே ஏற்புடையவர்

2 கொரிந்தியர் 10:12,18 - சிலர் தங்களுக்குத் தாங்களே நற்சான்று கொடுக்கின்றனர். அவர்களோடு எங்களைச் சேர்த்துக் கொள்ளவோ ஒப்பிடவோ நாங்கள் துணியவில்லை. அவர்கள் தங்களையே அளவு கோலாகக் கொண்டு தங்களை அளவிட்டுக் கொள்கிறார்கள். தங்களைத் தங்களோடே ஒப்பிட்டுக் கொள்கிறார்கள். இது அறிவீனம் அல்லவா! தமக்குத் தாமே நற்சான்று கொடுப்போர் அல்ல, மாறாக ஆண்டவரின் நற்சான்று பெற்றவரே ஏற்புடையவர் ஆவர்.

எப்படி நாமே நமக்கு நற்சான்று கொடுக்க முடியும்?

சிலர், நான் கோபப்படுவதே இல்லை, எந்த பாவமும் செய்வதே இல்லை, சண்டையே போடுவதில்லை என்று சொல்லிவிட்டு, அதை உண்மையாகவே சொல்கிறேன் என்றும் உறுதிப்படுத்துவர். இவர்கள் தங்களுக்கு தாங்களே நற்சான்று கொடுப்பவர்கள். அவர்களுக்கு நன்றாகவே தெரியும், அவர்கள் கோபப்படுகிறவர்கள் என்று, ஆனாலும் தங்களை அளவுக்கு மீறி மதித்து கொள்வர்.

அதாவது ஜெபத்திற்கு வந்த உடனே நம்மிடமுள்ள பல பாவங்கள் குறைந்திருக்கும், சில தீமைகள் நம்மை விட்டு வெளியேறி இருக்கும் அது உண்மை தான். ஆண்டவரிடத்தில் நாம் வருவதினாலே, ஜெபிக்கிறதினாலே, இறைவார்த்தையைக் கேட்கிறதினாலே பல

காரியங்களில் நாம் மேம்பட்டு இருப்போம். இதை வைத்துக் கொண்டு, நம்முடைய பழைய வாழ்க்கையோடு இன்றைய வாழ்க்கையை ஒப்பிட்டு பார்க்கின்றோம். “ஆண்டவரிடம் வருவதற்கு முன்பு நான் மோசமாக இருந்தேன். ஆனால், இப்பொழுது நான் எந்த பாவமும் செய்வதில்லை” என்று எண்ணிக் கொள்கின்றோம். அது தவறு, "ஒரு காலத்தில் மிகவும் ரவுடி ஆக இருந்தேன் ஆனால் இப்பொழுது அப்படி இல்லை, மிகவும் கோபப்படுவேன் இப்பொழுது கோபப்படுவதில்லை, ஒரு காலத்தில் சத்தம் போட்டு கத்தி சண்டை போடுவேன் ஆனால் இப்பொழுது கத்துவதில்லை" என்று கூறுகிறோம். ஆனால் உண்மையில், இப்பொழுதும் அந்த பழைய சுபாவம், பாவம் நம்மிடம் ஒட்டிக் கொண்டு தான் இருக்கின்றன. எப்படியென்றால், முன்பெல்லாம் அதிகமாக கத்துவோம், சண்டை போடுவோம், கோபப்படுவோம் இப்பொழுது கொஞ்சம் குறைந்திருக்கின்றது அவ்வளவு தான். இதை உணராமல் நம்மையே நாம் ஒப்பிட்டு ஏமாற்றிக் கொள்கிறோம். இது ஒரு முட்டாள் தனம் என்று பவுல் கூறுகின்றார்.

யாருடன் நம்மை ஒப்பிட்டு பார்க்க வேண்டும்?

‘நான் மாறியிருக்கின்றேனா இல்லையா’ என்று இயேசுவோடு தான் நம்மை ஒப்பிட்டு பார்க்க வேண்டும். அவர் தான் "என்னை பின் செல்" என்று நமக்கு முன்னோடியாய் இருக்கின்றார். நான் எந்த அளவுக்கு இயேசுவைப் போல மாறி இருக்கிறேன், எந்த அளவுக்கு அவரை பின் செல்கிறேன் என்று இயேசுவோடு தான் ஒப்பிட்டு பார்க்க வேண்டும். அதை விடுத்து நம்மையே நாம் ஒப்பிட்டு பார்ப்பது அறிவீனம் என்று பவுல் கூறுகின்றார். ஏனெனில் நம்மிடம் நூறு பாவங்கள் இருந்திருக்கும் அதில் ஐம்பது பாவம் வெளியேறி இருக்கும். அதில் பெருமைப்படக் கூடாது.

கிட்டத்தட்ட 2000 பேய் (லேகியோன்) பிடித்த ஒருவன் இயேசுவிடம் வருகிறான், லேகியோன் என்றால் 5000,3000 அல்லது குறைந்தது 2000 பேயாவது இருக்கும் ஒரு படை. இப்படி 2000 அல்லது 3000 பேய் இருந்த இடத்தில் வெறும் 5 பேய் இருந்தாலும் அவன் பேய் பிடித்தவன் தான். அந்த பிசாசு பிடித்த மனிதன், "முன்பெல்லாம் நிறைய பேய் இருந்தது இப்பொழுது கொஞ்ச பேய் தான் உள்ளது, சட்டையைக் கிழித்து கொல்வேன் இப்பொழுது இல்லை, ஊளை

இடுவேன் இப்பொழுது இல்லை, துணி உடுத்தாமல் இருந்தேன் இப்பொழுது உடுத்தி கொள்கிறேன்" என்று சொல்லுவான் என்றால் அதில் பெருமைப்பட ஒன்றும் இல்லை. எல்லா பேயும் ஓடினால் தான் விடுதலை, அப்பொழுது தான் அவன் மனிதன்.

ஆகையால் நம்மையே நாம் ஒப்பிட்டு பார்க்காமல் இயேசுவோடு மட்டுமே நம்மை ஒப்பிட்டு பார்க்க வேண்டும், இல்லையென்றால் புனிதர்களோடு நம்மை ஒப்பிட்டு பார்க்க வேண்டும். திருச்சபை அதற்காக தான் புனிதர்களை வைத்திருக்கின்றது. ஆனால் நாம் புனிதர்களுக்கு ஒரு நவநாள் கொண்டாடி விட்டு முடித்து விடுகிறோமேயன்றி, அவர்களோடு நம்மை ஒப்பிட்டுப் பார்ப்பதில்லை. அடிக்கடி கடவுளுடைய பிள்ளைகள் இயேசுவோடும், புனிதர்களோடும் ஒப்பிட்டுப் பார்த்து, அதில் எந்த அளவுக்கு நாம் வளர்ந்து இருக்கின்றோம் அல்லது வளரவில்லை என்றும், அவர்களோடு ஒப்பிடும் போது நாம் எங்கே இருக்கின்றோம் என்றும் பார்க்க வேண்டும். நம் ஒப்பிடுதல் நம்மோடும், மற்ற மனிதர்களோடும் இல்லாமல், ஆண்டவர் இயேசுவோடும் புனிதர்களோடும் மட்டுமே இருக்க வேண்டும்.

ஆண்டவரிடம் நற்சான்று பெற்ற மனிதர்கள்

கொரிந்தியர் 10:18 ல் பார்க்கிறோம், "**தமக்குத் தாமே நற்சான்று கொடுப்போர் அல்ல, மாறாக ஆண்டவரின் நற்சான்று பெற்றவரே ஏற்புடையவர் ஆவர்".**

நமக்கு நாமே நற்சான்று கொடுப்பதில் ஒரு பிரயோஜனமும் இல்லை, கடவுளிடமிருந்து நமக்கு நற்சான்று கிடைத்திருக்கிறதா என்று கேட்டால் நாம் என்ன சொல்லுவோம்? திருவிவிலியத்தில், மோசேக்கு ஆண்டவரே நற்சான்று கொடுக்கிறார், ஆபேலையும் அவன் காணிக்கையையும் ஆண்டவர் அங்கீகரித்தார் மற்றும் யோசேப்புக்கு, தாவீதுக்கு, தானியேலுக்கு, சகரியாவுக்கு, எலிசபெத்துக்கு, சிமியோன் இறைவாக்கினருக்கு ஆண்டவரே நற்சான்று கொடுக்கிறார். மகதலேனா மரியாளுக்கு கூட ஆண்டவர் நற்சான்று கொடுக்கிறார். அவள் பாவ வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தாள், அதிலிருந்து விடுபட, மனம் மாற, ஆண்டவருடைய பாதத்தை கண்ணீரால் நனைத்து, கூந்தலால் துடைத்து, பரிமள தைலத்தை பூசுகிறாள். இதை பார்த்து

கொண்டிருந்த யூதாசு, “இதை விற்றால் 200 தெனாரியங்கள் கிடைக்குமே ஏழைகளுக்கு கொடுத்து உதவலாமே” என்றான். அவன் ஏழைகள் மேல் கரிசனை உடையவனாக இருந்ததனால் அப்படி சொல்லவில்லை, மாறாக அவன் ஒரு திருடனாக இருந்தபடியாலும் சொத்தெல்லாம் அவனிடம் தான் வருமென்றும் அப்படி சொன்னான். அப்பொழுது ஆண்டவர் சொல்கிறார், **மாற்கு 14:6 ல், "அவரை விடுங்கள்; ஏன் அவருக்கு தொல்லை கொடுக்கிறீர்கள்? அவர் எனக்குச் செய்தது முறையான செயலே!"** என்று நற்சான்று கொடுக்கிறார். சிலுவையில் தொங்குகின்ற கள்வனை பார்த்து, இயேசு, "இன்றே நீ என்னோடு வான்வீட்டில் இருப்பாய்" என்று நற்சான்று கொடுக்கிறார். அதேபோல, ஆண்டவர் தன்னை விசுவாசிக்கிறவர்களுக்கு நற்சான்று கொடுப்பதை பார்க்கிறோம். இயேசு நூற்றுக்கு அதிபதியை பார்த்து, “இப்படிப்பட்ட விசுவாசத்தை இஸ்ரயேலில் நான் பார்க்கவில்லையே" என்று நற்சான்று கொடுக்கிறார்; கானானிய பெண்ணை பார்த்து, "அம்மா! உன் விசுவாசம் பெரிது" என்று நற்சான்று கொடுக்கிறார். இவர்களெல்லாரும் ஆண்டவரிடம் நற்சான்று பெற்றவர்கள்.

எபிரேயர் 11 ம் அதிகாரத்தில், விசுவாசத்தாலே அவர்கள் நற்சான்று பெற்றார்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதில் பவுல், எல்லா இறைவாக்கினர்களையும் குறித்து, "அவர்கள் எல்லாருமே விசுவாசத்தாலே நற்சான்று பெற்றவர்கள், கடவுளிடமிருந்து நற்சான்று பெற்றவர்கள்" என்று எழுதுகிறார். நாம் பல நேரங்களில் மனிதர்களிடம் நற்சான்று பெற விரும்புகிறோம். மனிதர்கள் முன்னிலையில் மிகவும் நல்லவர்கள் போல தோற்றம் அளிக்கிறோம், ஆனால் நம்மோடே ஒப்பிடுகிறோம். மனிதர்களிடம் நற்சான்று பெறுவது முக்கியமல்ல. இதை ஆண்டவர் விரும்பவில்லை. அந்த நற்சான்று ஒன்றுக்கும் உதவாது.

வீட்டில் சண்டை இருந்தால் கூட ஊழியம் செய்கிறவர்களை பார்க்கும் போது சண்டையே இல்லை என காட்டி கொள்வீர்கள். ஏனென்றால் உங்களுக்கு ஊழியரிடத்தில் நற்சான்று வேண்டும். அது செல்லுபடி ஆகாது. மாறாக ஆண்டவர் நமக்கு சான்று கொடுக்க வேண்டும். நத்தானியேலை பார்த்து ஆண்டவர் இயேசு கிறிஸ்து, "இதோ கபடற்ற இஸ்ரயேலன்" என்று சான்று கொடுக்கிறார். இப்படி ஆண்டவர் மனிதர்களுடைய இருதயத்தைப் பார்த்து, அவர்கள் நடத்தையைப் பார்த்து நற்சான்று கொடுக்கிறார்.

நமக்கு நற்சான்று கொடுப்பாரா என்று யோசித்து பாருங்கள். சிலரிடம் கேட்டவுடனே, தான் மாறிவிட்டதாக கூறுவார்கள். ஆனால், கடவுள் நற்சான்று கொடுப்பாரா? கடவுளிடம் நற்சான்று பெற்றிருக்கிறோமா? நம்முடைய செயல்களோ நம்முடைய காரியங்களோ கடவுளுக்கு முன்பாக நீதியுள்ளவையாக இருக்கிறதா? எலிசபெத்தும், சகரியாவும் நம் அளவுக்கு விசுவாசம் இல்லாதவர்களாக இருக்கலாம், நம்மை போல தேவனுடைய கொடைகள் இல்லாதவர்களாக இருக்கலாம், ஆனால் தேவனால் நேர்மையானவர்கள் என்று நற்சான்று பெற்றிருந்தார்கள். யோபுவை குறித்து ஆண்டவர் பிசாசிடமே, "என் ஊழியன் யோபை பார்த்தாயா அவனை போல நேர்மையாளன், நீதிமான் யாருமில்லை" என்று சான்று கூறுகிறார். அபிமெலேக்கு, ஆபிரகாமின் மனைவியை அபகரித்துக் கொண்ட போது ஆண்டவர் அபிமெலேக்கிடம், "ஆபிரகாம் என் ஊழியன், என் இறைவாக்கினன் அவனுடைய மனைவியை நீ எப்படி அபகரித்துக் கொள்ளலாம்" என்று ஆபிரகாமுக்கு நற்சான்று கொடுக்கிறார். ஆண்டவர் அவருடைய பிள்ளைகளுக்காக நற்சான்று கொடுக்கிற தெய்வம்.

மனிதர்களிடத்தில் நாம் பெறும் நற்சான்று ஒன்றுமில்லை, கடவுளிடம் பெறும் நற்சான்று தான் உண்மையுள்ளது. மற்றதெல்லாம் வெளிவேடம். கடவுளிடத்திலே நாம் நற்சான்று பெற வேண்டும். நம்முடைய வாழ்க்கை, நம்முடைய செயல்பாடுகள், நம்மிடம் உள்ள அன்பு, நம்முடைய சுபாவங்கள் இதெல்லாம் தேவனிடத்திலிருந்து நற்சான்று பெறக்கூடியதாய் இருக்க வேண்டும்.

பவுல், கடவுளை முன்னிட்டு கொடுக்கும் நற்சான்றுகள்

திருவிவிலியத்தில் பார்க்கிறோம், தீமோத்தேயுவை குறித்து பவுல், “வெளிவேடமற்ற விசுவாசத்தைக் குறித்து நினைத்து பார்க்கின்றேன், இது முதலில் உன் பாட்டிக்கு இருந்தது, பிறகு உன் தாய்க்கு இருந்தது, அதன் பிறகு உன்னிடத்தில் இருக்கிறது" என்று நற்சான்று கொடுக்கிறார். இன்னும் சிலருடைய பெயர்கள் ஆண்டவருடைய ஜீவ புஸ்தகத்திலே எழுதி இருக்கிறது என்று கடவுளிடமிருந்து நற்சான்று பெறுகிறார்.

புனித தொன் போஸ்கோ, புனித டோமினிக் சாவியோவுக்கு கொடுக்கும் நற்சான்று

புனித தொன் போஸ்கோவின் சபையில் சிறுவனாகத் தான் டோமினிக் சாவியோ இருந்தார். ஆனாலும், அவர் புனிதமாக, பரிசுத்தமாக தன் வாழ்க்கையை வாழ்ந்தார். ஒரு நாள், தொன் போஸ்கோ பரலோகத்திற்கு சென்ற போது, அவருக்கு ஒரு குறிப்பிட்ட காரியத்தை குறித்து விளக்கம் தேவைப்பட்டது. அப்போது ஆண்டவர், டோமினிக் சாவியோவை அழைத்து அவருக்கு அதை சொல்லி கொடுக்குமாறு சொன்னார். தொன் போஸ்கோவின் சபையில் சிறுவனாக இருந்த டோமினிக் சாவியோ அதை விளக்கிக் காட்டினார்; இவ்வாறு அவர் நற்சான்று பெற்றார். நாம் எப்படிப்பட்ட நற்சான்றுடன் இருக்கின்றோம்? தேவனுடைய பார்வையிலே நாம் நற்சான்று பெற்றவர்களாக இருக்கிறோமா? மனிதர்களுடைய பார்வையில், நாம் ஜெபிக்கிறதினால், கடவுளுடைய வரங்களை பயன்படுத்துவதினால் பெறுகின்ற நற்சான்று மிக எளிது. எல்லாரும் அந்த நற்சான்றை பெற்றிருக்கிறார்கள். கடவுள் நம்மைப் பார்த்து, "நேர்மையாளன் என்றும், கபடற்றவன் என்றும், நாம் செய்யும் காரியங்கள் நேர்த்தியானது என்றும், என் மனதிற்கு உகந்தவனாய் உன்னைக் கண்டேன் என்றும், என் விருப்பங்களை அவன் நிறைவேற்றுவான் என்றும்" நம்மைப் பார்த்து சொல்வாரா என்று யோசித்து பார்ப்போம், அப்படி இல்லையென்றால் இன்று ஒப்புக்கொடுப்போம். மனிதருக்கு முன்பாக நற்சான்று பெறுவதால் ஒன்றுமில்லை, கடவுளுக்கு முன்பாக நற்சான்று பெற நம்மை ஒப்புக்கொடுப்போம். ஆமென்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!

09/05/2020

ஆசிரியர்களாயிருக்க ஆவிக்குரியவர்களாய் இருக்க வேண்டும்

எபிரேயர் 5:12-14 இவ்வளவு காலத்திற்குள் ஆசிரியர்களாய் இருந்திருக்க வேண்டிய நீங்கள் இன்னும் கடவுளுடைய வாய்மொழிகளின் அரிச்சுவடியையே கற்றுக் கொள்ளவேண்டிய நிலையில் இருக்கிறீர்கள். உங்களுக்கு இப்பொழுது தேவைப்படுவது

பால்தான்; கெட்டியான உணவு அல்ல. பால் குடிக்கும் நிலையில் உள்ளவர் எவரும் குழந்தையே. நீதிநெறி பற்றிய படிப்பினையில் அவர் தேர்ச்சி அற்றவர். முதிர்ச்சி அடைந்தோருக்கு ஏற்றது திட உணவு. அவர்கள் நன்மை தீமையைப் பகுத்தறிவதற்கான ஆற்றல்களைப் பயன்படுத்தப் பயிற்சி பெற்றவர்கள்.

குழந்தை, முதிர்ச்சி பெற்றவர் என்று பவுல் இங்கே பிரிக்கிறார். முதிர்ச்சி அடைந்தவர்களுக்கு திட உணவு; குழந்தைகளுக்கு பால். நன்மை தீமையை பகுத்தறிவதற்கான ஆற்றல்களை பயன்படுத்த பயிற்சி பெற்றவர்களுக்கு தான் திட உணவு; அவர்களைத்தான் முதிர்ச்சி பெற்றவர்கள் என்று சொல்கிறார்.

ஆசிரியர்களாய் இருக்க வேண்டியவர்கள் யார்?

யார் நன்மை தீமையைப் பகுத்தறிவதற்கான ஆற்றல்களைப் பயன்படுத்த பயிற்சி பெற்றவர்கள்? ஆங்கில மொழிபெயர்ப்பில் [those who by reason of use have their senses exercised to discern both good or evil]. நன்மை, தீமை என்று சொல்லும் பொழுது ஒரு பக்கம் வானதூதர்கள் புனிதர்கள், இன்னொரு பக்கம் பிசாசுகள் இந்த ஆற்றல்களை பகுத்தறியக் கூடிய பயிற்சி பெற்றவர்கள்; ஆவிக்குரிய காரியத்தில் ஆவிக்குரிய செயல்களைக் கையாளுவதற்கு பயிற்சி பெற்றவர்கள் அவர்கள் தான் முதிர்ச்சி அடைந்தவர்கள். அவர்கள் தான் ஆசிரியர்களாக இருக்க வேண்டியவர்கள். ஆசிரியர்களாய் இருக்க வேண்டியவர்கள் என்று சொன்னால் ஆவிக்குரியவைகளை பகுத்தறியக்கூடியவர்கள்; ஆவிக்குரிய ஆற்றல்களை பயன்படுத்த பயிற்சி பெற்றவர்கள். இங்கே பகுத்தறியக்கூடிய திறன் எல்லாம் முதிர்ச்சி நிலையிலே கொடுக்கப்படுகிறது.

ஆவிகளை பகுத்தறியும் வரம் [Gift of discerning]

இந்த வரம் யாருக்கு கொடுக்கப்படுகிறது என்றால் ஆவிக்குரிய காரியங்களில் முதிர்ச்சி அடைந்தவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. முதிர்ச்சி இல்லாமல் குழந்தைகளாக இருக்கிறவர்களுக்கு அவைகள் கொடுக்கப்படுவதில்லை.

பவுல் ஆசிரியராய் செயல்பட்ட விதம்

1 கொரிந்தியர் 2:13ல் "ஆவிக்குரியவர்களுக்கு ஆவிக்குரியவற்றைப் பற்றி விளக்கி கூறும் போது நாங்கள் மனித ஞானத்தால் கற்றுக்கொண்ட சொற்களை பேசுவதில்லை. மாறாக, தூய ஆவியார் கற்றுத்தரும் சொற்களையே பேசுகிறோம்".

ஆவிக்குரியவர்களுக்கு ஆவிக்குரியவைகளைப் பற்றி விளக்கி கூறும் போது மனித ஞானத்தினால் பேசக்கூடிய வார்த்தைகளை, மனித ஞானத்தால் கற்றுக்கொண்ட சொற்களை பேசுவதில்லை. மனித ஞானத்தினாலே, படித்ததினாலே, பெற்றுக்கொண்ட, அறிந்துகொண்ட வார்த்தைகளை பேசுவதில்லை. மாறாக, தூய ஆவியார் கற்றுத்தரும் சொற்களையே பேசுகிறோம்.

ஆங்கில மொழிபெயர்ப்பில் "**Which things also we speak, not in the words which man's wisdom taught, but which the Holy Ghost taught; comparing spiritual things with spiritual. 1cor2:13".**

"ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடு ஒப்பிட்டு ஆவியானவர் கொடுக்கிற வார்த்தைகளையே பேசுகிறோம். ஆவிக்குரியவர்கள், ஊனியல்பு கொண்டவர்கள்" என்று பவுல் பிரிக்கிறார். ஊனியல்பை மேற்கொண்டவர்கள் ஆவிக்குரியவர்கள்; ஊனியல்பின் நாட்டங்களை எல்லாம் மேற்கொண்டவர்களே ஆவிக்குரியவர்கள்; ஆவிக்குரியவர்கள் முதிர்ச்சி அடைந்தவர்கள்.

ஊனியல்பின் செயல்கள் காணப்படக் கூடியவர்கள் எல்லாம் குழந்தைகள். இதைத்தான் "**1 கொரிந்தியர் 3:1ல் ஆவிக்குரியவர்களிடம் பேசுவதுபோல உங்களிடம் பேச முடிவதில்லை ஊனியல்பு கொண்டவர்கள் எனவும் கடவுளோடு உள்ள உறவிலே குழந்தைகள் எனவும் எண்ணி பேசுகிறேன்**" என்று பவுல் சொல்கிறார்.

அங்கே திரும்பவும் குழந்தைகள் என்று சொல்கிறார். ஊனியல்பு நமக்குள் இருக்கும் வரைக்கும் நாம் குழந்தைகள் தான்; நாம் முதிர்ச்சி அடைந்தவர்கள் அல்ல. முதிர்ச்சி அடைந்துவிட்டோம் என்றால் ஆவிக்குரியவர்களாக இருப்போம். ஆண்டவர் இயேசுவும் "**யோவான்3:6ல் ஆவியால் பிறப்பவர் தூய ஆவியின் இயல்பை உடையவர்".** அப்படி என்றால் இந்த ஊனியல்பு எதுவும் இல்லாத

ஒரு ஆவிக்குரிய நிலைக்கு நாம் செல்ல வேண்டும். அதுதான் முதிர்ச்சியடைந்த நிலை; இவர்கள் கற்றுக் கொடுக்க வேண்டியவர்கள் என்று சொல்கிறார். இவ்வளவு நாளில் கற்றுக் கொடுக்கிறவர்களாக இருந்திருக்க வேண்டும் இன்னும் குழந்தைகளாக இருக்கக் கூடாது. அந்த முதிர்ச்சி நிலையை நாம் கொண்டிருக்க வேண்டும். அந்த ஆவிக்குரிய நிலைக்கு போகும்போது ஊனியல்பு கொண்டவர்கள் நமக்கு அடிபணிய ஆரம்பித்து விடுவார்கள்.

தானியேலின் வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்கள்

தானியேலுடைய வாழ்க்கையில் பார்க்கும்போது இரண்டு முறை சிங்க குகையில் போடப்படுகிறார். தானியேல் 6ம் அதிகாரத்தில் ஒரு தடவை பார்க்கிறோம் அப்போது சிங்கக்குகையில் போடப்படுகிறார்.

முதல் தடவை அவர் சிங்கக்குகையில் போடப்படும் போது ஒரு வானதூதர் வந்து அந்த சிங்கங்களின் வாய்களை கட்டிப் போடுகிறார். முதல் தடவையிலே இது நடக்கிறது. முதல் தடவை சிங்கக்குகையில் போடும்போது அந்த சிங்கங்கள் அவரை கடிக்காதபடிக்கு ஒரு தூதர் அந்த குகைக்குள் இறங்கி வந்து சிங்கங்களின் வாய்களை கட்டிப்போடுகிறார். இரண்டாவது இணைத் திருமுறை நூல்கள் பகுதியில் வரும், அங்கே திரும்பவும் ஒரு தடவை சிங்கக் குகையிலே தள்ளப்படுகிறார். இரண்டாவது தடவை தள்ளப்படும் பொழுது அங்கே வானதூதர் இறங்கி வரவில்லை. தானியேல் சிங்கங்களுக்கு நடுவில் தான் இருக்கிறார். ஆனாலும் சிங்கங்கள் அவரை ஒன்றும் செய்யவில்லை; அவருக்கு பசி எடுக்கிறது. ஆகையினாலே, ஆண்டவர், அபக்கூக்கு என்ற ஒரு தீர்க்கதரிசி அவர் வயலிலே வேலை செய்கின்ற தம்முடைய ஆட்களுக்கு உணவை எடுத்துக் கொண்டு போகிறார். அப்போது ஆண்டவர் அந்த தீர்க்கதரிசியை பார்த்து, "என் ஊழியன் பாபிலோனியாவில் சிங்கக் குகையில் பசியாய் இருக்கிறான். ஆதலால் இந்த உணவை எடுத்துக் கொண்டு போய் அவருக்கு கொடு" என்று சொல்கிறார். "ஐயோ பாபிலோன் எங்கே இருக்கிறது? சிங்கக்குகை எங்கே இருக்கிறது தெரியாது நான் போய் எப்படி கொடுப்பேன்" என்று அபக்கூக்கு சொல்வார். உடனே ஆண்டவர் அவருடைய தலை முடியை பிடித்து தூக்கி கொண்டு போய் சிங்கக்குகைக்கு முன்னாடி விட்டுவிடுவார். "தானியேலே ஆண்டவர்

உனக்கு உணவு அனுப்பியிருக்கிறார் சாப்பிடு" என்பார். சிங்கக்குகையிலே இருந்தாலும் சிங்கங்கள் அவரை ஒன்றும் செய்யவில்லை. வானதூதர் இறங்கி வரவில்லை ஆனாலும் அந்த சிங்கங்கள் தானியேலை ஒன்றும் செய்யவில்லை. ஏன் ஒன்றும் செய்யவில்லை? தானியேலிடத்திலே ஊனியல்பின் வாடையே இல்லை. சிங்கம் ஊனியல்பு கொண்டவைகளைத் தான் சாப்பிடும் உடல் இருந்தால்தான் சாப்பிடும். தானியேலிடத்திலே ஊனியல்பின் வாடை முற்றிலும் இல்லாமல் இருந்தது அவர் முழுக்க முழுக்க ஆவிக்குரியவராய் இருந்ததால் சிங்கங்கள் அவரை ஒன்றும் செய்யவில்லை. தானியேலுடைய முதிர்ச்சி நிலையை நாம் அதிலே பார்க்கிறோம்.

ஆவிக்குரியவர்களுக்கு எல்லாம் அடிபணியும்

பல நேரங்களில் நாம் சில சத்தியங்களை தெரிந்தவுடனே நாம் ஆசிரியராகி விட்டோம் என்று நினைக்கிறோம். ஆனால், ஆசிரியர்கள் என்றால் ஆவிக்குரியவைகளை பகுத்தறியக் கூடியவர்கள். உண்மையாகவே ஆவிக்குரியவர்களாக வாழக்கூடியவர்கள், ஊனியல்பை முற்றிலுமாய் மேற்கொண்டவர்கள். ஊனியல்பை மேற்கொண்டு ஆவிக்குரியவர்களாக இருக்கும்பொழுது மிருகங்கள் இந்த உலகத்தில் உள்ள பிராணிகள் இவைகள் எல்லாம் அவர்களுக்கு அடிபணிய ஆரம்பித்துவிடும். ஊனியல்பு கொண்டவைகளை அவைகள் கடிக்கும், போராடும். ஆவிக்குரியவர்களை மிருகங்கள் ஒன்றும் செய்வதில்லை. ஆகையினால்தான் ஆண்டவர், "சிங்கத்தின் மேலும் பாம்பின் மேலும் நடந்து பாம்புகளை மிதித்து போடுவார்; பாம்புகளை கைகளால் பிடிப்பர் அது அவர்களுக்குத் தீங்கிழைக்காது" என்று சொல்கிறார். இதெல்லாம் உண்மைதான்; எப்பொழுது இவைகள் எல்லாம் உண்மை? ஆவிக்குரியவர்களாக நாம் மாறும்போது, இவைகளெல்லாம் நமக்கு அடி பணிந்து நிற்க ஆரம்பிக்கும். ஊனியல்பின் தன்மை நம்மிடத்தில் மாறும்பொழுது ஊனியல்பின் செயல்பாடுகள் முற்றிலும் இல்லாமல் ஊனியல்பின் தன்மைகள் மாற்றமடைகிறபோது இந்த சம்பவங்கள் நடக்க ஆரம்பிக்கிறது.

ஆவிக்குரியவர்களாய் மாறுவது எப்படி?

விசுவாசிகள் முழுமையாக தேவனுடைய வார்த்தையை விசுவசிக்கும் போது ஆவிக்குரியவர்களாக மாறுகிறோம். ஊனியல்பின் சுபாவங்கள் முற்றிலுமாய் அவர்களை விட்டு நீங்கிப் போய்விடும். அந்த ஆவிக்குரிய தன்மையை நாம் கொண்டிருக்க வேண்டும் என்பது தான் கடவுளுடைய விருப்பம். ஆவிக்குரியவர்களாக நாம் இருக்க வேண்டும் என்பது தான் தேவனுடைய விருப்பம். ஆண்டவருடைய அப்போஸ்தலர்கள் புனிதர்கள் எல்லாருமே இப்படி ஆவிக்குரியவர்களாகவே முதிர்ச்சியடைந்த நிலையில் இருந்தார்கள்.

கடவுளுடைய விருப்பம் இதுவே

அதனாலே பவுல் இரண்டு பக்கத்தையும் பார்க்கிறார். ஒன்று ஊனியல்பு கொண்டவர்களைப் பார்த்து அவர்களோடு பேசுகிறார்; அப்போதுதான் சொல்கிறார்; உங்களுக்கு பால் தான் தேவை கெட்டியான உணவு தேவையில்லை; அதேபோல ஆவிக்குரிய அப்போஸ்தலர்களிடமோ, ஆவிக்குரிய அவருடைய ஊழியர்களிடமோ ஆவிக்குரியவற்றை விளக்கும் போது மனித ஞானத்தால் கற்றுக்கொண்ட சொற்களைப் பேசுவதில்லை மாறாக, தூய ஆவியானவர் கற்றுத் தருகிற சொற்களையே பேசுகிறோம். ஆவிக்குரியவைகளை பேசுவதற்கு தூய ஆவியானவர் சில வார்த்தைகளைக் கற்றுக் கொடுக்கிறார் என்று சொல்கிறார். இது ஒரு மிகச்சிறந்த அற்புதம்! அது ஆச்சரியமானது! ஆகையினாலே, நம்மில் தேறின ஒவ்வொருவருக்கும் இதே சிந்தையே இருக்கட்டும் என்று பவுல் சொல்கிறார். அதனாலே அந்த முதிர்ச்சி நிலைக்கு நாம் எல்லாருமே போக வேண்டும் என்பது தான் தேவனுடைய விருப்பம். ஆவிக்குரிய வாழ்வுக்கு நாம் நம்மை ஒப்புக் கொடுப்போம். இன்னும் ஊனியல்பின் செயல்கள் நம்மிடத்தில் காணப்படுமானால் அதற்காக மனம் வருந்துவோம். இந்த ஊனியல்பின் செயல்களிலிருந்து நாம் எப்படியாவது வெளியே வர வேண்டும். முழுக்க முழுக்க ஆவிக்குரியவர்களாக மாற்றமடைய வேண்டும். அதுதான் தேவனுடைய சித்தம்; அதுதான் தேவனுடைய விருப்பமாய் இருக்கிறது. இந்த பூமியில் வாழும் போதே ஊனியல்பின் நாட்டங்கள் இல்லாமல் ஆவிக்குரியவர்களாக

முற்றிலும் நாம் மாற்றமடைந்து ஒரு மறுரூபம் அடைய வேண்டும் என்பதைத்தான் கடவுள் விரும்புகிறார். ஒரு ஆவிக்குரிய வாழ்க்கை நமக்காக ஆண்டவர் வைத்திருக்கிறார் அப்படி வாழ்வது தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

கலாத்தியர் 5:19-21 ஊனியல்பின் செயல்கள் யாவருக்கும் தெளிவாய்த் தெரியும். அவை பரத்தைமை, கெட்ட நடத்தை, காமவெறி, சிலைவழிபாடு, பில்லி சூனியம், பகைமை, சண்டை சச்சரவு, பொறாமை, சீற்றம், கட்சி மனப்பான்மை, பிரிவினை, பிளவு, அழுக்காறு, குடிவெறி, களியாட்டம் முதலியவை ஆகும். இத்தகையவற்றில் ஈடுபடுவோர் இறையாட்சியை உரிமைப் பேறாக அடைவதில்லை என்று நான் ஏற்கெனவே சொன்னேன். அதையே இப்போதும் மீண்டும் சொல்கிறேன்.

இந்த நாட்களில் நம்மை ஆராய்ந்து பார்த்து ஊனியல்பின் செயல்களுக்காக மனம் வருந்தி அவைகளிலிருந்து முற்றிலும் வெளிவருவதற்கு, ஆவிக்குரியவர்களாய் மாற்றம் அடைவதற்கு நம்மை ஒப்புக் கொடுத்து ஜெபிப்போம்.

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவிக்கும் மகிமை உண்டாவதாக!

ஊழியர்காணொளிகூடுகை – 27 / 04 / 2020

இயேசுவை பின்பற்றுதல் (சுயத்தை மறுத்து சிலுவை சுமத்தல்)

மத்தேயு 16 : 24 - 25 :பின்பு இயேசு தம் சீடரைப் பார்த்து, "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும். ஏனெனில் தம் உயிரைக் காத்துக்கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்துவிடுவர். மாறாக என் பொருட்டுத் தம்மையே அழித்துக் கொள்கிற எவரும் வாழ்வடைவார்.

வாழ்க்கையில் இயேசுவை பின்பற்ற வேண்டும் என நினைத்தால், ஒருவர் தன்னலம் துறந்து பின்பற்ற வேண்டும் என வசனம்

கூறுகின்றது. தன்னலம் துறந்து என்றால், அதன் சரியான பொருள் தன்னையே மறுக்க வேண்டும். தன்னையே மறுக்க வேண்டும் என்றால் தம் விருப்பு, வெறுப்புகளை மறுத்து தம் சிலுவையை தூக்கி கொண்டு என்னை பின்பற்றட்டும் என்கிறார் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. வாழ்க்கையில் இயேசுவை பின்பற்ற வேண்டுமென்றால், நம்முடைய விருப்பு வெறுப்புக்களை மறுத்து தான் ஆக வேண்டும். விருப்பு வெறுப்புக்களை வைத்து கொண்டு இயேசு கிறிஸ்துவை பின் செல்கிறேன் என்று சொன்னால் அது அபத்தம், பொய். அப்படி செய்யவே முடியாது. அதைத்தான் ஆண்டவர் தெளிவாக சொல்கின்றார், "தன்னை பின் செல்ல விரும்புகிறவன் தன் விருப்பு வெறுப்புகளை, ஆசைகளை மறுத்து, தன் சுக துக்கங்களை எல்லாம் மறுத்து, தனக்கு இருக்க கூடிய எல்லாவற்றையும் மறுத்து சிலுவையை சுமந்து கொண்டு என்னை பின்பற்றட்டும்.

இயேசுவை பின்பற்ற இரண்டு படிகள் தான் உள்ளன.

1) தன்னையே மறுத்தல்

2) சிலுவை சுமந்து கொள்ளுதல்

இன்றைக்கு சிலுவை வந்தாலே வேறு மாதிரி நடந்து கொள்கிறார்கள். சிலுவையை சுமக்க அநேகர் ஆயத்தமாக இல்லை. எல்லோரும், கஷ்டமே வரக்கூடாது என்று தான் உள்ளனர். இது கிறிஸ்தவ வாழ்க்கையே இல்லை, எங்கு போனாலும் அங்கே சில கஷ்டங்கள் உண்டு. வேலை செய்யும் இடம், குடும்பம், என உலகத்தில் எங்கே போனாலும் சில பாடுகள், கஷ்டங்கள் உண்டு. பரலோகத்தை அடைய வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு, இயேசுவை பின்பற்ற நினைப்பவர்களுக்கு இரண்டு படிகளை தான் ஆண்டவர் கூறுகின்றார்.

தன்னை மறுப்பது என்றால் என்ன? சுயத்தை மறுப்பது. சுயம் என்ன சொல்லும்?

சுயம் கூறுவது	சுயத்தை மறுப்பது
“நீ சோர்வாய் இருக்கின்றாய்; படுத்துக்கொள்” என்று	“நம்முடைய உடல் வலுவற்றது தான் ஆவியோ ஊக்கமுள்ளது

சொல்கிறது	ஆகையால் சோதனைக்கு உள்ளாகாதபடி விழித்திருந்து ஜெபி” என்று சொல்கிறது
“சண்டைப் போடணும்” என்று சொல்கிறது.	“சண்டைப் போடாதே அமைதியாய் இரு” என்று சொல்கிறது.
“சுவையான உணவு, இன்னும் கொஞ்சம் சாப்பிடலாம்” என்று சொல்கிறது. (நன்றாக சாப்பிட்டால் ஜெபிக்க முடியாது)	“போஜனப் பிரியம் (பெருந்தீனி) சரியில்லை” என்று சொல்கிறது.
அலைபேசியை (Cell phone) பார்க்கலாம்	விவிலியம் வாசிக்கலாம்

இவை அனைத்தையும் மறுப்பது தான் இயேசுவை பின்பற்ற முதல் வழி. தன்னையே மறுப்பது என்றால், நம்முடைய உணவை, தூக்கத்தை, விருப்பு வெறுப்புகளை மறுப்பது.

ஒறுத்தல்

சில விருப்பங்களை வைத்திருப்போம், “அந்த ஊர் திருவிழாவுக்கு செல்ல வேண்டும் அதுவும் புது ஆடைகளுடன் செல்ல வேண்டும்”, இதை போன்ற சுய விருப்பங்களை மறுக்க வேண்டும். சில

ஆடைகள் மீது ஆசை, சில இடங்களுக்கு செல்ல வேண்டும் என்னும் விருப்பம், இதை எல்லாம் மறுக்க வேண்டும். இதை மறுக்காமல் நாம் இயேசுவை பின் செல்ல முடியாது. சில இடங்களுக்கு நாம் போக வேண்டும் என்று ஆசை இருக்கும், அதை மறுக்க தான் வேண்டும். ஏவாள் சுற்றிப்பார்க்க ஆசைப்பட்டுதான் பாவத்தில் விழுந்தாள். ஆகவே தான் புனிதர்கள் எல்லோரும் தன்னை மறுப்பதற்காக தான், பல ஒறுத்தல் முயற்சிகள் செய்தார்கள். ஒரு நாளைக்கு 200 அல்லது 300 ஒறுத்தல்களை செய்தார்கள். புனிதர்களுடைய வாழ்க்கையே ஒறுத்தல்களாக தான் இருந்தது. இயேசுவை பின் செல்பவர்களுக்கு "எனக்கு பிடிக்கும், பிடிக்காது" என்னும் இரண்டுமே இருக்கக் கூடாது. தன்னை மறுக்கும் போது தான் நாம் இயேசுவை நோக்கி செல்வோம். ஒருவன் தன்னை மறுக்கும் போது தான் இயேசுவை பின்பற்ற முடியும். இரண்டாவது சிலுவையை பார்த்து பயப்படக்கூடாது. முதலில் நம் விருப்பு வெறுப்புகளை விட வேண்டும். இரண்டாவது சிலுவையை தூக்கி கொண்டு இயேசுவை பின் செல்ல வேண்டும். இந்த இரண்டையும் செய்தால் தான் இயேசுவை பின் செல்ல முடியும். சுயத்தை (தன்னை) மறுக்கும் பொழுது தான் நாம் இயேசு கிறிஸ்துவை நோக்கி திரும்பி நிற்போம். தன்னை மறுக்கவில்லை என்றால், வேறு ஒரு பக்கம் திரும்பி நிற்போம்.

எசாயா 55: 8 – என் எண்ணங்கள் உங்கள் எண்ணங்கள் அல்ல, உங்கள் வழி முறைகள் என் வழிமுறைகள் அல்ல, என்கிறார் ஆண்டவர்.

நம் விருப்பங்கள் அவர் விருப்பம் அல்ல, நம் வழிமுறைகளும் அவர் வழி முறைகள் அல்ல என்று சொன்னால், நாம் இயேசுவின் பக்கம் போகாமல் வேறு ஒரு பக்கம் போகிறோம் என்று அர்த்தம். ஆகவே ஒருவன் தன்னை மறுக்காமல் சிலுவை தூக்கினான் என்றால், இயேசுவின் அருகில் போகாமல் இயேசுவை விட்டு தூரமாக போகிறான். அவர் பக்கம் திரும்ப வேண்டுமென்றால், நம்மை மறுத்து தான் ஆக வேண்டும். சிலுவையை தூக்காத வரைக்கும் நாம் அவரை பின் செல்ல முடியாது.

<u>சிலுவை இல்லாமல் இயேசுவை நெருங்க முடியாது</u>

சிலர் சிலுவை வரக்கூடாது என பல காரியங்களை செய்கின்றனர். "Dont fear for the cross". சிலுவையை கண்டு பயப்பட வேண்டாம்.

சிலுவை இல்லாமல் மீட்பு இல்லை. சிலுவை இல்லாமல் இயேசுவின் மாட்சியில் நாம் பங்குக் கொள்ள முடியாது. இயேசு கிறிஸ்துவின் வழி சிலுவை வழி தான். நிறைய மக்களுக்கு இயேசுவை பிடிக்கும், இயேசு இருக்கும் பொழுது ஆயிரக்கணக்கான மக்கள் அவரை தேடி வந்தார்கள். ஏரியின் மறு கரையில் இருந்தாலும் தேடி வந்தார்கள், பாலைவனத்திற்கு கூட தேடி வந்தார்கள். ஆனால், நகரத்தில் அதுவும் எருசலேம் நகரத்தில் அவர் சிலுவையை சுமக்கும் போது யாரும் அவர் அருகில் செல்லவில்லை, எல்லோரும் தள்ளி தான் இருந்தனர். இன்றும் கூட நிறைய கிறிஸ்தவர்களும், ஊழியர்களும் கூட சிலுவையை கண்டு பயப்படுகின்றனர், தள்ளி தான் இருக்கின்றனர். சிலுவை இல்லாமல் இயேசுவை நெருங்க முடியாது. "நான் எங்கே இருப்பேனோ என் பணியாளரும் அங்கே இருப்பான்" என்கின்றார் ஆண்டவர். ஆகையால் சிலுவையை கண்டு நாம் பயப்படக்கூடாது. நாம் எங்கு சென்றாலும் அங்கு சிலுவை வர தான் செய்யும்.

<u>பயிற்சி செய்யுங்கள்</u>

இந்த உலகில் நாம் இருக்கும் வரை, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான சிலுவை உண்டு. எனவே, பயப்படாமல் சிலுவையை தூக்குங்கள், ஏனென்றால் அந்த பாடுகள் சில காலம் தான், நிரந்தரம் அல்ல. இந்த பாடுகள் எல்லாம் “அதி சீக்கிரத்தில் நீங்கி விடும் உபத்திரவம்” என்று தான் விவிலியம் கூறுகின்றது. பெரிய மாட்சிமையை அது நமக்கு கொண்டு வரும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. எந்த உபத்திரவங்களும் சிலுவையில் நிரந்தரமானதல்ல. சிலுவையை கண்டு பயப்படுகிறவர்கள் கிறிஸ்துவின் பின் செல்ல முடியாது. இந்த இரண்டு காரியங்களும் நம்மில் இருக்க வேண்டும். கடவுள் நம்மை விவிலியம் வாசிக்க சொல்வார், ஆனால் நம்முடைய விருப்பம் அலைபேசியை (Cellphone) பார்க்கலாம் என்று இருக்கும். இப்படி பல காரியங்களில் நம்மை மறுக்க வேண்டும் அப்பொழுது தான் கிறிஸ்துவை பின் செல்ல முடியும். சுயமறுப்பை அனைவரும் கட்டாயம் பயிற்சி செய்தே ஆக வேண்டும். நிறைய நேரங்களில், சுயம் விரும்புகிறதை கொடுக்கிறதினாலே தான் சோதனையில் விழுகின்றோம் அல்லது சோதனைகள் வர ஆரம்பிக்கின்றது. தேவன் சொல்லக்கூடிய, சுயமறுப்பை பயிற்சி செய்தால் நாம் சோதனைகளை எளிதாக கடந்து

செல்ல முடியும். நம்மில் கூட சிலர் சுயமறுப்பை பயிற்சி செய்யாமல் சோதனையில் விழுந்து கிடக்கின்றோம், இன்று முதல் சுயமறுப்பை பயிற்சி செய்யுங்கள் உங்கள் சோதனை மாறிவிடும்.

இயேசுவின் சுயமறுப்பு

இயேசு நாற்பது நாட்கள் சாப்பிடாமல் இருந்ததால், அவருக்கு பசி எடுக்கின்றது. அப்போது பிசாசு வந்து இயேசுவின் சுயத்திற்கு சோதனை ஏற்படுத்துகிறது. பிசாசு இயேசுவிடம் "நீர் கடவுளுடைய மகன் தானே பசியாக இருக்கிறீர்களே இந்த கற்களை அப்பமாக மாற்றி சாப்பிடும்" என்று சுயத்திற்கு இடம் கொடுக்க சொல்லுகின்றது. ஆனால், இயேசு சுயத்திற்கு துளி கூட இடம் தராமல் "மனிதன் அப்பத்தினால் மட்டுமல்ல, கடவுளுடைய வாயின் வார்த்தையினால் உயிர் வாழ்வான் என்று எழுதியிருக்கிறதே" என்றார். இயேசு அந்த வார்த்தையை நிறைவேற்றுவதில் தீவிரமாய் இருந்தார். இதைத்தான்,

யோவான் 4: 34 – இயேசு அவர்களிடம், "என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் உணவு.

இயேசு சீடர்களிடம், "நீங்கள் அறியாத உணவு ஒன்று இருக்கின்றது, என் தந்தையின் வேலையை செய்வதே என் உணவு " என்கின்றார். அந்த அளவுக்கு இயேசு தன் சுயத்தை மறுத்தார்.

சுயமறுப்புக்கு கடவுள் அருளும் பெலன்

அதே சுயமறுப்பு நமக்கு வேண்டும், ஆனால் இந்த Lockdown-ல், நேரம் போகவில்லையே என்று கடவுள் விரும்பாத, தேவை இல்லாத நபர்களோடு சில தொலைபேசி பேச்சுக்களில், நாம் ஈடுபடுகின்றோம். இங்கு சுய மறுப்பு இல்லாததை காண்கிறோம். இன்றைக்கு குடும்பங்களில், நிறையப் பிரச்சனைகளுக்கு காரணம் தன்னை மறுக்காதது தான். கடவுளே சில காரியங்களை அனுப்பும் போது, நம்மை மறுத்து சிலுவையை தைரியமாக சுமக்க தான் வேண்டும். அதன் வழியாக கடவுள் பெரிய ஆசிர்வாதங்களை நம் வாழ்விலே வைக்கின்றார். மாபெரும் மாட்சிமைக்குள்ளே நாம் பிரவேசிக்கும்படி செய்வார். இந்த உலகில் நாம் படும் பாடுகள்,

வரப்போகின்ற மாட்சிமைக்கு ஒப்பிடத்தக்கவை அல்ல. அப்படிப்பட்ட மாட்சி இருக்கும் போது நாம் ஏன் சிலுவையை கண்டு பயப்பட வேண்டும். விவிலியத்தில் தெளிவாக இருக்கிறது,

1 கொரிந்தியர் 10: 13 - உங்களுக்கு ஏற்படுகின்ற சோதனை பொதுவாக மனிதருக்கு ஏற்படும் சோதனையே அன்றி வேறு அல்ல. கடவுள் நம்பிக்கைக்குரியவர். அவர் உங்களுடைய வலிமைக்கு மேல் நீங்கள் சோதனைக்குள்ளாக விடமாட்டார்; சோதனை வரும்போது அதைத் தாங்கிக்கொள்ளும் வலிமையை உங்களுக்கு அருள்வார்; அதிலிருந்து விடுபட வழி செய்வார்.

எவ்வளவு பெரிய சிலுவையை சுமக்க முடியுமோ, அவ்வளவு பெரிய சிலுவை தான் நமக்கு வரும். அதற்குள்ளாகவே, இந்த சிலுவை பெரிதாகிவிட்டால் என்ன செய்வது என்று சிலுவையை விட்டு ஓடிப்போக பார்க்கின்றோம். நாம் தாங்க முடியாத சோதனைகளை அவர் நமக்கு வரவிடமாட்டார். நாம் தாங்குகின்ற அளவுக்கு தான் சோதனைகளை அனுமதிப்பார். அந்த சிலுவையை சுமப்பதற்கு ஆண்டவரே பெலத்தையும் தருகின்றார். கடவுளுடைய பெலன் வேண்டுமென்றால், சிலுவையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

<u>சிலுவையை ஏற்றுக் கொள்ள பயம் வேண்டாம்</u>

கடவுளுடைய பெலன் வேண்டுமென்று நினைக்கிறவர்கள், சிலுவை வரும் போது பயப்படாதீர்கள், அப்பொழுது ஆண்டவர் உங்களுக்கு அதிக பெலனை தருகிறார். சிலுவை தூக்கினால் தானே நமக்கு அதிக பெலன் தேவை, நாம் சிலுவை சுமக்க பயந்தால் நமக்கு எப்படி பெலன் கிடைக்கும்! சாதாரண மனிதர்களால் தாங்க முடியாத ஒன்றை சுமப்பதற்கு கடவுள் அசாதாரணமான பெலத்தை தருகிறார். ஆதலால், சிலுவையை சுமக்கிறவர்களுக்கு தான் கடவுள் பெலத்தை தருகிறார். சிலுவையைக் கண்டு பயந்து ஓடுகிறவர்களுக்கு அல்ல. இன்றைக்கு நிறைய ஜெபிக்கின்ற மக்களை பார்க்கிறோம். ஆனால், அவர்களும் பெலன் இல்லாமல் இருக்கிறார்கள். இதற்கு காரணம் அவர்களிடம் சுயமறுப்பு இல்லை. சிலுவையை ஏற்க பயப்படுகிறார்கள். அவர்கள் பயத்திற்கு காரணம் கடவுளுடைய புது பெலன் அவர்களிடம் இல்லை. அவர்கள் தன்னை மறுப்பதில்லை. அப்படி தன்னை மறுப்பவர்களுக்கு தான் ஆண்டவர் சிலுவையை

சுமக்க பெலத்தையும் அதிலிருந்து வெளியே வருவதற்கு வழியையும் காண்பிக்கிறார்.

<u>சிலுவையை ஏற்க வாக்குறுதிகளை நம்புங்கள்</u>

பிலிப்பியர் 1:29 - ஏனெனில் கிறிஸ்துவிடம் நம்பிக்கை கொள்வதற்கு மட்டும் அல்ல, அவருக்காகத் துன்பங்களை ஏற்பதற்கும் நீங்கள் அருள் பெற்றுள்ளீர்கள்.

ஆண்டவரின் பொருட்டு சில பாடுகளை அனுபவிப்பதற்கும் நாம் பெலனை, அருளை பெற்றிருக்கின்றோம். அப்படி கொடுக்கப்பட்ட அருளானது "நான் வெறுமனே விசுவசிக்கிறேன்" என்று சொல்வதற்கு அல்ல. இயேசுவுக்காக சில பாடுகளை சுமப்பதற்கே கடவுளுடைய அருள் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்மை வெறுமனே சுமக்க வைப்பதற்கு அல்ல நமக்கு முன்பாகவே அவர் சிலுவையை சுமந்திருக்கிறார். ஆதலால், சிலுவையின் சுமை என்னவென்று ஆண்டவருக்கு தெரியும். நாம் படக்கூடிய கஷ்டங்களோ, வேதனையோ, அவமானங்களோ, பசியோ, தனிமையோ எல்லாம் அவருக்கு தெரியும். எல்லா பாதையிலும் அவர் நடந்து போனதினாலே அது எப்படி இருக்கும் என்பதும் அவருக்கு தெரியும். அதிலே அவர் உதவி செய்யவும் வல்லவராயிருக்கிறார். எந்த காரியம் நாம் தாங்க முடியும் அல்லது முடியாது என்பதை பார்த்து, உடனே அதற்காக அவருடைய பெலனை கொடுப்பதற்கும், அதிலிருந்து நம்மை வெளியே கொண்டு வருவதற்கும் அவர் வல்லவராயிருக்கிறார். இயேசுவை பின்பற்றின திருத்தூதர்களோ, புனிதர்களோ சிலுவையைக் கண்டு ஒரு நாளும் பயப்படவில்லை. அவர்கள் அனைவரும் தன்னை மறுத்து, தைரியமாக இயேசுவை பின் சென்றனர். அதற்கு பேர் தான் விசுவாசம். கடவுளுடைய வார்த்தையை நம்புவீர்கள் என்றால், சிலுவையை தூக்க ஒருபோதும் பயப்படாதீர்கள். நீங்கள் குடும்பங்களில் இருக்கிறீர்கள், சில சிலுவைகள் கட்டாயம், நிச்சயமாக வர தான் செய்யும், அந்த சிலுவைகள் அனைத்தையும் சந்தோஷமாக ஆண்டவருக்காக ஏற்று கொள்ளுங்கள். எனக்கு சிலுவையே வேண்டாம் என மறுதலித்தால் நீங்கள் தேவனுடைய பிள்ளைகள் அல்ல.

சிலுவைகள் வரும் போது "ஆண்டவரே நீர் என்னோடு இருக்கின்றீர், இதை தாங்குவதற்கான பெலனை நீர் தருவீர், தப்புவிக்கவும் வழி

செய்வீர்" என்ற விசுவாசத்துடன் நில்லுங்கள். ஆகையினால் யாரும் பயப்படாதீர்கள். சிலுவைகள் குடும்பங்களிலே, துறவற சபைகளிலே, ஊழியத்திலே, சகோதர சகோதரிகளிடையே கூட வரலாம். சில உபத்திரவங்கள் வருவதுண்டு. ஆகவே தான் ஆண்டவர் கூறுகிறார், "என்னுடைய வாக்குறுதிகளை நம்புகின்றவர்களே என்னை பின்பற்ற முடியும்". இப்படி சிலுவையை தூக்க நாம் தயங்குகின்றோம் என்றால் அவருடைய வாக்குறுதிகளை நாம் நம்பவில்லை என்று அர்த்தம். "உன்னை மறுத்து சிலுவையை தூக்கி கொண்டு என் பின்னால் வா" என்று இயேசு தெளிவாக கூறுகின்றார். ஆண்டவர் சொல்கின்றார், "என் சுமை அழுத்தாது, என் நுகம் எளிது". இதை நாம் முழுவதுமாக நம்பவில்லை. அதை நம்பினால் தைரியமாக சிலுவையை தூக்குவோம். நம் திராணிக்கு மேலாக சோதிக்கப்பட அவர் ஒருநாளும் விடமாட்டார், ஆகவே தைரியமாக இருங்கள். எனவே, எல்லா பிரச்சனைகளிலும், வியாதி, மனக்கவலை, பணக்கஷ்டம், சுகவீனம், பிறரின் ஏளனப் பேச்சு, பிறரின் பொறாமை போன்ற சூழ்நிலையிலும் பயப்படாதீர்கள். இவையனைத்தையும் தாங்குவதற்கு ஆண்டவர் பெலனை தருகிறார். அதிலிருந்து வெளிவருவதற்கு வழியையும் காண்பிக்கிறார். அதற்கும் மேலே நாம் அவரை நம்பவில்லை என்றால் தான் பயப்படுகிறோம் என்று அர்த்தம். ஆகையினால், "ஆண்டவரே நான் உம்மை நம்புகிறேன் என்று அறிக்கை செய்யுங்கள். ஆண்டவருக்கு தெரியும் நம்மால் எவ்வளவு தூக்க முடியும், நம்முடைய பெலன் என்னவென்று.

ஒப்புக்கொடுப்போம்

உங்களுக்கு கூட உங்கள் பெலன் என்னவென்று தெரியாமல் இருக்கலாம்! நிறைய மக்களுக்கு அவர்கள் பெலன் என்னவென்று அவர்களுக்கே தெரியாது. அதனால் தான் என்னால் முடியவில்லை என்று கூறுகிறார்கள். ஆனால், ஆண்டவர் அவர்கள் பெலன் என்னவென்று அறிந்திருக்கிறார். ஆகவே சிலுவையை பார்த்து பயப்படுகிறவர்கள், சிலுவை வந்து விடுமோ என தயங்குகின்றவர்கள், எல்லோரும், "ஆண்டவரே நான் உம்மை நம்புகிறேன், எனக்காக நீர் சிலுவையை சுமந்தீர், உம்மோடு கூட நானும் சிலுவையை சுமக்கிறதற்கு பயப்படமாட்டேன் ஆகவே சிலுவையை கண்டு நான் பயப்படமாட்டேன், என்னை மறுப்பதற்கு

பயப்படமாட்டேன், என் விருப்பு வெறுப்புகளை மறுப்பேன் " என்று அறிக்கை செய்யுங்கள். அப்படி நாம் தயங்குகின்றோம், அதனால் சந்தோஷத்தை இழந்து விட்டோம் என்றால், அவர் வார்த்தையின் மீது நம்பிக்கை வைக்கவில்லை என்றால் இந்த நேரத்தில் மன்னிப்பு கேட்போம். இனி "என் சுமை அழுத்தாது, என் நுகம் எளிது" என்ற வார்த்தைகளை நம்புகிறேன் என ஜெபிப்போம். ஆமென்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே மகிமை!

11/05/2020

இயேசுவைப் போன்று முதிர்ச்சி அடைய வேண்டும்

எபேசியர் 4:13-15 - அதனால் நாம் எல்லாரும் இறைமகனைப் பற்றிய அறிவிலும் நம்பிக்கையிலும் ஒருமைப்பாட்டை அடைவோம். கிறிஸ்துவிடம் காணப்பட்ட நிறைவைப் பெறுமளவுக்கு நாம் முதிர்ச்சியடைவோம். ஆகவே இனி நாம் குழந்தைகளைப் போல் இருக்கக் கூடாது. மனிதருடைய தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் தவறுக்கு வழி நடத்தும் ஏமாற்று வழிகளையும் நம்பி, அவர்களுடைய போதனைகள் என்னும் காற்றால் அடித்துச் செல்லப்பட்டு அங்குமிங்கும் அலைக்கழிக்கப்படக் கூடாது. மாறாக, அன்பின் அடிப்படையில் உண்மை பேசி, தலையாகிய கிறிஸ்துவைப் போன்று எல்லாவற்றிலும் நாம் வளர வேண்டும்.

ஒருமைப்பாட்டை அடைய இதுவே வழி

இங்கு பவுல், “இறை மகனாகிய இயேசுவைப் பற்றிய அறிவிலும், நம்பிக்கையிலும் ஒருமைப்பாட்டை அடைவோம். கிறிஸ்துவை குறித்த அறிவு, இயேசு கிறிஸ்துவின் மேல் வைக்கிற விசுவாசம், இவற்றிலே ஒரு ஒருமைப்பாட்டை அடைவோம்” என்று சொல்கிறார். ஒருமைப்பாடு(Unity) என்றால் ஒரு ஐக்கியம். ‘ஒருமனம்’ எதினாலே உண்டாகிறது? கிறிஸ்துவைப் பற்றிய அறிவினாலும், இயேசு கிறிஸ்துவின் மீது வைக்கிற விசுவாசத்தினாலும், இந்த ஒருமைப்பாட்டு உணர்வுக்குள் வருகிறோம். கிறிஸ்துவுக்குள் இருக்கிற எல்லாருக்குள்ளும் இந்த ஒருமைப்பாடு இருக்க வேண்டும். இந்த ஒருமைப்பாடு அரசியல் பாகுபாடு இல்லாமல் கிறிஸ்துவுக்குள் இருக்கிறதினாலே உண்டாகிற ஒருமைப்பாடு. எதனாலே இது உண்டாகிறது? இயேசு கிறிஸ்துவை குறித்த அறிவும், அவர்மேல் வைக்கிற விசுவாசமும் ஒருமைப்பாட்டுக்கு நம்மை வழிநடத்துகிறது. குறிப்பாக, இன்று பல சபைகள் இருக்கிறது; பல பிரிவினைகள் இருக்கிறது; ஒருவர் ஒருவரை தாக்கிக் கொள்ளக்கூடிய, குறை சொல்லக் கூடிய, மற்றவர்களை தாக்கி பேசிவிட்டு தாங்கள்தான் கிறிஸ்துவுக்குள் வளர்கிறோம் என்று பேசக்கூடிய ஒரு சூழ்நிலைகளை நாம் பார்க்கிறோம். “நாங்கள் தான்

சரியாக இருக்கிறோம்; அவர்கள் சரியில்லை, இவர்கள் சரி இல்லை, மற்றவர்கள் சரியில்லை” என்று பேசக்கூடிய ஒரு சூழ்நிலைகள் காணப்படுகிறது. ஆனால், தேவனைக் குறித்த சரியான நிறைவான அறிவும் விசுவாசமும் வரும்போது அங்கே என்ன உண்டாகிறது? ஒருமைப்பாட்டு உணர்வு உண்டாகிறது. சபை பாகுபாடுகள் கூட இல்லாத அளவுக்கு ஒரு ஒருமைப்பாடு உண்டாகிறது. கிறிஸ்துவிடம் காணப்பட்ட நிறைவைப் பெறும் அளவுக்கு நாம் முதிர்ச்சி அடைய வேண்டும். இயேசு கிறிஸ்து எப்படி நிறை உள்ளவராக இருந்தாரோ, அதேபோல அந்த நிறைவைப் பெறுகிற அளவுக்கு நாம் முதிர்ச்சி அடைகிற நிலைக்கு போக வேண்டும். அந்த முதிர்ச்சியிலே பாகுபாடு உண்டாகாது, அங்கே ஒருமைப்பாடு உண்டாகும். இன்று நிறைய பாகுபாடுகளை நாம் பார்க்கிறோம்; காண்கிறோம். அதற்கு காரணம் என்னவென்றால், கிறிஸ்துவிடம் காணப்பட்ட நிறைவை பெறுகிற அளவுக்கு முதிர்ச்சி இல்லாத நிலை. அந்த முதிர்ச்சி இல்லாததினாலே தான் ஒருவரை ஒருவர் நியாயம் தீர்க்கவும், குறை சொல்லவும், நான் தான் சரியாக இருக்கிறேன்; மற்றவர்கள் சரியாக இல்லை எனவும், தங்களையே மேன்மைப்படுத்திக் கொள்ள முயற்சி செய்வதும், மற்றவர்களைவிட நாங்கள் உயர்ந்தவர்கள் என்பதை காட்டிக் கொள்ள விரும்புகிற பல காரியங்களை ஊழியர்களிடத்திலே கூட பார்க்கிறோம். அதற்கு காரணம் கிறிஸ்துவிடம் காணப்பட்ட நிறைவை பெறுகிற அளவுக்கு ஒரு முதிர்ச்சி இல்லாதது தான். இயேசு கிறிஸ்துவை குறித்து ஒரு நிறைவான அறிவு, விசுவாசம் வரும்பொழுது இந்தப் பாகுபாடுகள், பிரிவினைகள் நமக்குள்ளே இருக்காது. அங்கே இயேசு கிறிஸ்துவினுடைய நிறைவை பெறும் அளவுக்கு முதிர்ச்சி, ஆவிக்குரிய வாழ்க்கையிலே முதிர்ச்சி உண்டாகும்.

முதிர்ச்சி நிலையை அடையணும்

எபேசியர் 4:14 வது வசனத்தில் அதனால் தான் பவுல் சொல்கிறார், “இனி நாம் குழந்தைகளைப் போல இருக்கக் கூடாது முதிர்ச்சி பெற்றவர்களாக இருக்க முயற்சி செய்ய வேண்டும்”. ஏனென்றால், குழந்தைகளைப் போல இருக்கக்கூடாது; குறை உள்ளவர்களைப் போல இருக்கக் கூடாது; குறை உள்ளவர்களாக இருக்கும்போது என்ன நடக்கிறது? மனிதருடைய தந்திரங்கள், சூழ்ச்சிகள்

இவைகளை எல்லாம் கையாளுவதற்கு முயற்சி செய்கிறோம். நம்முடைய தந்திரங்கள், நம்முடைய சூழ்ச்சிகள் இவைகளை எல்லாம் கையாண்டு ஏதோ சில காரியங்களை செய்து விடலாம், சாமர்த்தியமாக ஏதாவது பண்ணி விடலாம், மனித அறிவை கொண்டு சூழ்ச்சிகளையோ, சில தந்திரங்களையோ கொண்டு காரியங்களை செய்து விடலாம் என்று மனித அறிவிலே முயற்சி செய்கிறோம். அப்படி மனிதருடைய சூழ்ச்சிகளும், தந்திரங்களும் நம்மை தவறுக்கு வழிநடத்தும் ஏமாற்று வழிகள். பிசாசுகள் நம்மை ஏமாற்றி சில தவறான வழிகளில் கொண்டு போகும். சில தவறான உபதேசங்களை நமக்கு கொடுத்து, இயேசு கிறிஸ்துவை விசுவசித்து விட்டால் போதும் என்று அதோடு நிற்க வைக்கிறது. ஒரு வாய் வார்த்தையாக, “ஆண்டவரே!” என்றும், இயேசு தான் கடவுள் என்றும் நான் நம்புகிறேன், இது போதும் வேறு ஒன்றும் வேண்டாம்” என்று மனிதர்களை விற்கக்கூடிய தவறான ஒரு போதனைகள் இருக்கிறது. மனந்திரும்புதல் கிறிஸ்துவின் சாயலைக் கொண்டிருக்கிறது. நம் விசுவாசம் நம்முடைய வாழ்க்கையிலே மாற்றத்தையும், இயேசு கிறிஸ்துவின் சாயலையும் தரிப்பிப்பதற்கு கொண்டு போக வேண்டும். ஆனால், அதற்கு பதிலாக மனிதருடைய தந்திரங்கள், சூழ்ச்சிகள், தவறுக்கு வழி நடத்தும் ஏமாற்று வழிகளை நம்பி அவர்களுடைய போதனை என்னும் காற்றினால் அடித்துச் செல்லப்பட்டு அங்குமிங்கும் அலைக்கழிக்கப்படக் கூடாது. நிறைய பேர் அப்படி அலைக்கழிக்கப்படுகிறார்கள். ‘இயேசு கிறிஸ்துவை விசுவசிக்கிறேன் அது போதும்’ என்கிறார்கள். ஆனால் அது மட்டும் போதாது. இந்த உலகத்தின் மீது இருக்கக் கூடிய பாவ நாட்டங்கள், உலகத்தின் மீது பற்றுகள் அதையெல்லாம் மேற்கொள்ள வேண்டும். இயேசு அப்படித்தான் மேற்கொண்டார். அவருடைய அப்போஸ்தலர்கள், புனிதர்கள், இறைவாக்கினர்கள் எல்லாரும் அதை மேற்கொண்டார்கள். அதுதான் முதிர்ச்சி அடையும் நிலை; அங்கேதான் ஒருமைப்பாடு உண்டாகும். உலக நாட்டங்களையும், பாவ இச்சைகளையும் வைத்துக் கொண்டு அங்கு ஒருமைப்பாட்டுக்குள்ளே போக முடியாது. உலக நாட்டங்கள், பாவத்தின் மேல் உள்ள பற்றுகளை எல்லாம் விடாத வரை ஒருமைப்பாட்டை நாம் மேற்கொள்ள முடியாது. அப்போது என்ன நடக்கிறது மனிதனுடைய ஏமாற்று வழிகள், சூழ்ச்சிகள், தவறுக்கு வழிநடத்தக் கூடிய வழிகள், தந்திரங்கள் மற்றும் அவர்களுடைய

போதனை என்னும் காற்றால் அடித்துச் செல்லப்பட்டு அங்குமிங்கும் அலைக்கழிக்கப்படுகிறவர்களாய் இருக்கிறார்கள்.

அன்பிலும் உண்மையிலும் கிறிஸ்துவைப் போன்று வளர வேண்டும்

எபேசியர் 4:15 வது வசனம் சொல்கிறது மாறாக, அன்பின் அடிப்படையில் உண்மையைப் பேசி தலையாகிய கிறிஸ்துவைப் போன்று எல்லாவற்றிலும் நாம் வளர வேண்டும். அங்கே அன்பு உண்டாகிறது. அன்பின் அடிப்படையில் உண்மையைப் பேசுகிறோம். நடிப்பில்லாதபடிக்கு, வெளிவேடம் இல்லாதபடிக்கு உண்மையை பேச வேண்டும். அப்படிப் பேசி கிறிஸ்துவை போன்று எல்லாவற்றிலும் நாம் வளர வேண்டும். வெறும் நம்பிக்கை மட்டும் அல்ல விசுவாசமானது இந்த வளர்ச்சியை நமக்குள்ளே கொண்டு வருகிறது. கிறிஸ்துவைப் போன்று அன்பின் அடிப்படையில் நாம் எல்லாவற்றிலும் வளர வேண்டும். அதற்கு அடிப்படை, அன்பாக இருக்கிறது; அதுமட்டுமல்லாமல், அதோடு உண்மையை பேசுகிறவர்களாக இருக்க வேண்டும்; தலையாகிய இயேசுவைப் போல் எல்லாவற்றிலும் நாம் வளர வேண்டும். ஆவிக்குரிய காரியங்களில், ஆவிக்குரிய பண்புகளில் நாம் வளர வேண்டும். அன்பை அடிப்படையாகக் கொண்டு உண்மையை பேசுகிறவர்களாக நாம் இருக்கிறோமா? யோசித்துப் பாருங்கள்.

உண்மையை மட்டுமே பேசிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து

இயேசு கிறிஸ்து உயிர் போவதாக இருந்தாலும் அவர் உண்மையை தான் பேசினார். யாருடைய முகத்திற்கும் பயந்தோ, என்ன நினைப்பார்கள் என்று நினைத்தோ ஒருபோதும் அவர் மாற்றி பேசினதில்லை. முகத்தாட்சனை பார்த்ததும் இல்லை. பிலாத்துவினிடத்தில் கூட ஒரு துளி பயம் இல்லாமல் தான் பேசுகிறார். யூத மன்றத்திலும் கூட அப்படித்தான் வெளிப்படையாக பேசினேன் என்று சொல்கிறார். தலைமைக்குரு, “என்றும் வாழ்பவருடையவரின் பெயரால் ஆணையிட்டு சொல்; நீர் கடவுளுடைய மகனா?” என்று சொல்லும் போது இயேசு உண்மையை மறுக்கவில்லை. “ஆம்! அப்படித்தான்” என்று சொல்கிறார். அப்படி சொன்னால் சிலுவையில் அறைவார்கள் என்று

அவருக்கு நன்றாக தெரியும். ஆனால், உண்மையைத்தான் அவர் பேசினார். அப்போது தான் அவர்கள் சொன்னார்கள், “இனி வேறு என்ன சாட்சி இருக்கிறது. இவன் சாவுக்கு உரியவன்” என்று பிலாத்துவிடம் கொண்டு போன பிறகு, பிலாத்து “உன்னை விடுவிக்கவோ அல்லது சிலுவையில் அறையவோ எனக்கு அதிகாரம் உண்டு“ என்று சொல்கிறான். அவனுடைய அதிகாரத்திற்கு ஆண்டவர் பயப்படவில்லை. “மேலிருந்து அருளப்படாவிடில் உனக்கு என் மேல் எந்த அதிகாரமும் இல்லை; உண்மைக்கு சான்று பகரவே வந்தேன்” என்கிறார். அவருடைய பேச்சு முழுக்க முழுக்க உண்மை நிறைந்ததாய் இருக்கிறது.

மனிதர்களுக்காக உண்மையை மறுக்க கூடாது

நாம் பல நேரங்களில், “மற்றவர்கள் புண்பட்டு விடுவார்கள் அல்லது மற்றவர்கள் ஏதாவது நினைத்து விடுவார்கள்” என்று நினைத்து உண்மையைப் பேசுவதற்கு மறுத்து கொஞ்சம் அப்படி இப்படி என்று பேசி விடுகிறோம். ஆனால், அது முதிர்ச்சி அல்ல. முதிர்ச்சி என்பது இயேசுவைப் போல நம்முடைய வாழ்வை மாற்றுவது; அவரை போல பேசுவது; அவரைப்போல பார்ப்பது; அவரைப் போல நடப்பது; அந்த முதிர்ச்சி நிலையிலே தான் ஒருமைப்பாடு உண்டாகும். இன்று பல பிரிவினைகள் இருந்தாலும் முதிர்ச்சி அடையும்போது ஒருமைப்பாடு உண்டாகும். ஒரே மந்தையும், ஒரே மேய்ப்பனுமாக மாறும். முதிர்ச்சி இல்லாத நிலையில் தான் வேறுபாடுகள் நிறைய காணப்படுகிறது. நிறையப் பிரிவினை குறித்த போதனைகளை கேள்விப்படுகிறோம். சபைக்கு எதிராக, ஊழியர்களுக்கு எதிராக, ஜெபிக்கிற கூட்டங்களுக்கு எதிராக, பலவிதமான போதனைகள் எல்லா பக்கங்களில் இருந்தும், எல்லா சபைகளில் இருந்தும் எழும்புகிறதைக் கேள்விப்படுகிறோம். ஆனால், ஆண்டவர் சொல்வது என்ன? இயேசு கிறிஸ்துவைப் பற்றிய அறிவிலும் நம்பிக்கையிலும் ஒருமைப்பாட்டை அடைவோம்.

கிறிஸ்துவின் நிறைவைப் பெறும்படி முதிர்ச்சி அடைய வேண்டும். இயேசு கிறிஸ்து ஒருவேளை இன்று இருந்தால், பூமியிலேயே அவர் இருந்திருந்தால், பலவிதமான பிரிவினைகளைக் கண்டு இப்படியெல்லாம் அவர் பெயராலே பிரிந்து ஒன்றுக்கொன்று

எதிராக பேசக்கூடியவர்களைப் பார்த்து வேதனை தான் படுவார். ஒருவேளை அவர் மனிதனாக பூமியில் இல்லாவிட்டாலும், இது ஒரு போதும் அவருக்கு மகிழ்ச்சியைக் கொண்டு வராது. அவர் ஒருமைப்பாட்டை தான் விரும்பினார்.

எல்லா நிலைகளிலும் அன்பை வெளிப்படுத்துதல்

கிறிஸ்துவின் நிறைவைப் பெறும் அளவுக்கு முதிர்ச்சி நிலை அடைய வேண்டும். அது ஒருமைப்பாட்டை தான் கொண்டுவரும் அதுதான் கடவுளுடைய விருப்பம் அங்கே உண்மையான ஒரு அன்பு, நம் இருதயத்தில் உண்டாகும். அந்த அன்பின் மூலமாக உண்மையைப் பேசி எல்லாவிதத்திலும் இயேசுவைப் போல வளர முயற்சி செய்வோம். அதுதான் விண்ணகத்திற்கு போவதற்கு சரியான பாதை. எல்லா விதங்களிலும் அன்பிலே, சுய மறுப்பிலே, ஜெப வாழ்க்கையிலே கிறிஸ்துவை தலையாகக் கொண்டு இருப்பவர்களோடு ஒன்றித்து, எல்லாவற்றிலும் இயேசுவை கண்டு அதே போல நடக்க வேண்டும். அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கும் போது அதிலே ஒருமைப்பாடு உண்டாகிறது. அங்கே பிரிவினை என்கிற பேதமே இல்லை, அங்கே பாகுபாடுகள் இல்லை, ஏற்றத்தாழ்வுகள் இல்லை. ஆகையினாலே, அந்த நிலைக்கு நாம் கடந்து வரவேண்டும் என்பது தான் கடவுளுடைய விருப்பம். பவுலும் அதைத்தான் எழுதுகிறார். இதெல்லாம் எதனால் உண்டாகிறது? இயேசு கிறிஸ்துவைப் பற்றிய அறிவிலும் இயேசு கிறிஸ்துவின் மீது கொண்டுள்ள விசுவாசத்திலும் தான். இயேசுவை நாம் எந்த அளவுக்கு அறிந்து கொண்டிருக்கிறோமோ அந்த அளவுக்கு நாம் விசுவாசிக்க முடியும். இந்த விசுவாசத்திலும், அறிவிலும் தேவனைக் குறித்த சரியான அறிவு நம்மை முதிர்ச்சி நிலைக்குக் கொண்டு போகும். இன்னும் அதிகமாக கிறிஸ்துவின் சாயலை தாங்கும் அளவுக்கு கொண்டு போகும். அந்த சாயலை நாம் தாங்காமல் இருக்கிறோம் அந்த சாயலுக்குள் நுழைய முடியாமல் இருக்கிறோம் என்றால் நாம் இன்னும் முழுமையாக அறிந்து கொள்ளவில்லை. இயேசுவை அறிந்து கொள்வது என்றால் இறைவார்த்தையை அறிந்து கொள்ளுதல். முழுமையாக இறைவார்த்தையை அறிந்து கொள்ளாததால் குறைவுப்பட்டவர்களாக காணப்படுகிறோம். அந்த நிறைவை பெறும்

அளவுக்கு நாம் இன்னும் முதிர்ச்சி அடையவில்லை. தேவனை குறித்து, இறைவார்த்தை குறித்து நிறைவான அறிவு, படிப்பதாலோ வெறும் மனப்பாடம் செய்வதாலோ வருவதில்லை. மாறாக, தேவனுடைய வெளிப்படுத்துதலினால் பெற்றுக்கொள்கின்ற, அந்த "இறை ஞானம்" அல்லது "இறை அறிவு" அதனால் உண்டாகிற விசுவாசம், அது முதிர்ச்சி நிலைக்கு நம்மை கொண்டு செல்லும். அதற்காகத்தான் நாம் தேவனை இன்னும் அதிகமாக அறிந்து கொள்ளவும் இறைவார்த்தையில் அவரைக் குறித்த சரியான விளக்கங்கள் என்னென்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைக் கண்டு உணர்பவர்களாகவும் மாற வேண்டும்.

அதற்காக தான், கடவுள் பரிசுத்த ஆவியானவரை நமக்கு கொடுக்கிறார். தூய ஆவியானவர் தான் நிறைவை நோக்கி நம்மை வழிநடத்துவார். **யோவான் 16:13 ல் "உண்மையை வெளிப்படுத்தும் ஆவியார் வந்த பிறகு நிறை உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார்"**. தூய ஆவியானவர் இந்த நிறை உண்மையை நோக்கி தான் வழிநடத்துவார். கிறிஸ்துவை முழுவதுமாய் பின்பற்றுவது என்பதை நோக்கித்தான் நம்மைக் கொண்டு போகிறார். வாழ்க்கையில் நடக்கிற சம்பவங்கள் எல்லாமே அதற்காகத்தான் நடக்கும். சில காரியங்கள் கஷ்டமாக இருக்கிறது, சில காரியங்கள் வேதனையாக இருக்கிறது. ஆனால், எல்லாம் இந்த நிறை உண்மையை நோக்கி நாம் செல்வதற்காகவே நமக்கு தேவைப்படுகிறது. இவை இல்லாவிட்டால் நிறை உண்மையை நோக்கி வழிநடத்தப்படுவது கடினமாகிவிடும். தேவனுடைய சத்தியங்களை நாம் முழுமையாக அறிந்து கொள்வதும் கடினமாகிவிடும். அதற்காகத்தான் இவைகளெல்லாம் சம்பவிக்கிறது.

ரோமர் 8:29 ல் அதைத்தான் வாசிக்கிறோம், **"ஆண்டவரிடத்திலே அன்புகூருகிறவர்களுக்குச் எல்லாம் அவர்களது நன்மைக்கேதுவாகவே நடக்கிறது"**. எல்லாவற்றிலும் தூய ஆவியார் அவர்களுக்காக ஒத்துழைக்கிறார். நம்முடைய நன்மைக்காகவே பரிசுத்த ஆவியானவர் எல்லாவற்றிலும் ஒத்துழைத்துக்கிறார். நமக்கு அனுமதிக்கிற, நம் வாழ்க்கையில் வரக்கூடிய காரியங்கள் எல்லாம் இந்த நிறைவை நோக்கி நாம் செல்வதற்காகவே தான்; ஆகையினாலே தான் பவுல், "எல்லாவற்றுக்கும் நன்றி கூறுங்கள்" என்று சொல்கிறார். எல்லாமே அதை நோக்கித்தான் நம்மைக் கொண்டு செல்கிறது. அதனால் தான் எல்லாவற்றிற்கும் நன்றி

சொல்லுங்கள். அதுவே கிறிஸ்துவின் நிறைவை காட்டும். இயேசு எப்பொழுதும் நன்றி செலுத்துபவராக இருந்தார். அவர் தந்தைக்கு நன்றி செலுத்துகிறவராகவே இருந்தார். அப்பத்தை எடுத்து பிட்கும்போது கூட அவர் நன்றி செலுத்துபவராக இருந்தார். 5000 பேருக்கு ஐந்து அப்பங்களை 2 மீன்களை பலுகிப் பெருகச் செய்யும் போது கூட கடவுளுக்கு நன்றி தான் சொல்கிறார். லாசரின் கல்லறைக்கு முன்பாக நிற்கும் போதும் கூட தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறார். நன்றி செலுத்துவதே தகும் என்று வேதத்தில் போடப்பட்டிருக்கிறது. இதெல்லாம் முதிர்ச்சி நிலையிலே நாம் நன்றி சொல்ல ஆரம்பிக்கும்போது, அவர் செய்த காரியங்கள் செய்த செயல்பாடுகள் ஒவ்வொன்றையும் அவர் கொடுத்திருக்கும் எல்லாவற்றுக்கும் எல்லாமே நம்மை நிறைவை நோக்கி கொண்டு போவதற்கு தேவனால் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. பாடுகளாக இருக்கலாம், சிலுவையாக இருக்கலாம், ஒரு வியாதி, பிரச்சினையாக இருக்கலாம்! மீறி வருகிறது என்றால் எல்லாம் நம்மை அங்கு கொண்டு போவதற்காக கொடுக்கப்படுகிறது. எல்லாவற்றுக்கும் முணுமுணுக்காமல் நன்றி சொல்ல சொல்ல அந்த கிருபை நமக்குள்ளே பெருக ஆரம்பிக்கிறது. இதுதான் முதிர்ச்சி நிலைக்கு நம்மை கொண்டு போவது. யோசித்துப்பாருங்கள் முதிர்ச்சி நிலையை நோக்கி தான் தேவன் நம்மை அழைத்துக் கொண்டு போகிறார். நாம் எந்த நிலையில் இருக்கிறோம். புனிதர்கள் இறைவாக்கினர்கள் அப்போஸ்தலர்கள் எல்லாரும் இந்த முதிர்ச்சி நிலையை அடைந்து தான் இயேசுவைப் பின்பற்றினர். ஆகையினால்தான் திருச்சபையும் அவர்களை முன்னால் வைக்கிறது. இயேசு கிறிஸ்துவை நாம் பின்பற்றுவதோடு இந்த புனிதர்களையும் நாம் பின்பற்றுவதற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம். அவர்களுடைய வாழ்க்கையும் நம்மை உற்சாகப்படுத்துகிறது. நாம் அவர்களுக்கு மத்தியில் எந்த நிலையில் இருக்கிறோம் என்பதை கண்டுணர்ந்து இன்னும் அதிகமாக அவரிடத்திலே நெருங்கி சேர்வதற்கு முடிந்த காரியங்களை எல்லாம் செய்ய முயற்சி செய்ய வேண்டும். செபிக்க வேண்டும், கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும். அதன்மூலம் நாம் இன்னும் அதிகமாக அவரை நெருங்கி முதிர்ச்சி நிலையை அடைய முடியும். அதுதான் தேவனுடைய விருப்பம். நம்மை அழைத்தவர் அந்த நிலைக்கு நம்மை அழைத்துச் செல்வார். ஒருவேளை இன்றைக்கு தூரமாக காணப்பட்டாலும் கூட அவர் நம்மை அந்த நிறைவை நோக்கி கொண்டு போவார்.

ஆகையினாலே நாம் சோர்ந்து போக வேண்டியதில்லை. நாம் தூய ஆவியானவரோடு ஒத்துழைக்க ஒத்துழைக்க அவர் நம்மை அந்த நிறைவை நோக்கி கொண்டு செல்வார். ஆகையினாலே எந்த நிலையில் இருக்கிறோம் என்று பார்த்து குறைவான நம்முடைய நிலையை ஒத்துக்கொண்டு அவருடைய உதவியை கேட்டு முன்னேறுவதற்கு நம்மை ஒப்புக் கொடுப்போம்.

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மகிமை உண்டாவதாக!

ஊழியர்காணொளிகூடுகை – 29 / 04 / 2020

இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்ய முடியாது

மத்தேயு 6:24 - எவரும் இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்ய முடியாது. ஏனெனில், ஒருவரை வெறுத்து மற்றவரிடம் அவர் அன்பு கொள்வார்; அல்லது ஒருவரைச் சார்ந்து கொண்டு மற்றவரைப் புறக்கணிப்பார். நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்ய முடியாது.

ஒருவரால் இரு தலைவர்களுக்கு கடவுளுக்கும், உலகசெல்வத்திற்கும் பணிவிடை செய்ய முடியாது. ஏனென்றால், ஒருவரைச் சார்ந்து கொண்டு மற்றவரைப் புறக்கணிப்பார்கள். ‘புறக்கணிப்பார்கள்’ என்றால் சில காரியத்திற்காக ஒரு தலைவரை தள்ளிவைப்பார்கள்; காரியம் முடிந்தவுடன் இணைந்துக்கொள்வர்கள். நமக்கு இயேசு மட்டும் தான் தலைவராக இருக்கின்றாரா அல்லது, தூக்கம், சாப்பாடு, சில மனிதர்களுக்கு, நாம் முதலிடம் கொடுக்கின்றோமா?

தானியேல்!

தானியேல் அவர் வாழ்க்கையில் கடவுளுக்கு முதலிடம் கொடுப்பதை பார்த்த சில மனிதர்கள், ஓர் சூழ்ச்சி செய்கின்றனர், அரசனுக்கு தான் முதலிடம் தரவேண்டும், கடவுளிடம் அல்லாமல் அரசனிடம் தான் முப்பது நாட்கள் ஜெபிக்க வேண்டும் என ஒரு

சட்டத்தை நிறைவேற்றுகிறார்கள். ஆனால், தானியேல் கடவுளுக்கு தான் முதலிடம் கொடுத்தார். கடவுளுக்காக அரசருக்கு உண்மையுள்ளவராக இருந்தார். ஆகவே தான் தானியேல் சிங்ககுகையில் இருக்கும் பொழுது அரசரிடம், "நான் ஆண்டவருக்கு முன்பாக குற்றமற்றவன், உமக்கு முன்பாகவும் உண்மையுள்ளவன்" என்றார். கடவுளுக்கு ஊழியம் செய்வது என்றால் இது தான். நமது குடும்பங்களில் கூட கடவுளுக்காக மற்றவர்களிடம் அன்புக்கூரவேண்டும். ஆனால், சில வீடுகளில் கணவன் சொல்வதே வேதம், மனைவி சொல்வதே வேதம் என்று வாழ்கின்றனர். இவர்களுக்கு இரண்டு தலைவர்கள் இருக்கின்றனர். ஆனால் அப்படி இருக்க கூடாது. கணவன், மனைவி, பிள்ளைகள், ஊழியர்கள் என யாராக இருந்தாலும், ஆண்டவர் பொருட்டு அன்பு செய்வோம், கீழ்ப்படிவோம், சகித்துக்கொள்வோம்.

1 கொரி 10:31 - அதற்கு நான் சொல்வது; நீங்கள் உண்டாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் கடவுளுடைய மாட்சிக்காகவே செய்யுங்கள்.

கொலோசையர் 3:17 எதைச் சொன்னாலும் எதைச் செய்தாலும் அனைத்தையும் ஆண்டவர் இயேசுவின் பெயரால் செய்து அவர் வழியாய்த் தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்.

தானியேலை போல கடவுளுக்காக மனிதருக்கு உண்மையுள்ளவராக இருக்க வேண்டும்.

ஊழியர்களும் உலக செல்வமும்!

சில நேரங்களிலே மனிதர்கள் யூதாஸ் போல இரண்டு தலைவார்களுக்கு ஊழியம் செய்ய முயற்சி செய்கின்றனர். யூதாஸ் கடவுளுக்கு ஊழியம் செய்த போது உலகசெல்வத்திற்கும் ஊழியம் செய்ய முயற்சி செய்தான். செல்வத்தை குறித்து செல்வ மாயை என்று கூறுவர். செல்வ மாயை என்றால் என்ன? அது எதை கொடுக்கின்றேன் என கூறியதோ அதை கொடுக்காது, அது தான் மாயை. அது சந்தோஷத்தை தரும் என்பார்கள் ஆனால் தராது. இந்தியாவிலே அதிக ஊழியர்கள் எழும்ப முடியாமல் இருப்பதற்கு காரணம் இந்த பணம். அவர்களிடம் போதுமான பணம் இல்லாததினாலே, பணத்தை பார்த்தவுடன் ஒரு மயக்கம்

வந்துவிடுகின்றது. நமது வாழ்க்கையில் பணம் இருந்தாலும், இல்லையென்றாலும் நம்மை வழிநடத்துகின்றவர் ஆண்டவர், நமது எதிர்காலம் அவர் கையில் தான் உள்ளது. இந்த நாட்களிலே நாம் அடிக்கடி பார்க்கின்றோம், பெரிய கோடீஸ்வரர்கள் கூட தற்கொலை செய்து கொள்கின்றனர். ஏன், அவர்கள் எதிர்ப்பார்க்கும் மகிழ்ச்சியை பணம் தருவதில்லை.

இந்தியாவிற்கு வந்த ஒரு அமெரிக்க மிஷனரி என்னிடம், " Indian ministers are beggars" "இந்திய ஊழியர்கள் எல்லாம் பிச்சைக்காரர்கள்" என்றார். பிச்சைக்காரர்கள் என்றால் வறுமையில் இருக்கின்றார்கள் என கூறவில்லை, எப்படியாவது பிறரிடம் இருந்து பணத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என இருக்கின்றார்கள்.

நன்றாக ஜெபிக்க கூடிய ஊழியரை எனக்கு தெரியும், பணத்தை நன்றாக செலவு செய்து ஊழியம் செய்வர். அவரது ஊழியத்திற்காக சில sponsors (உதவி செய்கின்றவர்) தேவைப்பட்டனர். அவர்களிடம் பணத்தை பெற்றுக்கொண்டு நன்மையான காரியத்திற்கு தான் பணி செய்வர். ஆனால், அந்த உதவி செய்கின்ற மனிதர்கள் வீட்டில் எந்த காரியமாக இருந்தாலும் இவர் அவர்கள் பின்னால் ஓடவேண்டியதாக மாறியது. இப்படி மனிதர்கள் பின்னால் ஓடினால் கடவுளுக்கு எப்படி ஊழியம் செய்ய முடியும். ஆகவே, ஒருநாள் இதை குறித்து நான் அவரிடம் நேரடியாக எச்சரித்தேன், ஆனால் அன்று முதல் அவர் என்னுடன் பேசுவதை, பழகுவதை, உறவை குறைத்துக்கொண்டார். இப்படி நிறைய சபைகளிலே ஆத்துமாவை விட பணத்திற்கு முதலிடம் தருவதற்கு நிறைய பேர் இருக்கின்றனர். இது ஒரு தவறான உதாரணம்.

யார் உங்கள் எஜமான்?

திருவெளிப்பாடு 3:20 - இதோ, நான் கதவு அருகில் நின்று தட்டிக்கொண்டிருக்கிறேன். யாராவது எனது குரலைக் கேட்டுக் கதவைத் திறந்தால், நான் உள்ளே சென்று அவர்களோடு உணவு அருந்துவேன்; அவர்களும் என்னோடு உணவு அருந்துவார்கள்.

இதோ ஆண்டவர், ஒரு பக்கம் தட்டுவார், பணம் மற்றொரு பக்கம் தட்டும்,

இதோ ஆண்டவர், ஒரு பக்கம் தட்டுவார், தூக்கம் மற்றொரு பக்கம் தட்டும்,

இதோ ஆண்டவர், ஒரு பக்கம் தட்டுவார், சுவையான உணவு மற்றொரு பக்கம் தட்டும்,

இப்பொது நமது தலைவர் யார்? பணமா, தூக்கமா, சுவையான உணவா. நாம் எந்த எஜமானுக்கு ஊழியம் செய்கின்றோம்?

இன்றைக்கு நமது தமிழக திருச்சபையில் இருக்கும்` பெரிய சீர்கேடு ஜாதி. ஜாதி அவர்கள் எஜமானாக இருக்கின்றது. கடவுளுக்கு ஊழியம் செய்வார்கள் ஆனால் ஜாதியை அவர்களால் விட முடியாது, இது ஒரு வெட்கக்கேடான காரியம்.

சில ஆண்களுக்கு, மனைவி சொல்லிவிட்டால் அதுதான் வேதம், கடவுள் அங்கே இருக்கமாட்டார்

சில பெண்களுக்கு, கணவன் சொல்லிவிட்டால் அதுதான் வேதம், கடவுள் அங்கே இருக்கமாட்டார்

முதலாவது நாம் கடவுளுக்கு தான் சொந்தம், ஆதலால் யாருக்கும், எதற்கும் நாம் அடிமையாக கூடாது. கடவுளுக்கு தான் நாம் அடிமையாக இருக்க வேண்டும்.

சவுல்!

ஆண்டவர் சவுலிடம், "அமலேக்கியரின் மன்னன் ஆகாகையும் அவர்கள் உடைமைகள் அனைத்தையும் அழித்தொழியும்" என கட்டளையிட்டார். ஆனால், சவுல் ஆகாகைக் கொல்லாமல் விட்டார். மேலும் ஆடு மாடுகளில் முதல் தரமானவைகளையும் இரண்டாம் தரமானவைகளையும் ஆட்டுக் குட்டிகளையும், நல்லவை அனைத்தையும் அழிக்காமல் ஆண்டருடைய கட்டளையை மீறுகின்றான். சாமுவேல் சவுலிடம், " சவுலே, நீ ஏன் கடவுளுடைய கட்டளைகளை மீறினாய், நான் கேட்கும் ஆடு மாடுகளின் சத்தம் என்ன?", அதற்கு சவுல், "வீரர்களுக்கு பயந்து நான் கொண்டு வந்து விட்டேன்" என்றான். சாதாரண மனிதனாக இருந்த சவுலை ஆண்டவர் அரசனாக உயர்த்தினார். அரசன் என்ற நிலையில் போர் வீரர்கள் தனக்கு முக்கியம் என கடவுளை பின்னுக்கு தள்ளி அந்த வீரர்களுக்கு பயந்து, தேவனை வைக்க வேண்டிய இடத்திலே போர் வீரர்களை வைக்கிறான்.

நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கு ஊழியம் செய்வோம்

சவுலை போல தான் கடவுள் இந்த உலகத்தில் நமக்கும் ஒரு மதிப்பு, மரியாதையை கொடுத்திருக்கிறார். ஊழியர்களுக்கு இன்னும் அதிகமாக கொடுத்திருக்கிறார். ஆனால், அந்த மரியாதையை காத்துக்கொள்வதற்காக நாம் கடவுளுடைய வார்த்தையை பின்னுக்கு தள்ளிவிடுகிறோம். அந்த அந்தஸ்தை ஒரு சிலை வழிபாடாக மாற்றிவிடுகிறோம். யோசித்து பார்ப்போம் நாம் எத்தனை தலைவர்களுக்கு ஊழியம் செய்கின்றோம் என்று!

காலத்தியர் 1:10 - இப்படிப் பேசும்போது நான் நாடுவது மனிதருடைய நல்லெண்ணமா? கடவுளுடைய நல்லெண்ணமா? நான் மனிதருக்கு உகந்தவனாய் இருக்கவா பார்க்கிறேன்? நான் இன்னும் மனிதருக்கு உகந்தவனாய் இருக்கப் பார்த்தால் கிறிஸ்துவுக்குப் பணியாளனாய் இருக்க முடியாது.

நாம் யாரை தலைவராக ஏற்று கொள்கிறோமோ அவர்களுக்கு தான் உண்மையாக இருப்போம். இன்றைக்கு நாம் யோசித்து பார்ப்போம். யோசுவாவை போல, "நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கு ஊழியம் செய்வோம்", என இருக்கின்றோமா? எத்தனை பேரால் முழு மனதோடு சொல்ல முடியும் "நான் ஆண்டவருக்கு மட்டுமே ஊழியம் செய்கிறேனென்று". ஆகவே, இன்று நம் உள்ளதை ஆராய்ந்து ஆண்டவரிடம் ஒப்புக்கொடுப்போம்! ஆமென்

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே மகிமை!

ஊழியர் காணொளி கூடுகை - 08/05/2020

இறைவார்த்தையைக் கேட்டு, நடப்போர் பேறுபெற்றோர்

யாக்கோபு 1:25 – ஆனால் நிறைவான விடுதலையளிக்கக் கூடிய சட்டத்தைக் கூர்ந்து கவனித்து அதைத் தொடர்ந்து கற்போர் தாம் கேட்பதை மறந்து விடுவதில்லை; அவர்கள் அதற்கேற்ற செயல்களைச் செய்வார்கள்; தம் செயல்களால் பேறுபெற்றவர் ஆவார்கள்.

தம் செயல்களால் பேறுபெற்றவர் யார்?

யாக்கோபு 1:22-24 - இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டும் இருந்து உங்களை ஏமாற்றிக் கொள்ள வேண்டாம். அதன்படி நடக்கிறவர்களாயும் இருங்கள். ஏனென்றால் வார்த்தையைக் கேட்டு அதன்படி நடவாதோர், கண்ணாடியிலே தம் முகத்தைப் பார்த்து விட்டுச் சென்று உடனே தாம் எவ்வாறு இருந்தார் என்பதை மறந்துவிடும் ஒரு மனிதருக்கு ஒப்பாவர்.

"இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டும்" என்றால், கேட்டு அப்படியே மறந்து விடுவது; அப்படி இருப்பது கேட்பவர்களுக்குப் பலன் தராது, பிரயோஜனமாகவும் இருக்காது. ஆனால், மிக கவனமாக அந்த வார்த்தைகளை யோசித்து, கவனித்து, ஒருநாள் கற்பதோடு விட்டுவிடாமல் தொடர்ந்து கற்போர், தாம் கேட்பதை மறந்து விடுவதில்லை; இறைவார்த்தையை மறப்பதற்கு காரணம், அவசரமாக அதை படித்து முடித்துவிடுகிறோம். ஆகவே, அதை தொடர்ந்து கவனித்து வாசிக்கும் போது அது மறக்காது. இறைவார்த்தையை இப்படி கற்போர், அதற்கேற்ற செயல்களையும் செய்வார்கள்.

ஒரு பாக்கியமான, ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கைக்குள் நாம் நுழைய வேண்டுமென்று சொன்னால்,

1. கடவுளின் வார்த்தையைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

2. அப்படி கவனித்ததை தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்.

1.எப்படி கடவுளின் வார்த்தையை கூர்ந்து கவனிக்க வேண்டும்?

கூர்ந்து கவனிப்பது என்று சொன்னால் இறைவார்த்தையை யோசித்து அதற்கு கவனம் செலுத்துவது.

2. எப்படி கவனித்ததை தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்?

இறைவார்த்தையை தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டுமென்றால், இரண்டு நாட்கள் இறைவார்த்தையை கேட்டுவிட்டு நான்கு நாட்கள் கேட்காமல் விடுவது அல்ல; மாறாக, ஒவ்வொரு நாளும் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து இறைவார்த்தையை தொடர்ந்து

கடைப்பிடிக்க வேண்டும். அது அப்படியே நம்முடைய செயல்களில் வெளிப்படும். நம்மை பேறுபெற்றவர்களாகவும் மாற்றும்.

பேறுபெற்றவர்கள் யார்?

திருவெளிப்பாடு 1:3 - இந்த இறைவாக்குகளைப் படிப்போரும் இவற்றைக் கேட்போரும் இந்நூலில் எழுதியுள்ளவற்றைக் கடைப்பிடிப்போரும் பேறுபெற்றோர். இதோ! காலம் நெருங்கி வந்துவிட்டது.

திருவெளிப்பாடு 1:3ல் இறைவார்த்தையை கேட்கிறவர்கள் பேறுபெற்றவர்கள் என கூறப்பட்டுள்ளது, ஏனென்றால், அதை ஆழமாய் கவனித்து தொடர்ந்து கேட்கிறவர்களை பற்றியே கூறப்பட்டுள்ளது. அதேபோல இறைவார்த்தையை வாசிக்கிறவர்களும் பேறுபெற்றவர்கள், எப்படியென்றால் தொடர்ந்து வாசிக்கும் போது அவர்களுடைய செயல்களில் அதை கொண்டுவந்து, கடைப்பிடிப்போராய் மாறிவிடுகிறார்கள்.

திருச்சட்டத்தின் மீது தாவீது கொண்டிருந்த பற்று

திருப்பாடல் 119:97 - ஆண்டவரே! நான் உமது திருச்சட்டத்தின் மீது எத்துணைப் பற்றுக் கொண்டுள்ளேன்! நாள்முழுவதும் அதைப் பற்றியே சிந்திக்கின்றேன்.

தாவீது ஒரு ராஜாவாக இருக்கிறார்; எவ்வளவு வேலைகள் அவருக்கு இருந்திருக்கும்; எவ்வளவு எதிரிகள் அவருக்கு இருந்தார்கள்; “என் தலைமுடியை விட என் எதிரிகள் பெருகிவிட்டார்கள்” என தாவீது கூறுகின்றார். அவ்வளவு பெரிய நாட்டை ஆட்சி செய்யும் போது, அதில் குழப்பத்தை ஏற்படுத்த எத்தனை பேர் இருந்திருப்பார்கள். நாட்டின் தேவைகளை சந்திக்க வேண்டும், போருக்கு செல்ல வேண்டியிருக்கும்; அதுமட்டுமல்லாமல், அவருக்கு ஏராளமான மனைவிகள், பிள்ளைகள் இருந்திருப்பார்கள். இதற்கு மத்தியில் தான் தாவீது, “நாள் முழுவதும் திருச்சட்டத்தைப் பற்றியே சிந்திக்கின்றேன்” என கூறுகின்றார்.

அவ்வாறு, நாள் முழுவதும் தாவீது திருச்சட்டத்தை சிந்தித்துக் கொண்டிருந்ததால், அதன்மேல் பற்று கொண்டிருந்ததால், அது

அவருடைய செயல்களில் வந்துவிட்டது. ஆகையினாலே, ஆண்டவர் தாவீதைக் குறித்து, “ நான் விரும்புகின்ற எல்லாவற்றையும் அவன் செய்து முடிப்பான்; என் மனதிற்கு உகந்தவனாக தாவீதைக் கண்டேன்” என்று சொல்கிறார்.

இறைவார்த்தையை எப்படி கற்க வேண்டும்?

இறைவார்த்தையை ஏதோ, படிக்க வேண்டுமென்று படிக்காமல், அதைக் கூர்ந்து கவனித்துக் கற்றுக்கொண்டே வந்தோமென்றால், அது நம் செயல்களில் வந்துவிடும்.
சிலர் எவ்வளவு தான் இறைவார்த்தையை கேட்டாலும், திருந்தாமல் இருப்பதற்கு காரணம், அந்த வார்த்தைகளை ஒரு முறை கேட்டுவிட்டு மறந்துவிடுவார்கள்.

ஏற்கனவே சொன்னது போல, ஒரு செய்தியை ஒருமுறை கேட்டு விட்டுவிடாமல் அதை திரும்ப திரும்ப கேட்க வேண்டும். அப்பொழுது தான், அது நம் செயல்களில் வரும். நம் வாழ்க்கையில் பெரிய மாற்றத்தைக் கொண்டு வரும், அந்த மாற்றம் வரும் வரைக்கும் தொடர்ச்சியாக கேட்க வேண்டும். ஆகவே, அதை தொடர்ந்து கற்போர், தாம் கேட்பதை மறப்பதில்லை, அது அவர்கள் இருதயத்தில் பதிந்து விடுகின்றது, சிந்தனையில் தங்கி விடுகின்றது; அப்பொழுது தான் நாம் தூய்மையடைகின்றோம்; மனமாற்றம் பெறுகின்றோம். அப்படி இல்லையென்றால், செய்திகளை கேட்பார்கள்; அப்பொழுது மட்டும் ஆர்வமாக இருப்பார்கள்; மன்னிப்பு கேட்பார்கள்; ஆனால், திரும்பவும் அதே சண்டையைத் தான் போடுவார்கள்; திரும்பவும் அதே கோபத்திற்குத் தான் ஆளாவார்கள்; மறுபடியும் அதே பழைய சுபாவம் தான் இருக்கும். ஏனென்றால், தொடர்ச்சியாக கற்றுக் கொள்வதில்லை. ஒரு காரியத்தை தொடர்ந்துக் கற்றுக் கொள்கிறவர்களாக இருக்க வேண்டும்.

புனிதரின் பயிற்சி

ஒரு புனிதர், அவருக்கு எழுத, படிக்க தெரியாது. ஒரு குருமடத்தில்(Seminary) குருவாகச் சேர்ந்தார். அவருக்கு எழுத, படிக்க தெரியாததினாலே, அதைக் கற்றுக் கொடுக்க ஒரு

குருவானவர் இருந்தார். அவர் ஒரு வசனத்தை எழுதி வாசிக்க சொல்லிக் கொடுத்தார். அடுத்த நாள் அந்த குருவானவர் அவரை கூப்பிட்டு, “முடித்து விட்டாயா? நாம் அடுத்த வகுப்பிற்கு போகலாம்” என்றார். அப்பொழுது அந்த குரு மாணவன், “இன்னும் நான் அதை முடிக்கவில்லை” என்று சொன்னார். அதற்கு அடுத்த நாளும் அப்படியே சொன்னார். இப்படி சொல்லி 18 ஆண்டுகள் சென்றுவிட்டன. பின்பு தான், அந்த வசனத்தை கற்றுக் கொண்டார். அது நாவடக்கத்தைக் குறித்த ஒரு வசனம்; அந்த வசனத்தை திரும்ப திரும்ப தியானித்து பயிற்சி செய்தார். 18 ஆண்டுகள் கழித்து தான் அந்த வசனம் அவருடைய வாழ்க்கையில் பூரணமானது. ஆகையால், அவர் ஒரு பெரிய புனிதர் ஆனார். இதனால் தான் தொடர்ந்துக் கற்றுக் கொள்ளும் போது அதற்கேற்ற செயல்களை செய்வார்கள் என்று பார்க்கிறோம்.

இந்த உலகக் காரியங்களை நாம் கற்றுக் கொள்வது போல தேவனுடைய காரியங்களை நாம் கற்றுக் கொள்ள முடியாது. தேவனுடைய வார்த்தைகளை, வசனங்களை, விருப்பங்களை திரும்ப திரும்ப கேட்கிறவர்கள் மறந்து விடுவதில்லை; அது நம் மனதிலே குடிகொள்கிறது, நம் சிந்தனையிலே குடிகொள்கிறது, ஒரு காரியத்தை செய்யும் போது “ஐயோ! ஆண்டவர் இப்படி சொல்லி இருக்கிறாரே” என்று நினைவில் கொண்டு வருகின்றது. அது மட்டுமல்ல செயல்களிலே அது வர ஆரம்பித்துவிடுகிறது. அப்பொழுது இறைவார்த்தைக்கு ஏற்ற செயல்களை செய்ய முடியும். பேறுபெற்றவர்களாகவும் மாற முடியும்.

இறைவார்த்தையைக் கடைப்பிடிப்போரின் மேன்மை

லூக்கா 11:27,28 – அவர் இவற்றைச் சொல்லிக் கொண்டிருந்தபோது, கூட்டத்திலிருந்து பெண் ஒருவர், "உம்மைக் கருத்தாங்கிப் பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறுபெற்றவர்" என்று குரலெழுப்பிக் கூறினார். அவரோ, "இறைவார்த்தையைக் கேட்டு அதைக் கடைப்பிடிப்போர் இன்னும் அதிகம் பேறுபெற்றோர்" என்றார்.

இயேசு ஒரு இடத்தில் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருந்த போது, கூட்டத்தில் பெண் ஒருவர், “உம்மை கருத்தாங்கி, பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறுபெற்றவர்” என்று சொல்லும் போது, அதற்கு இயேசு, “இறைவார்த்தையைக் கேட்டு அதைக் கடைப்பிடிப்போர் இன்னும்

பேறுபெற்றவர்கள்” என்று கூறினார். அதை கடைப்பிடிப்பதைக் குறித்து யாக்கோபு மிகவும் தெளிவாக கூறுகின்றார்,

“யாக்கோபு 1:22-24 - இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டும் இருந்து உங்களை ஏமாற்றிக் கொள்ள வேண்டாம். அதன்படி நடக்கிறவர்களாயும் இருங்கள். ஏனென்றால் வார்த்தையைக் கேட்டு அதன்படி நடவாதோர், கண்ணாடியிலே தம்முகத்தைப் பார்த்து விட்டுச் சென்று உடனே தாம் எவ்வாறு இருந்தார் என்பதை மறந்துவிடும் ஒரு மனிதருக்கு ஒப்பாவர்” என சொல்லிவிட்டு இதை செயலில் கொண்டு வருகின்ற நடைமுறையையும் கற்றுக் கொடுக்கிறார். இறைவார்த்தையைக் கூர்ந்து கவனித்து கற்றுக் கொள்ள வேண்டுமென்றும் அறிவுறுத்துகிறார்.

ஆண்டவர் நம்மிடம் எதிர்ப்பார்க்கும் காரியங்கள்

இன்று நம் வாழ்க்கையை யோசித்துப் பார்ப்போம். நாம் நிறைய கற்றுக் கொள்ள விரும்புகின்றோம் ஆனால், கற்றுக் கொண்டதை செயல்படுத்த வேண்டுமென்று அதிகமாக போராடுவதில்லை. ஒரு நாள் நாம் ஆண்டவரை சந்திக்கும் போது, உங்களுக்கு எவ்வளவு சத்தியம் தெரியும் என்று கேட்கமாட்டார், எத்தனை செய்திகளை கேட்டிருகிறீர்கள் என்றும் கேட்கமாட்டார், எத்தனை வார்த்தைகளை மனப்பாடம் பண்ணியிருக்கிறீர்கள் (சிலர் வசனங்களை மனப்பாடம் செய்துவிட்டால் அதில் ஒரு பெருமை கொள்கின்றனர்) என்றும் கேட்கமாட்டார். எத்தனை வசனங்களை வாழ்ந்துக் காட்டி இருக்கிறாய், செயல்படுத்தி இருக்கிறாய், என் வார்த்தைகளுக்கு எல்லாம் செவிகொடுத்து இருக்கிறாயா? தொடர்ந்து செயல்படுத்துகிறாயா, தொடர்ந்து கடைப்பிடிக்கிறாயா என்று தான் கேட்பார்.

சிலர் வாரத்தில் 5 நாட்கள் கடைப்பிடிப்பார்கள், மற்ற 2 நாட்கள் வார்த்தைக்கு இடம் இருக்காது; அதற்கு பெயர் “கடைப்பிடித்தல் அல்ல”. ஒரு வார்த்தையை கடைப்பிடித்தால் தொடர்ந்து அந்த வார்த்தையை கடைப்பிடிக்க வேண்டும், அப்பொழுது தான் அது “கடைப்பிடித்தல்” என்று சொல்லப்படும்.

குழுவின் சிந்தனைக்கு

இந்த குழுவில் இருக்கிறவர்கள், இந்த வார்த்தைகளையெல்லாம் ஒரு முறை கேட்டு விட்டு விடாமல், தொடர்ந்து கேட்டு, அதை சிந்தியுங்கள். அப்பொழுதுதான் நாம் பேறுபெற்றவர்கள். “நான் ஜெபத்தில் கலந்துக் கொண்டேன்; செய்தி நன்றாக இருந்தது” என்று சொல்வதற்கு இந்த ஜெபக் கூடுகை இல்லை. மாறாக, இறைவார்த்தை நம் வாழ்க்கையில் வெளிப்பட வேண்டுமானால், திரும்ப திரும்ப அதை கேட்க வேண்டும். முதல்முறை கேட்கும் பொழுது நமக்குள் தோன்றாத பல எண்ணங்களும், செயல்களும் திரும்ப கேட்கும் பொழுது தோன்றும். ஆகையினாலே, அதை தொடர்ந்துக் கேட்கும் பொழுது தான் நம் மனதிலே நிற்கும், நம் செயல்களிலே வெளிப்படும். அப்படியென்றால், அதை எவ்வளவு கேட்க வேண்டும், எவ்வளவு தியானிக்க வேண்டும் என்று யோசித்துப் பார்ப்போம்.

இதில் நாம் தவறி இருந்தால், ஆண்டவரிடம் மன்னிப்பு கேட்போம், ஏனென்றால் தேவனுடைய வார்த்தைக்கு நாம் கொடுக்கக்கூடிய முக்கியத்துவம் அது தான்.

திருப்பாடல் 138:2 – உம் திருக்கோவிலை நோக்கித் திரும்பி உம்மைத் தாள் பணிவேன்; உம் பேரன்பையும் உண்மையையும் முன்னிட்டு உமது பெயருக்கு நன்றி செலுத்துவேன்; ஏனெனில், அனைத்திற்கும் மேலாக உம் பெயரையும் உம் வாக்கையும் மேன்மையுறச் செய்துள்ளீர்.

இறைவார்த்தையை ஆண்டவர் எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தியுள்ளார். இது உண்மை என்றால் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, நம் உள்ளங்களில் வைத்து தியானித்து, நம் செயல்களில் அதைக் கொண்டு வர வேண்டும். நாம் இப்படி செய்கின்றோமா என்று யோசித்து பார்ப்போம், நாம் இதில் குறைவுப்படுகிறதினாலே, நம் செயல்களில் மாற்றம் இல்லை. தாவீது, “நாள் முழுவதும் இறைவார்த்தையைப் பற்றி சிந்திக்கிறேன்” என்று சொல்கிறார்; என்ன ஒரு ஆசீர்வாதமான வாழ்க்கை பாருங்கள்.

திருப்பாடல் 1:2 – ஆனால், அவர் ஆண்டவரின் திருச்சட்டத்தில் மகிழ்ச்சியுறுபவர்; அவரது சட்டத்தைப்பற்றி இரவும் பகலும் சிந்திப்பவர்;

இந்த வார்த்தைகளை இரவும், பகலும் தியானிப்பவர்கள் பேறுபெற்றவர்கள்; நாம் இப்படி வாழ்கிறோமா? இல்லையென்றால், மனம்மாற ஒப்புக்கொடுப்போம்; அதுதான் வழி வேறு வழி இல்லை. ஏதோ ஒரு மணி நேரம் மட்டும் ஆண்டவரோடு இருப்பேன். மற்ற நேரம் என் விருப்பப்படி இருப்பேன் என்றால், எங்கிருந்து பரிசுத்தம் வரும், நம் வாழ்வின் செயல்பாடுகள் மாறும், ஜீவியத்தின் தன்மைகள் மாறும். எதுவும் மாறாது; நம் சுபாவங்கள் மாறாது; பழைய செயல்பாடுகள் மாறாது; இறைவார்த்தையைத் தொடர்ந்து கற்று, கூர்ந்து கவனித்து, தியானிக்கும் போது தான் மாறும். அதன் பிறகு அது செயல் வடிவம் பெறும். இப்படி நாம் வாழாததைக் குறித்து மனம் வருந்தி இறைவனிடம் மன்னிப்புக் கேட்போம். இன்றிலிருந்து அப்படி செய்ய ஆரம்பிப்போம். அப்பொழுது நம் செயல்களில் இறைவார்த்தை வர ஆரம்பிக்கும், நம் செயல்கள் நேர்த்தியுள்ள செயல்களாய் மாறும். இதற்கு ஒப்புக்கொடுத்து நாம் ஜெபிப்போம்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே மகிமை!

12/05/2020

மன மாற்றமே உண்மையான எழுப்புதல்

யோவான் 16 : 7 - 13 : நான் உங்களிடம் சொல்வது உண்மையே. நான் போவதால் நீங்கள் பயனடைவீர்கள். நான் போகாவிட்டால் துணையாளர் உங்களிடம் வரமாட்டார். நான் போனால் அவரை உங்களிடம் அனுப்புவேன். அவர் வந்து பாவம், நீதி, தீர்ப்பு ஆகியவை பற்றி உலகினர் கொண்டுள்ள கருத்துகள் தவறானவை என எடுத்துக்காட்டுவார். பாவம் பற்றிய அவர்கள் கருத்து தவறானது; ஏனெனில் என்னிடம் அவர்கள் நம்பிக்கைக் கொள்ளவில்லை. நீதி பற்றிய அவர்கள் கருத்து தவறானது; நான் தந்தையிடம் செல்கிறேன்; நீங்களும் இனி என்னைக் காண மாட்டீர்கள். தீர்ப்பு பற்றிய அவர்கள் கருத்து தவறானது; ஏனெனில் இவ்வுலகின் தலைவன் தண்டனை பெற்றுவிட்டான். "நான் உங்களிடம் சொல்ல வேண்டியவை இன்னும் பல உள்ளன. ஆனால் அவற்றை இப்போது உங்களால் தாங்க இயலாது. உண்மையை

வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார். அவர் தாமாக எதையும் பேசமாட்டார்; தாம் கேட்பதையே பேசுவார்; வரப்போகிறவற்றை உங்களுக்கு அறிவிப்பார்.

ஆண்டவர் இயேசு தம்முடைய மரணத்தை குறித்து பேசும் பொழுது, "நான் போவது உங்களுக்கு நல்லது" என்று சொல்லுகின்றார். “நான் போவது உங்களுக்கு நல்லது ஏனென்றால் தூய ஆவியானவர் உங்களிடத்தில் வருவார் நான் போகவில்லை என்றால் வரமாட்டார். நான் போய் தூய ஆவியானவரை அனுப்புவேன். அவர் வந்து பாவம், நீதி, தீர்ப்பு ஆகியவை பற்றி உலகினர் கொண்டுள்ள கருத்துக்கள் தவறானது என எடுத்துக்காட்டுவார்” என்கிறார் ஆண்டவர் இயேசு. பரிசுத்த ஆவியானவர் வந்த உடனே ஒரு மனிதன் பாவத்தை குறித்து கொண்டிருக்கின்ற கண்ணோட்டத்தை மாற்றுகிறார்; நீதியை குறித்து அவன் வைத்திருக்கின்ற எண்ணத்தை மாற்றுகிறார்; தீர்ப்பை குறித்து மனிதர்கள் வைத்திருக்கின்ற எண்ணங்களை மாற்றுகிறார்; உண்மையை அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார். இதைதான் பரிசுத்த ஆவியானவர் நம்முடைய வாழ்க்கையில் செய்கிறார். பரிசுத்த ஆவியானவர் இதை செய்யும் பொழுது தான் பாவம் என்றால் என்ன, தீர்ப்பு என்றால் என்ன என்று நாம் தெரிந்து கொள்ள ஆரம்பிக்கின்றோம். இல்லையென்றால் இவைகளை நாம் புரிந்து கொள்ள முடியாது. இன்றைக்கு மனிதர்கள் பல காரியங்களிலே, “நான் என்ன தவறு செய்துவிட்டேன், என்ன பாவம் செய்துவிட்டேன், யாருக்கு என்ன துரோகம் செய்துவிட்டேன்” என்று பேசக்கூடிய நிறைய பேர் இருக்கிறார்கள். உலகத்தில் பெரும்பாலானோர் இப்படி பேசுகின்றார்கள், ஏனென்றால் பாவத்தை குறித்து அவர்களுக்கு உணர்த்தப்படவில்லை.

இன்னும் சிலர் “நான் ஜெபிக்கிறேன், ஆதலால் நான் நீதிமானாக இருக்கின்றேன்” என்கிறார்கள், அவர்களும் பாவத்தைக் குறித்து சரியான உணர்வடையவில்லை. “தினமும் திருப்பலிக்கு செல்கின்றேன், வீட்டில் ஜெபமாலை ஜெபிக்கிறேன் ஆகவே நான் நேர்மையாக இருக்கின்றேன், ஆண்டவருக்கு நெருக்கமாக இருக்கின்றேன்” என்று பலர் நினைக்கின்றனர். இப்படிப்பட்ட அனைவரும் பாவத்தைக் குறித்த சரியான கண்ணோட்டம் இல்லாமல் இருக்கின்றனர். தூய ஆவியானவர் ஒருவருக்குள் வந்தவுடனே

பாவத்தை குறித்து அவர்களுக்கு உணர்த்துகின்றார். இன்றைக்கு எங்கு பார்த்தாலும் ஒரு தவறான, மாயையான தோற்றம் பிறப்பிக்கப்படுகின்றது, இதை சொல்லாமல் இருக்க முடியவில்லை, ஆகவே சொல்கின்றேன்.

ஒரு சகோதரர் சில நாட்களுக்கு முன்பாக என்னிடம் கேட்டார், "ஒரு சிலர் குழுவாக சேர்ந்து எழுப்புதலை கொண்டு வருகின்றார்கள்; நாமெல்லாம் ஒன்றும் செய்யாதது போல தோன்றுகிறது" என்றார். ஏனென்றால், எழுப்புதல் ஆரம்பித்துவிட்டது, எழுப்புதல் நடக்கின்றது, அற்புதங்கள் நடக்கின்றது என நீங்கள் கூட கேள்விப்பட்டிருப்பீர்கள்.

எழுப்புதல் என்றால் என்ன?

எழுப்புதல் என்பது சில அற்புதங்கள் நடப்பது அல்ல, அற்புதங்கள் எல்லாமே எழுப்புதல் அல்ல. ஏனென்றால், தூய ஆவியானவர் ஒரு மனிதனுக்கு அளிக்கும் உடல் சுகமெல்லாம் எழுப்புதல் அல்ல. தூய ஆவியானவர் ஒரு மனிதனை தொடும் போது பாவ உணர்வடைய செய்வார். அதில் மனமாற்றம் அடைவதுதான் எழுப்புதல். பாவத்திற்காக மனம் கசந்து அழுது மனமாற்றம் அடைவதுதான் உண்மையான எழுப்புதல். உள்ளத்தில் மாற்றம் ஏற்படாமல், உடலிலே சுகம் அடைவது எழுப்புதல் என்று நாம் சொல்லமுடியாது.

நம்முடைய கூட்டங்களிலே நிறைய பேர் சுகம் அடைகிறார்கள். இதையெல்லாம் பார்த்து எழுப்புதல் என்று சொல்லி விட முடியாது. இது எழுப்புதல் அல்ல. எழுப்புதலிலே பாவ உணர்வு உண்டாகும். தூய ஆவியானவர் ஒரு மனிதனுக்கு பாவ உணர்வைக் கொடுக்கிறார். அதை பரிசுத்த ஆவியானவரே கொடுக்கிறார். ஒரு சில வார்த்தைகள் பிரசங்கம் பண்ணினாலும் கூட, உள்ளத்திலே பாவத்தைக் குறித்த ஒரு பாரம் அழுத்துவது போல் இருக்கும். அந்த பாரம் அழுத்தினவுடனே தாங்களாகவே அங்கலாய்த்து அழுது புலம்பி ஆண்டவரிடத்தில் ஒப்புரவு ஆக வேண்டும். அப்பொழுது தான் தூய ஆவியானவர், மனிதனுடைய பாவத்தையும், தேவனுடைய நீதியையும் குறித்தும், வரப்போகிற நியாயத் தீர்ப்பைக் குறித்தும் உணர்த்தும் போது, ஒரு மனிதனுக்குள் வரும் மாற்றமே பெரிய அற்புதம் என்று சொல்லுகிறோம். இதுதான் எழுப்புதலில் நடக்கும்.

ஊழியர்களின் காலத்தில் நடந்த எழுப்புதல்

சார்லஸ் பின்னி, ஜான் வெஸ்லி போன்ற ஊழியர்களைப் பற்றி பார்க்கும் போது, இவர்கள் போன இடங்களில் எல்லாம் இப்படிதான் மக்கள் மனம் மாறினார்கள். அந்த பாவத்தினுடைய பாரத்தினாலே தங்களுடைய நாற்காலியிலிருந்து கூட கீழே வீசப்பட்டார்கள்; ஆலயங்களிலே தள்ளப்பட்டார்கள்; அந்த பாவ பாரத்தினுடைய வேதனையை தாங்க முடியாமல் விழுந்து கிடந்து அழுது புரண்டார்கள்; அதோடு பாவ மன்னிப்பைப் பெற்று கொண்டவர்களாக தேவனுடைய நீதியைத் தரித்து கொண்டவர்களாக சந்தோஷமாக எழுந்தார்கள். புனித பிரான்சிஸ் அசிசியாருடைய காலங்களிலேயும், பெரிய பெரிய புனிதர்களின் காலங்களிலேயும் இப்படி நடந்தது. அதுதான் எழுப்புதல்.

வல்ல செயல்கள் மன மாற்றத்தை கொடுப்பதில்லை

மத்தேயு 11:20 - இயேசு வல்ல செயல்கள் பல நிகழ்த்திய நகரங்கள் மனம் மாறவில்லை. எனவே அவர் அவற்றைக் கண்டிக்கத் தொடங்கினார்.

இங்கே நடக்கிற காரியங்களை நாம் பார்க்கும் போது, ஆண்டவரை விட யாரும் நிறைய அற்புதங்கள் செய்திருக்க முடியாது; அதையெல்லாம் எழுதினால் உலகமே கொள்ளாது என யோவான் குறிப்பிடுகிறார். இவ்வளவு அற்புதங்களை செய்தும் அந்த அற்புதங்களை கண்ட மக்கள் மனம் மாறவில்லை. எனவே, அவர் கண்டிக்க தொடங்கினார். ஏன் மாறவில்லை? பரிசுத்த ஆவியானவர் அருளப்படவில்லை; எனவே தான் மாற்றமில்லை. அவரோடு நெருக்கமாக இருந்தவர்கள், தூய ஆவியானரின் ஆளுகையினால் தொடப்பட்டு மனம் மாறினார்கள். ஆனால் அவரிடத்தில் அற்புதங்களைப் பெற்றுகொண்ட அநேக நகரங்கள் மனம் மாறவில்லை. இதை வாசிக்கும் போது நமக்கு ஒரு பெரிய அதிர்ச்சியாக தான் இருக்கிறது. இது அன்றைக்கு மட்டுமல்ல, இன்றைக்கும் அப்படி தான் நடக்கிறது. சுகம் பெற்றுக் கொண்ட எல்லாரும் மாற்றம் அடைவதில்லை. மனம் திரும்புவதும் இல்லை.

அற்புதங்களை பெற்று கொண்டு தேவனை விட்டு விலகி போனவர்கள் ஏராளம்.

பெந்தக்கோஸ்து திருவிழாவின் போது தூய ஆவியானவர் பொழியப்படுதல்

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாட்களிலே இப்படி நடந்திருக்கிறது என்றால் நமக்கு ஒரு பெரிய அதிர்ச்சி தான். ஆனால், தூய ஆவியானவர் வந்த போது, அப்போஸ்தலர்களுடைய நாட்களிலே, இயேசு கிறிஸ்து மரித்து உயிர்த்த பொழுது, பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்த பெந்தக்கோஸ்து திருவிழாவின் போது 3000 பேர் மனம் திரும்பினார்கள். ஒரே நாளிலே ஒரே நேரத்திலே 3000 பேர் உள்ளம் தொடப்பட்டார்கள், உள்ளம் குத்தப்பட்டார்கள், பாவ உணர்வு அடைந்தார்கள்; தேவனோடு ஒப்புரவு ஆனார்கள். ஒரு மனமாற்றம் அடைந்தார்கள், திருச்சபை உருவானதை அங்கு பார்க்கிறோம்.

இயேசு இருந்த நாட்களிலே, தூய ஆவியானவர் அருளப்படவில்லை. ஆகையால் தான், “நான் போனால் தான் பலன் அடைவீர்கள்” என்று இயேசு சொன்னார். அதே போல அவர் போன பிறகு தம்முடைய தூய ஆவியைப் பொழிந்தார். பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்த அன்றைக்கு 3000 பேர் மனம் மாறினார்கள்.

தூய ஆவியானவர் பொழியப்பட்ட பிறகு வந்த மன மாற்றம்

திருத்தூதர் பணி 2:37 - அவர்கள் இதைக் கேட்டு உள்ளம் குத்தப்பட்டவர்களாய் பேதுருவையும் மற்ற திருத்தூதர்களையும் பார்த்து, "சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்கள்.

பேதுரு எழுந்து பிரசங்கித்த பொழுது 3000 பேர் மனம் குத்தப்பட்டவர்களாய், பாவ உணர்வு அடைந்தவர்களாய் பேதுருவையும் மற்ற சகோதரர்களையும் பார்த்து, "சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்கள். அதற்கு பேதுரு, "நீங்கள் மனம் மாறுங்கள், பாவங்களிலிருந்து மன்னிப்பு

பெறுவதற்காக ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்கு பெறுங்கள், அப்பொழுது தூய ஆவியானவரின் கொடையைப் பெறுவீர்கள்" என்றார். இது ஒரு பெரிய ஆச்சரியம். அப்போஸ்தலர் நாட்களிலே, பெந்தேகோஸ்தே நாளன்று நடந்த பெரிய எழுப்புதல். நிறைய பேர் அப்பொழுது மனம் மாறினார்கள். இறையச்சம் அவர்களுக்கு இருந்தது. ஒரு பொய் சொன்ன அனனியாவும், சப்பீராளும் அந்த இடத்திலேயே மரித்து போகிறார்கள். யோசித்து பாருங்கள். பரிசுத்த ஆவியானவர் வல்லமையாய் அவர்கள் மத்தியிலே இறங்கி வந்து அங்கே அவர்கள் நடுவிலே தங்கி இருக்கின்ற சூழ்நிலை தான், எழுப்புதல். அங்கே என்ன நடக்கிறது என்றால், உள்ளே வருகிறவர்கள் எல்லாரும் உள்ளம் குத்தப்படுகிறார்கள். அப்படி மீறி மனம் மாறாமல் துணிந்து பொய் பேசுகிறவர்கள் மரித்துப் போகிறார்கள். ஒரு இறையச்சம் எல்லாரையும் பற்றி பிடித்துக் கொள்கிறது. அந்த சமூகமே பரிசுத்தமடைகிறது. சுத்திகரிக்கப்படுகிறது.

எழுப்புதலினால் ஏற்படும் விளைவுகள்

இங்கிலாந்து தேசத்திலே சார்லஸ் பின்னி, ஜான் வெஸ்லி அவர்கள் பிரசங்கம் பண்ணிவிட்ட பிறகு அங்கிருந்த மக்கள் உள்ளத்திலே மற்றும் அந்த கிராமத்தில் எல்லாம் பெரிய மாற்றம் உண்டாயிற்று. அதன் பிறகு பல வருடங்கள் கழித்து ஒரு மனிதன், குடிப்பதற்காக சாராய கடையை தேடி போனான். ஒன்றும் அகப்படவில்லை. வெகு தூரம் நடந்து கூட ஒன்றும் கிடைக்கவில்லை. அப்பொழுது அங்கிருந்தவர்களை பார்த்து கேட்டான், "ஏன் சாராயக்கடை இல்லை?" என்று, அவர்கள் சொன்னார்கள், "இங்கே ஒருவன் வந்து பிரசங்கம் பண்ணினான், ஆகையினாலே யாரும் குடிக்காததால், சாராயக்கடைகள் எல்லாம் மூடி விட்டார்கள்". எழுப்புதலிலே அதுதான் நடக்கும். குடிகாரர்கள் எல்லாரும் உணர்த்தப்பட்டு மனம் திரும்புவார்கள், குடிக்க ஆட்கள் இல்லாததினாலே சாராய கடைகள் தானாகவே மூடப்படும், சிறைச்சாலைக்கு செல்ல ஆட்கள் இல்லாததினாலே, சிறைச்சாலைகள் மூடப்படும். எழுப்புதல் வந்து விட்டால், சாராய கடையை நிறுத்துங்கள் என்று யாரிடமும் நாம் முறையிட அவசியமில்லை. பரிசுத்த ஆவியானவர் இறங்கி வருகிறதினாலே பாவம் மக்களிடமிருந்து வெளியே போகும். மனம்

திரும்புவார்கள். புதிய இருதயம் மனிதர்களுக்கு கொடுக்கப்படுகிறது. அப்பொழுது தானாகவே சாராய கடைகளும், சிறைச்சாலைகளும் மூடப்படும். பல தேசங்களிலே இப்படி நடந்திருக்கிறது. அதுதான் உண்மையான எழுப்புதல்.

மனத்துருக்கத்தின் ஆவியும், ஜெபிக்கிற ஆவியும்

செக்கரியா 12:10 - நான் தாவீது குடும்பத்தார்மேலும், எருசலேமில் குடியிருப்போர்மேலும் இரக்க உள்ளத்தையும் மன்றாடும் மனநிலையையும் பொழிந்தருள்வேன். அப்போது அவர்கள் தாங்கள் ஊடுருவக் குத்தியவனையே உற்றுநோக்குவார்கள்; அவனை உற்று நோக்கி ஒரே பிள்ளையைப் பறிகொடுத்து ஓலமிட்டு அழுபவரைப் போலும், இறந்துபோன தம் தலைப் பிள்ளைக்காகக் கதறி அழுபவர் போலும் மனம் கசந்து அழுவார்கள்.

இங்கு ‘உள்ளம், மனநிலை’ என்பது ஆங்கிலத்தின் பொருளில் "ஆவி" என்று போடப்பட்டுள்ளது. அதாவது ‘மனத்துருக்கத்தின் ஆவியை’ குறிக்கிறது. ஆண்டவர் இங்கு, "மனத்துருக்கத்தின் ஆவியையும், ஜெபிக்கிற ஆவியையும் அவர்கள் மேல் பொழிந்தருள்வேன்" என்கிறார். கடவுள் தூய ஆவியை ஊற்றுவார். அது மனத்துருக்கத்தின் ஆவி, கிருபையின் ஆவி அல்லது அருளின் ஆவி என்று கூறலாம். “ஜெபிக்கிற ஆவியையும், அதே சமயம் மனதுருக்கத்தோடு ஜெபிக்கிற ஆவியையும் அவர்கள் மேல் ஊற்றுவேன்” என்கிறார் ஆண்டவர். அப்படியென்றால், பாரத்தோடு தேவ சமூகத்தில் ஜெபிக்கிற ஒரு மனதுருகுகிற ஆவியை தேவன் பொழிந்தருள்வார். முதலாவது எழுப்புதலுக்கு முன்பாக ஜெபம் நடக்கிறது. எங்கே மக்கள் பாரத்தோடு அழுது ஜெபித்து, பாவத்தை நினைத்து அழுது கதற கதற தேவன் மனமிரங்கி தம் ஆவியை ஊற்றுகிறார். பரிசுத்த ஆவியை ஊற்றுகிறார், மனதுருக்கத்தோடு ஜெபிக்கிற அந்த ஆவியை ஊற்றுகிறார். அந்த ஆவி இறங்க இறங்க, அப்பொழுது அவர்கள், “தாங்கள் ஊடுருவக் குத்தியவனையே உற்றுநோக்குவார்கள் ; அவனை உற்று நோக்கி ஒரே பிள்ளையைப் பறிகொடுத்து ஓலமிட்டு அழுபவரைப் போலும், இறந்துபோன தம் தலைப் பிள்ளைக்காகக் கதறி அழுபவர் போலும் மனம் கசந்து அழுவார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஜெப ஆவிக்காக ஜெபிப்போம்

இன்றைக்கு ஒரு செய்தியைக் கேட்டால் கூட, தாங்கள் செய்தது தவறு என்று தெரிந்தால் கூட, அதை மறுதலித்து சமாளிக்க தான் பார்க்கிறோம். ஆனால், எழுப்புதலின் நேரத்தில் அப்படி இருக்காது. பரிசுத்த ஆவியானவர் ஒரு மனிதனுக்கு பாவத்தை குறித்து உணர்த்துவதாலே, அவன் கதறி அழுவான். எப்படி அழுவானென்றால், ஒரே மகனை பறிகொடுத்து ஓலமிட்டு அழுவது போல, தலைப் பிள்ளைக்காக கதறி அழுவது போல மனம் கசந்து அழுவான். அப்படி அழுது பாவ மன்னிப்பை ஆண்டவரிடம் பெற்று அந்த பாவத்திலிருந்து வெளியே வருவான். பாவத்தை தூக்கி எரிந்து விட்டு தேவனோடு கூட ஒப்புரவு ஆவான். இதுதான் எழுப்புதல். இந்த சம்பவங்கள் தான் நடக்கும். அதற்கு முன்பாக ஒரு ஜெப ஆவி மக்கள் மேல் ஊற்றப்படும். என்ன ஜெப ஆவி என்றால், மனதுருக்கத்தின் ஆவி. மனதுருக்கமும், ஜெபமும் நிறைந்த ஒரு ஆவி. அந்த ஆவி வரும் பொழுது நாம், “தேவனே தேசத்தை சுத்திகரியும், என் குடும்பத்தை சுத்திகரியும், என்னை சுத்திகரியும்” என்று பாவத்திற்காக கதறி அழுது ஜெபிப்போம். அதற்கு பேர் தான் ஜெப ஆவி. ஏதோ மணியை பார்த்து கொண்டு ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் சங்கிலி ஜெபம் பண்ணுவதெல்லாம் ஜெப ஆவி இல்லை.

ஜெப ஆவி என்பது மனதுருக்கத்தின் ஆவி; மனம் உடைந்து, உருகி தேவ சமூகத்திலே ஒரு பாரத்தோடு நிற்கிற ஆவி, இரவு பகல் பார்க்காமல், உணவை பார்க்காமல் தேவ சமூகத்தில் நிற்கக் கூடிய ஆவி. ஒரு உதாரணத்திற்காகவும், சில நேரங்களில் நாம் ஜெபிக்காமல் இருந்துவிட கூடாது என்பதற்காகவும் தான் இந்த சங்கிலி ஜெபத்தை நடத்துகிறோம்.

இந்த ஜெப ஆவி நமக்குள்ளே பொழியப்பட்டிருந்தால் இரவு பகல் பார்க்காமல் நாம் ஜெபிப்போம், நேரம் போவதே தெரியாமல் பசியில்லாமல், தூக்கமில்லாமல் ஜெபிப்போம். இத்தகைய ஜெபத்தின் விளைவாகத்தான் எழுப்புதல் உண்டாகும். திருத்தூதர்கள், அன்னை மரியாள், இன்னும் பல ஆண்கள், பெண்கள் என்று ஏறத்தாழ 120 பேர் பத்து நாட்கள் தொடர்ந்து எந்த வேலைக்கும் போகாமல் ஜெபித்துக் கொண்டே இருந்தார்கள். அப்போதுதான் ஆண்டவர் விண்ணேற்றமடைந்த பத்தாவது நாளில்,

பெந்தக்கோஸ்து நாளன்று தூய ஆவியானவர் அவர்களை நிரப்பினார், அப்படி நிரப்பும் போது தூய ஆவியாருடைய பிரசன்னம் அந்த இடம் முழுவதும் நிரம்பியது, சத்தத்தைக் கேட்டு எல்லோரும் இறங்கி வருகின்றார்கள். முதலில் அவர்களைப் பார்த்துவிட்டு ஏதோ குடித்திருக்கின்றார்கள் என்று தான் நினைத்தார்கள். பேதுரு எழுந்து பேச, பேச அந்த வார்த்தைகள் இடி முழக்கம் போல அவர்களுடைய இதயத்தை அசைத்தது. அவர்களுக்குள்ளே ஓர் பாவ உணர்வை கொண்டுவந்தது, "ஐயோ நாங்கள் கடவுளோடு ஒப்புரவாக என்ன செய்ய வேண்டும்", என்றார்கள். பாவ உணர்வு அவர்களை அழுத்தியது, தேவனுடைய நீதி அவர்களை அழுத்தியது, நாங்கள் என்ன செய்வோம் என்று கதற ஆரம்பித்தார்கள், பெரிய மனமாற்றம் உண்டானது. இதைத்தான்

யாக்கோபு 4 : 8 - 9 ல் பார்க்கிறோம் கடவுளை அணுகிச் செல்லுங்கள்; அவரும் உங்களை அணுகி வருவார். பாவிகளே, உங்கள் கைகளைத் தூய்மையாக்குங்கள். இரு மனத்தோரே, உங்கள் உள்ளங்களைத் தூய்மைப்படுத்துங்கள். உங்கள் நிலையை அறிந்து, துயருற்றுப் புலம்பி அழுங்கள். உங்கள் சிரிப்பு புலம்பலாகவும், மகிழ்ச்சி ஆழ் துயரமாகவும் மாறட்டும்.

பாவம் இருக்கிறது என்றால் இப்படி துயரப்பட்டு புலம்பி, அழுது ஜெபித்து உங்களை தாழ்த்துங்கள். செக்கரியாவில் சொன்ன அதே காரியத்தை யாக்கோபும் சொல்கிறார். பாவிகள் மனம் திரும்பி அழக்கூடிய நிகழ்ச்சியை சொல்கிறார். ஆண்டவருக்கு முன்பாக இப்படி தாழ்த்துங்கள் அவர் உங்களை உயர்த்துவார். பாவ வழிகளிருந்தும், பெலவீனங்களிருந்தும், திரும்பவும் பாவம் செய்ய முடியாத ஒரு பரிசுத்த நிலைக்கு உங்களை உயர்த்துவார். தூய ஆவியின் எழுப்புதலின் நாட்களிலே இதுதான் நடக்கும், மக்கள் பாவத்தினாலே உணர்த்தப்படுவார்கள், பாவம் செய்கிறவர்கள், வசனத்தை கேட்டவுடனே பாவ உணர்வடையாமல் போகமாட்டார்கள், தூய ஆவியினுடைய பாரம் அவர்களை அழுத்த ஆரம்பிக்கும். எழுப்புதல் காலத்தில் கூட்டத்திலே செய்தியை கேட்டுவிட்டு வீட்டிற்கு போனால் கூட அவர்களால் தூங்க முடியாது, இந்த வார்த்தைகள் வழியாக தூய ஆவியானவர் அவர்கள் உள்ளத்தை அழுத்த ஆரம்பிப்பார், அவர்களது உள்ளதை பிசைய ஆரம்பிப்பார், அப்போது அவர்கள் அழுது புலம்பி ஆண்டவரை தேடுவார்கள், தேவனுடைய வார்த்தைகளுக்காக ஏங்குவார்கள்,

ஆண்டவரிடம் ஓடி வருவார்கள். இப்படி உள்ளம் மாறும், வெறும் அற்புதங்களுக்காக, அதிசயங்களுக்காக, தேடுகிறவர்களாக, இருக்கமாட்டார்கள். பாவ உணர்வடைந்து “ஐயோ! இப்படியெல்லாம் கடவுள் நமக்கு செய்திருக்கின்றாரே, பாவத்தோடு இருக்கிறோமே எப்படி அவரை சந்திக்க போகிறோம்” என்று, அவருடைய நீதியை, தீர்ப்பை நினைத்து மனம் கசந்து அழுது மனம் மாறுவார்கள். அதற்கு முன்பாக ஒரு ஜெப ஆவி, மன துருக்கத்தின் ஆவி இறங்கி வரவேண்டும்.

யோசித்து பாருங்கள், நம்முடைய வாழ்க்கையில் நாம் இப்படி ஜெபிக்கின்றவர்களாக இருக்கின்றோமா? இந்த இடத்தில் இருக்கின்ற அனைவரும் இப்படி ஜெபிக்கின்றவர்களாக இருந்தால் நிச்சயமாக கடவுள் ஒரு எழுப்புதலை அனுப்புவார். இன்றைக்கு மணியை பார்த்துக் கொண்டு தான் நாம் ஜெபிக்கின்றோமா? இந்த ஒரு பாரத்தோடு இறை சமூகத்தில் நிற்கின்றோமா? “ஆண்டவரே இப்படி ஓர் விடுதலையை, எழுப்புதலை தாரும்” என்று கதறி அழுகிறோமா? இந்த எழுப்புதல் தான் சபைக்குள்ளே உண்மையான சுத்திகரிப்பை கொண்டு வரும். அப்பொழுது தான் மக்கள் பாவ உணர்வடைந்து மனம் மாற ஆரம்பிப்பார்கள். இதற்கு பதிலாக எத்தனை அற்புதங்கள் நடந்தாலும், அற்புதங்களை பெற்றுக் கொண்டு அப்படியே தான் இருப்பார்கள். பெரிய மாற்றங்கள் எதுவும் உண்டாகாது.

கடவுள் இப்படிப்பட்ட ஆவியை ஊற்ற வேண்டும் என்றால், இந்த பாரத்தோடு திருச்சபையின் நிலையை உணர்ந்து மக்கள், கடவுளுடைய பிள்ளைகள், கடவுளுடைய ஊழியர்களின் நிர்விசாரமான நிலையை நினைத்து, பாரத்தோடு ஜெபித்து எழுப்புதலை உண்டாக்க வேண்டும். ஆகவே, மனம்திரும்புதலை நோக்கி சபை செல்ல வேண்டும் என்ற பாரத்தோடு ஜெபிக்கின்றவர்களாக இருப்போம். ஆதலால், அதை உணர்ந்து இன்றைக்கு நம்மையே நாம் ஒப்புக்கொடுப்போம். நம்முடைய ஜெபம் அப்படியில்லாவிட்டால் இன்றிலிருந்தாவது, பாரம் நமக்குளே வரட்டும். அந்த ஜெப ஆவியை முதலில் ஊற்றினப் பிறகுதான், இரண்டாவது காரியம் எழுப்புதல் உண்டாகும். ஒவ்வொருவரும் பாவ உணர்வடைந்து கடவுளை நோக்கி கதறி அழுவார்கள், மனம் திரும்புவார்கள். இந்த வேளையில் நம்மையே நாம் ஒப்புக்கொடுக்கலாம், அப்படி ஒரு ஜெப வாழ்க்கைக்குள் நாம் நுழைவோம். தூய ஆவியை எங்கள் மேல் ஊற்றும், இரவும் பகலும்

உம் சமூகத்திலே நின்று, நாட்டிற்காக, நரகத்தை நோக்கி போய்க் கொண்டிருக்கின்ற மக்களுக்காக, இன்றைக்கு என்ன நடந்துவிட்டது என்று திரும்பவும் பாவத்தை நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்ற மக்களுக்காக, ஆழமாய் ஜெபிக்க கூடிய ஜெப ஆவியை கேட்போம். இந்த ஜெப ஆவியினால் நிரப்பப்படுவோம், அது ஒருவரிடம் இருந்து மற்றவருக்கு போகும். இப்படி ஒரு ஜெப ஆவிக்காக ஜெபித்தோம் என்றால் எழுப்புதல் சீக்கிரமாக வரும். ஒப்புக்கொடுப்போமா?

இன்றைக்கு யோசித்துப் பார்ப்போம், ஏன் அதில் நானும் ஓர் ஆளாக இருக்கக்கூடாது, நான் ஏன் அப்படிப்பட்டவனாக, அப்படிப்பட்டவளாக ஜெபிக்கக் கூடாது. சங்கிலி ஜெபம் மட்டும் செய்துவிட்டு, மற்ற நேரம் எல்லாம் உலக ரீதியாக இருக்க விரும்புகின்றவர்களால் எழுப்புதல் வராது, நேரத்தைப் பார்த்து ஜெபிக்கின்றவர்களால் எழுப்புதல் வராது என்பதை உணர்ந்து, இப்படியெல்லாம் நடக்கிறதே என்ற பாரத்தோடு ஜெபிப்பதுதான், ஜெப ஆவி. அந்த ஜெப ஆவி நமக்குள்ளே வந்தால் தான், ஜெபிக்கின்றவர்களாக இருக்க முடியும். யோசித்து பார்ப்போம், நமக்கு நன்றாக தெரியும்; ஆகவே, இன்றைக்கு உணர்வடைவோம்; ஜெபிக்க ஆரம்பிப்போம். ஆமென்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி

15/05/2020

கடவுளின் சமூகத்தில் காத்திருத்தல்

திருப்பாடல் 130:5,6 - ஆண்டவருக்காக ஆவலுடன் நான் காத்திருக்கின்றேன்; என் நெஞ்சம் காத்திருக்கின்றது; அவரது சொற்களுக்காக ஆவலுடன் காத்திருக்கின்றேன். விடியலுக்காய்க் காத்திருக்கும் காவலரைவிட, ஆம், விடியலுக்காய்க் காத்திருக்கும் காவலரைவிட, என் நெஞ்சம் என் தலைவருக்காய் ஆவலுடன் காத்திருக்கின்றது.

இங்கு தாவீது சொல்கிறார், "ஆண்டவருக்காக ஆவலுடன் நான் காத்திருக்கிறேன். அவருக்காக மட்டுமல்ல, அவரது வார்த்தைக்காக, அவரது சொல்லுக்காக ஆவலுடன் காத்திருக்கிறேன்". அதுவும் எப்படி காத்திருக்கிறார் என்றால் இரவெல்லாம் வேலை செய்பவர்கள் எப்பொழுது விடியும் என்று காத்துக் கொண்டிருப்பார்களோ அதுபோல ஆண்டவருக்காகவும், ஆண்டவரது வார்த்தைகளுக்காகவும் காத்திருக்கிறார்.

காத்திருப்பதன் அவசியம்

'காத்திருப்பது' என்பது மிகவும் அவசியம். கடவுளுடைய காரியத்திலே கடவுளுடைய பிரசன்னத்திற்காக, கடவுளுடைய வருகைக்காக, அவர் நம்மை தொடுவதற்காக, அவர் நம்மை தூக்கி எடுப்பதற்காக, பதில் கொடுப்பதற்காக காத்திருக்க வேண்டும். அது மட்டுமல்ல, அவரது வார்த்தைக்காகவும் காத்திருக்க வேண்டும். அதனால்தான் தாவீது சொல்வார், **"பணியாளனின் கண்கள் தன் தலைவனின் கைதனை நோக்கியிருப்பது போல, பணிப்பெண்ணின் கண்கள் தன் தலைவியின் கைதனை நோக்கியிருப்பது போல, எம் கடவுளாகிய ஆண்டவரே! நீர் எமக்கு இரங்கும்வரை, எம் கண்கள் உம்மையே நோக்கியிருக்கும்"**. ஜெபம் என்பது ஏதோ கொஞ்ச நேரம் பண்ணி விட்டு போகக் கூடியது அல்ல; ஆவலுடன் காத்திருப்பது. ஜெபத்திற்கு பதில் கொடுப்பதற்காக, அவர் நம்மோடு பேசுவதற்காக, யார் அப்படி காத்திருக்கிறார்களோ, அவர்களிடத்திலே ஆண்டவர் பேசுகிறார். ஒரு முக்கியமான நபர், "காத்திரு நான் வருகிறேன்" என்று சொன்னால் நாம் காத்திருப்போம். ஆனால், அதே நேரத்தில் நம்மிடத்திலே வேலை செய்கிறவனோ, நம்மைவிட கீழாக இருப்பவனோ, நமக்கு சமமானவரோ நம்மைப் பார்த்து, "காத்திரு நான் வருகிறேன்"என்று சொன்னால் "இவர்களுக்கு ஏன் இவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டும், அவ்வளவு பெரிய ஆளா?" என்று சொல்லிவிட்டு கிளம்பிப் போய்விடுவோம்; காத்திருக்கமாட்டோம். ஆண்டவருடைய சமூகத்திலே காத்திருக்காமல் கிளம்புகிறோம் என்றால் கடவுளை அந்த அளவு உயர்வாக மதிக்கவில்லை என்று பொருள். ஆண்டவரை நாம் உயர்வாக மதிக்க மதிக்க அவருக்காக நாம் காத்திருக்க கூடிய காரியங்கள் அதிகரிக்கும். அதுதான் அவர் மேல் நாம் வைத்திருக்கும் மரியாதை. அப்படி காத்திருப்பதுதான்

கடவுளை நாம் உயர்வாக, எல்லாவற்றுக்கும் மேலாக வைக்கிறோம் என்பதன் பொருள்.

கடவுளை எந்த அளவிற்கு உயர்வாக நினைக்கின்றோமோ அந்த அளவிற்கு அவருக்காகவும், அவரிடத்திலிருந்து வரக்கூடிய வார்த்தைகளுக்காகவும், காத்திருப்போம். அதுதான் கடவுளை கனப்படுத்துவது. கடவுளை கனப்படுத்துகிறோம் என்றால் அவருக்காக காத்திருக்கிறோம் என்று அர்த்தம். இன்று காத்திருத்தல் என்பது மிகவும் குறைந்து போய்விட்டது. ஆண்டவருடைய சமூகத்திலே காத்திருத்தல் என்பது மிகவும் அவசியம். நிறைய பேர் அவசரப்படுகிறார்கள். காலம் அவசரமான காலம்; ஆண்டவரிடத்திலும் கூட நாம் அவசரப்படுகிறோம். உடனே ஏதாவது நடந்து விட வேண்டும்; உடனே அவர் பேசிவிட வேண்டும்; உடனே அவர் செய்துவிட வேண்டும் என்று அவசரப்படுகிறோம்; ஆண்டவர், நிறைய காரியங்களை உடனே செய்கிறார்; யாருக்கு என்றால், காத்திருப்பவர்களுக்கு உடனே செய்கிறார்; காத்திருந்து பழகியவர்களுக்கு அதிகமாக செய்கிறார்.

ஒரு ஊழியரைப் பற்றிய கடவுளின் சாட்சி

ஒரு ஊழியரின் வாழ்க்கையில் நடந்த சம்பவம். அவருக்கு ஒருநாள் மனைவியிடமிருந்து தொலைபேசியில் ஒரு அழைப்பு வந்தது. அவரது மனைவி தொலைபேசியில், “உங்களது மகன் செத்துக் கொண்டிருக்கிறான் சீக்கிரம் வாருங்கள்” என்று கூறுவார். அதனாலே, அவர் வேகமாக கிளம்பி வீட்டிற்கு போகும் போது பையனை கிடத்தி வைத்திருப்பார்கள்; பையன் இறந்து போயிருப்பான்; இறந்து போன பையனை பார்த்தவுடன், உடனே அறையின் கதவை மூடிக்கொண்டு பையனின் உடம்பிற்கு முன்பாக இருந்து ஜெபிக்க ஆரம்பிப்பார். தன்னுடைய சின்ன சின்ன பாவங்களையெல்லாம் அறிக்கை செய்து, சின்ன சின்ன கோபம், முணுமுணுப்பு எல்லாவற்றையும் ஆண்டவர் பாதத்தில் இறக்கி வைத்து இரண்டு மணி நேரம் இப்படி சின்ன சின்ன காரியங்களையெல்லாம் அறிக்கை செய்து ஆண்டவரிடத்தில் ஜெபித்துக் கொண்டே இருந்தார். ஜெபத்தின் இடையில் கூட இறந்த மகனை பார்க்கவில்லை; பார்த்தால் ஒருவேளை விசுவாசம் போய்விடுமோ என்று கண் திறக்கவில்லை; அப்படியே உட்கார்ந்து ஆண்டவருடைய சமூகத்தில் ஜெபம் பண்ணிக்கொண்டே இருந்தார்.

முழு இருதயத்தையும் ஆண்டவருடைய சமூகத்தில் ஊற்றி விட்ட பிறகு, "ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எழுந்திரு!" என்று சொல்வார். அப்போதும் கண்ணைத் திறந்து பார்த்தால் எங்கே விசுவாசம் போய்விடுமோ என்று பிள்ளையை பார்க்கவில்லை. மகன் எழுந்து 'அப்பா' என்று கூப்பிட்ட பிறகுதான் கண்ணைத் திறந்து பார்ப்பார். உடனே மகன், "ஜீசஸ் இதோ போகிறார்! போகிறார்!" என்று கூறுவான். அந்த ஊழியர் அப்படியே வணங்கிவிட்டு "ஜீசஸ் என்ன சொன்னார்" என்று மகனிடம் கேட்க ஆரம்பிப்பார். அந்தப் பையன் பரலோகத்தில் ஆண்டவர் சமூகத்திற்கு போயிருக்கிறான். ஆண்டவர் சொன்னார், "உங்க அப்பா ஜெபிக்க ஆரம்பிச்சிட்டா லேசாக விடமாட்டான்" என்று சொல்லி "நீ கிளம்பு" என்று இங்கே வந்து விட்டுவிட்டு போகிறார் என்று கூறினான். காத்திருந்து ஜெபிக்கக்கூடிய ஒரு ஜெபம், பதில் வருகிற வரைக்கும் ஜெபிக்கும் ஜெபம் அதுதான் தேவனை கனப்படுத்தும். அதற்காக ஆண்டவர் வருத்தப்படவில்லை; பெருமையாகத்தான் மெச்சிக் கொள்வார்.

லூக்கா18:7-ல் தாம் தேர்ந்து கொண்டவர்கள் அல்லும் பகலும் தம்மை நோக்கிக் கூக்குரலிடும் போது கடவுள் அவர்களுக்கு நீதி வழங்காமல் இருப்பாரா? அவர்களுக்குத் துணை செய்யக் காலம் தாழ்த்துவாரா? என்று பார்க்கிறோம். கடவுளுடைய விருப்பம் அது ஆண்டவருடைய சமூகத்தில் காத்திருத்தல் பதில் கொடுப்பதற்காக காத்திருத்தல்.

விவிலியத்தில் காத்திருந்தவர்கள்

விவிலியத்தில் இருக்கக்கூடிய எல்லா தூயவர்கள் இறைவாக்கினர்கள் அப்போஸ்தலர்கள் புனிதர்கள் அதைத்தான் செய்தார்கள். ஆண்டவருடைய சமூகத்திலே காத்திருந்தார்கள். யாக்கோபை பார்க்கிறோம், அந்த காலத்திலே இரவு முழுவதும் காத்திருந்தார்; மோசேயை குறித்து பார்க்கிறோம் இஸ்ரயேல் சமூகத்திற்கு முன்பாக சிறிய கூட்டம் வந்தால் கூட நாள் முழுவதும் ஆண்டவருடைய சமூகத்திலே விழுந்து கிடக்கிறார்; உடன்படிக்கை கூடாரத்தில் முன் விழுந்து கிடக்கிறார்; எல்லாருக்காகவும் தேவன் வரும்வரை பதில்

சொல்லும் வரை அமைதியாக கிடக்கிறார். மாலை வேளையில் சில நேரங்களில் ஆண்டவர் வருவது உண்டு; சில நேரங்களில் மோசே போனவுடனே அவர் வருவதும் உண்டு; சில நேரங்களில் மாலை நேரம் வரை கூட ஆகும்; ஆனாலும் அதுவரை காத்துக் கொண்டிருந்தார். இதைத்தான் தாவீது சொல்கிறார், “ஆண்டவருக்காக ஆவலுடன் நான் காத்திருக்கின்றேன்; என் நெஞ்சம் அவர் சொற்களுக்காக காத்திருக்கிறது. அவருடைய வார்த்தைகளுக்காக ஆவலுடன் காத்திருக்கிறது”. இதுதான் தேவனிடத்தில் இருக்கக்கூடிய ஆர்வம் அவருடைய வார்த்தைக்கு அப்படி காத்திருப்பது அப்படி காத்திருக்காதவர்கள் தேவனுக்காக கனி கொடுக்க முடியாது. பலன் கொடுக்க முடியாது.

காத்திருப்பதினால் என்ன நடக்கிறது

தேவ சமூகத்திலே அப்படி காத்துக் கொண்டிருப்பவர்களோடு கடவுள் பேசுகிறார். அவர்களுக்குத்தான் அவருடைய வார்த்தையை கொடுக்கிறார். அவருடைய இரகசியங்களை சொல்லிக் கொடுக்கிறார். ஆவிக்குரிய ரகசியங்களை சொல்லிக் கொடுக்கிறார். இறைவார்த்தையிலே வியப்பானவைகளை சொல்லிக் கொடுக்கிறார். அதனால்தான் ஆண்டவருடைய வார்த்தைகளுக்காக ஆவலுடன் காத்திருக்க வேண்டும். கடவுள் தான் உயர்ந்தவர் என்பதை நாம் ஏற்றுக்கொண்டோம் அங்கீகரிக்கிறோம், என்ற எண்ணத்தில் தான் இருக்கிறோம் என்பதற்கு அடையாளம் தான் ஆண்டவருக்காக காத்திருப்பது. ஒரு ஆயர், ஒரு குருக்களுக்காக காத்திருக்கமாட்டார். ஆனால் அந்த ஆயருடைய வருகைக்காக, வார்த்தைக்காக குருக்கள் காத்திருப்பார்கள். அதேபோல பாப்பரசர், ஆயருக்காக காத்து கொண்டிருக்க மாட்டார். ஆயர்தான், பாப்பரசருக்குக்காக ஒரு நாள் இரண்டு நாள் கூட காத்துக் கொண்டிருப்பார். அப்படி காத்திருப்பது எதைக் காட்டுகிறது? அவர்களுக்குரிய மரியாதையையும், கனத்தையும் காட்டுகிறது. அப்படியானால் தேவன் எவ்வளவு பெரியவர் என்றால் எந்த அளவு நாம் காத்திருக்க வேண்டும். அந்த அளவிற்கு நாம் காத்துக் கொண்டிருக்கிறோமா? அவர் செயல்படுவார் என்றும் அவர் மீட்பார் என்றும் அவர் பேசுவார் என்றும் அவருடைய வார்த்தைகளுக்காகவும், தேவ சமூகத்திலே இப்படி காத்திருக்க வேண்டும். அப்படி காத்திருக்கும் பொழுது

கடவுளுடைய குரலை நாம் கேட்கிறோம். ஆண்டவருக்காக காத்திருப்போர் ஒருபோதும் வெட்கப்பட்டு போவதில்லை. அப்படி காத்திருப்பவர்களுக்காக கடவுள் இறங்கி வருகிறார்.

மகதலேன் மரியாவின் காத்திருப்பு

மகதலேன் மரியா அந்த கல்லறையில் காத்திருந்தாள்; எல்லாரும் கல்லறை காலியாக இருக்கிறது என்று ஓடி விட்டார்கள். அவளோ அங்கேயே காத்துக் கொண்டிருந்தாள். “ஐயோ அவரை எங்கே வைத்துவிட்டனரோ? எங்கே இருந்தாலும் எடுத்துக் கொண்டு வந்து விடலாம்” என்று காத்துக் கொண்டிருந்தார். அப்படி காத்துக் கொண்டிருப்பவர்களுக்காக தேவன் இறங்கி வருகிறார். தேவ சமூகத்திலே நாம் காத்திருப்பவர்களாக பழக வேண்டும். அப்படி காத்திருக்கும் போதுதான் தேவனுடைய வார்த்தை நமக்கு கிடைக்கிறது. என்ன பேசுவது என்ன செய்வது என்பது தெரிகிறது. காத்திருக்கும் போது தான் “ஐயோ நாம் தவறு செய்கிறோம்” என்று நம்முடைய தவறுகள் நமக்கு உணர்த்தப்படுகிறது. யோசித்துப் பாருங்கள் நாம் ஆண்டவருடைய சமூகத்தில் காத்திருந்து பழகுகிறோமா? அப்படி கடவுளுடைய வார்த்தைகளைப் பெற்றுக் கொள்கிறோமா? இப்படி செய்ய ஆரம்பித்து விட்டீர்கள் என்றால் அதுதான் ஆசீர்வாதம்.

காத்திருக்கிற எவருக்காகவும் ஆண்டவர் இறங்கி வருகிறார்

பிலயாம் பணத்திற்காகத்தான் இறைவாக்கு உரைக்கிறார். அவனுக்கு பணம் தான் முக்கியம். பணத்தையும் புகழையும் தான் அவன் அதிகமாக விரும்பினான். அப்போதும் கூட, பாலாம் அனுப்பிய ஆட்கள் இரவினிலே அவனிடத்தில் வந்தபோது இங்கேயே தங்கி இருங்கள் உங்களுக்காக நான் ஆண்டவருடைய சமூகத்தில் காத்திருப்பேன். அவர் என்ன சொல்கிறாரோ அதை தான் நான் சொல்வேன். பணத்திற்காக கூட ஆண்டவருடைய சமூகத்திலே இரவு முழுவதும் காத்திருக்கிறான். ஆச்சரியமாக இருக்கிறது. அவன் காத்திருப்பதால் ஆண்டவரும் அவனுக்காக இறங்கி வருகிறார். பணத்துக்காக இப்படி காத்திருப்பது நல்லது இல்லை. தேவனிடத்தில் அவருடைய அன்புக்காக காத்திருக்க வேண்டும். பிலயாம்

காத்திருந்தபோது ஆண்டவர் மறுக்கவில்லை; இறங்கி வரத்தான் செய்கிறார். அவனோடு பேச தான் செய்கிறார்; கடவுளுடைய வார்த்தையை அவனுக்கு கொடுக்கத்தான் செய்கிறார். தீய எண்ணத்தோடு கேட்பவர்களுக்கு கூட, வேத வசனத்தின்படி காத்திருந்ததால் கடவுள் அவனோடு பேசுகிறார். அப்படியென்றால் தேவனை நேசிக்கிற நாம் எப்படி ஆண்டவரிடத்தில் காத்திருக்க வேண்டுமென்று யோசித்துப் பார்ப்போம்.

இதைத்தான் புனிதர்கள் செய்தார்கள்; இதைத்தான் அப்போஸ்தலர்கள் செய்தார்கள்; தேவனுடைய சமூகத்திலேயே மணிக்கணக்காக காத்திருந்தார்கள்; பல இரவுகள் அவருடைய சமூகத்தில் காத்திருந்தார்கள்; சில நாட்கள் கூட அவருடைய சமூகத்தில் காத்திருந்தார்கள்; தேவன் நம்மோடு பேச வேண்டும் என்பதற்காக, அவருடைய குரலை கேட்க வேண்டும் என்பதற்காக, கடவுளோடு முழுமையாக ஒப்புரவாக வேண்டும், அவரோடு இணைய வேண்டும், அவருடைய சாயலை தருப்பிக்க வேண்டும் என்பதற்காக அந்த ஆர்வத்தோடு காத்திருந்தார்கள். அப்போஸ்தலர்களும், அன்னை மரியாளும் கூட பல பெண்களும் சேர்ந்து தொடர்ந்து 10 நாட்கள் காத்திருந்ததால் தான் தூயஆவியானவர் அவர்கள் மேலே இறங்கி வந்தார். பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவதற்கு, விசேஷ அபிஷேகத்திற்கு, நமக்கு கொடுத்திருக்கிற ஊழியத்திற்கு, நமக்குத் தேவையான அபிஷேகத்திற்கு, ஊழியத்தை நேர்த்தியாக செய்வதற்கு, ஊழியத்திலே இருக்கக்கூடிய வரக்கூடிய பிரச்சினைகள் மாறுவதற்கு, குடும்பங்களில் இருக்கக்கூடிய பிரச்சனைகள் மாறுவதற்கு தேவ சமூகத்தில் நாம் காத்திருக்க வேண்டும். இதைத்தான் இந்த வசனம் சொல்கிறது ஆண்டவருக்காக ஆவலுடன் நான் காத்திருக்கிறேன். வேண்டா வெறுப்பாக அல்ல, வேறு வழி இல்லாமல் அல்ல, ஏனோ தானோ என்று இல்லை; ஆர்வமாக காத்திருக்க வேண்டும்.

எலியாவின் காத்திருத்தல்

எலியா 40 நாட்கள் நடந்து ஓரேபிலே அங்கே ஒரு பாறை அருகிலே இருந்த போது புயல் காற்று வீசியது பேரிரைச்சல் உண்டானது; பிறகு மெல்லிய காற்று உண்டானது; அப்போது ஆண்டவர் பேசினார், “எலியாவே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?” எலியா சொன்ன

பதில், “என் ஆண்டவராகிய கடவுள் மேல் பேரார்வம் கொண்டவனாய் காத்திருந்தேன்”. இதுதான் ஆண்டவர் மேலுள்ள ஆர்வம். ஆண்டவர் மீது பேரார்வம் கொண்டவராக, பேரார்வம் என்றால் இயற்கைக்கு மேற்பட்ட ஒரு ஆர்வம். ஆதலால்தான் விவிலியத்தில் எலியா நம்மை போன்ற எளிய நிலைக்கு உட்பட்ட மனிதன் தான் ஆனால் உருக்கமாக ஜெபித்தார் என்று போடப்பட்டுள்ளது. அவருடைய வாழ்க்கையில் காத்திருத்தல் இருந்தது. எலியா பல நாட்கள் பல மாதங்கள் பல வருடங்கள் தேவ சமூகத்திலே காத்திருந்தார். கெரீத்து ஆற்றங்கரையிலே பல மாதங்கள் காத்திருந்தார். அடுத்து ஆண்டவர் என்ன சொல்லப் போகிறார் என்ன செய்யப்போகிறார் என்று காத்திருந்தார். அங்கே யாரும் இல்லை மனித நடமாட்டமே இல்லை. ஊரெல்லாம் பஞ்சம் உண்டானது. என் வார்த்தை இன்றி மழையும் இல்லை பனியும் இல்லை என்று சொல்லிவிட்டு வந்துவிட்டார். ஆண்டவர் அவரை அந்த ஆற்றங்கரையில் இருக்கச் சொல்கிறார் அங்கேயும் காத்திருக்கிறார். நாம் எல்லோரும் கொரானா எப்பொழுதும் முடியும்? என்றைக்கு ஊரடங்கு தளர்த்துவார்கள்? என்றைக்கு வெளியில் போகலாம் வரலாம்?சுதந்திரமாய் இருக்கலாம் என்று காத்துக் கொண்டிருக்கிறோம். அந்த மாதிரி ஆற்றங்கரையிலே எலியா காத்துக் கொண்டிருக்கிறார். யாரும் கிடையாது தனிமையாக அந்த குகையிலேயே தங்கி கொண்டிருக்கிறார், ஒரு காகம் அப்பமும் இறைச்சியும் அவருக்கு கொண்டு வருகிறது. அதை சாப்பிட்டுக் கொண்டு, ஆற்றங்கரையில் தண்ணீர் குடித்துக் கொண்டு, எப்போது ஆண்டவர் வருவார் எப்போது ஆண்டவர் நம்மோடு பேசுவார் என்று காத்திருக்கிறார். நாளுக்கு நாள் ஆற்றங்கரையில் தண்ணீர் குறைந்து கொண்டே போகிறது ஆனாலும், காத்திருக்கிறார். தண்ணீர் குறைந்தால் என்ன பண்ண வேண்டும் என்று யோசிக்கவில்லை. ஆண்டவருக்காக காத்திருக்கிறார். அவருடைய வார்த்தைக்காக காத்துக்கொண்டிருக்கிறார். ஒரு கட்டத்தில் தண்ணீர் மிகவும் குறைந்து போகிறது. நாமாக இருந்தால் தண்ணீர் கொஞ்சம் குறைந்தவுடன் எந்தப் பக்கம் போகலாம் என்று வழியைத் தேடி இருப்போம். இதுதான் நமக்கும் எலியாவுக்கும் உள்ள வித்தியாசம். தண்ணீர் வற்றி போகும் போது எலியா கடவுளுக்காக காத்துக் கொண்டிருந்தார். அப்போது ஆண்டவர், “எலியா சாரிபாத் என்ற ஊருக்கு போ; அங்கே ஒரு விதவையினிடத்தில் உனக்கு சாப்பாடு ஏற்பாடு செய்திருக்கிறேன்” என்கிறார்.

அப்போஸ்தலர்களின் காத்திருப்பு

இறைவாக்கினர்கள், அப்போஸ்தலர்கள் வாழ்க்கையிலே இப்படித்தான் காத்துக் கொண்டிருந்தார்கள். பரிசுத்த ஆவியானவர் வருவார் என்று காத்துக் கொண்டிருந்தார்கள். “லூக்கா 24:49-ல் ஆண்டவர் சொல்கிறார், **பரலோகத்திற்கு போவதற்கு முன்பு உன்னதத்தில் இருந்து ஒரு வல்லமையால் நீங்கள் தரிப்பிக்கப்படும் வரை எருசலேமிலே காத்துக் கொண்டிருங்கள்**”. அப்போது பெந்தேகோஸ்து நாள் வருகிற வரைக்கும், அந்த வல்லமைக்காக காத்துக் கொண்டிருந்தார்கள். இயேசு இறந்து நாற்பதாவது நாள் பரலோகத்திற்கு செல்கிறார். அதன் பிறகு 10 நாட்கள் அவர்கள் காத்திருக்கிறார்கள். புனிதர்கள் அப்படித்தான் பல நாட்கள் பல மாதங்கள் ஆண்டவருடைய சமூகத்தில் காத்துக் கொண்டிருந்தார்கள். இன்று நம்முடைய வாழ்க்கையிலே தேவ சமூகத்தில் இப்படி பொறுமையோடு ஆர்வத்தோடு காத்திருப்பது இருக்கிறதா? இரண்டு காரியங்களுக்காக நாம் காத்திருக்க வேண்டும். ஒன்று தேவன் நம்மிடத்தில் வரவேண்டும் என்பதற்காக, இரண்டாவது கடவுளுடைய வார்த்தைக்காக நாம் காத்திருக்க வேண்டும். ஆண்டவர் மீதும், அவருடைய வார்த்தை மீதும் ஒரு தாகம் இருந்தால் நாம் எதிர்பார்ப்போடு காத்துக் கொண்டிருப்போம். அதுதான் ஆவிக்குரிய வாழ்க்கை. காத்திருக்கிற வாழ்க்கைதான் அவரை கனப்படுத்துகிற ஒரு உகந்த வாழ்க்கை. காத்திருக்கும் போது தேவனுடைய வார்த்தைகளை பெற்றுக் கொள்கிறோம். இல்லை என்றால் நம்முடைய வார்த்தைகளைத்தான் பேசிக்கொண்டே இருப்போம். நம்முடைய வார்த்தைகளை நாம் பேசுகிற வரைக்கும் நாம் ஆசீர்வாதமாக இருக்க முடியாது. தேவனிடத்திலிருந்து வார்த்தைகளை பெற்றுக் கொள்ளும் போது, தேவனிடத்திலிருந்து வார்த்தைகளை கேட்கும் போதுதான் நாம் ஆசீர்வாதம் உள்ளவர்களாக மாறுவோம். யோசித்துப் பாருங்கள். அந்த காத்திருத்தலில் மிகக் குறைவுபட்டு இருக்கிறோம் என்றால் இந்த நாளிலே ஒப்புக்கொடுத்து ஜெபிப்போம்.

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவிக்கும் மகிமை உண்டாவதாக!

07/05/2020

கடவுளின் நம்பிக்கைக்குரியவர்களாக இருத்தல்

1 திமோத்தேயு 1:12 - எனக்கு வலுவூட்டும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிற்கு நன்றி செலுத்துகிறேன். ஏனெனில், நான் நம்பிக்கைக்குரியவன் என்று கருதி அவர் என்னை தம் திருத்தொண்டில் அமர்த்தினார்.

நம்பிக்கைக்குரிய பவுல்

பவுலை கடவுள் நம்பிக்கைக்குரியவராக கண்டார். நம்பிக்கைக்கு உரியவன் என்று கருதி பவுலை தம் திருத்தொண்டில் அமர்த்தினார். அதுதான் பவுலுடைய தைரியத்திற்கு காரணம். **1கொரி7:25 இல் வாசிக்கிறோம். "எனினும் ஆண்டவரின் இரக்கத்தால் நம்பிக்கைக்கு உரியவனாக இருக்கும் நான் என் கருத்தைச் சொல்கிறேன்"** என்று பவுல் கூறுகிறார். பவுல் கடவுளுடைய நம்பிக்கைக்குரியவராக இருந்தார். ஆண்டவர் ஒரு ஊழியத்தை ஒருவருக்கு கொடுக்க வேண்டும் என்றால், அவர்கள் கடவுளுடைய நம்பிக்கைக்குரியவர்களாக இருக்க வேண்டும். அதுதான் முக்கியம். நம்பிக்கைக்குரியவர்களாக இருக்கும் போதுதான் கடவுள் அந்த ஊழியங்களை அவர்களை நம்பி கொடுக்கிறார். பவுல் சொல்கிறார், "நான் ஆண்டவரின் நம்பிக்கைக்குரியவராக இருப்பதனாலேயே" என்று கூறுகிறார். சீடர்கள் மேல் ஆண்டவர் நம்பிக்கை வைத்திருந்தார். சீடர்கள் எல்லாரும் கடவுளுடைய நம்பிக்கைக்கு பாத்திரமானவர்களாக, தகுதி உள்ளவர்களாக இருந்தார்கள்.

நம்பிக்கைக்குரிய மோசே, தாவீது

மோசேக்கு ஆண்டவர், "என்னுடைய வீட்டில் எங்கும் நம்பிக்கைக்கு உரியவனாக இருக்கிறான்" என்று சாட்சி கொடுக்கிறார். கடவுள் நம்பிக்கைக்கு உரியவர். ஆண்டவருக்கு முன்பாக, அவருக்கு நாம் நம்பிக்கைக்குரியவராக இருக்க வேண்டும். ஒன்றை நம்பி நம்முடைய கரத்திலே ஒப்படைக்கும் பொழுது கடவுளுடைய நம்பிக்கைக்கு எல்லா சூழ்நிலையிலும் எல்லாவற்றிலும் அவருடைய

நம்பிக்கைக்கு உரியவர்களாக இருக்கிறோமா? இருப்போமா? தாவீதை குறித்து ஆண்டவர், "தாவீதை என் இதயத்திற்கு **உகந்தவனாகக் கண்டேன்"** என்று இப்படி சாட்சி சொல்கிறார். தாவீது ஒரு காரியத்தை தவிர எல்லாவற்றிலும் நம்பிக்கைக்குரியவராக இருக்கிறார்.

நான் நம்பிக்கைக்குரியவனா(ளா)

யோசித்துப் பாருங்கள் நாம் நம்பிக்கைக்குரியவர்களாக இருக்கிறோமா? நாம் நம்பிக்கைக்குரியவர்களாக இருக்க வேண்டும் என்பதுதான் கடவுளுடைய விருப்பம். மனிதர்களிடத்தில் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்கிறோம். ஆனால், தேவனுக்கு முன்பாக அவர் நம்புகிற அளவுக்கு நம்பிக்கைக்குரியவர்களாக இருக்கிறோமா? யோசித்துப் பாருங்கள்!

இறையாட்சியை குறித்த உவமை

அரசன் ஒருவன் வெளிநாட்டிற்கு செல்லும்போது தன் ஊழியர்களை அழைத்து ஒருவனுக்கு ஐந்து தாலந்தும் ஒருவனுக்கு இரண்டு தாலந்தும் இன்னொருவனுக்கு ஒரு தாலந்தும் கொடுத்துவிட்டு சென்றார். வெகு நாட்கள் கழித்து அவர் திரும்பி வந்தபோது 5 தாலந்து பெற்றவன் அதைக்கொண்டு மேலும் ஐந்து தாலந்து சம்பாதித்து 10 தாலந்து கொடுக்கிறான். இரண்டு தாலந்து பெற்றவன் மேலும் இரண்டு தாலந்து சம்பாதித்து 4 தாலந்து கொடுக்கிறான். ஒரு தாலந்து பெற்றவன் ஒன்றும் செய்யாமல் நிலத்திலே புதைத்து வைத்து விட்டான். எஜமான் ஐந்து தாலந்தையும் இரண்டு தாலந்தையும் பெற்றவனைப் பார்த்து, "நன்று நன்று நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியனே சிறியவற்றில் நீ நம்பிக்கைகுரியவனாய் இருந்ததினால் பெரியவற்றிற்கு உன்னை அதிகாரியாக ஆக்குவேன். தலைவனது மகிழ்ச்சியில் பங்கு கொள்" என்றார். நம்பிக்கைக்குரிய ஊழியனே என்று சொன்னார். அப்படி என்றால் அவர் நம்பிக் கொடுத்து விட்டு போனதை நம்பிக்கைக்குரியவராய் பெருகச் செய்து உள்ளார். ஒரு தாலந்தை பெற்றுக்கொண்டவன் மட்டும், "நீர் விதைக்காத இடத்தில் அறுப்பவர் தூவாத இடத்திலே சேர்ப்பவர் ஆகையினாலே, உம்முடைய தாலந்தை புதைத்து வைத்தேன்" என்று சொன்னான். பத்திரமாக வைத்திருக்கிறேன் என்று சொன்னான். அந்த தலைவர் அவனைக் கடிந்து கொண்டு, "என்னைப் பற்றி தெரிகிறது

அல்லவா! நான் விதைக்காத இடத்தில் அறுப்பவர் தூவாத இடத்தில் சேர்ப்பவர் என்றால் அந்த பணத்தை வட்டிக்காவது கொடுத்திருக்கலாமே, நான் வட்டியோடு பெற்றிருப்பேனே என்று சொல்லி அவனை வெளியே இருளில் தள்ளுங்கள் அங்கே அழுகையும் பற்கடிப்பும் இருக்கும்" என்று சொன்னார்.

கடவுளை துக்கப்படுத்துகிற ஊழியம்

கடவுளுக்கு நாம் ஊழியம் செய்தாலும் கடவுளின் நம்பிக்கைக்குரியவர்களாக ஊழியம் செய்கிறோமா? கடவுள் நம்மிடத்தில் எதிர்பார்க்கிற காரியங்களை, நாம் கடவுளை நம்பி செயல்படுகிறோமா அல்லது கடவுள் எதிர்பார்க்காத பல காரியங்களை நம் விருப்பப்படி, "இப்படி நல்லா இருக்கும் அப்படி நல்லா இருக்கும்" என்று நினைத்து செய்கிறோமா? ஆண்டவர், "சவுலை அரசனாக்கியதற்காக நான் வருந்துகிறேன்; ஏனென்றால், நான் விரும்பியபடி அவன் நடப்பதில்லை. என் நம்பிக்கைக்கு பாத்திரமாக அவன் நடந்து கொள்ளவில்லை" என்று சொல்கிறார். நிறைய ஊழியர்கள் ஊழியம் செய்கிறார்கள்; ஆனால் கடவுளுடைய நம்பிக்கைக்கு உரியவர்களாக இருக்கிறோமா? அவர் நம்பி ஒரு காரியத்தை ஒப்படைக்கும் போது நாம் பல காரியங்களை செய்கிறோம். தேவனுடைய விருப்பப்படியே செய்கிறோமா? அவருடைய நம்பிக்கைக்குரியவர்களாக இருக்கிறோமா? எல்லாரும் ஆண்டவர் கொடுக்கிற ஊழியங்களை செய்கிறார்கள் அவர் கொடுக்கும் காரியங்களை செய்கிறபோது சவுல் அரசர் செய்ததை போல அப்படியே முக்கால்வாசி செய்தால் கூட, ஒரு சில காரியங்களிலே அவரவருடைய சுய விருப்பங்களை கலந்து செய்கிறார்கள். ஆனால், தேவனுடைய நம்பிக்கைக்குரியவர்களாக அந்த காரியத்தை செய்கிறோமா? அதுதான் முக்கியமானது.

நம்பிக்கைக்குரிய பவுலின் ஊழியம்

பவுல், "கடவுளுடைய நம்பிக்கைக்குரியவராக இருந்தேன்" என்று சொல்கிறார். திருத்தூதர் பணியில் நாம் ஒரு காரியம் வாசிக்கிறோம். பவுல், "ஆண்டவரின் ஆவியார் ஆசியாவிலே நற்செய்தி

அறிவிக்காத படி என்னை தடை செய்தார்" என்று சொல்கிறார். எந்த அளவுக்கு அவர் கடவுளுடைய நம்பிக்கைக்குரியவராக இருக்கிறார். ஆவியானவரை மீறி நற்செய்தி அறிவிக்க கூட அவர் போகவில்லை. இன்று நிறைய பேர் நற்செய்தி அறிவிக்கிற ஆர்வத்தினால் ஆவியானவரையே தூக்கி எறிந்துவிட்டு அறிவிக்கிறார்கள். நற்செய்தி அறிவிக்கத்தான் வேண்டும். ஆனால், **திருத்தூதர் பணி 16:6ல் வாசிக்கிறோம். ஆசியாவிலே நற்செய்தி அறிவிக்காதபடி தூய ஆவியானவர் தடை செய்தார் என்று எழுதுகிறார்.** நற்செய்தியை அறிவிப்பதில் கூட கடவுளுடைய நம்பிக்கைக்குரியவராக இருக்கிறார். ஆசியாவிலே ஆண்டவர் பவுலை ஏன் தடை பண்ணினார். கடவுளுடைய விருப்பம் அது. கடவுள் அவருக்கு வேறு ஒரு ஊழியத்தை வைத்திருந்தார். மாசிதோனியாவிற்கு அவரை அனுப்ப ஆண்டவர் விரும்பினார். ஆசியாவிலேயே இருந்தால் அங்கேயே உட்கார்ந்து இருப்பார். கடவுளுடைய நம்பிக்கைக்குரியவராக நற்செய்தியை அறிவித்து இருக்கமாட்டார். ஆண்டவர் இதை தடுக்கிறார் என்று உணர்ந்து பவுல் ஜெபிக்கிறார். ஏனென்றால், அவர் கடவுளின் நம்பிக்கைக்குரியவராக இருந்ததினாலே அவசரப்பட்டு போகவில்லை. ஆவியானவரை தள்ளிவிட்டு போய் நற்செய்தியை அறிவிக்கவில்லை. அவர் நற்செய்தியை அறிவிப்பதில் மிகத் தீவிரமாக இருந்தாலும் கூட தூய ஆவியானவரை மீறி அந்த காரியத்தில் ஈடுபடவில்லை.

இன்று வரை நற்செய்தி பணியாளர்களுக்கு முன்மாதிரியாக பவுல் தான் இருக்கிறார். பவுலை விட தீவிரமாக யாரும் அறிவித்திருக்க முடியாது என்று சொல்கிறார்கள். இவ்வளவு வேதனைகளையும், அடிகளையும், கஷ்டங்களையும் தாங்கி கொண்டு அவர் நற்செய்தி அறிவித்தாலும் அதிலும் கூட, தூய ஆவியானவர் தடை பண்ணுகிறார் என்று அமைதியாக இருந்து ஜெபிக்கிறார். அப்படி ஜெபிக்கும் பொழுது ஒரு கனவிலே காட்சி வருகிறது. மாசிதோனியர் ஒருவர் எங்களுக்கு உதவி செய்ய வாரும் என்கிறார். அந்த வார்த்தையை கேட்டு அதன் பிறகு, தூய ஆவியானவர் நம்மை மாசிதோனியாவிற்கு அனுப்புகிறார் என்று மாசிதோனியா புறப்பட்டுப் போகிறார். ஏனென்றால், அங்கே தூய ஆவியானவருடைய நம்பிக்கைக்குரியவராக விளங்குகிறார். அதேபோல எருசலேம் போகும்போதும் அப்படித்தான். வழிகளிலெல்லாம் தீர்க்கதரிசிகள் அவருக்கு சொல்கிறார்கள்.

எருசலேமுக்கு போகும்பொழுது கயிறுகளால் உங்களை கட்டி சங்கிலிகளாலே இழுத்துக்கொண்டு போவார்கள் என்று எச்சரிக்கை விடுக்கிறார்கள். போகக்கூடாது என்று அழுகிறார்கள். பவுல் என் மனதை நீங்கள் கலைக்க வேண்டாம். ஆண்டவருக்காக என் உயிரைக்கூட கொடுப்பதில் நான் சந்தோஷமாகத்தான் போகிறேன் என்று சொல்லி அங்கிருந்து புறப்பட்டார்.

அங்கும் சீசருக்கு முன்னிலையில் நீ சாட்சி சொல்ல வேண்டும் என்று சொன்னதினாலே 'என்னை சீசரிடத்திலே அனுப்புங்கள்' என்று சொன்னார். கடவுள் அவரை எதற்காக அழைத்தாரோ அதிலேயே கவனமாக இருக்கிறார். எல்லா காரியத்திலும் ஊழியத்திலும் கடவுளுடைய நம்பிக்கைக்குரிய ஒருவராகவே இருக்கிறார்.

நம்முடைய ஊழியம் நம்பிக்கைக்குரியதா?

இன்றைக்கு நம்மை யோசித்துப் பாருங்கள் தேவனுடைய நம்பிக்கைக்குரியவர்களாக நாம் நடக்கிறோமா? கடவுள் இப்படி நம்மை நம்ப முடியுமா? பரிசுத்த ஆவியானவர் இந்த அளவுக்கு நம் மேல் நம்பிக்கை வைக்க முடியுமா? பல நேரங்களில் மக்கள் எல்லாரும் ஏதாவது சொன்னார்கள் என்றால் அதிலே நாம் மிதந்து போய்விடுகிறோம். "மக்களெல்லாரும் விரும்புகிறார்கள் அதனால் நான் இப்படி செய்கிறேன்" என்று கவிழ்ந்து போகிறோம். இதைத்தான் சவுல் செய்தார். மக்களின் வெள்ளத்தில் இழுக்கப்படுகிறார். மக்கள் எல்லாரும் இப்படி விரும்புகிறார்கள் என்று மக்களுக்காக ஊழியம் செய்யக் கூடாது. தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டும். மக்களுக்காக செய்கிற ஊழியத்தில் தேவனுடைய நம்பிக்கைக்குரியவர்களாக நாம் நடந்து கொள்கிறோமா? யோசித்துப் பாருங்கள். மக்களுடைய விருப்பத்தை நான் நிறைவேற்றினால் இந்த மக்கள் இன்று ஓசன்னா என்று சொல்வார்கள், நாளைக்கு சிலுவையில் அறையும் என்று சொல்வார்கள். அதுதான் மனிதனுடைய இயல்பு. நிறைய ஊழியர்கள் மக்களுடைய வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுகிறார்கள். ஆனால், தேவனுடைய நம்பிக்கைக்கு நாம் பாத்திரமாக இருக்க வேண்டும். கடவுளுக்கு முன்பாக நம்பிக்கைக்குரியவர்களாக நடக்க வேண்டும்.

பரலோக பொக்கிஷங்கள் யாருக்கு கிடைக்கும்?

கடவுளுடைய நம்பிக்கைக்குரியவராக நாம் இருந்தால் தேவன் எல்லாவற்றையும் நமக்காக செய்ய வல்லவராயிருக்கிறார். **கேத்தரின் குல்மான்** அடிக்கடி சொல்லக்கூடிய ஒரு வார்த்தை , "ஆண்டவருடைய நம்பிக்கைக்குரியவராக நீங்கள் இருந்தால் அவர் தன் வல்லமையை உங்களுக்குக் கொடுப்பார்". நம்முடைய விலையேறப்பெற்ற பொக்கிஷங்களை நம்மிடத்தில் இருக்கக்கூடிய செல்வங்களை நகைகளை யாரிடத்தில் நாம் ஒப்படைப்போம், கொடுப்போம். நல்லவர்கள், நேர்மையானவர்கள் நம்முடைய நம்பிக்கைக்கு பாத்திரமாய் இருக்கிறவரிடத்தில்தான் நாம் விலையுயர்ந்த பொருள்களையோ காரியங்களையும் நம்பி ஒப்படைப்போம். அதேபோலதான், தேவனும் அவருடைய நம்பிக்கைக்கு யார் பாத்திரமாய் இருக்கிறார்களோ அவரிடத்திலே தான் பரலோக பொக்கிஷங்களை செல்வங்களை மேன்மையான ஊழியங்களை ஒப்படைக்கிறார். அதற்கு நாம் செய்ய வேண்டியது என்ன? தேவனுடைய நம்பிக்கைக்கு பாத்திரமாக இருக்க வேண்டும். எதிலெல்லாம் பாத்திரவான்களாக இருக்க வேண்டும்?

1.ஆண்டவர் சொல்லக் கூடிய காரியங்களை செய்வதில் கருத்தாக இருக்கவேண்டும்.

2.மகிமையை செலுத்துவதில் நம்பிக்கைக்குரியவர்களாக இருத்தல்

எசாயா 42:8 இல் நாம் வாசிக்கிறோம், "என் புகழை சிலைகளுக்கோ என் மகிமையை பிறருக்கோ நான் விட்டுக் கொடுக்க மாட்டேன்" என்று சொல்கிறார்.

தேவனுக்கு கனத்தையும், மகிமையையும் கொடுப்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். ஊழியம் செய்கிறதினாலே மக்கள் நம்மை மதிக்கலாம். மக்கள் நம்மை பாராட்டலாம். மக்கள் நம்மை உயர்த்தி பேசலாம். ஆனால், அந்த நேரங்களில் எல்லாம் தேவனை மகிமைப்படுத்துவதிலே நாம் கருத்தாக இருக்கவேண்டும். மகிமையை தேவன் ஒருவருக்கே கொடுப்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். மகிமையை ஒருபோதும் நாம் எடுத்து விடக்கூடாது. நாம் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்று நினைக்கக் கூடாது. நிறைய ஊழியர்களுக்கு வரக்கூடிய ஒரு சோதனை இது; மற்றவர்களுக்கு முன்பாக நம்மை நல்லவர்களாக முன்னிறுத்த பெரிய சோதனைகள் நமக்கு வரும். நம்மைக் குறித்து என்ன

நினைத்து விடுவார்களோ? குருவானவர் என்ன நினைத்து விடுவாரோ? அல்லது பெரிய ஊழியர்கள் என்ன நினைத்து விடுவார்களோ? இப்படி ஒரு போராட்டங்கள் நமக்கு வரும். இப்படி நினைக்கும்போது நாம் தேவனை மகிமைப்படுத்த முடியாது. தேவனுக்கு மகிமை சேர்க்க முடியாது. நம்முடைய ஊழியத்தில் எல்லா காரியங்களிலும் தேவனை மகிமைப்படுத்துவதிலே கவனமாக இருக்க வேண்டும். ஒருபோதும் ஆண்டவர் அவருடைய மகிமையில் கை வைப்பதை ஏற்றுக்கொள்ள மாட்டார். மகிமையை கடவுளுக்கு கொடுப்பதில் நாம் நம்பிக்கைக்குரியவர்களாக இருக்க வேண்டும். நிறைய பேர் அதில் நம்பிக்கைக்குரியவர்களாக இல்லை. தேவன் நம் மூலமாக அற்புதங்களை செய்ய ஆரம்பித்த உடனே தங்களை உயர்த்த ஆரம்பித்து விடுகிறார்கள். தங்களுடைய மகிமையை தேட ஆரம்பித்து விடுகிறார்கள். அவர்கள் பெயர் புகழ் சம்பாதித்து கொள்வதற்கும் அவர்களை நல்லவர்களாக காட்டிக் கொள்வதற்கும் என்ன செய்ய வேண்டும் என்று மனிதர்கள் செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். ஆனால், கடவுளோ என் மகிமையை யாருக்கும் விட்டுக் கொடுக்கமாட்டேன் என்கிறார். அப்படி என்றால் நாம் எதிலே அவருக்கு நம்பிக்கைக்குரியவர்களாக இருக்க வேண்டும். எல்லாவற்றிலும் தேவனுக்கு மகிமையை கொண்டுவர நாம் கவனமாக இருக்க வேண்டும். ஆண்டவருடைய நம்பிக்கைக்குரியவர்களாக இருக்க வேண்டும். அப்படி இருக்கும் பொழுது தான் அவர் நம்மை பயன்படுத்த ஆரம்பிக்கிறார்.

3.பணத்திலே நம்பிக்கைக்குரியவர்களாக இருத்தல்

பணத்திலே அவருடைய நம்பிக்கைக்குரியவராக இருக்க வேண்டும். பணவிஷயத்தில் தேவன் நமக்கு கொடுக்கிற பணத்திலே தேவனுக்கு நம்பிக்கைக்குரியவர்களாக இருக்க வேண்டும்.

லூக்கா 16:11ல் ஆண்டவர் அப்படித்தான் சொல்கிறார் "அழிந்து போகிற செல்வத்தின் மட்டில் நீங்கள் நம்பத்தகாதவராய் இருந்தால் உங்களை நம்பி பரலோக செல்வங்களை யார் ஒப்படைப்பார்".

நாம் கடினமாக உழைக்கலாம், கஷ்டப்படலாம்; ஆனாலும், நமக்கு அந்த செல்வத்தையோ, பணத்தையோ, தேவைகளையோ ஆண்டவர் தான் சந்திக்கிறார். ஆண்டவர் நமக்கு பணத்தை கொடுப்பவர்

என்றால் அந்த பணத்தில் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். பணம் நமக்கு தட்டுப்பாடு வரும்போதெல்லாம் தேவனிடத்தில் ஜெபிக்கிறோம். ஆண்டவரே எனக்கு வருமானம் போதவில்லை என்று சொல்கிறோம். உங்களுக்கு ஒரு லட்சம் தேவை என்றால் ஆண்டவரிடத்தில் கேட்கிறீர்கள். ஆண்டவர் தாராளமாக ஒரு லட்சம் கேட்டால் அவர் 4 லட்சத்தை கொடுக்கக் கூடியவர் . அப்படி அவர் 4 லட்சத்தைக் கொடுத்துவிட்டால் யாரும் அவரிடத்தில் திரும்பி போய், “நான் ஒரு லட்சம் தானே கேட்டேன் 3 லட்சம் அதிகமாக கொடுத்து இருக்கிறீர்களே என்ன செய்ய வேண்டும்” என்று கேட்பதில்லை. உடனே பாக்கெட்டில் போட்டு ஓடி விடுகிறோம். இது நம்பிக்கைக்குரிய தன்மையே இல்லை. உன்னுடைய பிள்ளைகள் பள்ளியில் பீஸ் கட்டுவதற்கு ரூ5,000 தேவை என்று கேட்கிறார்கள். நீங்கள் 20 ஆயிரம் ரூபாயை உங்கள் பிள்ளையிடத்தில் கொடுக்கிறீர்கள். 5000 பீஸ் கட்டுவதற்கு 20,000 கொடுக்கிறீர்கள். அந்தப் பையன் 20,000 ரூபாயையும் பாக்கெட்டில் போட்டு விட்டு 15,000 ரூபாயை அவன் இஷ்டத்துக்கு செலவழித்துக் கொண்டே இருக்கிறான் என்றால், உம்முடைய நம்பிக்கைக்கு உரியவனாக பையன் இருக்கிறானா? இல்லை. அப்புறம் நாம் சொல்வோம், “பணவிஷயத்தில் அவனை நம்ப முடியாது எவ்வளவு கொடுத்தாலும் திரும்பி வராது” என்போம். அவன் என்ன செய்திருக்க வேண்டும்? 5000 ரூபாய்தான் பீஸ் மீதி பதினைந்தாயிரம் ரூபாயை என்ன செய்வது என்று கேட்டால் அவன் நம்பிக்கைக்குரியவன். இன்றைக்கு நிறைய பேர் கஷ்டப்படும் போதெல்லாம் ஆண்டவரை நோக்கி, “ஆண்டவரே தேவை இருக்கிறது” என்று ஜெபிக்கிறார்கள். ஆண்டவர் அதிகமாக கொடுத்துவிட்டால் அப்படியே அமுக்கமாக இருந்து விடுவார்கள். அதனால்தான் ஆண்டவர் சொல்கிறார். இந்த உலக செல்வத்தின் மட்டில் நீங்கள் நம்பத்தகாதவராய் இருந்தால் உங்களை நம்பி பரலோக செல்வத்தை ஒப்படைக்க முடியாது. அந்த பணம் உங்களுக்காக கொடுத்து இருக்கலாம் அல்லது அதிலே ஒரு பகுதியை வேறு யாருக்காவது கொடுப்பதற்காக கொடுத்து இருக்கலாம் அல்லது வேறு ஒரு காரியத்தை தேவனுக்காக செய்வதற்காக கொடுத்து இருக்கலாம். ஆனால் நாம் ஆண்டவரிடத்தில் அப்படி கேட்பதில்லை; தேவனுடைய

பிள்ளைகள் தேவன் நமக்கு அதிகமாக கொடுக்கும்போது ஆண்டவரே பணத்தைக் கொண்டு என்ன செய்ய வேண்டும் என்று

கேட்க வேண்டும். ஆண்டவருடைய நம்பிக்கைக்கு உரியவராக இருக்க வேண்டும். அவருடைய அப்போஸ்தலர்கள், சீடர்கள், புனிதர்கள் எல்லாரும் அப்படித்தான் நடந்தார்கள்.

நம்மையே நாம் சோதித்து ஒப்புக்கொடுத்தல்

உங்கள் இருதயத்தில் இந்த கேள்வியைக் கேட்டுப் பாருங்கள். நான் தேவனுடைய நம்பிக்கைக்கு பாத்திரமாக நடக்கிறேனா? ஆண்டவருடைய நம்பிக்கைக்குரியவனாக இருக்கிறேனா? இந்த மூன்று காரியத்திலும் தேவன் என்னை நம்ப முடியுமா? ஒரு காரியத்தை சொன்னபடியே செய்கிறேனா? மகிமை முழுவதும் ஆண்டவருக்கு மட்டுமே கொடுக்கிறேனா? அவர் கொடுக்கிற பணத்திலே அவருக்கு நம்பிக்கைக்குரியவனாக இருக்கிறேனா? யோசித்துப் பாருங்கள். இதில் நாம் ஏதாவது குறைவுபட்டு இருந்தால் இன்றைக்கு ஆண்டவரிடத்தில் மன்னிப்பு கேட்டு மனம் திரும்புவோம். மூன்று காரியங்களில் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக அவருடைய நம்பிக்கைக்கு பாத்திரவான்களாக மாறும் போது பரலோக செல்வத்தை ஆண்டவர் நம்மீது பொழிகிறார். மேன்மையான ஊழியங்களை கொடுக்கிறார். இந்த மூன்று காரியங்களில், “ஆண்டவரே வாழ்நாள் முழுவதும் உம்முடைய நம்பிக்கைக்கு உரியவனாக ஜீவிக்க வேண்டும்” என்று ஒப்புக் கொடுப்போம்.

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவிக்கும் மகிமை உண்டாவதாக!

<u>ஊழியர் காணொளி கூடுகை –02 /05/2020</u>

தந்தையின் திருவுளம்

மத்தேயு 7: 21 - 23 - என்னை நோக்கி, 'ஆண்டவரே, ஆண்டவரே' எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை. மாறாக, விண்ணுலகிலுள்ள என் தந்தையின் திருவுளத்தின்படி

செயல்படுபவரே செல்வர். அந்நாளில் பலர் என்னை நோக்கி, ஆண்டவரே, ஆண்டவரே, உம் பெயரால் நாங்கள் இறைவாக்கு உரைக்கவில்லையா? உம் பெயரால் பேய்களை ஓட்டவில்லையா? உம் பெயரால் வல்ல செயல்கள் பல செய்யவில்லையா?" என்பர். அதற்கு நான் அவர்களிடம், "உங்களை எனக்குத் தெரியவே தெரியாது. நெறிகேடாகச் செயல்படுவோரே, என்னைவிட்டு அகன்று போங்கள்" என வெளிப்படையாக அறிவிப்பேன்.

"என்னை நோக்கி, 'ஆண்டவரே, ஆண்டவரே' எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை" என்பதற்கு சரியான பொருள் என்னவென்றால் ஜெபிக்கிறவர்கள் எல்லாருமே விண்ணரசுக்குள் செல்வதில்லை. ஜெபிக்கிற யாருமே போகமாட்டார்கள் என்பது அதற்கு அர்த்தமில்லை. ஆனால், ஜெபிக்கிற எல்லாரும் விண்ணரசுக்குள் செல்வதில்லை.

மத்தேயு 7: 22 ல் "அந்நாளில் பலர் என்னை நோக்கி, ஆண்டவரே, ஆண்டவரே, உம் பெயரால் நாங்கள் இறைவாக்கு உரைக்கவில்லையா? உம் பெயரால் பேய்களை ஓட்டவில்லையா? உம் பெயரால் வல்ல செயல்கள் பல செய்யவில்லையா?" என்பர். அதற்கு இயேசு "**உங்களை எனக்கு தெரியவே தெரியாது. நெறிகேடாகச் செயல்படுவோரே, என்னைவிட்டு அகன்று போங்கள்" என வெளிப்படையாக அறிவிப்பேன்"** என்கின்றார். அப்படியென்றால் நாம் ஜெபிக்கக்கூடாதா, இறைவாக்கு உரைக்கக்கூடாதா, பேய்களை ஓட்டக்கூடாதா, வல்லசெயல்கள் செய்யக்கூடாதா என்று அர்த்தம் அல்ல. இயேசுவும் அப்போஸ்தலர்களை அனுப்பும் போது, **"நற்செய்தியை அறிவியுங்கள், நோயாளிகளை சுகமாக்குங்கள், தொழுநோயாளர்களை சுத்தப்படுத்துங்கள், மரித்தோரை உயிருடன் எழுப்புங்கள், கொடையாக பெற்றுக் கொண்டீர்கள், கொடையாகவே கொடுங்கள்"** என்று சொல்லித்தான் அனுப்புகிறார். அப்படி சொல்லி அனுப்பிய அதே ஆண்டவர் தான், இங்கே இப்படியும் சொல்லுகின்றார்.

நிறைய மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், வல்ல செயல்கள் செய்துவிட்டால், பேய்களை ஓட்டிவிட்டால், நாம் விண்ணரசுக்கு சென்றுவிடுவோம் என ஒரே சந்தோஷம் அடைகின்றனர்.

அப்போஸ்தலர்களும் கூட சந்தோஷப்படுகிறார்கள், “ஆண்டவரே, உமது பெயரால் ஆவிகள் எங்களுக்கு அடங்கி இருக்கின்றன" என்றார்கள். அதற்கு ஆண்டவர், "அதைவிட விண்ணுலகில் உங்கள் பெயர் எழுதப்பட்டுள்ளது என்பதை குறித்து சந்தோஷப்படுங்கள்" என்றார். பரலோகத்தில் நமது பெயர் எழுதப்பட்டிருப்பதை குறித்து தான் நாம் சந்தோஷப்பட வேண்டும். ஆண்டவருடைய பிள்ளைகள் பேய்கள் ஓட்டுவதிலோ, வல்ல செயல்கள் செய்வதிலோ, நோய்கள் சுகமடைவதாலோ சந்தோஷப்படக் கூடாது. இவற்றை குறித்து பல நேரங்களிலே நாம் பெருமைப்படுகிறவர்களாக இருக்கிறோம். இதெல்லாம் சாதாரண ஒரு விசுவாசிகளின் வாழ்வில் நடக்க கூடியது தானே தவிர, இதில் பெருமையடைய ஒன்றுமில்லை. சிலர் இதை சிறந்த காரியமாக (special) ஆக நினைக்கிறார்கள். ஆனால் இதில் எந்த சிறப்பும் இல்லை. இவையெல்லாம் நடந்தாலும் நாம் ஒரு சாதாரண விசுவாசி தான். ஒரு விசுவாசியின் வாழ்க்கையிலே இதெல்லாம் நடக்கும் என ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார். இதனால் மகிழ்ச்சி, பெருமை வந்துவிட கூடாது, மாறாக நமது பெயர் விண்ணரசில் எழுதப்பட்டுள்ளதை குறித்தே மகிழ்ச்சி அடைய வேண்டும்.

அற்புதம் செய்கிறவர் விசேஷமானவர் அல்ல

மாற்கு 16:15-18: இயேசு அவர்களை நோக்கி, "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள். நம்பிக்கைகொண்டு திருமுழுக்குப் பெறுவோர் மீட்புப் பெறுவர்; நம்பிக்கையற்றவரோ தண்டனைத் தீர்ப்புப் பெறுவர். நம்பிக்கை கொண்டோர் பின்வரும் அரும் அடையாளங்களைச் செய்வர்; அவர்கள் என் பெயரால் பேய்களை ஓட்டுவர்; புதிய மொழிகளைப் பேசுவர்; பாம்புகளைத் தம் கையால் பிடிப்பர். கொல்லும் நஞ்சைக் குடித்தாலும் அது அவர்களுக்குத் தீங்கு இழைக்காது. அவர்கள் உடல் நலமற்றோர்மீது கைகளை வைக்க, அவர்கள் குணமடைவர்" என்று கூறினார்.

நற்செய்தி அறிவித்தவுடனே, நோய்கள் சுகமடைந்த உடனே, பேய்கள் ஓடும்பொழுது, இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்கள் நடக்கும் பொழுது நாம் விசேஷமானவர் என நினைத்து பெருமை அடையக் கூடாது, இதில் பெருமை அடைய ஒன்றுமில்லை.

ஏனென்றால், இவை அனைத்தும் சாதாரண நம்பிக்கை உடைய அனைத்து விசுவாசிகளும் செய்யக்கூடிய செயல்களே. ஜெபிக்கிறவர்கள், அதன் மூலம் சில தரிசனங்களை காண்பவர்கள், இறைவாக்கு உரைக்கிறவர்கள் அல்லது சில அற்புதங்களை செய்கிறவர்கள் என இதை செய்கிறவர்கள் மட்டும் பரலோகத்திற்கு போவதில்லை. ஏனென்றால், அவர்களுடைய வாழ்க்கை, அவர்களுடைய ஜீவியம் தேவ சித்தத்தின்படியாக இல்லை. யார் ஜெபிக்கிறார்களோ அவர்களுடைய வாழ்க்கையிலே இயற்கைக்கு அப்பாற்பட்ட வரங்கள் செயல்படும், இந்த வரங்களால் நாம் விண்ணரசுக்குள் சென்று விடுவோம் என நினைக்க முடியாது. **விண்ணுலகிலுள்ள என் தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுபவரே விண்ணரசுக்குள் செல்வர் என்கிறார் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து.** ஒரு பக்கம் நம்முடைய வாழ்க்கையில் இவை எல்லாம் நடந்தால் கூட தந்தையின் திருவுளத்தை நாம் செய்கிறோமா என்பது தான் முக்கியம். நிறைய பேர் கூறுவது, “இப்பொழுதெல்லாம் நன்றாக ஜெபிக்கிறேன்” என்கிறார்கள், அது சரி தான். ஆனால் தந்தையின் திருவுளத்தின்படி நாம் நடக்கிறோமா, தந்தையின் திருவுளத்தின்படி நாம் வாழ்கிறோமா, தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுகிறோமா, தந்தையின் விருப்பம் என்ன என்பதையாவது அறிந்திருக்கிறோமா? அது இல்லாமல் வெறும் ஜெபம் மற்றும் அதோடு கூட அந்த வரங்கள் இருக்குமானால், அவர்களுடைய நிலைமை மிக பரிதாபமானது. தேவனை சந்திக்கும் பொழுது தேவன் நம்மை பார்த்து “நெறிகேடாக செயல்படுவோரே எல்லாரும் என்னை விட்டு அகன்று போங்கள்” என்று கூறுவார்.

தந்தையின் விருப்பத்தை செய்யும் பொழுது தான் நாம் மகிழ்ச்சி அடைய முடியும். கடவுளுடைய விருப்பத்தை செய்கிறோம் என்றால் அது தான் நமக்கு சந்தோஷம். அவர் பேசாமல் இருக்க சொன்னால், நாம் பேசாமல் இருப்பது தான் சந்தோஷம். அவர் ஒரு காரியத்தை செய்ய சொன்னால், அதை செய்வது தான் சந்தோஷம். கடவுள் நமக்கென்று வைத்திருக்கின்ற காரியங்களை மகிழ்ச்சியோடு செய்வது தான் சந்தோஷம். அதை விடுத்து தந்தையின் திருவுளத்தை செய்யாமல், “வெறும் ஜெபம் பண்ணுகிறேன், தினமும் ஜெபிக்கிறேன், 2 மணி நேரம் அல்லது 6 மணி நேரம் ஜெபிக்கிறேன், விடுமுறையில் முழுவதுமாக நான் ஜெபத்தில் தான் இருக்கிறேன்”

என்று சொல்லுவது நல்லது தான், எப்பொழுது நல்லது என்றால், நம்முடைய ஜெபம் தந்தையின் திருவுளத்திற்கு நம்மை கையளிக்க வேண்டும்; அவர் என்ன விரும்புகிறாரோ அதற்கு நம்மை ஜெபத்தில் ஒப்புக்கொடுக்க வேண்டும். அப்படி ஒப்புக்கொடுக்காவிட்டால், அந்த ஜெபத்தினாலே என்ன பலன் கிடைக்கும் என்றால், நம்முடைய வாழ்விலே அற்புதம் நடக்கும், பேய்கள் ஓடும், இறைவாக்கு உரைக்கலாம் ஆனால், மேலே போகும் பொழுது ஆண்டவரை நாம் சந்திக்கும் பொழுது ஆண்டவர் நம்மை பார்த்து "நெறிக்கேடாக செயல்படுபவரே என்னை விட்டு அகன்று போங்கள்" என்று தேவன் கூறுவார். ஏனென்றால், நாம் தந்தையின் திருவுளத்தை செய்யவில்லை, தந்தை விரும்புகிற காரியங்களை செய்யவில்லை, தந்தை விரும்புகிற சமாதானத்தை கொண்டு செல்லவில்லை, தந்தை விரும்புகிற மன்னிப்பை கொடுக்கவில்லை, தந்தை நமக்கு கொடுத்திருக்கிற நற்செயல்களை நாம் முழுவதும் செயல்படுத்துவதில்லை என்றால் நாம் விண்ணரசுக்குள் செல்ல முடியாது.

நம்முடைய ஜெபம் தந்தையின் விருப்பத்திற்கு நம்மை கையளிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் ஜெபிக்கும் பொழுது ஆண்டவரின் விருப்பத்திற்கு நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். ஆண்டவர் இயேசு அதை தான் செய்தார். **கெத்சமனி தோட்டத்தில் தனிமையில் ஜெபிக்கும் பொழுதும், மலைகளிலும் அல்லது பாலைநிலங்களிலும் தனிமையில் போய் ஜெபிக்கும் பொழுது ஒவ்வொரு நாளும் இரவிலும் பகலிலும் அதிகாலையிலும் தந்தையின் திருவுளத்திற்கு தன்னை முழுவதுமாக கையளித்தார்.** தந்தையின் திருவுளத்தை செய்பவர்கள் தான் விண்ணரசுக்குள் போவார்கள். இன்று நாம் இப்படி தந்தையின் திருவுளத்திற்கு நம்மை ஒப்புக்கொடுத்து ஜெபிக்கின்றோமா, தந்தையின் திருவுளத்தின்படி நடக்கின்றோமா என யோசித்து பார்ப்போம்.

யோசித்து பார்ப்போம் தந்தையின் திருவுளத்தை செய்கிறேனா, தந்தையின் திருவுளத்தின்படி நடக்கிறேனா, தந்தையின் திருவுளத்தை செயல்படுத்தி வாழ்கிறேனா என்று சண்டை போடும் பொழுது, கோபப்படும் பொழுது என எந்த காரியத்தை செய்தாலும் இது தந்தையின் திருவுளம் தானா என்று யோசித்து பார்ப்போம். குறிப்பாக ஜெப நேரத்திலே அதை நாம் யோசிக்க வேண்டும்.

இன்றைக்கு தந்தையின் திருவுளத்தை செய்தேனா என்று ஒவ்வொரு நாளும் யோசித்து பார்க்க வேண்டும். **“ஆண்டவரே உம்முடைய திருவுளத்தை இன்று செய்தேனா, உம்மை நோக செய்கிற காரியம் என்னிடத்தில் உண்டா” என்று அப்படி யோசித்து பார்க்க வேண்டும்.** அப்படி இருந்தால் தான் தேவன் நம்மை தெரியாது என்று சொல்லமாட்டார்

சொல்லும் செயலும்

மத்தேயு 21: 28 - 31: மேலும் இயேசு, "இந்த நிகழ்ச்சியைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? ஒரு மனிதருக்கு இரு புதல்வர்கள் இருந்தார்கள். அவர் மூத்தவரிடம் போய், "மகனே, நீ இன்று திராட்சைத் தோட்டத்திற்குச் சென்று வேலை செய்" என்றார். அவர் மறுமொழியாக, "நான் போக விரும்பவில்லை" என்றார். ஆனால் பிறகு தம் எண்ணத்தை மாற்றிக்கொண்டு போய் வேலை செய்தார். அவர் அடுத்த மகனிடமும் போய் அப்படியே சொன்னார். அவர் மறுமொழியாக, "நான் போகிறேன் ஐயா!" என்றார்; ஆனால் போகவில்லை. இவ்விருவருள் எவர் தந்தையின் விருப்பப்படி செயல்பட்டவர்?" என்று கேட்டார். அவர்கள் "மூத்தவரே" என்று விடையளித்தனர். இயேசு அவர்களிடம், "வரிதண்டுவோரும் விலைமகளிரும் உங்களுக்கு முன்பாகவே இறையாட்சிக்கு உட்படுவர் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.

ஒரு தகப்பன் தன்னுடைய இரண்டு மகன்களிடமும் திராட்சை தோட்டத்திற்கு வேலை செய்ய போகுமாறு கேட்கிறார், ஒருவன் “போகிறேன் ஐயா” என்கிறான் ஆனால் அவன் போகவில்லை. இன்னொருவன் “போகவில்லை” என்கிறான், ஆனாலும் மனம்மாறி போய் வேலை செய்கிறான். இந்த இரண்டு பேரில் நாம் யாரை போல இருக்கிறோம்? ஒருவன் போகவில்லை என்று சொன்னாலும் மனம் மாறி போய் விடுகிறான், இதை தான் ஆண்டவர் சொல்கிறார், “சில விலை மகளிர், சில ஆயக்காரரர் போகவில்லை என்று சொல்லுகிறவர்களாக இருந்தால் கூட பின் நாட்களில் அவர்கள் மனம்மாறி தந்தையின் விருப்பத்திற்கு தங்களை கையளிக்கிறார்கள்”. **இதனால் தான் ஆண்டவர், விலை மகளிரும், ஆயக்காரரும் உங்களுக்கு முன்னால் விண்ணரசுக்குள் சென்று விடுவர் என்கிறார்.**

ஏனென்றால், அவர்கள் எல்லாரும் தந்தை சொல்வதை எல்லாம் செய்கிறேன் என்று சொன்னார்கள்.

நாமும் கூட ஈஸ்டர் தினத்திலே ஞானஸ்தான வார்த்தைபாடுகளை புதுப்பிக்கிறோம். பிசாசின் செயல்களை விட்டு விடுகிறீர்களா? “விட்டு விடுகிறேன்” என்கிறோம், அதன் ஆரவாரங்களை விட்டு விடுகிறீர்களா? “விட்டு விடுகிறேன்” என்கிறோம். ஆனால் எத்தனை பேர் அந்த இருளின் செயல்பாடுகளை விட்டு விடுகிறவர்களாக இருக்கிறோம்? வாயினால் விட்டு விடுகிறேன் என்று சொல்கிறோமே தவிர அவற்றை விடுவதில்லை. அதே நேரத்தில் சிலர், நான் கோவிலுக்கே வர தகுதி இல்லை என்று சொல்லும் பொழுது, கொஞ்ச நாட்களிலே அவர்கள் மனம் மாறி தேவனிடம் வந்து விடுகிறார்கள்.

ஒரு காலத்திலே பாவி என்று சொல்லப்பட்ட பலர் ஆண்டவருக்கு உகந்த தேவ திருவுளத்தை நிறைவேற்றுகிறவர்களாக மாறிவிட்டார்கள். ஆனால், நேர்மையாளரை போல காணப்படக்கூடிய பலர் தந்தையின் திருவுளத்தையே செய்கிறேன் என்று சொல்லி கொண்ட பலர் அவற்றை செய்யாமல், முழுவதும் திருந்தாமல் அப்படியே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நாம் எப்படி இருக்கிறோம்? உண்மையிலேயே தந்தையின் திருவுளத்தை செயல்படுகிறவர்களா இருக்கிறோமா என்பதை யோசித்து பார்ப்போம்.

கிறிஸ்தவ வாழ்க்கையிலே மிக முக்கியமான ஒன்றாக நாம் முன்னாலே வைக்க வேண்டியது, தந்தையின் திருவுளம். அவர் நம்மை இந்த பூமிக்கு அனுப்பி இருக்கிறார். நம்மை குறித்து ஒரு திட்டம் வைத்திருக்கிறார். நாம் இந்த பூமியிலே செய்ய வேண்டிய சில காரியங்களை வைத்திருக்கிறார். நாம் அதை குறித்து கவலைப்படுவதேயில்லை. மற்றவர்களை குறித்து நாம் நிறைய கவலைப்படுகிறோம். அவர்கள் பாவம் செய்கிறார்கள், அவர்கள் அப்படி நடக்கிறார்கள், திருந்தவில்லை என இது தான் நமக்கு நிறைய பாரமாக இருக்கிறதே ஒழிய, தந்தை எனக்கு கொடுத்திருக்கிற வேலையை, அவருடைய திருவுளத்தை நான் செய்து முடிகிறவனாக இருக்கிறேனா? என்னுடைய ஓட்டத்தை நான் முடிப்பதற்கு முன்பாக, மரிப்பதற்கு முன்பாக, தேவன் எனக்கு கொடுத்திருக்கும் வேலைகளை எல்லாம் செய்து முடித்து விடுவேனா

என்பதை குறித்து நாம் யோசிப்பதில்லை. ஆகவே இவைகளை ஆராய்ந்து பார்த்து இவற்றிற்கு நம்மை ஒப்புக்கொடுப்போம்.

இந்த நாள்கள் பொல்லாதவை

எபேசியர் 5:16-18 - இந்த நாள்கள் பொல்லாதவை. ஆகவே காலத்தை முற்றும் பயன்படுத்துங்கள்; ஆகவே அறிவிலிகளாய் இராமல், ஆண்டவருடைய திருவுளம் யாது எனப் புரிந்து கொள்ளுங்கள். திராட்சை மது அருந்திக் குடிவெறிக்கு ஆளாகாதீர்கள். இது தாறுமாறான வாழ்வுக்கு வழிகோலும். மாறாக, தூய ஆவியால் ஆட்கொள்ளப்படுங்கள்.
இந்த நாட்கள் வேகமாக போய் கொண்டே இருக்கின்றன ஆகவே தந்தையின் திருவுளம் யாதென அறிந்து அதை நிறைவேற்றுகிறவர்களாய் மாறுவோம். தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றாமல் மகிழ்ச்சியோடு விண்ணகத்தில் நுழைய முடியாது. ஆகவே ஒவ்வொரு நாளும் தந்தையின் திருவுளத்திற்கு நம்மை முழுவதுமாய் ஒப்புக்கொடுத்து வாழ ஜெபிப்போம். ஆமென்!

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!

<u>14/04/2020</u>

தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்

மத்தேயு 5:8 - தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்.

உள்ளம் தூய்மையாக இருக்கும் போது தான் கடவுளை பார்க்க முடியும். இந்த பூமியில் இருக்கும் போதே கடவுளை பார்க்க முடியும்.

யாரால் பார்க்க முடியும்? தூய உள்ளம் கொண்டிருப்போரே பார்க்க முடியும்; தூய உள்ளம் என்பது கடவுளை காண கூடிய உள்ளம்.

யோபின் வாழ்க்கையில் நாம் பார்க்கும் பொழுது, யோபு 19ம் அதிகாரத்தில் கூறுகின்றார், “நான் சதையோடு இருக்கும் போதே கடவுளைக் காண்பேன்". இந்த வார்த்தையின் படியே ஆண்டவரும் அவருக்கு காட்சி கொடுத்தார். யோபு நேருக்கு நேராக ஆண்டவரை சந்தித்தார், அவருடைய கண்களாலேயே ஆண்டவரை கண்டார்.

எபிரேயர் 12:4 - அனைவருடனும் அமைதியாய் இருக்க முயலுங்கள்; தூய்மையை நாடுங்கள். தூய்மையின்றி எவரும் ஆண்டவரைக் காணமாட்டார்.

மனத்தூய்மை = தூய்மையான உள்ளம் = சிந்திக்கின்ற எண்ணத்தில் தூய்மை.

சில தீமைகளை நாம் செய்யாமல் இருக்கலாம் அல்லது சில பாவங்களை நாம் செய்யாமல் இருக்கலாம் அதெல்லாம் உள்ளத் தூய்மை இல்லை. தூய உள்ளம் என்றால், நாம் சிந்திக்கின்ற எண்ணங்கள், நம்முடைய நினைவுகள் இவைகள் எல்லாம் பரிசுத்தமாக தேவனுக்கு உகந்ததாக இருக்க வேண்டும். கசப்பான நினைவுகளோ, மற்றவர்களை பழி வாங்கும் நினைவுகளோ, இச்சைக்குரிய நினைவுகளோ இல்லாமல் தூய்மையாக இருப்பது தான் உள்ளத்திலே வரக் கூடிய தூய்மை. எண்ணத்தில் தூய்மை உடையோரே பேறுபெற்றோர். எத்தனையோ புனிதர்கள் கடவுளை பார்த்து இருக்கிறார்கள்; அவர்களுடைய எண்ணங்கள் எல்லாம் தூய்மையாக இருந்தது. தூய உள்ளம் இல்லையென்றால் பாவம் செய்வோம்.

இஸ்ரயேல் மக்கள் பாலைவனத்தில் செங்கடலை கடந்த பின்னும் அவர்கள் எண்ணம் எகிப்திலேயே இருந்தது. எகிப்திலே சுதந்திரமாக இருந்ததாக நினைத்து கொண்டார்கள். ஆனால் பாலைநிலத்திலே ஆண்டவருடைய பிரசன்னம் மேகத் தூணாக இருந்தது; அது மேலே எழும்பும் பொழுது தான் அவர்கள் எழுந்து போக வேண்டும். ஆகையினால் அந்த மக்கள் விருப்பமான இடத்திற்கு போக முடியவில்லை, அவர்கள் விருப்பப்படி சாப்பிட முடியவில்லை.

அதனால் அந்த இஸ்ரயேல் மக்களுக்கு எகிப்து மேலாக தெரிந்தது. எகிப்தின் உணவு அவர்களுக்கு பெரிதாய் இருந்தது. மேகத்தூணுக்கு கட்டுப்பட்டிருந்தனர். ஆகவே மீண்டும் அவர்கள் முணுமுணுத்தனர். அவ்வாறே நாமும் பாவம் செய்யவில்லை என்றாலும் நமது விருப்பமும் நாட்டமும் எவ்வாறு இருக்கின்றது?

<u>**Merlin Carother**</u>:

நாம் பாவம் செய்யவில்லை என்றாலும் பாவத்திற்குரிய சிந்தனை நம்மில் இருக்குமேயானால் நாம் பாவம் செய்கிறவர்களாகவே மாறிவிடுவோம்.

Merlin Carother தனது புத்தகத்தில் ஒரு ஊழியரின் சாட்சியை குறிப்பிடும் போது, அந்த ஊழியர், ஒரு பெண்ணுடன் தொடர்பு உள்ளதாக பாவ அறிக்கை செய்தார். அதற்கு காரணம், அவர் கற்பனையில் அடிக்கடி, அழகான பெண்களுடன் இருப்பது போல நினைத்து பார்த்தது தான்.

யூதாசு ஸ்காரியோத்து - இவரது எண்ணத்திலும் பண ஆசை இருந்தது. அந்த பண ஆசை திருடனாக மாற்றியது. அதுவே இயேசுவை காட்டி கொடுக்கும் அளவிற்கு உருமாறியது.

வாய்ப்பு கிடைத்தாலும் பாவம் செய்யாமல் இருப்பதே தூய உள்ளம். பரலோகத்தில் சில இடங்கள் உண்டு. தூய உள்ளம் உடையவரே அங்கு செல்வர். இருதயம் சுத்திகரிப்படாதவர்கள் பரலோகத்திற்கே சென்றாலும் உள்ளம் தூய்மையாக இல்லாததால் சில இடங்களுக்கு செல்ல முடியாது.

<u>**தாவீது எங்கே தவறு செய்தார்?**</u>

திருப்பாடல் 51:10 - கடவுளே! தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்; உறுதிதரும் ஆவியை, புதுப்பிக்கும் ஆவியை என்னுள்ளே உருவாக்கியருளும்.

தாவீது பத்சேபாளுடன் எங்கே தவறு செய்தேன் என்று சிந்தித்த போது அவர் ஆண்டவரிடம் 'தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்' என்று மன்றாடினார். விசுவாசத்தின் அளவிற்கு ஏற்ப தூய உள்ளம் நமக்கு பொழியப்படுகிறது.

குறைகாணா தூயஉள்ளம்

கடவுளுக்கு ஏற்புடையவர் ஆக்கப்படுவதே தூய உள்ளம். யாரை குறித்தும் எதிர் மறையான எண்ணத்தை வைக்க கூடாது. அதுவே தூய உள்ளம். பிறரின் பழைய தவறை வைத்து தீர்ப்பிடுவது தூய உள்ளம் அல்ல. அவர்கள் மனம் திருந்தி, நல்லவராக புனிதராக கூட மாறியிருக்கலாம். நம்முடைய உள்ளம் தூய்மையாக இருக்க வேண்டுமானால் மற்றவர்களை குறித்த எதிர்மறையான, தீமையான காரியங்களை நம்முடைய மனத்திலிருந்து அகற்றி நல்ல எண்ணங்களை நம்முடைய மனதிலே வைக்க வேண்டும். இத்தகைய தூய உள்ளத்திற்கு கடவுள் கொடுக்கும் கைம்மாறு, அவரையே பார்க்கும் அளவுக்கு ஏற்ற அருளை தூய உள்ளத்தினர்க்கு தேவன் அளிக்கிறார்.

பாவசந்தோஷத்தை அருவருப்பாய்

எபிரேயர் 11:25 - பாவத்தில் சிறிது காலம் இன்புறுவதைவிட, கடவுளுடைய மக்களோடு சேர்ந்து துன்புறுவதையே அவர் தேர்ந்து கொண்டார்.

மோசே, எகிப்தில் பார்வோனுடைய அரண்மனையில் வளர்க்கப்பட்டான். அவன் விரும்பினால் பார்வோனுடைய அரண்மனையிலே சந்தோஷமாக வாழ்ந்திருக்க முடியும் ஆனால், மோசே பாவ சந்தோசத்தை விட இஸ்ரயேல் மக்களுடன் துன்புறுவதையே நாடினார். அந்த அரண்மனை சந்தோஷங்களை அவர் அருவருப்பாக கருதினார்.

தாவீது, உரியாவுக்கு மதுவை கொடுத்து வீட்டிற்கு செல்ல அனுமதி கொடுத்தும், வீரர்கள் எல்லாம் போரில் துன்பப்பட நான் மட்டும் வீட்டிற்கு சென்று மகிழ்ச்சியாய் இருப்பதா? என்று உரியா எண்ணி

அரண்மனை முற்றத்திலே படுத்து கொண்டார். உரியா அதை அருவருப்பாக கருதினார்.

ஆனால், இன்று ஜெபிக்கிறவர்கள் கூட, பாவ சந்தோஷத்தில் இருப்பவர்களை பார்த்து கூறுவது, “உலகத்தில்உள்ளவர்கள் இருக்கிறார்கள்”. இது சரியான மனநிலை அல்ல. கொள்ளை அடித்து பணம் சேர்க்கிறவர்களை பார்த்து பொறாமைப்படுகின்றனர். இதை அருவருப்பதே தூய உள்ளம்.

வாய்ப்பு கிடைத்தாலும் பாவம் செய்யாதே

திருப்பாடல் 37: 1 - தீமை செய்வோரைக் கண்டு மனம் புழுங்காதே; பொல்லாங்கு செய்வாரைக் கண்டு பொறாமைப்படாதே;

மற்றவர்களை பார்த்து நாம் பொறாமைப்படும் பொழுது, நமக்கு வாய்ப்பு கிடைக்கும் பொழுது நாமும் இஸ்ரயேல் மக்களை போன்று அப்படியே செய்வோம். பாவம் நம்மை விட்டுச் சென்றாலும், அதன் மேல் உள்ள நாட்டமும், விருப்பமும் நம்மை விட்டுச் செல்லவில்லை. வெளியே இருந்து போவது எதுவும் நம்மை தீட்டுப்படுத்த முடியாது. நம் உள்ளத்திலிருந்து வரும் பொல்லாத காரியங்களே நம்மை தீட்டுப்படுத்தும். பலர் அழகான, ஆழமான பரிசுத்தமான வார்த்தைகளை பேசுகிறார்கள். ஆனால், அவர்கள் உள்ளம் பரிசுத்தமாய் இருக்கிறதா? இதையே ஆண்டவர் வெளிவேடம் என்கிறார். உள்ளிருப்பது தூய்மையானால், நமது வெளிச் செயல்கள் அனைத்தும் தூய்மையாக இருக்கும். யாரெல்லாம் தேவன் மீது அளவில்லாத விசுவாசத்தை வைக்கிறார்களோ, அவர்களுக்கு தேவன் அந்த தூய உள்ளத்தை அருள்கிறார்.

நம்பிக்கையினால் தூயஉள்ளம்

துவக்க காலத்தில் விருத்தசேதனம் கட்டாயம் செய்யப்பட வேண்டும் என்ற பிரச்சனை வந்த போது, பவுலும், சீலாவும் அதில் உடன்பாடு இல்லாமல் எருசலேமிலுள்ள திருத்தூதர்களிடம் இந்த பிரச்சினையை முன் வைத்த போது, இறுதியாக பேதுரு எழுந்து நின்று, நம்பிக்கையினால் தூய ஆவியானவர் நம் உள்ளங்களை

தூய்மைப்படுத்தி இருக்கும் போது, நம்பிக்கையே நம்மை தூய்மையாக்கும், விருத்தசேதனம் அல்ல என்று முடிவெடுத்தார்.

திருத்தூதர் பணி 15:8,9 - உள்ளங்களை அறியும் கடவுள் நமக்குத் தூய ஆவியைக் கொடுத்ததுபோல் அவர்களுக்கும் கொடுத்து அவர்களை ஏற்றுக்கொண்டார். நம்பிக்கையால் அவர்களுடைய உள்ளங்களைத் தூய்மைப்படுத்தினார். நமக்கும் அவர்களுக்கும் இடையே அவர் எந்த வேறுபாடும் காட்டவில்லை.

செயல்முறை

இன்றும் நம் உள்ளங்களை நம்பிக்கையினால் நாம் தூய்மையாக்கிக் கொள்ள முடியும். ஒவ்வொரு வேத வசனங்களையும் விசுவாசிக்க விசுவாசிக்க நம் உள்ளங்கள் தூய்மை அடையும். இறைவார்த்தையை வாசிக்கும் போது, ‘ஆண்டவரே இவ்வார்த்தைகளை விசுவசிக்கிறேன்’ என்று சொல்ல சொல்ல நம் உள்ளம் தூய்மை அடையும்.

2 கொரிந்தியர் 10:5 - கடவுளைப்பற்றிய அறிவுக்கு எதிராகத் தலைதூக்கும் அனைத்து மேட்டிமையையும் தகர்த்தெறிகிறோம். மனித எண்ணங்கள் அனைத்தும் கிறிஸ்துவின் கட்டுப்பாட்டுக்குள் வருமாறு கட்டாயப்படுத்துகிறோம்.

பவுல் கூறுவது போல் நம் எல்லா எண்ணங்களையும் மேட்டிமைகளையும் கிறிஸ்துவின் சிலுவைக்கு கீழ் கொண்டு வர கட்டாயப்படுத்த வேண்டும். இறைவார்த்தையை கொண்டு நம் எல்லா எண்ணங்களையும் கிறிஸ்துவின் ஆளுகைக்கு கொண்டு வரும் போது நம் வெளிச் செயல்கள் தூய்மையாகும்.

ஏசாயா 32:8 - சான்றோர் உயர்வானவற்றைச் சிந்திக்கின்றனர்; அவர்கள் சான்றாண்மையில் நிலைத்து நிற்பர்.

எண்ணங்கள் தூய்மையாகவே இருக்குமானால் நாம் தூய்மையில் நிலைத்திருப்போம். நம் செயல்களும் தூய்மையாகும்.

ஊழியர்களுக்கு தேவையான முக்கியமான குணம் உள்ளத் தூய்மை. இறை வார்த்தைகளின் மேல் ஒரு ஆழமான விசுவாசத்தோடு முயற்சி செய்யும் பொழுது நம் உள்ளம் தூய்மையாகும். முழு உள்ளத்

தூய்மை அடையும் வரைக்கும் நாம் இதை விசுவாசத்தோடே முயற்சி செய்து கொண்டேயிருப்போம்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!

20/05/2020

நற்செய்தி பரவுவதற்கு எப்பொழுது எல்லாம் ஏதுவாகும்

பிலிப்பியர் 1:12 - சகோதர சகோதரிகளே எனக்கு நேர்ந்தவையெல்லாம் நற்செய்தி பரவுவதற்கு ஏதுவாயின இதை நீங்கள் அறிய வேண்டும் என விரும்புகிறேன்.

சிறையில் பவுலின் நற்செய்தி

“எனக்கு நேர்ந்தவையெல்லாம் நற்செய்தி பரவுவதற்கு ஏதுவாயின இதை நீங்கள் அறிய வேண்டும் என விரும்புகிறேன். ஏனெனில், கிறிஸ்துவுக்காகவே நான் சிறைப்பட்டுள்ளேன் என்பது ஆளுநர் மாளிகை காவல்படையினர் அனைவருக்கும் மற்ற யாவருக்குமே தெளிவாக தெரியும். என் சிறை வாழ்வினால் சகோதர சகோதரிகளில் பெரும்பாலோர் ஆண்டவரை உறுதியாக நம்பி கடவுள் வார்த்தையை அச்சமின்றி எடுத்துரைக்க மேலும் துணிவு பெற்றிருக்கிறார்கள். எனக்கு நேர்ந்தது எல்லாம் நற்செய்தி பரவுவதற்கு ஏதுவாயிற்று” என்கிறார் பவுல்.

பவுலுடைய வாழ்க்கையில் வந்தது எல்லாமே நற்செய்தி பரப்புவதற்காக ஏதுவாய் இருந்தது. சிறையில் போட்டார்கள், அதுவும் கூட நற்செய்தி பரவுவதற்கு ஏதுவாயிற்று என்று எழுதுகிறார். எப்படியென்றால், அவர் குற்றம் செய்ததால் சிறைச்சாலைக்கு வரவில்லை; கிறிஸ்துவை அறிவித்ததால்தான் சிறைச்சாலைக்கு வந்திருக்கிறார் என்று அங்கிருந்த எல்லாருக்கும் தெரிய ஆரம்பித்தது. அதையே நற்செய்தி பரவுவதற்கு ஒரு வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டார் புனித பவுல். அதனால்

நிறைய பேர் அவருடைய மன தைரியத்தை பார்த்து இன்னும் அதிகமாக ஊக்கம் பெற்றார்கள். நற்செய்தியை துணிவோடு அறிவிக்கத் தொடங்கினார்கள்.

உடல்நலக்குறைவில் பவுலின் நற்செய்தி

“கலாத்தியர் 4:13 என் உடல்நலக் குறைவுதான் முதன் முதல் நற்செய்தி அறிவிக்க எனக்கு வாய்ப்பு அளித்தது. இது உங்களுக்கு தெரியுமே என்கிறார்”.

இங்கு புனித பவுல்,உடல்நலக் குறைவு தான் முதன் முதலில் நற்செய்தி அறிவிக்க வாய்ப்பைக் கொடுத்தது என்று எழுதுகிறார். அதனால் தான் சொல்கிறார் எனக்கு நடந்தது எல்லாம் நற்செய்தி பரவுவதற்கு ஏதுவாயிற்று. உடல்நலக் குறைவு கூட நற்செய்தி அறிவிப்பதற்கு ஏதுவாயிற்று, சிறையில் இருப்பது கூட நற்செய்தி அறிவிப்பதற்கு ஏதுவாயிற்று, நடக்கிற எல்லாம் நற்செய்தி பரவுவதற்கு ஏதுவாயிற்று என்கிறார். யோசித்துப் பாருங்கள் நம்முடைய வாழ்க்கையில் எவ்வளவோ காரியங்கள் நடக்கிறது அதையெல்லாம் நற்செய்தி பரவுவதற்குரியதாய் நாம் மாற்றிக் கொள்கிறோமா. ஒன்று, பவுலுடைய பரிசுத்தமான வாழ்க்கை நற்செய்தி பரவுவதற்கு ஏதுவாயிற்று ஏனென்றால், அநியாயம் செய்து விட்டோ, ஏமாற்றி விட்டோ, சண்டை போட்டு விட்டோ, வேறு ஏதும் தவறு செய்துவிட்டோ சிறைக்குப் போக வில்லை. இயேசுவுக்காக சிறைக்குப் போனார்; அதனால் நற்செய்தி பரவுவதற்கு ஏதுவாயிற்று. உடல்நலக் குறைவு கூட நற்செய்தி பரவுவதற்கு வாய்ப்பாகி விட்டது என்கிறார். **நற்செய்தி அறிவிக்க வேண்டும் என்கிற வாஞ்சை தாகம் அவருக்குள்ளாக இருந்ததனால் ஒரு பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்ததனால் தேவனுடைய அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டதனால் அது எல்லாமே நற்செய்தி பரவுவதற்கோ ஆத்துமா ஆதாயத்திற்கோ ஏதுவாக மாறிவிட்டது.**

நற்செய்தி பணியில் என் பிள்ளைகளை ஊக்கப்படுத்துகிறேனா?

நம்முடைய வாழ்க்கையில் நமக்கு வருகின்ற எல்லாமே ஆத்துமா ஆதாயத்திற்கு மாறவேண்டுமானால் கடவுள் நமக்கு கொடுத்திருக்கிற கொடைகள், நல்ல பெயர்கள், அந்தஸ்துகள்,

தாலந்துகள் எல்லாமே நற்செய்தி பரவுவதற்காக பயன்படுத்த வேண்டும். எதுவாக இருந்தாலும் எல்லாவற்றையும் நற்செய்தி பரவுவதற்கு ஒரு வாய்ப்பாக எண்ணி பயன்படுத்த வேண்டும். பவுல் அவருக்கு கிடைத்த எல்லாவற்றையும் நற்செய்திக்காக பயன்படுத்தினார். அதனால் அவருக்கு வந்தது எல்லாம் நற்செய்தி பரவுவதற்கு ஏதுவாக மாறிப்போய்விட்டது.

சில பேர் எல்லாவற்றையும் நற்செய்தி பணிக்காக பயன்படுத்த மாட்டார்கள். நிறைய இடங்களில் ஊழியங்களில் அதை தான் பார்க்கிறோம். நிறைய பெற்றோர்கள் ஓய்வு பெற்ற பிறகு நற்செய்தி அறிவிப்பார்கள். ஆனால் அவர்களுடைய பிள்ளைகள் எல்லாம் பெரிய வேலையில் இருப்பார்கள்; நற்செய்திப் பணியில் இருக்க மாட்டார்கள். அதனால், அது ஒரு வேஷம் போடுவது போல் மாறிவிடுகிறது. மற்ற பிள்ளைகளுக்கு எல்லாம் நற்செய்தி அறிவிக்க வேண்டும் என்று சொல்வார்கள். தன்னுடைய பிள்ளைகள் நற்செய்திப் பணிக்கு வருவதற்கு ஊக்கப்படுத்துவதில்லை. கடவுளுக்காக ஊழியம் செய்ய வேண்டும் என்று சொல்லி வளர்ப்பதும் இல்லை. அதைவிட முக்கியமாக எதை சொல்லிக் கொடுக்கிறார்கள் என்றால் 'உலகத்தில் மேன்மையான ஒரு வேலையில் வந்துவிடவேண்டும்; நன்றாக படித்து பெரிய அளவில் வந்துவிட வேண்டும்' என்று இதை முதலில் சொல்லிக் கொடுத்து விடுகிறார்கள். நற்செய்தி பணிக்கோ, கிறிஸ்துவுக்குரிய காரியங்களுக்கோ கடவுளுக்கு பயந்து வாழ்வதற்கோ முதலிடம் கொடுக்காமல் போய்விடுகிறார்கள். இது நிறைய ஊழியர்களிடத்தில் பார்க்கிற காரியங்கள்.

ஏதாவது ஜெபக்குழுக்களுக்கு போகிறோம் என்றால் எல்லாம் வயதானவர்களாக இருப்பார்கள். உங்கள் வீட்டில் பிள்ளைகள் இல்லையா அவர்கள் எல்லாம் வரமாட்டார்களா என்று கேட்டால் அவர்கள் எல்லாம் நன்றாக இருக்கிறார்கள் என்று சொல்வார்கள். இது என்ன நன்றாக இருக்கிறது? கடவுளுக்கு ஊழியம் செய்யாமல் வாழ்கிறது நல்ல வாழ்க்கையா? அங்கே பணம் பதவி என்று ஒரு முரண்பாடான வாழ்க்கையை பார்க்கிறோம். **யோசுவா24:15ல் யோசுவா சொல்கிறார் "நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்".** இது ஒரு பாக்கியம் இல்லையா!

இறையாட்சியை, நற்செய்தியை புதையலாக நினைக்கிறோமா?

இறையாட்சியை ஒரு பொக்கிஷத்திற்கு ஒரு புதையலுக்கு விலை உயர்ந்த முத்துக்கு ஒப்பிடலாம். ஒரு புதையலையோ முத்துக்களையோ கண்டெடுக்கிறவன் முதலாவது அதை தன்னுடைய வீட்டிற்கு கொண்டு போவான்; அதை வீட்டிற்கு கொண்டு போகவில்லை என்றால் அதை புதையலாக நினைக்கவில்லை என்று அர்த்தம். இதைவிட வேறு எதையோ புதையலாக நினைக்கிறான் என்று அர்த்தம். புதையல் எடுத்தால் முதலில் எங்கு கொண்டு போவோம். புதையலை எடுத்து எல்லாருக்கும் கொடுத்துவிட்டு கடைசியில் மிச்ச மீதி இருப்பதை வீட்டிற்கு கொண்டு போவோமா இல்லை முதலில் வீட்டிற்குத்தான் கொண்டுபோவோம். அதன் பிறகு வேண்டுமானால் யாருக்காவது பகிர்ந்து கொடுப்போம். அதே போல இறையாட்சியை நற்செய்தியை முதலில் நம் வீட்டிற்கு கொண்டு போக வேண்டும். பிள்ளைகள் கடவுளுக்காக இருக்க வேண்டும். அதில்தான் முதல் முக்கியத்துவம் வேண்டும், அதன் பிறகுதான் மற்றவை. அதனால்தான் யோசுவா சொல்கிறார், “நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்”. குடும்பமாக தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டும்.

விவிலியத்தில் திருத்தூதர் பணிகளில் பிலிப்பு என்று ஒரு நற்செய்தி பணியாளர் இருக்கிறார். அவருக்கு நான்கு பெண் பிள்ளைகள் இருந்தார்கள். நான்கு பேருமே தீர்க்கதரிசிகளாக இருந்தார்கள் என்று பார்க்கிறோம். அதுதான் நற்செய்திப் பணியினுடைய பங்கு. பெற்றோர்கள் நற்செய்திப் பணி செய்யும் பொழுது பிள்ளைகள் அப்படி இருக்க வேண்டும். தீர்க்கதரிசிகளாக இருக்கலாம் அல்லது ஊழியம் பண்ணக்கூடியவர்களாக இருக்கலாம், கிறிஸ்துவுக்காக உழைக்க கூடியவர்களாக இருக்கலாம் ஆனால் பெரும்பாலான இடங்களில் அப்படி இல்லை. நற்செய்திக்கு கொடுக்கக்கூடிய முக்கியத்துவத்தையோ உடனிருப்பையோ நாமே கொடுக்கவில்லை என்றால் மற்றவர்கள் எப்படி கொடுக்க முடியும். நம்முடைய பிள்ளைகளாக இருக்கட்டும், சொத்துக்களாக இருக்கட்டும் நமக்குரிய எல்லாவற்றையும் நற்செய்திக்காக பயன்படுத்தக் கூடியவர்களாக இருக்கிறோமா? அப்படி பயன்படுத்தும் போது நமக்கு வருகிற எல்லாமே நற்செய்தி பரவுவதற்கு ஏதுவாக மாறிப் போய்விடும்.

எல்லாவற்றையும் நற்செய்திக்காக பயன்படுத்த வேண்டும்

பவுல் எல்லாவற்றையும் தேவனுடைய நற்செய்திக்காக பயன்படுத்தியதால் அவருக்கு வந்தது எல்லாம் நற்செய்தி பரவுவதற்கு ஏதுவாயின. சிலர் பணத்தை நம்பி தான் இருப்பார்கள்; பணத்தை மட்டும் நற்செய்தி பணிக்காக செலவு செய்யமாட்டார்கள், தங்களுடைய பாதுகாப்புக்காக அதை சேர்த்து வைப்பார்கள்; சிலர் சொத்துக்கள் வைத்திருப்பார்கள் அது நற்செய்திப் பணிக்கு வரவே கூடாது என்று பதுக்கி வைத்து விடுவார்கள். நமக்கு உண்டானது எல்லாம் யார் கொடுத்தது கடவுள் கொடுத்தது தான். கடவுளுடைய பணிக்காக அர்ப்பணித்து வாழ்வது பெரிய பாக்கியம். கடவுள் என்ன கொடுத்திருக்கிறாரோ அது எல்லாவற்றையும் கடவுளுடைய பணிக்காக பயன்படுத்த வேண்டும். ஆண்டவருடைய நற்செய்திக்காக பயன்படுத்த வேண்டும். சொத்து இருந்தால் அந்த சொத்தை பயன்படுத்துங்கள்; வீடு இருந்தால் அந்த வீட்டை பயன்படுத்துங்கள்; வாகனம் இருந்தால் அந்த வாகனத்தை பயன்படுத்துங்கள்; நிறைய பேர் அப்படி செய்வதில்லை அவர்கள் மட்டும் போய் சந்தித்துவிட்டு வருவார்கள். இது ஊழியமா இல்லை. **ஊழியம் என்றால் குடும்பத்தோடு ஈடுபடுவதுதான். நமக்கு உண்டான எல்லாவற்றையும் நற்செய்தி பணிக்காக பயன்படுத்துவதுதான் ஊழியம்.**

யோசித்துப் பாருங்கள் இதை சரியாக செய்கிறோமா அல்லது ஏதாவது ஒரு காரியத்தை பயன்படுத்த மாட்டேன் என்று வைத்திருக்கிறோமா! அப்படி இருந்தால், அதையும் ஒப்புக் கொடுங்கள். ஒப்புக் கொடுக்கும் போதுதான் ஆசீர்வாதம். அப்படி செய்யும்போது நமக்கு வரக்கூடிய எல்லாமே நற்செய்தி பரவுவதற்கு ஏதுவாகும். பள்ளிகள், கல்லூரிகள், ஆலயங்கள் எல்லாவற்றையும் நற்செய்தி பணிக்காக பயன்படுத்துங்கள். இன்று எத்தனையோ கிறிஸ்தவர்கள் முதல் கட்டளையிலேயே தவறி போய்விடுகிறார்கள். உண்மையான கடவுளை தேடவில்லை. நல்லநேரம், சாதி, சகுனம் போன்றவற்றைப் பார்க்கிறவர்களாக இருக்கிறார்கள். கடவுளை முன்னிலைப்படுத்தவில்லை; ஏனென்றால், நாம் வைத்திருக்கின்ற எல்லாவற்றையும் நற்செய்தி பணிக்காக பயன்படுத்தவில்லை மாறாக, வருமானத்திற்கு தான் பயன்படுத்துகிறோம்.

கடவுளுடைய நற்செய்தி பணிக்காக எல்லாவற்றையும் திறந்துவிட வேண்டும். அது துறவறமாக இருந்தாலும் சரி, இல்லறமாக இருந்தாலும் சரி நற்செய்தி பணிக்காக கொடுக்கவேண்டும். திருச்சபை வேறு எதற்காகவும் இல்லை ஆண்டவர் திருச்சபையை உருவாக்கியதே அவருடைய நற்செய்திப் பணியை செய்வதற்காகத்தான். அந்தப் பணிக்கு எல்லாரும் பயன்படவேண்டும்; எல்லாவற்றையும் பயன்படுத்த வேண்டும்; அது பயன்படவில்லை என்றால் அது இருந்து என்ன பிரயோஜனம் கடவுள் எதற்காக வைத்திருக்கிறாரோ அந்த வேலையை செய்யவில்லை என்று அர்த்தம். மற்றவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று பார்த்துக் கொண்டிருக்காமல் நாம் நம்முடைய வாழ்க்கையில் கடவுளுக்காக பயன்படுத்துகிறோமா; எப்படி பயன்படுத்தலாம் என்று பாருங்கள். வாய்ப்பு கிடைத்தால் பயன்படுத்துங்கள்; நற்செய்திப் பணியை எப்படி செய்யமுடியும் என்று பாருங்கள்; எல்லாவற்றையும் கடவுளுக்கு என்று பயன்படுத்துங்கள். நான் மட்டும் வருவேன் என்றால் அது சரியான நற்செய்திப் பணி இல்லை. நான் மட்டும் போவேன் மற்றவர்கள் எல்லாம் கொடுக்க வேண்டும்; காசெல்லாம் மற்றவர்கள் கொடுக்கவேண்டும் நான் எதையும் கொடுக்க மாட்டேன் என்பது தவறு. கடவுள் கொடுத்திருக்கிந்ற **எல்லாவற்றையும் கடவுள் பணிக்காக பயன்படுத்துவதற்கு எந்த நேரத்திலும் நாம் தயாராக இருக்க வேண்டும்.** அப்படி இல்லாமல் எங்கேயோ ஒரு காரியத்தில் நாம் தயங்கிக் கொண்டு இருக்கிறோம் என்றால் அதற்காக ஆண்டவரிடத்தில் மன்னிப்பு கேட்டு ஒப்புக் கொடுப்போம். எல்லாவற்றையும் கடவுளுக்காக பயன்படுத்த, முதலாவது நம் குடும்பத்தை பயன்படுத்த ஒப்புக் கொடுப்போம்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி

<u>25/04/2020</u>

மணிமுடியை யாரும் பறித்து கொள்ளபடி பார்த்துக் கொள்

திருவெளிப்பாடு 3:10 -11: மனவுறுதி தரும் என் வாக்கை நீ கடைப்பிடித்ததால், மண்ணுலகில் வாழ்வோரைச் சோதிக்க உலகு அனைத்தின்மீதும் வரவிருக்கும் சோதனைக் காலத்தில் நான் உன்னைக் காப்பாற்றுவேன். இதோ, விரைவில் வருகிறேன். உனக்குரிய மணிமுடியை வேறு யாரும் பறித்துக்கொள்ளாதபடி பார்த்துக் கொள். நீ பெற்றுக்கொண்டதை உறுதியாகப் பற்றிக்கொள்.

கடவுள் சோதனை காலத்தில் காப்பாற்றுகிறார், யாரை காப்பாற்றுகின்றார்? கடவுளுடைய வார்த்தையை படிக்கின்றவர்களை, மனப்பாடம் செய்கிறவர்களை, அதை போதிக்கின்றவர்களை அல்ல, அதை கடைப்பிடிக்கின்றவர்களையே காப்பாற்றுவேன் என்கின்றார்.

இந்த மண்ணுலகில் சோதனை வருகின்ற போது அவருடைய வார்த்தையை கடைப்பிடிக்கின்றவர்களை காப்பாற்றுவேன் என்கின்றார் ஆண்டவர். இப்படிப்பட்ட சோதனை காலத்தில் தேவன் காப்பாற்றுகிறார்; யாரை காப்பாற்றுகிறார்? தங்கள் விருப்பத்தின் படி செய்யாமல், தேவனுடைய வார்த்தைகளை கடைப்பிடிப்பவர்களை காப்பாற்றுகிறார். தேவனுடைய வசனத்தின் படி செய்கிறவர்களை காப்பாற்றுகிறார். தேவனுடைய வசனத்தின் படி நாம் செய்ய வேண்டுமானால், நம்முடைய விருப்பத்தை விட வேண்டும். அப்படி வசனத்தின் படி செய்கிறவர்களை தான் அவர் காப்பாற்றுகிறார்.

“திருவெளிப்பாடு 3:11 ல் பார்க்கிறோம் உனக்குரிய மணிமுடியை வேறு யாரும் பறித்துக்கொள்ளாதபடி பார்த்துக் கொள். நீ பெற்றுக்கொண்டதை உறுதியாகப் பற்றிக்கொள்”.

கடவுள் இங்கு இரண்டு காரியங்களை குறிப்பிடுகின்றார்,

- தேவனுடைய வார்த்தையை கடைப்பிடிக்கிறவர்களை உலகம் முழுவதும் வரக்கூடிய சோதனையிலிருந்து ஆண்டவர் அவர்களை காப்பாற்றுகிறார்.
- உனக்குரியதை வேறு யாரும் பறித்துக்கொள்ளாதபடி பார்த்துக் கொள். நீ பெற்றுக்கொண்டதை உறுதியாகப்

பற்றிக்கொள் என்கிறார் ஆண்டவர்.

ஆண்டவர் அநேகருக்கு இந்த அழைப்பை கொடுக்கின்றார்.

கட்டளைகளை கடைப்பிடிப்பதே அன்பு
யோவான் 14:21-23 : என் கட்டளைகளை ஏற்றுக் கடைப்பிடிப்பவர் என்மீது அன்பு கொண்டுள்ளார். என்மீது அன்பு கொள்பவர்மீது தந்தையும் அன்பு கொள்வார். நானும் அவர் மீது அன்பு கொண்டு அவருக்கு என்னை வெளிப்படுத்துவேன்". யூதா - இஸ்காரியோத்து யூதாசு அல்ல, மற்றவர் - அவரிடம், "ஆண்டவரே, நீர் உம்மை உலகிற்கு வெளிப்படுத்தாமல் எங்களுக்கு வெளிப்படுத்தப் போவதாகச் சொல்கிறீரே, ஏன்?" என்று கேட்டார்.அதற்கு இயேசு பின்வருமாறு கூறினார்; "என்மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பார். என் தந்தையும் அவர்மீது அன்பு கொள்வார். நாங்கள் அவரிடம் வந்து அவருடன் குடிகொள்வோம்.

கடவுளுடைய கட்டளைகளை கடைப்பிடிப்பதுதான் உண்மையான அன்பு. அத்தகைய அன்புடையவர்களிடம் கடவுள் வந்து தங்குகிறார். தங்குவது மட்டுமல்லாமல், எல்லாருக்கும் வரக்கூடிய சோதனைகளின் மத்தியில் கடவுளுடைய வார்த்தையை கடைப்பிடிக்கிறவர்களை அவர் பாதுகாக்கின்றார். இந்த அன்புடையவர்களையே மண்ணுலகின் எல்லா சோதனைகளிலும் இருந்து காப்பாற்றுகிறார். நம் விருப்பத்தை முன்பாக வைத்து வாழாமல் தேவனுடைய விருப்பத்தை முன்பாக வைத்து நாம் வாழ வேண்டும்.

“இதோ சீக்கிரமாய் வருகின்றேன், உனக்குரிய மணிமுடியை வேறு யாரும் பறித்து விடாதபடி காத்துக்கொள்” என்கின்றார் ஆண்டவர். தாவீது கூறுவார், "எனக்குரியதை எனக்கென வைத்திருப்பவர் நீரே". நமக்குரியதை நாம் பெற்று கொள்ள வேண்டும். ஆனால், இங்கு நமக்குரிய மணிமுடியை எப்படி மற்றவர் பெற்றுக்கொள்ள முடியும் அது சாத்தியமா என தோன்றலாம், அது சாத்தியம் தான். ஒருவருக்கு உள்ளதை இன்னொருவர் எடுத்து கொள்ள முடியுமா? முடியும் தான். எப்பொழுது ஒருவர் தனது அழைப்பில் தகுதியில்லாதவராக, தங்களை முழுவதும் அர்ப்பணிக்காதவராக, அசட்டை செய்து கொண்டு இருப்பார்களானால், சுயநலம் உள்ளவர்களாக இருப்பார்களானால், தேவனுடைய கட்டளைகளை முக்கியத்துவம்

கொடுக்காமல் அசட்டையாக செய்வார்களேயானால் இதற்கு வாய்ப்பு உண்டு. ஆகவே தான் “உனக்குரிய மணிமுடியை வேறு யாரும் பறித்து விடாதபடி காத்துக்கொள்” என்கின்றார் ஆண்டவர்.

சவுல்

சாதாரண மனிதனாக, கழுதையை தேடிப்போன சவுல் என்ற மனிதனை ஆண்டவர் இஸ்ரயேல் இனத்திற்கு அரசனாக உயர்த்தினார். ஒரு கழுதையை தேடி தான் சவுல் போனார் ஆனால், தேவனோ இஸ்ரவேல் குலத்திற்கே அரசனாக அவரை தேர்ந்தெடுத்து உயர்த்தினார். அப்படி உயர்த்தப்பட்ட சவுல் கடவுளுடைய கட்டளைகளை நிலையாய் பின்பற்றாமல் மணிமுடியை இழக்கின்றார். “அமலேக்கியரின் மன்னன் ஆகாகையும் அவர்கள் உடைமைகள் அனைத்தையும் அழித்தொழியும்” என ஆண்டவர் கட்டளையிட்டார். ஆனால், சவுல் தேவனுடைய கட்டளைக்கு முழுவதுமாக கீழ்ப்படியவில்லை, ஆகாகைக் கொல்லாமல் விட்டார். மேலும் ஆடு மாடுகளில் முதல் தரமானவைகளையும் இரண்டாம் தரமானவைகளையும் ஆட்டுக் குட்டிகளையும், நல்லவை அனைத்தையும் அழிக்காமல் கூட்டி கொண்டு வந்தார். மற்ற எல்லாவற்றையும் அழித்து போட்டார், ஆண்டருடைய கட்டளையையும் மீறினார். ஆண்டவருடைய பார்வையிலே அது அவருக்கு கடினமாகவும் விசனமாகவும் இருந்தது. அந்த இரவே ஆண்டவர் சாமுவேலிடம் பேசுகிறார், 1 சாமுவேல் 15:10 ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கின்றோம், சவுல் என்னுடைய கட்டளைகளை மீறி செயல்பட்டான், சவுலை அரசனாக்கியதற்கு நான் மனம் வருந்துகிறேன் என்றார். இதை கேட்ட சாமுவேல் இரவு முழுவதும் சவுலுக்காக ஜெபிக்கிறார்.

1 சாமுவேல் 16 - 1ஆண்டவர் சாமுவேலை நோக்கி, "இஸ்ரயேலின் அரசராகச் சவுல் இல்லாதவாறு நான் அவனைப் புறக்கணித்ததை நீ அறிந்திருந்தும், நீ எவ்வளவு காலம் அவனுக்காகத் துக்கம் கொண்டாடுவாய்;? உன்னிடமுள்ள கொம்பை எண்ணெயால் நிரப்பிக் கொண்டு போ. பெத்லகேமைச் சார்ந்த ஈசாயிடம் உன்னை அனுப்புகிறேன்; ஏனெனில் அவன் புதல்வருள் ஒருவனை அரசனாகத் தேர்ந்துள்ளேன்" என்றார்.

சவுல் அரசனாக தான் இருந்தான் ஆனாலும் ஆண்டவர் அவனை தள்ளி, அவனுடைய அரச மரியாதையை தாவீதுக்கு கொடுத்தார். தேவன், சவுலை அரசனாக்கிய பிறகு சவுல் அந்த அழைப்புக்கு ஏற்ற படி நடக்கவில்லை, கனத்தையும் கொடுக்கவில்லை, தேவனுடைய கட்டளையை அவன் பொருட்படுத்தவில்லை, அதை தீவிரமாக யோசிக்கவும் இல்லை, தான் போகிற வழி தவறானது என அவன் கண்டுபிடிக்கவில்லை. இதனால் கடைசியாக நடந்தது சவுலுக்குரிய மணிமுடியை எடுத்து, தேவன் தாவீதுக்கு கொடுக்கிறார். சவுலுக்குரிய அரச பதவியை தாவீதுக்கு கொடுக்கிறார். அதனுடைய பொருள் என்னவென்றால், சவுல் ஆண்டவரின் கட்டளைக்கு முழுவதும் கீழ்ப்படிந்து நடந்திருப்பரானால், சவுலுடைய மகனை ஆண்டவர் அரசனாக்கி இருப்பார். ஆனால் சவுல் கீழ்ப்படியாமல் போனதால் சவுலுக்கும் அவன் குடும்பத்தாருக்கும் வர வேண்டிய ஆசீர்வாதங்கள் தாவீதுக்கும் அவன் குடும்பத்தாருக்கும் போனது. இதை தான் ஆண்டவர் கூறுகின்றார், “இதோ விரைவில் வருவேன் உனக்குரிய மணிமுடியை வேறு யாரும் பறித்து கொள்ளாதபடி காத்துக்கொள்; நீ பெற்று கொண்டதை உறுதியாக பற்றிக்கொள்”.

தேவன் நமக்கு ஒரு அழைப்பை தரும் போது, ஆசீர்வாதத்தையும், அபிஷேகத்தையும் சேர்த்து தான் கொடுக்கிறார். நாம் அந்த அழைப்பில் அலட்சியமாக இருக்கும் பொழுது அந்த ஆசீர்வாதத்தையும், அபிஷேகத்தையும் இன்னொருவர் பறித்து கொண்டு போய் விடுகிறார். நிறைய பேர் கடவுளுடைய வார்த்தையை ஒழுங்காக காத்து கொள்ளாததினாலே, சுயநலமாக இருப்பதினால் மணிமுடியை இழந்து போகிறார்கள்.

ஏசா

ஏசாவும் விவிலியத்தில் இதையே தான் செய்கிறார். ஆண்டவர் இஸ்ரயேலிலே தலைப்பேற்றை ஆசீர்வதிக்கின்றார். ஈசாக்கும், தன் தந்தை ஆபிராகாமிடம், தான் பெற்ற ஆசீரை தன் தலைப்பிள்ளை ஏசாவுக்கு அளிக்க அவனை அழைத்த போது, இதை கேட்டு கொண்டிருந்த ரெபெக்காள் சமையல் செய்து கொடுத்து, தந்திரமாக அந்த ஆசீரை இளைய மகன் யாக்கோபு பெறும் படி செய்கிறார். யாக்கோபுக்கு அந்த ஆசீர்வாதம் வந்த காரணம், ஏசா தன் இளம் வயதிலேயே வேட்டை ஆடி களைத்து வந்த போது யாக்கோபு கூழை

கிண்டி கொண்டிருக்கிறான். ஏசாவுக்கு பசி அதிகம், ஆகையினாலே, தம்பி யாக்கோபினிடத்தில் "எனக்கு கூழை கொடு நான் பசியில் கிடக்கிறேன்" என்று கேட்கிறான். “அப்படி என்றால், உன்னுடைய தலைப்பேற்று ஆசீர்வாதத்தை எனக்கு கொடுத்துவிடு” என்கிறான் யாக்கோபு. “பசியினால் நான் சாகிறேன், எனக்கு கூழை கொடு, நீ வேண்டுமானால் தலைப்பேற்று ஆசீர்வாதத்தை எடுத்து கொள்” என்கிறான் ஏசா. கூழுக்காய் தன் ஆசீர்வாதத்தை விற்று விடுகிறான். யாக்கோபு அந்த மேன்மையான ஆசீர்வாதத்தை விரும்பினான், இது ஒரு பெரிய ஆசீர்வாதம் இது எனக்கு வேண்டும் என்று அந்த ஆசீர்வாதத்தை கனப்படுத்தினான். அதற்காக தான் கிண்டி வைத்திருந்த கூழையும் கொடுக்க தயாராக இருந்தான், தன்னுடைய சவுகரியங்களையும் இழக்க தயாராக இருந்தான். அந்த ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்வதற்கு எந்த தியாகத்தையும் செய்ய அவன் தயாராக இருந்தான். ஆனால் ஏசாவோ அதன் முக்கியத்துவத்தை உணரவில்லை, அலட்சியமாய் இருந்தான். தேவன் தனக்கென வைத்திருந்த ஆசீர்வாதத்தின் மேல் முழு ஆர்வம், முழு அக்கறை இல்லை. அதனாலே அவன் சுயநலமாய் நடந்தான். ஆகையினால், ஏசாவுக்கு வர வேண்டிய ஆசீர்வாதம், யாக்கோபுக்கு போய் விடுகிறது. இதை தான் ஆண்டவர் இங்கே சொல்கிறார், “உனக்குரிய மணிமுடியை வேறு யாரும் பறித்து விடாதபடி காத்துக் கொள்”.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, கடவுள் நம்மை அழைக்கும் பொழுது, அவர் நம்மை அபிஷேகிக்கிறார். நமக்கென்று ஒரு மேன்மையான ஆசீர்வாதத்தை வைத்திருக்கிறார். ஆனால் அதை இலவசமாக, அசட்டையாக, சுயநலத்தோடு இருப்பவர்களுக்கு கொடுப்பதில்லை. தன்னை மறுத்து தேவனை பின்பற்றுகிறவர்களுக்கே கொடுக்கிறார். சிலுவை சுமந்தாலும் இயேசுவை பின் செல்ல வேண்டுமென்ற வாஞ்சை உள்ளவர்களுக்கு தான் கொடுக்கிறார். தேவன் இலவசமாய் கொடுத்த போது சவுல் அதை காப்பற்றிக் கொள்ளவில்லை, ஆண்டவருடைய கட்டளைகளை முழுவதுமாக கடைப்பிடிக்கவில்லை. அநேகர் இன்றைக்கும் ஆண்டவருடைய கட்டளைகளை முழுவதுமாக கடைபிடிக்காமல், அந்த மணிமுடியை இழந்து விடுகிறார்கள்.

சாலமோன்

சாலமோன் பாவம் செய்ததினால் சாலமோனுடைய ஆட்சி பிரிக்கப்பட்டது. சாலமோன் வேற்று தெய்வ வழிபாடு செய்ததினாலே, அவனுடைய அரசு முழுமையாய் அவன் மகனுக்கு கிடைக்காமல், வெறும் இரண்டு குலங்கள் மட்டும் அவனுக்கு கிடைத்தது. அந்த மீதி பத்து குலங்கள் எரொபவாமிற்கு கிடைத்தது. ஆயினும் எரொபவாமும் இஸ்ரயேல் மக்கள் சிலைகளை வழிபட அனுமதித்ததால், அவனுக்கு கிடைத்த ஆசீர் அவன் சந்ததிக்கு கிடைக்காமல் போனது. அவனும் அவனுடைய சந்ததியாரும் இல்லாமல் போயினர்.

மணிமுடி! கடவுளின் மாட்சி

இன்றைக்கு நம்முடைய வாழக்கையை யோசித்து பார்ப்போம். ஆண்டவர் இன்றைக்கு அந்த மணிமுடியை உறுதியாக பற்றிக்கொள் என்கிறார். உறுதியாக பற்றுகொள்ளுதல் என்றால் இந்த உலகத்தில் நமக்கு நிறைய சோதனைகளும், போராட்டங்களும் வரும், அதை உறுதியோடு எதிர்த்து நின்று மணிமுடியை காத்துக்கொள் என்கிறார் ஆண்டவர். அந்த மணிமுடியை முன்னாலே வைத்து மற்ற எல்லாவற்றையும் பின்னுக்கு தள்ளிவிடு. அதை உறுதியாக பற்றி கொள் என்றால், அதை நம்மிடமிருந்து எடுப்பதற்கு பல போராட்டங்கள் பல சோதனைகள் நமக்கு வரக்கூடும். அப்படிப்பட்ட சோதனைகளிலே, போராட்டங்களிலே, நெருக்கடிகளிலே நமக்கென்று தேவன் வைத்திருக்கின்ற மணிமுடியை உறுதியாய் பற்றி கொள்ள வேண்டும். எதை இழந்தாலும் அதை இழந்து விடக் கூடாது. தேவன் நமக்கு வைத்திருக்கின்ற அழைப்பை, அபிஷேகத்தை, மணிமுடியை காத்துக் கொள்ள வேண்டும். கடவுள் உனக்கு தருகின்ற ஆசீர்வாதத்தை இழந்து விடாதே. நமக்காக வைக்கப்பட்டிருக்கும் மணிமுடி என்பது மகிமை ஆனது. ஏசா அந்த மணிமுடியை கூழுக்காக விற்றது போல, நீயும் இந்த உலகத்தின் சின்ன சின்ன ஆசைகளுக்காக, சுயநலத்திற்காக இழந்து விடாதே. சாலமோன் கூட ஆரம்ப நாட்களில் ஆர்வமாக இருந்தான். நாட்கள் செல்ல செல்ல ஆர்வம் குறைந்தது, சிலைகளை வழிபடக் கூட சென்று விட்டான். நாமும் அந்த ஆர்வம் குறைந்து விடாமல் காத்துக்கொள்ள வேண்டும். சவுலும், கடவுளுடைய பெரும்பாலான கட்டளைகளை கடைப்பிடித்தான். ஆனால் சில கட்டளைகளை அசட்டை செய்தான்.

நீயும் அப்படி சில காரியங்களில் அசட்டையாக இருந்து மணிமுடியை இழந்து விடாதே. ஒரு மனிதனுக்கு மணிமுடி சூட்டுவது என்பது அவனை மாட்சிப்படுத்தவே. ஆண்டவர் உனக்கும் அந்த மாட்சியை கொடுக்க விரும்புகிறார். நீயும் இந்த உலகத்தின் சின்ன சின்ன ஆசைகளுக்காக, சண்டைகளுக்காக, சுயநலத்திற்காக, சுய இச்சைகளுக்காக ஆண்டவர் உனக்கென வைத்திருக்கின்ற மாட்சியை, மணிமுடியை இழந்து விடாதே. இன்று நாம் யோசித்து பார்ப்போம். நாம் என்ன பாடுகள் அனுபவித்தாலும், எந்த காரணத்திற்காகவும், என்ன சிலுவை நாம் சுமந்தாலும் அந்த மாட்சியை, மணிமுடியை இழந்து விடக்கூடாது என்பதற்கு ஜெபிப்போம்! ஒப்புக்கொடுப்போம்! ஆமென்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!

27/05/2020

மனத்தாழ்மை

யாக்கோபு 4:10 ஆண்டவர் முன் உங்களைத் தாழ்த்துங்கள்; அவர் உங்களை உயர்த்துவார்.

கடவுளுக்கு முன்பாக நம்மை தாழ்த்த வேண்டும் அப்படி தாழ்த்தும் போது ஆண்டவர் நம்மை உயர்த்துகிறவராக இருக்கிறார். வசதியாக இருக்கிறவர்கள் அல்லது உயர்ந்த பதவியில் இருப்பவர்கள் தங்களை தாழ்த்த முடியாமல் உயர்ந்தவர்களாக காட்டிக் கொள்கிறார்கள். நாம் எவ்வளவு பெரிய மனிதர்களாக இருந்தாலும் தேவனுக்கு முன்பாக ஒன்றும் இல்லை என்பதை அறிய வேண்டும். அப்படி கடவுள் முன்பாக நம்மைத் தாழ்த்தும் போது தான் தேவனுடைய கரம் இறங்கி வந்து நம்மை உயர்த்தக் கூடியதாக இருக்கிறது. கடவுளுக்கு முன்பாக அப்படி உயர்த்தியவர்களை எல்லாம் கடவுள் தாழ்த்தியிருக்கிறார். ஆகையினாலே தான் ஆண்டவர் முன்பாக நம்மை தாழ்த்த வேண்டும்.

நல்ல கள்ளனின் தாழ்ச்சி

உதாரணமாக விவிலியத்தில் **லூக்கா 23:39-43**

சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த குற்றவாளிகளுள் ஒருவன், "நீ மெசியா தானே! உன்னையும் எங்களையும் காப்பாற்று" என்று அவரைப் பழித்துரைத்தான். ஆனால் மற்றவன் அவனைக் கடிந்து கொண்டு, "கடவுளுக்கு நீ அஞ்சுவதில்லையா? நீயும் அதே தீர்ப்புக்குத் தானே உள்ளாகி இருக்கிறாய். நாம் தண்டிக்கப்படுவது முறையே. நம் செயல்களுக்கேற்ற தண்டனையை நாம் பெறுகிறோம். இவர் ஒரு குற்றமும் செய்யவில்லையே!" என்று பதிலுரைத்தான். பின்பு அவன், "இயேசுவே, நீர் ஆட்சியுரிமை பெற்று வரும் போது என்னை நினைவிற் கொள்ளும்" என்றான். அதற்கு இயேசு அவனிடம், "நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்" என்றார்.

இரண்டு குற்றவாளிகள் இயேசுவின் இருபக்கங்களிலும் அறையப்பட்டிருந்தார்கள். அதில் ஒருவன் சொல்கிறான் "நீ மெசியா

தானே சிலுவையிலிருந்து இறங்கி வந்து உன்னையும் காப்பாற்று எங்களையும் காப்பாற்று" என்று பழித்தான் என போடப்பட்டிருக்கிறது. "சிலுவையிலிருந்து இறக்கி விடு; உன்னையும் காப்பாற்றிக் கொள்" இப்படி சொன்னதைத்தான் பழித்தான் என்று போடப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னொரு குற்றவாளி அவனைக் கடிந்து கொண்டு "கடவுளுக்கு பயப்படுகிறதில்லையா **நாம் தண்டிக்கப்படுவது முறையே**" என்று சொல்கிறான். அதற்கு அர்த்தம் என்ன?

நாம் நிறைய தவறுகள் செய்திருக்கிறோம் அதனால் நாம் தண்டனைக்கு உரியவர்கள் தான். பாடுகள் கஷ்டங்களுக்கு உரியவர்கள் தான் என்று சொல்கிறான். இதுதான் தாழ்ச்சி குற்றவாளிகளில் கூட ஒருவன் ஆண்டவர் முன் தன்னை தாழ்த்துகிறான். சிலுவையில் கூட தன்னை தாழ்த்துகிறான். அவனும் சிலுவையில் அறையப்பட்டவனாக வேதனைபட்டவனாக இருக்கிறான். யூதர்களுடைய வழக்கப்படி வெள்ளிக்கிழமை மாலை 6 மணியிலிருந்து சனிக்கிழமை மாலை 6 மணி வரை ஓய்வு நாள்; ஓய்வுநாள் முடிவதற்கு முன்பாக அவர்கள் சடலங்களை சிலுவையிலிருந்து இறக்கி விடுவார்கள். அவர்கள் உயிரோடு இருந்தால் கை கால்களை உடைத்து அவர்களை கொன்று சிலுவையிலிருந்து இறக்கி அடக்கம் செய்து விடுவார்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில் அவனுக்கு அதுதான் நடக்கப் போகிறது. அந்த சூழ்நிலையில் தான் அந்தக் குற்றவாளி சொல்கிறான் நாம் தண்டிக்கப்படுவது முறையே.

நாமெல்லாம் எவ்வளவோ தவறுகளை செய்திருக்கிறோம்; எவ்வளவோ பாவங்களை செய்திருக்கிறோம். **தேவனோ நம் பாவங்களுக்கு ஏற்ப நம்மை நடத்துவதில்லை தண்டிப்பதில்லை.** ஆனால், அவர் நமக்கு வர வேண்டிய பெரும்பாலான துன்பங்களை சுமந்து கொண்டு கொஞ்சம் பாடுகளை மட்டும் நமக்கு அனுமதிக்கிறார். இப்படிப்பட்ட நேரத்தில் தாழ்ச்சியோடு தான் அவருடைய சமூகத்தில் நிற்க வேண்டுமே தவிர ஆணவம் பிடித்தவர்களாக எனக்கு ஏன் என்று கேட்க கூடாது. இந்த குற்றவாளியை பாருங்கள் அவன் தேவனுக்கு முன்பாக முழுமையாக தன்னை தாழ்த்துகிறான். நாம் தண்டிக்கப்படுவது முறையானது. அவர் ஒரு குற்றமும் அறியாதவர் நாமோ தண்டனைக்கு உரியவர்கள் என்று சொன்னான்.

அப்படி சொல்லி விட்டுத்தான் ஆண்டவரிடத்திலே கேட்டான் “ஆண்டவரே நீர் உம்முடைய ஆட்சி உரிமையிலே வரும் பொழுது என்னை நினைவு கூறும்”. மகிமையோடு வானதூதர்களோடு வரும் பொழுது நியாயம் தீர்க்க வரும் போது என்னை நினைவு கூறும் என்று கேட்டான். உடனே ஆண்டவர் என்ன செய்கிறார்? அவன் தன்னை தாழ்த்தியதை பார்த்த உடனே ஆண்டவர் அவன் பக்கமாக திரும்புகிறார்.

யோசித்துப் பாருங்கள் சிலுவையிலே தொங்கும் பொழுது தலை முழுவதும் முள்முடி கழுத்து வரைக்கும் அந்த முட்கள் நிறைந்திருந்தது அவர் தலையைத் திருப்புவது மிக கடினம். உடல் முழுவதும் காயங்கள் ஆனாலும் அந்த வேதனையையும் சகித்துக்கொண்டு அந்த குற்றவாளியின் பக்கம் திரும்பிப் பார்த்து “இன்றே என்னோடு வான் வீட்டில் இருப்பாய்” என்று சொல்லி ஒரு பெரிய ஆசீர்வாதத்தை கொடுக்கிறார். அந்த நேரத்திலே அவனது உள்ளம் ஒரு பெரிய சமாதானத்தினால் நிரம்பியது. அவனுடைய பாவங்களுக்கெல்லாம் மன்னிப்பு பெற்றவன் ஆனான். குற்றவாளிகளில் “உன்னையும் இறக்கி விடு என்னையும் இறக்கி விடு” என்று கேட்டவனை திரும்பிப் பார்க்கவும் இல்லை செவிகொடுக்கவும் இல்லை. இதைத்தான் வேதம் சொல்கிறது கடவுள் முன்பாக உங்களைத் தாழ்த்துங்கள் அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார். தேவனுக்கு முன்பாக நாம் நம்மை தாழ்த்த வேண்டும் அப்பொழுதுதான் ஆண்டவர் நம்மை உயர்த்தக்கூடியவராக இருக்கிறார். பல நேரங்களில் நாம் நம்மைத் தாழ்த்துவதற்கு முடியாமல் போகிறது. அதனால்தான் ஆண்டவருடைய கிருபையை பெற்றுக்கொள்ள முடியாமல் போகிறது.

இயேசு நம்முடைய குற்றங்களுக்காக அடிக்கப்பட்டார்

உதாரணமாக நீங்கள் இங்கிருந்து ஜெர்மன் தேசத்திற்கு போகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம் அந்த நாட்டினுடைய சட்ட திட்டங்கள் எல்லாம் உங்களுக்கு தெரியாமல் சட்டத்தை மீறி விடுகிறீர்கள். அதனால் அந்த நாட்டின் சட்டத்தின்படி100 சவுக்கடி உங்களுக்கு கொடுக்க வேண்டும். அப்படி சவுக்கடிக்கு உங்களை தயார்ப்படுத்திக் கொண்டிருக்கும் போது அங்கே ஒரு பெரியவர் வந்து உங்களிடம் உங்களைப் பார்த்து, “பாவமாக இருக்கிறது தெரியாமல்

செய்திருப்பீர்கள் என்று 95 சவுக்கடிகளை நான் வாங்கிக் கொள்கிறேன்; மீதி 5 அடிகளை மட்டும் நீங்கள் வாங்கிக் கொள்ளுங்கள்" என்கிறார் என்று வைத்துக் கொள்வோம். 95 அடி அவர் மேல் விழுகிறது 5 அடி மட்டும் உங்கள் மேல் விழுகிறது. அந்த 5 அடியே உங்களுக்கு தாங்க முடியாததாக இருந்தால் நீங்கள் வெளியே வந்து அந்த பெரியவரைப் பார்த்து என்ன சொல்வீர்கள் நிச்சயமாய் நன்றி சொல்வீர்கள். "5 அடியே என்னால் தாங்க முடியவில்லையே! 95அடியை நீங்கள் எப்படி தாங்கினீர்கள்? தவறு செய்தது நான் தான்" என்று கைகூப்பி நன்றி சொல்வோம். ஆனால் அந்த முதியவரைப் பார்த்து "எனக்கு ஏன் இந்த 5 அடி அதையும் நீங்களே வாங்கிக் கொண்டிருக்கலாமே" என்று சொன்னால் அது ஒரு பெரிய ஆணவம். நாம் செய்த தவறுகளைப் பார்க்கும் பொழுது நாம் 100 அடிக்கும் தகுதியானவர்கள் தான்;

நாம் எல்லா வேதனைக்கும் தண்டனைக்கும் தகுதியானவர்கள் தான். ஆனால் நம் மேல் விழக்கூடிய தண்டனையை இயேசு சிலுவையிலே தம் மேல் சுமந்து கொண்டார். 5 அடி மட்டும் தான் நாம் வாங்கும் படி விட்டுக் கொடுத்துவிட்டார். ஆனால் அதைக்கூட தாங்க முடியாமல் எனக்கு ஏன் என்று கேட்போம் என்றால் அதுதான் நம்மை கடவுள் முன் தாழ்த்த முடியாத நிலை. கடவுள் முன்பாக நம்மைப் பெருமைப்படுத்த கூடிய ஒரு காரியம். நாம் தேவனுக்கு முன்பாக தாழ்த்தி என்ன சொல்லி இருக்க வேண்டும், "ஆண்டவரே நான் பட வேண்டிய எல்லா வேதனைகளையும் சிலுவையிலே நீர் சுமந்து கொண்டீரே கொஞ்சம் தானே கொடுத்திருக்கிறீர்; இதையே தாங்குவதற்கு இவ்வளவு கஷ்டப்படுகிறேனே! என் சுமைகளை எல்லாம் நீர் சுமந்து கொண்டீரே; நன்றி" என்று சொல்லி இருக்க வேண்டும். ஆனால் நிறைய பேர் நன்றி சொல்வதற்கு பதிலாக எனக்கு ஏன் என்று பெருமை பிடித்தவர்களாக கேட்பதினாலே கடவுளுடைய கிருபையை பெற்றுக் கொள்ள முடியாமல் போய்விடுகிறது. **கடவுள் பேரிரக்கமும் அன்பும் உள்ளவர். ஆனால் அவருடைய இரக்கமும் அன்பும் யாருக்கு கிடைக்கும் என்றால் தேவனுக்கு முன்பாக தன்னை தாழ்த்துபவர்களுக்கு தான் கிடைக்கும்.**

கடவுள் அருவருக்கும் தாழ்ச்சி

சில பேர் என்ன நினைக்கிறார்கள் ஆண்டவருக்கு முன்பாக நெடுஞ்சாண்கிடையாக விழுந்து விட்டால் நம்மை தாழ்த்துகிறோம் என்று நினைக்கிறார்கள். அது தாழ்ச்சி இல்லை. தாழ்ச்சி என்பது இருதயத்திலே நாம் நம்மை தாழ்த்துவது; கடவுளுக்கு முன்பாக நாம் ஒன்றும் இல்லை; நாம் ஒரு தகுதியும் இல்லாதவர்கள் என்று நம்முடைய குறைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆண்டவருக்கு முன்பாக நிற்கும் போது நிறைய பேர் அந்த பரிசேயனைப் போல தான் ஜெபிக்கிறார்கள். அந்த பரிசேயன் எப்படி ஜெபித்தான் “கடவுளே அந்த ஆயக்காரன் போல் இல்லாததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன்; பத்தில் ஒரு பங்கு உமக்கு காணிக்கையாக கொடுக்கிறேன்; வாரத்திற்கு இரண்டு நாள் நோன்பிருந்து ஜெபிக்கிறேன்” என்று தான் செய்த காரியங்களை எல்லாம் பட்டியலிடுகிறான்.

இன்றைக்கும் நிறைய பேர் இப்படி ஜெபிக்கிறார்கள், “வாரம் தவறாமல் நான் ஆலயத்துக்குச் செல்கிறேன்; திங்கட்கிழமை இங்கே போவேன்; சனிக்கிழமை இங்கே போவேன்; காலையிலேயே திருப்பலிக்கு போய்விடுவேன்; மாலையிலே ஜெபமாலை சொல்லுவேன்; தினமும் விவிலியத்தில் நான்கு அதிகாரம் படித்துவிடுவேன்” என்று தாம் செய்கிற காரியங்களை குறித்து பெருமை பாராட்டுகிறவர்களாக இருக்கிறார்கள். ஆனால் விவிலியம் என்ன சொல்கிறதென்றால் **நாம் செய்யக்கூடிய காரியங்கள் எல்லாம் கடவுளுக்கு முன்பாக அழுக்கும் கந்தையுமாக இருக்கிறது. நம்முடைய செயல்கள் நீதியான செயல்கள் அல்ல அதை புரிந்து கொள்ள வேண்டும்.**

நாம் ஜெபிக்கும் போது கூட எத்தனையோ பராக்குகளுக்கு இடம் கொடுக்கிறோம். உண்மையாக ஜெபித்ததாக நாம் சொல்ல முடியாது. பல நற்காரியங்களை நாம் செய்தாலும் அதில்கூட எவ்வளவோ குறைபாடுகள் இருக்கிறது. அப்படி இருக்கும் போது நம்முடைய செயல்களை குறித்து நாம் பெருமை பாராட்டுவோமானால் அது தேவனுக்கு முன்பாக அருவருப்பாக இருக்கிறது. ஆண்டவர் உங்களை உயர்த்த வேண்டுமானால் ஆண்டவருக்கு முன்பாக உங்களை தாழ்த்துங்கள். சில பேர் இன்னும் பெருமையாக சொல்வார்கள், “ஆலயத்திற்கு நான் தான் இதை வாங்கி கொடுத்தேன்; ஆலயம் கட்டுவதற்கு நான் இவ்வளவு பொருளை கொடுத்தேன்; மின்விசிறி மின்விளக்கு (Fan, Light) இதெல்லாம்

வாங்கிக் கொடுத்தேன்” என்று பெருமையாக பேசுவார்கள். அப்படி எல்லாம் நாம் பேசினால் தேவனுக்கு முன்பாக நம்மை உயர்த்துகிறோம் என்று பொருள். இன்னும் சிலபேர் எதையாவது கொடுத்தால் அதில் அவர்கள் பெயர் முதல்கொண்டு எழுதிதான் ஆலயத்திற்கு அர்ப்பணிப்பார்கள் அதில் அவர்கள் பெயர் எப்போதும் இருந்து கொண்டே இருக்கும். சிலர் “நான் பத்து வருடமாக ஜெபக்குழுவில் இருக்கிறேன்; 20 வருடமாக பாடல் குழுவில் இருக்கிறேன்; நான் பக்த சபையில் இருக்கிறேன்” என்று இதையெல்லாம் பெருமையாக சொல்வார்கள். எத்தனை வருடங்கள் நாம் அதில் இருக்கிறோம் என்பது முக்கியமே அல்ல. ஆனால், தேவனுக்கு முன்பாக நாம் எவ்வளவு தூய்மையாக இருக்கிறோம்; எவ்வளவு தாழ்மையுடன் நடந்து கொள்கிறோம் என்பதுதான் முக்கியம். இப்படி எல்லாம் நாம் நம்மை உயர்த்துவதை விட்டுவிட்டு நாம் உண்மையாகவே தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்துவோமானால் தேவன் நம்மை உயர்த்துவார். ஆனால், அகங்காரிகளாக இப்படி தங்களை உயர்த்துகிறவர்களை ஆண்டவர் எதிர்த்து நிற்கிறார் என்று தான் விவிலியத்தில் வாசிக்கிறோம். அதனாலேதான் ஆண்டவர் சொல்கிறார், “ஆண்டவருக்கு முன்பாக உங்களை தாழ்த்துங்கள்”.

கடவுள் விரும்பக்கூடிய தாழ்ச்சி

தாழ்த்துங்கள் என்றால் தேவசமூகத்திலே நம்முடைய குறைகளை எல்லாம் ஒத்துக்கொண்டவர்களாக இருக்க வேண்டும். ஆயக்காரன் அதைத்தான் செய்தான் “ஆண்டவரே நான் பாவி உம்முடைய சமூகத்திலே நிற்க தகுதியற்றவன்” என்று சொன்னான். தன்னுடைய குறைகளை ஒத்துக்கொள்ளக்கூடியவனாக இருந்தான். தன்னைத் தாழ்த்தக் கூடியவனாக இருந்தான். “அவன் நீதிமானாக நேர்மையாளனாக ஆலயத்தை விட்டு திரும்பி போகிறான்” என்று ஆண்டவர் சொல்கிறார். சிலரிடத்தில் நல்ல குணங்கள் இருக்கலாம் நல்ல செயல்களைச் செய்யலாம் அதுவே நமக்குள்ளே ஒரு பெருமையைக் கொண்டு வந்து விடக்கூடாது. அந்த செயல்கள் எல்லாமே நம்மை பெருமைப்படுத்துவதற்கு பதிலாக, தேவ சமூகத்திலே அந்த செயல்களை கொண்டு வராமல் நம்மை தாழ்த்த வேண்டும். இன்று அநேகர் இப்படித் தாழ்த்தாததாலே கடவுள்

அவர்களை உயர்த்த முடியாமல் போய்விடுகிறது. யோசித்துப் பாருங்கள் ஆண்டவருக்கு முன்பாக நீங்கள் உங்களை உயர்த்துகிறவர்களாக இருக்கிறீர்களா? அல்லது தாழ்த்துகிறவர்களாக இருக்கிறீர்களா?

தாவீது அரசனின் தாழ்ச்சி

தாவீது அரசரைப் பாருங்கள், ஒரு ஆடு மேய்க்கிறவனாக இருந்த தாவீதை எல்லாரும் ஆடு மேய்க்கிறவனாகத்தான் மதித்தார்கள். ஆனால் தேவனோ தாவீதை பார்க்கிற பொழுது இதயத்திற்கு உகந்தவனாக அவனைக் கண்டேன் என்று சொன்னார். தாவீதுடைய உள்ளம் தேவனுக்கு மிகவும் பிரியமுள்ளதாக இருந்தது.அதற்கு காரணம் தாவீதினிடத்தில் காணப்பட்ட தாழ்மை. **தாவீது மிகவும் தாழ்மையுள்ளவராக இருந்தார். அவரிடத்தில் துளிகூட பெருமை இல்லாமல் இருந்தது.** ஆதலால் ஆண்டவர் சாதாரண ஆடு மேய்த்த தாவீதை இஸ்ரயேல் தேசத்திற்கே அரசர் ஆக்கினார். அரசனான பிறகும் கூட தான் எங்கிருந்து வந்தேன் என்பதை தாவீது ஒருபோதும் மறக்கவில்லை. இறுதிவரைக்கும் ஆடு மேய்ப்பவனாக இருந்த என்னை ஆண்டவர் அரசனாக்கினார் என்று எப்போதும் ஆண்டவரை புகழ்வது வழக்கமாக இருந்தது. ஆதலால்தான் **“திருப்பாடல் 34:1ல் ஆண்டவரது புகழ் எப்பொழுதும் என் நாவில் ஒலிக்கும்”** என்று சொல்கிறார். அப்படி தேவனை துதிக்கிற தாவீது ஆண்டவருடைய உடன்படிக்கைப் பேழையைத் தூக்கிக் கொண்டு வருகிற பொழுது அவரது உள்ளம் மிகுந்த சந்தோஷத்தினால் நிரம்பியது. ஆதலால் ஆண்டவருக்கு முன்பாக நடனம் ஆடினார் என்று போடப்பட்டிருக்கிறது; இன்னொரு மொழி பெயர்ப்பில் கூத்தாடினார் என்று போடப்பட்டுள்ளது. ஏனென்றால் ஆடு மேய்த்த தாவீதுக்கு நடனம் ஆட தெரியாது. உடன்படிக்கையின் முன்பாக அவர் ஆடினது வெறும் கூத்தாட்டம்; பார்க்கவே சகிக்கவில்லை ,அதுவும் சணலால் ஆன ஏபோதை அணிந்து கொண்டு ஆடுகிறார். ஆடுகிற ஆட்டத்தைப் பார்த்து சிறுவயதிலிருந்தே அரச குடும்பத்தில் வளர்ந்த அவன் மனைவி மீக்காலுக்கு தாவீதின் ஆட்டம் மிகவும் அருவருப்பாக இருந்தது. தாவீது எல்லாரையும் ஆசீர்வதித்து விட்டு இறுதியாக தன் மனைவியை ஆசீர்வதிப்பதற்காக வீட்டுக்கு வருகிறார். அவளோ கோபத்தில் திரும்பி கொண்டிருக்கிறாள். ஒரு

அரசனாக இருந்து கொண்டு இப்படி ஆடியது கேவலமாக இல்லையா என்று கேட்கிறாள். அப்பொழுது தாவீதோ ஒரு ஆடு மேய்ப்பவனாக இருந்த என்னை ஆண்டவர் அரசராக்கினார் அவருக்கு முன்பாக என்னை தாழ்த்துவது சரிதான் இதை விட கீழான காரியத்தை செய்ய சொன்னாலும் மகிழ்ச்சியுடன் நான் செய்வேன் என்று சொன்னார். இதைவிட கீழானதை செய்யச் சொன்னாலும் நான் செய்வேன் என்கிறார், இதுதான் தாழ்மை.

இன்று சிலருக்கு ஆண்டவர் சில ஆலோசனைகள் கொடுத்து செய்யச் சொல்லும் பொழுது அந்த ஆலோசனைக்கு கீழ்ப்படிய மறுக்கிறார்கள். ஏன் கீழ்ப்படியவில்லை என்றால் அவர்களுடைய ஆணவத்திற்கு, அந்தஸ்திற்கு ஆண்டவர் சொல்வதை செய்தால் இழுக்காக தோன்றுகிறது. நிறைய பேர் தேவனுக்கு ஊழியம் செய்வதை கூட ஒரு கேவலமாக, இழுக்காக நினைக்கிறார்கள். இதுதான் தேவனுக்கு முன்பாக ஒரு ஆணவம். ஆண்டவர் எதைச் சொன்னாலும் நாம் செய்வதற்கு தயாராக இருக்க வேண்டும். அது கீழான காரியமாக இருந்தாலும் தாவீதை போல, நாம் எத்தனை பேர் இதை விட கீழான காரியங்களை செய்ய சொன்னாலும் ஆண்டவருக்காக செய்வேன் என்று சொல்வோம். சில ஆலோசனைகளை சிலருக்கு கொடுக்கும் பொழுது உடனே செய்யமாட்டார்கள். அவர்கள் எதிர்ப்பார்ப்பது பெரிய காரியங்கள் **தேவனோ சின்ன சின்ன காரியங்களை தாழ்த்துவதற்காக கொடுக்கிறார்.** ஆனால் அவர்கள் செய்யமாட்டார்கள் அப்படி செய்வது தான் கடவுளுக்கு முன்பாக நம்மை தாழ்த்துவது. தேவனுக்கு முன்பாக நாம் நம்மை அப்படி தாழ்த்தும் போது தான் தேவன் பெரிய காரியங்களை நமக்கு செய்கிறார் ஆசீர்வதிக்கிறார்.

ஒரு அருட் சகோதரியினிடத்தில் காணப்பட்ட தாழ்ச்சி

ஒருமுறை அருட்சகோதரிகள் தியானத்தில் ஒரு அருட்சகோதரி நான் தடுக்கி கீழே விழுந்ததனால் முழங்கால்களில் நல்ல வலி. ஆகையினாலே நான் முழங்கால்படியிட முடியாது என்று சொன்னார்கள். அந்த சகோதரியை பார்த்து நீங்கள் முழங்காலில் நிற்கலாம் என்று சொன்னேன். உடனே அவர்கள் முழங்கால்படியிட்டார்கள் மெதுவாக முழங்கால்படியிட முடியவில்லை, இரண்டு முழங்கால்களும் வேகமாக தரையில் போய்

"டம்" என்று இடித்தது. இடித்தவுடன் மற்ற அருட்சகோதரிகள் பயந்தார்கள். திரும்பவும் எழுந்து நிற்கச் சொன்னேன். அந்த அருட்சகோதரியோ வலி கொஞ்சம் குறைந்திருக்கிறது திரும்பவும் முழங்கால்படியிடட்டுமா என்று கேட்டார்கள். சரி என்று சொன்ன உடனே அவர்கள் முழங்கால்படியிட்டார்கள். அந்த முழங்கால்கள் முழுவதுமாக சுகமாகிவிட்டது. **தாழ்த்துவது என்றால் கீழ்ப்படிவது தேவன் சொல்கிற காரியங்களை செய்வது தான், தேவன் சமூகத்திலே நம்மை தாழ்த்துவது.**

தாவீதை சிந்தித்துப் பாருங்கள் கூத்தாடுவதற்குக் கூட தயங்காமல் ஆடிவிட்டு இதைவிட கீழானதை செய்ய வேண்டுமானாலும் ஆண்டவருக்காக செய்வேன் என்கிறார். ஆண்டவருடைய வீட்டில் ஒரு வாயிற்காவலனாய் இருந்தால் கூட போதும் என்கிறார். அதனாலேதான் ஆண்டவர் அவரை ஆசிர்வதித்து உயர்த்துகிறார். எந்த மனிதன் தேவ சமூகத்திலே ஆண்டவர் சொல்வதை அவமானமாகவோ அருவருப்பாகவோ எண்ணாமல் மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்று நினைக்காமல் தங்களை தாழ்த்தி தைரியமாக செய்கிறார்களோ அது தான் தாழ்மை. “அவர்கள் இப்படி நினைப்பார்கள் இவர்கள் இப்படி நினைப்பார்கள் அவர்கள் ஏதாவது சொல்வார்கள்” என்றெல்லாம் சொல்வது ஆணவத்தின் அடையாளம். தேவனுக்கு முன்பாக தாழ்த்துவது என்றால் தேவன் சொல்கிற காரியங்களை கூச்சப்படாமல் வெட்கப்படாமல் ஆண்டவர் சொல்லியிருக்கிறார் என்று மகிழ்ச்சியோடு செய்வதுதான் தாழ்ச்சி. அதுதான் ஆண்டவருக்கு முன்பாக நாம் தாழ்மைப்படுவது.

காணானியப் பெண்ணின் தாழ்ச்சி

காணானியப் பெண்ணை பாருங்கள் அவளுடைய மகளுக்கு பிசாசு பிடித்ததினாலே இந்த பிசாசு அவளுடைய மகளை மிகவும் கஷ்டப்படுத்தியது படுத்த படுக்கையாக்கியது. தன் மகள் எப்படியாவது சுகமாக வேண்டுமே என்று அந்தத் தாய் இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டதினாலே இயேசுவினிடத்தில் ஓடி வருகிறாள். இயேசுவின் பின்னே கத்திக்கொண்டே “ஆண்டவரே என் மகள் பேய் பிடித்து கஷ்டபடுகிறாள்” என்று சொல்லிக் கொண்டே வருகிறாள். ஆண்டவர் செவி கொடுக்கவே இல்லை. பதிலே சொல்லவில்லை; வெகுதூரம் நடந்து கொண்டே போகிறார்.

இந்த இடத்தில் நாம் இருந்தால் என்ன செய்திருப்போம், “இவர் என்ன ஒரு ஊழியர் நான் கத்திக் கொண்டே போகிறேன் இவர் சட்டையே பண்ணவில்லை இவருக்கு என்ன அன்பு இருக்கிறது” என்று தாறுமாறாக பேச ஆரம்பித்து விடுவோம். அந்த காணானியப் பெண் அப்படி செய்யவில்லை பின்னாலே கத்திக் கொண்டே போகிறாள். சீடர்கள் இயேசுவைப் பார்த்து “ஆண்டவரே இந்த பெண் கத்திக்கொண்டே வருகிறாளே இவளை அனுப்பிவிடும்” என்று சொல்கிறார்கள். அவ்வளவு பொறுமையோடு அவர் பின்னாலே வருகிறாள். ஆகையினால்தான் வசனம் சொல்கிறது ஆண்டவருக்கு முன்பாக உங்களை தாழ்த்துங்கள். நிறைய பேர் அவசரப்படுகிறார்கள் நாம் அவசரப்படக்கூடாது. தேவனுக்கு முன்பாக உங்களை தாழ்த்துங்கள். அப்பொழுது ஆண்டவர் அந்த பெண்ணிடம், “பிள்ளைகளின் உணவை எடுத்து நாய்க் குட்டிகளுக்குப் போடுவது நல்லதல்ல” என்கிறார். இந்த வார்த்தைகளை நாம் கேட்டிருந்தால் எவ்வளவு வேதனைப்பட்டிருப்போம். அவர் அவளை நாய் என்று சொல்கிறார். அவள் ஒரு யூதர் அல்ல தேவனை அறியாத வேற்று மதத்தைச் சேர்ந்தவள். கத்திக் கொண்டே வரும்போது ஆண்டவர் இப்படி சொல்கிறார். பிள்ளைகளுடைய உணவை எடுத்து நாய்க்கு போடுவது நல்லதல்ல என்கிறார். அப்பொழுதும் கூட அந்தப் பெண் சோர்ந்து போகவில்லை இன்னும் தாழ்த்துகிறாள். “ஆண்டவரே பிள்ளைகள் மேசையிலிருந்து சிந்தும் துணிக்கைகளை நாய்க்குட்டிகள் தின்னுமே” என்று சொல்கிறாள். அதற்கு பொருள் என்ன? அவள் ஒரு பிள்ளையாக இல்லை. அப்படி என்றால் என்ன? பிள்ளைகள் சிந்தும் உணவை நாய்க்குட்டி எடுத்துக் கொள்கிறேன் என்கிறாள். அவள் அப்படி தாழ்த்தியவுடன் ஆண்டவர் சொல்கிறார் “அம்மா உன் விசுவாசம் பெரியது. இந்த வார்த்தை நிமித்தம் நீ போகலாம் பேய் உன் மகளை விட்டு நீங்கிவிட்டது” என்கிறார்.

சிந்தனை

யோசித்துப்பாருங்கள் அன்று சிலர் தேவனுக்கு முன்பாக எப்படி எல்லாம் தாழ்த்தியிருக்கிறார்கள். இன்று உங்களுடைய உள்ளம் எப்படி இருக்கிறது? கடவுள் உங்களை ஆசிர்வதிக்க வேண்டும், உயர்த்த வேண்டும், குணமாக்க வேண்டும், உங்களை தூக்கி நிறுத்த

வேண்டும் என்றால் முதலாவது தேவனுக்கு முன்பாக உங்களை தாழ்த்த வேண்டும். ஆண்டவருக்கு முன்பாக தாழ்த்த ஆரம்பியுங்கள். “நான் ஒன்றும் இல்லை; ஆண்டவர் என்ன செய்ய சொன்னாலும் செய்வேன்” என்று உங்களை தாழ்த்துங்கள் அவர் சமூகத்தில் நாய்க்குட்டியை போல வாழ்ந்தால் போதும் அவருடைய ஒரு வாயிற்காவலனாய் இருந்தால் போதும் என்று தாழ்த்துங்கள். வேதனை வந்தவுடன் ஏன் என்று கேட்காதீர்கள் இதைவிட கொடுமையான வியாதிகளுக்கும் வேதனைகளுக்கும் நாம் தகுதியானவர்கள், ஏனென்றால் நாம் எவ்வளவோ தவறுகளை செய்திருக்கிறோம்.

இரக்கத்தோடு நம் பாவங்களை இயேசு சுமந்து கொண்டு நம்மை மன்னித்திருக்கிறார். நம்முடைய தவறுகளுக்கு நம்மை என்றைக்கோ அவர் அழித்திருக்க வேண்டும். ஆனால் அவர் அழிக்கவில்லை; தயவு பாராட்டி நிறுத்தியிருக்கிறார். ஆகையினாலே “இதற்கு எல்லாம் நான் தகுதியானவன் தான். இதைவிட கீழான தண்டனைக்கும் தகுதியானவன். ஆண்டவரே கொஞ்சம் தானே கொடுத்திருக்கிறீர் நன்றி” என்று சொல்லுங்கள். நீங்கள் உங்களை தாழ்த்த தாழ்த்த தேவன் உங்களை உயர்த்த ஆரம்பிப்பார். கடவுள் உங்களை உயர்த்தினால் இந்த உலகத்தில் யாராலும் உங்களை தாழ்த்த முடியாது. சொந்த குடும்பமே தாவீதை சாதாரணமாக கீழாகத்தான் நினைத்தது ஆனால் தேவனோ தாவீதுடைய தாழ்மையுள்ள இருதயத்தைக் கண்டு அவரை உயர்த்தினார். அதே ஆண்டவர் இயேசு இன்றைக்கும் உயிரோடு இருக்கிறார். உங்கள் இருதயங்களை பார்க்கிறார்.

உங்களையே யோசித்துப் பாருங்கள், தாழ்மையுடன் நடந்து கொள்கிறேனா இல்லை என்றால் ஆண்டவரிடத்தில் மன்னிப்பு கேட்டு இன்று உங்களை தாழ்த்துங்கள் நீங்கள் தாழ்த்துவீர்களானால் தேவன் உங்களை சீக்கிரமாக உயர்த்துவார். உங்கள் பிரச்சனைகள் எல்லாம் மாறும்; உங்களுடைய வியாதிகள் சுகமாகும். அவர் உங்களை உயர்த்தும் போது, அவர் உங்களை ஆசீர்வதிக்கும் போது யாராலும் அதைத் தடுக்க முடியாது. ஆமென்

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவிக்கும் மாட்சி உண்டாகுக!!!

23/04/2020

மனநிறைவு

பிலிப்பியர் 4:11 - எனக்கு ஏதோ குறைவாய் இருப்பதால் இவ்வாறு சொல்கிறேன் என நினைக்க வேண்டாம். ஏனெனில் எந்நிலையிலும் மனநிறைவோடு இருக்கக் கற்றுக் கொண்டுள்ளேன்.
மனநிறைவு இல்லாததே இன்றைக்கு இருக்கும் பெரிய பிரச்சனை. யாருமே இந்த மனநிறைவோடு இருப்பதில்லை. பொதுநிலையினர், துறவிகள், பெரிய அதிகாரிகள், அரசியல் தலைவர்கள், நிறைய சொத்து இருப்பவர்கள் என யாருமே மனநிறைவோடு இல்லை. ஆனால், பவுல் கூறுகின்றார், “எல்லா நிலையிலும் மனநிறைவோடு இருக்க நான் கற்று கொண்டுள்ளேன்” என்கிறார். ஆண்டவரிடம் எதை கற்று கொண்டார்? இரண்டு காரியங்கள், தாழ்ச்சியையும் சாந்தத்தையும் தான் ஆண்டவர் பவுலுக்கு கற்றுக்கொடுத்தார். ஆனால், பவுல் இங்கு சொல்லுகிறார் நான் மனநிறைவோடு இருக்க கற்றுக்கொண்டேன்.

பிலிப்பியர் 4:12-13 - எனக்கு வறுமையிலும் வாழத் தெரியும்; வளமையிலும் வாழத் தெரியும். வயிறார உண்ணவோ, பட்டினி கிடக்கவோ, நிறைவோ குறைவோ எதிலும் எந்தச் சூழலிலும் வாழப் பயிற்சி பெற்றிருக்கிறேன். எனக்கு வலுவூட்டுகிறவரின் துணைகொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு.

ஆண்டவர் வலுவூட்டுவதால், பவுல் மனநிறைவோடு வாழ்கின்றார். பழைய மொழிப்பெயர்ப்பில் “மனரம்மியத்தோடு கற்றுக்கொண்டேன்” என கூறுகின்றார். மனநிறைவே கிறிஸ்துவ வாழ்வின் மேன்மை.

யோசித்து பார்ப்போம், இன்று நாம் மனநிறைவோடு இருக்கின்றோமா அல்லது சிறு சிறு காரியங்களுக்காக மனநிறைவை

இழக்கின்றோமா? சிறிய விஷயமோ பெரிய விஷயமோ மனநிறைவு மிகவும் அவசியம். இன்று நிறைய பேர் எதிலும் அந்த நிறைவு இல்லாமல் இருக்கிறார்கள், ஆண்டவர் தான் அந்த நிறைவை கொடுக்கிறார். கடவுளுக்கு ஊழியம் செய்வதில் கூட நமக்கு மனநிறைவு இல்லை. ஆனால், ஆண்டவர் தான் இந்த மனநிறைவை தருகின்றார், அவருடைய வல்லமை, உறுதியூட்டுதலே மனநிறைவை தருகின்றது. பவுலும், ஆண்டவர் தன்னை உறுதிப்படுத்தினதாலும், வலுவூட்டினதாலும் அந்த மனநிறைவை அவர் பெற்று கொள்கிறார்.

ஒருபுறம் (virus) வைரஸ் தாக்கி மருத்துவமனையில் இருக்கின்றனர், மறுபுறம் மக்கள் வீட்டைவிட்டு வெளியேற முடியாமல் இருக்கின்றனர். இருபக்கமும் மனநிறைவு இல்லாமல் தான் இருக்கின்றனர். வீட்டில் இருக்கிறவர்களும் நிறைவாக இல்லை, மருத்துவமனையில் உள்ளவர்களும் நிறைவாக இல்லை. எந்த சூழ்நிலையிலும் அந்த நிறைவு இல்லாததை தான் நாம் பார்க்கிறோம்.

இருப்பதற்காக நன்றி சொல்லுவோம்!

ஒருவருடையை பேட்டியை நான் வாசித்தேன், அவர் அதில் சொல்கிறார் “எனக்கு சிறிய வயதில் இருந்து shoe வாங்க வேண்டும் என்று ஆசை இருந்தது”, “ஆண்டவரே ஒரு shoe தரக்கூடாதா என்று கேட்டு கொண்டே இருந்தேன், வாலிப வயது அடைந்ததும் எனக்கு ஒரு shoe கிடைக்க வில்லையே! என்று புலம்பிக்கொண்டே இருந்தேன். அப்பொழுது கால் இல்லாத ஒருவரை பார்த்தேன், அன்றிலிருந்து shoe-வுக்காக புலம்புவதை விட்டுவிட்டு, “ஆண்டவரே எனக்கு ஆரோக்கியமான கால்களை கொடுத்து இருக்கின்றீர், என் கால்களுக்காக நன்றி” என்று நன்றி சொல்ல ஆரம்பித்தேன். இன்றைக்கு நாமும் நிறைய நேரங்களில் நமக்கு இல்லாததை வைத்து புலம்பிக் கொண்டிருக்கின்றோம், “வீட்டை விட்டு வெளியே போகமுடிவில்லை, சூழ்நிலை சரியாக இல்லை” என புலம்பி கொண்டிருக்கிறோம். ஆனால் இப்படி புலம்புவதை விட்டு விட்டு, ஆண்டவர் நமக்கு கொடுத்திருப்பதற்காக நன்றி சொல்வோம், அதுவே மனநிறைவு.

மனநிறைவா! முணுமுணுப்பா!

ஆண்டவர், இஸ்ரயேல் மக்களுக்கு அனைத்தையும் கொடுத்திருந்தார். பாலைநிலத்தில் அவர்கள் போகும் பொழுது, பகலில் வெயில் தாக்காமல் இருக்க மேகத்தூணாகவும், இரவிலே குளிர் தாக்காமல் இருக்க நெருப்புத்தூணாகவும் பாதுகாத்தார். வானத்தில் இருந்து மன்னாவை உணவாக தந்தார், அவர்களில் ஒருவர் கூட பெலவீனம் அடையவில்லை. எந்த வியாதியும் அவர்களை அணுகவில்லை. இப்படி எல்லாம் ஆண்டவர் அவர்களை பாதுகாத்து வந்தால் கூட, இஸ்ரயேல் மக்கள் முணுமுணுக்கத்தான் செய்தார்கள். அப்படி முணுமுணுத்ததால் அந்த ஆசிர்வாதத்தை அவர்கள் இழந்தார்கள். ஆண்டவர் செய்த நன்மைகள் அனைத்தையும் மறந்து முணுமுணுத்தனர். மனநிறைவின்றி அங்கலாய்த்தனர். மனநிறைவு இல்லாதவர்கள் எவ்வளவு நன்மையை பெற்றிருந்தாலும், அதை கண்டு நிறைவடைவதை விட, அதில் உள்ள குறையைத்தான் பார்ப்பார்கள். முணுமுணுத்து கொண்டேதான் இருப்பார்கள். அது சரியான ஆவிக்குரிய பயிற்சி இல்லை, ஒரு நல்ல ஆவிக்குரிய பயிற்சி என்னவென்றால், எல்லா சூழ்நிலையிலும் மன நிறைவோடு இருப்பது. இதையே பவுலும், "எல்லா சூழ்நிலையிலும் நான் மன நிறைவோடு இருக்க கற்றுக் கொண்டேன்" என்கிறார்.

மனநிறைவு என்றால் அது எப்போதும் கொந்தளிக்காது, TENSION ஆகாது. மனநிறைவு என்றால் அது அமைதியான மனம், அதுதான் மனநிறைவு. குறைகுடம் தான் தளும்பும், நிறைகுடம் எப்போதும் அமைதியாக, மகிழ்ச்சியாக இருக்கும். இஸ்ரயேல் மக்களில் யோசுவா, காலேபு, மோசே தவிர அந்த மன மகிழ்ச்சி, மனநிறைவு வேறு யாரிடமும் இல்லை. மற்ற எல்லாரும் முணுமுணுத்துக் கொண்டே இருந்தார்கள்.

மனநிறைவே ஆசீர்வாதம்!

1 தீமோத்தேயு 6:6 - இறைப்பற்று பெரும் ஆதாயம் தருவதுதான்; ஆனால் மனநிறைவுள்ளவர்களுக்கே தரும்.

பக்தி, மனநிறைவு உடையவருக்கு தான் பெரிய ஆதாயத்தை தரும், ஆசீர்வாதத்தை தரும். இறைப்பற்று பெரிய ஆசீர்வாதத்தை தருவது

தான், ஆனால் மனநிறைவு உள்ளவர்க்கே அதை கொடுக்கும். பக்தியும், ஜெபமும் ஏராளமான நன்மைகளை கொண்டு வரக் கூடியது தான். யாருக்கு கொண்டு வரும் என்றால் மனநிறைவு உள்ளவர்க்கே கொண்டு வரும். ஆனால், குறைகளை கண்டு முணுமுணுகின்றவர்களுக்கு, அது பெரிய ஆசீர்வாதத்தை கொண்டு வருவதில்லை. பக்தி இருக்கும் ஜெபம் இருக்கும் ஆனால் அதனால் ஆசீர்வாதம் விளைவதில்லை. மனநிறைவு உடையவர்களுக்கே ஆசீர்வாதம் வரும். இன்று நாம் சற்று யோசித்து பார்ப்போம், நாம் பக்தி உள்ளவர்களாக இருக்கிறோம், ஜெபிக்கிறவர்களாக இருக்கிறோம், ஆனால் மனநிறைவு உள்ளவர்களாக இருக்கிறோமா? மேலே ஒரு வாலிபனை குறித்து பார்த்தோம், அவன் தனது கால்களுக்காக ஒரு நாளும் ஆண்டவருக்கு நன்றி சொன்னதே இல்லை, ஆண்டவர் கொடுத்த காலை அவன் பொக்கிஷமாகவோ பாக்கியமாகவோ நினைக்கவில்லை. Shoe இல்லையே என அங்கலாய்த்துக் கொண்டிருந்தான். ஆனால் கால் இல்லாத ஒரு மனிதனை பார்த்த பிறகு தான் அந்த காலின் அருமை அவனுக்கு தெரிய ஆரம்பித்தது. அதன் பிறகு அவன் shoe-க்காக புலம்புவதை விட்டுவிட்டு, அவன் தன் கால்களுக்காக நன்றி சொல்ல ஆரம்பித்த பொழுது கடவுள் அவனை ஆசிர்வதித்தார், உயர்த்தினார். நமது வாழ்விலும் உயர்வு வேண்டுமானால், மனநிறைவு இருந்தால்தான் இருக்க வேண்டும். அது இருந்தால்தான் இறைப்பற்று பெரும் ஆதாயத்தை கொடுக்கும், பெரிய ஆசீர்வாதத்தை கொடுக்கும். மனநிறைவு என்பது ஓர் பயிற்சி. பவுல் நான் எந்த நிலையிலும் மனநிறைவோடு வாழ பயிற்சி பெற்று இருக்கின்றேன், கற்றுக் கொண்டுள்ளேன் என கூறுகின்றார்.

எல்லா சூழ்நிலையிலும் நன்றி சொல்லுவோம்!

ஒரு உபதேசியாரை குறித்து சில ஆண்டுகளுக்கு முன்பாக கேள்விப்பட்டேன், அவர் இருந்த பங்கிற்கு ஒரு புதிய குருவானவர் மாற்றமாகி வந்தார். அப்பொழுது அந்த உபதேசியார் ஐந்நூறு ரூபாய் சம்பளமாக பெற்றுக்கொண்டு இருந்தார். எத்தனை ஆண்டுகளுக்கு முன்பாக என்று எனக்கு தெரியவில்லை. அந்த உபதேசியார், எழுத படிக்க தெரியாதவர். ஒரு நாள் அந்த குருவனவார், அந்த உபதேசியாரை கையெழுத்து போட்டு சம்பளத்தை பெற்று

கொள்ளுமாறு சொன்னார். அதற்கு உபதேசியார், "Father எனக்கு கையெழுத்து போட தெரியாது, அதனால் நான் கைநாட்டு வைக்கிறேன்" என்று சொன்னார். அப்பொழுது அந்த குருவானவர் "கையெழுத்து போட தெரியாத, எழுத படிக்க தெரியாத உங்களை நான் வேலைக்கு வைக்க போவதில்லை, ஆகவே நீங்கள் வேலையை விட்டுவிடுங்கள்" என்று கூறினார். அதை கேட்டவுடன் உபதேசியார் "நன்றி இயேசுவே" என்றார். குருவானவர், "என்ன வேலை போனதற்கு இப்படி சொல்கிறாய்?" என்றார். "ஆமாம் Father இந்த ஆலயத்தில் என் மனதை தொட்ட ஒரு செய்தி, எல்லா சூழ்நிலையிலும் கடவுளுக்கு நன்றி சொல்வது, அதை தான் நான் பின்பற்றுகிறேன் என சொல்லிவிட்டு, யார் மீதும் கோபப்படாமல், அந்த ஐந்நூறு ரூபாயை வைத்து பக்கத்து ஊரில் ஒரு பெட்டி கடை வைத்தார். அங்கேயும் எப்போதும் நன்றி சொல்ல ஆரம்பித்தார். அவர் வியாபாரம் பெருகியது. மூன்று நகரங்களில் பெரிய கடைகளுக்கு சொந்தக்காரர் ஆனார். வங்கி மேலாளர் ஒரு நாள் இவரிடம், "எப்பொழுதும் வங்கியில் பணத்தை எடுப்பதேயில்லை, போட்டுக்கொண்டே இருக்கின்றீர்களே" என்று கேட்டார். அதற்கும் அவர் மனநிறைவோடு "நன்றி இயேசுவே" என்றார்.

நம்மை வழிநடத்தும் கடவுள்

எப்பொழுது மனநிறைவு வருகிறது என்றால், தேவன் நம்மை வழிநடத்துகிறார், தேவன் நம்மை பராமரிக்கின்றார். "எந்த சூழ்நிலையிலும் ஆண்டவர் நம்மை பராமரிப்பார், பாதுகாப்பார், நல்ல வழியிலே நடத்துவார் அவர் அனுமதி இல்லாமல் ஒன்றும் நடப்பதில்லை" என்கிற விசுவாசம் ஆண்டவர் மீது இருக்கும் பொழுது தான் மனநிறைவு உண்டாகும். இல்லையென்றால், மனநிறைவு இருக்காது அவருடைய அனுமதி இல்லாமல் ஒன்றும் நடப்பதில்லை என்ற விசுவாசம் இருக்கும்போது மட்டும்தான் மனநிறைவு உண்டாகும். இஸ்ரயேல் மக்கள் கூட செங்கடலை கடந்தவுடன் ஆடினார்கள், பாடினார்கள், கடவுளை போற்றி புகழ்ந்து துதித்தார்கள். ஆனால், பாலைவனத்தில் சில கஷ்டங்களை பார்த்தவுடன், முணுமுணுக்க ஆரம்பித்தார்கள். இந்த பாலைவனத்தில் கடவுள் நம்மை வழிநடத்துகிறார் என்ற விசுவாசம் அவர்களிடத்தில் இல்லை, ஆகவே மனநிறைவுமில்லை. அங்கே ஒரு

சில கஷ்டங்களும் சங்கடங்களும் வந்த உடனே தேவனுக்கு எதிராகவே முணுமுணுக்கவும், முறையிடவும் அல்லது புலம்பவும் ஆரம்பித்தார்கள். அவர்களுடைய மனநிறைவு எல்லாம் போய்விட்டது. ஆனால், மோசே மனநிறைவோடு இருந்தார்; காரணம், கடவுள் நம்மை வழிநடத்துகிறார் என்ற உணர்வு அவருக்கு இருந்தது. இன்றைக்கும் நாம் “விசுவசிக்கின்றேன்” என்கிறோம். உண்மையான விசுவாசம் ஒரு மனநிறைவை கொடுக்கிறது. "தேவன் நம்மை வழிநடத்துகிறார்; தேவன் நம்மை பராமரிக்கிறார்; தேவன் நம்மை பாதுகாக்கிறார்; நம்முடைய தலை முடியெல்லாம் என்னப்பட்டிருக்கிறது; அவருடைய அனுமதி இல்லாமல் எதுவும் நமக்கு நடப்பதில்லை, ஆகையால் அவர் இந்த காரியங்கள் எல்லாம் அனுமதித்து இருக்கிறார்" என்று ஒரு மனநிறைவு இருக்க வேண்டும். எப்போதும் தேவன் நம்மோடு தான் இருக்கிறார், நம்மை பார்த்து கொண்டு தான் இருக்கிறார், அவர் ஒரு போதும் நம்மை கை விடுவதில்லை என்ற மனநிறைவும் வேண்டும்.

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதிரிகளே இன்றைக்கு யோசித்து பாருங்கள்; நீங்கள் போக கூடிய சூழ்நிலை ஒரு பாலைவனமாக இருக்கலாம், போராட்டமான சூழ்நிலையிலே நீங்கள் போய் கொண்டிருக்கலாம், அல்லது தானியேலை போல பொறாமையினாலே எதிர்த்து, சிங்க குகையில் தூக்கி போட்டார்களே அப்படி ஒரு நெருக்கடிக்குள்ளாக நீங்கள் ஒருவேளை சென்று கொண்டிருக்கலாம், எங்கே போகிறோமென்று தெரியாமல் ஆபிரகாம் புறப்பட்டு போனாரே அப்படி நாளைக்கு என்ன நடக்கும் என அறியாதவர்களாய், உலகமே இருண்டு போன சூழ்நிலையில் இருக்கலாம். எந்த ஒரு சூழ்நிலையில் நீங்கள் நடந்து போனாலும் உங்கள் எதிர்காலம் தேவனுடைய கரத்தில் இருக்கிறது. அவர் உங்களை பாதுகாக்க வல்லவர், அவர் உங்களை போஷிக்க வல்லவர். அவர் உங்களை வழி நடத்த வல்லவர், அவர் உங்கள் நெருக்கடிகளை மாற்றிப் போட வல்லவர். ஆகையினாலே மனநிறைவை கற்று கொள்ள வேண்டும். கடவுள் தான் நம்மை வழிநடத்துகிறார், சில கஷ்டம் வந்த உடனே ஆண்டவரை மறந்து விடாதீர்கள், அவரை தூக்கி எறிந்து விடாதீர்கள், ஆண்டவர் தான் இந்த கஷ்டங்களை அனுமதிக்கிறார், அவர் அனுமதிக்காமல் ஒரு கஷ்டமும் நம் வாழ்கையில் வருவதில்லை என்று உணர வேண்டும்.

கடவுள் தரும் பயிற்சி

ஆமோஸ் 3:6 - நகரில் எக்காளம் ஊதப்படுமானால், மக்கள் அஞ்சி நடுங்காமல் இருப்பார்களோ? ஆண்டவர் அனுப்பவில்லையெனில், நகருக்குத் தீமை தானாக வந்திடுமோ?

கடவுள் அனுப்புவதால் தான் நமக்கு தீமைகள், கஷ்டங்கள் வருகிறது. கடவுள் நம் கஷ்டங்களை அறியாதவர் அல்ல, அவர் எல்லா சூழ்நிலைகளிலும் நாம் மன நிறைவோடு இருக்க நமக்கு பயிற்சி கொடுக்கின்றார். இப்படி மனநிறைவோடு இறைப்பற்றுடன் இருப்பவர்களுக்கு தேவன் பெரிய ஆசீர்வாதங்களை கொடுக்கிறார். இந்த மனநிறைவு இல்லாததால் இஸ்ரயேல் மக்கள் பெரிய ஆசீர்வாதமாகிய கானான் நாட்டை இழந்து போனார்கள். நாமும் மனநிறைவோடு மகிழ்ச்சியோடு எல்லா சூழ்நிலைகளிலும் நிலைத்திருப்போம். ஆண்டவர் நம்மை பெரிய பெரிய ஆசீர்வாதங்களால் அலங்கரிப்பார். அப்படி மனநிறைவு நம்மிடம் இல்லையென்றால், ஆண்டவரிடம் ஒப்புக்கொடுப்போம். மகிழ்ச்சியோடு எல்லா சூழ்நிலைகளையும் ஏற்றுக் கொள்வோம். ஆமென்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!

17/05/2020

துன்புறும் இறைவாக்கினரே நமக்கு முன்மாதிரி

யாக்கோபு 5:10 - அன்பர்களே, நீங்கள் துன்பத்தைத் தாங்குவதிலும் பொறுமையைக் கடைபிடிப்பதிலும் ஆண்டவரின் பெயரால் பேசிய இறைவாக்கினரை உங்களுக்கு மாதிரிகளாகக் கொள்ளுங்கள்.

“இறைவாக்கினர்களை உங்களுக்கு மாதிரியாக கொள்ளுங்கள்”, இதில் மாதிரி என்று சொல்லும் பொழுது, துன்பத்தை தாங்குவதிலும், பொறுமையை கடைப்பிடிப்பதிலும் இறைவாக்கினர்களை, நமக்கு மாதிரியாக கொள்ள வேண்டும்.

தவறான முன்மாதிரி

நிறைய பேர் செய்கிற காரியம் என்னவென்றால், இறைவாக்கினர்களின் இறைவாக்குகளை முன்மாதிரியாக (copy) வைக்கிறார்கள். பொதுவாக இது ஊழியர்களுக்கு இருக்கக்கூடிய ஒரு பெலவீனம். இறைவாக்கினர்களின் நடைமுறைகளை (style- ஐ) முன்மாதிரியாக (copy) வைக்கிறார்கள், சில பேர் அவர்களுடைய அசைவுகளை முன்மாதிரியாக (copy) வைக்கிறார்கள், சில பேர் அவர்கள் எப்படி பேசுவார்களோ அதே மாதிரி பேசி, அவர்களை முன்மாதிரியாக (copy) வைக்கிறார்கள், சில பேர் எப்படி பாடுவார்களோ அதே போல பாடி அவர்களை முன்மாதிரியாக (copy) வைக்கிறார்கள். அந்த காலத்தில், D.G.S. தினகரன் இருக்கும் பொழுது, அவர் தான் மிகவும் புகழ் பெற்றவராகயிருந்தார், ஆகையால் அந்த காலகட்டத்தில், அவர் கை அசைக்கின்ற மாதிரி அசைப்பார்கள், அவர் தலையை ஆட்டுகின்ற மாதிரி ஆட்டுவார்கள், அவர் கண்களை மூடி திறப்பது போல திறப்பார்கள், அவர் உடுத்துகிற மாதிரி Shoe, Coat எல்லாம் போட்டு கொண்டு வருவார்கள். ஆனால், திருவிவிலியத்தில், இறைவாக்கினர்கள் துன்பங்களை தாங்குவதிலும், பொறுமையை கடைப்பிடிப்பதிலும் மாதிரியாக கொள்ளுங்கள் என போடப்பட்டிருக்கிறது. அவர்களுடைய சுபாவத்தை தான் நாம் பின்பற்ற வேண்டும். அதே போல Fr. பெர்க்மான்ஸ் வந்த போது, நிறைய பேர் அவருடைய குரலில் பாடினார்கள், அவர் பாடுவது போலவே பாடினார்கள், அதே style ஐ copy செய்தார்கள். நடை, உடை, பாவனை என்று இறைவாக்கினர்களின் நடவடிக்கையை மாதிரியாக கொள்ளக் கூடாது. அவர்களை போலவே நமக்கும் வரம் வேண்டும் என நினைப்பது, அதை பயன்படுத்த வேண்டும் என நினைப்பது, இவ்வாறு அவர்களை பின்பற்றக்கூடாது.

சரியான முன்மாதிரி

இறைவாக்கினர்களுடைய குணநலன்களை தான் மாதிரியாக கொள்ள வேண்டும். துன்பங்களை தாங்குவதிலும், பொறுமையை கடைபிடிப்பதிலும் அவர்களை முன் மாதிரியாக கொள்ள வேண்டும். எவ்வளவோ கஷ்டங்கள், எவ்வளவோ வேதனைகளை

இறைவாக்கினர்கள் தாங்கி கொண்டார்கள். எவ்வளவோ எதிர்ப்புக்கள், எவ்வளவோ அவமானங்களை சகித்து கொண்டார்கள். எத்தனை காரியங்களிலே அவர்கள் பொறுமையோடு இருந்தார்கள், வியாதிப் படுக்கையிலே எவ்வளவு பொறுமையோடு இருந்தார்கள், துன்பங்களை அவர்கள் எப்படி எல்லாம் தாங்கினார்கள் என்று இதை தான் மாதிரியாக கொள்ள வேண்டும்.

இயேசு கிறிஸ்துவின் முன்மாதிரி

எபிரேயர் 12:3 - பாவிகளால் தமக்கு உண்டான எந்த எதிர்ப்பையும் மன உறுதியோடு தாங்கிக்கொண்ட அவரை எண்ணிப்பாருங்கள். அப்போது நீங்கள் மனம் சோர்ந்து தளர்ந்து போக மாட்டீர்கள்.

இயேசுவைக் கூட அதில் மாதிரியாக வைக்க வேண்டும் என பவுல் கூறுகின்றார். பவுலுக்கு ஏராளமான உபத்திரவங்கள், பாடுகள் வந்தது. சாட்டையால் 3 முறை அடிக்கப்பட்டார், கல்லால் எறிந்ததால் அவர் இறந்து விட்டார் என எறிந்து விட்டு போனார்கள், கப்பல் சேதம், பொல்லாத சகோதரர்களாலே வந்த வேதனை, கள்ளச் சகோதரர்களாலே வந்த வேதனை, திருடர்கள் என எல்லாரிடமும் மாட்டிக் கொண்டார், பொறாமை பிடித்த யூதர்களிடம் இருந்து பல முறை அவர் தப்பித்து வந்தார். ஆனால், பவுலுக்கு இந்த உபத்திரவத்தில் எல்லாம் பெலன் கொடுத்தது என்னவென்றால் இயேசு கிறிஸ்துவின் பாடுகள். இயேசு சிலுவையிலே எவ்வளவு பொறுமையோடு இருந்தார் என்பதை எண்ணிப் பாருங்கள், சிலுவையை தாங்கி கொண்ட அவரை உங்கள் எண்ணத்திலே வைத்து, சிந்தித்து பாருங்கள். அப்பொழுது, நீங்கள் மனம் சோர்ந்து போகமாட்டீர்கள்.

அப்போஸ்தலர்கள், புனிதர்கள் எல்லாரும் பாடுகளை பொறுமையோடு தாங்குவதிலே, பொறுமையை கடைப்பிடிப்பதிலே முன் மாதிரியாக இருந்தார்கள். தீர்க்கதரிசனம் சொல்லுவதில் அவர்கள் முன் மாதிரியாக இல்லை, அற்புதங்களை செய்வதில் அவர்கள் முன் மாதிரியாக இல்லை. திருவிவிலியம், இயேசு எப்படி எல்லாம் அற்புதம் செய்தார், அதை கடைப்பிடியுங்கள் என்று சொல்லவில்லை. ஆனால், அவருடைய பாடுகள், அவருடைய

குணநலன்கள், அவரை போன்று சிந்தை, அவரை போன்று மனநிலை இதை தான் நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

புனிதர்கள், அப்போஸ்தலர்களின் முன்மாதிரி

இன்றைக்கு நாம் நிறைய பேர் வரங்களையும், அற்புதங்களையும் முன்னால் வைக்கிறோம். அது மிகவும் ஆபத்தானது. இறைவாக்கினர்களை போல, புனிதர்களை போல, அப்போஸ்தலர்களை போல நாமும், அற்புதங்களை பிரதிபலிக்கிறவர்களாகவோ, அற்புதங்களை முன்னால் நிறுத்துகிறவர்களாகவோ அல்லது சில வரங்களை முன்னால் நிறுத்துகிறவர்களாகவோ இருக்கக் கூடாது. அதை நாம் copy அடித்து ஒன்றும் பிரயோஜனம் இல்லை. சில பேர் இயேசுவை போலவே முடி வைத்திருப்பார்கள். அதையெல்லாம் அவர் copy அடிக்க சொல்லவில்லை. அப்போஸ்தலர்கள் கூட அதையெல்லாம் copy அடிக்கவில்லை. இயேசுவின் குணத்தை தான் கடைப்பிடிக்க வேண்டும். குறிப்பாக, இயேசுகிறிஸ்துவின் பொறுமையையும், பாடுகளை தாங்குவதில் அவர் காட்டின சகிப்புத் தன்மையையும் கடைப்பிடிக்க வேண்டும். மனித அறிவிற்கு எட்டாத விதத்தில் அவர் அன்பு வைத்தார்.

அப்போஸ்தலர் பவுல் மற்றும் எத்தனையோ இறைவாக்கினர்கள் இறைவாக்குரைத்ததால் அவர்கள் உயிரையே இழந்திருகின்றனர். எத்தனையோ இறைவாக்கினர்கள் இறைவாக்குரைத்ததால் சிறைச் சாலையிலே தள்ளப்பட்டார்கள், கட்டப்பட்டு கிடந்தார்கள், வெட்டப்பட்டார்கள், பலவிதமான உபத்திரவங்களை அனுபவித்தார்கள், சாட்டையால் அடிக்கப்பட்டார்கள். ஆகையினால், துன்பங்களை தாங்குவதிலே அவர்கள் எவ்வளவு பொறுமையோடு இருந்தார்கள், எவ்வளவு துன்பங்களை தாங்கினார்கள் என்பதை நினைத்துப் பார்த்து இதை முன்மாதிரியாக கொண்டிருக்க வேண்டும். அப்பொழுது தான் நாம் சோர்ந்து போகமாட்டோம். அது தான் சரியான முன்மாதிரி. மற்ற காரியங்களை நாம் முன்மாதிரியாக வைத்திருப்போமானால், நாம் சறுக்கி விழுந்து விடுவோம். இறைவாக்கினர்களை பார்க்கும் பொழுது, அவர்களை போல் இறைவாக்கு உரைக்க வேண்டுமென்ற எண்ணங்களை விட்டுவிட்டு அவர்களிடம் இருந்த அந்த

குணநலன்களை முன்மாதிரியாக வைக்க வேண்டும். அப்போஸ்தலர்களை பார்த்து, “அவர்களுக்கு இருந்த அதே வரங்கள் வேண்டும்” என்ற சிந்தனையை விடுத்து, அவர்களுக்குள் இருந்த அதே குணநலன்கள் வேண்டும் என்று நினைக்க வேண்டும்.

நாம் எதை முன்மாதிரியாக வைத்திருக்கின்றோம்

இன்றைக்கு எங்கு பார்த்தாலும் வரத்தை வாஞ்சிப்பது தான் நாகரிகம் ஆகிவிட்டது. அது சரியான பின்பற்றுதல் இல்லை. எதை மாதிரியாக கொள்ள வேண்டும்? துன்பங்களை தாங்குவதற்கு, பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும். யோசித்து பார்போம். நாம் எதை முன்மாதிரியாக வைத்திருக்கிறோம்? எதை முன்மாதிரியாக கொண்டிருக்கிறோம்? அவர்களைப் போல வரங்கள் பெற்றவர்களாக வேண்டும் என்பதை முன்மாதிரியாக வைத்திருக்கிறோமா, இல்லை அவர்களைப் போல துன்பங்களை தாங்குவதிலும், பொறுமையை கடைப்பிடிப்பதிலும் இறைவாக்கினர்களை முன்மாதிரியாக வைத்திருக்கிறோமா? யோசித்து பாருங்கள். ஒருவேளை நீங்கள் தடம் புரண்டு போயிருந்தால், வரத்தில் கவனம் செலுத்தியிருந்தால், ஆண்டவரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்.

நல்ல சுபாவம் இல்லாமல், பயன்படுத்துகிற வரங்கள் அஸ்திபாரம் இல்லாத கட்டிடத்திற்கு சமம். மண் மேல் கட்டப்பட்ட வீடு. ஒரு மழை வந்தால் எல்லாம் விழுந்து போய்விடும், ஒரு புயல் அடித்தால் எல்லாம் சரிந்து போய்விடும். பாறை மீது கட்டின வீடு என்றால், சுபாவத்தை மேம்படுத்துவது. ஆவிக்குரிய வாழ்க்கை, வரங்களினால் கட்டப்படுவது அல்ல, சுபாவத்தினால் கட்டப்படுவது. குணநலன்களாலே கட்டப்படுவது, ஆவிக்குரிய கனிகளினாலே கட்டப்படுவது, அது வரத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்டது அல்ல. ஆகையால், இறைவாக்கினர்களையோ, புனிதர்களையோ, அப்போஸ்தலர்களையோ நாம் பார்க்கும் பொழுது, அவர்களுடைய சுபாவத்தை தான் பார்க்க வேண்டும். அவர்களுக்குள் இருக்கின்ற அன்பு, தளரா மனம், உபாத்திரவத்தில் சோர்ந்து போகாத அந்த மனநிலை, துன்பங்களை தாங்குவதிலே கடைப்பிடிக்கின்ற பொறுமை, அவர்களுக்குள் இருக்கின்ற மன்னிக்கிற சுபாவம், விட்டுக் கொடுக்கின்ற தன்மை,சுயநலமற்றப் பாங்கு, அவர்கள் செய்யக்கூடிய தியாகங்கள் . இதையெல்லாம்

யோசித்துப் பார்த்து, எண்ணிப் பார்த்து அதை பின்பற்ற வேண்டும். அவர்களுக்குள் இருக்கும் பொறுமை, நன்னயம், ஆவிக்குரிய கனிகள், தேவன் அவர்களுக்குள் வைத்திருக்கின்ற அவருடைய சுபாவம் என இதிலே நாம் வளர வேண்டும். இதுதான் ஆவிக்குரிய வாழ்க்கையை கட்டி எழுப்புகிறது, உருவாக்குகிறது.

வரங்களை அல்ல, ஆவியானவரையே விரும்ப வேண்டும்

ஆவிக்குரிய பண்புகள் இல்லையென்று சொன்னால், மற்ற எந்த வரம் இருந்தாலும் அது பிரயோஜனம் இல்லை. சிலர் இப்படியே ஜெபிக்கிறார்கள், "அவர்களுக்கு இருக்கிற அதே வரங்கள் வேண்டும்", இது ஒரு தவறான ஜெபம். அதனால், இதை எல்லாம் பார்க்கும் பொழுது, ஒரு குழந்தை கத்தியை கேட்பதற்கு சமம். ஆகையால், அப்படி கேட்பதால் நமக்கு லாபத்தை விட நஷ்டம் தான் உண்டாகும். ஆவிக்குரிய வாழ்க்கையில் நஷ்டம் தான் உண்டாகும். நிறைய பேர் நல்ல ஊழியங்களை செய்து கொண்டிருப்பார்கள். ஆனால் ஆவிக்குரிய வாழ்க்கையிலே எங்கேயோ பின்தங்கி கிடப்பார்கள். இது நிறைய இடங்களில் நடக்கூடிய காரியம். வரங்களை வாஞ்சிக்கிறவர்கள் எல்லாம் அப்படித்தான் நடப்பார்கள்.

ஊழியத்திற்கு வரங்கள் தேவை தான், அதை பரிசுத்த ஆவியானவரே தேவையான போது நமக்கு தருவார். வரங்களை விரும்பாமல், ஆவியானவரையே விரும்ப வேண்டும். வரங்களை தேடாமல், பரிசுத்த ஆவியானவரையே தேட வேண்டும். வரத்தை கொடுக்கக் கூடிய ஆண்டவரைத் தேட வேண்டும்; அவர் நம்மோடு இருக்க வேண்டும், அவரை போல நாம் மாற வேண்டும். அதுதான் நம் வாழ்க்கைக்கு முக்கியம்.

வரங்களை முன் வைப்பதால் வரும் ஆபத்து

யாராவது அதிகமாக வரங்களைப் பயன்படுத்தினார்கள் என்றால் ஒரு நாளும் அதை பார்த்து பொறாமையே படக்கூடாது. அது ஒரு பரிதாபமான நிலையும், அதில் நிறைய ஆபத்துக்களும் உண்டு. வரங்கள் பல நேரத்தில் நம்மை மோசம் போக்கும், நம்மை ஏமாற்றிவிடும், யார் உங்களுக்கு இந்த வரங்களை கொடுக்கிறார்கள் என்றும், யார் உங்களை பயன்படுத்துகிறார்கள் என்றும் தெரியாமல்

போய்விடும். உண்மையிலேயே கடவுள் தான் பயன்படுத்துகிறாரா அல்லது பிசாசு தான் பயன்படுத்துகிறதா என்பது தெரியாமலே போய்விடும். மோசே தன்னுடைய கோலை போட்ட போது அது பாம்புகளாக மாறியது, அதே சமயம் மந்திரவாதிகள் தங்கள் கோலை போட்ட போதும் அது பாம்புகளாக மாறியது. இது நமக்கு அதிர்ச்சியாக இருக்க வேண்டாம். ஏனென்றால், பிசாசுகளும் அதே அற்புதங்களை செய்யும். மோசே செய்த பல அற்புதங்களை பிசாசுக்களும் செய்தது.

இறுதி நாட்களிலே பல போலி இறைவாக்கினர்கள் தோன்றுவார்கள், போலி அற்புதங்களையும் செய்வார்கள் என விவிலியத்தில் ஆண்டவர் இயேசு கிறிஸ்து முன்பாகவே சொல்லிவிட்டார். அப்படிஎன்றால், வெறும் அற்புதங்களை மட்டும் சார்ந்து கொண்டு இருக்காதீர்கள். முடிந்தவரைக்கும் அற்புதங்களை பெரிது படுத்தாதீர்கள்.

இறைவாக்கினர்களின் குணநலங்களை பின்பற்ற ஒப்புக்கொடுப்போம்

‘ஆத்துமா ஆதாயம்’ என்பதில் தான் நாம் பெருமைப்பட வேண்டும். நம்முடைய ஆத்துமா கிறிஸ்துவின் சாயலை தரிப்பிக்க வேண்டும். புனிதர்களோடு நம் வாழ்க்கையை ஒப்பிட்டு பார்க்க வேண்டும், அப்போஸ்தலர்களோடு நம்மை ஒப்பிட்டு பார்க்க வேண்டும். இறைவாக்கினர்களை முன்மாதிரிகளாக கொள்ள வேண்டும், இறைவாக்கு உரைப்பதில் அல்ல, மாறாக துன்பங்களை தாங்குவதிலும், பொறுமையை கடைப்பிடிப்பதிலும் அவர்களை முன்மாதிரியாக கொள்ள வேண்டும். யோசித்து பாருங்கள், ஒருவேளை இந்த காரியத்தில் நாம் எங்கேயோ சறுக்கி இருப்போமானால், தவறி இருப்போமானால், வேறொன்றை முன்னாலே வைத்திருப்போமானால், இந்த நாளிலே மன்னிப்பு கேட்போம். தேவன் நம்மை அழைத்தது அவரை பின் செல்வதற்காக, அவரை போல மாறுவதற்காக, அவருடைய சிந்தையை கொண்டிருப்பதற்காக. ஆகவே, அதிலிருந்து நாம் தவறி போகிறோம் என்றால் உடனே மனம்மாற வேண்டும். “ஆண்டவரே எங்கோ நான் தவறு செய்துவிட்டேன் என்னை மன்னியுங்கள்; இனி அப்படி நான் செய்யமாட்டேன்” என்று நம்மை ஒப்புக்கொடுப்போம். இந்த

நாளிலே விசேஷமாய் இந்த காரியங்களை நம் உள்ளத்தில் அலசி ஆராய்ந்து பார்த்து, நம்முடைய விருப்பங்களை, ஆசைகளை, எண்ணங்களை எல்லாம் துருவிப் பார்த்து தேவனுடைய பார்வையிலே எல்லாம் நேர்த்தியாக இருக்கிறதா, தேவனுக்கு உகந்ததாக இருக்கிறதா, பாறையின் மேலே அஸ்திபாரம் போடுகிறோமா, அல்லது மணல் மேல் போட்டு கொண்டு போகிறோமா என்பதை உணர்ந்து பார்த்து மனம் மாறுவோம், அதற்காக நம்மை ஒப்புக்கொடுப்போம். ஒருவேளை அப்படி நடந்திருந்தால் நாம் ஆண்டவரின் சமூகத்திலே மன்னிப்பு கேட்போம். சரியான பாதையில் ஆண்டவரை பின் தொடர ஒப்புக்கொடுப்போம். ஆமென்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!

<u>29/04/2020</u>

ஆண்டவருக்கு அஞ்சி நட

சீராக்கின் ஞானம் 33:1 - ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர்க்குத் தீங்கு எதுவும் நேராது; அவர்களை அவர் சோதனையினின்று மீண்டும் மீண்டும் விடுவிப்பார்.

திருப்பாடல் 34:9 - ஆண்டவரின் தூயோரே, அவருக்கு அஞ்சுங்கள்; அவருக்கு அஞ்சுவோர்க்கு எக்குறையும் இராது.

ஆண்டவருக்கு அஞ்சி நடப்போரை தீங்கு எதுவும் நேராமல் அவர் மீண்டும் மீண்டும் விடுவிக்கிறார், திருப்பாடலில் இன்னும் அதிகமாய், தூயோரே, கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டவரே, கடவுளுக்கு சொந்தமானவரே, கடவுளால் தூய்மை ஆக்கப்பட்டவர்களே, கடவுளுக்கு அஞ்சுங்கள்; உங்களுக்கும்

எக்குறையும் இராது, அவர் மீண்டும் மீண்டும் விடுவிக்கிறார் என்கின்றது.

<u>கடவுளே கற்றுத் தருகிறார்!</u>

திருப்பாடல் 34 : 11 - வாரீர் பிள்ளைகளே! நான் சொல்வதைக் கேளீர்! ஆண்டவருக்கு அஞ்சுவதைப்பற்றி உங்களுக்குக் கற்பிப்பேன்.

இங்கு தாவீது, “கடவுளுக்கு அஞ்சுவதைப்பற்றி உங்களுக்குக் கற்பிப்பேன், பாடம் நடத்துவேன்” என்கின்றார். பரலோகம் சென்று வந்த ஊழியர்கள் சிலர் கூறுவது. பரலோகத்தில் நுழைவதற்கு முன்பாக, உத்திரிப்பு நிலையில், பரலோகத்தில் எப்படி எல்லாம் நடந்து கொள்ள வேண்டும், கடவுளுடைய மகிமை எப்படிப்பட்டது என்பதை பற்றி ஆண்டவர் அவருடைய தூதர்கள், புனிதர்களை அனுப்பி அவர்களுக்கு பாடம் எடுக்க வைப்பார்.

ஒரு அரசியல் தலைவரை பற்றி கேள்விப்பட்டது, அவரை சந்திக்க செல்லும் முன்பாக, மக்களுக்கும் அவரது கட்சி பிரமுகர்களுக்கும், எப்படி நிற்க வேண்டும், எப்படி விழ வேண்டும், வாயை திறக்க கூடாது என்று சொல்லி கொடுத்து தான் உள்ளே அழைத்து செல்வார்களாம். இந்த உலக மனிதருக்கே இப்படி என்றால் தேவாதி தேவன், ராஜாதி ராஜனை நாம் சந்திக்க போகும் முன்பு அவருடைய மகிமை அவருடைய கிருபை நமக்கு தெரியாததினாலே தேவனுக்கு எப்படி பயந்து நடக்க வேண்டும், அவருடைய பார்வையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும், ஆண்டவரை சந்திக்கும் பொழுது என்னென்ன வார்த்தைகள் பேச வேண்டும், கடவுளுக்கு முன்பாக எப்படி நடக்க வேண்டும் என்று கற்றுக் கொடுப்பார்கள். அதே போல தாவீது பூமியில் நாம் எப்படி ஆண்டவருக்கு அஞ்சி வாழ வேண்டும் என்று கற்றுக் கொடுக்கிறார்.

<u>பேய்களின் இறையச்சமும்! பிள்ளைகளின் இறையச்சமும்!</u>

யாக்கோபு 2:19 - கடவுள் ஒருவரே என்பதை நீங்கள் நம்புகிறீர்கள்; நல்லதுதான். பேய்களுங்கூட அவ்வாறு நம்பி அச்சத்தால் நடுங்குகின்றன.

பேய்களுங்கூட கடவுளுக்கு முன்பாக நிற்கமுடியாமல், அச்சத்தால் நடுங்குகின்றன என்கிறார் யாக்கோபு. பிசாசுகள் அஞ்சி நடுங்குகிறதற்கும், இறையச்சம் என்ற வார்த்தைக்கும் வித்தியாசம் என்ன? பிசாசுகள் ஆண்டவர் நம்மை தண்டித்து விடுவார், அவர் முன்பாக நிற்க முடியாது என்று அவரை கண்டு அஞ்சுகின்றன. ஆனால் மனிதர்களோ, புனிதர்களோ, வானதூதர்களோ தேவனிடத்தில் கொண்டுள்ள அச்சம் என்ன? அவர் மிக நல்லவராகவும், மிகுந்த அன்பும், இரக்கமும் நீடிய சாந்தமும் பொறுமையும் உள்ளவராக இருப்பதினாலே அவரை மனம் நோக செய்து விடக் கூடாது, அவரை வேதனைப்படுத்தி விடக் கூடாது, அவரை துயரப்படுத்தி விடக் கூடாது; அவர் ஒன்றை விரும்பி நாம் வேறொன்றை செய்துவிட்டு தேவனுக்கு மனம் வருத்தத்தை கொண்டு வரக் கூடாது; அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் இருந்து விடக் கூடாது; தேவனை பிரியப்படுத்த வேண்டும், சந்தோஷப்படுத்த வேண்டும் என்பது தான் அச்சம். அதை தான் தேவனுடைய பிள்ளைகள் கொண்டிருக்க வேண்டும்.

ஐயோ! தண்டித்து விடுவார், நரகத்திற்கு அனுப்பி விடுவார் என்ற அந்த பயம் பிசாசுக்கு தான் இருக்கும், ஆனாலும் அவை மனம் மாறுவதில்லை; தேவனுடைய விருப்பத்தை செய்வதில்லை; தங்களுடைய பாவ வழிகளில் இருந்தும் விலகவில்லை. அவைகள் பயந்து நடுங்கினாலும் அங்கு மனம் மாற்றமில்லை. ஆகையினால் தான் ஆண்டவருக்கு அஞ்சுவதை பற்றி உங்களுக்கு கற்பிப்பேன் என்று ஆண்டவர் சொல்கிறார்.

ஆண்டவருக்கு அஞ்சி நடக்கும் பொழுது நமக்கு வரும் ஆசீர்வாதங்கள் அளவிட முடியாத அளவிற்கு கிடைக்கும். அதை தான் பார்க்கிறோம், **"சீராக்கின் ஞானம் 33:1- ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர்க்குத் தீங்கு எதுவும் நேராது; இரண்டாவதாக, ஆண்டவருக்கு அஞ்சுவோர்க்கு எக்குறையும் இராது; அவர்களை அவர் சோதனையினின்று மீண்டும் மீண்டும் விடுவிப்பார்"** என்கிறார்**.**

இறையச்சம் கடவுளுடைய கட்டளைகளை கடைபிடிக்க வைக்கும்

இணைச்சட்டம் 6:2 - நீங்களும் உங்கள் பிள்ளைகளும், பிள்ளைகளின் பிள்ளைகளும், உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு அஞ்சி நான் உங்களுக்குக் கட்டளையிட்ட எல்லா நியமங்களையும் கட்டளைகளையும் உங்கள் வாழ்நாளெல்லாம் கடைப்பிடிப்பீர்களாக! இதனால், நீங்கள் நெடுநாள் வாழ்வீர்கள்.

இறையச்சம், ஆண்டவரை நோக செய்து விடக் கூடாது என்று கடவுளுடைய கட்டளைகளை கடைப்பிடிக்க வைக்கும். புனித மார்க்ரெட் மரியாள் கூட, **"ஆண்டவரே உம்மை நோக செய்யாத இருதயத்தை தாரும்"** என்று இப்படி தான் ஜெபித்தார். இறையச்சம் அந்த கட்டளைகளை வாழ்நாளெல்லாம் கடைபிடிக்க வைக்கும், இதனால் நெடுநாள் வாழ்வீர்கள், உங்களுடைய ஆயுள் காலத்திற்கு முன்பாக நீங்கள் சாகமாட்டீர்கள் என்று ஆண்டவர் கூறுகின்றார். இறையச்சம் இருந்தால் தேவன் பூமியில் வைத்திருக்கின்ற வாழ்நாட்களை நிறைவு செய்வோம். ஆயுளை கூட்ட கூடியது இறையச்சம்.

எசேக்கியா அரசனை குறித்து நாம் வாசிக்கும் போது இறையச்சத்துடன் வாழ்ந்தார். கடவுளுக்கு பயந்து கடவுளுடைய கட்டளைகள் எல்லாம் கீழ்ப்படிகிறார். ஆகையினால் தான் அவர் மரண நேரம் வந்த போது கண்ணீர் விட்டு, "ஆண்டவரே நான் உமக்கு முன்பாக எப்படி நடந்து கொண்டேன்; அதை நினைவு கூறும்" என்கிறார். அப்பொழுது அவருக்கிருந்த இறையச்சத்தாலே அவருடைய ஆயுசு நாட்களை 15 ஆண்டுங்கள் கூட்டிக் கொடுக்கிறார் ஆண்டவர்.

இஸ்ரயேல் மக்கள் அடிமைகளாய் இருந்தாலும் கூட அவர்கள் எண்ணிக்கையில் பலுகி பெருகினார்கள். அதனால் பார்வோன் மன்னன் அவர்களுக்கு பிறக்கின்ற ஆண் குழந்தைகளைக் கொன்று விடுமாறு மருத்துவச்சிகளுக்கு கட்டளைக் கொடுத்தான்.

விடுதலை பயணம் 1: 17 - ஆனால், அந்த மருத்துவப்பெண்கள் கடவுளுக்கு அஞ்சியிருந்ததால் எகிப்திய மன்னன் தங்களுக்குக் கூறியிருந்தபடி செய்யவில்லை. மாறாக, ஆண் குழந்தைகளையும் அவர்கள் வாழவிட்டார்கள்.

அவர்கள் எபிரேய பெண்கள் அல்ல, எகிப்திய பெண்கள் தான்; அந்த எகிப்திய மருத்துவ பெண்கள் கடவுளுக்கு அஞ்சியதால் அந்த ஆண் குழ்நதைகளை வாழ விடுகிறார்கள்.

விடுதலை பயணம் 1: 20 -21 ல் வாசிக்கிறோம், இதன்பொருட்டுக் கடவுள் மருத்துவப் பெண்களுக்கு நன்மை செய்தார். இஸ்ரயேல் மக்களையும் எண்ணிக்கையில் பெருகச் செய்தார். அவர்கள் ஆள்பலம் மிக்கவர் ஆயினர். இம்மருத்துவப் பெண்கள் கடவுளுக்கு அஞ்சியிருந்ததால், அவர் அவர்கள் குடும்பங்களைத் தழைக்கச் செய்தார்.

பெண்கள் கடவுளுக்கு அஞ்சியிருந்ததால், அவர்கள் குடும்பங்களை ஆண்டவர் தழைக்கச் செய்கின்றார். இறையுச்சம் தீமை செய்யவிடாமல் நம்மை தடுக்கும். இறையுச்சம் தான் விண்ணக ஞானத்தின் தொடக்கம்.

இறைமகனின் இறையச்சம்!

எபிரேயர் 5:7 - அவர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில், தம்மைச் சாவிலிருந்து காப்பாற்ற வல்லவரை நோக்கி உரத்த குரல் எழுப்பி, கண்ணீர் சிந்தி, மன்றாடி வேண்டினார். அவர் கொண்டிருந்த இறைப்பற்று கலந்த அச்சத்தை முன்னிட்டு, கடவுள் அவருக்குச் செவி சாய்த்தார்.

இயேசுவின் ஜெபத்தை குறித்த இந்த வசனம், என்னை மிகவும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. பவுலுக்கு ஒரு விசேஷித்த வரம் உண்டு. பவுல் விவிலியத்தில் உள்ள நிகழ்வுகளைக் குறித்து வாசிக்கும் போது அல்லது தியானிக்கும் போது, அது நடந்தது போலவே, நேரடியாக பார்ப்பது போலவே ஒரு அனுபவ வரம் பவுலுக்கு இருந்தது. ஆகவே தான் கடவுளே எனக்கு கற்றுக்கொடுத்தார் என்று குறிப்பிடுகின்றார். பவுல் இயேசுவோடு வாழவில்லை ஆனால், அவரோடு இருந்திருந்தால் எப்படி செய்திருப்பாரோ, அப்படியே செய்யக்கூடியவர் பவுல்.

இந்த வசனத்தைக் கூட பவுல் தனது இறை அனுபவத்தின் வாயிலாக எழுதுகின்றார், "இயேசு இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில், தம்மைச் சாவிலிருந்து காப்பாற்ற வல்லவரை நோக்கி உரத்த குரல் எழுப்பி,

கண்ணீர் சிந்தி, மன்றாடி வேண்டினார். அவர் கொண்டிருந்த இறைப்பற்று கலந்த அச்சத்தை முன்னிட்டு, கடவுள் அவருக்குச் செவி சாய்த்தார்". இறைமகனாகிய இயேசுவிற்கே தந்தையின்பால், இறைப்பற்று கலந்த இறையச்சம் இருந்தது. பயந்து நடுங்குவது அல்ல இறையச்சம்; அவரை நோக செய்து விடக் கூடாது; அவருடைய ஒரு வார்த்தைக் கூட மீறி விடக் கூடாது என்கின்ற இறையச்சம்; பக்தியோடு கலந்த இறையச்சம் இயேசுவிற்கு இருந்ததால், அவருடைய வேண்டுதலுக்கு தந்தை செவிசாய்த்தார் என்று போடப்பட்டிருக்கிறது. இறைமகனாகிய இயேசுவே இறையச்சத்தோடு, தெய்வ பயத்தோடு இருந்தார் என்றால் நாம் எப்படி இருக்க வேண்டும் என்று யோசித்து பார்ப்போம்.

இறையச்சம் முற்றும் கீழ்ப்படியும்!

புனிதமான வாழ்கை வாழ்ந்த **Fr. Leveil** “லெவேல்” என்னும் குருவானவர். சிவகங்கை மறைமாவட்டத்தில் சருகடி என்னும் ஊரில் உள்ள அவரது கல்லறையில், இன்றும் கூட அனேக அற்புதங்கள் நடைபெறுகின்றன, அவர் வாழ்ந்த காலத்தில், வயல்களில் பூச்சிகள் அதிகமாய் இருக்கின்றது என்று மக்கள் அவரிடம் வந்தபொழுது. ஒரு குருத்தோலையில், "இயேசுவே நான் உம்மில் நம்பிக்கை வைக்கின்றேன்" “JESUS I TRUST IN YOU” என்று எழுதி அதை வயலின் நடுவே நட்டுவைக்கவும், மேலும் குருத்தோலையை எரித்து வயலில் தூவிவிடக் கூறுவார். அப்பொழுது எல்லா பூச்சிகளும் அழிந்து போகுமாம்.

ஒரு நாள் அவரது காலில் ஏற்பட்ட காயத்திற்கு சகோதரி ஒருவர் வைத்தியம் பார்த்து, கட்டு ஒன்றை போட்டுவிட்டு, கால்களை தொங்கவிடாதீர்கள் என்று ஒரு மனை மீது வைத்துவிட்டு சென்றார். மாலையில் அந்த சகோதரி மீண்டும் வந்தபொழுது, “லெவேல்” அவர்கள் சிஸ்டர், எவ்வளவு நேரம் கால்களை இப்படியே வைத்திருக்க வேண்டும்? காலை இறக்கி வைக்கலாமா என்று கேட்டார், அந்த சகோதரிக்கு ஒன்றும் புரியவில்லை.

என்ன father காலையிலிருந்து உங்கள் கால்களை இறக்க வில்லையா என்று கேட்டார்.

நீங்கள் சொன்னதால் நான் காலை இறக்காமல் அப்படியே வைத்து கொண்டிருக்கிறேன் என்றார் லெவேல். இந்த கீழ்ப்படித்தலை பார்த்த

சகோதரி காலையில் இருந்து இன்னும் கால்களை அப்படியே வைத்திருக்கின்றீர்களா என்று மலைத்துப்போய் ஆச்சரியப்பட்டார். இறையச்சமே இத்தகைய கீழ்ப்படித்தலை கற்றுக்கொடுக்கும்.

சபை ஒழுங்குகளில் திருப்புகழ்மாலை என்னும் புத்தகத்தில் உள்ள ஜெபங்களை தினமும் சொல்ல வேண்டும். அந்தகாலத்திலே பெரும்பாலும் கிராமங்களிலே சரியான விளக்கும், வெளிச்சமும் இருக்காது. ஆனாலும், கீழ்ப்படிதலோடு ஒரு மனையின் மேல் ஏறி நின்று அந்த வெளிச்சத்தில் எல்லா ஜெபங்களையும் வாசிப்பார்களாம்.

இந்த இறையச்சம் தான் ஜெபிக்கும் பொழுது கடவுளிடம் இருந்து பலனை பெற்றுத் தருகின்றது. நான் தினமும் ஒரு மணி நேரம் ஜெபிக்கிறேன், விவிலியம் வாசிக்கிறேன் இது போதும் என்று அநேகர் நினைகின்றார்கள். ஆனால் இறையச்சம் என்பது 24 மணி நேரமும் வேலை செய்யும் என்பதை மறந்துவிடுகிறார்கள். இரவும் பகலும் எல்லா சூழ்நிலையிலும் கடவுளை மனம் நோக செய்துவிடக் கூடாது என்பது தான் இறையச்சம்.

இறையச்சம் அடுத்து என்ன செய்யவேண்டும் என்று வெளிப்படுத்தும்!

திருத்தூதர் பணி 10:2-4 : அவர் இறைப்பற்றுள்ளவர்; தம் வீட்டார் அனைவருடனும் கடவுளுக்கு அஞ்சி நடந்தவர்; மக்களுக்கு இரக்கச் செயல்கள் பல புரிந்தவர்; இடைவிடாது கடவுளிடம் மன்றாடிவந்தவர். ஒரு நாள் பிற்பகல் மூன்று மணியளவில் அவர் ஒரு காட்சி கண்டார். அதில் கடவுளுடைய தூதர் அவரிடம் வந்து "கொர்னேலியு" என்று அழைப்பது தெளிவாகத் தெரிந்தது. அவர் வானதூதரை உற்றுப்பார்த்து, "ஆண்டவரே, என்ன?" என்று அச்சத்தோடு கேட்டார். அதற்குத் தூதர், "உமது வேண்டல்களும் இரக்கச் செயல்களும் கடவுள் திருமுன் சென்றடைந்துள்ளன; அவற்றை அவர் நினைவில் கொண்டுள்ளார்.

கொர்னேலியு என்னும் நூற்றுவர் தலைவர், அவர் மட்டும் அல்ல தன் வீட்டார் முழுவதும் இறையச்சம் உடைவார்களாக இருக்கின்றனர். ஆகவே, வானதூதரை அவர் காட்சியில் தெளிவாக காண்கின்றார்,

தான் அடுத்து என்ன செய்யவேண்டும், பேதுருவை வீட்டிற்கு அழைக்க வேண்டும் என்று கடவுள் வெளிப்படுத்துகின்றார். இறையச்சம் நாம் அடுத்து என்ன செய்யவேண்டும் என்று நமக்கு வெளிப்படுத்தும்.

- இறையச்சமே நமது ஜெபத்திற்கு பதிலை கொண்டு வரும்.
- இறையச்சமே நமது சோதனையில் கடவுள் நம்மை மீண்டும் மீண்டும் மீட்க வைக்கும்.
- இறையச்சமே விண்ணக ஞானத்தின் தொடக்கம்.
- இறையச்சமே தீமையில் இருந்து நம்மை பாதுகாக்கும்.
- இறையச்சமே நாம் அடுத்து என்ன செய்யவேண்டும் என்று நமக்கு வெளிப்படுத்தும்.

இறையச்சம் எல்லா நேரத்திலும் இருக்க வேண்டும்!

எபேசியர் 4 : 30 - கடவுளின் தூய ஆவியார்க்குத் துயரம் வருவிக்காதீர்கள். மீட்பு நாளை முன்னிட்டு உங்கள்மீது பொறிக்கப்பட்ட முத்திரையாக அவர் இருக்கிறார்.

இறையச்சத்தோடு வாழ்கின்றோமா என்று யோசித்து பார்ப்போம். ஜெப நேரத்தில், தியான நேரத்தில், ஆலயத்தில் இருக்கும் நேரத்தில், மட்டுமல்ல எல்லா நேரத்திலும் நமக்குள் இருக்கும் தூய ஆவியார்க்குத் துயரம் வருவிக்க கூடாது. இறையச்சம் உடைய பெண்ணே புகழப்படுவாள் என்று எழுதப்பட்டுள்ளது, இன்றைக்கு இறையச்சத்தோடு வாழ்கின்றோமா, எல்லா நேரத்திலும் நடக்கின்றோமா என்று யோசித்து பார்ப்போம். அப்படி இல்லையென்றால் ஆண்டவர் நம்மை வாரீர் பிள்ளைகளே! என்று அழைக்கின்றார்.

திருப்பாடல் 34 : 11 - வாரீர் பிள்ளைகளே! நான் சொல்வதைக் கேளீர்! ஆண்டவருக்கு அஞ்சுவதைப்பற்றி உங்களுக்குக் கற்பிப்பேன்.

இத்தகைய இறையச்சத்தை ஆண்டவரிடம் கேட்போம் அவர் நமக்கு கற்றுத்தர ஆவலாய் இருக்கின்றார். இன்றைக்கு நம்மையே ஒப்புக்கொடுத்து ஜெபிப்போம். ஆமென்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!

10/05/2020

இயேசு தரும் பேரமைதி

யோவான் 14:27 - அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன்; என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்குத் தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றது அல்ல. நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம்; மருள வேண்டாம்.

இங்கு இயேசு கூறுகின்றார், நான் தரும் அமைதி உலகம் தருகின்ற அமைதி போன்றது அல்ல.

இதையே புனிதர்கள் மற்றொரு விதத்தில் கூறுகின்றார்கள். உலகம் என்ன அமைதியை கொடுக்கிறது? உலகம் ஒரு பெருமைப்பிடித்தவனை பார்த்து "இன்னும் உன்னையே உயர்த்திக்கொள், நீ இன்னும் மேன்மை அடைய வேண்டும், நீ இன்னும் பேரும் புகழும் அடைய வேண்டும்" அப்படியென்று அவனுக்கு சொல்லுகிறது. அவனும் தனது பேர், புகழுக்காக எல்லாவற்றையும் செய்கின்றான். அந்த பெயரை காப்பாற்றிக் கொள்வதற்காக, கௌரவத்தை காப்பாற்றிக் கொள்வதற்காக, சிலர் தற்கொலை கூட செய்து கொள்கின்றனர். உயிரைக் கூட விட்டு விடுகின்றனர். ஆனால், இந்த உலகம் அவர்களுக்கு எந்த அமைதியையும் கொடுக்கவில்லை. மாறாக, அவர்களுக்கு நிம்மதியில்லாத நிலையை, தூக்கமில்லாத இரவுகளை கொடுக்கிறது; மன சஞ்சலத்தையும், வேதனையையும் கொடுக்கிறது. இது தான் இந்த உலகம் தருகின்ற அமைதி.

உலகம் தருகின்ற அமைதி

உலகம், “பேர் புகழ்” தான் உண்மையான அமைதி என்று சொல்லிக் கொடுக்கிறது, ஆனால், நிறைய மனிதர்கள் இந்த பேர் புகழ் வந்ததால், அதை காப்பாற்றிக்கொள்ள தற்கொலை செய்து

கொள்கின்றனர். அதே போல, பண ஆசை உள்ளவனுக்கு ‘இன்னும் நிறைய சேர்த்து வை’ என்று தான் இந்த உலகம் சொல்லிக் கொடுக்கிறது. அது தான் சந்தோஷத்தைக் கொடுக்கும் என சொல்லுகின்றது, அவர்களும் பணக்காரன் ஆகிவிட வேண்டும் என்கிற ஆசையிலே, இரவும் பகலும் பார்க்காமல் ‘பணம் பணம்’ என்று அலைந்து உழைக்கிறார்கள். கடைசியில் அந்த பணம் அவர்களுக்கு சஞ்சலத்தையும், வேதனையையும் கொண்டு வருகிறது, நிம்மதியை இழந்து போகச் செய்கிறது. இரவும் பகலும் பார்க்காமல் உழைப்பதால் வியாதிகளையும் கொண்டு வருகிறது. ஒரு தனிமை உணர்வும், வேதனையும் தான் அவர்களை வாட்டுகிறதே ஒழிய, வேறொரு அமைதியை இந்த உலகம் கொடுப்பதில்லை. அவர்களோடு இருப்பவர்களும் பணத்திற்காக உள்ளவர்களே தவிர உண்மையான அன்பினால் உள்ளவர்கள் அல்ல. இறுதியில் பயமும், நடுக்கமும் தான் அவர்களுக்கு மிஞ்சும். இது தான் உலகம் தர கூடிய அமைதி. இந்த உலகின் மேல் பற்று உள்ளவர்களுக்கு அது சொல்லிக் கொடுப்பது, “மனம் போன போக்கில் நீ சந்தோஷமாக இரு, உனக்கு எது எல்லாம் பிடிக்குமோ அதை அனுபவி அப்பொழுது தான் உனக்கு சந்தோஷம்” என்று சொல்லி கொடுக்கிறது. கடைசியில் அவர்களை சுயநலமுள்ளவர்களாக மாற்றி, இந்த உலகம் அவர்களை வெறுத்தும் விடுகிறது.

ஆண்டவர் தரும் அமைதி

ஆண்டவர் இயேசு, **“என் அமைதியை உங்களுக்கு கொடுக்கிறேன், நான் உங்களுக்கு தரும் அமைதி உலகம் தருகின்ற அமைதியை போன்றது அல்ல, நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம்”** என்று கூறுகின்றார். அப்படி ஒரு மெய்யான அமைதியை ஆண்டவர் நமக்கு கொடுக்கிறார். உண்மையான சமாதானத்தை கொடுக்கிறார். இந்த அமைதியைப் பெற்று கொண்டவர்கள், அவர்களின் மரண நேரத்தில் கூட அந்த அமைதியை அவர்களிடம் இருந்து எடுத்து விட முடியாது. ஆகவே, நாம் உள்ளம் கலங்க வேண்டாம்.

இந்த அமைதியை பெற்று கொள்ள ஆண்டவர் சில காரியங்களை சொல்லி இருக்கின்றார். இது நமக்கு ஏற்கனவே தெரிந்தது தான்.

மத்தேயு 11:28,29 - மேலும் அவர், "பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

“தாழ்ச்சியும், சாந்தமும் மனிதனுடைய இருதயத்திலே அமைதியை கொடுக்கும். இதை கற்று கொள்ளுங்கள்” என்று சொல்கிறார், நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து.

புனிதர்கள் கற்றுத் தரும் அமைதியின் வழி

பல புனிதர்கள் மற்றொரு காரியத்தை நமக்கு கோடிட்டு காட்டுகிறார்கள். கிறிஸ்து நாதர் அனுசாரத்திலே, இந்த அமைதியை பெற்றுக்கொள்வதற்கு, ஆண்டவர் இயேசு சொன்ன இன்னொரு வார்த்தையை அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

யோவான் 12:24 - கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியா விட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.

தமிழில், "கோதுமை மணி மண்ணில் விழுந்து சாகாவிட்டால் அது அப்படியே இருக்கும்" என போடப்பட்டுள்ளது.

ஆனால் கிரேக்க மொழியில், "கோதுமை மணி மண்ணில் விழுந்து சாகாவிட்டால் அது அப்படியே “தனிமையாக” இருக்கும்" (availed alone) என இன்னொரு வார்த்தை சேர்த்துப் போடப்பட்டிருக்கிறது.

அந்த தனிமை என்ற வார்த்தைக்கு "MONOS" என்கிற கிரேக்கச் சொல் பயன்படுத்தப்படுகிறது. “MONOS” என்ற வார்த்தைக்கு தனிமைப்படுத்துதல் (loneliness), உதவியற்று இருத்தல் என்பது பொருள். அப்படியென்றால், கோதுமை மணி மடியாவிட்டால் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் இருக்கும். உதவியற்ற நிலையிலே இருக்கும். அதனால் யாருக்கும் ஒரு பிரயோஜனமும் இல்லை. அது இருப்பதும் ஒன்று தான் இல்லாமல் போவதும் ஒன்று தான். அதுமட்டுமல்ல, அதுவும் ஒரு தனிமை உணர்வில் தான் இருக்கும். ஆகையினாலே தான் அங்கே அமைதி இல்லை.

மடிந்தால் தான் சமாதானம்

ஆண்டவர் இயேசு, "என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்குத் தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றது அல்ல" என்கிறார். இந்த உலகம், “எல்லா சந்தோஷங்களையும் அனுபவி; அப்பொழுது தான் உனக்கு அமைதி” என்று சொல்லும். ஆனால், ஆண்டவர் இயேசு அப்படி சொல்லவில்லை. மண்ணில் விழுந்து மடிந்தால் தான் அந்த சமாதானத்தைப் பெற்று கொள்ள முடியும் என்று சொல்கிறார். மடியாததததினாலே சமாதானம் இல்லை; கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிவதென்றால், தனக்கு தானே மடிவது. தன்னுடைய விருப்பு, ஆசைகள் எல்லாவற்றிற்கும் மடிவது. அப்படி மடியும் போது தான் மிகுந்த விளைச்சலைக் கொடுக்கும். இல்லையென்றால், அது தனிமைப்படுத்தப்பட்டதாய் இருக்கும்; தனிமை உணர்வு தான் அதற்கு இருக்கும். ஒரு சுகபோகத்திற்கோ, உலக காரியங்களுக்கோ அடிமைகளாய் இருக்கும் போது, அது எப்படி விளைச்சலை கொண்டு வர முடியும்? இந்த உலக வாழ்க்கையிலே மடிந்து கிறிஸ்துவுக்காக வாழும் போது தான் பலனை கொடுக்க முடியும்.

மூன்று வேளையும் சரியாக சாப்பிட்டு விட வேண்டும், நேரத்திற்கு தூங்கி விட வேண்டும் என்று இருப்பவர்கள் கடவுளுக்கு என்ன பலனை கொடுக்க முடியும் என்று யோசித்து பார்ப்போம். **"You must die for yourself".**

அருமையான, சகோதரனே! சகோதரியே! நீங்கள் உங்களுக்கு சாக வேண்டும். சாகாவிட்டால் பலன் கொடுக்க முடியாது. சாகும் பொழுதுதான் பலன் கொடுக்க முடியும். தனக்குத் தானே மரிக்காமல் நாம் பலன் கொடுக்க முடியாது. நாம் பலன் கொடுக்க வேண்டுமானால், நமக்கு நாமே மரிக்க வேண்டும். அப்பொழுது தான் மிகுந்த விளைச்சலை கொடுக்க முடியும்.

எதற்கு எல்லாம் சாக வேண்டும்?

சாவது என்றால் நம் விருப்பு வெறுப்புகளை மேற்கொள்வது. நன்றாக சாப்பிட வேண்டும் என்ற விருப்பத்திற்கு சாக வேண்டும், நமக்கு எந்த ஒரு கஷ்டமும் வந்து விடக் கூடாது என்ற எண்ணத்திற்கு சாக வேண்டும். இந்த உலகத்திலே ஒரு ஆடம்பரமான வாழ்க்கை வாழ

வேண்டுமென்று நினைக்கின்றோம், அதற்கு சாக வேண்டும். “மரணம்” என்று சொல்லும் பொழுது மரித்தவனுக்கு இந்த பூமியிலே பங்கு இல்லாமல் போய் விடுகிறது, இந்த பூமியிலே உறவு இல்லாமல் போய் விடுகிறது, இந்த பூமியில் உள்ளவர்களுக்கு தொடர்பு இல்லாமல் போய் விடுகிறது. இந்த பூமியிலே இருக்க கூடிய லாப சந்தோஷங்கள் எல்லாம் போய் விடுகிறது. அது தான் மரணம்.

உலகத்திற்கு மரித்தல் (உதாரணம்)

ஒரு புனிதரிடத்தில் ஒருவர், “நான் உங்களுக்கு சீடனாக விரும்புகிறேன்” என்று கேட்டார். அதற்கு குரு, “நீ ஒரு கல்லறைக்கு போ, அங்கு மரித்தவர்களைப் பார்த்து, எவ்வளவு திட்ட முடியுமோ அவ்வளவு கேவலமாக திட்டு” என்று சொன்னார். “அரை மணி நேரம் அப்படி திட்டிவிட்டு வா” என்று சொன்னார். அந்த சீடனும் அப்படியே திட்டிவிட்டு அவரிடம் வந்தார். மறுபடியும் அந்த குரு சீடனை பார்த்து, இப்பொழுது போய் அந்த கல்லறையில் உள்ள மரித்தவர்களைப் பார்த்து, “அரை மணி நேரம் எவ்வளவு புகழ முடியுமோ அவ்வளவு புகழ்ந்து விட்டு வா” என்று சொன்னார். அப்படியே அந்த சீடரும் அரை மணி நேரம் புகழ்ந்து விட்டு வந்தார். குரு, “என்ன நடந்தது?” என்று சீடனை பார்த்து கேட்க, அவர், “ஒன்றும் நடக்கவில்லையே” என்று சொன்னார். அப்பொழுது குரு, "இது தான் இந்த உலகத்திற்கு மரித்தல்" என்று சொன்னார். “யார் திட்டினாலும் புகழ்ந்தாலும் உன்னை பாதிக்காமல் இருப்பதும், அது உன்னை தீண்டாமல் இருப்பதும் தான் இந்த உலகத்திற்கு மரித்தல்” என்று சொன்னார். அப்பொழுது தான் கிறிஸ்துவுக்கு சீடனாக முடியும், பலன் கொடுக்கவும் முடியும்.

சுயத்தை மறுப்பதே உலகத்திற்கு மரித்தல்

நாம் இந்த உலகத்திற்கு மரிக்க வேண்டும்; தனக்குத் தானே மரிக்க வேண்டும்; அப்பொழுது தான் நாம் பலன் கொடுக்கிறவர்களாக மாற முடியும், இல்லையேல் சுயம் நமக்குள் எழும்பி பல தீமைகளை செய்து விடுகிறது; பல பாவங்களையும், மற்றவர்களுக்கு வேதனைகளையும் கொடுத்து விடுகிறது. சுயம் நமக்குள் சாகாமல்,

நாம் கிறிஸ்துவுக்காக கனி கொடுக்க இயலாது. அது மரிக்கும் போது தான் மிகுந்த கனிகளை நாம் கொடுக்க முடியும். கடவுள் ஒரு கனி கொடுக்கிற வாழ்வை நமக்கு கொடுத்திருக்கிறார், ஒரு அமைதி நிறைந்த வாழ்வை கொடுத்திருக்கிறார்; நம் விருப்பு, வெறுப்புகளுக்கு நாம் மடியும் போதுதான், இந்த அமைதி நம் உள்ளத்திற்கு வரும். அது தான் நிரந்தர அமைதி. சுயத்தின் மீது பற்று இல்லாமல் இருப்பது தான் தேவன் கொடுக்கிற அமைதியை அனுபவிக்க கூடிய ஒரே வழி. இந்த உலக ஆசைகளை உள்ளே நிறைய வைத்து கொண்டிருக்கிறவர்கள் எப்படி தேவன் கொடுக்கிற இளைப்பாறுதலையோ, அமைதியையோ அனுபவிக்க முடியும்?

உலக அமைதி ஒரு மாயை

இந்த உலகத்திலே அமைதி இல்லை. அமைதி இல்லாத இந்த உலகத்தின் காரியங்களை ஆர்வமாக தேடி கொண்டிருக்கும் போது, நம் உள்ளத்திலே எப்படி அமைதி உண்டாகும் என யோசித்து பார்ப்போம். நம்முடைய அமைதி அற்ற தன்மைக்கெல்லாம் காரணம் உலகத்தின் காரியங்களில் நாம் அமைதி அடைவதற்கு முயற்சி செய்வது தான். இந்த உலகம், “அமைதியை கொடுக்கிறேன்” என்று சொல்லும்; ஆனால் ஒரு போதும் அது கொடுக்காது.

ஆண்டவர் இயேசு மட்டுமே இந்த அமைதியை கொடுக்கிறார். அந்த அமைதியை பெற வேண்டுமானால் நம்மை நாமே வெறுக்க வேண்டும்; கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிவது போல நமக்கு நாமே மடிய வேண்டும். நம் விருப்பு, வெறுப்புகளுக்கு நாம் மரிக்க வேண்டும். அப்படி மரிக்கும் போதுதான் ஆண்டவர் கொடுக்கிற அந்த மெய்யான அமைதியை நாம் அனுபவிக்க முடியும். அப்போஸ்தலர்கள் அப்படி மரித்து போய் இருந்ததினாலே, அவர்களை சிறையில் போட்டார்கள், சாட்டையால் அடித்தார்கள், ஆனாலும் அவர்கள் உள்ளத்திலே ஆண்டவர் இயேசு கொடுத்திருந்த அந்த **‘பேரமைதி’** நிலைக்கொண்டிருந்தது. ஆண்டவர் இயேசு இந்த பூமிக்கு அமைதியை தான் கொண்டு வந்தார். ஆனால் பூமியையே அதிகமாய் விரும்பி தேடுகிறவர்களுக்கு இந்த அமைதி எப்படி உண்டாகும்? அது ஆச்சரியமானது, பூமி கொடுக்கிற அமைதியை ஆண்டவர் கொண்டு வரவில்லை. ஆண்டவர் கொடுக்கிற அமைதி வேண்டுமானால், இந்த பூமியை துச்சமாக எண்ணுகிறவர்கள் தான்

ஆண்டவரது அமைதியை பெற முடியும். ஆகவே, இன்றைக்கு யோசித்து பார்ப்போம்!

நமது நிலை என்ன?

நாம் உண்மையிலே மரித்து இருக்கிறோமா அல்லது இந்த பூமியில் தான் அமைதியை தேடிக் கொண்டிருக்கிறோமா? பூமியில் அமைதி இல்லை; அது பணத்தைக் கொடுக்கும், புகழைக் கொடுக்கும், உலக சந்தோஷங்களைக் கொடுக்கும்; ஆனால், உண்மையான அமைதியைக் கொடுக்காது . அதை இயேசு மட்டும் தான் கொடுக்கிறவர். அந்த உண்மையான அமைதி வேண்டுமானால் இந்த உலகத்திற்கு நாம் மரிக்க வேண்டும். அப்படி மரிக்காத வரைக்கும் அந்த அமைதியை நாம் பெற்றுக் கொள்ள முடியாது. ஆகையால், இன்றைக்கு அதை யோசித்து பார்த்து, நம்மை ஒப்புக்கொடுப்போம்.

நம்மை மறுத்து, நாம் மரித்தால் ஒழிய கனி கொடுக்க முடியாது, கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே தான் இருக்கும். இறை அமைதி நம் உள்ளத்திலே தங்க வேண்டுமானால் இதை செய்து தான் ஆக வேண்டும். ஆகவே, நம்முடைய விருப்பு வெறுப்புகளை எல்லாம் தூக்கி எறிந்து தேவனுடைய விருப்பம் என்ன என்று பார்ப்போம். சிலர் சாப்பாட்டிற்கு அடிமைகளாக இருக்கிறார்கள், சாப்பிடும் நேரம் வந்து விட்டால் உடனே சாப்பிட்டு விடுவார்கள். சிலர் தூக்கத்திற்கு அடிமைகளாக இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்படி இருந்தால் தேவனுக்கு எப்படி நாம் ஊழியம் செய்ய முடியும்? இப்படி இருந்தால் நாம் உலகத்திற்கு ஊழியம் செய்கிறவர்களாகவே இருக்கிறோம். தேவனுக்கு எப்படி ஊழியம் செய்ய முடியும்? இது கடவுளை பிரியப்படுத்துகிற வாழ்க்கை அல்ல. நம்மை பிரியப்படுத்துகிற வாழ்க்கை, இந்த வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்று எப்படி நினைக்க முடியும்? தேவனுக்கு ஊழியம் செய்கிறவர்கள் தன்னை மறுத்து தான் ஆக வேண்டும். தன்னுடைய விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு தான் ஜீவிக்க வேண்டும். நம்மை திருப்திப்படுத்தியே வாழ்ந்து கொண்டிருப்போமானால் இன்றைக்கே ஒப்புக்கொடுப்போம், மனம் மாறுவோம். ஆமென்!

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!

13/04/2020

இரக்கமுடையோர் பேறுபெற்றோர்

மத்தேயு 5:7 - இரக்கமுடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்.

எல்லாருக்கும் தெரிந்த ஒரு குணம் இரக்கம். ஆண்டவர் மிகுந்த இரக்கம் உள்ளவர் என திருவிவிலியத்தில் வாசிக்கிறோம். இரக்க குணம் கடவுளுடைய குணம், பொதுவாக பெற்றோர் பிள்ளைகள் மீது இரக்கம் காட்டுவர். அதைவிட பெரியது கடவுளுடைய குணம். ஆனால், அதே குணத்தை கடவுள் மனிதரிடமும் எதிர்பார்க்கிறார். அந்த இரக்க குணம் இருப்பதால் பல நன்மைகள் வரக்கூடும், பல ஆசீர்வாதங்கள் வரக்கூடும்.

இரக்கத்தில் மகிழ்ச்சி

நீதிமொழிகள் 11:17 – இரக்கமுள்ளோர் தம் செயலால் தாமே நன்மை அடைவர்; இரக்கமற்றோரோ தமக்கே ஊறு விளைவித்துக் கொள்வர்.

இரக்க குணம் முதலில் தனக்கே நன்மை கொண்டு வருகிறது என வேதம் சொல்கிறது. நாமே நன்மை அடைவதற்கு இந்த இரக்க குணம் உதவி செய்கிறது.

நீதிமொழிகள் 19:17 - ஏழைக்கு இரங்கி உதவிசெய்கிறவர் ஆண்டவருக்குக் கடன் கொடுக்கிறார்; அவர் கொடுத்ததை ஆண்டவரே திருப்பித் தந்துவிடுவார்.

இரக்க குணத்தோடு மற்றவர்களுக்கு, பண உதவியோ பொருள் உதவியோ செய்யும் போது கடவுளுக்கு கடன் கொடுக்கிறார்கள். ஆண்டவர் இயேசுவும் நியாயத்தீர்ப்பில் சிறியவர்களாகிய இவர்களுக்கு எதை செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று சொன்னார்.கடவுளை மனதில் வைத்து அந்த உதவிகளை செய்யும் போது நிச்சயமாக அந்த உதவி அவருக்கு தான் வந்து சேரும். ஆண்டவரும் கொடுத்ததை திருப்பி தந்து விடுவார், கைம்மாறு கிடைக்கும்.

நீதிமொழிகள் 14:21 – ஏழைக்கு இரங்குகிறவர் இன்பம் துய்ப்பார்.

ஏழைகளுக்கு உதவி செய்பவர்களுக்கு, ஆண்டவர் சந்தோஷத்தை கொடுப்பார். ஏழைகளுக்கு உதவி செய்யும் போதே அவர்களுக்கு சந்தோஷத்தை, மன மகிழ்ச்சியை கொண்டு வந்துவிடும். அதையே, புனித அன்னை தெரேசா, ஏழையின் சிரிப்பில் இறைவன் என்று சொன்னார். ஒவ்வொரு நோயாளிகளிடத்திலும் அவர் இயேசுவை பார்த்தார். அந்த இரக்க குணமே ஒரு மகிழ்ச்சியை அவர்களுக்கு கொண்டு வந்தது.

திருப்பாடல் 41:1-3 - எளியோரின் நலனில் அக்கறை கொள்பவர் பேறுபெற்றவர்; துன்ப நாளில் ஆண்டவர் அவரை விடுவிப்பார். ஆண்டவர் அவரைப் பாதுகாப்பார்; நெடுங்காலம் வாழவைப்பார்; நாட்டில் பேறுபெற்றவராய் விளங்கச் செய்வார்; எதிரிகளின் விருப்பத்திற்கு அவரைக் கையளிக்க மாட்டார். படுக்கையில் அவர் நோயுற்றுக் கிடக்கையில் ஆண்டவர் அவருக்குத் துணை செய்வார்; நோய் நீங்கிப் படுக்கையினின்று அவர் எழும்பும்படிச் செய்வார்.

ஏழை எளியவர்களின் மேல் அக்கறை காட்டுபவர்களுக்கு ஆண்டவர் அவர்கள் துன்ப வேளையில் விடுவிப்பார். நாம் வேதனையில் இருப்பவருக்கு உதவி செய்யும் போது, நம்முடைய துன்பத்திலிருந்து ஆண்டவர் விடுவிப்பார். உலகத்தில் நாம் இருக்கும் வரை நமக்கு துன்பம் உண்டு, உபத்திரவம் உண்டு. நாம் வியாதி படுக்கையில் இருக்கும் போது, நமக்கு யாருடைய உதவியாவது தேவை அப்பொழுது ஆண்டவரே வந்து உதவி செய்வர். அப்படி நாம் வியாதியில் இருக்கும் போது, பல்வேறு சோதனைகளும் சோர்வுகளும் வரும், ஏன் தற்கொலை எண்ணம் கூட வரும். அப்பொழுது ஆண்டவர் ஏழைகளுக்கு இரக்கம் காட்டுபவர்களுக்கு உதவி செய்வர், அவர்களுடைய வாழ்க்கை படுக்கையிலேயே முடியாத படி அவர்களை எழும்ப செய்கிறார்.

நேர்மையாளர் மரபினரின் இறை ஆசீர்

திருப்பாடல் 37:26 – நேர்மையாளர் எப்போதும் மனமிரங்கிக் கடன் கொடுப்பர்; அவர்களின் மரபினர் இறையாசி பெற்றவராய் இருப்பர்.

ஆண்டவர் நமக்கு செவிகொடுக்க வேண்டும் என்றால் ஏழைகளுக்கு இரங்கி கடன் கொடுக்க வேண்டும். இந்த இரக்க குணம் கடவுளுடைய பிள்ளைகளுக்கு கடவுள் கொடுக்கும் ஒரு பாக்கியம். அப்படி மனம் இரங்கி கடன் கொடுக்கும் போது, அவர்களது மரபினர் (பிள்ளைகள்) கடவுளுடைய ஆசீர் பெற்றவர்களாக இருப்பார்கள். ஆனால், இரக்க குணம் இல்லாதவர்களுக்கு சில தண்டனைகளும், பிரச்சினைகளும் கூட வரும்.

நீதிமொழிகள் 21:13 ஏழை கூக்குரலிடும்போது எவன் காதைப் பொத்திக் கொள்கிறானோ, அவன் தானே உதவிக்காக மன்றாடும்போது எவரும் அவனுக்குச் செவி கொடுக்கமாட்டார்.

யாக்கோபு 2:13 - ஏனெனில் இரக்கம் காட்டாதோருக்கு இரக்கமற்ற தீர்ப்புதான் கிடைக்கும். இரக்கமே தீர்ப்பை வெல்லும்.

இரக்கமும் தீர்ப்பும் எதிரானவை போல தோன்றினாலும், இரண்டும் ஒன்றோடொன்று ஒத்து போக வேண்டும். ஆனால், இரக்கமே முன்னே செல்லும்.

அரசன் அதொனிபெசேக்:

நீதித்தலைவர்கள் 1:6,7 - தப்பி ஓடிய அதோனிபெசக்கை அவர்கள் துரத்திச் சென்று பிடித்து, அவனுடைய கை, கால்களின் பெருவிரல்களைத் துண்டித்தனர்.
அப்பொழுது, அதோனிபெசக்கு, "கை, கால்களின் பெருவிரல்கள் துண்டிக்கப்பட்ட எழுபது அரசர்கள் என் உணவு மேசையிலிருந்து சிதறியவற்றைப் பொறுக்கினார்கள். நான் செய்தவாறே, கடவுள் எனக்குச் செய்துள்ளார்" என்றான். அவனை எருசலேமுக்குக் கொண்டு வந்தனர். அவன் அங்கே இறந்தான்.

ஒரு கொடூர அரசன். தன் எதிரி அரசர்களை பிடித்து அவர்களின் கை மற்றும் கால்களின் பெருவிரலை துண்டித்து தன் உணவு மேஜையின் கீழ் நாய்கள் உண்ணுமாறு போடுவான். ஒரு நாள் தன் எதிரிகள் அவனை பிடித்து அவனுக்கும் அவ்வாறே செய்தனர்.
“நான் செய்தவாறே, கடவுள் எனக்குச் செய்துள்ளார்” என்று சொல்லி அவன் இறந்தான். இரக்கமில்லாத தீர்ப்பு கொடுப்பவருக்கு, இரக்கமில்லாத தீர்ப்பு இந்த பூமியிலேயே கிடைக்கும்.

நமது இரக்க குணத்தை நாம் இழந்து விடக்கூடாது

பிறருக்கு பண உதவி செய்வது இரக்க குணம் தான் ஆனால் அது மட்டுமே இரக்க குணம் என்று நாம் எண்ணிவிட கூடாது. சிலர் செய்கின்ற ஏமாற்று வேலைகளால் நாம் இரக்கம் காட்ட பயப்படுகிறோம். அவன் ஏமாற்றினால் அதற்கு அவன் கணக்கு கொடுப்பான், அதனால் நமது இரக்க குணத்தை நாம் இழந்து விடக்கூடாது.அந்த இரக்க குணத்திற்கு கட்டாயம் நமக்கு இறைவனிடமிருந்து பலன் உண்டு. ஆண்டவரே கூட ஏழைகளை போல மனித உருவில் வந்து நம் உதவியை பெறுகிறார்.

இரக்கத்தின் செயல்கள்

முதியோர்,பார்வையற்றோர் சாலைகளை கடக்க உதவி செய்வது ஒரு இரக்க குணம் தான். பணம் தர இயலாதவர்கள் வேறு முறையில் உதவி செய்யலாம். கார்மெலில் உள்ள சகோதரிகள் ஏழைகளை பார்க்க முடியாது ஆனால் அவர்களுக்காக ஜெபிப்பது இரக்க குணம் தான். இரக்க குணம் தான் நம்மை ஆழமாக ,பாரப்பட்டு ஜெபிக்க வைக்கும்.

இயேசுவின் இரக்கம்

தொழுநோயாளி இயேசுவிடம் வந்து ஆண்டவரே என்னை குணமாக்கும் என்று சொன்னபோது ஆண்டவர் இரக்கப்பட்டு அவரை குணமாக்கினார் என்று விவிலியத்தில் வாசிக்கிறோம். இயேசு அந்த மக்கள் மீது வைத்திருந்த இரக்கமே இரவு முழுவதும் அவர்களுக்காய் தந்தையிடம் ஜெபிக்க வைத்தது.

அனுதாபமா! இரக்கமா!

நாமும் பிறர் துன்பத்தை பார்த்து “ஐயோ பாவம்!” என்று அனுதாபப்பட்டு விட்டு அதை கடந்து விடுகிறோம். ஒருவர் தலைவலி என்று கூறினால் தலைவலி தானே என்று கூறுகிறோம். நமக்கு அந்த தலைவலி வந்தால் தான் அந்த வேதனை புரிந்து பாரப்பட்டு ஜெபிக்கிறோம்.

அசாதாரணமே இரக்கம்

பவுல் கூறுகிறார், அவர்கள் தங்களால் இயன்றதற்கு அதிகமாய் கொடுத்தார்கள். ஒருவரால் எப்படி இயன்றதற்கு அதிகமாய் கொடுக்க முடியும்? இரக்க குணமே அசாதாரண காரியங்களையும் செய்ய வைக்கும். நாம் இரக்கத்துடன் ஜெபிக்கும் போது வானதூதர்கள் அவர்களுக்கு சென்று உதவி செய்கிறார்கள். இரக்கம் நமது செயல்களிலே வெளிகாட்டப்பட வேண்டும். இரக்கமே இறைவனின் உன்னத குணம். அதற்காய் நம்மையே நாம் ஒப்புக்கொடுப்போம்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!

23/05/2020

இறைவார்த்தை இல்லாத பஞ்சம் நிறைந்த காலம்

1 சாமுவேல் 3:1 - சிறுவன் சாமுவேல் ஏலியின் மேற்பார்வையில் ஆண்டவருக்கு ஊழியம் செய்து வந்தான். அந்நாள்களில் ஆண்டவரின் வார்த்தை அரிதாக இருந்தது. காட்சியும் அவ்வளவாக இல்லை.

'திருச்சபையின் மிக மோசமான காலங்கள்' என்று சொன்னால், இதுதான். கடவுளுடைய வார்த்தையும் அரிதாக இருக்கிறது, காட்சியும் அவ்வளவாக இல்லை. கடவுள் மனிதர்களோடு பேசுவதற்கு அவர் பயன்படுத்தக்கூடிய காரியங்கள் தான் இவை இரண்டும். காட்சிகள் காண்பது, இறைவாக்கினர்கள் மூலமாக இறைவார்த்தைக் கூறுதல், கனவுகள் காண்பது. இவையெல்லாம் கடவுள் மனிதர்களோடு இடைபடுவதற்கும், பேசுவதற்கும் பயன்படுத்தக் கூடிய காரியங்கள்.

எதில் பஞ்சம் நிலவுகின்றது?

மேலே சொல்லப்பட்ட வசனத்தில் பார்க்கிறோம், அந்த நாட்களில் காட்சிகளும் இல்லை, இறைவாக்கினர்களும் இல்லை.

அப்படியென்றால், கடவுளுக்கும் மனிதர்களுக்கும் உறவே இல்லை. அவை பேச்சளவில் மட்டுமே தான் இருந்தது. அந்த உறவு செயல்பாட்டின் அளவில் இருக்கவில்லை. கடவுள் இருக்கிறார் என்று நினையாமல், கடவுளுக்கும் மனிதர்களுக்கும் தொடர்பு இல்லாமல் இருக்கும் நிலை தான் அது. அப்படித்தான் அன்றைக்கு இருந்தது.

சாமுவேல் சிறு பையனாக இருந்த பொழுது ஏலி தலைமை குருவாக இருந்தார். அவருக்கு வயது முதிர்ந்துவிட்டது. அப்படி முதிர்ந்ததினாலே அவருடைய பிள்ளைகள் குருக்களாக இருந்தார்கள். ஏலிக்கு கண் பார்வையில்லாமல் போய்விட்டது. ஆகவே, ஏலியும் அந்த பிள்ளைகளை சமாளிக்க முடியாமல் அவர்களுக்கு ஆதரவுக் கொடுக்க ஆரம்பித்துவிட்டார். அந்த பிள்ளைகளோ தீமை செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்; ஆலயத்திலே அருவருப்பான காரியங்களை செய்தார்கள். ஆகையால் கடவுள், மனிதர்களோடு பேசுவதை கேட்க அந்த குருக்கள் தயாராக இல்லை. குருக்கள் தேவனுடைய குரலை கேட்க வேண்டும்; ஆனால், அவர்கள் கேட்கிற நிலையில் இல்லை. அருவருப்பான காரியங்களிலே அவர்கள் ஈடுபட்டார்கள், கடவுளுக்கு பிடிக்காத பல காரியங்களை ஆலயத்திலே செய்தார்கள். ஆகையினால், ஆண்டவரும் அவர்களோடு அதிகமாக பேசவில்லை. அந்த சூழ்நிலையில் தான் சிறுவன் சாமுவேல் ஒப்படைக்கப்படுகிறான். சாமுவேலோடு ஆண்டவர் பேசுவதற்கு முன்பாக இந்த வசனம் சொல்லுகிறது, **“அந்நாள்களில் ஆண்டவரின் வார்த்தை அரிதாக இருந்தது. காட்சியும் அவ்வளவாக இல்லை”.**

அன்றைக்கும் இறைவார்த்தை அரிதாக இருந்தது. இறைவார்த்தை என்றால் விவிலியத்தில் உள்ள வார்த்தை இல்லை, ஆண்டவர் பேசுகிற வார்த்தை. **திருச்சட்ட நூல் இருந்தது, ஆனால் ‘ஆண்டவர் இப்படி சொல்லுகிறார்’ என்று வரக்கூடிய வார்த்தை அரிதாக இருந்தது. அரிது என்றால் கிடைக்காமல் இருந்தது. பஞ்சமாக இருந்தது.** யோவேல் புத்தகத்தில் கூட அதை பார்க்கிறோம். கடைசி நாட்களில் பஞ்சம் உண்டாகும்; என்ன பஞ்சம் என்றால், வார்த்தை கிடைக்காத ஒரு பஞ்சம். ஆகவே, வார்த்தை கிடைக்காமல் இருந்தது, காட்சிகளும் அவ்வளவாக இல்லை.

மனிதர்களை சீர்ப்படுத்தும் இறைவார்த்தை

இறைவார்த்தைகளும், காட்சிகளும் மனிதர்களை சீர்ப்படுத்துவதற்காக ஆண்டவர் வைத்திருக்கின்ற வழிமுறைகள். கடவுள் முதலாவது மனிதர்களிடத்தில் பேசும் பொழுது, அவனை சீர்படுத்துகிறார். மோசேயோடு பேசும் பொழுது “உன்னுடைய காலணிகளை கழற்றி விடு” என்கிறார். அப்படி ஒவ்வொரு மனிதனிடம் பேசும் பொழுதும் அவர்களுக்குள் இருக்கக்கூடிய காரியங்களை, தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களைக் குறித்து பேசுகிறார். எசாயாவோடு பேசும் பொழுது, எசாயா உணர்த்தப்படுகிறார் "ஐயோ நான் அசுத்த உதடுள்ள மனிதன்", பேதுருவோடு பேசும் பொழுது "ஐயோ நான் பாவி என்னை விட்டு அகன்று போய் விடுங்கள், உம்மோடு இருக்கக்கூட எனக்கு தகுதி இல்லை" என்கிறார். மகதலேனா மரியாள் ஆண்டவரை சந்தித்த பொழுது தன் பாவத்தை உணர்ந்து மனம் கசந்து அழுதாள். தேவன் மனிதர்களோடு பேசுகிறார். அந்த நாட்களில் நாம் பார்க்கக்கூடிய காரியம் என்ன? தேவனுடைய வார்த்தை அரிதாக இருந்தது, காட்சிகளும் அவ்வளவாக இல்லை. தாவீது ஒரு இறைவாக்கினன், ஆனாலும் தாவீதின் நெருக்கடியான காலங்களில் தாவீது எழுதுகிறார்,

திருப்பாடல் 74:9 - எங்களுக்கு நீர் செய்து வந்த அருஞ்செயல்களை இப்போது நாங்கள் காண்பதில்லை; இறைவாக்கினரும் இல்லை; எவ்வளவு காலம் இந்நிலை நீடிக்குமென்று அறியக் கூடியவரும் எங்களிடையே இல்லை.

தாவீதின் புலம்பல்

தாவீதின் நாட்களிலே தேவன் நிறைய அருஞ்செயல்களை செய்தார். ஆனால் இப்பொழுது நாங்கள் அதை காண்பதில்லை. ஏதோ மறைக்கப்பட்டவர்களை போல, மறக்கப்பட்டவர்களை போல, ஆண்டவரை விட்டு தள்ளி நிற்பது போல தாவீது உணர்கின்றார். கடவுளோடு பேசினாலும் பதில் வராத ஒரு நிலை. அவர் செய்த அந்த அருஞ்செயல்கள் எல்லாம் இப்பொழுது காணோம், ஆண்டவர் என்ன சொல்கிறார் என்று கேட்டு, இறைவார்த்தைகளை சொல்லக்கூடிய இறைவாக்கினர்களும் அங்கு இல்லை. எவ்வளவு காலம் இந்த நிலை நீடிக்கும் என்று அறியக்கூடியவரும் எங்களிடையே இல்லை என்று ஒரு வேதனையோடு தாவீது

எழுதுகிறார். ஒரு இறைவாக்கினரே இப்படி எழுதுகிறார் என்றால் யோசித்துப் பாருங்கள்! "எவ்வளவு காலம் இந்த நிலை நீடிக்கும் என்று அறியக்கூடியவர் எங்களிடையே இல்லை" என்கிறார்.

இன்றைக்கு இறைவாக்கு எப்படி உரைக்கிறோம்?

ஆதித் திருச்சபையிலே இறைவாக்கினர்களும், புனிதர்களும் இருக்கும் பொழுது அங்கே ஒரு பெரிய விழிப்புணர்வும், எழுப்புதலும் உண்டாயிற்று. அவர்கள் தேவனுடைய குரலை கேட்கிறார்கள், தேவனுக்கு உகந்த வாழ்க்கை வாழ்கிறார்கள், மக்கள் எல்லாரும் தேவனோடு ஒரு நெருக்கமான உறவு கொள்ளும்படி தூண்டப்படுகிறார்கள். அப்பொழுது சில சூழ்நிலைகள், சில நெருக்கடிகள், வேறு விதமான தோற்றத்தை அதாவது மறக்கப்பட்டவர்களை போல இருக்கிறோம் என்ற உணர்வை மக்களுக்கு அவர்கள் உணர்த்துவார்கள். அதைத்தான் தாவீதும் அவருடைய காலத்தில் இருந்த நிலையை இங்கு சொல்கிறார், “எங்களுக்கு நீர் செய்து வந்த அருஞ்செயல்களை இப்பொழுது நாங்கள் காணவில்லை, ஒரு காலத்தில் எவ்வளவோ அருஞ்செயல்கள் செய்து வந்தீர்; இப்பொழுது நாங்கள் அவைகளை காண்பதில்லை. இறைவாக்கினரும் இல்லை; இந்த நிலை எவ்வளவு காலம் நீடிக்கும் என்று அறியக்கூடியவரும் எங்களிடையே இல்லை”.

தானியேலை போன்ற ஊழியர்கள் கடவுளின் மறைவான திட்டங்களை எல்லாம் வெளிப்படுத்துகிறவர்களாக இருந்தார்கள். அரசர்களின் கனவுகளைக் கூட வெளிப்படுத்தகூடியவர்களாக இருந்தார்கள். இன்னும் எவ்வளவு காலம் இந்த நிலை நீடிக்கும் என அறியக்கூடியவர்களாக இருந்தார்கள். ஆனால், இன்றைக்கு இருக்க கூடிய சூழ்நிலை என்ன? நிறைய பேர் இறைவாக்கு உரைக்கிறார்கள் ஆனால் அவையெல்லாம் உண்மையாக இருக்கிறதா என்றால் கேள்விக்குரியாக தான் உள்ளது. இந்த நிலை எவ்வளவு நாள் நீடிக்கும் என பார்க்கும் பொழுது ஒவ்வொருவரும் ஒவ்வொன்றை சொல்கிறார்கள். அதை அறியக்கூடியவரும் நம்மிடம் இல்லை.

உண்மையான இறைவாக்கினர்கள் தேவை

இன்றைக்கு தேவை என்ன? உண்மையான இறைவாக்கினர்கள் (The Real Prophets). உண்மையாகவே தேவனுடைய குரலை கேட்கிறவர்கள், தானியேலை போன்றவர்கள் தான் தேவை. மக்கள் எல்லாரும் தத்தளிக்கிறார்கள், அரசாங்கமும் தத்தளிக்கிறது. ஆனால் இது எவ்வளவு காலம் நீடிக்கும் என்று சொல்வதற்கு ஆட்கள் இல்லை. தாவீதின் உள்ளத்திலே ஒரு அங்கலாய்ப்பு. தாவீது ஒரு இறைவாக்கினராக இருந்தாலும் வேறு இறைவாக்கினர் இல்லை என்ற அங்கலாய்ப்பு அவருக்கு இருந்தது. தன்னை ஒரு இறைவாக்கினராக காட்டிக்கொள்ளாமல் இப்படி புலம்புகிறார். “ஒரு இறைவாக்கினரும் இல்லை, இது எவ்வளவு காலம் நீடிக்கும் என்று சொல்லக்கூடியவர்களும் இல்லை, முன்பு செய்து வந்த அருஞ்செயல்கள் எல்லாம் இப்பொழுது காணவில்லை” என்று புலம்புகிறார். இது போன்ற சூழ்நிலை தான் அன்றைக்கும் இருந்தது, அப்பொழுது ஆண்டவர் சாமுவேலை எழுப்பினார். இன்றைக்கும் அது போன்ற ஒரு சூழ்நிலை தான் இருக்கிறது. கடவுள் இந்த மாதிரி சூழ்நிலையிலே பயன்படுத்துவதற்கு ஆட்களை தேடுகிறார், அதற்கு தான் நாம் முன் வர வேண்டும்.

இறைவெளிப்பாடே இறையச்சத்தை கொண்டு வரும்

நீதிமொழி 29:18 - எங்கே இறைவெளிப்பாடு இல்லையோ, அங்கே குடிமக்கள் கட்டுங்கடங்காமல் திரிவார்கள்;

இறைவாக்குரைப்பது இல்லையென்றால், இறைவனுடைய வெளிப்படுத்துதல் இல்லையென்றால் மக்கள் கட்டுக்கடங்காமல் இருப்பார்கள்; இறையச்சம் அங்கு இருக்காது; தெய்வ பயம் அங்கே இருக்காது. எப்பொழுது தெய்வ பயம் உண்டாகும் என்றால் இறை வெளிப்படுத்துதல் இருக்கும்பொழுது தான் இறையச்சம் உண்டாகும். அந்த இறை வெளிப்படுத்துதல் இல்லையென்றால் இறையச்சம் இல்லாமல் போய்விடும். அதற்காகவே தீர்க்கதரிசிகள் தேவைப்படுகிறார்கள். இன்றைக்கு இறையச்சம் எங்குமில்லை; தைரியமாக பொய் சொல்பவர்களாக இருக்கிறார்கள். ஆண்டவர் இப்படி சொல்லுகிறார் என்று சொல்லக்கூடிய தேவ பிள்ளைகள் இல்லை. அப்படி இருந்தால் எவ்வளவோ பேர் தேவனுக்கு பயந்து மனம் திருந்தி இருப்பார்கள்.

ஆதி திருச்சபையில் இருந்த இறையச்சம்

ஆதி திருச்சபையில் அப்படி தான் அனனியாவும், சப்பீராளும் இருந்தார்கள். எப்பொழுதும் சொல்லுவது போல பழக்கதோஷத்திலே பொய்யை சொல்கிறார்கள். பாதி சொத்தை விற்றுவிட்டு, பாதியை தங்களுக்கென ஒளித்து வைத்துக் கொள்கிறார்கள். இரண்டு பேரும் சேர்ந்து இந்த காரியத்தை செய்துவிட்டு, அனனியா பேதுருவை சந்திக்க வருகிறார், அப்பொழுது பேதுரு கேட்கிறார், "அனனியா உன் சொத்தை இவ்வளவுக்கு தான் விற்றாயா?" என்று, அதற்கு அனனியா "ஆம்! இவ்வளவுக்கு தான் விற்றேன்" என்கிறார். அதற்கு பேதுரு சொன்ன வார்த்தை என்ன? **"நீ தூய ஆவியானவரிடத்திலே பொய் சொல்லும் படி பிசாசு உன் உள்ளதை ஆட்கொண்டது ஏன்? நீ மனிதரிடத்தில் அல்ல தேவனிடத்தில் பொய் சொன்னாய்".** இந்த வார்த்தைகளை கேட்ட உடனே அதிர்ச்சி அடைந்த அனனியா அங்கேயே மரித்து போகிறார். கணவன் போய் வெகு நேரம் ஆகிவிட்டதே என்று மனைவி தேடி வருகிறாள், அவனை அடக்கம் செய்தவர்கள், வாசலருகே வருகிறார்கள். பேதுரு அவளையும் பார்த்து கேட்கிறார், "இவ்வளவுக்கு தான் விற்றாயா?" என்று, அதற்கு அவளும் "ஆமாம்" என்றால், அதற்கு பேதுரு, **"தூய ஆவியானவரை சோதிக்க நீ உன் கணவனோடு ஒன்றுபட்டது என்ன? உன் கணவனை அடக்கம் பண்ணினவர்களின் காலடி சத்தம் கேட்கிறது; உன்னையும் அங்கேயே அடக்கம் செய்வார்கள்"** என்கிறார் பேதுரு. அவளும் கீழே விழுந்து செத்து போகிறாள். அடுத்து என்ன வாசிக்கிறோம் என்றால், **அங்கே திருச்சபை முழுவதும் இறையச்சம் நிலவியது**.

குருட்டாட்டமான சூழ்நிலை

இன்றைக்கு இறையச்சம் இல்லை ஏனென்றால், இறை வெளிப்படுத்துதல் அவ்வளவாக இல்லை. **தேவனுடைய குரலை கேட்க வேண்டும் என்கிற ஆர்வம் வேண்டும். ஆதித் திருச்சபையில் தேவனுடைய குரலை கேட்டார்கள், ஆகையினால் மறைந்திருந்த பல காரியங்கள் வெளியாக்கப்பட்டது.** அதனால் பயந்து எல்லாரும் மனம் மாறினார்கள். இன்றைக்கு எவ்வளவு தவறுகள் செய்தாலும் அதை சுட்டிக் காட்டுவதற்கு, வெளிப்படுத்துவதற்கு ஆட்கள் இல்லை. அதனால் தான் சபை சீர்க்கெட்டு போய்விட்டது. துணிந்து

பாவம் செய்கிறார்கள், துணிந்து அரசியல் செய்கிறார்கள், துணிந்து பொய் சொல்கிறார்கள். இது இந்த காலத்தை தான் குறிக்கிறது. ஆகையினால் தான் ஆண்டவர் விவிலியத்தில் சொல்லி இருக்கிறார், **"இறைவார்த்தை அரிதாக இருந்தது, காட்சிகளும் அவ்வளவாக இல்லை, எவ்வளவு காலம் இந்த நிலை நீடிக்கும் என அறிந்து சொல்ல கூடியவரும் இல்லை, முன்பு செய்து வந்த அருங்குறிகளும் காணோம்"**. முன்பு செய்த அந்த அற்புதங்களை எல்லாம் காணவில்லை. ஒரு குருட்டாட்டமான சூழ்நிலை, அந்த அற்புதங்கள் எல்லாம் இப்பொழுது காணவில்லை.

நாம் எந்த நிலையில் இருக்கிறோம்?

இறை வெளிப்படுத்துதலின் படி, அற்புதங்களை செய்யக் கூடியவர்கள் இன்றைக்கு இல்லை. அந்த வெளிப்படுத்துதல் கொடுக்ககூடியவரும் இன்றைக்கு இல்லை. எவ்வளவு காலம் நீடிக்கும் என சொல்லக்கூடியவர்களும் இன்றைக்கு இல்லை, உள்ளத்தின் மறைவில் இருக்கும் பாவங்களை வெளிப்படுத்துகிறவர்களும் இன்றைக்கு இல்லை. யோசித்து பாருங்கள், நாம் எங்கே இருக்கிறோம்? நம்முடைய பணி என்ன? இதில் எந்த காரியத்தை செய்வதற்கு நான் அழைக்கப்பட்டிருக்கிறேன்? என்னுடைய காரியத்தை நான் ஒழுங்காக செய்கிறேனா? நான் செய்ய வேண்டிய பணிகளை ஒழுங்காக செய்து கொண்டிருக்கிறேனா? என்பதை கவனிப்போம்.

1 கொரிந்தியர் 12:28 - அவ்வாறே திருச்சபையிலும் கடவுள் முதலாவது திருத்தூதர்களையும், இரண்டாவது இறைவாக்கினர்களையும், மூன்றாவது போதகர்களையும், பின்னர் வல்லசெயல் செய்வோர்களையும், அதன்பின் பிணி தீர்க்கும் அருள்கொடை பெற்றவர்கள், துணைநிற்பவர்கள், தலைமையேற்று நடத்துபவர்கள், பல்வகை பரவசப்பேச்சு பேசுகிறவர்கள் ஆகியோரையும் ஏற்படுத்தினார்.

இன்றைக்கு நாம் பெரும்பாலும் பார்க்கக்கூடிய காரியங்கள் என்னவென்றால், தலைமை ஏற்று நடத்தக்கூடியவர்களை பார்க்கிறோம், துணை நிற்கிறவர்களை பார்க்கிறோம். ஒன்று அல்லது இரண்டு போதகர்களை பார்க்கிறோம். மீதி இருக்க வேண்டியவர்கள் எல்லாரும் இன்றைக்கு காணோம், மற்ற காரியங்களை செய்வதற்கு

ஆட்கள் இல்லை. இறைவாக்கினர்களை காணோம், வல்ல செயல் செய்கிறவர்களை காணோம், பிணி தீர்க்கும் அருள்கொடை பெற்றவர்களை காணோம், பல்வகைப் பரவச பேச்சு பெற்றவர்களை காணோம், தேவனுடைய திருக்கொடைகளை பயன்படுத்தி கொண்டிருந்தவர்களை இன்று அதிகமாக பார்க்க முடியவில்லை. இதில் கடவுள் நம்மை எதற்காக தேர்ந்தெடுத்தார் எந்த பணிக்காக நம்மை முன்குறித்தார், இந்த பணியை நான் சரியாக செய்து கொண்டிக்கிறேனா? இந்த பணியை ஒழுங்காக செய்து கொண்டிருக்கிறேனா? என்னுடைய பணி என்ன? தேவன் என்னை அழைத்திருக்க கூடிய காரியம் என்ன? நான் செய்ய வேண்டிய காரியம் என்ன? இப்படிப்பட்டவர்கள் இன்றைக்கு இந்த பணியை செய்ய முடியுமா? செய்ய விடுவார்களா? என நம்மையே நாம் கேட்டுப் பார்போம். ஆனாலும், **எத்தனையோ புனிதர்கள் இந்த பணிகளை தொடர்ந்து செய்திருக்கிறார்கள். பாடுகளின் மத்தியில், எதிர்ப்புக்களின் மத்தியில், அவமானங்களின் மத்தியில் அவர்கள் தொடர்ந்து செய்திருக்கிறார்கள்.** ஆகையினால் தான் இன்றைக்கு புனிதர்களாக கருதப்படுகிறார்கள். நாம் எதாவது ஒரு காரணத்தை சொல்லி கொண்டு நம்முடைய வேலைகளை செய்யாமல் இருக்கிறோமா? யோசித்து பாருங்கள், இந்த காரியங்களில் இன்றைக்கு ஒரு பின்னடைவு (Backend) திருச்சபையில் இருந்து கொண்டிருக்கிறது. இன்று போதுமானவர்கள் இல்லை.

ஆதி திருச்சபையின் இறைவாக்கினர்கள்

திருத்தூதர் பணி 13: 1,2 - அந்தியோக்கியத் திருச்சபையில் பர்னபா, நீகர் எனப்படும் சிமியோன், சிரேன் ஊரானாகிய லூக்கியு, குறுநில மன்னன் ஏரோதுவுடன் வளர்ந்த மனாயீன், சவுல் ஆகியோர் இறைவாக்கினராகவும், போதகராகவும் இருந்தனர். அவர்கள் நோன்பிருந்து ஆண்டவரை வழிபடும்போது தூய ஆவியார் அவர்களிடம், "பர்னபாவையும் சவுலையும் ஒரு தனிப்பட்ட பணிக்கென நான் அழைத்திருக்கிறேன். அந்தப் பணிக்காக அவர்களை ஒதுக்கிவையுங்கள்" என்று கூறினார்.

ஒரே ஊரில் இத்தனை பேர் போதகர்களாகவும், இறைவாக்கினார்களாகவும் இருந்தார்கள். அதனால் தான் திருச்சபை மிகவும் வேகமாக வளர்ந்தது. திருச்சபை பரிசுத்தமடைந்தது.

இன்றைக்கு ஒவ்வொரு பங்குகளிலும் இத்தனை இறைவாக்கினர்கள் இருந்தால், திருச்சபையுடைய வளர்ச்சி எப்படி இருக்கும், அங்கு இருக்கக்கூடிய மக்கள் எப்படி பரிசுத்தம் அடைவார்கள் என யோசித்துப் பார்ப்போம். அன்றைக்கு எவ்வளவு பேர் போதகர்களாகவும் இறைவாக்கினர்களாகவும் இருந்தார்கள். ஆனால், இந்த நாட்களிலே, இப்படிப்பட்ட சூழ்நிலையை நாம் பார்க்கிறோம், ஆண்டவருடைய வார்த்தையை அறிகிற ஒருவரையும் காணோம், ஆண்டவருடைய வார்த்தைகள் அரிதாக இருக்கிறது, காட்சிகள் அரிதாக இருக்கிறது, இறைவாக்கினர்களையும் காணோம், எவ்வளவு நாள் நீடிக்கும் என்று சொல்லக்கூடிய ஆட்களும் இல்லை, ஒரு நீதிமானையும் காணவில்லை. **“தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே சுவர்போல் நிற்க கூடிய ஒருவனை தேடினேன் ஒருவனையும் காணோம்” என்று இப்படி ஆண்டவர் ஒரு நீதிமானை அன்று எருசலேம் தெருக்களில் தேடி இருப்பார்.** தேவனை தேடி அவருக்கு உண்மையாக இருக்கிற ஒரு மனிதனை கண்டுபிடி, அவனை முன்னிட்டு பட்டணத்திற்கே இரக்கம் காட்டுவேன் என்று தேவன் சொல்கிறார். அப்படிப்பட்ட நீதிமானை காணவில்லை.

ஆண்டவரோடு நெருங்கி பழக வேண்டும்

நம்முடைய பங்கு என்ன? நாம் இன்னும் அந்த நிலைக்கு வராமல் இருக்கிறோமே என்பதை உணர்ந்து அந்த நிலைக்கு போக, தேவனுடைய குரலை கேட்கிற அளவிற்கு அவரோடு நெருங்கி பழக நம்மை ஒப்புக்கொடுப்போம். பழகும் போது தான் அவருடைய குரலை நாம் அடையாளம் காணமுடியும். **ஆண்டவரை விட்டு தூரமாக இருக்கிற வரைக்கும் அவருடைய குரலை நாம் கண்டுபிடிக்க முடிவதில்லை. எல்லா குரலும் ஒரே குரல் மாதிரி தான் இருக்கும். அவரோடு நெருங்கி பழகும் பொழுது அவருடைய குரலை நாம் அடையாளம் கண்டு கொள்ள முடியும்.** யாராவது நம்முடன் பேசும் பொழுது அவர்களுடைய குரலை உடனே அடையாளம் காண்பதில்லை. நெருக்கமானவர்களாக இருந்தால் கண்டுபிடித்துவிடுவோம். அதேபோல தான் தேவனோடு இணைந்து ஜெபிக்க ஜெபிக்க அவருடைய குரலை அடையாளம் கண்டுகொள்ள முடியும். ஆகையினால் அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கைக்கு இந்த நாளிலே நம்மை அர்ப்பணிப்போம். திருவிவிலியத்தில் உள்ளது போல, இந்த நாட்களில் நாமும் தாவீதை போன்று அப்படிப்பட்ட கேள்விகளை ஆண்டவரிடம் கேட்கிறோம். ஆகையினால் இந்த

சூழ்நிலையிலே நம்முடைய பங்கு என்ன என்பதை ஆராய்ந்து பார்த்து இந்த நாளிலே நம்மை ஒப்புக்கொடுப்போம். ஆமென்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி

14/05/2020

உள்ளம் புதுப்பிக்கப் பெற்று மாற்றம் அடைதல்

உரோமையர் 12:2 - இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள். மாறாக, உங்கள் உள்ளம் புதுப்பிக்கப் பெற்று மாற்றம் அடைவதாக! அப்போது கடவுளின் திருவுளம் எது எனத் தேர்ந்து தெளிவீர்கள். எது நல்லது, எது உகந்தது, எது நிறைவானது என்பதும் உங்களுக்குத் தெளிவாகத் தெரியும்.

உலகம் காட்டும் மாதிரி

இந்த உலகப் போக்கின்படி ஒழுங்காதீர்கள். இந்த உலகத்தின் மாதிரியை பின்பற்றாதீர்கள். இந்த உலகம் ஒரு விதத்திலே செயல்படுகிறது, அந்த விதத்தில் நாம் செயல்படக் கூடாது. இந்த உலகம் காட்டும் மாதிரியை நாம் பின்பற்றக் கூடாது. இந்த உலகம் காட்டும் மாதிரி என்றால் பணத்திற்காக எல்லாவற்றையும் செய்யக் கூடியதாக இருக்கும். அந்த மாதிரியை நாம் பின்பற்றக் கூடாது. இந்த உலகம், உலக சந்தோஷத்தில் மூழ்கி கிடக்கிறது. அது நல்லதாக இருக்கலாம் அல்லது பாவமாக இருக்கலாம். இந்த உலக சந்தோஷம், அழிந்து போகக் கூடிய ஒரு சந்தோஷத்தை தான் ஆர்வமாக தேடிக் கொண்டிருக்கிறது. ஆகவே, அதை நாம் பின்பற்றக்கூடாது. இந்த உலகம், “தான் மட்டும் வாழ்ந்தால் போதும்; மற்றவர்கள் எப்படி இருந்தாலும் பரவாயில்லை” என்று அதில் தான் கவனம் செலுத்தும். உலகம் என்று சொல்லும் போது, உலகத்தில் இருக்கும் மனிதர்களை தான் குறிக்கிறது. இந்த உலக மனிதர்கள் செய்வது போல நாம் செய்யக் கூடாது. உலக மனிதர்கள் வேஷம் போடுகிறார்கள். நல்லவர்களை போல நடிக்க முயற்சி செய்கிறார்கள். உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லக்கூடியவர்கள் அபூர்வம். பெரும்பாலானோர் அப்படி இருப்பதில்லை, வேஷம்

போடக் கூடியவர்களாக தான் இருக்கிறார்கள். அதனால் தான் ஆண்டவர் சொல்கிறார், “இந்த உலகப் போக்கின்படி ஒழுகாதீர்கள்”.

இந்த உலகத்தில் உள்ளவர்கள் உலகம் தான் எல்லாம் என்று நினைத்து செயல்படுகிறார்கள், “இதில் தான் நாம் நித்தியமாக இருக்க போகிறோம். வேறு ஒரு வாழ்வு இல்லை” என்று செயல்படுகிறார்கள். ஆனால், அதற்கு பதிலாக ஆண்டவர் சொல்கிறார், "உங்கள் உள்ளம் புதுப்பிக்கப் பெற்று மாற்றமடைவதாக".

வெளிப்புறத்தின் மாற்றம் லாபமில்லை

நிறைய பேரை பார்க்கிறோம், ஜெபத்திற்கு வந்து விட்டால் அவர்களுடைய பேச்சு மாறிவிடும், நடவடிக்கை (Style) மாறிவிடும், அழகான வெள்ளை ஆடைகளை உடுத்துவார்கள், தூய தமிழில் அழகாக பேசுவார்கள். இதெல்லாம் மாறக்கூடாது என சொல்லவில்லை. ஆனால் திருவிவிலியத்தில், "உங்கள் உள்ளம் புதுப்பிக்கப் பெற்று மாற்றமைடைவதாக" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, பேச்சு மாறுவதால் பெரிய லாபம் இல்லை, துணி மாறுவதால் பெரிய லாபம் இல்லை அல்லது உடல் அமைப்புகளில் மாற்றமடைவதால் பெரிய லாபமில்லை; எல்லாவற்றிற்கும் மேலாக நம்முடைய உள்ளம் புதுப்பிக்கப்பட வேண்டும்.

பொதுவாக வெளித்தோற்றத்தை தான் நாம் பார்ப்போம். ஒரு மனிதரை பார்க்கும் போதே நன்றாக இருக்கிறாரா என்று வெளித்தோற்றத்தை பார்த்து தான் சொல்வோம், உண்மை தான். ஆனால், பார்க்கவே பரிதாபமாக இருந்த எத்தனையோ பேர் புனிதர்களாக இருந்திருக்கிறார்கள். அதனால் வெளி மாற்றங்களை விட உள்ளம் புதுப்பிக்கப்பட வேண்டும். இந்த உலகம், வெளியிலே மாற்றத்தை கொண்டு வரும்; வெளிப்புறத்திலே மனிதர்களில் மாற்றத்தை கொண்டு வரும்.

உள்ளம் புதுப்பிக்கப்பட வேண்டும்

ஒரு காலத்திலே நாகரிகமற்றவர்களாக(uncivilized) இருந்தார்கள், இப்பொழுது நாகரீகமுள்ளவர்களாக(civilized) இருக்கிறார்கள். ஒரு

காலத்தில் பணம் இல்லை, அதனால் கிழிந்து போன ஆடையை அணிந்திருந்தார்கள். ஆனால், இன்றைக்கு அப்படி இல்லை. எல்லாரும் தரமான உயர்ந்த ரக ஆடைகளை அணிந்து, ஆடம்பரமாக, முக அலங்காரத்தோடு தான் வருகிறார்கள். ஆனால் உள்ளம் புதுப்பிக்கப்பட வேண்டும்; அது தான் முக்கியம். வசதிக்கேற்ப விலை உயர்ந்த ஆடைகளை அணியலாம், இன்னும் ஆடம்பரமாக காட்டி கொள்ள என்னென்ன பண்ண வேண்டுமோ அதையெல்லாம் பண்ணலாம். இதெல்லாம் வெளியிலே தோன்றக்கூடிய காரியங்கள். வெளியிலே தோன்றக்கூடிய காரியங்களை மறுக்கவில்லை. ஆனால் , அதை விட மிக முக்கியமான காரியம் நடக்க வேண்டும், அது உள்ளம் புதுப்பிக்கப் பெற்று மாற்றம் அடைய வேண்டும்.

நாளுக்கு நாள், நாளுக்கு நாள் நம் இருதயம் மறுரூபப்பட வேண்டும். இந்த உலகத்தின் மீது உள்ள பற்றுக்களை விட்டு, தேவன் மேல், பரலோகத்தின் மேல் உள்ள பற்றில் நாம் மூழ்க வேண்டும். அதனால் தான் "உள்ளம் புதுப்பிக்க பெற்று மாற்றம் அடைவதாக" என்று கூறப்பட்டுள்ளது. அப்படி உள்ளம் புதுப்பிக்கப்பெற்று மாற்றம் அடைய அடைய, தேவனுடைய சித்தம் என்ன? எது உகந்தது? எது நிறைவானது? எது நன்மையானது? என்பதையெல்லாம் கண்டுபிடிக்க ஆரம்பிப்போம். உள்ளம் புதுப்பிக்கப்படும் போது தான் அதை கண்டுபிடிக்க முடியும். உள்ளத்திலே மாற்றம் இல்லாமல் மற்ற எதை நாம் செய்தாலும் அதில் பிரயோஜனம் இல்லை. ஆங்கிலத்தில் "your mind" எனப் போடப்பட்டுள்ளது. அப்படி என்றால் "உங்கள் மனம்". ஆகவே, நம் மனம் புதிதாக்கப்பட வேண்டும். நம்முடைய சிந்தைகள், நம் மனதின் உள்ளே இருக்க கூடியவைகளை தான் கடவுள் பார்க்கிறார். கடவுள் வெளித்தோற்றத்தை பார்ப்பதில்லை. உள்ளே நம் இருதயத்தை பார்க்கிறார். மனிதன் முகத்தை பார்க்கிறான், கடவுளோ உள்ளத்தை பார்க்கிறார். இந்த உலகத்தின் பார்வை, இந்த உலகத்தின் செயல்பாடுகள் எல்லாமே வெளிப்படையான காரியங்களில் இருக்கும். தேவனுடைய பார்வையோ, தேவனுடைய செயல்பாடுகளோ நம்முடைய இருதயத்தை, உள்ளத்தை,மனதை சார்ந்ததாகும்.

தியானிப்போமாக

இன்றைக்கு நாம் ஊழியத்திற்கு வந்து இத்தனை வருடங்கள் ஆகியிருக்கிறது என்று சொல்லலாம். ஆனால், நம் உள்ளம் எந்த அளவிற்கு மாறியிருக்கிறது. அது எந்த அளவிற்கு மாற வேண்டுமென்று திருவிவிலியம் சொல்கிறது என்றால், இயேசுவைப் போல மாற வேண்டுமென்று சொல்கிறது.

"பிலிப்பியர் 2:5 ல் இதை தான் பார்க்கிறோம், “இயேசு கிறிஸ்துவில் இருந்த அதே மனநிலை , அதே சிந்தை உங்களுக்குள் உருவாகட்டும்” என சொல்கிறது.

கிறிஸ்துவில் இருந்த அந்த மனநிலையை போல நம் மனநிலை மறுரூபமாகி கொண்டே இருக்க வேண்டும், மாற்றம் அடைந்து கொண்டே இருக்க வேண்டும். எந்த அளவிற்கு அப்படி மாறியிருக்கிறோம்?

ஒரு காலத்தில் அப்படி இருந்தோம், தேவனை அறியாத போது வேறு விதத்தில் இருந்தோம். ஆனால், இப்போது தேவனை அறிந்திருக்கிறோம். அவருடைய மனநிலைக்கு நாம் மனம்மாற வேண்டும். ஒரு காலத்தில் எங்கோ இருந்தோம், ஆனால், இப்பொழுது எத்தனை சதவீதம் மாறி இருக்கிறோம், இன்னும் எத்தனை சதவீதம் நாம் மாற வேண்டியிருக்கிறது என்று இயேசுவின் சிந்தையோடு அதை ஒப்பிட்டு பார்க்க வேண்டும். எவ்வளவு தூரத்தில் நாம் இருக்கிறோம் என்று ஒப்பிட்டு பார்க்க வேண்டும். நம் சிந்தை, நம் மனம் இயேசு கிறிஸ்துவின் மனதை போல, இருதயத்தை போல மாற வேண்டும். இன்னும் எவ்வளவோ முயற்சிகளை நாம் எடுக்க வேண்டியிருக்கிறது. அப்படி மாறும் போது தான் நாம் கிறிஸ்துவின் சாயலை கொண்டிருப்போம், அவருடைய சொந்த பிள்ளைகளாக இருப்போம். அப்பொழுது, கடவுள் நம் மேல் பிரியமாக இருப்பார். தந்தை கடவுள், இயேசு கிறிஸ்துவை பார்த்து, “இவர் என் அன்பார்ந்த மகன்” என்று சொன்னது போல நம்மை பார்த்தும் சொல்வார். இதை ஒப்பிட்டு பார்க்கும் போது இன்னும் நாம் எவ்வளவு மாற்றம் அடைய வேண்டியிருக்கிறது!

புனிதர்களின் சிந்தை

புனிதர்களுடைய மனங்கள் ஏறக்குறைய இயேசுவை போன்றே இருந்தது. அவர்களுடைய சிந்தைகள் எல்லாம் இயேசுவை போன்றே இருந்தது. அவர்களோடு நாம் பேசும் பொழுது, பழகும் பொழுது அதை கண்டுபிடிக்க முடியும். அவர்களுடைய மனம் அப்படியே இயேசு கிறிஸ்துவின் மனதை போல, ஒரு துளி சுயநலம் இல்லாமல் இருக்கிறதை, தேவ சித்தத்திற்கு முற்றிலுமாக கையளிக்க கூடிய நிலையை பார்க்கிறோம். அதிலும் முக்கியமானது என்னவென்றால், இந்த மனம் மறுரூபப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். எந்த அளவிற்கு என்றால், கிறிஸ்துவின் சாயலை தாங்குகிற அளவிற்கு அது மறுரூபப்பட வேண்டும். இதை தான் ஆண்டவரும் சொல்கிறார்.

உரோமையர் 8:29-30 - தம்மால் முன்பே தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் தம் மகனின் சாயலுக்கேற்றவாறு இருக்க வேண்டுமெனக் கடவுள் முன்குறித்து வைத்தார்; அச்சகோதரர் சகோதரிகள் பலருள் தம் மகன் தலைப்பேறானவராய் இருக்க வேண்டுமென்றே இப்படிச் செய்தார். தாம் முன்குறித்து வைத்தோரை அவர் அழைத்திருக்கிறார்; தாம் அழைத்தோரைத் தமக்கு ஏற்புடையோராக்கி இருக்கிறார்; தமக்கு ஏற்புடையோரானோரைத் தம் மாட்சியில் பங்கு பெறச் செய்தார்.

நம்மையெல்லாம் ஆண்டவர் தேர்ந்தெடுத்திருக்கிறார் என்றால் அவர் முன்குறித்து வைத்த நோக்கம், தம் மகனின் சாயலுக்கு ஏற்றவாறு இருக்க வேண்டும் என்று தான் முன்குறித்திருக்கிறார். ஆகவே, அவருக்கு ஏற்புடையவராக தம் மகனின் சாயலை நாம் கொண்டிருப்பதற்காகவே, நம்மை முன்குறித்திருக்கிறார். அப்படி மாற்றுவதற்காகவே இந்த பூமியிலே நமக்கு பல காரியங்களை அனுமதிக்கிறார்; செயல்படுத்துகிறார்; செயல்படுத்தி நம்மை அவர் சுத்திகரிக்கிறார்; தயாரிக்கிறார். இயேசுகிறிஸ்துவின் அதே மனநிலையை நாமும் கொண்டிருக்க வேண்டுமென்று முன்குறித்ததினாலே அதற்கேற்றபடி நம்மை உருமாற்றம் அடைய செய்கிறார். அதனால், நாம் அதில் ஒத்துழைக்கிறவர்களாக இருக்க வேண்டும்.

தூய ஆவியாரோடு ஒத்துழைப்போமாக

தூய ஆவியாரோடு நாம், நம்முடைய மனம் மாறுவதற்காக ஒத்துழைக்க வேண்டும். மனம் மாறுவது என்பது அவ்வளவு எளிதான காரியம் இல்லை. நினைத்த உடனே திருந்தி விட முடியாது. அது ஒரு தொடர் பயிற்சியாகவும், தொடர் போராட்டமாகவும் இருக்கலாம். ஆகவே, அதை போராடி பயிற்சி செய்ய, தூய ஆவியானவரோடு தினந்தோறும் ஒத்துழைத்து ஒத்துழைத்து, நம்முடைய மனம் இயேசு கிறிஸ்துவினுடைய சாயலை கொண்டிருக்கிறதாக நாம் உருமாற்றம் அடைவோம். இதிலே எந்த அளவிற்கு நாம் வெற்றி பெற்றிருக்கிறோம், தோல்வி அடைந்திருக்கிறோம் என்பதை அலசிப் பார்த்தோமானால் நமக்கு தெரியும். ஆனால் கிறிஸ்துவினுடைய சாயலுக்கு ஏற்றபடி அந்த மனம் மறுரூபம் அடைய வேண்டும், அந்த சாயலை தரிப்பிக்க வேண்டும். எல்லா புனிதர்களும் இதை தான் வாஞ்சித்தார்கள், அப்படி மாற்றம் அடைந்தார்கள். நாமும் அந்த மாற்றத்தை நோக்கி தான் போய்க் கொண்டிருக்கிறோம். அது போல நம் உள்ளம் மாற்றம் அடைந்திருக்கிறதா அல்லது இன்னும் எவ்வளவு தூரத்தில் நாம் நிற்கிறோம், இன்னும் எவ்வளவு தூரம் நம்முடைய உள்ளம் மாற்றம் அடைய வேண்டியிருக்கிறது என்பதையெல்லாம் யோசித்துப் பார்த்து இன்றைக்கு ஒப்புக்கொடுப்போம்.

நம் மனம் மாறுவதற்கு தேவன் நம்மோடு கூட முயற்சி பண்ணினாலும், நாம் முரண்பாடு உள்ளவர்களாக, மனம் மாறுவதற்கு ஒத்துப்போகாதவர்களாக பல நேரங்களில் நடந்து கொள்கிறோம். அப்படி நடக்கிறதினாலே தான் நம்முடைய மனம் இன்னும் கிறிஸ்துவின் சாயலைக் கொண்டிராமல் தள்ளி நிற்கிறது. அப்படி அவரோடு ஒத்துழைக்காத அந்த நேரங்களுக்காக நாம் மனம்மாறி இந்த வேளையில் மன்னிப்பு கேட்போம். தொடர்ந்து அவரோடு ஒத்துழைத்து, ஆவியானவரோடு ஒத்துழைத்து, அந்த கிறிஸ்துவின் சாயலைக் கொண்டிருக்கும்படி மனம் மாறுவதற்கு இந்த வேளையில் நம்மை ஒப்புக்கொடுப்போம்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!

30/05/2020

ஒருவருக்கொருவர் ஊக்கமூட்டுங்கள்

1 தெசலோனிக்கர் 5:11 ஆகவே நீங்கள் இப்பொழுது செய்து வருவது போல, ஒருவருக்கொருவர் ஊக்கமூட்டுங்கள்; ஒருவரை ஒருவர் வளர்ச்சியடையச் செய்யுங்கள்.

அந்த நாட்களில் திருச்சபையில் இருந்த ஒவ்வொருவரும், ஒருவரை ஒருவர் ஊக்கமூட்டினார்கள். ஆனால், இன்றைக்கு நாம் அதிகமாக அப்படி பார்க்க முடிவதில்லை. ஆகவே, இன்றைக்கு இந்த வசனத்தை சொல்ல வேண்டுமென்று சொன்னால், தெசலோனிக்க மக்கள் எப்படி ஒருவரை ஒருவர் ஊக்கமூட்டினார்களோ அதே போல நீங்களும் ஒருவர் ஒருவரை ஊக்கமூட்டுங்கள். ஒருவர் ஒருவரை வளர்ச்சியடைய செய்யுங்கள்.

தெசலோனிக்க மக்கள் ஒருவர் ஒருவரை ஊக்கமூட்டினார்கள். அதே போல நாமும் ஒருவர் ஒருவரை ஊக்கமூட்ட வேண்டும்; அவர்கள் ஒருவர் ஒருவரை வளர்ச்சியடைய செய்தார்கள், அதேபோல நாமும் ஒருவர் ஒருவரை வளர்ச்சியடைய செய்ய வேண்டும். நான் மட்டும் வளர்ந்தால் போதும் என்று நினைப்போமானால் நாம் கிறிஸ்தவர்களே கிடையாது. **"ஒருவர் ஒருவரை வளர்ச்சி அடைய செய்யுங்கள்"**. நாமும் அப்படி செய்ய வேண்டும். ஒருவர் ஒருவரை வளர்ச்சியடைய செய்வதிலும், ஒருவர் ஒருவரை ஊக்கமடையச் செய்வதிலும் தான் அன்பு அடங்கி இருக்கிறது. அன்பு என்றால், அடுத்தவர்களை வளர்ச்சி அடைய செய்ய வேண்டும், அதில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். சுயநலமாக இருந்தோமானால் நாம் மட்டும் வளர்ந்தால் போதும் என்று நினைப்போம். அதனால் தான் பவுல் இவ்வாறு கூறுகிறார், **“நீங்கள் இப்பொழுது செய்து வருவது போல ஒருவர் ஒருவரை ஊக்கமூட்டுங்கள், ஒருவர் ஒருவரை வளர்ச்சியடைய செய்யுங்கள்”.**

மனத்தளர்ச்சி அடைந்தவர்களை ஊக்கமூட்டுங்கள்

தெசலோனிக்கர் 5:14ம் அதிகாரத்தில் “மனத்தளர்ச்சியுற்றவர்களுக்கு ஊக்கமூட்டுங்கள்” எனப் பார்க்கிறோம். யாரெல்லாம் மனத்தளர்ச்சியாக உள்ளார்களோ அவர்களை ஊக்கமூட்டுங்கள் என

பவுல் கூறுகிறார். ஒரு குழுவில் இருக்கும் பொழுது ஒவ்வொருவருக்கும் மற்றவர்களைப் பற்றி தெரிய வேண்டும். யார் மனத்தளர்ச்சி அடைகிறார்கள் என்று அறிந்து, அவர்களுக்கு ஊக்கமூட்டுதல் தேவைப்படுகிறது என்பதை உணர வேண்டும். எல்லாரும் மனத்தளர்ச்சி அடைவதில்லை; எல்லாரும் ஒரே நேரத்தில் மனத்தளர்ச்சி அடைவதில்லை. ஒவ்வொருவரும் சில சூழ்நிலைகளில், சில நெருக்கடிகளில் மனத்தளர்ச்சி அடைகிறார்கள். அவர்களுக்கு மற்றவர்கள் ஊக்கப்படுத்த வேண்டும், ஊக்கத்தை கொடுக்க வேண்டும். ஊக்கப்படுத்தவில்லை என்றால் நாம் கடவுளுடைய பிள்ளைகளாக இருக்கிறோமா என்பது கேள்விக்குறிதான்!

இறுதிநாள் நெருங்கி வருகிறது

எபிரேயர் 10:25 - சிலர் வழக்கமாகவே நம் சபைக் கூட்டங்களில் கலந்துகொள்வதில்லை. நாம் அவ்வாறு செய்யலாகாது; ஒன்றுகூடி ஒருவருக்கொருவர் ஊக்கமூட்டுவோமாக. இறுதிநாள் நெருங்கி வருகிறதைக் காண்கிறோம்; எனவே இன்னும் அதிகமாய் ஊக்கமூட்டுவோம்.

சிலர் சாதாரணமாக நினைத்து குழுவினுடைய கூட்டங்களில் கலந்து கொள்ளமாட்டார்கள். அது மாதிரி நாம் இருக்கக் கூடாது. விவிலியத்தில் ஆண்டவர் கொடுக்கும் ஆலோசனை என்னவென்றால், அப்படி நாம் இருக்கக் கூடாது என்பது தான். அதற்கு பதிலாக இறுதி நாள் நெருங்கி வருகிறதனாலே ஒருவருக்கொருவர் இன்னும் அதிகமாய் ஊக்கப்படுத்த வேண்டும் என்று பவுல் கூறுகிறார்.

ஒருவருக்கொருவர் ஊக்கமூட்டப்பெற வேண்டும்

உரோமையர் 1:12 - நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கையால் நானும், நான் கொண்டுள்ள நம்பிக்கையால் நீங்களும் ஒருவருக்கொருவர் ஊக்கமூட்டப் பெறவேண்டுமென விழைகிறேன்.

இங்கு எவ்வளவு தாழ்மையோடு பவுல் பேசுகிறார் என்று பாருங்கள்! நான் விசுவாசத்தில் இருக்கிறேன் என்று அவர் சொல்லாமல், உங்கள் விசுவாசத்தால் நானும், என்னுடைய விசுவாசத்தால் நீங்களும் ஒருவருக்கொருவர் ஊக்கமூட்டப்பெற வேண்டும் என்று பவுல் விரும்புகிறார். ஆகவே, ஒருவருக்கொருவர் ஊக்கமூட்டப்படுதல் தேவை. பவுலுக்கே அது தேவையாக தான் இருந்தது. ஆகவே, நம்மைப் போல ஊழியர்களுக்கு அது எவ்வளவு தேவை என்பதை யோசிப்போம். நிறைய ஊழியர்கள் இந்த ஊக்கமூட்டுதல் இல்லாமல் சிறிது காலம் ஊழியம் செய்து விட்டு பிறகு சோர்ந்து போய் விடுகிறார்கள். ஆவிக்குரிய வாழ்க்கையில் தொடக்க நிலையில் தான் ஊக்கமூட்டுதல் தேவை என்பது இல்லை, எல்லா நிலையிலும் நாம் மற்றவர்களை ஊக்கப்படுத்துவது அவசியம்.

நம்மை ஊக்கப்படுத்துவதற்கு, நம்மை திருத்துவதற்கு, நம்மை கண்டிப்பதற்கு ஆட்கள் தேவை. அதனால் எல்லா காரியங்களுக்கும் நமக்கு ஆட்கள் வேண்டும். ஊக்கப்படுத்துவது எல்லாருக்குமே அவசியம் தான்; ஊக்குவிப்பவர்கள் எல்லாருக்கும் இருக்க வேண்டும்.

தேவனுடைய வார்த்தைகளால் ஊக்கமூட்டி உறுதிப்படுத்துங்கள்

திருத்தூதர் பணி 15:32 யூதாவும் சீலாவும் இறைவாக்கினராய் இருந்ததால் சகோதரர் சகோதரிகளோடு அதிகம் பேசி ஊக்கமூட்டி அவர்களை உறுதிப்படுத்தினர்.

இதில் ‘அதிகம் பேசி’ என்று போடப்பட்டிருப்பதால் உடனே சிலர் அதிகப்பிரசங்கி ஆகிவிடுவார்கள். ஆனால், ஆங்கிலத்தில் "By Many Words" - அதற்கு அர்த்தம் என்னவென்றால், பல வார்த்தைகளை சொல்லி அவர்களை ஊக்கப்படுத்தினார்கள். ஆனால், அதிகம் பேசி என்பதற்கு அர்த்தம் வேறு. உலகப்பிரகாரமாக அதிகமாக பேசி ஊக்கப்படுத்த வேண்டுமென்று நாம் நினைக்கக் கூடாது. உலகப்பிரகாரமான வார்த்தைகளால் இல்லை, தேவனுடைய பல வார்த்தைகளால் அவர்கள் ஊக்கப்படுத்தினார்கள். இங்கு யூதாவும், சீலாவும் தீர்க்கதரிசிகளாக இருக்கிறார்கள், அப்படி இருப்பதால், சகோதர சகோதரிகளோடு நிறைய வார்த்தைகளை சொல்லி அவர்களை ஊக்கமூட்டி, அவர்களை உறுதிப்படுத்தினார்கள். ஊக்கப்படுத்துவதோடு நில்லாமல் அவர்களை உறுதிப்படுத்தவும்

செய்கிறார்கள். வெறும் உலகப்பிரகாரமாக ஊக்கப்படுத்தினால் அவர்கள் உறுதிப்படமாட்டார்கள். அவர்கள் இறைவாக்கினர்களாக இருந்ததினாலே, கடவுள் சொல்லக் கூடிய வார்த்தைகளை, தேவன் கொடுக்கிற பல வார்த்தைகளை சொல்லி, அவர்களை ஊக்கப்படுத்தினார்கள். இவை இரண்டிற்கும் வித்தியாசங்கள் உண்டு. ஊக்கப்படுத்துதல் என்றால் அவர்களைப் புகழ வேண்டுமென்று அர்த்தமில்லை. அவர்கள் இறைவாக்கினர்களாக இருந்ததினால், தேவனிடமிருந்து வார்த்தைகளை பெற்று அந்த வார்த்தைகளினால் அவர்களை ஊக்கப்படுத்தினார்கள்; விசுவாசத்திலே உறுதிப்படுத்தினார்கள். ஜெபக்குழுக்களில் இப்படிப்பட்ட இறைவாக்கினர்கள் இருக்க வேண்டியது அவசியம். அந்த இறைவாக்கினர்கள் தான் தேவனுடைய வார்த்தைகளை மற்றவர்களுக்குக் கொண்டு போய் விசுவாசத்தில் அவர்களை உறுதிப்படுத்துவார்கள்.

ஊக்கமூட்டுதல் என்பது தேவனுடைய கொடை

உரோமையர் 12:8 கற்றுக் கொடுப்போர் கற்றுக் கொடுப்பதிலும், ஊக்கமூட்டுவோர் ஊக்கம் தருவதிலும், தமக்குள்ளதை வழங்குவோர் தாராளமாய்க் கொடுப்பதிலும், தலைமை தாங்குவோர் முழு ஆர்வத்தோடு செயல்படுவதிலும், இரக்கச் செயல்களில் ஈடுபடுவோர் முகமலர்ச்சியோடு அவற்றைச் செய்வதிலும் தாம் பெற்ற அருள்கொடைகளைப் பயன்படுத்த வேண்டும்.

அப்படியென்றால் ஊக்கமூட்டுவது என்பது தேவனுடைய கொடை. எல்லாரும் பேசினாலும் சிலர் ஆறுதல் அடைவதில்லை; ஆனால் சிலர் பேசினால் அவர்கள் ஆறுதலடைவார்கள். எல்லாரும் ஊக்கப்படுத்தினாலும் சிலர் ஊக்கமடைவதில்லை, ஆனால் சிலர் பேசினால் அவர்கள் ஊக்கமடைவார்கள். ஆகவே அது ஒரு கொடை. இறுதிக்காலத்தில் ஒருவருக்கொருவர் ஆவிக்குரிய காரியத்தில் மற்றவர்கள் வளர ஊக்கமூட்ட வேண்டும். ஆண்டவர் இயேசு வரப்போகிறார் என்பது தான் இறுதிக்காலம், அது நெருங்கும் பொழுது இன்னும் அதிகமாக ஆண்டவரை சந்திப்பதற்கு அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். தேவனை சந்திக்கிறதற்கு, தங்களை தயாரிப்பதற்காக அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். இனி வரக்கூடிய காலங்கள் எல்லாம் இறுதிக்காலங்களின் அடையாளமாக

இருக்கிறதினாலே தேவனை சந்திப்பதற்கு நாம் ஊக்கப்படுத்த வேண்டும். ஆண்டவர் சீக்கிரம் வந்து விடுவார் என்று சொல்லி அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். அவருடைய வருகையில் நாம் தலை நிமிர்ந்து மகிழ்ச்சியோடு, நம்முடைய மீட்பை எதிர்கொள்ள அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். இந்த உலகத்தின் பாடுகளினாலே கஷ்டங்களினாலே நாம் சோர்ந்து போகாத படி, இன்னும் பெலப்பட, இன்னும் ஜெபிக்க, இன்னும் தேவனுடைய வார்த்தையில் மூழ்கி இருக்க நாம் அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். ஆனால், பெரும்பாலானோர் ஊக்கப்படுத்துவதற்கு பதிலாக, அதைரியத்தை(Discourage) கொடுக்கிறார்கள். மற்றவர்களை சோர்ந்து போக பண்ணுவது, மனமடிவுக்கு உள்ளாக்குவது என செய்கிறார்கள். இதை உலகம் முழுவதுமே செய்து கொண்டு தான் இருக்கிறது. தேவனுக்குள் நெருங்குவதற்கு, அவர்களை ஊக்கப்படுத்துவதற்கு பதிலாக அதிலிருந்து சோர்ந்து போகும்படியாக, தேவனை விட்டு விலகி போகும்படியாக, ஜெப வாழ்க்கையில் இருந்து பின் வாங்கும்படியாக, தேவனுக்காக தம்மை தயாரிக்காமல் இந்த உலக காரியங்களிலும் அதைரியத்தை (Discourage) கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதில் நமக்கு என்ன கிடைக்கப் போகிறது? “இவ்வளவு நாள் ஜெபம் பண்ணியே என்ன நடந்து விட்டது? ஆண்டவர் வருவார் என்று சொன்னார்களே என்ன ஆச்சு? நீ இவ்வளவு நாள் உண்மையாக இருந்து உனக்கு என்ன லாபம்?” என்று இது போல் பிசாசும், உலகமும் மனிதர்களை அதைரியப்படுத்துவதும், அவநம்பிக்கைக்குள்ளாக்கிற காரியங்களையும் செய்து கொண்டிருக்கிறது. பிசாசுகள் இதில் மிக முக்கியமாக வேலை செய்கிறது. “நீ ஆண்டவருக்காக உண்மையாக உழைத்து என்ன பிரயோஜனம்? நீ இவ்வளவு நாள் ஜெபித்து என்ன பிரயோஜனம்?” அப்படி என்று நம்மிடம் பேசி, அப்படிப்பட்ட எண்ணங்களை கொண்டுவரும்.

கலப்பையில் கை வைத்து, திரும்பி பார்க்க கூடாது

“தேவனுடைய ஊழியத்தில் இருந்து என்ன பயன்?” என்று இது போல எதிர்மறையான காரியங்களை கொண்டு வந்து நம்மை சோர்ந்து போக பண்ணி, தேவனுக்காக முன் வைத்த காலை பின் வைக்க பார்க்கும். இதைத்தான் “கலப்பையில் கை வைத்து திருப்பிப்

பார்க்கிறவன், எனக்கு ஏற்றவன் அல்ல" என்று இயேசு கிறிஸ்து சொன்னார். நம்மை திரும்பி பார்க்க வைக்கிறது தான் பிசாசின் வேலை. இஸ்ரவேல் ஜனங்களுக்கு அதுதான் நடந்தது. "எகிப்தே பரவாயில்லையே இந்த பாலைநிலத்தை விட எகிப்தே நன்றாக இருந்ததே" என்று அந்த எகிப்தை காண்பித்து காண்பித்து சோர்ந்துபோய், அதைரியமாக்கும் காரியங்களை பிசாசு செய்தது. அப்படி பிசாசும் ஒரு பக்கம் செய்து கொண்டிருக்கிறது, சூழ்நிலைகளும் அப்படி செய்கிறது, ஒரு சில பாலைவனம் போன்ற சூழ்நிலை நமக்கு வருகிறது, இப்படிப்பட்ட காரியங்கள் எல்லாம் நடக்கிறதினாலே, ஒருவர் ஒருவரை ஊக்கப்படுத்துங்கள். என்ன ஊக்கப்படுத்த வேண்டும்? எப்படி தைரியம் சொல்ல வேண்டும்? ஆண்டவர் சொன்ன வார்த்தைகளைக் கொண்டு ஊக்கப்படுத்த வேண்டும். ஊக்கப்படுத்தக்கூடிய ஒரு வார்த்தை அவர்களுடைய சோர்வுகள் எல்லாம் அவர்களை விட்டு நீங்கி போகப் பண்ணிவிடும். ஒருவர் மனத்துயரம் அடையும் பொழுது அல்லது அவநம்பிக்கை கொள்ளும் பொழுது, மனத்தளர்ச்சி அடையும் பொழுது அப்படிப்பட்டவர்களை ஊக்கமூட்டுங்கள் என்று பவுல் கூறுகிறார். நாம் ஊக்கமூட்டாமல், மனத்தளர்ச்சி அடைகிறார்கள் என்று தெரிந்தும் பேசாமல், கண்டும் காணாமல் இருக்கிறோம் என்றால், அது நம்முடைய ஊழியம் இல்லை. மனத்தளர்ச்சியில் இருக்கிறார்கள் என்றால் உடனே ஊக்கமூட்டுவது தான் நம்முடைய வேலை.

தவறாக ஊக்கப்படுத்தக்கூடாது

சில ஊழியர்கள் கூட மனத்தளர்ச்சி அடையும்படி செய்து விடுகிறார்கள். ஊழியர்களே கூட மற்றவர்களின் மனத்தளர்ச்சி அடைய காரணமாக இருக்கிறார்கள். அப்படி இருக்கும் பொழுது நாம் ஊக்கப்படுத்துகிற வேலையை செய்ய வேண்டும். பிறர் முன்னேறுவதற்கு ஊக்கப்படுத்துதல் அவசியம். ஆனால், கடவுளுடைய வார்த்தையின் மூலமாக நாம் ஊக்கப்படுத்த வேண்டுமே ஒழிய, தற்புகழ்ச்சிக்காக, பொய்யாக, போலியாக நாம் அவர்களை ஊக்கப்படுத்தக்கூடாது. நிறைய பேர் செய்யக்கூடிய காரியங்கள் அது தான். அவர்களுக்கு அவர்களை பிடிக்கும் என்பதற்காக Very Good செய்யுங்கள் என்று ஊக்கப்படுத்துவார்கள்.

தப்பாக இருந்தால் கூட ஊக்கப்படுத்துவார்கள். அதற்கு பெயர் ஊக்கப்படுத்துதல் அல்ல. ஊக்கப்படுத்துவது என்பது அவர்களை சரி செய்து, தேவனுக்குள் நெருங்குவதற்கு அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். கடவுளுக்குள் நெருங்குவதற்கு, கடவுளுக்கு உகந்த ஒரு வாழ்க்கை வாழ்வதற்கு, அவர்களை உற்சாகப்படுத்துவது தான் ஊக்கப்படுத்துதல்.

பரிசுத்தமான வாழ்க்கைக்கு, விசுவாசமான வாழ்க்கைக்கு, ஜெப வாழ்க்கைக்கு, அன்பு காட்ட கூடிய வாழ்க்கைக்கு, எல்லாருடனும் ஐக்கியம் கொள்ளக் கூடிய வாழ்க்கைக்கு ஊக்கப்படுத்துவது தான் ஊக்கப்படுத்துவதாகும். அதை விடுத்து, அன்பில்லாத வாழ்க்கைக்கு நாம் ஊக்கப்படுத்துகிறோம் என்றால் அது ஊக்கப்படுத்துவது அல்ல. அப்படி support பண்ணுவது ஊக்கப்படுத்துவது அல்ல. ஆகவே, தேவனுக்குள் நெருங்கி கனி கொடுக்கும் வாழ்க்கைக்கு நாம் உற்சாகப்படுத்த வேண்டும். ஓட்ட பந்தயத்தில் ஓடுகிறார்கள் என்றால் அவர்களை ஊக்கப்படுத்த சிலர் இருப்பார்கள். அவர்கள் அவர்களை ஊக்கப்படுத்துவார்கள்.

படிக்கிறதற்கு நிறைய வீடுகளில் ஊக்கப்படுத்துகிறார்கள்; பள்ளிகளில் ஊக்கப்படுத்துகிறார்கள். வீடுகளில் ஊக்கப்படுத்துகிறார்கள்; பெற்றோர்கள் ஊக்கப்படுத்துகிறார்கள். இப்படி பல பேருடைய ஊக்கமூட்டுதலினாலே தான் அவர்களால் படிக்க முடிகிறது. ஒரு காரியத்தை செய்யும் பொழுது மற்றவர்கள், அவர்களுடைய வளர்ச்சிக்காக ஊக்கப்படுத்துகிறார்கள். அதே போல தேவனுக்குள் நெருங்குவதற்கும் ஊக்கப்படுத்துதல் அவசியம். அது எப்படி இருக்க வேண்டுமானால், தேவனுடைய வார்த்தையைக் கொண்டு அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

விசுவாசத்திலே நிலைத்திருக்க ஊக்கப்படுத்த வேண்டும்

தேவனுடைய வார்த்தையைக் கொண்டு அவர்களை ஊக்கப்படுத்தி, விசுவாசத்திலே அவர்கள் நிலைத்திருப்பதற்காக ஊக்கப்படுத்த வேண்டும். மறுபடியும் கூறுகிறேன் பொய் சொல்லி யாரும் யாரையும் ஊக்கப்படுத்தாதீர்கள். இறைவாக்கினர்கள் தேவன் கொடுக்கிற வார்த்தைகளைச் சொல்லி அவர்களை ஊக்கப்படுத்துவதோடு நின்று விடாமல், அவர்களை உறுதிப்படுத்தினார்கள். தேவனுடைய காரியங்களை துணிந்து

செய்வதற்கு அவர்களை உறுதிப்படுத்தினார்கள். கனி கொடுக்க கூடிய வாழ்க்கைக்கு, அன்பு காட்டக்கூடிய ஒரு வாழ்க்கைக்கு அவர்களை உறுதிப்படுத்தினார்கள். தேவனுடைய அபிஷேகத்தினாலே நிரம்பக் கூடிய ஒரு வாழ்க்கைக்கு அவர்களை உறுதிப்படுத்தினார்கள். யோசித்துப் பாருங்கள் நாம் எத்தனை பேர் அப்படி ஊக்கப்படுத்தி இருக்கிறோம். நான் கேட்பது குழுவில்! வெளியே இருக்கிற எல்லாரையும் நீங்கள் ஊக்கப்படுத்துவீர்கள், அது நல்லது தான். உலகத்தில் இருக்கக் கூடிய மனிதர்களுக்கு மட்டும் ஊக்கம் தேவை இல்லை. ஊழியத்தில் இருக்கிறவர்களுக்கும் ஊக்கம் தேவை.

ஊக்கப்படுத்துதல் பிரச்சினைகளை மாற்றும்

ஒருமுறை நான் தூத்துக்குடி சென்ற பொழுது, ஒரு மனிதன் ஒரு காரியத்தை சொன்னார், "Brother என்னுடைய மனைவி தான் இந்த ஜெபத்திற்கு என்னை கட்டாயப்படுத்திக் கூட்டிக் கொண்டு வந்தார், அதனால் தான் நான் இதற்கு வர ஆரம்பித்தேன். ஆனால், இப்பொழுது நான் ஜெபத்திற்கு போனால் எனக்கு பெரிய தொல்லையாக இருப்பதே என்னுடைய மனைவி தான்" என்று சொன்னார். "போகக் கூடாது என்கிறாள்" என்று கூறினார். அவரும் நிறைய ஊழியர்களிடம் இதைப் பற்றி சொல்லிப் பார்த்தார். ஆனால் அவருக்கு எந்த தீர்வும் கிடைக்கவில்லை. எல்லாரும் "உங்கள் மனைவியிடம் நாங்கள் பேசுகிறோம்" என்று சொன்னார்கள். அவர் மனைவி தான் முதலில் ஜெபத்தில் இருந்தார்கள், ஆர்வமாக இருந்தார்கள், அவர்கள் பண்ண ஊக்கத்தினாலே தான் இவர் ஜெபத்திற்கு வந்தார். ஆனால், இப்பொழுது ஜெப காரியங்களில் அவர் ஈடுபடுவதற்கு பெரிய தடையே அந்த பெண் தான். ஏன் தேவனுடைய வார்த்தையைக் கொண்டு ஊக்கப்படுத்த வேண்டும் என்றால், பிரச்சினைகள் என்ன என்பதை ஆண்டவர் வெளிப்படுத்தக் கூடியவராய் இருக்கிறார். பொய்யாக "Very Good நீங்கள் நல்ல காரியங்கள் செய்கிறீர்கள், ஆனால் உங்கள் மனைவி பொல்லாத காரியங்கள் செய்கிறார்கள்" என்று சொன்னால், அது மனித

முறைப்படி பேசுவது. ஆனால், தேவனுடைய பல வார்த்தைகளை சொல்லி பேசுவதற்கும், இதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு.

நான் அவரைப் பார்த்து, “உங்கள் மனைவியைப் பார்த்து எதாவது சரி இல்லை என்று திட்டுவீர்களா” என்று கேட்டேன். அதற்கு “ஆமாம் Brother திட்டுவேன்” என்று சொன்னார். எதாவது நல்லது செய்தால், “நன்றாக செய்தாய்” என்று உற்சாகப்படுத்தி இருக்கிறீர்களா? பாராட்டி இருக்கிறீர்களா?” என்று கேட்டேன், அதற்கு அவர் “அப்படி நான் ஒரு நாளும் செய்ததே இல்லையே” என்று சொன்னார். இனிமேல் அதை செய்யுங்கள், அவரிடம் உள்ள நல்ல காரியங்களை ஊக்கப்படுத்துங்கள். பாராட்டுங்கள் அதன் பிறகு என்ன நடக்கிறது என்று சொல்லுங்கள் என்றேன். அதன் பிறகு சில மாதங்கள் கழித்து ஒரு நாள் அவரை சந்தித்தேன். அவர் சொன்னார், “Brother என் மனைவி எனக்கு ஊழியத்தில் மிகவும் உறுதுணையாக இருக்கிறார்” என்று சொன்னார்.

உண்மையான பிரச்சினை என்னவென்றால், அவர்களுக்கு ஊக்கப்படுத்துவதற்கு ஆளில்லை. அவரை ஊக்கப்படுத்த, உற்சாகப்படுத்த ஆளில்லாததாலே அதே பெண் அவருக்கு தொல்லையாக மாறிவிட்டார். அந்த பெண் தான் அவரை ஜெபத்திற்குக் கூட்டி கொண்டு வந்தார். அந்த பெண்ணே அவருக்கு எதிராய் மாறி போனார். அதனால் ஊக்கப்படுத்துதல் அவசியம்.

ஊழியர்களுக்கும் ஊக்கப்படுத்துதல் அவசியம்

ஊழியத்தில் இருக்கிறவர்களுக்கு கூட ஊக்கப்படுத்துதல் அவசியம். பெரிய பெரிய புனிதர்களுக்கு கூட அது அவசியமாக இருந்தது. எனக்கும் அது அவசியமாக தான் இருக்கிறது. என்னை ஊக்கப்படுத்துவதற்கும் சில பேர் இருக்கிறார்கள். எல்லாருக்குமே ஊக்கப்படுத்துவதற்கு சில பேர் தேவை. அதே போல் நம்மை திருத்துவதற்கு, நம்முடைய குறைகளை தைரியமாக, நம் முகத்திற்கு முன்பாக துணிச்சலாக, சொல்ல கூடியவர்கள் நமக்கு வேண்டும். அதே சமயத்தில் தேவனுடைய வார்த்தைகளைக் கொடுத்து நம்மை ஊக்கப்படுத்துகிறவர்களும் நமக்கு வேண்டும்.

குறிப்பாக இறைவாக்கினர்கள் இதை செய்தார்கள் என்று போடப்பட்டிருக்கிறது. இறைவாக்கினர்கள் தேவனுடைய

வார்த்தைகளை சொல்லி அவர்களை உறுதிப்படுத்தினார்கள் என்று உரோமையர் 12:8 ல் வாசிக்கிறோம், அது ஒரு கொடை. எல்லாருக்கும் அந்த கொடைகள் இல்லை. சில பேருக்கு அந்த கொடைகள் சிறப்பாக (Special ஆக) இருக்கலாம். ஆனால், எல்லாரும் இந்த பணியை செய்ய வேண்டும். இறுதிக்காலம் நெருங்குகிறதினாலே ஒருவருக்கு ஒருவர் செய்ய வேண்டும். கொடை பெற்றவர்கள் மட்டும் என்று போடாமல் எல்லாரும் ஒருவர் ஒருவரை ஊக்கப்படுத்த வேண்டும் என்று பார்க்கிறோம். கிறிஸ்துவை சந்திக்க ஆயத்தப்படும்படி ஊக்கப்படுத்த வேண்டும். ஆனால், அதே சமயத்தில், இந்த கொடையை பெற்றுக் கொண்டவர்கள், அந்த கொடையில் முழு நேரமாக ஈடுபட வேண்டும். குழுவில் உள்ள உங்களுக்குள் அந்த கொடைகள் இருக்கலாம். ஆனால் அது உங்களுக்கு தெரியாது. கடவுள் ஒரு சில பேருக்கு அதை கொடுத்திருக்கலாம். அந்த கொடையை பெற்றுக் கொண்டவர்கள் இந்த பணியில் ஈடுபட வேண்டும். ஊக்கப்படுத்துவதற்காகவே, அதிலும் குறிப்பாக தளர்ச்சி அடைந்தவர்களை ஊக்கப்படுத்துவதில் ஈடுபட வேண்டும். சில பேர் விசுவாசத்தில் சோர்ந்து போய் இருக்கலாம், சில பேர் உலகக் காரியங்களை கண்டு சோர்ந்து போய் இருக்கலாம், சில பேர் சில பிரச்சினைகளினால் சோர்ந்து போய் தளர்ச்சி அடைந்திருக்கலாம், சில பேர் பண நெருக்கடியினாலே தளர்ச்சி அடைந்து இருக்கலாம், சில பேர் கடுமையான வியாதியினால் தளர்ச்சி அடைந்திருக்கலாம், சில பேர் மனிதர்களுடைய கடினமான வார்த்தையினால் தளர்ச்சி அடைந்திருக்கலாம், சில பேர் பிசாசின் சோதனைகளால் தளர்ச்சி அடைந்திருக்கலாம்.

ஒரு ஊழியரின் சாட்சி

ஒரு ஊழியம் செய்யக் கூடிய ஒரு சகோதரர் ஒருவரை எனக்கு தெரியும், ஆனால் அவர் இப்பொழுது இல்லை. நன்றாக தேவனால் வல்லமையாக பயன்படுத்தப்பட்ட ஒரு ஊழியர். அவருக்கு பிசாசின் சோதனைகள் அதிகமாக இருந்தது. நேருக்கு நேராக வைத்து பிசாசு, அவருக்கு தொல்லை கொடுக்க ஆரம்பித்தது. அவரும் எவ்வளவோ ஜெபம் பண்ணி பார்த்தார் அந்த பிசாசுகள் அவரை விட்டு போவதாக இல்லை, அவர் தூங்க முடியாத அளவிற்கு, அது அவருக்கு

தொல்லை கொடுத்தது. சத்தமாக கதவை அடித்தது, அவர் படுத்திருந்த கட்டிலை புரட்டி போட்டது, அவரது தலையில் இருந்த தலையணையை பிடுங்கி காலில் போட்டது. அவரது முன்னாலே நின்று கொண்டு விகாரமாக சிரிக்க ஆரம்பித்தது. இப்படி பல தொல்லைகள் அவருக்கு கொடுத்தினாலே அவரும் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தார். ஒன்றும் முடியவில்லை. இறுதியாக அவர் தற்கொலை செய்து கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தார், “செத்து விடலாம் இந்த தொல்லையை தாங்க முடியவில்லை” என்று சொல்லி அவர் தீர்மானம் எடுத்துவிட்டார். ஒரு ஊழியருக்கே இப்படி ஒரு சோதனை. அவரோடு நான் பழகி இருக்கிறேன், ஊழியத்திற்கும் சென்றிருக்கிறேன். அவர் கூறியதை தான் நான் உங்களுக்கு கூறுகிறேன். இறுதியாக அவர் இறந்து விடலாம் என்று நினைத்து கொண்டிக்கும் பொழுது, ஒரு சபையை சார்ந்த சகோதரர் அவரை பார்க்க வந்திருந்தார். அவருடைய உணவு மேசையில் சாப்பிட்டு கொண்டிருக்கும் பொழுது, இவரை பார்த்து அந்த சகோதரர் “என்ன சந்தோஷமாக இருக்கிறாயா?” என்று கேட்டிருக்கிறார். அவரும் “ஆமாம்! சந்தோஷமாக இருக்கிறேன்” என்று கூறிவிட்டு சென்றார். அவர் தன் அறைக்குள் சென்று கொண்டிக்கும் பொழுது அவருக்குள் ஒரு கேள்வி குறி, “இந்த சகோதரர் ஏன் என்னை பார்த்து சந்தோஷமாகயிருக்கிறாயா என்று கேட்டார்? நன்றாக இருக்கிறாயா அப்படி என்று தானே எல்லாரும் கேட்பார்கள். ஒருவேளை என்னுடைய பிரச்சினை எல்லாம் அந்த சகோதரருக்கு தெரிந்திருக்குமோ அதனால் தான் அப்படி கேட்கிறாரோ” என்று இவருக்குள் மனது உறுத்த ஆரம்பித்தது, மனது போராட ஆரம்பித்தது. ஒருபக்கம் திரும்ப போய் அவருடன் பேசுவோம் என்ன தான் சொல்கிறார் என்று பார்ப்போம், சாக போகிறோம் என்று நினைக்கிறோமே, ஒருவேளை நம்முடைய பிரச்சினைகள் அவருக்கு தெரிந்திருக்கிறதா என போய் பேசலாம் என்று நினைக்கிறார். இன்னொரு புறம், எதற்கு அவரிடம் போய் இதையெல்லாம் கேட்க வேண்டும் என்றும் ஒரு எண்ணம். ஆனால், மனதிற்குள் ஒரு போராட்டம், தான் செத்து விடலாம் என்று தீர்மானம் செய்ததாலே சரி போய் என்ன என்று கேட்டு விடலாம் என்று அவரை சந்ததித்தார். அந்த சகோதரர் இவரை பார்த்து, “நீ திரும்பி வருவாய் என்பது எனக்கு தெரியும்” என்று கூறினார். மேலும் அவர் கூறினார், “நீ இப்படிப்பட்ட சோதனைகளில் மாட்டிக் கொண்டிருக்கிறாய் என்பதினால் தேவன் என்னை அனுப்பினார். இந்த காரியத்தை செய்

இந்த சோதனைகள் எல்லாம் உன்னை விட்டு விலகி போகும்” என்று சில காரியங்களை கூறினார்.

தேவன் மிக மிக மிக நல்லவர். நீங்கள் ஒருவருக்கு ஒருவர் ஊக்கப்படுத்துங்கள், ஒருவேளை நீங்கள் அதை செய்யாமல் போனால் தேவன் வேறு யாரையாவது அனுப்பி அந்த காரியத்தை செய்து விடுவார். இதை புரிந்து கொள்ள வேண்டும். நம்முடைய வேலையை நாம் செய்யா விட்டால், தேவன் வேறு யாரை வைத்தாவது அந்த வேலைகளை செய்து முடிப்பார். நாம் செய்வதை விட நன்றாகவே செய்து விடுவார். **அதனால், வேறு யாராவது செய்யட்டும் என்று நாம் இருந்துவிட்டால், மேலே போகும் பொழுது நமக்கு கிடைக்க வேண்டிய பரிசு கிடைக்காமல் போய்விடும்.** அவர் சொல்லியதை செய்த உடனே அந்த சோதனைகள் எல்லாம் அவரை விட்டு நீங்கி போனது. அவருடைய சோர்வுகளும் நீங்கி போனது. அதனால், ஊழியர்களும் கூட சோர்வு, மனத்தளர்ச்சி அடைவதுண்டு. சில பிசாசின் சோதனைகள் கூட மனத்தளர்ச்சியை கொண்டு வருகிறது. அதே போல தான் சில வியாதிகளும், இன்றைக்கு பார்க்கிறோம், எத்தனையோ பேர் இந்த வைரஸ் வியாதியினாலே தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியிலே இருக்கும் பொழுதே மன சோர்வு அடைந்து, தளர்ச்சி அடைந்து தற்கொலை செய்து கொள்ளுகிறதை பார்க்கிறோம். அந்த வியாதி அவர்களை மன சோர்வு, மன தளர்ச்சி அடைய செய்கிறது. நெருக்கமானவர்களால் உண்டாகும் சில கடினமான வார்த்தைகள், மறக்க முடியாத படி அது சில சோர்வுகளை கொண்டுவரும், தவறான போலி தீர்க்கதரிசனங்கள் அதுவும் மனிதர்களுக்குள் சில சோர்வுகளை கொண்டு வரும். சரியான தீர்க்கதரிசனம், கடவுளுடைய வார்த்தை, அவர்களை ஆறுதல்படுத்தும், தேற்றும், அவர்களுடைய தவறுகளை சுட்டிக்காட்டும், அவர்களை திருத்தும். தவறான போலி தீர்க்கதரிசனங்கள் என்று தான் அதை சொல்ல வேண்டும், அறியாமல் அதை செய்து விடுகிறார்கள்.

தவறான போலி தீர்க்கதரிசனங்களால் நிகழும் பின்மாற்றம்

ஒரு அருட்சகோதரியை எனக்கு தெரியும் அவர்களுக்கு இறைவாக்குரைக்கக் கூடிய கொடை உண்டு. எனக்கும் சில காரியங்களை சொன்னார்கள், அவர் சொன்னது அப்படியே என்

வாழ்வில் நடந்தது. நான் அதன் பிறகு ஒரு கான்வென்ட் (convent) க்கு சென்றேன், அங்கு நான் சாப்பிட்டு கொண்டிருந்த பொழுது, வாசல் பக்கத்தில் ஒரு சகோதரி நிற்பதை நான் கண்டேன், அப்பொழுது ஆண்டவர் என்னிடம் சொன்னார், "TV பார்ப்பதை விட்டு விட்டீர்களா" என்று கேட்க சொன்னார். நானும் அந்த சகோதரியை பார்த்து கேட்டேன், "TV பார்ப்பதை விட்டு விட்டீர்களா" என்று. அதற்கு அந்த சகோதரி சொன்னார்கள், "நான் TV பார்ப்பது உங்களுக்கு எப்படி தெரியும்?" என்று கேட்டார்கள். எனக்கு தெரியாது, ஆண்டவர் கேட்க சொன்னார் நான் கேட்கிறேன் என்று சொன்னேன். அப்பொழுது அவர்கள் கூறினார்கள், (எனக்கு தீர்க்கதரிசனம் சொன்ன அதே சகோதரி அவர்களுக்கும் தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறார்கள்) ஒரு குறிப்பிட்ட தேதியை கொடுத்து இந்த தேதிக்குள் உங்கள் சூழ்நிலைகள் எல்லாம் மாறிவிடும் என்று அந்த சகோதரிக்கு கூறி இருக்கிறார்கள். அந்த தேதி முடிந்தது, சில நாட்கள் ஆனது, வாரங்கள் ஆனது, மாதங்கள் ஆனது ஒன்றும் நடக்கவில்லை. அப்படி நடக்காததினாலே அவர்களுக்குள் ஒரு சோர்வு. மனசோர்வு உண்டானது, "இது எல்லாமே பொய் தான், உண்மை இல்லை எதோ தீர்க்கதரிசனம் என்று ஏமாற்றுகிறார்கள், அப்படி ஒன்றும் கடவுள் மனிதர்களிடம் பேசுவதில்லை" என்று சோர்வடைந்தவர்களாக TV பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். ஒரு சுயத்திலிருந்து வரக் கூடிய வார்த்தை, இதை தீர்க்கதரிசனம் என்று சொல்ல முடியாது, சுயத்திலிருந்து வருவதை தீர்க்கத்தரிசனமாக உரைக்கிறார்கள். அதை அவர்கள் தீர்க்கதரிசனமாக கடவுளுடைய வார்த்தையாக நினைத்து சொல்லி விட்ட காரணத்தினாலே அது பலரை சோர்வுக்கு உள்ளாக்கிவிட்டது. அதனால், இந்த காரியங்களில் யார் சோர்வடைந்திருந்தாலும், ஊக்கப்படுத்த வேண்டியது ஒரு ஊழியருடைய வேலை, ஆகையினாலே, தான் "ஒருவருக்கு ஒருவர் ஊக்கமூட்டுங்கள்" என்று பவுல் கூறுகிறார்.

தெசலோனிக்க மக்களின் ஊக்குவிக்கும் பண்பு

தெசலோனிக்க மக்கள் இதை நன்றாக செய்தார்கள். ஒருவர் ஒருவரை, விவிலியம் வாசிப்பதற்கும் ஜெபிப்பதற்கும் உற்சாகப்படுத்துகிறார்கள். இன்றைக்கு வேதம் வாசித்தாயா, ஜெபம்

பண்ணினாயா, கடவுளின் குரலை கேட்டாயா என்று கேட்டு ஊக்கப்படுத்துகிறார்கள். தேவனுடைய குரலை கேட்பது, விட முடியாத பாவங்களை எல்லாம் விட்டு விட்டாயா, பரிசுத்தம் அடைந்து விட்டாயா என்று சொல்லி ஒருவரை ஒருவர் தேற்றி ஊக்கப்படுத்துகிறார்கள். ஆண்டவர் சீக்கிரமாக வர போகிறார், அதற்குள் நாம் பரிசுத்தம் அடைய வேண்டும் என்று சொல்லி ஊக்கப்படுத்துகிறார்கள். அதனால் தான் இப்பொழுது செய்து வந்த காரியங்களை எப்பொழுதுமே செய்யுங்கள் என்று பவுல் கூறுகிறார்.

நம்மை ஆராய்ந்து பார்ப்போம்

யோசித்து பாருங்கள், இந்த வேலைகளை நாம் உண்மையாக செய்கிறோமா? மற்றவர்களை ஊக்கப்படுத்துகிறோமா என்று யோசித்து பாருங்கள். அப்படி இல்லை என்றால் ஆண்டவரிடம் மன்னிப்பு கேளுங்கள். மற்றவர்களை ஊக்கப்படுத்த பல வாய்ப்புக்கள் நமக்கு உண்டு. குறிப்பாக இந்த குழுவில் உள்ளவர்களை ஊக்கப்படுத்த பல வாய்ப்புக்கள் நமக்கு உண்டு. அந்த வாய்ப்புக்களை எல்லாம் நாம் சரியாக பயன்படுத்தி இருக்கிறோமா என்று யோசித்து பாருங்கள், இல்லையென்றால், இன்று ஆண்டவரிடம் மன்னிப்பு கேளுங்கள். மன்னிப்பு கேட்டு இன்னும் இருக்கிற நாட்கள், ஆண்டவருடைய வருகை சீக்கிரமாக இருப்பதினால் ஒருவர் ஒருவரை ஊக்கப்படுத்த ஒப்புக்கொடுப்போம். ஆமென்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே மகிமை!

29/05/2020

சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை நன்று

திருப்பாடல் 133:1-3 சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை நன்று, எத்துணை இனியது! அது ஆரோனின் தலையினிலே ஊற்றப்பெற்ற நறுமணத்தைலம், அவருடைய தாடியினின்று வழிந்தோடி அவருடைய அங்கியின் விளிம்பை நனைப்பதற்கு ஒப்பாகும். அது எர்மோனின் மலைப்பனி சீயோனின் மலைகள்மேல்

இறங்குவதற்கு ஒப்பாகும்; ஏனெனில், அங்கிருந்தே என்றுமுள வாழ்வென்னும் ஆசிதனை ஆண்டவர் பொழிந்தருள்வார்.

ஒன்றுபட்டு என்பது ஒருமனப்படுதல்

நிலைவாழ்வு என்னும் ஆசிதனை ஆண்டவர் அங்கிருந்தே பொழிந்தருள்வார். கடவுளுடைய பிள்ளைகள் கடவுளுடைய ஊழியத்தில் இருப்பவர்கள் ஒருமனப்பட்டு வாழ்வது எவ்வளவு இனியது எவ்வளவு நன்று அங்கேதான் நிலைவாழ்வு என்கிற ஆசியை ஆண்டவர் பொழிந்தருள்வார். ஒன்றுப்படுவதற்கு யார் ஒத்துப் போகவில்லையோ ஒரு மனப்படுவதற்கு யார் ஒத்துப் போகவில்லையோ அவர்கள் நிலைவாழ்வு என்கிற ஆசீர்வாதத்தை பெற முடியாது. ஒரு மனப்படுவதில்தான் கடவுள் ஆசீர்வாதத்தை வைத்திருக்கிறார். ஒரு மனம் என்பது அவ்வளவு எளிதாக வருவதில்லை ஏனென்றால் நிறைய இடங்களில் பிரச்சனைகளுக்கு காரணம் இதுதான்; பல்வேறு சூழ்நிலைகளில் பிறக்கிறார்கள்; பல விதமான சூழ்நிலைகளிலே வளர்கிறார்கள்; வித்தியாசமான கலாச்சாரங்களை கொண்டிருக்கிறார்கள்; பெற்றோர்களிடத்திலோ குடும்பத்திலிருந்தோ சில நல்ல காரியங்கள் சில கெட்ட காரியங்கள் சேர்த்தே கற்றுக் கொள்கிறார்கள். ஆதலால் ஒன்றுப்படுவது என்பது சிலருக்கு சிரமமாக இருக்கிறது. ஆனால், விவிலியத்தில் ஒன்றுப்படுகிற இடத்தில்தான் அபிஷேகம்; அது ஆரோனின் தலையில் ஊற்றப்பட்டுள்ள நறுமணத் தைலம் அந்த அபிஷேகம் சீயோன் மலையில் இருந்து இறங்கி வருவதற்கு ஒப்பாக இருக்கிறது என்கிறார் ஆண்டவர். அது மட்டுமல்ல அங்கிருந்து என்றும் உள்ள நிலைவாழ்வு அல்லது நித்திய ஜீவன் என்று சொல்லலாம் அந்த ஆசியை அங்குதான் பொழிந்தருள்கிறார். ஆனால், இன்று நிறைய பேர் ஜெபிக்கிறார்கள்; கடவுளால் பயன்படுத்தப்படுகிறார்கள்; சில வரங்களையும் கொண்டிருக்கிறார்கள்; நல்ல அழகாக செய்திகளை கொடுக்கிறார்கள்; அருமையாக பாடல்கள் பாடுகிறார்கள் ஆனால் ஒருமனம் என்று சொல்லும் பொழுது அதற்கு ஒத்துப்போக முடியாதவர்களாக இருக்கிறார்கள். இதுதான் பிரச்சனை; ஊழியம் செய்கிறார்கள், நற்செய்தி அறிவிக்கிறார்கள் ஆனால், இன்று சபைகளில் எவ்வளவு பிரிவினைகள் எவ்வளவு முரண்பட்ட காரியங்கள்! காரணம் என்ன? இந்த ஒருமனம் இல்லாதது தான்,

திருத்தூதர் பணி 1:14ல் இயேசுவின் தாய் மரியாவோடும் மற்ற சீடர்களும் ஒரே மனதோடு ஜெபத்திலே ஈடுபட்டார்கள் அப்பொழுதுதான் தூய ஆவியானவர் இறங்கி வருகிறார் ஜெபிப்பதில்கூட ஒருமனப்படுதல். இந்த ஒருமனப்படுதல் எப்பொழுதும் உண்டாக வேண்டும்.

ஒருமனப்படுவதற்கு ஒரேவழி இதுவே

ஆண்டவருடைய பெயரால் ஒருமனம் இருக்க வேண்டுமென்றால் நிறைய இடங்களில் நாம் தாழ்ந்து போக வேண்டியிருக்கும். இல்லையென்றால் ஒருமனம் உண்டாகாது. தாழ்மை இல்லாத இடங்களில் தாழ்மைப்படாத இடங்களில் ஒருமனம் உண்டாகாது. அந்த ஒருமனம் உண்டாகும் போதுதான் நிலைவாழ்வு என்கிற ஆசிர்வாதம் கொடுக்கப்படும். ஒரு ஜெபக்குழுவில் ஒரு மனதிற்கு ஒத்துப்போகாதவர்கள் நிலைவாழ்வு என்கிற ஆசியை பெறுவதில்லை. இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களில் யூதாஸ் மட்டும் வேறு மனம் கொண்டவனாக இருந்தான். அவன் நிலைவாழ்வைப் பெற்றுக் கொள்ளவில்லை; நிலைவாழ்வு என்கிற ஆசீர்வாதம் வேண்டும் என்றால் ஜெபக்குழுவில் ஒரு மனம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். இது மிகவும் முக்கியம். குடும்பத்தில் கணவன் மனைவி இரண்டு பேர்தான். ஆனால் 40, 50 பேர் கூடுகிற ஜெபக்குழுவிலே ஒரு மனம் வேண்டுமென்றால் நம்மை மாற்றிக் கொள்ள வேண்டும் நம்மை மாற்றிக் கொள்ளாவிட்டால் அங்கே ஒரு மனம் இருக்காது.

ஆதி திருச்சபையில் ஜெபக்குழுவின் அமைப்பு

திருத்தூதர்பணி 2:42ல் சொல்லப்பட்டிருக்கிறது, அவருடைய வார்த்தைகளை ஏற்றுக் கொண்டோர் திருமுழுக்குப் பெற்றனர். ஏறக்குறைய 3000 பேர் அவர்களோடு சேர்க்கப்பட்டனர். ***திருத்தூதர்பணி 2:41ல் திருத்தூதர் முதலாவது கற்பித்தவற்றிலும் அதாவது அப்போஸ்தலர்களின் படிப்பினைகள், இயேசு கிறிஸ்துவின் நற்செய்திகள் கொடுக்கப்பட்டன. இரண்டாவது நட்புறவிலும்(fellowship) மூன்றாவது அப்பம் பிடுவதிலும் நான்காவது ஜெபத்திலும் உறுதியாய் இருந்தார்கள்.***

ஆனால் இன்று பொதுவாக அப்பம் பிடுவதற்கு முதலிடம் கொடுத்து விடுகிறோம்; சிலபேர் ஜெபிப்பதற்கு முதலிடம் கொடுத்து விடுகிறார்கள்; ஆனால், முதலில் இருக்கிற இரண்டு காரியங்களும் இன்று இல்லை. “திருத்தூதர் கற்பித்தல் முதலிலும், இரண்டாவது நட்புறவிலும்” என்று போடப்பட்டிருக்கிறது. **ஐக்கியம் என்பது எந்த அளவுக்கு முக்கியம் என்றால் அப்பம் பிட்குதல், ஜெபம் இதற்கு சமமாக நட்புறவை வைத்திருத்தல்.** ஆரோக்கியமான ஆவிக்குரிய இந்த நட்புறவு இல்லையென்றால் அந்த ஒருமனம் இருக்காது. இன்றைக்கு என்ன நினைக்கிறார்கள், செய்தி கொடுக்கிறார்கள் என்றால் “ஜெபம் செய்கிறோம் இது போதும்” என்று நினைக்கிறார்கள். இது நட்புறவு இல்லை.

ஒருமனப்படுதல் என்றால் நட்புறவு

“நட்புறவு” என்கிற வார்த்தை எங்கே வருகிறது என்றால் **2 கொரிந்தியர் 13ல்** இந்த நட்புறவு என்ற வார்த்தையை பார்க்கிறோம், யாருடன் ஐக்கியம் வருகிறது என்றால் தூய ஆவியானவரோடு ஐக்கியம் வருகிறது. “நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அருளும் கடவுளின் அன்பும் தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!” என்று விவிலியத்தில் வாசிகிறோம். இங்கே தான் இந்த நட்புறவு வருகிறது. பரிசுத்த ஆவியானவரோடு நாம் கொண்டிருக்கிற நட்புறவு, சகோதர சகோதரிகளோடு நட்புறவுக்கு கொண்டு போகாவிட்டால் தூய ஆவியானவரோடு நாம் வைத்திருக்கிற நட்புறவு போலியானது என்று அர்த்தம். **தேவனிடத்தில் வைத்திருக்கிற இறை அன்பானது பிறரன்புக்கு நம்மை கொண்டு போகாவிட்டால் தேவனோடு வைத்திருக்கிற அன்பு போலியானது என்று விவிலியத்தில் போடப்பட்டிருக்கிறது.** இந்த ஆவிக்குரிய நட்புறவு அருட்சகோதரிகளின் இல்லத்தில் பார்த்தோம் என்றால் இரவு உணவுக்குப் பிறகு அங்கிருக்கிற அருட்சகோதரிகள் ஒருவரோடு ஒருவர் நட்பறவு வைப்பதற்காக, மனம் திறந்து பேசுவதற்காக, ஒருவர் ஒருவரை நன்கு புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அரை மணி நேரம் வைத்திருப்பார்கள். உங்களையே நீங்கள் கேட்டுப் பாருங்கள், எத்தனை பேரோடு இப்படி மனம் திறந்து பழகக்கூடியவர்களாக இருக்கிறீர்கள்? அப்படி இல்லை என்றால்

நீங்கள் குறுகிய மனப்பான்மை கொண்டவர்களாகத்தான் இருக்கிறீர்கள். ஏற்றத்தாழ்வு இல்லாமல் பாகுபாடு இல்லாமல் எல்லாரையும் சமமாக நேசிக்க வேண்டும் என்பது தான் விவிலியத்தில் போடப்பட்டிருக்கிறது. ஒரு ஜெபக்குழுவில் பாகுபாடு இல்லாமல் எல்லாரிடமும் சமமாக ஒரு நட்புறவு வைப்பது மிக மிக அவசியம். இந்த நட்புறவு இல்லாதவர்கள் எப்படி தொடர்ந்து ஜெபக்குழுவில் நீடிப்பார்கள்? மற்றவர்களுடைய எல்லா நல்லது கெட்டதிலும் பங்கெடுக்க கூடியதுதான் நட்புறவு. நாம் சந்திக்கக் கூடிய காரியங்களை, பகிர்ந்து கொள்ளக் கூடியது தான் நட்புறவு.

அப்போஸ்தலர்களிடையே இருந்த நட்புறவு

அப்போஸ்தலர்களின் நட்புறவை . **திருத்தூதர்பணி 4:23ல் சிறைச்சாலையில் இருந்து விடுதலை பெற்ற அவர்கள், தங்களைச் சேர்ந்தவர்களிடம் வந்து, தலைமைக் குருக்களும் மூப்பர்களும் தங்களுக்குக் கூறிய யாவற்றையும் அறிவித்தார்கள்.** பகிர்ந்து கொள்கிறார்கள். அப்போஸ்தலர்கள் ஆவிக்குரிய நிலையில் மிக மேலானவர்களாக இருக்கிறார்கள். ஆனாலும் கூட தங்களைச் சார்ந்தவர்களிடத்திலே பகிர்ந்து கொள்கிறார்கள் அதுதான் நட்புறவு. ஆவிக்குரிய காரியங்களாக இருந்தாலும் உலகுக்குரிய காரியங்களாக இருந்தாலும் எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்வதுதான் நட்புறவு. ஆவிக்குரிய பிள்ளைகளோடு இந்த நட்புறவை நம்மால் வைக்க முடியாவிட்டால் வேறு யாரிடத்தில் நட்புறவை வைக்க முடியும் என்பதை யோசித்து பார்ப்போம்.

திறந்த மனம்தான் சிறந்த நட்புறவு

இயேசுவைத் தவிர யாரும் சிறந்தவர்கள் கிடையாது. நாம் மற்றவரிடம் சிறந்தவர்களாக காணப்பட வேண்டும் என்பதற்காக ஐக்கியம் இல்லாமல் இருக்கக் கூடாது. எத்தனையோ நம்முடைய குறைகளும் மற்றவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். நிறைய பேர் ஜெப ஐக்கியம் என்றால் வீட்டில் இருப்பதில் சிறந்ததை காட்டிவிட்டு போக நினைக்கிறார்கள். பெலவீனம் இருந்தால் அவர்களுக்கு தெரிந்திருக்கட்டும். நாம் ஒரு சில காரியங்களில் தவறு செய்கிறோம்

என்றால் ஜெப குழுவில் இருப்பவர்களுக்கு தெரிந்து இருப்பதில் என்ன தவறு இருக்கிறது? ஒரு குறையும் இல்லாத பரிசுத்தவானாக நாம் நம்மை காட்ட வேண்டிய அவசியம் இல்லை. திறந்த மனதாக இருக்கிறது என்றால் அது பரிசுத்தமானதாக இருக்கிறது என்று அர்த்தம். ஒருமனம் திறக்க முடியாமல் மூடப்பட்டிருக்கிறது என்றால் அதில் அழுக்கு இருக்கிறது என்று அர்த்தம். திறந்த மனம்தான் தூய்மையான மனம். நாம் நிறைய நேரங்களில் திறக்க பயப்படுவதற்கு காரணம் நமக்குள்ளே இருக்கக்கூடிய வண்டவாளங்கள் குறைகள் வெளியே தெரிந்து விடக் கூடாது என்பதுதான். ஒருமனமே இல்லை என்றால் நம்முடைய இருதயத்தை திறந்து காட்ட முடியாது. **யோவான் 14வது அதிகாரம் முழுவதும்** இதைத்தான் சொல்கிறார். **ஒளியினிடத்தில் வருவதற்கு ஏன் பயப்படுகிறார்கள்? தங்களுடைய செயல்கள் வெளியாகாதபடி ஒளியினிடத்தில் வருவதற்கு பயப்படுகிறார்கள்.** நம்முடைய செயல்கள் பரிசுத்தமானதாக இருக்குமானால் அது வெளி வருவதற்கு நாம் பயப்படமாட்டோம். அங்கே பரிசுத்தம் குறைந்து போயிருக்குமானால் வெளியே யாரும் பார்க்கவோ கேட்கவோ தெரிந்து கொள்ளவோ கூடாது என்று கவனமாக இருப்போம். ஊழியத்தில் இருப்பவர்கள், ஜெபத்தில் இருப்பவர்கள் எல்லாரோடும் நட்பு பாராட்ட வேண்டும். நாம் வேதனைப்படும்போது மற்றவர்கள் நமக்காக ஜெபிக்கிறார்கள். குழுவில் யார் வேதனைப்படுகிறார்கள் என்பதுகூட தெரிவதில்லை. ஒருவர் ஒருவரை விசாரிக்கக் கூட முடியவில்லை என்று சொன்னால் நாம் ஜெபக்குழுவில் உறுப்பினரே கிடையாது. சிலர் அறிவுரை மட்டும் தான் சொல்வார்கள் **நட்புறவு என்பது அறிவுரை சொல்வது மட்டுமே இல்லை** அறிவுரையே சொல்லவில்லை என்றாலும் ஒரு ஐக்கியம் வைக்க வேண்டும். **ஐக்கியம் என்பது நம்முடைய அன்பு.**

சிறந்த நட்புறவின் அடையாளம் பிறரன்பு

அன்பின் அடையாளமே இதுதான், மற்றவர்களுடைய வேதனைகளை கஷ்டங்களைப் புரிந்து கொள்வது. இருதயத்தில் மறைந்திருக்கிற வேதனைகளையும் புரிந்து கொள்வது. ஒரு ஜெபக்குழுவில் ஒரு உறுப்பு கஷ்டப்படுகிறது என்றால் எல்லா உறுப்பும் சேர்ந்து கஷ்டப்படும். நாம் எல்லோரும் இயேசு

கிறிஸ்துவின் உடலில் உறுப்புகளாக இருக்கிறோம். ஒருவர் கஷ்டப்படும்போது எல்லாரும் கஷ்டப்படுகிறவர்களாக இருப்போம். தொடர்பு இருந்தால் தான், ஒரு கை வேலை செய்யும் போது, இன்னொரு கையும் சேர்ந்து செய்யும். இல்லையென்றால் அது இன்னொரு வேலையை செய்யும். படிக்காதவர்களிடமும் உயர்நிலை தாழ்நிலை என்ற பாகுபாடு இல்லாமல் ஐக்கியம் வைத்துக் கொள்ள வேண்டும். யார் மூலமாகவும் தேவன் நம்மோடு இடைபடமுடியும் நம்முடைய உதவி யாருக்கு வேண்டுமானாலும் தேவைப்படவும் கூடும். தனியாக யாரும் ஆண்டவருக்குள் நெருங்கி போக முடியாது. கடவுளுடைய கிருபையில் நாம் எவ்வளவு சிறந்தவர்களாக இருந்தாலும் ஒரு கிருபையும் இல்லாமல் குழுவில் யாராவது இருந்தாலும் அவர்களிடத்திலும் ஐக்கியம் பாராட்டத்தான் வேண்டும். அதற்காகத்தான் குழு இருக்கிறது.

பரலோகத்தில் ஒரு நாள் நாம் போய் நிற்கும் போது தேவன் நம்மை நியாயம் தீர்ப்பார். அப்போது நீங்கள் உண்மையிலேயே சிறப்பானவர்களாக இருந்தால் உங்களுக்கு கைம்மாறு ஆண்டவர் அங்கே கொடுப்பார். ஆனால், ஜெபக்குழுவில் வரும்பொழுது நான் சிறப்பானவன் என்று நினைக்காமல் எல்லாரையும் சமமாக அன்பு செய்ய வேண்டும். ஆண்கள் எல்லா ஆண்களோடும், பெண்கள் எல்லா பெண்களோடும் ஐக்கியம் வைக்க வேண்டும். எல்லாரிடமும் தொடர்பு இல்லாமல் எல்லாரிடமும் பேசாமல் நான் கடவுளிடம் அதிகமாக நெருங்கி இருக்கிறேன் என்று சொன்னால் அது போலியானது. கடவுளிடம் இருந்து அன்பை நான் பெற்றுக் கொண்டேன் என்றால் அதை பிறரிடம் பகிர வேண்டும். அந்த அன்பை நாம் காட்ட வேண்டும். ஜெபக்குழுவில் எல்லோரும் மற்றவர்களுக்காக ஜெபிக்கிறார்கள். **நம்மை நேசித்து நமக்காக ஜெபிக்கிறவர்களிடத்தில் அன்பை காட்ட முடியவில்லை என்றால் வேறு யாரிடம் போய் உண்மையான அன்பை காட்ட முடியும்! அதுதான் இறையன்பு.**

இன்று எத்தனை பேர் இந்த சகோதர அன்பினால் நிறைந்திருக்கிறோம். அதுதான் ஒன்றுபட்டு வாழ்வது. அந்த நட்புறவு இல்லையென்றால் எங்கேயோ தடம்புரண்டு போய் நிற்கிறோம். கடவுளுடைய வசனத்தில் இருந்து தள்ளி நிற்கிறோம். யூதாஸ் தன்னைக் காட்டிக் கொடுப்பான் என்று இயேசுவுக்கு நன்றாக தெரியும். “ உங்களில் ஒருவன் என்னை காட்டிக் கொடுப்பான்” என்று

இயேசு சொல்கிறார். யூதாஸ் காரணம் இன்றியா விழுந்து போனான் அவனுடைய இருதயம் கடினப்பட்டிருந்தது. அவனிடம் கூட ஆண்டவர் நட்பு பாராட்டுகிறார், “நண்பா” என்று தான் சொல்கிறார். அதுதான் நமக்குள் பரிசுத்தத்தை கொண்டுவரும். ஜெபம் பண்ணுகிறோம் என்றால் அந்த அன்பு வெளிப்படும். எப்படி வெளிப்படும் மனிதர்களோடு உள்ள உறவு மேம்பட்டால் தான் அன்பு வெளிப்படும். அந்த உறவு மேம்படவில்லை என்றால் அது எந்த மாதிரி அன்பு? கண்ணால் காண்கிற சகோதரனை நேசிக்காமல் காணமுடியாத கடவுளை நேசிக்க முடியாது. ஜெபக்குழுவில் உள்ளவர்களை மற்றவர்களை நேசிக்க முடியவில்லை என்றால் காணாத தெய்வத்தை எப்படி நேசிக்க முடியும்? நம்முடைய அன்பை பெற்றுக் கொள்ள பிறருக்கு தகுதி இல்லை என்று சொல்ல முடியுமா?

கடவுளுடைய அன்பை பெற்றுக் கொள்ள யாருக்கும் தகுதியில்லை ஆனாலும் அவர் நம்மேல் அன்பு பாராட்டுகிறார். அதுபோல குழுவில் எல்லாரையும் அன்பு செய்ய நாம் கடமைப்பட்டிருக்கிறோம் சில பேர் மூத்த ஊழியர்களிடத்தில் மட்டும் ஐக்கியம் வைத்துக்கொண்டால் போதும் என்று நினைக்கிறார்கள். பெண்கள் பெண்களுக்குள் ஒரு நல்ல ஐக்கியத்தை கொண்டு வாருங்கள். ஆண்களும் அதேபோல் அந்த ஐக்கியத்தை கொண்டு வாருங்கள். அந்த ஐக்கியம் தான் நீங்கள் உண்மையாகவே கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்கள் என்பதற்கு அடையாளம்.

யோவான் 13:35ல் நீங்கள் ஒருவர் மற்றவருக்கு செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர் என இயேசு கூறுகிறார். ஜெபக்குழுவில் ஒருவருக்கு ஒருவர் மதிக்கிறார்களோ இல்லையோ அன்பு காட்ட வேண்டியது கடமை. அன்பில்லாமல் ஆண்டவருக்கு ஊழியம் செய்ய முடியாது. திருச்சட்டத்தின் நிறைவு அன்புதான். **அன்பை கொண்டிராதவர்கள் ஆண்டவரை கொண்டிருக்கவில்லை; ஏனென்றால் கடவுள் அன்பாய் இருக்கிறார்.** ஜெபக்குழுவில் ஒருவர் ஒருவரை நேசிப்பவர்களாக இருக்க வேண்டும். நல்ல ஐக்கியம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். ஐக்கியத்தில் ஒருவேளை குறைவுபட்டிருந்தால் அதைக்காட்ட வேண்டும்.

பிறரன்பு -விளக்கம்

ஒருவருக்கு ஒருவர் படிக்கிற இறைவார்த்தையை பகிர்ந்து கொள்ளலாம். வாழ்க்கையில் வரக்கூடிய அனுபவங்களை பகிர்ந்து கொள்ளலாம். நம்முடைய தோல்விகளை பகிர்ந்து கொள்ளலாம். அது மற்றவர்கள் தோல்வி அடையாமல் இருப்பதற்கு உதவும். சின்ன சின்ன காரியங்களில் கூட வசனத்தின் மூலம் எப்படி வெளிவர முடியும் என்று பகிரும் போது மற்றவர்களுக்கு அது பயனுள்ளதாக இருக்கிறது. நம்மிடம் இருக்கிற நல்ல காரியங்களையும் பகிர்ந்து கொள்ளலாம். இந்த உறவு தான் கடவுளுக்குள் இருக்கிறோம் என்பதற்கு அடையாளம். எல்லாருக்கும் வாழ்க்கையில் கஷ்டங்கள் நன்மைகள் ஆசீர்வாதங்கள் உண்டு. குழு என்று வரும்பொழுது அதை பகிர்ந்து கொள்ள வேண்டும் மற்றவர்களுக்கு அது உதவியாக இருக்கும் நாம் நிறைய தவறுகள் செய்திருக்கலாம், அதுகூட பிறருக்கு பிரயோஜனமாக இருக்கும். இதுதான் ஒரு நல்ல நட்புறவை கட்டி எழுப்பும். அன்பு செலுத்துவது ஒன்றே உங்கள் கடமையாக இருக்கட்டும் என்கிறார். அன்பு செய்ய நாம் கடன்பட்டிருக்கிறோம். நமக்காக நிறையபேர் ஜெபித்திருக்கிறார்கள்; அவர்களுக்கு அன்பு காட்ட நாம் கடன்பட்டிருக்கிறோம். “எனக்கென்ன வந்து போச்சு எனக்கு எல்லாம் சரியா இருக்கு” என்று இருந்தால் அது அன்பு இல்லை. கண்டும் காணாமல் இருக்கிறோம் என்றால் அது அன்பும் இல்லை, ஐக்கியமும் இல்லை. எனக்கு தெரியவே தெரியாது என்று சொன்னால் அதுவும் ஐக்கியமில்லை. உண்மையாகவே அந்த அன்பை கொண்டு இருக்கிறேனா என்று உங்களையே ஆராய்ந்து பாருங்கள்.

குழுவில் எல்லாரிடமும் ஐக்கியம் வைக்க முடிகிறதா அல்லது சிலரிடம் அன்பு காட்ட முடியாமல் நீங்கள் ஸ்பெஷலானவர்களாக இருக்கிறீர்களா. சிலர் நம்மிடம் சிறப்பான வரங்கள் இருக்கிறது என்று நினைத்தால் சாதாரண மக்களிடம் ஐக்கியம் வைக்க முடியாது. இங்கு யாரும் சிறப்பானவர்கள் இல்லை இயேசு மட்டுமே சிறப்பானவர். ஏன் நம்மால் அன்பு காட்ட முடியவில்லை? ஒரு சகோதரியிடம் பேசும்போது “என் கூட இருக்கிற எல்லாருக்கும் என்னை பிடிக்கவில்லை” என்று சொன்னார்கள். ஆனால் அவர்களுக்கு நிறைய வெளிப்பாடுகள் கிடைக்கிறது. “ஆண்டவர் நிறைய பேசுகிறார்; நிறைய என்னிடம் சொல்கிறார்; ஆண்டவர் கூடவே நான் இருக்கிறேன்; ஜெபம் பண்ணி கொண்டே இருக்கிறேன்; ஆனால் என் கூட இருக்கிற யாருக்கும் என்னை

பிடிக்கவில்லை; எனக்கும் என்னை பிடிக்கவில்லை” என்று அந்த சகோதரி கூறினார்கள். இந்த மாதிரி இருந்தால் வெளிப்பாடு எங்கே இருந்து வரும்? இப்படி இருந்தால் தவறாக வழியில் நீங்கள் நடத்தப்பட்டிருக்கிறீர்கள் என்று அர்த்தம். இப்படி இருப்பவர்களை நிறைய பேர் “ஆமாம், ஆண்டவர் உங்களுடன் பேசுகிறார்” என்று ஊக்கப்படுத்தி விடுகிறார்கள். அதுவே அவர்களுக்கு தலைகால் புரியாமல் போய் விடுகிறது. கூட இருப்பவர்களை நேசிக்க முடியவில்லை, அவர்களுக்கும் உன்னை பிடிக்கவில்லை என்றால் இந்த வெளிப்படுத்துதல் இருந்து என்ன பிரயோஜனம்? இதெல்லாம் தூய ஆவியானவர் கொடுப்பதா? போலி இறைவாக்கினர்களுக்கும் உண்மையான இறைவாக்கினர்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை அவர்களின் கனிகளை கொண்டே அறிந்து கொள்வீர்கள். கனி என்றால் அன்பு. அன்பில்லாமல் இறைவாக்கு உரைப்பவர் போலி இறைவாக்கினர் என்று அர்த்தம். உண்மை என்றால் தூய ஆவியானவரிடம் இருந்து வருவது; போலி என்றால் வேறு ஆவியிடம் இருந்து வருவது. அன்புதான் நம்மை அடையாளம் காட்டும்; அதனால்தான் **அன்பை முதலில் நாடுகள் பிறகு ஆவிக்குரிய வரங்களை ஆர்வமாய் தேடுங்கள் என்று பவுல் சொல்கிறார்.**

தயவுசெய்து இந்த வெளிப்பாடு எல்லாவற்றையும் விட்டுவிட்டு, கூட இருக்கிறவர்களை நேசிக்கப் பழகுங்கள். மோசே செய்த அற்புதங்களில் பாதிக்குமேல் மந்திரவாதிகள் கூட செய்தார்கள். தூயஆவி துணையுடன் செய்தார்களா? இல்லை. முதலில் ஐக்கியத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்; ஒருவருக்கொருவர் நல்ல அன்பாக இருக்க பார்க்க வேண்டும். அது இல்லாமல் வரங்கள் இருக்கிறது என்றால் அது சந்தேகத்திற்குரியது. **நம்மையே நாம் அடிக்கடி “இந்த குழுவில் எல்லாரையும் நான் அன்பு செய்கிறேனா எல்லாரிடமும் ஐக்கியமாய் இருக்கிறேனா எல்லாரையும் நேசிக்கிறேனா எல்லாரிடமும் நல்ல உறவு இருக்கிறதா மற்றவர்களுக்கு நான் இடறலா இருக்கிறேனா” என்று அடிக்கடி கேட்டு பார்க்க வேண்டும்.**

யாரையாவது நேசிக்காமல் இருந்தால் ஏன் நேசிக்காமல் இருக்கிறேன் என்ற காரணத்தைக் கண்டுபிடித்து அதை சரி செய்ய வேண்டும். குழுவில் எல்லாரும் நம் அன்பை அனுபவித்திருக்க வேண்டும். சிலர் குழுவில் இருக்கிற யாருடனும் தொடர்பே

இல்லாமல் எனக்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்று கூட இருப்பார்கள். ஜெபக்கூடுகை வந்தால் போதும் என்று இருப்பார்கள் அந்த மாதிரி இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் அது அன்புமில்லை நட்புறவுமில்லை ஐக்கியமுமில்லை. கடவுள் இப்படி இருக்க சொல்லவில்லை. அதை விரும்பவும் இல்லை. **நற்செய்தி அறிவிப்பதினால் அல்ல, அற்புதங்கள் செய்வதினால் அல்ல ஒருமனமாய் இருப்பதினாலே மற்றவர்கள் கடவுளின் சீடர்கள் என்பதை அறிந்து கொள்வார்கள்.** “யாரை நான் நேசிக்க முடியாமல் இருக்கிறேன்?” என்று நம்மையே நாம் ஆராய்ந்து பார்த்து சரி செய்ய ஒப்புக்கொடுப்போம்; அதில்தான் நிலைவாழ்வு இருக்கிறது.

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியானவருக்கும் மகிமை உண்டாவதாக

28/05/2020

சான்றோர் சான்றாண்மையில் நிலைத்து நிற்பர்

எசாயா 32:8 - சான்றோர் உயர்வானவற்றைச் சிந்திக்கின்றனர்; அவர்கள் சான்றாண்மையில் நிலைத்து நிற்பர்.

சான்றோர்கள் என்றால் புனிதர்கள், உயர்ந்தவர்கள், பெருமைக்குரியவர்கள். அவர்கள் உயர்வானவற்றை சிந்திக்கின்றனர். உயர்வானது என்று சொல்லப்படுவது இறைவார்த்தையே. உயர்வானது என்றால் அது ஆவிக்குரியது, அது கடவுளைக் குறித்த காரியங்கள், தூதர்களைக் குறித்த காரியங்கள், பரிசுத்தத்திற்கு அடுத்த காரியங்கள், பரலோகத்தைக் குறித்த காரியங்கள். சான்றோர்கள் இவைகளையே சிந்திப்பதால் சான்றாண்மையில் நிலைத்து நிற்பர். பரிசுத்தமான வாழ்க்கையிலே அவர்கள் நிலைத்து நிற்பார்கள் என்று பார்க்கிறோம்.

சான்றோர் உயர்வானவற்றையே சிந்திக்கிறார்கள்

சான்றோர் என்று சொன்னால் நம் அனைவர்க்கும் தெரியும் அவர்கள் உயர்ந்தவர்கள். அவர்கள் உயர்ந்தக் காரியங்களையே சிந்திக்கிறார்கள், தியானிக்கிறார்கள், சிந்தையில் இருத்துகிறார்கள். இதையே,

பிலிப்பியர் 4:8-9 இறுதியாக, சகோதர சகோதரிகளே, உண்மையானவை எவையோ, கண்ணியமானவை எவையோ, நேர்மையானவை எவையோ, தூய்மையானவை எவையோ, விரும்பத்தக்கவை எவையோ, பாராட்டுதற்குரியவை எவையோ, நற்பண்புடையவை எவையோ, போற்றுதற்குரியவை எவையோ, அவற்றையே மனத்தில் இருத்துங்கள். நீங்கள் என்னிடம் கற்றுக்கொண்டவை, என் வழியாய்ப் பெற்றுக்கொண்டவை, என்னிடம் கேட்டறிந்தவை, என் வாழ்வில் நீங்கள் கண்டுணர்ந்தவை யாவற்றையும் கடைப்பிடியுங்கள். அப்போது அமைதியை அருளும் கடவுள் உங்களோடிருப்பார்.

இங்கே சான்றோர் உயர்வானவற்றையே சிந்திக்கிறார்கள் என்று பவுல் கூறுகிறார். உண்மையானவை அதாவது இறைவார்த்தை,

கண்ணியமானவை, நேர்மையானவை, தூய்மையானவை, விரும்பத்தக்கவை, பாராட்டுதற்குரியவை, நற்பண்புடையவை, போற்றுதற்குரியவை அவற்றையே மனதில் இருத்துங்கள் எனவும், திருப்ப திரும்ப அதையே தியானம் பண்ணுங்கள் எனவும் பவுல் கூறுகிறார்.

மனதில் இருத்துதல், சிந்தையிலே சிந்தித்தல், உயர்வானவைகளை, பாராட்டுதற்குரியவைகளை, பரிசுத்தமானவைகளை, ஆவிக்குரியவைகளை, புனிதர்களின் வாழ்க்கையில் நடந்தவைகளை, வானதூதர்களுடைய காரியங்களை என்று இப்படிப்பட்ட காரியங்களை தம் மனதில் நிறுத்தி சான்றோர்கள் சிந்திக்கிறார்கள். அப்படி சிந்திப்பதால் சான்றாண்மையில் நிலைத்திருக்கிறார்கள். சான்றோர்கள் பரிசுத்தமான காரியத்தில் நிலைத்திருப்பதற்கு காரணம் இவைகளையே அவர்கள் தியானம் செய்கிறார்கள்.

இயேசு கிறிஸ்துவில் இருந்த சிந்தை

பிலிப்பியர் 2:5 கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்!

கிறிஸ்துவில் இருந்த சிந்தை என்ன? அவருடைய சிந்தை முழுக்க முழுக்க ஆவிக்குரிய சிந்தையாக, இறைவார்த்தைகளுக்கு அடுத்த சிந்தையாக இருந்தது. தந்தையின் திருவுளத்தை எப்படி நிறைவேற்றுவது என்பது தான் அவருடைய சிந்தையாக இருந்தது. அதுதான் அவருடைய மனதில் இருந்தது. ஆகவே, ஆவிக்குரிய சிந்தையான கிறிஸ்துவின் சிந்தை நமக்கு இருக்க வேண்டுமென்றால் இதையே நாம் மனதில் தியானிக்க வேண்டும், இதையே நாம் சிந்திக்க வேண்டும். இதையே நாம் சிந்திக்கும் பொழுது இயேசுவின் சிந்தைக்கு ஒப்பாக நம்முடைய சிந்தையும் மாறிவிடும். இயேசு கிறிஸ்துவின் மனநிலைக்கு ஒப்பாக நம்முடைய மனம் மாறிவிடும். போற்றுதற்குரியவை எவையோ அவையே மனதில் இருத்துங்கள் என பவுல் எல்லாவற்றையும் சொல்லிவிட்டு கூறுகிறார்,

பிலிப்பியர் 4:9 நீங்கள் என்னிடம் கற்றுக்கொண்டவை, என் வழியாய்ப் பெற்றுக்கொண்டவை, என்னிடம் கேட்டறிந்தவை, என் வாழ்வில் நீங்கள் கண்டுணர்ந்தவை யாவற்றையும்

கடைப்பிடியுங்கள். அப்போது அமைதியை அருளும் கடவுள் உங்களோடிருப்பார்.

அப்போஸ்தலர்கள் அதைத்தான் செய்கிறார்கள், இயேசு கிறிஸ்துவிடம் கற்றுக் கொண்டது, அவர் வழியாக பெற்றுக் கொண்டது யாவற்றையும் கடைப்பிடித்தார்கள். இங்கு பவுலும் இதைத்தான் கூறுகிறார். என்னிடம் கற்றுக் கொண்டது, என் வழியாய் பெற்றுக்கொண்டது, என்னிடம் கேட்டு அறிந்தவை, என் வாழ்வில் நீங்கள் கண்டுணர்ந்தவை, இவை எல்லாவற்றையும் கடைப்பிடியுங்கள் எங்கிறார் பவுல். அப்பொழுது அமைதியை அருளும் கடவுள் நம்மோடு இருப்பார். இதைத்தான் புனிதர்களின் வாழ்க்கையிலும் நாம் பார்க்கிறோம்.

புனித பவுலின் வாழ்வில் நாம் கற்க வேண்டியவை

இங்கு நான்கு காரியங்களை பவுல் குறிப்பிடுகிறார், “என் வழியாய் கற்றுக் கொண்டது, என்னிடமிருந்து பெற்றுக் கொண்டது, என்னிடம் கேட்டு அறிந்தவை, என் வாழ்வில் நீங்கள் கண்டுணர்ந்தவை. இதையெல்லாம் கடைப்பிடியுங்கள்” என்கிறார் பவுல். அப்படியென்றால் அவர் எப்படி வாழ்ந்திருப்பார் என்று யோசித்துப் பார்ப்போம். இயேசுவிடம் கற்றுக் கொண்ட ஒவ்வொன்றையும் அவர் மனதில் இருத்துகிறார். மரியாள் கூட அதைத்தான் செய்கிறார். இயேசு கிறிஸ்துவின் வாழ்வில் நடந்தது, இயேசுவைக் குறித்து சொல்லப்பட்டது, வானத்தூதர்கள் கூறியது என இவற்றையெல்லாம் மனதில் வைத்து சிந்தித்துக் கொண்டிருக்கிறார். நாமும் அதைத்தான் செய்ய வேண்டும். இவையெல்லாவற்றையும் நம் மனதில் இருத்தி நாம் செய்கிறவர்களாக இருந்தால் தான் நாம் பரிசுத்தமான வாழ்க்கை வாழ முடியும். அந்த ஆவிக்குரிய சிந்தை, கிறிஸ்துவினுடைய சிந்தை நமக்கு உருவாக வேண்டுமானால் இதையே நாம் சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும். இதைத்தான் தாவீது இன்னொரு வார்த்தையில் குறிப்பிடுகிறார்.

தாவீதுக்கு இருந்த மனநிலை

திருப்பாடல் 1:2 நற்பேறு பெற்றவர் ஆண்டவரின் திருச்சட்டத்தில் மகிழ்ச்சியுறுபவர்; அவரது சட்டத்தைப்பற்றி இரவும் பகலும்

சிந்திப்பவர்;

திருப்பாடல் 119:7 ஆண்டவரே! நான் உமது திருச்சட்டத்தின்மீது எத்துணைப் பற்றுக் கொண்டுள்ளேன்! நாள் முழுவதும் அதைப்பற்றியே சிந்திக்கின்றேன்.

அந்த அளவுக்கு தாவீதுடைய சிந்தனைகள் எல்லாம் அதிலே இருந்ததினாலே அவருடைய வாழ்க்கை தேவனுக்கு உகந்த ஒரு வாழ்க்கையாக மாறியது. நம்முடைய சிந்தனைகள் எப்படி இருக்கிறதோ அப்படித்தான் செயல்களும் இருக்கும். சிந்தனைகளை எது ஆட்கொள்ளுகிறதோ அதுதான் செயல்களில் வரும். ஆகவே, சிந்திக்கிற காரியங்கள், யோசிக்கிற காரியங்கள், நினைக்கிற காரியங்கள் இவையெல்லாம் ஆவிக்குரியவையாக, தேவனுக்கு அடுத்தவையாக, பரலோகத்திற்கு அடுத்தவையாக, இறைவார்த்தைக்கு சம்பந்தமானவையாக நாம் வைத்திருக்க வேண்டும். அதுதான் பரிசுத்தம் அடைவதற்கு வழி. நிறைய பேர் சிந்தனைகளை எங்கெல்லாமோ விடுவார்கள், எங்கேயோ நினைத்துக் கொண்டு, சிந்தனைகளை எங்கயோ வைத்து கொண்டு, ஜெப நேரத்தில் மட்டும் “நான் ஜெபிக்கிறேன், ஆண்டவரை தேடுகிறேன்” என்றால் நம் சிந்தனை எப்படி பரிசுத்தமாக மாறும். இறைவார்த்தையை உள்ளே வைத்து, அதை யோசித்து கொண்டிருந்தால்தான் நாம் பரிசுத்தம் அடைவோம். ஒவ்வொரு இறைவார்த்தையும் யோசித்து, தியானித்து கொண்டிருந்தோமானால் நாம் எப்படியோ இருப்போம். நாம் ஒவ்வொரு நாளும் ஒரு அதிகாரத்தை யோசித்து தியானித்து படிக்க வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு அதிகாரத்தை நாம் தியானித்து படித்தால் கூட எவ்வளவோ மாற்றங்கள் நமக்குள் வந்துவிடும். விவிலியத்தில் பல காரியங்களை நாம் படிக்கலாம், ஆனாலும் ஒரு அதிகாரத்தையாவது தியானித்து படிக்க வேண்டும். வார்த்தைகளை சிந்தித்து படிக்க வேண்டும். அப்பொழுதுதான் அது நம் மனதில் நிற்கும், நம் மனதை தூய்மைப்படுத்தும், நம்முடைய மனதை சுத்திகரிக்கும், நம்மை பரிசுத்தமாக்கும்.

இறைவார்த்தையை குறித்து சிந்திக்க வேண்டும்

பரிசுத்தமான வாழ்க்கை வாழ வேண்டுமென்று விரும்புகிறவர்கள் கட்டாயம் இதை செய்ய வேண்டும், சாலைகளில் போகும் பொழுது,

வரும் பொழுது, வீட்டில் இருக்கும் பொழுது, படுத்திருக்கும் பொழுது இறைவார்த்தையை குறித்து சிந்திக்க வேண்டும். “இந்த வசனம் இப்படி இருக்கிறதே! இந்த வசனத்திற்காக நன்றி ஆண்டவரே!” என்று சொல்ல வேண்டும். அந்த வசனத்தை நம்முடைய இருதயத்தில் வைக்க வேண்டும். அப்படி செய்யும் பொழுது நாம் பேறுபெற்றவர்களாக மாறுவோம். அதனால்தான் சான்றோர் உயர்வானவற்றை சிந்தித்து சான்றாண்மையில், மேன்மையான வாழ்க்கையில் நிலைத்திருக்கிறார்கள். அவர்கள் நிலைத்திருக்கிறார்கள் விழுந்து போகவில்லை. ஏதோ ஒரு நாள் மட்டும் அப்படி நிலைத்திருப்பதில்லை, தியான நாளில் மட்டும், ஜெப நேரங்களில் மட்டும் அப்படி இல்லை. எப்பொழுதும் அதிலே நிலைத்திருக்கிறார்கள். காரணம் அவர்கள் எப்பொழுதும் அதையே சிந்தித்துக் கொண்டிக்கிறார்கள். ஆகவே நாம் இதில் நிலைத்திருக்க வேண்டுமானால் அதையே சிந்திக்க பழக வேண்டும். விவிலியத்தில் நாம் சிந்திப்பதற்கும், யோசிப்பதற்கும் எவ்வளவோ காரியங்கள் இருக்கிறது. ஆகவே, இதற்காக இன்றைக்கு ஒப்புக்கொடுப்போம். ஜெப நேரங்களில் நாம் ஜெபிக்கிறோம். எல்லா நேரங்களிலும் பெரும்பாலான நேரங்களிலும் இறைவார்த்தைகளை சிந்திக்க நாம் பழக வேண்டும். அப்பொழுதுதான் நாம் எப்பொழுதும் பரிசுத்தமாக இருக்க முடியும். நாம் அந்த சான்றாண்மையில் நிலைத்திருக்க வேண்டும். நாம் அந்த பரிசுத்தத்தில் நிலைத்திருக்க வேண்டுமென்று சொன்னால், நம்முடைய மனம் இயேசு கிறிஸ்துவினுடைய மனதை போல் மறுரூபப்பட வேண்டும், புதிதாக்கப்பட வேண்டும் என்று சொன்னால், இந்த இறைவார்த்தையை தியானித்துக் கொண்டே இருக்க வேண்டும். இன்றைக்கு அதற்காக நம்மை ஒப்புக்கொடுப்போம். ஆமென்!

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே மகிமை!

19/05/2020

தந்தையின் திருவுளமும், ஆன்ம மீட்பும்

1 பேதுரு 4:1 - எனவே, கிறிஸ்து தம் ஊனுடலில் துன்புற்றார். அப்பொழுது அவர் கொண்டிருந்த மனநிலையை நீங்களும் படைக்கலமாகப் பூண்டு கொள்ளுங்கள். ஊனுடலில் துன்புறுவோர் பாவத்தை விட்டு விடுகின்றனர்.

இயேசு சிலுவையிலே பாடுபடும் பொழுது அவர் கொண்டிருந்த உள்ளத்தின் கருத்தை நீங்களும் நினைத்து, படைக்கலமாக அணிந்து கொள்ளுங்கள். இயேசு சிலுவையில் அறையப்படும் பொழுது, அவருடைய மனநிலை என்ன என்பதை படைக்கலமாக அணிந்து கொள்ளுங்கள். அவர் சிலுவையில் பாடுபடுவதற்கு முன் கெத்சமனி தோட்டத்திற்கு போகும் பொழுதே திருவிவிலியத்தில் பார்க்கிறோம், அவரது உள்ளம் சாவுக்கேதுவான துயரம் கொண்டிருந்தது. அப்படி ஒரு துயரத்தில் இருக்கிறவர், அப்படி ஒரு வேதனையில் இருக்கிறவர், ஜெபிக்கிறார்; இறுதியாக தந்தையின் திருவுளத்திற்கு தன்னை முழுவதுமாக கையளிக்கிறார். **“என் விருப்பம் அல்ல தந்தையே! உம்முடைய விருப்பமே நிறைவேறட்டும்” என இயேசு ஒப்புக்கொடுக்கிறார்.** தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவதற்காக தான் அவர் சிலுவையை சுமக்கிறார். அதுதான் அவர் சிலுவையை சுமப்பதற்கு காரணம். “இது தந்தையின் திருவுளம், ஆகையினால் நான் சிலுவையை சுமக்கிறேன்” என்று தான் அந்த சிலுவையை அவர் சுமக்கிறார். இரண்டாவது காரணம், மனிதர்கள் மேல் அவர் வைத்திருந்த அன்பு. அந்த சிலுவையை சுமக்காவிட்டால், மனிதர்களுக்கு மீட்பு இல்லை, விடுதலை இல்லை. ஆகையால் இயேசு அந்த சிலுவையை சுமக்கிறார். அதனால் தான், சிலுவையைக் கொண்டு வந்து அவர் மேல் வைக்கும் போது கூட, அந்த சிலுவையை கட்டி பிடித்து, முத்தம் இட்டதாக பாரம்பரியங்கள் சொல்கிறது. அந்த சிலுவையை அவர் நேசித்ததன் நோக்கம். **ஒன்று தந்தையின் திருவுளம், இரண்டாவது மனிதர்களுடைய ஆன்ம மீட்பு, ஆன்ம விடுதலை, பாவ விடுதலை, அவருடைய சுகம்; இவை எல்லாவற்றிற்காகவும் சிலுவையை அவர் தாங்கிக் கொள்கிறார்.** உலகத்திலே நாமும் இயேசு கொண்டிருந்த அந்த இரண்டு கருத்தை கொண்டிருக்க வேண்டும், அதை படைக்கலமாக அணிந்திருக்க வேண்டும்.

தேவனுடைய விருப்பம், மனிதனுடைய விருப்பத்திற்கு எதிரானது

முதலாவது, தந்தையின் விருப்பத்தையும், அவருடைய திருவுளத்தையும் நாம் யோசிக்க வெண்டும். நிறைய பேர் தந்தையின் விருப்பம் என்னவென்றே தெரியாமல் இருக்கிறார்கள். “நான் செய்கிறது எல்லாம் தந்தையின் திருவுளம் தானா, நான் போகும் பாதை தந்தையின் திருவுளம் தானா” என்பதை யோசிப்பதில்லை. தந்தையின் திருவுளம் என்றால் அந்த திருவுளத்தை நிறைவேற்றுவதற்கு பாடுபட வேண்டியிருக்கும். ஏனென்றால், உலகம் முழுவதும் கடவுளின் திருவுளத்தை எதிர்த்து தான் நிற்கும். ஆகையினால் தான்,

எசாயா 55:8,9 - என் எண்ணங்கள் உங்கள் எண்ணங்கள் அல்ல, உங்கள் வழிமுறைகள் என் வழிமுறைகள் அல்ல, என்கிறார் ஆண்டவர். மண்ணுலகத்திலிருந்து விண்ணுலகம் மிக உயர்ந்து இருப்பதுபோல உங்கள் வழிமுறைகளைவிட என் வழிமுறைகளும், உங்கள் எண்ணங்களைவிட என் எண்ணங்களும் மிக உயர்ந்திருக்கின்றன.

அப்படியென்றால், மனிதர்களுடைய விருப்பங்கள் எல்லாமே தேவனுடைய விருப்பங்களுக்கு எதிராகவே இருக்கிறது. அதனால் தான் கடவுளுடைய விருப்பத்தை ஒருவன் செயல்படுத்த நினைக்கும் போது சில பிரச்சனைகளோ, சில சங்கடங்களோ, சில எதிர்ப்புக்களோ உண்டாகும். அதனால் சில பாடுகள் வர தான் செய்யும். ஆண்டவர் இயேசு, தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற வந்ததினால் அவருக்கு எதிர்ப்பு தான் வந்தது, அவர் பாடுகளை அனுபவித்தார். **அவர் பாடுகள் அனுபவிக்கும் பொழுது அவருக்கு என்ன கருத்து இருந்ததென்றால், “என்ன வேதனை வந்தாலும், என்ன கஷ்டங்கள் வந்தாலும் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றி ஆக வேண்டும்” என்ற கருத்தை தான் இயேசு கொண்டிருந்தார்.** அதற்கு மாறாக, “பெருமூச்சு கூட விடக் கூடாது, முறுமுறுக்கக் கூடாது; தந்தையின் திருவுளத்தை முழுவதுமாக நிறைவேற்ற வேண்டும்” என்ற ஒரே எண்ணம் அவருக்குள் இருந்தது. அந்த எண்ணத்தினாலே தான் அவருக்கு எவ்வளவு பாடுகள் இருந்தாலும் அவர் சகித்துக் கொண்டிருந்தார்.

சிலுவையில் இயேசுகிறிஸ்துவிற்கு இருந்த அதிகாரம்

இயேசு விரும்பினால் தன் உயிரைக் கொடுக்கவும், எடுக்கவும் அவருக்கு உரிமை இருந்தது. சாட்டையால் அடிக்கும் பொழுதே, அந்த வலி தாங்க முடியவில்லை என்று தன்னுடைய உயிரைக் கொடுத்திருக்கலாம். ஆனால், இயேசு அதை செய்யவில்லை; தாங்கிக் கொள்கிறார். முள்முடியை வைத்து அழுத்தும் பொழுதே, இவ்வளவு வேதனையை தாங்க வேண்டுமா என்று அப்பொழுது கூட தன் உயிரை கொடுத்திருக்கலாம்; ஆனால், இயேசு அதை செய்யவில்லை. ஏனென்றால், தன் உயிரைக் கொடுக்கவும், எடுக்கவும் அவருக்கு அதிகாரம் இருந்தது. சிலுவையை சுமந்து கொண்டு போகும் போது, அவர் மரித்து விடக் கூடாது என பயந்து தான் சிமியோனை துணைக்கு கூப்பிடுகிறார்கள். இயேசு, சிலுவையை தூக்கிக் கொண்டு போகும் பொழுது, அவ்வளவு பெலவீனமாக இருந்தார். பலமுறை கீழே விழுந்தார், அப்படி விழுந்தபோது கூட தன் உயிரைக் கொடுத்திருக்கலாம். ஆனால், இரண்டு காரியங்கள் அவருக்கு முன்பாக இருந்தது. முதலாவது, தந்தையின் திருவுளம், அவர் சிலுவையில் தான் மரிக்க வேண்டும், இறைவாக்குகள் எல்லாவற்றையும் அவர் நிறைவேற்ற வேண்டும். அவரை பற்றி சொல்லபட்டிருக்கின்ற இறைவாக்குகள் எல்லாவற்றையும் அவர் நிறைவேற்ற வேண்டும். அதுதான் தந்தையின் திருவுளம். இரண்டாவது, மனிதர்களின் மேல் அவர் வைத்திருந்த அன்பு. அங்கேயே மரித்துவிட்டால், மனிதர்களுக்கு மீட்பு கிடைக்காமல் போய்விடும். இந்த இரண்டும், அந்த பாடுகளை சகிக்க, அந்த சிலுவையை சுமந்து கொண்டு, கடைசி வரைக்கும் பாடுகளை தாங்கி கொள்ள அவருக்கு பெலன் கொடுத்தது.

எல்லா இறைவாக்குகளையும் நிறைவேற்றினார்! பலியானார்!

சிலுவையிலே இயேசு அறையப்பட்டு, தொங்கும் பொழுது கூட, அவர் நினைத்திருந்தால், ஐந்து அல்லது பத்து நிமிடம் கழித்து தன் உயிரை விட்டிருக்கலாம். ஆனால், இயேசு அதை செய்யவில்லை. ஒவ்வொரு இறைவார்த்தையும் நிறைவேற வேண்டும்; அப்பொழுது தான் மனிதர்கள் மீட்படைய முடியும்; மனிதர்களுடைய எல்லாப் பாவங்களுக்கும் பரிகாரம் செய்ய வேண்டும்; அவர்களுடைய எல்லா வியாதிகளையும் தன் மேல் சுமந்தாக வேண்டும்; மனிதர்களை விடுவிக்க கூடிய எல்லா நிவாரண பலிகளையும்,

அவருடைய ரத்தத்தை சிந்தி அவர் செலுத்தியாக வேண்டும்; ஆகையால் தான், மூன்று மணி நேரம் அந்த சிலுவையினுடைய வேதனையை இயேசு தாங்கிக் கொண்டார். அவர் நினைத்திருந்தால், சிலுவையிலிருந்து இறங்கி வந்திருக்கலாம் அல்லது சீக்கிரமாகவே தன்னுடைய உயிரைக் கொடுத்திருக்கலாம். ஆனால், இயேசு அப்படி செய்யவில்லை. **எவ்வளவு நேரம் அந்த வேதனையை தாங்கிக் கொண்டு அவர் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தார்! என யோசித்து பார்ப்போம்.** ஒவ்வொரு நிமிடமும் அவர் உள்ளத்திலே அதுதான் இருந்தது. ஒவ்வொரு இறைவார்த்தையையும் நிறைவேற்றியாக வேண்டும் என எவ்வளவு வேதனை இருந்தாலும் அதை நிறைவேற்றுகிற வரைக்கும் அவர் பொறுமையோடு கூட இருந்தார்.

கடைசியில் பார்த்தோமென்றால், இயேசு உயிர் விடுவதற்கு முன்பாக அவர் சொன்ன வார்த்தை அதுதான், எல்லாம் நிறைவேறிற்று என்பதை அறிந்த இயேசு "தந்தையே உம்முடைய கையில் என் ஆவியை ஒப்படைக்கின்றேன்" என்று சொன்னார். எல்லாம் நிறைவேறிவிட்டது, இறைவாக்குகளில் அவரைக் குறித்து சொன்ன எல்லாம் நிறைவேறிவிட்டது. தந்தையின் திருவுளம் முழுவதும் நிறைவேறிவிட்டது. மனிதர்கள் மீட்பு பெறுவதற்கு தேவையான அனைத்தும் நிறைவேறிவிட்டது என்பதை அறிந்த இயேசு, அதன் பிறகு தான் தந்தையை நோக்கி, “என் ஆவியை உம்முடைய கையில் ஒப்படைகின்றேன்” என்று சொன்னார். இல்லையென்றால், அதற்கு முன்பாகவே அவர் மரித்திருக்க முடியும், அவர் அதை செய்யவில்லை. இயேசு முன்பாகவே தன் ஆவியை தந்தையிடம் ஒப்படைத்திருக்க முடியும். ஆனால், தந்தையின் திருவுளத்தை செய்து முடிப்பதில் இயேசுவிற்கு எவ்வளவு பொறுமையும், மனஉறுதியும் தேவை என்பதை நினைத்து பாருங்கள்.

நமக்காக துன்பங்களை பொறுமையோடு சகித்தார்

தந்தையின் திருவுளத்தை செய்வதற்காக தாங்க முடியாத ஒரு வேதனையை இயேசு அனுபவித்தார். எந்த மனிதனும் அதில் தொங்கிக் கொண்டிக்க முடியாமல் இறங்கி விட தான் செய்வார்கள். அப்படி ஒரு வேதனை, வழி இருந்தால் எப்படியாவது தப்பி விட தான் நினைப்பார்கள். அதனால் தான் கெட்ட கள்வன் சொல்கிறான்,

"நீ மெசியாவாக இருந்தால் உன்னையும், காப்பாற்றிக் கொள், எங்களையும் காப்பாற்று". யாரும் ஒரு நிமிடம் கூட அதை தாங்கிக் கொள்ள முடியாது. ஆனால், இயேசுவால் விடுதலை பெற முடிந்தும் கூட, பயங்கர வேதனையின் மத்தியிலும் கூட நம்மை நினைத்து பார்த்து, **"நான் இறங்கிவிட்டால் அல்லது உடனே என் உயிரை கொடுத்துவிட்டால், என் பிள்ளைகளுக்கு இந்த ஆசீர்வாதம் வராமல் போய்விடுமே, விடுதலை பெற முடியாமல் போய்விடுமே, தந்தையின் திருவுளம் முழுவதும் நிறைவேற வேண்டுமே, அதன் மூலம் தானே எல்லா மனிதரும் பாவத்திலிருந்து விடுதலை பெற முடியும், மக்கள் செய்கிற பாவங்களுக்கு இந்த பாடு போதாதே இன்னும் கொஞ்சம் வேதனையை நான் அனுபவிக்க வேண்டுமே"** என்று, வேதனைகளை ஒவ்வொரு நிமிடமும் தாங்கிக் கொண்டார். கடைசியாக செலுத்த வேண்டிய பலி, "மனிதனின் எல்லா பாவங்களுக்காகவும் நான் செலுத்தவேண்டிய பலி எல்லாம் நிறைவேறிவிட்டது" என அறிந்தவராக தான், **"தந்தையே உம்முடைய கையில் என் ஆவியை ஒப்படைக்கின்றேன்"** என சொன்னவுடனே தலை சாய்ந்து உயிரை விடுகிறார். இன்று நம்முடைய வாழ்க்கையை யோசித்துப் பார்ப்போம், நாமும் பல பாடுகளுக்கு உள்ளாக நேரிடுகிறது.

தந்தையின் திருவுளத்தை செய்கிறதினாலே சில பாடுகள் நமக்கு வருகிறது, ஆனால் எத்தனை முறை அதை மனஉறுதியோடு தாங்கிக் கொள்கிறோம்? அல்லது அதிலிருந்து தப்பித்து கொள்வதற்கு முயற்சி செய்கிறோமா என்பதை யோசித்து பார்ப்போம். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, நமக்காக எத்தனை துன்பங்களை பொறுமையோடு சகித்தார்; அவர் அதிலிருந்து வெளியே வர விரும்பாமல், அதை முழுமையாக சகித்து தந்தையினுடைய திருவுளம் நிறைவேறுவதற்காக தன்னை ஒப்புக்கொடுக்கிறார்.

திருத்தூதர் பவுல் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுகிறார்

திருத்தூதர் பவுலுடைய வாழ்விலும் இதைப் பார்க்கிறோம். அக்கிரிப்பா, பெலிஸ் போன்ற அரசர்கள் எல்லாம் அவரை விசாரிக்கிற பொழுது, பவுல் விடுதலை பெற விரும்பவில்லை. மாறாக, தந்தையின் திருவுளம் என்னவென்று அறிந்து, சீசர் என்று சொல்லக்கூடிய ரோமப் பேரரசனுக்கு முன்பாக அவர் சான்று பகர

வேண்டும் என்பதை அறிந்தவராய், சீசரிடத்தில் தன் வழக்கை கொண்டு போகிறார். கடவுளுடைய திருவுளம் எதுவோ அதிலிருந்து பின்வாங்க விரும்பவில்லை. அதனால் பல வேதனைகள் வருமென்று அவருக்கு தெரிந்தும் கூட அவர் பின்வாங்க விரும்பவில்லை. இன்றைக்கு நமது வாழ்விலும் தேவனுடைய திட்டத்தை நிறைவேற்ற நாம் துணிந்து போகும் பொழுது, பல வேதனைகள், சங்கடங்கள், சில நேரங்களில் அவமானங்கள், நம்முடைய பெயரை கெடுக்கக் கூடிய பல காரியங்கள், இல்லாததும் பொல்லாததும் நம்மைப் பற்றி விளம்பரப்படுத்தக் கூடிய காரியங்கள். இவைகள் எல்லாம் ஒரு பக்கம் நடக்க தான் செய்கிறது. ஆனாலும், இவைகளுக்கு மத்தியிலே தந்தையின் திருவுளத்தின்படி நாம் போக வேண்டும், அவருடைய திருவுளத்தை நிறைவேற்ற வேண்டும். அதனால், “என்ன துன்பம் வந்தாலும் நான் தளர்ந்து போகமாட்டேன்; பின் வாங்கமாட்டேன்” என்ற துணிச்சல், தைரியம் இறுதி வரைக்கும் நிலைத்து இருக்கக் கூடிய பண்புகள் நமக்கு வேண்டும். **ஆண்டவரும் அதைதான் சொல்கிறார், "என் பெயரை குறித்து எல்லாரும் உங்களை வெறுப்பார்கள், இறுதிவரை நிலைத்திருப்போர் மீட்பு பெறுவர்".** அந்த இறுதி வரைக்கும், தந்தையின் திருவுளத்தை செய்தாக வேண்டும் என அதில் நிலைத்து நிற்க வேண்டும். இதைதான், புனிதர்கள், இறைவாக்கினர்களின் வாழ்க்கையில் நாம் வாசிக்கிறோம். இறுதி வரைக்கும் அதில் நாம் நிலைத்து நிற்க வேண்டும்.

நம்முடைய நிலை என்ன?

இன்றைக்கு யோசித்துப் பாருங்கள், பாடுகள் வரும் பொழுது அதிலிருந்து தப்பிக்க வழி தேடுகிறோமா, அல்லது பாடுகளை தாங்கி கொண்டு தந்தையின் திருவுளம் நிறைவேறுவதற்காக ஓடிக் கொண்டிருக்கிறோமா? வேதனைகளோ கஷ்டங்களோ வரும் நேரத்தில் கூட தந்தையின் திருவுளத்தை தான் செய்ய வேண்டும் என்று பார்க்கிறோமா அல்லது எப்படியாவது தப்பித்து விட வேண்டும் என நினைக்கிறோமா? ஒருவேளை அப்படி யோசித்திருந்தால் இன்று ஒப்புக்கொடுப்போம். இறுதி வரைக்கும் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்ற வேண்டும், இரண்டாவது ஆன்ம மீட்புக்காக சில பாடுகளை, கஷ்டங்களை நாம் சகித்து

கொள்ள வேண்டும். இந்த இரண்டு காரியங்களை இயேசு, தமக்கு முன்பாக வைக்கிறார், இதுதான் அவருடைய கருத்து. **ஒன்று தந்தையின் திருவுளம், இரண்டாவது மனிதருடைய மீட்பு. இதையே தான் நாமும் முன்பாக வைத்து ஓட வேண்டும், இதையே நாம் படைக்கலமாக அணிந்து கொள்ள வேண்டும்.**

படைக்கலம் என்றால் என்ன? ஒரு யுத்தத்தில் நிற்கிறவர்கள் அணிந்து கொள்ளக் கூடிய ஒன்று. எதற்காக என்றால், எதிரிகளை மேற்கொள்வதற்காக அணிந்து கொள்கிறார்கள். அப்படியென்றால் போராட்டங்கள், நெருக்கடிகள், ஏளனங்கள், அவமானங்கள், நம்முடைய பெயரை கெடுக்கக்கூடிய காரியங்கள், இல்லாததும் பொல்லாததும் சொல்லக்கூடிய காரியங்கள் இவைகள் எல்லாம் ஒரு யுத்தம் போல நமக்கு எதிராக நிற்கிறது. அந்த நேரங்களில் எல்லாம், தந்தையின் திருவுளம், மனிதர்களின் மீட்பு இதேயே தான் நாம் படைக்கலமாக அணிந்து கொள்ள வேண்டும்.

ஒப்புக்கொடுப்போம்! படைக்கலமாக அணிந்து கொள்ளுவோம்

இதை உறுதியாக நாம் பிடித்துக் கொள்வோமென்றால், அந்த யுத்தத்தில் நாம் வெற்றி பெறுவோம். நிறைய பேர் இந்த குறிக்கோள் இல்லாமல் போகிறதினாலே அந்த யுத்தத்தில் இறுதி வரைக்கும் வெற்றி பெற போராடாமல், இடையிலேயே தடுமாறி போய்விடுகிறார்கள். அதில் இறுதி வரைக்கும் நிற்க வேண்டுமென்றால், இந்த இரண்டையும் ஒரு படைக்கலமாக, பாதுகாப்பாக, எதிர்ப்புகளை ஜெயிப்பதற்காக ஆயுதமாக அணிந்து கொள்ள வேண்டும். ஆகவே, ஆண்டவர் இயேசு மனதில் வைத்திருந்த இந்த இரண்டு கருத்தை நம்முடைய மனதில் நிறுத்த வேண்டும். முதலாவது தந்தையின் திருவுளம், இரண்டாவது மனிதர்களுடைய மீட்பு. முதலில் தந்தையின் திருவுளம் தான், அதன் வழியாக ஆன்ம மீட்பு நிறைவடைகிறது. தந்தையின் திருவுளத்தை செய்ய செய்ய ஆன்மாக்கள் மீட்கப்படும். இதை நாம் படைக்கலமாக பூண்டு கொள்ளும் படி இந்த நாளிலே ஒப்புக்கொடுப்போம், இறுதி வரைக்கும் இந்த படைக்கலமாக அணிந்து கொள்ள ஒப்புக்கொடுப்போம். அப்பொழுது தான் கடைசி வரைக்கும் ஜெயம் பெற முடியும். ஆண்டவர் ஜெயம் பெறுகிறவருக்கு தான் ஜீவ கிரீடத்தை வாக்கு பண்ணியிருக்கிறார். அவருடைய

வாக்குறுதியானது, “ஒரு வெற்றி வாகையை தருவேன்” என்று சொல்லியிருக்கிறார்; “உயிருள்ள, வாடாத ஒரு கிரீடத்தை கொடுப்பேன்” என்கிறார் யாருக்கு என்றால், வெற்றி பெறுகிறவர்களுக்கே. அந்த வெற்றி பெறுவதற்கு இது தான் படைக்கலம். அந்த படைக்கலத்தை நாம் வைத்திருப்போமானால் நாம் வெற்றி பெறுவோம். ஆகையால் இந்த நாளிலே நாம் இதை படைக்கலமாக வைத்திருக்க வேண்டுமென்று ஒப்புக்கொடுப்போம், ஜெபிப்போம்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி

04/05/2020

தாழ்த்துகிறவர் எவரும் உயர்த்தப்பெறுவர்

மத்தேயு 23: 12 - தம்மைத்தாமே உயர்த்துகிறவர் எவரும் தாழ்த்தப்பெறுவர். தம்மைத்தாமே தாழ்த்துகிறவர் எவரும் உயர்த்தப்பெறுவர்.

இயேசு கூறுகின்றார், “தாமாகவே தங்களை உயர்த்துகிறவர்களுக்கு தாழ்வு உண்டாகும், தாமாகவே தங்களை தாழ்த்துகின்றவர்களை ஆண்டவர் உயர்த்துகின்றார் "

ஆணவத்தினால் ஆசிரை இழந்த உசியா!

இரண்டு குறிப்பேடு இருபத்தி ஆறாம் அதிகாரம் முழுவதும், உசியா என்னும் அரசனை குறித்து வாசிக்கின்றோம், உசியா என்பவன் நல்லவனாக, கடவுளின் கட்டளைகளை கடைப்பிடிக்கின்றவனாக, கடவுளுக்கு அஞ்சி நடப்பவனாக வாழ்கின்றான். ஆகவே, கடவுள் உசியா போகும் இடமெல்லாம் வெற்றியும், புகழும் அடைய ஆசீர்வதித்தார். மலைப் பகுதிகளிலும் வயல்வெளிகளிலும் அவனுக்கு வேளாண்மை செய்வோரும், திராட்சை பயிரிடுவோரும்

இருந்தனர். ஏனெனில் அவன் பயிரிடுவதில் ஆர்வம் கொண்டிருந்தான். அவனது இராணுவத்தில் மூன்று இலட்சத்து ஏழாயிரத்து ஐந்நூறு வீரர் கொண்ட ஆற்றல்மிகு படை இருந்தது, இராணுவத்தில் பல யுக்திகளை கையாண்டான். பெரிய கற்களை வீசுவதற்கும் திறமை வாய்ந்தவரால் கண்டுபிடிக்கப்பட்ட ஏவுகணைகளை எருசலேமில் செய்து கொத்தளங்கள் மேலும், கோட்டைகளின் மூலைகள் மேலும் அவற்றை நிறுவினான். இப்படி கடவுள் அவரை நிறைவாய் ஆசீர்வதித்ததால், அவனுக்குள் ஒரு ஆணவம் வந்தது.

2 குறிப்பேடு 26: 16 -18: உசியா வலிமைமிக்கவன் ஆனபோது, தான் அழிவுறும் அளவுக்கு ஆணவம் கொண்டான். தன் கடவுளாம் ஆண்டவருக்குக் கீழ்ப்படியாமல், தூபபீடத்தின்மேல் தானே தூபம் காட்ட ஆண்டவரின் இல்லத்தில் நுழைந்தான். ஆனால் குரு அசரியாவும் அவருடன் ஆண்டவரின் எண்பது வலிமைமிகு குருக்களும் தொடர்ந்து சென்றனர். அவர்கள் அரசன் உசியாவைத் தடுத்து நிறுத்தி, அவனிடம், "ஓ உசியா! ஆண்டவருக்குத் தூபம் காட்டுவது உமது வேலையன்று; தூபம் காட்டுவதற்கெனத் திருநிலைப்படுத்தப்பட்டவரும், ஆரோனின் புதல்வருமான குருக்களுக்கே உரிய பணி அது! ஆதலால், திருத்தலத்தைவிட்டு வெளியே செல்லும்! நீர் செய்வது தவறு! நீர் கடவுளாகிய ஆண்டவரால் மேன்மை பெறமாட்டீர்" என்றனர்.

உசியா நல்லவன் தான், கடவுளும் அவனை நிறைவாய் ஆசீர்வதித்தார். ஆனால் அவன் அழிவுறும் அளவுக்கு ஆணவம் கொண்டான். கடவுள் உசியாவை போல அவருக்கு கீழ்ப்படிகின்ற அனைவரையும் ஆசீர்வதிக்கின்றார், உயர்த்துகின்றார். இப்படி உயர்வு வரும்போது பலர் ஆணவம் அடைகின்றனர். உசியாவும், தான் வலிமைமிக்கவன் ஆனபோது, தான் அழிவுறும் அளவுக்கு ஆணவம் கொண்டான். அந்த ஆணவத்தினால் குருக்கள் மட்டும் செய்ய வேண்டிய வேலையை தன் கையில் எடுத்து கடவுளாம் ஆண்டவருக்குக் கீழ்ப்படியாமல், தூபபீடத்தின்மேல் தானே தூபம் காட்ட ஆண்டவரின் இல்லத்தில் நுழைந்தான். அப்போது குருக்கள், "நீர் செய்வது தவறு! நீர் கடவுளாகிய ஆண்டவரால் மேன்மை பெறமாட்டீர்" என்று தடுத்த போது, குருக்கள் மேல் கோபமுற்றான், இவ்வாறு அவன் தூப கலசத்தைக் கையில் பிடித்துக் கொண்டே,

ஆண்டவரின் இல்லத்தில் தூபபீடத்திற்கு அருகில் நெருங்க, அவன் நெற்றியில் தொழுநோய் கண்டது. உடனே குருக்கள் உசியாவை அங்கிருந்து வெளியேற்ற முனைந்தனர். உசியாவும், ஆண்டவர் தன்னைத் தண்டித்ததால், உடனே வெளியேறினான். அரசன் உசியா இறக்கும்வரை ஒரு தொழுநோயாளியாகவே இருந்தான். ஆண்டவரின் இல்லத்திலிருந்து அவன் விலக்கி வைக்கப்பட்டிருந்ததால், ஒரு தொழுநோயாளியாகத் தனி வீட்டில் வாழ்ந்து மடிந்தான்.

ஆகவே தான், இயேசு கூறுகின்றார், “தாமாகவே தங்களை உயர்த்துகிறவர்களுக்கு தாழ்வு உண்டாகும், தாமாகவே தங்களை தாழ்த்துகின்றவர்களை ஆண்டவர் உயர்த்துகின்றார் ".

கடவுளால் நமக்கு கொடுக்கப்பட்டுள்ள அழைப்பிலே நாம் நிலைத்து நிற்க வேண்டும். அதை மீறி நம்மை நாமே உயர்த்த நினைக்கும் போது, நமது வாழ்க்கையிலே தவறுகள் உண்டாகி சறுக்கி விழுகின்றோம்.

<u>தாழ்த்தாமல் புழுத்து இறந்த ஏரோது!</u>

திருத்தூதர் பணிகள் 12:21-23: குறித்த நாளில் ஏரோது அரச ஆடை அணிந்து மேடையில் அமர்ந்து அவர்களுக்கு உரையாற்றினான். அப்போது மக்கள், "இது மனிதக் குரல் அல்ல; கடவுளின் குரல்" என்று ஆர்ப்பரித்தனர். உடனே ஆண்டவரின் தூதர் அவனை அடித்தார். ஏனெனில் அவன் கடவுளைப் பெருமைப்படுத்தவில்லை; அவன் புழுத்துச் செத்தான்.

ஏரோது அரசன், திருத்தூதர் யாக்கோபை வாளால் கொன்றான். அது யூதருக்கு மகிழ்ச்சி அளித்ததைக் கண்டு அவன் தொடர்ந்து பேதுருவையும் கைது செய்தான். பேதுரு இவ்வாறு சிறையில் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது, ஆண்டவரின் தூதர் பேதுருவை சிறையிலிருந்து காப்பாற்றினார். ஏரோது, மக்கள் மீது கடுஞ்சினம் கொண்டிருந்தான்.

மக்கள் ஏரோதை மகிழ்ச்சிப்படுத்த அவனது குரலை ‘கடவுளின் குரல்’ என்று புகழ்ந்த போது, ஏரோது இந்த மகிமை எல்லாம் கடவுளையே

அடைய வேண்டும் என்று தன்னை தாழ்த்தாதினால், அந்த நிமிடமே ஆண்டவரின் தூதர் அவனை அடித்தார், அவன் புழுத்துச் செத்தான்.

இயேசு கிறிஸ்து கழுதையின் மீது ஏறி சென்ற போது மக்கள் எல்லோரும் இலை, தழை, போர்வைகளை விரித்தார்கள். அவை அனைத்தின் மீதும் நடந்து சென்றது கழுதை தான், இயேசு கிறிஸ்து அல்ல. கழுத்தையும் அதை தனக்கென்று நினைத்தால் ஆபத்து தான். இந்த உலகத்திலும் கூட மனிதர்கள் நம்மை பாராட்டலாம், உயர்த்தலாம், 'மனிதனுடைய குரல் அல்ல கடவுளுடைய குரல்' என்று புகழலாம். அப்பொழுது நாமும் ஆண்டவரே நான் கழுதை தான், இந்த பாராட்டும் புகழும் உமக்குத் தான் சொந்தம் என்று கடவுளுக்கு மகிமையை செலுத்த வேண்டும்.

ஏரோது இப்படி கடவுளுக்கு மகிமையை செலுத்தாததினாலே ஆண்டவரின் தூதர் அவனை அடித்தார். பொதுவாக ஒரு மனிதன் இறந்த பிறகு தான், உடலை புழுக்கள் அழிக்கும். ஆனால் ஏரோது உயிரோடு இருக்கும் போதே புழுக்கள் அரித்தன. அவன் புழுத்து செத்தான். அதேப் போன்று மனிதர்கள் கடவுளை உயர்த்தாமல் தங்களை உயர்த்தும் போது வானதூதர் நம்மை பார்த்து கொண்டிருக்கின்றனர். கடவுள் நமக்கு நல்ல மனதை கொடுத்திருப்பது நம்மை தாழ்த்தி கடவுளை உயர்த்துவதற்காகத் தான்.

தலைமுறை முழுவதும் அசீர்பெற்ற ஆடு மேய்க்கும் சிறுவன்!

ஆடு மேய்க்கின்ற சிறுவனாகிய தாவீதை கடவுள் அரசனாக உயர்த்தினார். தாவீது இதை மறவாமல் இறுதி வரை தாழ்ச்சியோடு இருந்தார். ஆகவே தான், உடன்படிக்கை பேழைக்கு முன்பாக, எல்லா மக்களுக்கும் முன்பாக சணலாலான ஆடையை அணிந்து கொண்டு முழு பலத்துடன் கூத்தாடினார். தாவீதோ! ஆடு மேய்கிறவர் அவருக்கு எப்படி நளினமாக ஆட வேண்டுமென்று தெரியாது, அந்த ஆட்டம் அருவருப்பாக, சகிக்க முடியாத ஒன்றாக தான் இருந்திருக்கும். தாவீதின் கூத்தாட்டத்தை அவனது மனைவி மீக்கால், ஜன்னல் வழியாக பார்த்த போது, "தாவீது அரசனாக இருந்த போதும் தனது ஆடு மேய்க்கும் புத்தியை காட்டி விட்டானே" என்று மனதிற்குள் பழிக்கின்றாள். தாவீது எல்லோரையும் ஆசீர்வதித்து விட்டு மனைவியை ஆசீர்வதிக்க வந்த போது அவள்

பெருமையினாலே ஆசீர்வாதத்தை பெற்று கொள்ளாமல் கோபத்தோடு சென்று விடுகிறாள். தாவீது மீக்காலை ஆசிர்வதிக்க மீண்டும் அழைத்த பொழுது, "அரசனாக இருந்து கொண்டு இப்படி நடனம் ஆடுகின்றாயே, மக்கள் உன்னை எப்படி மதிப்பார்கள்" என்று சினம் கொண்டாள், அப்போது தாவீது, " ஆடு மேய்கின்ற என்னை ஆண்டவர் அரசனாக உயிர்த்தியுள்ளார், ஆண்டவருக்கு முன்பாக நடனமாடியது சரியே, ஆண்டவர் இதைவிட கீழானதை சொன்னாலும் நான் செய்வேன்" என்றார். இதுதான் தாவீதின் தாழ்ச்சி, அரசனாக இருந்தாலும் தன்னை ஒரு ஆடு மேய்க்கின்றவனாக கருதுகின்றார். எனவே தான் திருப்பாடல்களில் இப்படி எழுதுகின்றார்

திருப்பாடல் 84: 10 - வேற்றிடங்களில் வாழும் ஆயிரம் நாள்களினும் உம் கோவில் முற்றங்களில் தங்கும் ஒருநாளே மேலானது; பொல்லாரின் கூடாரங்களில் குடியிருப்பதினும், என் கடவுளது இல்லத்தின் வாயிற்காவலனாய் இருப்பதே இனிமையானது.

தாவீது அரண்மனையை விரும்பாமல், கடவுளது இல்லத்தின் முற்றங்களை விரும்புகின்றார், இப்படி அவர் தன்னை தாழ்த்தியதால், கடவுள் அவரை உயர்த்தி, “யூத அரசர்கள் அனைவரிலும் சிறந்தவனாக, தன் இதயத்திற்கு உகந்தவனாக தாவீதைக் கண்டேன்” என்று ஆண்டவர் அவரை மேலாக உயர்த்துகின்றார். தாவீதை முன்னிட்டு அவரது தலைமுறையில் பலரை ஆசீர்வதிக்கின்றார், மெசியாவாகிய இயேசு கிறிஸ்துவும் கூட தாவீதின் தலைமுறையில் தோன்ற செய்தார். இப்படி எல்லா நிலைகளிலும் தாவீது இறந்த பிறகும், ஆண்டவர் அவரை மேலாக உயர்த்தினார்.

இன்றைக்கு நம்மையே நாம் கேட்போம், நமது குடும்பகளில் உங்களை தாழ்த்தாமல், பெருமையை, கௌரவத்தை பேசிக்கொண்டு இருக்கின்றோமா அல்லது கடவுள் நம்மை உயர்த்தும் அளவுக்கு நம்மை தாழ்த்துகின்றோமா?

கடவுள் உயர்த்தினாலும் தாழ்த்திய யோவான்!

ஆண்டவர் இயேசு, திருமுழுக்கு யோவானை குறித்து சான்று கூறுகின்றார், "பெண்களில் பிறந்தவருள் திருமுழுக்கு யோவானை விட பெரியவர் யாருமேயில்லை" என்றார். திருமுழுக்கு யோவான் தாயின் கருவிலேயே தூய ஆவியால் நிரப்பப்பட்டவர், சிறுவயது முதல் இறைப்பணிக்கென அர்ப்பணிக்கப்பட்டவர், இயேசுவின் முன்னோடியாக எலியாவின் ஆவியை கொண்டிருந்தவர். ஆனால், இந்த யோவான், “இயேசுவின் மிதியடி வாரை அவிழ்க்கக்கூட எனக்கு தகுதியில்லை" என்று வெளிப்படையாக ஒப்புக்கொண்டு தன்னை முற்றும் தாழ்த்துகின்றார். மக்கள் எல்லோரும் இயேசுவிடம் திருமுழுக்கு பெறுகின்றனர் என்று தன் சீடர்கள் கேட்டபொழுது, "அவர் பெறுக வேண்டும், நான் சிறுக வேண்டும்" என்று தன்னை தாழ்த்தினார்.

ஆனால், நமக்குள் எத்தனை குறைகள் இருப்பினும், எத்துணை பெருமை இருக்கின்றது. நாம் செய்யும் ஜெபம், நற்காரியங்கள், ஊழியங்கள் இவையெல்லாம் கடவுளுடைய கொடை, இதில் பெருமை பாராட்டுவதற்கு ஒன்றும் இல்லை, அதற்கு பதிலாக, கடவுள் நம்மை உயர்த்துகின்ற அளவுக்கு நம்மையே நாம் தாழ்த்தி ஒப்புக்கொடுப்போம், ஆமென்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!

22/05/2020

தீமை செய்கிறவரிடமும் அன்பு கூறுங்கள்

மத்தேயு 5:43-48 உனக்கு அடுத்திருப்பவரிடம் அன்பு கூர்வாயாக, பகைவரிடம் வெறுப்புக் கொள்வாயாக எனக் கூறியிருப்பதைக் கேட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன்; உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். “இப்படிச் செய்வதால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள்

ஆவீர்கள். ஏனெனில் அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரவனை உதித்தெழச் செய்கிறார். நேர்மையுள்ளோர் மேலும் நேர்மையற்றோர் மேலும் மழை பெய்யச் செய்கிறார். உங்களிடத்தில் அன்பு செலுத்துவோரிடமே நீங்கள் அன்பு செலுத்துவீர்களானால் உங்களுக்கு என்ன கைம்மாறு கிடைக்கும்? வரி தண்டுவோரும் இவ்வாறு செய்வதில்லையா? நீங்கள் உங்கள் சகோதரர் சகோதரிகளுக்கு மட்டும் வாழ்த்துக் கூறுவீர்களானால் நீங்கள் மற்றவருக்கும் மேலாகச் செய்துவிடுவதென்ன? பிற இனத்தவரும் இவ்வாறு செய்வதில்லையா? ஆதலால், உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்.

கடவுளுடைய மக்கள் யார்?

விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள். அப்படி செய்வதால் நீங்கள் கடவுளுடைய மக்கள் எனப்படுவீர்கள். என்ன செய்தால் கடவுளுடைய மக்கள் எனப்படுவோம்? தெளிவாக சொல்கிறார் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து; உங்களை நேசிக்கிறவர்களையே நீங்கள் நேசித்தால் நீங்கள் கடவுளுடைய மக்கள் இல்லை; உங்கள் பகைவர்களை அன்பு செய்யுங்கள்; துன்புறுத்துவோருக்காக ஜெபியுங்கள்; அப்படி செய்தால் நீங்கள் கடவுளுடைய மக்கள்; உங்களை நேசிக்கிறவர்களையே நீங்கள் நேசித்தால் உங்களுக்கு என்ன கிடைக்கும். கைம்மாறு கிடைக்குமா?

யோசித்துப் பாருங்கள், நீங்கள் யாரை நேசிக்க முடியவில்லையோ அவர்கள் 50 லட்சமோ 5 கோடியோ உங்களுக்கு இலவசமாக, உதவியாக கொடுக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அவர்களை என்ன செய்வீர்கள்? நேசிக்க முடியாத அந்த நபர் உங்களுக்காக 5 கோடி உதவி செய்கிறார்கள் என்றால் என்ன செய்வோம்? ஏதோ ஒரு காரியத்தில் உங்களுக்கு அவர்களிடத்தில் பேச முடியவில்லை; நேசிக்க முடியவில்லை; ஆனால், அவர்கள் உங்களுக்கு 5 கோடி உதவி செய்கிறார்கள், எத்தனை பேர் நேசிக்க மாட்டேன் என்று சொல்லுவோம்; அவர்களிடம் எவ்வளவு நல்லபடியாக சாந்தமாக நடந்து கொள்ளுவோம். ஆகவே, கடவுளுக்காக நாம் நேசிக்கிறவர்களாக இல்லை, ஆனால்

பணத்திற்காக நேசிப்பதற்கு தயாராக இருக்கிறோம். அப்படி என்றால் அடுத்தவர்களுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது.

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது எது?

நேசிக்க முடியாதவர்களையும் ஆண்டவருக்காக அன்பு செய்யுங்கள். அதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை. நேசிக்க முடியவில்லை என்றால் நீங்கள் கிறிஸ்தவர்களே கிடையாது. அது கிறிஸ்தவ வாழ்வே கிடையாது. யாராவது ஒருவரை நேசிக்க முடியவில்லை என்று சொல்வீர்களானால் அது கிறிஸ்தவ வாழ்வே இல்லை. அதுவும் வீட்டிற்குள் இருக்கிற ஒரு நபரையே நேசிக்க முடியவில்லை என்றால் இதில் சொல்வதற்கு ஒன்றுமில்லை. மற்ற ஜனங்கள் செய்வதுபோல் நாம் செய்யக் கூடாது. ‘திட்டுறாங்க இதை பண்றாங்க அதை பண்றாங்க இப்படியெல்லாம் செய்றாங்க’ என்று பேசிக்கொண்டிருந்தால் நாம் கிறிஸ்தவரே கிடையாது. இப்படி எல்லாம் இருந்தாலும் நீ அன்பு செய் அவ்வளவுதான், அதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை. ‘இல்லை நான் அன்பு செய்ய மாட்டேன்’ என்று சொன்னால் இது கிறிஸ்தவ வாழ்க்கை இல்லை.

நிறைய பேர் இதை தான் சொல்கிறார்கள், ‘ஏதாவது காரணத்திற்காக அவர்கள் பேசுவதில்லை; நானும் அவர்களிடத்தில் எதுவும் வைத்துக் கொள்வதில்லை’ இப்படி பேசுவது கிறிஸ்தவ வாழ்க்கையே இல்லை. இது மற்றவர்கள் செய்யக் கூடிய காரியம். ஆண்டவரை அறியாதவர்கள் இப்படி நடப்பார்கள். ஆண்டவரை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் என்றால் இந்தக் காரணம் எல்லாம் சொல்லக் கூடாது. என்ன காரணம் இருந்தாலும் நேசிப்பதற்கு ஆயிரம் காரணம் உண்டு; அன்பு செய்வதற்கு ஆண்டவர் இருக்கிறார். அவரை நினைத்துக் கொள்ளுங்கள்.

குறிப்பாக மாமனார், மாமியார், மருமகள், மருமகன், பிள்ளை, தாய், தகப்பன் ‘இப்படி பண்ணிட்டாங்க இப்படி சொல்லிட்டாங்க அதனால நான் பேசல’ என்று இப்படி காரணம் சொல்லிக் கொண்டே இருந்தால் அது கிறிஸ்தவ வாழ்க்கை அல்ல. அன்பு காட்ட முடியாமல் இருக்கிறீர்கள் என்றால் நீங்கள் கிறிஸ்தவர்கள் இல்லை. அன்பு காட்டாமல் இருப்பதற்கு யாரிடம் வேண்டுமானாலும் நாம் ஏதாவது

குறையை கண்டுபிடிக்க முடியும். அப்படி ஏதாவது கண்டுபிடித்து விட்டு “நான் அன்பு காட்ட மாட்டேன், அன்பு காட்ட முடியவில்லை” என்றால் அது கிறிஸ்தவ வாழ்க்கை இல்லை.

அன்பு செலுத்துவதற்குத்தான் அழைக்கப்பட்டிருக்கிறோம். அன்பு இல்லை என்றால் மற்ற எல்லாம் ஒலிக்கும் வெண்கலமும் ஓசையிடும் கைத்தாளமும் போன்றுதான் இருக்கும். கடவுள் அன்பாய் இருக்கிறார். அவர்கள் நம்மை நேசிக்காமல் இருக்கலாம், நாம் அவர்களை நேசிக்கிறோமா அதுதான் முக்கியம்; நாம் நேசித்தால் தான் கடவுளுடைய பிள்ளை. நம்மால் நேசிக்க முடியவில்லை என்றால் நாம் கடவுளுடைய பிள்ளை இல்லை.

வாழ்வில் இருக்கிறோமா? சாவில் இருக்கிறோமா?

1 யோவான் 3:14 நாம் சகோதர அன்பு கொண்டுள்ளதால், சாவிலிருந்து வாழ்வுக்குக் கடந்து வந்துள்ளோமென அறிந்துள்ளோம்; அன்பு கொண்டிராதோர் சாவிலேயே நிலைத்திருக்கின்றனர்.

அதுதான் மீட்பு, எப்போதும் நாம் மீட்பு பாதையில் தான் இருக்கிறோம் என்பது எப்பொழுது தெரியும் என்றால், சகோதர அன்பு கொண்டிருக்கும் போது தான் தெரியும். யாரையாவது அன்பு செய்ய முடியவில்லை என்று சொன்னால் சாவில் தான் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம், வாழ்வுக்கு வரவில்லை. இயேசு கிறிஸ்து கொடுக்கிற மீட்பையும் பெற்றுக் கொள்ளவில்லை.

1 யோவான் 3:15 தம் சகோதரர் சகோதரிகளை வெறுப்போர் அனைவரும் கொலையாளிகள். எந்தக் கொலையாளியிடமும் நிலைவாழ்வு இராது என்பது உங்களுக்குத் தெரியுமே.

‘அன்பு செய்ய முடியவில்லை வெறுப்பு தான் இருக்கிறது’ என்றால் அவர் ஒரு கொலைகாரர் என்று சொல்கிறார் புனித யோவான்.

1 யோவான் 3:16 கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார் இதனால் அன்பு இன்னதென்று அறிந்து கொண்டோம் ஆகவே நாமும் சகோதர சகோதரிகளுக்காக உயிரைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம் என்றால் உயிரைக் கொடுக்கக் கூட கடமைப்பட்டிருக்கிறோம். ஜெபக்குழுவில் ஒருவர் ஒருவருக்காக உயிரை கொடுக்க கடமைப்பட்டிருக்கிறோம். அதுதான் சகோதர அன்பு. இந்த அன்பு இல்லையென்றால் கொலையாளி. **'அன்பு செய்யாதவன் இயேசுவை அறியாதவன்'** இந்த அன்பு இருந்தால்தான் சாவிலிருந்து வாழ்வுக்குக் கடந்து வந்திருக்கிறோம் என்று அர்த்தம். அந்த அன்பு இல்லை என்றால் இன்னும் சாவிலேயே நிலைகொண்டு இருக்கிறோம்.

மனத்தாழ்மை>> விசுவாசம்>> அன்பு

விசுவாசத்தின் மூலமாக தூய்மையாக்கப்படுகிறோம். **விசுவாசத்தின் மூலமாக நமக்குள்ளே அன்பு வரவேண்டும்.** அன்பு வரவில்லை என்றால் அந்த விசுவாசம் ஒலிக்கும் வெண்கலமும் ஓசையிடும் கைத்தாளம் போன்றுதான் இருக்கும். விசுவாசம் அன்பை பிறப்பிக்க வேண்டும். **மனத்தாழ்மையிலிருந்து விசுவாசம் வரவேண்டும்; விசுவாசத்திலிருந்து அன்பு உண்டாகும் அதுதான் மீட்பு. அதுதான் கனி.** தாழ்மையிலே நின்று விட்டால் ஒன்றும் இல்லை; தாழ்மை விசுவாசத்தைக் கொண்டு வரவேண்டும். விசுவாசம் அன்பை பெற்றெடுக்கிறது. அன்பு வர வேண்டும்; அன்பு வரவில்லை என்று சொன்னால் அது கனி கொடுக்கவில்லை. அந்த மரம் வெறும் மரம், மலட்டு மரம். அது வெட்டப்பட்டு தீயில் எரிக்கப்படுமே தவிர வேறு ஒன்றுக்கும் உதவாது.

யோசித்துப்பாருங்கள் என்னால் நேசிக்க முடிகிறதா? யாரை நேசிக்க முடியவில்லை? ஏன் நேசிக்க முடியவில்லை? நீங்கள் சொல்கிற காரணத்தை எல்லாம் இயேசு சொல்லிவிட்டார் எதிரியை கூட அன்பு செய்யுங்கள் என்று இயேசு சொல்லிவிட்டார். உங்களுக்கு வணக்கம் சொல்கிறவர்களுக்கே நீங்கள் வணக்கம் சொன்னால் என்ன பிரயோஜனம். உங்களை நேசிக்கிறவர்களையே நேசிப்பீர்கள் என்றால் அதனால் உங்களுக்கு என்ன லாபம். நேசிக்காதவர்களையும் அன்பு செய்யுங்கள்; அன்பு செய்வதில் தான் கிறிஸ்தவ வாழ்வு அடங்கியிருக்கிறது.

மனத்தாழ்மையை கற்றுக்கொள்ள வேண்டும்; அதிலிருந்து விசுவாசம், அடுத்து அன்பு; அன்புதான் முதிர்ச்சி. **தாழ்மையில் இருந்து விசுவாசம் வரவில்லை என்றால் அந்த விசுவாசம் அன்பை**

கொண்டு வராது. மனத்தாழ்மையிலிருந்து உண்டாகிற விசுவாசம் அன்பை கொண்டுவரும். அன்பு இருந்தால் பல காரணங்களை சொல்ல மாட்டோம். அன்பு இல்லாவிட்டால் நிறைய காரணங்களை சொல்லுவோம். உண்மையான அன்பு இருந்தால் தப்பிக்கிறதற்கோ, ஏதாவது பிரச்சினை வந்து விடும் என்று பயப்படுவதற்கோ அவசியம் இருக்காது. பூரண அன்பில் பயமில்லை என்று இருக்கிறது. அன்பு நிறைவாய் இருக்கும் போது அங்கே பயம் இருக்காது. 'இப்படி நடந்திடும், அப்படி பண்ணிடுவாங்க, ஏதாவது சொல்லிடுவாங்க, ஏதாவது செய்து விடுவாங்க' என்ற பயம் அன்பில் இருக்காது. அதுதான் அன்பினுடைய தன்மை. பயம் இருக்கிறது என்றால் அங்கே அன்பு இல்லை.

இரண்டு விதமான பாவ மன்னிப்பு

பாவ மன்னிப்பில் கூட இரண்டு விதமான மன்னிப்பு உண்டு. கடவுள் நம்மை நரகத்திற்கு தள்ளி விடுவார் என்று பயந்து பாவத்தை விட்டு விலகுவது; பாவத்திற்கு மன்னிப்பு கேட்பது என்பது ஒரு அடிமை நிலை. அடிமை என்பது எஜமானனுக்கு பயந்து வேலை செய்வது. ஆனால் ஒரு பிள்ளையின் மனநிலை அப்படி இல்லை. 'தகப்பனுடைய உள்ளத்தை நோகச் செய்துவிட்டோமே, தன் தகப்பனை கஷ்டப்படுத்தி விட்டோமே' அப்படி ஒரு எண்ணத்தில் வரக்கூடிய மனஸ்தாபம், மன்னிப்பு கேட்பது என்பதுதான் அன்பில் ஆண்டவரை நெருங்குவது. அதுதான் ஒரு பூரணமான செயல் இது பிள்ளைக்குரிய காரியம். பிள்ளைகளாக இருப்பீர்கள் என்றால் கடவுளிடத்தில் பயப்படமாட்டீர்கள். 'ஐயோ கடவுளை நோகச் செய்யக் கூடாது' என்ற பயம் தான் இருக்கும்; 'நம்மை நரகத்தில் தள்ளிவிடுவார் தண்டித்து விடுவார்' என்ற பயம் இருக்காது. **ஆண்டவருடைய அன்பை சுவைத்திருக்கிறோம் என்றால் அதைக் கொடுப்பதற்கு கடமைப்பட்டிருக்கிறோம்.** அவருடைய அன்பை நாம் பெற்றுக் கொண்டோம் என்றால் சகோதர சகோதரிகளுக்கு அந்த அன்பை காட்ட கடமைப்பட்டு இருக்கிறோம். நமக்கு ஒரு கடமை இருக்கிறது; ஜெபகுழுக்களிலும் ஒரு கடமை இருக்கிறது. ஒவ்வொரு சகோதர சகோதரிகள் மீது அன்பை காட்ட வேண்டும்; எத்தனை பேர் உங்களுடைய அன்பை சுவைத்திருக்கிறார்கள் என்று யோசித்துப் பாருங்கள். உங்களை

நீங்களே கேட்டுப் பாருங்கள். எல்லாரும் என்னுடைய அன்பை சுவைத்திருக்கிறார்களா? நான் எல்லாரையும் நேசித்திருக்கிறேனா? யாரையாவது நேசிக்க முடியாமல் இருக்கிறேனா? மற்றவர்கள் என்னுடைய அன்பை உணருகிற அளவுக்கு காட்டாமல் இருக்கிறேனா? நன்றாக ஆராய்ந்து பாருங்கள். இன்னும் சில பேர் சில பேரிடம் மட்டும் தான் பேசுவார்கள். அனைவரிடமும் அன்பாக பேச முடிகிறதா? இல்லை என்றால் அன்பு இல்லை என்று அர்த்தம். அன்புதான் மற்றவர்களுடைய வேதனைகளைப் புரிந்து கொள்ளும். நிறைய காரியங்களில், 'நான் மற்றவர்ளை 'நேசிக்கல அவங்க இப்படி பண்றாங்க' என்று நிறைய காரணங்களை சொல்கிறோம். ஆனால், அவர்கள் எவ்வளவு வேதனையில் இருக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள வைப்பதுதான் அன்பு. நம்முடைய செயல்கள் மற்றவர்களை எவ்வளவு வேதனைப்படுத்தும் என்பதையும் புரிந்து கொள்வதுதான் அன்பு. அன்பு இருந்தால் அடுத்தவர்களுடைய வேதனையை சொல்ல வேண்டியதே இல்லை.

எலிசாவிடம் வெளிப்பட்ட அன்பு

எலிசாவிடம் சூனேம் ஊர் பெண் வருகிறாள். 'அவளுக்கு ஏதாவது தேவை இருக்கிறதா கேள்' என்று எலிசா கேகசியிடம் சொல்கிறார். கேகசி சொல்கிறார் 'அவளுக்கு குழந்தை இல்லை'. 'அடுத்த வருடம் உனக்கு ஒரு குழந்தை இருக்கும்' என்கிறார். அவள் 'நான் கேட்கவில்லை' என்கிறாள். எலிசாவோ 'ஆண்டவர் கொடுக்கிறார்' என்கிறார். அதேபோல குழந்தை பிறக்கிறது திடீரென்று ஒருநாள் குழந்தை தலைவலி என்று சொல்லி இறந்து போய் விடுகிறது. குழந்தையைக் கிடத்தி விட்டு அந்தப் பெண் கழுதைக்கு சேணமிட்டு எலிசாவை பார்க்கப் போகிறாள். அவளை பார்த்த உடனே எலிசா சொல்கிறார் "அவளுடைய மனம் மிகவும் துயரம் அடைந்துள்ளது. என்ன துயரம் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. கடவுளும் எனக்கு அதை மறைத்து வைத்திருக்கிறார்" என்கிறார். பிள்ளை இறந்து விட்டான் என்பதை குறித்து அவள் எதுவுமே சொல்லவில்லை. வீட்டிற்கு வரும்படி அழைக்கிறாள்; குழந்தை இறந்து போய் விட்டான் என்பதை எலிசா புரிந்து கொண்டு கேகசியை கூப்பிடுகிறார். அவருடைய கோலை, கேகசியின் கையில் கொடுத்து "யாரிடமும் பேசாமல் நேராக போய் குழந்தையின் மேல்

கோலை வை” என்கிறார். ஆனால், அந்தப் பெண் எலிசாவிடம் “நீர் வராமல் நான் போக மாட்டேன்” என்கிறாள். அந்த அன்பு என்ன செய்கிறது என்றால் ஒருவருடைய வேதனையை புரிந்து கொள்ள வைக்கிறது. அதுதான் அன்பு அதுதான் கடவுளுடைய இயல்பு.

குடும்பங்களில் வெளிப்படுகிற அன்பு

வீட்டிலே குடும்பங்களில் ஒருவர் ஒருவருடைய வேதனையை புரிந்து கொள்ளவில்லை என்றால் இது என்ன அன்பு. மனைவிமார்களுக்கு கணவன் படுகிற வேதனை தெரிவதில்லை; கணவனுடைய மனதில் இருக்கிற ஆதங்கமும் கஷ்டமும் தெரியாது. கணவன்மார்களுக்கு மனைவி படுகிற வேதனையோ, மனதில் இருக்கிற கஷ்டமோ தெரியாது. நிறைய பெற்றோர்களுக்கு குறிப்பாக தகப்பன்மார்களுக்கு பிள்ளைகள் மனதில் ஏற்படக்கூடிய வேதனைகள் தெரியாது. தகப்பன்மார்கள் ‘நான் இவ்வளவு கஷ்டப்படுகிறேன்’ என்று தான் சொல்வார்கள். பிள்ளைகள் மனதில் எவ்வளவு பாதிப்பு இருக்கிறது, கஷ்டப்படுகிறார்கள் என்பதை புரிந்து கொள்ள மாட்டார்கள். ‘நான் இவ்வளவு கஷ்டப் பட்டேன்’ என்று சொல்லி திட்டி விடுவார்கள். அந்த வார்த்தைகள் எல்லாம் பிள்ளைகளை எவ்வளவு காயப்படுத்துகிறது. பிள்ளைகள் மனதை எவ்வளவு பாதிக்கிறது என்பது தெரியாது. தெரிந்தால் நிறைய தகப்பன்மார்கள், வீட்டில் கண்டபடி திட்டி கொண்டிருக்கமாட்டீர்கள். வாய்க்கு வந்தபடி பேச மாட்டீர்கள். ‘நான் இவ்வளவு கஷ்டப்படுகிறேன்’ என்று சொல்ல மாட்டீர்கள்; இயேசுவை விடவா கஷ்டப்பட்டு விட்டீர்கள். இயேசு கூட தன்னுடைய கஷ்டத்தை சொல்லவில்லையே. அதையெல்லாம் சொல்லி சொல்லி வார்த்தைகளைக் கொட்டி பிள்ளைகளை வேதனைப்படுத்தாதீர்கள்; உங்கள் பிள்ளைகளுக்கு சினம் மூட்டாதீர்கள். வார்த்தைகளினாலே பிள்ளைகளை வேதனைப்படுத்தக் கூடாது. சிறுவயதிலே நாம் என்ன திட்டு திட்டினாலும் அது பிள்ளைகளை வேதனைப்படுத்தாது; பெரிதாக எடுக்காது; ஏனென்றால், பிள்ளைகளுக்கு யோசிக்கக் கூட தெரியாது. **பிள்ளைகள் கொஞ்சம் வளர வளர நம்முடைய வார்த்தைகள் பிள்ளைகளை பாதிக்கும் அதற்கு ஏற்ற மாதிரி பக்குவமான வார்த்தைகளை பேசி பழக வேண்டும்.** அதே போன்று தான் பிள்ளைகளும் பெற்றோர்கள் ஏதாவது பேசிவிட்டால் உடனே

‘அவர்களை நேசிக்க மாட்டோம்’ என்று இருக்கக்கூடாது. அம்மாவிடம் ஆயிரம் திட்டு வாங்குவார்கள். ஆனால் மாமனார் மாமியார் ஏதாவது சொல்லிவிட்டால் போதும் மன்னிக்க முடியாது; அன்பு செய்ய முடியாது; யோசித்துப் பார்க்க வேண்டும். அம்மா அப்பா திட்டியதை விடவா மாமனார் மாமியார் திட்டி விட போகிறார்கள். நேசிப்பவர்களை நேசித்தால் உங்களுக்கு என்ன பிரயோஜனம். திட்டும் போதும் நேசித்து பாருங்களேன் ஒரு முயற்சி செய்து பாருங்களேன். உடனே முகத்தை தூக்கி வைத்துக் கொள்கிறீர்கள்; இரண்டு வார்த்தை பேசிவிட்டால் அதை உள்ளே வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்; அது என்ன தியானிக்க வேண்டிய வார்த்தையா? நான்கு பேருக்கு அந்த வார்த்தையை சொல்ல வேண்டிய அவசியம் இல்லையே; நற்செய்தி இல்லையே; ஒரு கெட்ட வார்த்தை தானே; தீமையான வார்த்தை தானே; இதையா தியானிப்பது? இதையா சொல்வது? கடவுளுடைய வார்த்தையை தானே தியானிக்க வேண்டும். சில பேர் ‘இப்படி பண்றாங்க அப்படி பண்றாங்க’ என்று தவறுகளையே தியானித்து கொண்டிருப்பார்கள்.

நான் கடவுளுக்கு முன்பாக எப்படி இருக்கிறேன்

நான் என்ன பண்ணுகிறேன் என்று யோசியுங்கள். கடவுளுக்கு முன்பாக அது தான் சரி. என்னுடைய வாழ்க்கை எப்படி இருக்கிறது நான் எப்படி நடக்கிறேன் அதை யோசித்துப் பாருங்கள். அதை யோசித்து திருத்தும் பொழுது தான் வீட்டில் ஆசீர்வாதங்கள் வரும்; தேவனுடைய நன்மைகள் வரும்; அப்பொழுது தான் நீங்கள் கடவுளுடைய பிள்ளைகளாகவே இருப்பீர்கள். நமக்கு நன்மை செய்யாமல் தீமையே செய்தவர்களை நேசிப்பது தான் கடவுளுடைய இயல்பு. தீமை செய்தவர்களுக்கும் கூட நன்மை செய்வதுதான் இயேசு கிறிஸ்துவினுடைய இயல்பு. ஆண்டவருடைய பிள்ளைகள் என்பது சொல்வதில் இல்லை, தீமை செய்தவர்களை அன்பு செய்வதில் தான் இருக்கிறது. நம்முடைய உள்ளத்தில் இப்படி ஒரு தேவனுடைய அன்பு இருக்கிறதா? தீமைசெய்கிறவர்களையும், பெயரை கெடுக்கிறவர்களையும் அன்பு செய்கிறோமா? அல்லது வேறு யாரையாவது அன்பு செய்ய முடியாமல் இருக்கிறோமா? அன்பு செய்யாத வரைக்கும் சாவில் தான் இருக்கிறோம். வாழ்வுக்கு வந்திருக்கிறோம் என்பது எப்படி தெரியும்?கடவுள் பிள்ளை என்பது

எப்படி தெரியும்? மீட்பை பெற்றிருக்கிறீர்கள் என்பது எப்படி தெரியும்? சகோதர அன்பு கொண்டிருப்பதை வைத்துதான் மீட்கப்பட்டு இருக்கிறோம் என்பதை அறிந்து கொள்ள முடியும். சாவில் இருந்து வாழ்வுக்கு வந்திருக்கிறோம் என்பது தெரியும். அன்பு இல்லை என்றால் அதிலேயே நிலை கொண்டிருக்கிறோம் என்று அர்த்தம். அதனால் ஜெப வாழ்க்கையில் இறங்கும் போது கடவுளை நெருங்கும் போது இந்த அன்பை கடவுள் நம்மிடத்தில் அதிகமாக எதிர்ப்பார்க்கிறார். தீமை செய்தால் பரவாயில்லை, அவர்களை அன்பு செய்வதால் என்ன குறைந்து விடப் போகிறது? உங்களுக்கு சில தீமை செய்கிறார்களா, பரவாயில்லை அன்பு செய்யுங்கள். நாம் தீமை செய்யும் போது ஆண்டவர் நேசித்தாரே! அதனால் நாம் கடமைப்பட்டிருக்கிறோம். கடவுளுக்கு எதிராக தவறு செய்யும் போதும் துரோகம் பண்ணும் போதும் கடவுள் நம்மை நேசித்தாரே ஆகையினால் நாமும் அப்படி நேசிப்பதற்கு கடமைப்பட்டிருக்கிறோம். கடவுளுடைய அன்பை சுவைப்பதினால் அந்த அன்பை செலுத்துவதற்கு கடமைப்பட்டிருக்கிறோம். **அன்பு செலுத்தும்போது தேவனுடைய வல்லமை அந்த இடத்தில் இறங்கிவரும் கடினமான இதயங்களை உடைக்கும்; ஒரு மாற்றத்தை கொண்டுவரும்.** மனம் மாறி அன்பு செய்வதற்கு ஒப்புக்கொடுப்போம். சாவிலே நிலைத்திருந்தால் ஆண்டவரிடத்தில் மன்னிப்பு கேட்போம்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி

10/04/2020

துயருறுவோர் பேறுபெற்றோர்

மத்தேயு 5: 4 - துயருறுவோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்.

3 வகை துயரங்கள்:

1. தனக்காக அழுங்கள்
2. பிறருக்காக அழுங்கள்
3. அழுவரோடு அழுங்கள்

1. **தனக்காக அழுங்கள் :**

நமது பாவ நிலையை அறிந்து அதற்காக முதலில் நாம் துயருற வேண்டும். உங்கள் சிரிப்பு அழுகையாக மாற வேண்டும்.

யாக்கோபு 4:7-9

எனவே கடவுளுக்குப் பணிந்து வாழுங்கள்; அலகையை எதிர்த்து நில்லுங்கள்.அப்பொழுது அது உங்களிடமிருந்து ஓடிப்போகும்.கடவுளை அணுகிச் செல்லுங்கள்; அவரும் உங்களை அணுகி வருவார். பாவிகளே, உங்கள் கைகளைத் தூய்மையாக்குங்கள். இரு மனத்தோரே, உங்கள் உள்ளங்களைத் தூய்மைப்படுத்துங்கள்.உங்கள் நிலையை அறிந்து, துயருற்றுப் புலம்பி அழுங்கள். உங்கள் சிரிப்பு புலம்பலாகவும், மகிழ்ச்சி ஆழ் துயரமாகவும் மாறட்டும்.

2. **பிறருக்காக அழுங்கள்:**

பிறருடைய பாவங்களுக்காகவும் நாம் இறைவனிடம் துயரப்பட்டு மன்றாட வேண்டும்.

1 சாமுவேல் 15:10,11

அப்போது ஆண்டவரின் வார்த்தை சாமுவேலுக்கு அருளப்பட்டது. அவர் கூறியது, சவுலை அரசனாக்கியதற்காக நான் வருந்துகிறேன். ஏனெனில் அவன் என்னை பின்பற்றாமல் விலகிவிட்டான். என் வார்த்தைகளின்படி நடக்கவில்லை. சாமுவேல் மனம்வருந்தி இரவெல்லாம் ஆண்டவரிடம் மன்றாடினார்.

ஆண்டவர் சாமுவேலுக்கு சவுலின் பாவங்களைக் குறித்து அறிவித்த போது, சாமுவேல் இரவெல்லாம் மன்றாடினார். இக்காலத்தில் நாமும் சாமுவேலை போல் பிறரின் பாவங்களுக்காய் இறைவனிடம் மன்றாட வேண்டும்.

எசேக்கியேல் 9:4-6 - பின் ஆண்டவர் அவரை நோக்கி, "நீ எருசலேம் நகரெங்கும் சுற்றி வந்து அதனுள் செய்யப்படும் எல்லா அருவருக்கத்தக்க செயல்களுக்காகவும் பெருமூச்சு விட்டுப் புலம்பும் மனிதர்களுக்கு நெற்றியில் அடையாளம் இடு" என்றார்.என் செவிகளில் விழுமாறு அவர் மற்றவர்களை நோக்கிக் கூறியது; "நீங்கள் அவர் பின்னால் நகரெங்கும் சுற்றி வந்து தாக்குங்கள். உங்கள் கண்களினின்று யாரையும் தப்பவிடவேண்டாம்; இரக்கம் காட்டவேண்டாம்.முதியோர், இளைஞர், கன்னியர், குழந்தைகள், பெண்கள் அனைவரையும் கொன்றொழியுங்கள். அடையாளம் இடப்பட்ட மனிதர் எவரையும் நெருங்காதீர்கள். என் தூயகத்திலிருந்து தொடங்குங்கள். "அவர்களும் ஆண்டவரது இல்லத்தின் முன்னிருந்த முதியோரிலிருந்து தொடங்கினர்.

ஆண்டவர் தம் தூதரிடம் எருசலேமில் பிறரின் பாவங்களுக்காய் புலம்பும் மனிதர்களின் நெற்றியில் அடையாளம் இடு என கட்டளை இடுகிறார். அந்த அடையாளம் இடப்பட்டவர்களை தாக்க வேண்டாம் எனவும், அடையாளம் இல்லாத முதியோர் முதல் குழந்தைகள் வரை அனைவரையும் கொன்றொழியுங்கள் என கட்டளையிடுகிறார். இதே போன்று எப்பொழுதும் பிறருக்காய் ஜெபிப்பவரை இறைவன் அழிவின் காலத்தில் முத்திரை இட்டு பாதுகாக்கின்றார்.

3. **அழுவாரோடு அழுங்கள்:**

உரோமையர் 12:5-அது போலவே, நாம் பலராயிருந்தாலும் கிறிஸ்துவோடு இணைந்திருப்பதால் ஒரே உடலாய் இருக்கிறோம்; ஒருவருக்கொருவர் உடனுறுப்புகளாய் இருக்கிறோம்.

நாம் அனைவரும் கிறிஸ்து என்னும் ஒரே உடலின் உறுப்புக்களாய் இருக்கிறோம். நம் உடலில் ஒரு சிறு உறுப்பு வேதனையுற்றாலும் உடல் முழுவதும் துன்புறுவது போல், நாமும் பிறரின் பாவங்களுக்காய் அழுது மன்றாட வேண்டும்.

கலாத்தியர் 4:19-என் பிள்ளைகளே, உங்களில் கிறிஸ்து உருவாகும்வரை உங்களுக்காக மீண்டும் பேறுகால வேதனையுறுகிறேன்.

பவுல் பிறரின் மீட்புக்காய் பேறுகால வேதனை அடைவதாய் குறிப்பிடுகிறார். நாம் பிறரின் மீட்புக்காய் எவ்வாறு ஜெபிக்கிறோம்?

தி.பணிகள் 7:60-பின்பு முழந்தாள்படியிட்டு உரத்த குரலில், “ஆண்டவரே, இந்தப் பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும்” என்று சொல்லி உயிர்விட்டார்.

ஸ்தேவான் மரணத்தின் போது கூட இவர்களை மன்னியும் என்று வேண்டினார் . இப்படி நாம் மற்றவர்களுக்காய் துயரப்படும் போது மற்றவர்களும் மனம் மாறுவார்கள். மற்றவர்களின் பாவங்களை, மன பாரங்களை மனதில் சுமந்து கொண்டு ஜெபிப்பது. உலகில் எத்தனையோ பேர் வேதனையால், வியாதியால் கை விடப்பட்ட நிலையில் வாழ்க்கையில் தோல்வியை சந்திக்கின்றனர். இப்படிப்பட்டவர்களுக்காய் நாம் பாரப்பட்டு ஜெபிக்க வேண்டும். இப்படிப்பட்டவர்களை தான் தேவன் விரும்புகிறார்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!

ஊழியர் காணொளி கூடுகை - 16 / 04 / 2020

துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர்

மத்தேயு 5:10 நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர்; ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது.

தேவநீதியின் நிமித்தம் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர். நாம் ஏற்கனவே பார்த்தோம் நீதி என்றால் என்னவென்று. நீதி என்றால் கடவுளுக்கு உகந்த வாழ்க்கை வாழ்வது. அப்படி கடவுளுக்கு உகந்த வாழ்கை வாழ்வதற்காக துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர்.

VIRTUES என்றால் ஆவிக்குரிய கனிகளை குறிக்கும். அந்த கனிகளை நிலைநாட்ட பாடுகளை ஏற்றுக்கொள்வோர் பேறுபெற்றோர். எப்பொழுதுமே நம் வாழ்வில் ஆவிக்குரிய கனிகள் இருக்க வேண்டும் என்று சொன்னால், அதற்குரிய கிரையத்தை நாம் செலுத்த வேண்டும்.

யோசேப்பு

யோசேப்பு கடவுள் நம்மை கவனிக்கிறார் என்ற நோக்கத்துடன் பரிசுத்தமான வாழ்க்கையை வாழ்ந்து வந்தார். ஆனாலும், அவர் வாலிப நாட்களில் எகிப்திலே ஒரு சோதனை வந்தது போர்த்திபார் மனைவி அவரை விரும்பிய போது கடவுளுக்கு முன்பாக எப்படி நான் இந்த அநீதியை செய்ய முடியும் என்று தீர்க்கமாய் அதை எதிர்க்கிறார். யோசேப்பு பாவத்திற்கு உடன்பட்டு இருந்தால் எராளமான சலுகைகள் அந்த வீட்டிலேயே அவருக்கு கிடைத்திருக்கும், ஆனால் அவர் பரிசுத்தமான வாழ்க்கையே விரும்பினார். அந்த பரிசுத்தமான வாழ்க்கைக்கு அவர் கொடுத்த கிரையம் நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனை. நாமும் அதைப் போன்று கிரயத்தை செலுத்தினால் தான் பரிசுத்தமாய் வாழ முடியும்.

இரத்தம் சிந்தும் போராட்டம்

பாவத்திற்கு எதிரான போராட்டம் இந்த உலகத்திலே உண்டு, இரத்தம் சிந்தும் அளவிற்கு, ஆம்! காயப்பட்டு கொலை

செய்யப்படும் அளவிற்கு பாவத்திற்கு எதிரான போராட்டம் போராட வேண்டும்.

புனித மரிய கொரட்டி

புனித மரிய கொரட்டியை, ஒரு பையன் இச்சைக்குரிய பாவத்திற்கு அணுகிய போது, அதற்கு உடன்படாமல் போராடிய அவரை அந்த பையன் ஆத்திரம் அடைந்து, மரிய கொரட்டியை கொலை செய்து விடுகிறான். உயிர் போனால் கூட பரவாயில்லை என்று எண்ணி தன் இரத்தத்தை சிந்தினார் புனித மரிய கொரட்டி.

இதையே பவுல் எழுதுகிறார், பாவத்திற்கு எதிரான போராட்டத்தில் இரத்தம் சிந்தும் அளவுக்கு நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே என்று!

புனித டோமினிக் சாவியோ

இதையே புனித டோமினிக் சாவியோ கூறுகிறார், பாவம் செய்வதை விட சாவதே மேல். நேர்மையான வாழ்க்கை வாழ சாவேன் என்கிறார். அந்த அளவிற்கு நீதிமானாய் இருக்கின்றார்.

நேர்மையற்றவரின் பொறாமை

திருப்பாடல் 34:19 - நேர்மையாளருக்கு நேரிடும் தீங்குகள் பல; அவை அனைத்தினின்றும் ஆண்டவர் அவர்களை விடுவிக்கின்றார்.

தானியேல்

நேர்மையாளருக்கு பொறாமையினால் பல தீங்குகள் வரும். விவிலியத்தில் தானியேலை பார்க்கிறோம். அவர் கடவுளுக்கும் அரசருக்கும் முன்பாக நேர்மையாய் இருக்கின்றார். ஆனால், மற்ற அதிகாரிகள் அவர்களிடம் நேர்மை இல்லாததினால் தானியேல் மேல் பொறாமை கொள்கின்றனர். இக்காலத்தில் கூட நாம் குடிகாரர்கள் மத்தியில் இருப்போமானால், அவர்களால் நாம் பரிகசிக்க ஏளனம் செய்யப்படுவோம்.

அலுவலகத்திலேயே லஞ்சம் வாங்குகின்ற, பண ஆசை உடையவர்கள் மத்தியிலே நேர்மையாளராய் இருப்போமானால், ஏளனம், அவமரியாதை, எதிர்ப்புகள், பொறாமையினால்

நேர்மையான வாழ்க்கைக்கு அவர்கள் கொடுக்க கூடிய பலன் இவைகளே. இருப்பினும், இதற்கு மத்தியிலே நேர்மையாளராய் வாழ்பவர்க்கு உரியது விண்ணரசு.

1 பேதுரு 2:19 - ஒருவர் அநியாயமாகத் துயருறும்போது கடவுளை மனத்தில் கொண்டு அதைப் பொறுமையோடு ஏற்றுக் கொள்வாரானால் அதுவே அவருக்கு உகந்ததாகும்.

உண்மை அருள்சகோதரி

இதை போன்று தான் இயேசுவும் நன்மை செய்து அதற்காய் துன்புற்றார். ஓர் துறவற சபையில் எனக்கு தெரிந்த வயதான அருள்சகோதரி இருந்தார் அவருக்கு பொய் சொல்ல தெரியாது எப்போதும் உண்மை பேசுபவராக இருந்தார், எப்போதும் கூட்டி குறைத்து அவருக்கு பேச தெரியாது. அதனால் அவரை அனைவரும் ஏளனம் செய்வார்கள். ஒரு நாள் சபையில் இருந்த வேளையின் நிமித்தம் அங்கு இருந்த கண்டிப்பான பங்குகுருவிடம் ஒரு பொய் சொல்ல வேண்டி இருந்தது. ஆகவே அந்த உண்மையான சகோதரியை சபையில் இருந்த மற்ற சகோதரிகள் பொய் சொல்ல கட்டாயப்படுத்தினார்கள். இந்த உண்மையான சகோதரியும் பங்குகுருவிடம் சென்றார், ஆனால் குருவிடம் என்னை எல்லோரும் பொய் சொல்ல அனுப்பினார்கள். என்னால் பொய் சொல்ல முடியவில்லை என்று எல்லா உண்மையும் சொல்லிவிட்டார். மற்ற சகோதரிகள் எல்லோரும் இவர்களை அதிகமாய் ஏளனம் செய்தனர். இதுவே நீதியின் நிமித்தம் துன்புறுதல், இவர்கள் இந்த உலகத்தின் பார்வையில் முட்டாளாக, ஏமாளிகளாக தெரியலாம். ஆனால் கடவுளுடைய பார்வையிலே விண்ணரசு இவர்களுக்கே உரியது.

உலகின் பரிசு

ஆபேலினுடைய காணிக்கை நேர்த்தியாக இருந்ததால் கடவுள் அதை அங்கீகரித்தார், அதனால் காயினுக்கு பொறாமை வந்தது. பொறாமையின் நிமித்தம் ஆபேலை கொலை செய்தான். நேர்மையான செயலுக்கு கிடைத்த கைமாரை பாருங்கள்!. இஸ்ரவேலில் அனைத்து படைவீரர்களும் ஏன் அரசனும் கோலியாத்துக்கு பயந்த பொழுது, தாவீது அவனை கொன்றான், தாவீதுக்கு கிடைத்த பரிசு என்ன? பெண்கள், “தாவீது பதினாறு

ஆயிரம் பேரை கொன்றான்” என்று பாடிய பொழுது, உடனே சவுல் பொறாமையினால் தாவீதை கொலை செய்ய தேடினான். தாவீது நல்லதை செய்ததற்காக, இஸ்ரவேல் தேசத்தை காப்பாற்றியதற்காக அவருக்கு கிடைத்த பரிசு இந்த துன்பங்கள் தான்.

நம்முடைய வாழ்க்கையிலும் கூட புண்ணியங்களை கடைபிடிக்கும் பொழுதும் ஆவிக்குரிய கனிகளை பயிற்சி செய்யும் பொழுதும் சிலர் நம்முடிய பெயரை கெடுக்கலாம், நமக்கு பின்னால் நம்மை பற்றி இல்லாதது பொல்லாதது எல்லாம் பிறரிடம் சொல்லலாம், நம் காதுகளிலும் அவை விழும். இப்படி நீதிக்காய் நாம் துன்புற்றால், சந்தோஷப்படுங்கள், நாம் பேறுபெற்றவர்கள், விண்ணரசு நமக்கு உரியதே.

நீதியை குறித்து வாழும்போது சில துன்பங்கள், பாடுகள் வரத்தான் செய்யும் அவைகளை குறித்து பயப்பட, மனம் கலங்கக்கூடாது. உடனே நேர்மையை விட்டுவிடக் கூடாது, தேவனுக்கு உண்மையான வழிகளில் நிலைத்து நிற்க வேண்டும். எனக்கு எதற்கு வம்பு என்று பின்வாங்க கூடாது.

ஆபேல் முதல் இன்று வரை

ஆபேல், யோசேப்பு, தானியேல், இயேசு, திருத்தூதர்கள் என எல்லோருக்கும் அப்படி தான் நடந்தது. நமக்கு முன் இருந்த எல்லா இறைவாக்கினர் புனிதர்கள் அனைவருக்கும் அப்படி தான் நடந்தது. நம்முடைய வாழ்க்கையிலும் கூட, எந்த சூழ்நிலையிலும், இரத்தம் சிந்தினால் கூட பின்வாங்க கூடாது. அந்த கிரயத்தை செலுத்த ஆர்வமாய் இருக்க வேண்டும். நாம் நேர்மையாய் இருப்பதால் எல்லோரும் நம்மை ஏற்றுக்கொள்வர் என்று எதிர்பார்க்க கூடாது. கடவுள் தான் நம்மை ஏற்றுக்கொள்வார். நாம் கடவுளால் அழைக்கபட்டிருக்கின்றோம், அதனால் மனிதர்கள் நமக்கு எதிராய் எழும்போதோ, இழிவாய் பேசும்போது அதை குறித்து கொஞ்சம் கூட கவலைப்படாமல் தைரியமாய் இருக்க வேண்டும். உங்களுக்குரிய வெகுமானம் ஆண்டவரிடம் இருக்கிறது, அதை நிச்சயமாய் அவர் தருவார். இயேசுவே நம்மை விடுவிப்பார்.

கலாத்தியர் 6:9 - நன்மைசெய்வதில் மனந்தளாரதிருப்போமாக! நாம் தளர்ச்சி அடையாதிருந்தால்! தக்க காலத்தில் அறுவடை செய்வோம்.

குறிப்பிட்ட காலம், சோர்வடைய கூடிய காலமாய் இருக்கின்றது, அந்த காலத்தில் கூட சோர்வடையாமல் தேவனுடைய சமூகத்தில் நின்று ஆண்டவருடைய பெலத்தினால் ஆவிக்குரிய ஐக்கியத்தில் இணைந்து கொள்வோம், கடவுளுக்கு உண்மையாய் இருக்ககூடிய, ஜெபிக்கக்கூடிய பிள்ளைகளுடன் இணைந்து கொள்வோம். வெளியே மற்றவரிடம் புலம்புவதை விட, அவர்களின் ஒருசில வார்த்தைகள் நம்மை அந்த வேதனையில் இருந்து வெளியே கொண்டு வந்துவிடும்.

நமக்கு மீண்டும் உற்சாகத்தை கொடுத்துவிடும், சோர்வடையாது இருந்தால் தான் தக்க காலத்திலே அறுவடை கிடைக்கும். எல்லா காலத்திலும் மக்கள் நேர்மையாளர்களாய் இல்லாததினால், நேர்மையாளர்களை அவர்கள் துன்புறுத்துகிறார்கள், பொறாமையினால் பல தீமைகளை கட்டவிழ்கின்றனர்.

ஆகவே, தான் திருப்பாடல் கூறுகின்றது,

திருப்பாடல் 34:19 - நேர்மையாளருக்கு நேரிடும் தீங்குகள் பல; அவை அனைத்தினின்றும் ஆண்டவர் அவர்களை விடுவிக்கின்றார்.

நமது துன்ப வேளையில் நாம் தியானிக்க வேண்டிய இறைவசனம் இதுவே; இயேசுவே அனைத்தினின்று நம்மை விடுவிக்க இருக்கின்றார். ஆகவே அனைத்து சோதனைகளையும் தைரியமாய் எதிர்க் கொள்வோம், விண்ணரசு நம்முடையதே.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே மகிமை!

21/05/2020

நமக்காக வாழாமல் இயேசுவுக்காக வாழுவோம்

2 கொரிந்தியர் 5:14,15 - கிறிஸ்துவின் பேரன்பே எங்களை ஆட்கொள்கிறது. ஏனெனில் ஒருவர் அனைவருக்காகவும் இறந்தார். அனைவரும் அவரோடு இறந்தனர். இது நமக்குத் தெரியும்.

வாழ்வோர் இனி தங்களுக்கென வாழாமல் தங்களுக்காக இறந்து உயிர்பெற்றெழுந்தவருக்காக வாழவேண்டும் என்பதற்காகவே அவர் அனைவருக்காகவும் இறந்தார்.

இயேசு இறந்தார் என்கின்ற செய்தியில், “அவர் ஒருவர் எல்லாருக்காகவும் இறந்தார், அவர் இறந்ததினால் நாமும் அவரோடு இறந்தோம், இது நமக்கு தெரிந்தது” என்று சொல்லிவிட்டு “**வாழ்வோர் இனி தங்களுக்கென வாழாமல் தங்களுக்காக இறந்து உயிர்பெற்றெழுந்தவருக்காக வாழவேண்டும் என்பதற்காகவே அவர் அனைவருக்காகவும் இறந்தார்”** என்கிறார் பவுல்.

கிறிஸ்துவுக்காக நாம் வாழ வேண்டும்

இயேசு கிறிஸ்துவின் மரணத்தில் இரண்டு காரியங்கள் நடக்கிறது. ஒன்று, நாம் அவரோடு மரிக்கிறோம்; இரண்டு, நாம் அவருக்காக வாழ்கிறோம்.

இயேசு கிறிஸ்துவின் மரணத்தில் நாம் மரிக்கிறோம்; இந்த உலகத்திற்காக மரிக்கிறோம். அதன் பிறகு, கிறிஸ்துவுக்காக நாம் இறந்து, உயிர்பெற்று எழுந்தவருக்காக நாம் வாழ வேண்டும். அதற்காக தான் இயேசு இறந்தார். எதற்கு என்றால், கிறிஸ்துவுக்காக நாம் வாழவே. நாம் அவருடன் மரித்து, அதன் பிறகு வாழ்கின்ற வாழ்க்கை, இயேசுவுக்காக வாழ்கின்ற வாழ்க்கை. இதற்கு தான் கிறிஸ்துவின் பேரன்பு நம்மை ஆட்கொள்ளுகிறது. அவர் நம்மேல் வைத்த, அந்த பேரன்பால் தான் நமக்காக அவர் மரித்தார். கிறிஸ்துவினுடைய பேரன்பு நம்மை உணரச் செய்கின்றது, நம்மை ஆட்கொள்கின்றது, நம்மை நெருக்குகின்றது. அப்படி ஆட்கொண்டு, நம்மை நெருக்கி, இந்த உலகத்திற்கு நாம் மரித்து கிறிஸ்துவிற்காக வாழ்வதற்கு நம்மை தூண்டுகிறது, நம்மை பெலப்படுத்துகிறது.

பழைய பாவ வாழ்க்கைக்கு மரிக்க வேண்டும்

முதலாவது நாம் மரிக்க வேண்டும், மரிக்காமல் திரும்ப உயிர் பெற்று வாழ முடியாது. பழைய பாவ வாழ்க்கைக்கு மரிக்க வேண்டும்; மரித்தல் என்ற வார்த்தை விவிலியத்தில் நிறைய இடங்களில் வருகிறது. ஆகவே தான் இயேசு கூறுகின்றார்,

“யோவான் 12:24 - கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியா விட்டால் அது அப்படியே இருக்கும்”.

ரோமர் 6 ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம், “பாவங்களுக்கு ஏற்கனவே மரித்து விட்டோம்; திரும்பவும் எப்படி பாவம் செய்ய முடியும்?” என பவுல் கூறுகிறார்;

“1 பேதுரு 2:24 – சிலுவையின்மீது தம் உடலில் நம் பாவங்களை அவரே சுமந்தார். நாம் பாவங்களுக்கு இறந்து, நீதிக்காக வாழ்வதற்கே இவ்வாறு செய்தார்”.

பழைய வாழ்க்கைக்கு நாம் மரிக்க வேண்டும். பழைய வாழ்க்கை என்பது ஒரு சுயநலமான வாழ்க்கை, பழைய சுபாவம்; அந்த பழைய வாழ்க்கைக்கு நாம் மரிக்க வேண்டும். பழைய வாழ்க்கை என்றால், சுயநலமாக இருந்த வாழ்க்கை, நமக்கு எது சந்தோஷம் தருமோ அதை செய்தோம், நமக்கு எது விருப்பமோ அதை செய்தோம். அந்த வாழ்க்கைக்கு மரித்து நீதிக்காக அதாவது கிறிஸ்துவுக்காக வாழ வேண்டும். ஆகவே உண்மையாகவே நம் மனசாட்சியை தொட்டு கேட்க வேண்டும் ‘நான் இயேசுவுக்காக வாழ்கிறேனா?’. எல்லா நேரமும் நாம் இயேசுவுக்காக வாழ்கிறோமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். வேலைக்கு போகிறோம் அது கூட இயேசுவுக்காக தான் போகிறோமா? ஊழியம் செய்கிறோம் அதை வேண்டுமானால் இயேசுவுக்காக செய்கிறோம் என்று சொல்லலாம். மற்ற எல்லாவற்றையும் இயேசுவுக்காக செய்கிறோமா? அப்படி இயேசுவுக்காக வாழ்ந்தால் நம்முடைய வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதை யோசித்து பாருங்கள். ஆகவே பழைய வாழ்க்கைக்கு மரித்து, கிறிஸ்துவுக்காக வாழ வேண்டும்.

நமக்காக இறந்து இயேசுவுக்காக வாழ வேண்டும்

என்றைக்கோ நாம் இறக்க வேண்டியவர்கள். ஆனால், கடவுள் தான் அந்த உயிரை நமக்கு கொடுத்து வாழ வைக்கிறார் அப்படி இருக்கும் பொழுது அந்த வாழ்க்கையை கிறிஸ்துவுக்காக தானே வாழ வேண்டும். ‘கிறிஸ்துவுக்காக வாழ்கின்றேன்’ என்ற வாழ்க்கையை வாழும் பொழுது, அதில் பயம் இருக்காது. இங்கு பவுல், ஏன் சாவை குறிப்பிடுகிறார் என்றால், நமது வாழ்க்கைக்கு செத்தால் தான் இயேசுவுக்காக வாழ முடியும். சாகாவிட்டால், அவருக்காக வாழ

முடியாது. நம் ஊனியல்பின் வாழ்க்கையே இன்னும் கொஞ்சம் இருக்கிறது என்றால் அவருக்காக எப்படி வாழ முடியும்? இதை தான்,

1 யோவான் 2:15 - உலகின் மீதும் அதிலுள்ளவை மீதும் அன்பு செலுத்தாதீர்கள். அவ்வாறு அன்பு செலுத்துவோரிடம் தந்தையின்பால் அன்பு இராது.

உலகத்திலுள்ளவைகள் மேல் அன்பு வைக்காமல் முழுமையாக அதற்கு மரிக்க வேண்டும், அப்படி மரித்தால் தான் கிறிஸ்துவுக்காக வாழ முடியும். மரணம் நடக்காவிட்டால் வாழ்வும் நடக்காது. “நான் பாதி மரித்திருக்கிறேன் இன்னும் பாதி எனக்காக வாழ்கிறேன்” என்றால், முழுமையாக இயேசுவுக்காக வாழ முடியாது. இயேசு கிறிஸ்துவினுடைய மரணத்தில் தேவனுடைய அன்பு வெளிப்படுகிறது. அதனால் தான் விவிலியத்தில் வாசிக்கின்றோம், **“தம்முடைய ஒரேபேறான குமாரனை கொடுக்கும் அளவிற்கு தந்தை இவ்வுலகத்தின் மேல் அன்பு கூர்ந்தார்”.** அந்த அன்பு, அந்த பேரன்பு எங்களை ஆட்கொள்ளுகிறது என பவுல் கூறுகின்றார். அந்த பேரன்பால் கிறிஸ்துவோடு நாங்கள் மரித்து அவருக்காக வாழ்கிறோம். இதை பவுல் மட்டும் சொல்வதோடு இல்லாமல் எல்லாரும் அப்படியே மரித்து அவருக்காக வாழ வேண்டும். இதற்காகவே இயேசு மரித்தார். அவருடைய மரணத்தில் இரண்டு காரியங்களை பார்க்கிறோம், “மரித்தல்”-நாம் அவருக்காக மரிக்கவில்லை என்றால், நாம் நாமாகவே வாழ்கிறோம்.

கிறிஸ்துவின் பேரன்பு நம்மை ஆட்கொள்ளுகிறது

இன்றைக்கு நிறைய பேர் மரித்தது போல் நடிக்கிறார்கள். நடிப்பது மிகவும் எளிது. ஆனால், உண்மையாகவே அவர்கள் உலகத்திற்கு சாகவில்லை. உலகத்திற்கு நாம் செத்துவிட்டோமென்றால் நிறைய கனி கொடுக்க ஆரம்பித்துவிடுவோம். ஏனென்றால், கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால் மிகுந்த பலன் கொடுக்கும். **நாம் மிகுந்த பலன் கொடுக்க முடியாததற்கு காரணம், சரியாய் சாகவில்லை, கோதுமை சாகாமல் கனி கொடுக்க முடியாது. சில ஆசைகள், சிறிய சிறிய பற்றுதல்களை வைத்திருக்கிறோம்.** கிறிஸ்துவுக்காக வாழ வேண்டுமென்றால், இதற்கு சாக வேண்டும். இதற்கு சாகவில்லை என்றால், கிறிஸ்துவுக்காக வாழ முடியாது.

அதற்கு தான் கிறிஸ்துவின் பேரன்பு நம்மை ஆட்கொள்ளுகிறது. அந்த அன்பு நம்மை ஆட்கொள்ளும் போது தான் இயேசுவுக்காக மரிக்க முடியும். அப்போஸ்தலர்கள் கூட அந்த அன்பினால் ஆட்கொள்ளப்பட்டார்கள், அதை அனுபவித்தார்கள், இயேசு கிறிஸ்துவின் மேல் இருந்த அன்பினால் தான், அந்த அன்பு அவர்களை நெருக்கி ஏவுனதினாலே தான், அவர்கள் தேவனுடைய அன்பை சுவைத்து பார்த்தார்கள், தொட்டு அனுபவித்தார்கள்.

யோவான் 13:1 - தம்மோடு இருந்தவர்களை அன்பு செய்த அவர் இறுதி வரை அவர்களை அன்பு செய்தவரானார்.

இயேசு கிறிஸ்து இறுதி வரை நேசித்தார்; அந்த அன்பை பார்த்து தான், அப்போஸ்தலர்கள் தங்களுக்காக மரித்து, இயேசுவுக்காக வாழ்ந்தார். அப்போஸ்தலர்கள் எல்லாரும் அப்படித்தான் இருந்தார்கள்; யூதாஸ்காரியோத்தை தவிர மற்ற அனைவரும் அப்படித்தான் இருந்தார்கள். அப்போஸ்தலர்கள் அப்படி வாழ காரணமென்னவென்றால் இயேசு கிறிஸ்துவின் அன்பு. **இயேசு கிறிஸ்துவின் அன்பு ஒரு மனிதனை ஆட்கொள்ளும் பொழுது, தனக்காக மரித்து இயேசுவுக்காக வாழ வைக்கிறது.**

குடும்பமும், துறவறமும்

நாம் நினைக்கலாம் இதை துறவிகளுக்கு சொன்னால் நன்றாக இருக்கும் குடும்பத்தில் இருப்பவருக்கு எப்படி சரி வரும் என கூறலாம். குடும்பத்தில் இருக்கிறவர்களுக்கு சில கடமைகள் உண்டு. குடும்பத்தில் உள்ளவர்களையும் இயேசுவுக்காக அன்பு செய்ய வேண்டும். குடும்பத்தில் இருக்கிறோம் அதனால் அன்பு செய்கிறோம் என்று இல்லாமல் **இயேசுவுக்காக மட்டுமே குடும்பத்தில் உள்ளவர்களை அன்பு செய்ய வேண்டும்.** இயேசுவுக்காக அன்பு செய்தால் அந்த அன்பு உறுதியாக இருக்கும் அல்லது ஊனியல்பின்படி அன்பு செய்தால் அது குறைவாக தான் இருக்கும். எனவே, இயேசுவுக்காகவே அவர்களை நேசிக்க வேண்டும். எந்த காரியத்தை செய்தாலும் அதை நமக்காக செய்யாமல் கிறிஸ்துவுக்காக செய்ய வேண்டும்.

குடும்பத்திலும், துறவற சபையிலும் எந்த காரியத்தை செய்தாலும் அதை கடவுளுக்காக செய்வதை போன்றே செய்ய வேண்டும்.

இன்றைக்கு அந்த மனநிலை இல்லாததால் தான் குடும்பத்திலும், துறவற சபைகளிலும் பிரச்சனை வருகிறது. ஏனென்றால் எதை செய்தாலும் கடவுளுக்காக செய்கிறோம் என்ற எண்ணம் இல்லை. அந்த உணர்வோடு நாம் செய்யும் பொழுது இந்த பேரன்பு நம்மை ஆட்கொண்டிருக்கிறது என்பது வெளிப்படும். அதுதான் கிறிஸ்துவின் பேரன்பு. இயேசு இறந்தார்; அவரோடு கூட இறந்து அவருக்காக வாழ்வது தான் அந்த பேரன்பு.

தியானிப்போமாக

இப்பொழுது நாம் நம்முடைய மனசாட்சியை கேட்டு பார்ப்போம். உண்மையிலேயே நான் இயேசுவுக்காக வாழ்கிறேனா? ஒரு நாளைக்கு எவ்வளவு நேரம் அவருக்காக வாழ்கிறேன் என்பதை கணக்கிட்டு பார்ப்போம். நிறைய பேர் சங்கிலி ஜெபத்தில் இருப்பதால், அந்த நேரத்தில் மட்டும் இயேசுவுக்காக வாழ்கிறீர்கள். அதிலே கூட நிறைய சுயநலத்தை கொண்டு போகிறோம். ஜெபிப்பதில் கூட நிறைய சுயநலன்கள் உள்ளது. சுயநலத்துக்காகவே தான் நிறைய பேர் ஜெபிக்கிறார்கள். கிறிஸ்துவின் பேரன்பு நம்மை ஆட்கொள்ளுகிறது என்றால், நாம் அப்படி இருக்கமாட்டோம். இயேசுவுக்காக வாழ்வோம். ஒரு நாளைக்கு 24 மணி நேரத்தில் எவ்வளவு நேரம் இயேசுவுக்காக வாழ்கிறோம் என்பதை யோசித்துப் பாருங்கள். அதில் 12 மணி நேரம் வாழ்ந்தாலே நாம் எப்படியோ இருப்போம்.

புனிதர்கள் 24 மணி நேரமும் இயேசுவுக்காகவே வாழ்ந்தார்கள். அதனால் தான் புனித குழந்தை தெரசா, “ஆண்டவரே என்னை ஒரு பந்து போல சுருட்டி உம்முடைய கரத்தில் கொடுக்கிறேன்; வேண்டுமென்றால் கையில் வைத்து கொள்ளுங்கள், கீழே போட வேண்டுமென்றால் கீழே போடுங்கள், எட்டி உதைக்க வேண்டுமென்றால் எட்டி உதையுங்கள்" என்று கூறினார். அவர் தன்னை முழுவதுமாக இயேசுவிடம் ஒப்படைத்தார்.

சகோதரி ரோஸி அவர்களிடம் ஒரு நாள் பேசும் பொழுது "30 முறை வயிற்றுப்போக்கு உண்டாகிவிட்டது" என்று சொன்னார்கள். ஏற்கனவே அவர்கள் சரியாய் சாப்பிடுவதில்லை. 30 முறை வயிற்றுப்போக்கு உண்டானால் என்ன ஆகும் என யோசித்து பாருங்கள். 4 முறை வயிற்றுப்போக்கு உண்டானாலே கை கால்கள்

எல்லாம் நடுங்கி பெலவீனப்படும். அதிலே அவர்கள் எல்லா வேலைகளையும் செய்து முடித்ததாக சொன்னார்கள். பிறகு அவர்கள், "நாம் யார்? கடவுளின் அடிமை; அவருடைய விருப்பத்திற்கு நம்மை ஒப்புக்கொடுத்துவிட்டோம். ஆகையால் அவரது விருப்பம் என்னவோ அப்படியே நடக்கட்டும் என விட்டுவிட்டேன்; ஆனாலும் நான் செய்ய வேண்டிய அனைத்து காரியங்களையும் செய்து விடுகிறேன், வேதம் வாசிக்கிறேன், ஜெபிக்கிறேன்" எனக் கூறினார்கள்.

கடவுளின் விருப்பத்திற்கு நம்மை ஒப்புக்கொடுப்போம்

இயேசுவுக்காக வாழ்வது என்றால், “அவருடைய விருப்பப்படி நம்மை என்ன வேண்டுமானாலும் செய்யட்டும்” என ஒப்புக்கொடுப்பது. ஆனால், நாம் அநேக நேரங்களில் கடவுளின் திட்டத்திற்கு எதிர்த்து நிற்கிறோம், அந்த திட்டத்தை புரிந்து கொள்ளாமல் இருக்கிறோம். இன்றைக்கு ஒப்புக்கொடுப்போம். கிறிஸ்துவுக்காக வாழ வேண்டுமென்றால் முதலாவது மரிக்க வேண்டும், மரித்த பிறகு இயேசுவுக்காக வாழ வேண்டும். சிலர் கூறுவார்கள், “என் குடும்பத்திற்காக தான் நான் உயிரோடு இருக்கிறேன், என் பிள்ளைக்கு திருமணம் ஆவதற்கு நான் உயிரோடு இருக்க வேண்டும்” என்பார்கள். இது இயேசுவுக்காக வாழ்வதா? இயேசுவுக்காக வாழ்வது என்றால் என்ன? சிலர் “கடன் அடைக்கும் வரைக்கும் நான் உயிரோடு இருக்க வேண்டும்” என்று கூறுவார்கள். அப்படி என்றால் அவர்கள் இயேசுவுக்காக வாழவில்லை. **“அவர் எவ்வளவு பணிகள் நமக்கு கொடுத்துள்ளார், அது எல்லாவற்றையும் செய்து முடிக்க வேண்டும்”** என்ற குறிக்கோளோடு வாழ வேண்டும். அதை விடுத்து மற்ற காரியங்களை செய்ய நினைக்கும் பொழுது அங்கு சில பிரச்சனைகள் உண்டாகும்.

இன்றைக்கு நாம் அலசிப் பார்ப்போம்; எந்தெந்த காரியங்களில் நாம் கடவுளுக்காக வாழாமல் நமக்காக அல்லது குடும்பத்திற்காக வாழ்கிறோம் என்பதை யோசித்து பார்ப்போம். குடும்பத்திற்கு செய்ய வேண்டிய காரியங்களை செய்ய வேண்டும் அதை நேசிக்க வேண்டும்; ஆனால் இயேசுவுக்காக தான் வாழ வேண்டும். அதுதான் ஆண்டவருடைய பேரன்பு. **“ஆண்டவரே நான் இந்த உலகத்தில் உமக்காக தான் இருக்கிறேன்; நான் என்ன செய்ய வேண்டும்மென்று**

நீங்கள் சொல்லுங்கள்” என்று வாழ்வது தான் இயேசுவுக்காக வாழ்வது. நமக்கென்று என்னென்ன உள்ளதோ அதையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டு ஒப்புக்கொடுப்போம்; உண்மையாக யோசித்து உள்ளத்தை ஆராய்ந்துப் பார்த்து, இயேசுவுக்காக வாழ வேண்டுமென்று ஒப்புக்கொடுப்போம். ஆமென்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி

16/05/2020

நீங்கள் நம்பியபடியே உங்களுக்கு நிகழட்டும்

மத்தேயு 9:27-29 - இயேசு அங்கிருந்து சென்றபோது பார்வையற்றோர் இருவர், "தாவீதின் மகனே, எங்களுக்கு இரங்கும்" என்று கத்திக்கொண்டே அவரைப் பின்தொடர்ந்தனர். அவர் வீடு வந்து சேர்ந்ததும் அந்தப் பார்வையற்றோரும் அவரிடம் வந்தனர். இயேசு அவர்களைப் பார்த்து, "நான் இதைச் செய்ய முடியும் என நம்புகிறீர்களா?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், "ஆம், ஐயா" என்றார்கள். பின்பு அவர் அவர்களின் கண்களைத் தொட்டு, "நீங்கள் நம்பியபடியே உங்களுக்கு நிகழட்டும்" என்றார்.

இயேசு போகிற வழியிலே இரண்டு குருடர்கள் அவரை சந்திக்கிறார்கள். கூட்டம் நிறைய இருக்கிறது, இயேசுவை சுற்றிலும் நிறையக் கூட்டம் சூழ்ந்திருக்கிறது. இந்த கண் தெரியாத இரண்டு பேர், அந்த கூட்டத்திலே கத்திக் கொண்டே போகிறார்கள். என்ன கத்துகிறார்கள்? "தாவீதின் மகனே எங்களுக்கு இரங்கும்" என்று கத்தி கொண்டே இயேசுவை பின் தொடர்ந்தனர். அவர்கள் இரண்டு காரியங்கள் செய்கிறார்கள். ஒன்று, “தாவீதின் மகனே எங்களுக்கு இரங்கும்” என்றும், இரண்டாவது இயேசுவை பின் தொடர்ந்தனர்; இயேசு எங்கெல்லாம் சென்றாரோ அங்கெல்லாம் அவர்கள் பின் தொடர்ந்தனர். அவர்கள் எதுவரைக்கும் பின் தொடர்ந்தார்கள் என்றால், இயேசு கிறிஸ்துவின் வீடு வரைக்கும் சென்றார்கள். இயேசு கிறிஸ்து மாறாதவர் என்பதால் அப்பொழுது அந்த இருவரையும் இயேசு அழைத்து, "நான் இதை செய்ய முடியும் என நம்புகிறீர்களா?" என்று கேட்டார், அவர்களும், "ஆம் நம்புகிறோம் ஐயா" என்றார்கள்.

அதற்கு இயேசு, "நீங்கள் நம்புகிறபடி அப்படியே ஆகட்டும்" என்கிறார். உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது. இந்த குருடர்கள் செய்ததை யார் செய்தாலும் ஆண்டவர் அவர்களுக்கு இதே அற்புதத்தை செய்வார்.

குருடர்கள் செய்த முதல் காரியம்

இந்த குருடர்கள் செய்த முதல் காரியம், "தாவீதின் மகனே எங்களுக்கு இரங்கும்" என்று சொன்னார்கள்.

யூதர்களுடைய வாழ்க்கையிலே ஒரு நெருக்கடி இருந்தது, அதாவது இயேசு எல்லாருக்கும் நற்செய்தியை அறிவித்து கொண்டு வந்தார். அப்படி அறிவிக்கும் பொழுது யூதர்களிலே எல்லாரும் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. குறிப்பாக, யூத தலைவர்கள்,யூத குருக்கள் இயேசுவை ஏற்று கொள்ளவில்லை. அப்படி யாராவது இயேசுவை ஏற்று கொண்டால் கூட, அவர்களை ஊரை விட்டே ஒதுக்கி விட வேண்டும் என்றெல்லாம் அவர்கள் தீர்மானம் பண்ணி வைத்திருந்தார்கள். ஆனால், இந்த குருடர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், இயேசுவே, தாவீதின் மகனே" என்று சொல்கிறார்கள். யூதர்களுடைய திருச்சட்டப்படி, 'தாவீதின் மகனே' என்று சொல்லுவார்களேயானால், மெசியாவை மட்டும் தான் சொல்ல முடியும், ஏனென்றால், மெசியா தாவீதின் குலத்தில் பிறப்பார், தாவீதின் வாரிசாக இருப்பார்; அவர் தாவீதின் மகன். இந்த குருடர்கள் இயேசு என்று சொல்லாமல் தாவீதின் மகனே என்ற அடைமொழியை சொல்கிறார்கள். அந்த அடைமொழிக்கு அர்த்தம் என்னவென்றால், "நீர் மெசியா என்று நாங்கள் ஏற்று கொள்கிறோம்; நீர் தான் அபிஷேகம் பண்ணப் பெற்றவர்; நீர் தான் மீட்பர்; இதை நாங்கள் ஏற்று கொள்கிறோம்" என்பது பொருள். அதுதான் அதற்கு அர்த்தம். தாவீதின் மகன் என்றால், "நீர் வரப் போகிறவர், உலகின் மீட்பர், உலகின் பாவங்களுக்காக உம்மையே கையளிப்பீர்; இதையெல்லாம் நான் ஏற்று கொள்கிறேன்" என்று குருடர்கள் சொல்கிறார்கள். ஆகவே, இயேசுவை தன்னுடைய மீட்பராக, பாவத்திலிருந்து விடுதலை கொடுப்பவராக, வியாதியிலிருந்து விடுதலை கொடுப்பவராக, எல்லாவற்றிலிருந்தும் விடுதலை கொடுப்பவராக, இயேசுவை அவர்கள் ஏற்றுக் கொண்டு தான் இந்த வார்த்தைகளை சொல்கிறார்கள்.

குருடர்கள் செய்த இரண்டாம் காரியம்

இரண்டாவது அவர்கள் செய்த காரியம், இயேசுவை பின் தொடர்கிறார்கள். அவர் எங்கே போகிறாரோ அவரை பின்பற்றி போகிறார்கள். இயேசுவை நாம் பின் தொடர வேண்டும். இந்த இரண்டு காரியங்களை யார் செய்தாலும் ஆண்டவர் இப்படிப்பட்ட அற்புதங்களை அவர்களுக்கு செய்வார். **அதைத்தான் திருவிவிலியத்தில் எபிரேயர்13:8 ல், "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்" என்று வாசிக்கிறோம்.** அவர் மாறாதவர் என்று நாம் வாசிப்பதின் அர்த்தம் என்னவென்றால் இந்த குருடர்கள் எப்படி செய்தார்களோ, எப்படி நடந்தார்களோ, எப்படி இருந்தார்களோ, அதே போல யார் இருந்தாலும் இந்த குருடர்களுக்கு செய்த காரியங்களை அவர் செய்வார். ஏனென்றால் அவர் மாறாதவர், ஒருவருக்கு ஒன்று, இன்னொருவருக்கு வேறொன்று என்று செய்கிறவர் அல்ல. ஆண்டவரிடத்தில் பாரபட்சம் என்பது இல்லை. எல்லாருக்கும் ஒரே மாதிரி செய்கிறவர். அதுதான் அவரின் மாறாத தன்மை. அன்றைக்கு அவர்கள் செய்தது போல இன்றைக்கு நாமும் செய்தால், அதே அற்புதங்களை ஆண்டவர் நமக்கும் செய்வார்.

இந்த குருடர்கள் முதலாவது இயேசுவை 'மெசியா' என்று ஏற்றுக் கொள்கின்றனர். இரண்டாவது இயேசுவை பின் தொடர்கின்றனர். அவர்கள் பாதியிலே ஓடி விடவில்லை, கடைசி வரைக்கும் அவரை பின் தொடர்ந்தார்கள். அப்பொழுதுதான் ஆண்டவர் அவர்களை அழைத்து, "நான் இதை செய்ய முடியும் என நம்புகிறீர்களா?" என்று கேட்டார், அவர்களும், "ஆம் நம்புகிறோம் ஐயா" என்றார்கள். இந்த நம்பிக்கையை ஆண்டவர் இயேசுவின் மேல் நாம் வைக்க வேண்டும்.

"ஆண்டவர் இயேசு இந்த காரியத்தை எனக்கு செய்வார், அவர் இந்த காரியத்தை எனக்கென வைத்திருக்கிறார், அவர் எனக்காக வழக்காடுவார்" என அப்படி ஒரு விசுவாசம், ஒரு நம்பிக்கையை ஆண்டவர் மேல் நாம் வைக்க வேண்டும். ஆகவே தான் கேட்கிறார், "நான் உங்களுக்கு இதை செய்ய முடியும் என நம்புகிறீர்களா?", உடனே "ஆம் ஐயா" என்று சொல்கிறார்கள்; நாளைக்கு அல்ல, உடனே சொல்கிறார்கள்.

நாமும் அந்த குருடர்களை போல இருக்கிறோமா

நாமும் கூட பல பிரச்சனைகளில் இருக்கலாம், பல கஷ்டங்களில் இருக்கலாம், நம்மை பார்த்தும் ஆண்டவர் அதே கேள்வியை கேட்பார், "நான் உங்களுக்கு இதை செய்ய முடியும் என நம்புகிறீர்களா?". நிறைய பேர் என்ன சொல்வார்கள் என்றால், "அந்த குருடர்கள் இயேசுவை நேரில் பார்த்தார்கள், அதனால் அவர்களுக்கு விசுவாசம் இருந்தது, நாங்கள் நேரில் பார்க்கவில்லை; அதனால் அப்படி சொல்ல முடியவில்லை" என்று சொல்வார்கள். அதாவது, விசுவாசம் என்று சொன்னால், கண்டு விசுவாசிக்கிறவர்களை விட, காணாமல் விசுவாசிக்கிறவர்கள் பேறுபெற்றவர்கள். நேரில் பார்த்தாலும் பார்க்காவிட்டாலும் ஆண்டவரிடத்தில் விசுவாசம் தேவை. “நீர் எனக்கு இதை செய்கிறீர், இந்த காரியத்தை எனக்கு செய்ய முடியும்” என்ற நம்பிக்கை வந்தால் நம் மனதிற்குள் இருக்க கூடிய கவலை, பயம் எல்லாம் ஆண்டவரிடத்தில் இறக்கி வைத்து விடுவோம். “ஆண்டவர் பார்த்துக் கொள்வார், அவருக்கு இந்த அற்புதத்தை செய்ய முடியும், அவர் எனக்கு இந்த உதவியை செய்ய முடியும்” என்று நம்புவோம். நிறைய பேர் செய்ய முடியும் என்று சொல்வார்கள், முடியும் என்று சொல்லிவிட்ட பிறகு, உள்ளே ஒரு பயத்தையோ, கவலையையோ வைத்திருந்தோமானால், அவர் செய்ய முடியும் என்று நாம் நம்பவில்லை என்று அர்த்தம். நம்புகிறவர்கள், என்ன செய்வார்கள் என்றால், “ஆண்டவர் எனக்கு இதை செய்ய முடியும் என்றால் இனி அதைப் பற்றி நான் கவலைப்படமாட்டேன். ஏனென்றால், ஆண்டவரால் எனக்கு ஒரு அற்புதத்தை செய்ய முடியும்” என நம்புவார்கள்.

ஆண்டவர் மீது உண்மையான நம்பிக்கை வைக்க வேண்டும்

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே, பல பிரச்சனைகளுடன் நீங்கள் கடந்து போகலாம், பல நெருக்கடிகளுடன் நீங்கள் கடந்து போகலாம். முதலாவது, உங்கள் பிரச்சனைகளை ஆண்டவர் தீர்க்க முடியும் என நம்புங்கள். அப்படி நம்பிவிட்டோமென்றால், “ஆண்டவரே பிரச்சனைகளை உம்மால் தீர்க்க முடியும். ஆகவே, நான் இதை குறித்து கவலைப்படமாட்டேன்” என்று சொல்ல வேண்டும். இன்றைக்கு நிறைய பேர் வாயால்

சொல்கிறார்களே தவிர அதைக்குறித்து ஒரு பயம், கவலையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள், அது எப்பொழும் அவர்களை போட்டு வாட்டிக் கொண்டிருக்கிறது. இதை இறக்கி வைக்க தான் "நம்புகிறேன் ஐயா" என்று சொல்ல வேண்டும்.

ஒரு வேளை உங்கள் வீட்டிலே கணவன், வித்தியாசமான தவறான வழியிலே போய்க் கொண்டிருக்கலாம் அல்லது உங்கள் மனைவி, ஒரு திருந்தாத மனைவியாக இருக்கலாம் அல்லது பிள்ளைகள், திருந்தாத ஒரு பிள்ளைகளாக இருக்கலாம். ஆண்டவர் இதைப் பார்த்து கேட்கிறார், "நான் இதை செய்ய முடியும்" என நீங்கள் நம்புகிறீர்களா? ஆனால் எத்தனை பேர் "ஆம் ஐயா நம்புகிறேன்" என்று சொல்ல முடிகிறது. "ஆம் ஐயா நம்புகிறேன்" என்று நாம் சொன்னால், ஏன் பயப்பட வேண்டும்? ஏன் கவலைப்பட வேண்டும்? மாறாக கடவுள் அவர்களை மாற்றுவார்; ஆகவே நான் பயப்படமாட்டேன், கவலைப்படமாட்டேன் என்று சொல்வதும், நம்பிக்கை இழந்து போகாமல் காத்து கொள்வதும் தான் விசுவாசம். அந்த குருடர்கள் இரண்டு பேரும் இப்படிப்பட்ட விசுவாசத்தை தான் கொண்டிருந்தார்கள்.

நீங்கள் நம்பினால் நிச்சயமாய் கடவுளுடைய மகிமையை காண முடியும். ஏனென்றால், ஆண்டவர் மாறுகிறவர் அல்ல; பாரபட்சம் பார்க்கிறவர் அல்ல; ஆளுக்கொரு நீதி செய்கிறவரும் அல்ல; யார் அந்த நம்பிக்கையை வைத்தாலும் அவர்களுக்கு அற்புதங்களை செய்கிறவர். ஆகையால்தான் ஆண்டவர் சொல்கிறார், "நீங்கள் நம்பியபடியே உங்களுக்கு நிகழட்டும்". அதற்கு அர்த்தம் என்னவென்றால், நீங்கள் நம்பி அந்த பயத்தையும் கவலையையும் விட்டீர்களேயானால், உங்கள் நம்பிக்கையின்படியே ஆகட்டும். மாறாக, நீங்கள் பயந்து கொண்டே இருந்தால் என்ன நடக்கும்? அந்த பயத்தின் படியே ஆகட்டும் என்று அர்த்தம். இயேசு குருடர்களை கேட்கும் போது, "நான் நம்புகிறேன் ஐயா" என்று சொல்கிறார்கள். இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால், அவர்கள் நம்புகிறேன் என்று சொன்ன பிறகு, "சரி, உங்கள் கண்கள் பார்வை அடையட்டும்" என்று இயேசு சொல்லாமல், "நீங்கள் நம்புகிறபடி அப்படியே உங்களுக்கு நடக்கட்டும்" என்று இயேசு கூறுகிறார். இன்றைக்கு நாம் என்ன நம்பிக்கையை வைத்திருக்கிறோம், யோசித்து பாருங்கள்; "ஆண்டவரை நம்புகிறேன்" என்று சொல்கிறோம், ஆனால் அதே நம்பிக்கையை வைத்திருக்கிறோமா?

சில கவலைகளையும், பயங்களையும் உள்ளே வைத்து கொண்டுதான் இருக்கிறோம். அப்படியென்றால் “நீங்கள் நம்புகிறபடியே, கவலைப்படுகிறபடியே, பயப்படுகிறபடியே ஆகட்டும்” என்று இயேசு சொல்கிறார்.

நீங்கள் நம்பியபடியே உங்களுக்கு நிகழும்

உங்கள் குடும்பங்களிலே ஒருவரை கூட மாற்ற முடியாத அளவிற்கு கடவுள் பலவீனமாகவில்லை. யாரையும் சுகமாக்க முடியாத அளவிற்கு அவரது வல்லமை குறைந்து போகவில்லை. ஆண்டவர் நம்மை சுகமாக்கத் தான் விரும்புகிறார். அவர்கள் இயேசுவை பின் தொடர்ந்து, “இயேசுவே தாவீதின் மகனே எனக்கு இரங்கும்” என்று சொல்கிறார்கள். “நீர் மெசியா மீட்பர் என்பது எனக்கு தெரியும் எங்கள் மேல் இரக்கம் வையும்” என்று சொல்லும் போது ஆண்டவர், அதை கேட்கிறார் “நான் உங்களுக்கு இதை செய்ய முடியும் என்று நம்புகிறீர்களா?” உடனே அவர்கள் “ஆம் நம்புகிறோம்” என்றார்கள். அப்படியென்றால், உங்கள் கண்கள் திறக்கட்டும் என்று இயேசு சொல்லாமல், “நீங்கள் நம்பியபடியே உங்களுக்கு நிகழட்டும்” என்கிறார்.

எதை வேண்டுகிறோம்! எதை நம்புகிறோம்!

இன்றைக்கு பாருங்கள், நாம் ஆண்டவரிடம் எதை நம்புகிறோம், எதை விசுவாசிக்கிறோம்; உள்ளத்தில் பயத்தையே வைத்து கொண்டிருக்கிறோம். நிறைய கவலைகளையும், பயத்தையும் வைத்து கொண்டு “ஆண்டவரே நான் உம்மை நம்புகிறேன், நம்புகிறேன்” என்று சொல்கிறோம். ஆண்டவரால் அவருடைய வார்த்தையை மாற்றி சொல்ல முடியாது. ஆகவே, நாம் அந்த குருடர்களைப் போல விசுவாசம் உள்ளவர்களாக மாறி ஆண்டவரை பிடிக்கும் போது, ஆண்டவர் அந்த அற்புதங்களை செய்கிறார். நிறைய பேர் ஒன்றை ஜெபிப்பார்கள்; ஆனால், இன்னொன்றை தான் விசுவாசிப்பார்கள். "Pass" பண்ண வேண்டுமென்று ஜெபிப்பார்கள், ஆனால் "Fail" ஆகி விடுவோம் என்று தான் நம்புவார்கள். கணவர் திருந்த வேண்டுமென்று ஜெபிப்பார்கள் ஆனால், திருந்தமாட்டார் என்பதை தான் நம்புவார்கள்.

ஒரு கூட்டத்தில், சனிக்கிழமை மாலை செய்தியை முடித்துவிட்டு நான் வந்தேன், அப்பொழுது ஒரு பெண் என்னிடம் வேகமாக வந்து, "Brother இன்றைக்கு என் கணவருடைய சம்பள நாள், அவர் ஒரு குடிகாரர், ஆகவே அவர் சம்பளத்தை வாங்கி குடித்து விட்டு வந்து சண்டை போடுவார்; ஆகையால் நான் சீக்கிரம் வீட்டிற்கு போக வேண்டும்" என்று சொன்னார். இந்த பெண் எதை நம்புகிறார் என்று யோசித்து பாருங்கள். அவர் குடிகாரர்; இன்றைக்கு சம்பள நாள் ஆகவே குடித்துவிட்டு தான் வருவார், அதனால் சண்டை நடக்கும்" என்பதை தான் நம்பினார்கள். ஆலயத்தில் அவ்வளவு நேரம் உட்கார்ந்து இவர்கள் என்ன ஜெபித்திருப்பார்கள்?

“ஆண்டவரே இனி அவர் குடிக்க கூடாது, அவர் எப்படியாவது மனம் திரும்ப வேண்டும்” என்று ஜெபம் பண்ணுகிறார்கள். இதற்கு இயேசு அவர்களை பார்த்து என்ன சொல்வர் என்று யோசித்து பாருங்கள்? உன் கணவன் குடிக்க மாட்டார் என சொல்வாரா? அவர் நம்மை பார்த்து கேட்கிறார், “நான் உங்களுக்கு இதை செய்ய முடியும் என நம்புகிறீர்களா?”. ஆலயத்தில் உட்கார்ந்து “ஆண்டவரே நான் உம்மை தான் நம்பி இருக்கிறேன்” என்று தான் சொல்வார்கள். ஆனால், அவர்கள் எதை நம்பினார்கள்? “அவர் இன்றைக்கு குடித்துவிட்டு வருவார், வீட்டில் சண்டை நடக்கும்" என்று தான் நம்பினார்கள். ஏனெனில், உள்ளத்தில் அந்த பயம், அந்த கவலை தான் இருக்கிறது. இன்றைக்கு நிறைய பேர் ஜெபிக்கும் பொழுது அப்படி தான் ஜெபிக்கிறோம். ஆனால், வேறு ஒரு நம்பிக்கையை தான் வைத்து கொண்டிருக்கின்றோம். “வீட்டில் உள்ளவர்கள் திருந்தமாட்டார்கள், யார் திருந்தினாலும், என் மனைவி திருந்தமாட்டாள், கடவுளே சொன்னால் கூட அவள் திருந்தமாட்டாள், என் வீட்டுக்காரர் திருந்தமாட்டார்” என இப்படி ஒரு எண்ணமோ, பேச்சோ நாம் வைத்துக் கொண்டு எவ்வளவு ஜெபம் பண்ணினாலும் பதில் வராது. ஏனென்றால், குருடர்கள் ஆண்டவரிடத்தில், கேட்கும் பொழுது, ஆண்டவர் “உங்கள் கண்கள் திறக்கட்டும்” என்று சொல்லவில்லை. “நீ நம்பியபடியே உனக்கு நிகழட்டும்” என்று தான் இயேசு கூறுகிறார்.

நம்பிக்கையை, வார்த்தையால் தான் வெளிப்படுத்த முடியும்

உங்கள் ஜெபத்தை கேட்டு தான் ஆண்டவர் பதில் சொல்கிறார். “நான் இதை செய்ய முடியும் என்று நம்புகிறாயா” என்று தான் கேட்கிறார்,

“நம்புறேன் ஆண்டவரே” என்று சொல்வோமானால், “அந்த நம்பிக்கையின் படியே ஆகட்டும்” என்கிறார். நம் உள்ளத்தில் இருக்க கூடிய பயம் கவலைகளால், நிறைய குடும்பங்களில் கணவன், மனைவியை பார்த்து சொல்வது, “ஆண்டவரே வந்தாலும் நீ மாறமாட்டாய்”, மனைவி கணவனை பார்த்து சொல்வது, “ஆண்டவரே வந்தாலும் உங்களை திருத்த முடியாது”. அப்படியென்றால், நீங்கள் என்ன விசுவாசிக்கிறீர்கள் என்று யோசித்து பாருங்கள்.

தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை; ஆண்டவர் சர்வ வல்லவர்; அவரால் முடியாத காரியம் ஒன்றுமில்லை; அவர் ஒரே ஒரு வார்த்தை சொன்னால் கூட எப்படிப்பட்ட கடின இருதயமும் உருகிய மனமாக மாறும். அந்த நம்பிக்கையை ஆண்டவர் மேல் வையுங்கள். "இவர்கள் திருந்த மாட்டார்கள், அவர்கள் மாற மாட்டார்கள், இது சரி ஆகாது, இந்த வீட்டை விட்டு ஒரு நாளும் பிரச்சனை போகாது" என்றெல்லாம் பேசக் கூடாது. ஏனென்றால், நாம் பேச கூடிய வார்த்தைகளை நம் உள்ளத்தின் நிறைவிலிருந்தே பேசுகிறோம். நல்ல வார்த்தைகள், ஒரு விசுவாச வார்த்தைகள் நாம் பேசும் போது, ஆண்டவர் சொல்கிறார் “உன் நம்பிக்கையின் படியே உனக்கு ஆகட்டும்”. அதனால் தான் ஆண்டவர் கூறுகிறார், "நான் இதை உனக்கு செய்ய முடியும் என்று நம்புகிறீர்களேயானால், உங்கள் நம்பிக்கையின் படியே ஆகட்டும்". இதை நம்புவோமானால் என்ன வார்த்தைகளை நாம் பேசுவோம்? இயேசுவை பக்கத்திலேயே தான் வைத்திருக்கிறோம், எல்லா நேரத்திலும் அவர் நம்மோடு இருக்கிறார். நம்முடைய நம்பிக்கையை நம் வார்த்தையால் தான் சொல்ல முடியும். எல்லா நேரங்களிலும் அந்த வார்த்தையை சொல்லுங்கள். தீய வார்த்தைகளை சொல்லாதீர்கள். அந்த பெண், ஆலயத்தில் உட்கார்ந்து கொண்டு அப்படி அழுது ஜெபித்தார்கள். ஆனால் வெளியே வந்த பொழுது கணவன் குடித்துவிட்டு சண்டை போடுவார் என்று விசுவாசித்தார்கள். அப்படி இருந்தால் அற்புதம் எப்படி நடக்கும்?

நம் உள்ளத்தை ஆராய்ந்து பார்ப்போம்

இன்று உங்கள் உள்ளத்தை கேட்டுப் பாருங்கள்.உண்மையாகவே நான் ஆண்டவரை நம்புகிறேனா? இன்றைக்கும் ஆண்டவர் நம்மை

பார்த்து கேட்கிறார், “நான் இதை செய்ய முடியும் என நம்புகிறீர்களா?” அவரை நம்பினால் நம் கவலை, பாரமெல்லாம் ஆண்டவரிடத்திலே இறக்கி வைத்துவிடுவோம். இனி பயப்படாமல், இப்படிப்பட்ட வார்த்தைகளை பேசாமல், பழைய காரியங்களை நினைக்காமல் நாம் அவரை நம்பினோமானால், ஆண்டவர் எல்லாவற்றையும் புதிதாக்கி விடுவார். யோசித்து பாருங்கள். விவிலியத்தில், ‘தேவன் மாறாதவர்’ என்று தான் போடப்பட்டிருக்கிறது. இந்த பெண் அழுது ஜெபம் பண்ணுவதினாலே ஆண்டவர் மாற முடியுமா? மாற முடியாது. அவருடைய வார்த்தையை மாற்ற முடியாது? விண்ணும் மண்ணும் ஒழிந்து போனாலும் அவரது வார்த்தைகள் ஒழிந்து போகாது. ஆகவே, அவரது வார்த்தையையும் மாற்ற முடியாது, அவரையும் மாற்ற முடியாது. அந்த குருடர்கள் செய்தது போல் நாமும் செய்தோமானால் நமக்கும் ஆசீர்வாதம் வரும். அந்த குருடர்கள் இரண்டு காரியங்ளை சொல்கிறார்கள்; ஆண்டவர் இரங்கி தான் கேட்கிறார், “நான் இதை செய்ய முடியும் என்று நம்புகிறீர்களா?” “நம்புகிறேன்” என்றார்கள். ஆகவே நம்புகிறபடியே உங்களுக்கு நிகழட்டும் என்று சொல்லும் போது அவர்கள் பார்வை அடைகிறார்கள். இன்றைக்கு நிறைய பேர் நம்பிக்கை வைத்திருக்கிறேன் என்று சொல்கிறார்கள்; ஆனால் வேறொன்றை நம்புகிறார்கள். சிலர் நம்புகிறார்கள், அந்த நம்பிக்கையின் படி அவர்களுக்கு நடக்கிறது, சிலர் நம்புவதில்லை, உள்ளே பயத்தையும், கவலையையும் வைத்திருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் நம்பிக்கையின்படி அது நடக்கவில்லை. இன்றைக்கு நம்முடைய விசுவாசத்தை குறித்து யோசித்து பார்ப்போம்.

தேவன் யாவற்றையும் செய்ய வல்லவர்

உன்னால் உன் கணவரை மாற்ற முடியாது(You can’t change your husband). தேவன் உன் கணவனை மாற்ற வல்லவர், தேவன் உன் மனைவியை மாற்ற வல்லவர், தேவன் உன் பிள்ளைகளை மாற்ற வல்லவர், தேவன் உன் குடும்பத்தை ஆசிர்வதிக்க வல்லவர். இன்றைக்கு உங்களை மகிழ்ச்சியான குடும்பமாக நிலைநிறுத்த தேவன் வல்லவராக இருக்கின்றார். அந்த விசுவாசத்தை ஆண்டவரிடத்திலே வையுங்கள், அவர் ஒருபோதும் கைவிடுகின்ற

தெய்வம் அல்ல. ஆகையால், நம்பிக்கை முழுவதையும் அவர் மேல் வையுங்கள். கொஞ்சம் உங்களுக்குள் மனத்தடுமாற்றம் வரும்போதெல்லாம், "ஆண்டவரே, நான் உம்மை நம்புகிறேன்" என்று சொல்லுங்கள். தாவீது அப்படித்தான் சொல்லுகிறார், "நான் பயப்படுகிற நாளிலே ஆண்டவரே உம்மை நம்புவேன்" என்று சொல்லுகிறார். இப்படித்தான் நாமும் இருக்க வேண்டும். நம்மிடத்தில் சின்ன பயம் வரும்போதுகூட , "ஆண்டவரே, உம்மீது நம்பிக்கை வைக்கிறேன், நீரே நம்பிக்கைக்கு உரியவர்" என்று சொல்வோம். அப்படி நாம் சொல்லும்போது ஆண்டவரும் நம்மை பார்த்து சொல்லுவார், "உனது நம்பிக்கையின் படியே உனக்கு ஆகட்டும்". ஒரு அற்புதம் உங்கள் வாழ்க்கையில் நடக்கும்.

உங்கள் வாழ்க்கையில் கூட சில பாவங்கள் இருக்கலாம். ஆகவே, உங்களையே நீங்கள் நொந்துக்கொள்ள வேண்டாம், “நான் இந்த பாவத்தை விடவே முடியாது, என்னால் திருந்தவே முடியாது, எல்லாவற்றையும் விட்டாலும் இந்த தீய கெட்டப் பழக்கத்தை மட்டும் என்னால் விட முடியாது”. இதையெல்லாம் சொல்லிக் கொண்டே இருக்காதீர்கள். அவரை நம்புங்கள்; அவர் உங்களை, உங்கள் பாவத்தில் இருந்து விடுவிப்பார் என்று நம்புங்கள்; அவர் உங்களை குடிப்பழக்கத்தில் இருந்து குணமாக்க வல்லவர்; புகை பிடிக்கின்ற பழக்கத்திலிருந்து உங்களை குணமாக்க வல்லவர்; இச்சைக்குரிய பாவ பழக்கத்தில் இருந்து இயேசு உங்களை குணமாக்க வல்லவர். அந்த நம்பிக்கையை அவர் மேல் வையுங்கள்.

இன்றைக்கு நீங்கள் ஆண்டவரை பார்த்து "என் மேல் இரக்கமாயிரும்" என்று கேட்கும் போது அவரும், "நான் உனக்கு இதை செய்யமுடியும் என்று நம்புகிறாயா" என்று கேட்பார்; அப்பொழுது, "ஆம், ஆண்டவரே என்னுடைய எல்லா தீய பழக்கத்திலுருந்தும் விடுதலையாக்க உம்மால் முடியும்" என்று சொல்லுங்கள். இயேசுவாலே முடியும், என் வாழ்க்கையில் என்னை விடுதலையாக்கின தெய்வம், உங்களையும் விடுதலையாக்க வல்லவர், ஆமென். அப்படி சொல்லி அந்த நம்பிக்கையையே அவர் மேல் வையுங்கள்; ஆனால், “சரி நம்புகிறேன்” என்று சொல்லிவிட்டு, உள்ளே ஒரு பயத்தை வைத்து இருக்காதீர்கள்.

“ஐயோ, நான் இந்த பாவத்தில் விழுந்துவிடுவேனே, சீரியல் (Serial) பார்க்காமல் இருக்க முடியாதே, சினிமாவை பார்க்காமல் இருக்க

முடியாதே, செல்லை (cell)-ஐ வைத்து கெட்ட காரியம் பார்க்காமல் இருக்க முடியாதே" என இப்படி உங்களுக்குள்ளேயே நொந்து போக வேண்டாம். இதற்கு பதிலாக, இயேசுவின் மேல் நம்பிக்கை வையுங்கள் அவர் உங்களை விடுதலை ஆக்குவார். அவர் உங்கள் பாவ பழக்கங்களிலிருந்து உங்களை விடுதலை ஆக்குவார். அவர் உங்களுக்கு ஓர் புதிய வாழ்க்கையை கொடுக்கின்றார். இன்றைக்கும் ஆண்டவர் நம்மை பார்த்து கேட்கின்றார், "மகனே, மகளே, நான் உனக்கு இதை செய்ய முடியும் என நம்புகிறாயா". முழு இருதயத்தோடு ஆண்டவரை பார்த்து சொல்லுவோம், உங்கள் வாழ்க்கை தலைகீழாக மாறும், உங்கள் வாழ்க்கை பரிசுத்தமாய் மாறும், உங்கள் வாழ்வு ஓர் ஆசீர்வாதமான வாழ்வாக மாறும். இன்றைக்கு ஒப்புக்கொடுப்போம்.

விசுவாச வார்த்தைகளை அறிக்கையிடுவோம்

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நோக்கி பார்ப்போம். இதுவரைக்கும், நாம் ஜெபித்து இருக்கலாம், அவிசுவாசத்தோடு, நம்பிக்கை இல்லாமல் ஒரு பயத்தோடு ஜெபித்திருக்கலாம். கவலைக்கு இடம் கொடுத்து வாழ்ந்திருப்போமானால் இந்த வேளையிலே, "ஆண்டவரே என்னை மட்டுமல்ல என் குடும்பத்தையே நீர் மாற்ற வல்லவர், நான் நம்புகிறேன். என் வாழ்க்கையிலே இந்த காரியங்களை எல்லாம் நீர் செய்ய முடியும். இன்று நான் அதை நம்புகிறேன், என் பாவ பழக்கங்களிலிருந்து என்னை விடுதலை ஆக்க உம்மால் முடியும் என்பதை நான் நம்புகிறேன். என் கணவனோ மனைவியோ பிள்ளைகளோ எல்லாரையும் நீர் மாற்ற வல்லவர் என்பதை நான் நம்புகிறேன். என் குடும்பம் ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பமாக உம்முடைய சமூகத்தில் இருக்க போகிறது இதை நான் நம்புகிறேன். இதை மனமார நம்புகிறேன். இனி இதை குறித்து நான் பயப்படமாட்டேன். நீர் என்னை தேர்ந்து கொண்டீர், ஒருபோதும் என்னை கைவிடமாட்டீர்" என்று ஒப்புக்கொடுப்போம். "யோசுவா சொன்னது போல "நானும் என் வீட்டாரும் உமக்கு ஊழியம் செய்வோம்". அப்படி என்னையும் என் குடும்பத்தையும் நீர் அசீர்வதிக்க வல்லவர்" என்று ஜெபிப்போம்.

இயேசுவுக்கே! புகழ் இயேசுவுக்கே நன்றி!

05/05/2020

பிள்ளைகளுக்குரிய உரிமை

கலாத்தியர் 4:6,7: நீங்கள் பிள்ளைகளாய் இருப்பதால் கடவுள் தம் மகனின் ஆவியை உங்கள் உள்ளங்களுக்குள் அனுப்பியுள்ளார்; அந்த ஆவி "அப்பா, தந்தையே ", எனக் கூப்பிடுகிறது. ஆகையால் இனி நீங்கள் அடிமைகளல்ல; பிள்ளைகள்தாம்; பிள்ளைகளாகவும் உரிமைப்பேறு உடையவர்களாகவும் இருக்கிறீர்கள். இது கடவுளின் செயலே.

அடிமைகள் யார்?

பாவத்திற்கோ, திருச்சட்டத்திற்கோ அடிமையாய் இருப்பவர்கள் அடிமைகள் ஆவர்.

பிள்ளைகள் யார்?

தந்தையின் சொத்துக்களுக்கும் செல்வங்களுக்கும் வாரிசாக இருப்பவர்கள் பிள்ளைகள் ஆவர்.

கடவுள் நமக்கு தந்தையானது எவ்வாறு?

கலாத்தியர் 4:6 - கடவுள் இயேசு கிறிஸ்துவுக்குள் இருந்த ஆவியை நம் உள்ளங்களுக்குள் அனுப்பியுள்ளார். அந்த ஆவியினாலே தான் நம்மை நேசிக்கிற நமக்காக ஜீவனையே கொடுக்கிற தகப்பனைப் போல உணர்ந்து அவரை அப்பா என்று கூப்பிடுகிறோம். இயேசு எப்படி பாசத்தோடு அப்பா என்று கூப்பிடுகிறாரோ அதே பாசத்தோடு உரிமையோடு கூப்பிடுவதற்கு அந்த ஆவி கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆதலால், அடிமைகளாய் இராமல் கடவுளுடைய சொத்துக்களுக்கும் செல்வங்களுக்கும் உரிமை உடையவர்கள் ஆகிறோம். இது கடவுளின் செயலே என்கிறார் பவுல். இது மிகப்பெரிய அற்புதம்.

கலாத்தியர் 4:1-5 நான் சொல்வது இதுவே: தந்தையின் சொத்து அனைத்துக்கும் உரிமையுடையோர் சிறுவராய் இருக்கும் வரை அவர்களுக்கும் அடிமைகளுக்கும் வேறுபாடு எதுவும் இல்லை; தந்தை குறித்த நாள் வரும் வரை அவர்கள் மேற்பார்வையாளர்களுக்கும் பொறுப்பாளர்களுக்கும் கீழ்ப்பட்டிருக்கிறார்கள். அவ்வாறே, நாமும் சிறுவர்களாய் இருந்த போது உலகின் பஞ்சபூதங்களுக்கு அடிமைப்பட்டிருந்தோம். ஆனால் காலம் நிறைவேறிய போது திருச்சட்டத்திற்கு உட்பட்டிருந்த நம்மை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும் திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார்.

பாவம், திருச்சட்டம் ஆகிய இரண்டுக்கும் அடிமையாய் இருந்த நம்மை விடுதலையாக்க கடவுள், இயேசுவை திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் பெண்ணிடம் பிறந்தவராகவும் அனுப்பினார். பிள்ளைகளாக நாம் ஒரு மாற்றம் அடைவதற்கு தம் மகனின் ஆவியை நமக்குள் வைத்து சொத்தெல்லாம் நாம் உரிமை கொண்டாடும் அளவுக்கு எழுதி வைக்கிறார். இது மேன்மையான ஒன்று.

அடிமை நிலையில் வாழக்கூடிய பிள்ளைகள்

இந்த காரியம் நம்முடைய ஆவியில் நடப்பதால் உடலாலோ மனதாலோ நிறைய பேர் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறார்கள். பிள்ளைகளாக்கக் கூடிய செயல்கள் நம் ஆவியில் தான் நடக்கும். உடலில் ஆத்துமாவில் நடப்பதை நம்மால் ஓரளவு புரிந்து கொள்ள முடியும். அதற்கும் மேலாக ஆவி இருக்கிறது. ஆவியில் நடப்பதை மாம்சத்தில் புரிந்து கொள்ள முடியாதவர்களாக இருப்பதால் இதன் மேன்மையை புரிந்து கொள்ள முடிவதில்லை. ஆனால் பவுல், ஆவிக்குரியவராக இருப்பதால் இதைக் கண்டு எழுதுகிறார். இயேசு கிறிஸ்துவின் பாடுகள், மரணம் மூலமாய் ஆவியிலே தேவன் செய்கிற இந்த காரியங்களை புரிந்து கொள்ளவோ அறிந்து கொள்ளவோ பக்குவம் இல்லாத சிறுவராய் இருக்கும் வரைக்கும் பிள்ளைகளுக்கும் அடிமைகளுக்கும் வேறுபாடு இல்லை(கலா4:1).

மேலும், **உரோமையர் 8:15-17 - மீண்டும் அச்சத்திற்கு உள்ளாக்கும் மனப்பான்மையை நீங்கள் பெற்றுக் கொள்ளவில்லை; மாறாக கடவுளின் பிள்ளைகளுக்குரிய மனப்பான்மையை பெற்றுக்**

கொண்டீர்கள். அதனால் நாம், "அப்பா, தந்தையே" என அழைக்கிறோம். நாம் இவ்வாறு அழைக்கும் போது நம் உள்ளத்தோடு சேர்ந்து தூய ஆவியாரும் நாம் கடவுளின் பிள்ளைகள் என்பதற்கு சான்று பகர்கிறார். நாம் பிள்ளைகளாயின் உரிமைப்பேறு உடையவர்களாக இருக்கிறோம். ஆம், நாம் கடவுளிடமிருந்து உரிமைப் பேறு பெறுபவர்கள், கிறிஸ்துவின் பங்காளிகள்.

பயத்திற்கு உள்ளாகக் கூடிய ஆவியை கொடுக்கவில்லை; அதற்கு மாறாக பிள்ளைகளாக கூடிய ஆவியை பெற்றிருக்கிறோம். இயேசு கிறிஸ்துவின் ஆவி நமக்குள் வரும் போது தேவனாலே நாம் தத்தெடுத்துக் கொள்ளப்படுகிறோம். இது நம் ஆவியில் நடக்கிறது. இப்படி நாம் 'அப்பா தந்தை' என்று அழைக்கும் போது நம் உள்ளத்தோடு(Spirit in English Bible) சேர்ந்து கடவுளின் ஆவியார் சான்று பகர்கிறார்.

உரிமையை ஏன் பெற்றுக்கொள்ள முடியவில்லை

வாக்குறுதிகள் எல்லாமே ஆவிக்குரியதாய் இருப்பதால் உடலிலோ உணர்ச்சியிலோ அறிவு சார்ந்த விதமாவோ புரிந்துகொள்ள முடியாததால், வாக்குறுதிகளை சந்தேகப்படுகிறோம். ஆனால், கடவுளின் வாக்குறுதிகள் எல்லாம் நூற்றுக்கு நூறு பரிசோதிக்கப்பட்ட, புடமிடப்பட்ட வாக்குறுதிகள். எந்த அளவுக்கு ஆவியில் உணர்கிறோமோ அந்த அளவு விசுவாசம் பெருகும். விசுவாசம் பெருகப் பெருக ஆவிக்குரியது அத்தனையும் உலகப் பிரகாரமாக நம் வாழ்க்கையில் வெளிப்படும்.

1கொரிந்தியார் 2:14 - மனித இயல்பை மட்டும் உடைய ஒருவர் கடவுளின் ஆவி கூறியவற்றை ஏற்றுக்கொள்வதில்லை.

உங்கள் ஆவியில், 'நீ கடவுளின் பிள்ளை' என்று கடவுள் சான்று கொடுக்கிறார். இதை ஆவியில் கேட்க ஆரம்பித்து விட்டால் நம் வாழ்க்கை வேறு விதமாக மாறிவிடும். ஆவியில் கேட்க முடியாத போது கடவுளின் வாக்குறுதியில் ஆழமான விசுவாசம் இல்லாமல் பல நேரம் குறைவு படுகிறோம். பிள்ளை என்று சொல்வதால் அவருடைய சொத்து, செல்வம், அற்புதங்கள், கொடைகள் எல்லாவற்றிற்கும் வாரிசாக மாறி விடுகிறோம். இது ஒரு பெரிய பாக்கியம். இதை உணர உணர வாழ்க்கை மேம்பட்டு விடும்.

உதாரணமாக கிராமத்தில் வளர்ந்த ஒரு ஏழையை அரசன் தத்தெடுத்தார் என்றால் அவன் அந்த அரண்மனை சூழலுக்கு ஏற்ப தன்னை மாற்றி நடந்து கொள்ளவேண்டும். அதேபோல் கடவுள் நம்மை சொந்தப் பிள்ளைகளாக்கி மேன்மையான உரிமைப் பேறு கொடுக்கிறார். இதை சரியாக உணர்ந்து கொண்டால் தேவனை நினைத்து தேவனுக்குள்ளே எப்பொழுதும் சந்தோஷமாய் இருப்போம். கடவுளுடைய எல்லா நன்மைக்கும் வாரிசாக மாறிவிடுவோம். இது நாமாக தெரிந்துகொள்ளவில்லை. இது கடவுளின் செயல்.

இவ்வளவு பெரிய பாக்கியத்தை ஆண்டவர், எங்கேயோ கிடந்த என்னை தூக்கி வந்து கொடுத்திருக்கிறார் என்பதை உணர உணர எப்போதும் நன்றி சொல்பவர்களாக மாறி விடுவோம். இதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை.

இன்று அநேகர் முணுமுணுப்பவர்களாக இருந்து கொண்டிருக்கிறோம். காரணம் பிள்ளைகளுக்கு உரிய உரிமையை அறிந்து கொள்ளவோ புரிந்து கொள்ளவோ இல்லை. இந்த பாக்கியத்தை புரிந்துகொண்டால் முணுமுணுப்பை அகற்றி இந்த ஒரு பாக்கியத்திற்காக எந்த ஒரு கிரயத்தையும் கடவுளுக்கு செலுத்த நாம் தயாராக இருப்போம். நன்றி சொல்ல ஆரம்பித்து விடுவோம்.

இந்த உலகத்தின் பார்வையில் அற்பமாக, யாரும் சட்டை பண்ணாதவர்களாக, சொந்த குடும்பத்தாரே ஒதுக்கி வைத்திருக்கலாம்; சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களாக இருக்கலாம்; ஆனால், தேவன் நம்மை சொந்த பிள்ளைகளாக, உரிமை உடையவர்களாக, எல்லா சொத்துக்கும் வாரிசாக தேர்ந்து கொண்டார் என்றால் நாம் எவ்வளவு நேர்மையுள்ளவராக, நன்றியுள்ளவராக, உண்மையுள்ளவராக நம்மை தாழ்த்தி இருக்க வேண்டும்.

மோசே ஆண்டவரின் வீட்டில் உண்மை உள்ளவராக இருந்தார். நாமும் அப்படி இருக்க ஆண்டவரிடத்தில் ஒப்புக் கொடுப்போம்.

தந்தை மகன் தூய ஆவிக்கு மகிமை உண்டாவதாக!

26/04/2020

புளிப்புமாவு

மத்தேயு 13:33 - அவர் அவர்களுக்குக் கூறிய வேறு ஓர் உவமை; "பெண் ஒருவர் புளிப்புமாவை எடுத்து மூன்று மரக்கால் மாவில் பிசைந்து வைத்தார். மாவு முழுவதும் புளிப்பேறியது. விண்ணரசு இப்புளிப்புமாவுக்கு ஒப்பாகும்".

மாற்கு 4:26-29 - தொடர்ந்து இயேசு, "இறையாட்சியைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம்; நிலத்தில் ஒருவர் விதைக்கிறார். அவர் எதுவும் செய்யாமலே நாள்கள் நகர்ந்து செல்கின்றன. அவருக்குத் தெரியாமல் விதை முளைத்து வளருகிறது.
முதலில் தளிர், பின்பு கதிர், அதன் பின் கதிர் நிறைய தானியம் என்று நிலம் தானாகவே விளைச்சல் அளிக்கிறது. பயிர் விளைந்ததும் அவர் அரிவாளோடு புறப்படுகிறார்; ஏனெனில் அறுவடைக் காலம் வந்துவிட்டது" என்று கூறினார்.

இந்த உவமையில் தானாகவே விதை வளர்கின்றது. முதலில் தளிர், பின்பு கதிர், அதன் பின்பு தானியம் என்று நிலம் தானாகவே விளைச்சலை அளிக்கின்றது. பயிர் விளைந்ததும் அவர் அரிவாளுடன் புறப்படுகிறார். ஏனெனில் அறுவடை காலம் வந்துவிட்டது.

அதேபோன்று புளிப்பு மாவை பிசைந்து வைக்கும் போது, அது தானாகவே எல்லா மாவையும் புளிப்பு மாவாக மாற்றிவிடும்.

இந்த இரண்டு உவமைகளிலும் முக்கியமான மூன்று காரியங்கள் உள்ளன என இறையியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

1. SLOW - வேலை மிகவும் தாமதாக நடக்கும். வேலை நடக்கும், ஆனால், தாமதமாக நடக்கும். அந்த புளிப்பு மாவு மாதிரி நாமும் எல்லாரையும் புளிக்க வைக்க வேண்டும். புளிக்க வைக்க வேண்டுமென்றால், அவர்களும் நம்மை போல கிறிஸ்துவுக்குள்ளே உண்மை உள்ளவர்களாக மாற்ற வேண்டும். கிறிஸ்துவின் சாராம்சம்,

கிறிஸ்துவின் கொள்கை, உண்மையான அன்பு அவர்கள் உள்ளத்திலே வரும் படி நாம் உழைக்க வேண்டும். ஆனால், அந்த வேலை பொறுமையாக நடக்க வேண்டும். ஊழியத்திலே ஒரு நாளும் அவசரப்படக் கூடாது. ஊழியம் செய்கிறவர்கள் ஊழியத்தை எப்பொழுதும் நிதானமாக செய்ய வேண்டும். நிறைய பேர் ஊழியத்தில் அவசரப்பட்டு அதை இழந்து போகிறார்கள். ஊழியம் இல்லாமல் செய்து விடுகிறார்கள். புளிப்பு மாவை போல மெதுவாக செய்ய வேண்டும்.

2. STEADY - எப்போதும் வேலை நடந்து கொண்டே இருக்கிறது. வேலை நடந்து கொண்டே இருக்கிறது. ஆனால் தொடர்ச்சியாக நடக்கின்றது. சில நாள் ஊழியம் செய்வேன் பிறகு நிறுத்தி வைப்பேன் என்ற பேச்சிக்கு இடமில்லை. ஊழியத்தை இடைவிடாமல் தொடர்ச்சியாக செய்ய வேண்டும்.

3. HIDDEN - வேலைகள் மறைவாக நடக்கின்றது. நடக்கிற வேலைகள் கண்ணுக்கு தெரியவில்லை ஆனால், நடந்து கொண்டே இருக்கிறது. வேலைகள் மறைவாக இருக்கிறது. பொதுவாக மற்ற சபைகளிலே விளம்பரப்படுத்தவோ அதை பெரிதுப்படுத்தவோ செய்கிறார்கள். ஆனால், இயேசு கிறிஸ்துவின் போதனைகளில், நாம் செய்யக்கூடிய ஊழியங்கள் மறைவாக செய்ய வேண்டும். நாம் பல வகைகளில் ஊழியம் செய்தாலும் தம்பட்டம் அடிக்காமல், அதை மறைவாக செய்ய வேண்டும். எதற்கு தாமதமாக பண்ண வேண்டும் எதற்கு வேகமாக பண்ண வேண்டும். நம்மை சரி செய்ய வேகமாக பண்ண வேண்டும். ஆனால் நிறைய பேர் தங்களை சரி செய்ய, மன்னிப்பு கேட்க, ஜெபிக்க, நன்மையான காரியங்களை செய்ய, தீய பழக்கத்தை விட தான் தாமதம் பண்ணுவார்கள். ஆனால், ஊழியத்தில் மிக வேகமாக இருப்பார்கள். அது தவறு ஊழியம் நடைபெற வேண்டும். ஆனால், பொறுமையாக நடைபெற வேண்டும், நடைபெற்று கொண்டே இருக்க வேண்டும், மறைவாக நடக்க வேண்டும்.

நாம் மனம்மாற அவசரம்

யாக்கோபு 1: 19 - என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, இதைத் தெரிந்து கொள்ளுங்கள்; ஒவ்வொருவரும் கேட்பதில் வேகமும்

பேசுவதிலும் சினங்கொள்வதிலும் தாமதமும் காட்டவேண்டும்.

இறைவார்த்தையை கேட்டு அதை கடைப்பிடிப்பதில் தான் வேகம் வேண்டும். ஆனால், பொதுவாக எல்லாம் தலைகீழாக நடக்கின்றது. நமக்கு சட்டென்று கோபம் வருகின்றது, சட்டென்று சண்டை போடுகின்றோம். இப்படி தாமதமாய் செய்ய வேண்டியவற்றை சட்டென்று, உடனடியாக செய்வது பிரச்சனையே. ஊழியத்தில் வேகம், அவசரம் இருக்க கூடாது. நாம் எப்படி மனம்மாற நேரம் தேவைப்பட்டது. நாம் மனம்மாறினால் கூட ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர எவ்வளவு காலம் எடுத்துக்கொண்டோம், அதே போலத்தான் மற்றவர்களும் எடுத்துக்கொள்வார்கள். அங்கே பொறுமையை கடைபிடிக்க வேண்டும். ஆனால், தொடர்ந்து வேலை செய்துகொண்டே இருக்கவேண்டும். சிலர் வாரத்திற்கு ஒரு முறை, மாதத்திற்கு ஒரு முறை, இன்னும் சிலர் தவக்காலத்தில் மட்டும் தான் ஊழியம் செய்வர். ஆனால், ஊழியம் புளிப்புமாவை போல மெதுவாக, தொர்ந்து நடந்துகொண்டே இருக்கவேண்டும். ஊழியக்காரனுக்கு பெருமை கூடவே கூடாது, இயேசு கூறுவது போல், "நான் பயனற்ற ஊழியன் என் கடமையை தான் செய்தேன்" என்ற மனநிலை இருக்கவேண்டும். நான் பெரிய ஊழியம் செய்கின்றேன் என்ற எண்ணம் இருக்கக்கூடாது. நாம் செய்யக்கூடிய ஊழியங்களை இன்னும் அதிகமாய் செய்ய வேண்டுமென்றால் அது மறைவாக இருக்க வேண்டும். அதை ஊழியர்களுக்கு மட்டும் பகிர்ந்து கொள்வோம், கடவுளை மகிமைப்படுத்த, நன்றி செலுத்த அதற்காக மட்டும் நாம் பகிர்ந்து கொள்வோம். நாம் செய்யும் ஊழியம் மனிதர்களுக்கு அல்ல, கடவுளுக்கே தெரிய வேண்டும். எஜமானுக்கு தெரிந்தால் போதும், அதற்குரிய பலனை கடவுள் நமக்கு அருள்வார்.

புனித இன்னாசியார் இஞ்ஞாசியார் கூறுவார், "ஒரு அடி எடுத்து வைப்பத்திற்குள் மனம்மாற வேண்டும்". நாம் அவ்வளவு சீக்கிரம் மனம்மாற வேண்டும் என்று. ஏனெனில் ஆண்டவரை எப்போது வேண்டுமானாலும் நாம் சந்திக்கலாம். நாம் அதற்கு ஆயத்தமாய் இருக்க வேண்டும். ஒரு ஊழியரை குறித்து கேள்விப்பட்டேன்,"ஆண்டவர் என்னை எடுத்த கொள்வேன் என கூறிவிட்டார் ஆகவே நான் ஆயத்தமாய் இருக்கின்றேன்" என்றார். நாமும் இப்படி தான் ஆயத்தமாக இருக்க வேண்டும். யோசித்து

பார்ப்போம், இன்று ஆண்டவர் நம்மை சந்திக்க வந்தால், எத்தனை மக்கள் சொல்வோம் "நான் ஆயத்தமாய் இருக்கிறேன்" என்று. இந்த ஆயத்தத்திற்கு அவசரம் இருக்க வேண்டும். கடவுளோடு ஒப்புரவாய் இருப்பதில், இறைவார்த்தையை கைக்கொள்வதில் அவசரம் இருக்க வேண்டும். இன்றைக்கு ஒரு வானதூதர் அல்லது ஒரு மருத்துவர் இன்னும் ஒரு நாள் தான் உங்களுக்கு இருக்கின்றது என்று சொன்னால், நாம் எப்படி தயாராவோம், தினந்தோறும் அப்படித்தான் ஆயத்தமாக வேண்டும்.

ஊழியத்தில் பெருமை

நாம் ஊழியத்தில் மிகுந்த பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும். ஒரு ஆன்மா மனம்மாற பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும். ஆண்டவருடைய கிருபை இல்லாமல், கடவுள் அவர்களை தொடாமல் யாரும் மனம்மமாற முடியாது. அதற்காக நாம் பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும். ஆனால் நம்முடைய வாழ்க்கையிலே மனம்மாற அவசரம் காட்ட வேண்டும். "எனக்கு சங்கிலி ஜெபம் காலையில் இருக்கின்றது அப்போது மனம்மாறுகின்றேன்" என்றெல்லாம் இருக்க கூடாது, உடனே மனம்மாற வேண்டும். நம்மில் இருக்கும் மனக்கசப்பு, கோபம், மற்றவரை இழிவாக நினைப்பது என எல்லாவற்றையும் உடனே தூக்கிபோட்டுவிட்டு, ஆண்டவருடைய சமூகத்தில் அமர்ந்து உடனே மனம்மாற வேண்டும். பேசுவதில் தாமதம் இருக்க வேண்டும், ஆனால் மனம்மாற தாமதிக்க கூடாது. யோசித்து பார்ப்போம் மனம்மாற எந்த அளவுக்கு நாம் தீவிரமாய் இருக்கின்றோம் என்று. ஒவ்வொரு முறையும் ஜெபிக்கப்போகும்போது இதுவே கடைசி ஜெபமாய் இருக்கலாம் என நினைத்து ஜெபியுங்கள். ஒவ்வொரு நாளும் இது கடைசி நாளாக இருக்கலாம் என நினைத்து தொடங்குங்கள். நாம் தூங்கும் வேளையில் கூட ஆண்டவர் வரக்கூடும், நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும். அதுவே, விசுவாசமான கிறிஸ்துவ வாழ்க்கை. நாம் மனம்மாற அவசரப்பட வேண்டும் ஆனால், மற்றவர்கள் மனம்மாற பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும். நமக்கு கடவுளுடைய கிருபை கிடைத்திருக்கிறது, ஆண்டவருடைய கிருபையை சுவைத்து இருக்கின்றோம், ஆண்டவருடைய கிருபையால்

நிரப்பப்பட்டிருக்கின்றோம், அதனால் நமக்கு மனம்மாற அவசரம் இருக்க வேண்டும்.

புளிப்புமாவு மாறாது

நாம் தவறான உறவிலேயே, தவறான இடத்திற்கு செல்கின்றோம், கெட்ட நட்பில் இருக்கின்றோமென்றால், "இந்த இடத்திலும் சிலர் கேட்ட நட்போடு சிலர் இருக்கின்றனர்", அதிலிருந்து கறைபடாமல் அவசரம் காட்டவேண்டும். புளிப்புமாவு மற்ற மாவை தன்னை போல மாற்றுமே தவிர, இது மற்ற மாவை போல மாறாது. இன்றைக்கு நிறைய கிறிஸ்தவர்கள், ஊழியர்கள் கூட இப்படிப்பட்ட மனிதர்களோடு பழகும்போது இவர்கள் மாறிவிடுகிறார்கள். அவர்களுடைய அவிசுவாசத்தை, அன்பில்லாதவர்களாக, மன்னிக்க முடியாதவர்களாக இவர்களும் அடைகின்றனர். ஆனால், புளிப்புமாவு என்றால் எந்த காலத்திலும் அதனுடைய தன்மையை இழந்துவிடாது. இங்கும் கூட நிறைய மாவு சரியாக புளிக்கவில்லை, இப்படி நாம் முழுமையாக புளிக்காமல் மற்றவர்களோடு பழக கூடாது. இந்த செய்தியை கேட்கின்ற சிலர், அதிலிருந்து விரைவாக வெளியே வர வேண்டும். இறைவார்த்தையை கேட்டு விசுவாசத்தில் இருக்கின்ற நீங்கள் இப்படிப்பட்ட சில ஐக்கியத்தினால் உங்கள் விசுவாசத்தை இழக்கின்றீர்கள். சிலரோடு பேசும் போதே உங்கள் உள்ளத்தில் விசுவாசத்தை இழக்கின்றீர்கள் என்றால், அந்த உறவுகளை நாம் களைய வேண்டும். அது தான் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு நல்லது.

1 கொரி 15 : 23 - நீங்கள் ஏமாந்துபோக வேண்டாம். தீய நட்பு நல்லொழுக்கத்தைக் கெடுக்கும்.

யாரிடத்தில் நீங்கள் பழகினாலும், கிறிஸ்துவை அவர்களுக்கு கொடுக்க வேண்டும், அவர்களுடைய அவிசுவாசத்தை நீங்கள் பற்றிக்கொள்ளகூடாது. புளிப்பு மாவை போல் நீங்கள் மாறக்கூடாது. அதுவே கிறிஸ்துவின் தன்மை.

ஊழியர்கள் தீப்பிழம்புகள் !

திரு.பாடல் 104 : 4 - காற்றுகளை உம் தூதராய் நியமித்துள்ளவர்; தீப்பிழம்புகளை உம் பணியாளராய்க் கொண்டுள்ளவர்.

கடவுளுடைய பிள்ளைகள் தீப்பிழம்புகள். நெருப்பின் தன்மை என்ன? நெருப்பை யார் எதிர்த்தாலும், அல்லது நெருப்புடன் யார் சேர்ந்தாலும் நெருப்பாய் மாற்றிவிடும். ஊழியர்கள் எல்லாம் அந்த நெருப்பாக, தீப்பிழம்பாக, அக்கினிச்சுவாலையாக இருக்க வேண்டும். நம்மோடு நெருங்குகின்றவர்களை எல்லாம் பற்றிப்பிடிக்க வேண்டும். அப்படி பிடிக்கவில்லை என்றால் யோசித்து பார்ப்போம், நம்முடைய நெருப்பு எங்கேயோ மங்கி இருக்கின்றது, அனல் இல்லாமல் இருக்கிறது அல்லது நெருப்பு ஜுவாலையாக நான் இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நாம் அனல் உள்ளவர்களாக, நெருப்பு உள்ளவர்களாக இருந்தால் கட்டாயம் அந்த நெருப்பு பற்றி கொள்ளும். ஜெபிக்கிற வரங்களும், விசுவாச வரங்களும் அப்படி தான். நம்மோடு ஜெபிக்கிறவர்களையும் அந்த நெருப்பு பற்றி கொள்ளும். அந்த செயல்கள் நம்மிடத்திலிருந்து மற்றவருக்கு போக வேண்டும். ஆவிக்குரிய காரியங்கள் நம்மிடமிருந்து அவர்களுக்கு போக வேண்டும், நம்மை பார்த்து அவர்கள் வாழ்க்கை மாற வேண்டும். உள்ளத்திலே ஒரு அன்பை, இரக்க குணத்தை, ஆழமான விசுவாசத்தை, பொறுமையை நம்மிடமிருந்து கற்று கொள்ள வேண்டும். அப்படி கற்றுக்கொடுக்கின்றவர்களாக, புளிப்புமாவாக, நம்மோடு சேருகின்ற அனைவரையும் மாற்ற வேண்டும். அப்படி புளிப்புமாவாய் இருக்கின்றோமா இல்லை, நமது தன்மையை இழக்கின்றோமா யோசித்து பார்ப்போம், அப்படி புளிப்பு மாவைப்போல இல்லையென்றால் மனம் வருந்துவோம். புளிப்பு மாவின் சாரத்திற்காக நம்மையே நாம் ஒப்புக்கொடுப்போம்.

ஊழியம் இரண்டாவது தான், கடவுளோடு ஒப்புரவாகவே நாம் முதலிடம் கொடுக்க வேண்டும். கடவுளோடு ஒப்புரவு செய்வதில் வேகமும், ஊழியம் செய்வதில் பொறுமையும் கடைபிடிக்கவேண்டும். இதை தலைகீழாக கடைபிடித்தால் நாம் இடறி விழுவோம். வீட்டிலேயே இருக்கின்ற இந்தவேளையில், அதிகமான கோபமும், எரிச்சலும் நமக்குள் இருக்கலாம், அதை தூக்கிபோடுவோம். கோபமோ, எரிச்சலோ, கசப்போ நம்மில் வரும் போது பேசாதீர்கள், பேசுவதற்கு தாமதமாய் இருப்போம். நம்மை

தாழ்த்துவோம், அதுவும் கடவுள் உயர்த்துகின்ற அளவுக்கு நம்மை தாழ்த்துவோம். ஆண்டவருடைய வார்த்தையை வாசிக்க, தியானிக்க தீவிரம் காட்டுவோம், அப்போது நமது உள்ளம் பரிசுத்தமாகும். இதில் ஏதாவது தவறு செய்திருந்தால் கடவுளிடம் மன்னிப்பு கேட்போம். ஆமென்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!

25/04/2020

வலுவின்மையில் வல்லமை நிறைவாய் வெளிப்படும்

2 கொரிந்தியர் 12 : 7 - 9 : எனக்கு அருளப்பட்ட ஒப்புயர்வற்ற வெளிப்பாடுகளால் நான் இறுமாப்பு அடையாதவாறு பெருங்குறை ஒன்று என் உடலில் தைத்த முள் போல் என்னை வருத்திக் கொண்டே இருக்கிறது. அது என்னைக் குத்திக் கொடுமைப்படுத்த சாத்தான் அனுப்பிய தூதனைப் போல் இருக்கிறது. நான் இறுமாப்படையாதிருக்கவே இவ்வாறு நடக்கிறது. அதை என்னிடமிருந்து நீக்கிவிடுமாறு மூன்று முறை ஆண்டவரிடம் வருந்தி வேண்டினேன். ஆனால் அவர் என்னிடம், "என் அருள் உனக்குப் போதும்; வலுவின்மையில்தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும்" என்றார். ஆதலால் நான் என் வலுவின்மையைப் பற்றித்தான் மனமுவந்து பெருமை பாராட்டுவேன். அப்போது கிறிஸ்துவின் வல்லமை என்னுள் தங்கும்.

பவுலுக்கு ஒரு குறை, ஒரு பெலவீனம் இருக்கின்றது, அதுவும் உடலில் தைத்த முள்போல, சாத்தானின் தூதனை போல இருக்கின்றது. அதனால் மிகுந்த வேதனை அனுபவிக்கின்றார். ஆகையால் ஆண்டவரிடத்திலே மூன்று முறை ஜெபிக்கின்றார். மூன்று முறையும் அவருக்கு ஒரே பதில் தான் ஆண்டவரிடமிருந்து வருகின்றது, "வலுவின்மையில் தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும்".

கடவுள் தரும் சிறப்பான கொடை !

'ஏன் மனிதனை படைக்கும்போதே ஒரு பெலவீனத்துடன் படைத்திருக்கிறார்' என நிறைய மக்கள் நினைக்கின்றனர். 'ஏன் எனக்கு இந்த பெலவீனம், ஏன் என்னால் இந்த பெலவீனத்தை மேற்கொள்ள முடியவில்லை' என்கின்றனர். எல்லோருக்கும் மற்றவர்களிடம் இல்லாத ஒரு சிறப்பு உண்டு, ஒரு திறமை, ஒரு கொடை உண்டு.

இந்த சிறப்பு நமக்குள்ளே ஒரு பெருமையைக் கொண்டு வருகின்றது, "மற்றவர்களை விட நான் சிறந்தவன், பெரியவன், அவர்களை போல நான் இல்லை, மற்றவர்களை விட அழகாய் இருக்கின்றேன்,

மற்றவர்களிடம் இந்த கொடையில்லை, நான் தாராளமாய் இருக்கின்றேன். நான் தான் நல்ல காரியங்களை செய்கின்றேன். என்னுடைய மனசு ரொம்ப நல்ல மனசு, நான் தான் நன்றாக பாடுகின்றேன், நான் மற்றவர்களை விட நன்றாக பேசுவேன்" என நம்மையே நாம் பெருமை பாராட்டிக் கொள்கிறோம். அனைவர்க்கும் இப்படி கடவுள் சில சிறப்பான திறமைகளைக் கொடுக்கின்றார். கடவுளுக்கு பணி செய்யவே அதைக் கொடுக்கின்றார்.

நம்மை பெலவீனமாக்கும் நமது கொடை !

ஆனால், இந்த திறமைகள் அனைத்தும் நமக்குள் ஒரு பெருமையைக் கொண்டு வருகிறது. இந்த பெருமை மனிதனுக்கு வந்துவிடக் கூடாது என்பதற்கு தான் கடவுள் பெலவீனத்தைக் கொடுக்கின்றார். இந்த பெலவீனம் ஒரு சில பாவமாக, கோபமாக, இச்சைகளாக, கசப்புகளாக, வறுமையாக, வியாதிகளாகக் கூட இருக்கலாம். இப்படி இந்த பெலவீனங்கள் ஒரு மனிதனுடைய வாழ்வில் வருவதற்கு காரணம், அவனுடைய கொடைகளினாலே பெருமை அடையாமல் இருப்பதற்காகவே. இல்லையென்றால் அவன் பெருமையடைந்தே நரகத்திற்கு போய் விழுந்து விடுவான்.

பாவத்தில் வீழ்வதற்கு அல்ல, தாழ்மையை அடைவதற்கே இந்த பெலவீனம். ஒரு பக்கம் அவனுடைய கொடைகள் இருந்தாலும், மறுப்பக்கம் அவனுடைய பெலவீனம் போட்டு அழுத்த ஆரம்பிக்கும், அப்பொழுது தன் இயலாமையை அறிந்து தன்னை தாழ்த்த ஆரம்பிப்பான். பவுலும் எனக்கு அருளப்பட்ட வெளிப்பாடுகளால் நான் செருக்குராமல், பெருமை அடையாமல் இருக்க இப்படி நடக்கின்றது என்கிறார்.

பெலவீனத்தை ஜெயிப்பது எப்படி?

உங்களுக்கு இருக்கும் பெலவீனத்தை குறித்து பயப்படாதீர்கள், இந்த பெலவீனம் நம்மை விட்டு நீங்காது என அவநம்பிக்கை கொள்ளாதீர்கள். நம்முடைய பெலவீனம் இருப்பதே, நம்மை தாழ்த்தி கடவுளை தேடுவதற்காகவே! பெருமைக்கு இடம் தராத அளவிற்கு தாழ்மையைக் கற்றுக் கொடுப்பதுதான் இந்த பெலவீனம். அதுவும், "கடவுளை பிரிந்து நம்மால் ஒன்றும் செய்யமுடியாது" என்று நம்முடைய நிலையை அறிந்து தாழ்த்த வேண்டும். தாழ்த்தின

பிறகு ஆண்டவர் கூறுகின்றார், "எனது அருள் உனக்கு போதும்". தாழ்த்துகின்றவர்களுக்கே ஆண்டவருடைய அருள் கிடைக்கும்.

யாக்கோபு 4: 6 - ஆகவே, "செருக்குற்றோரை அவர் இகழ்ச்சியுடன் நோக்குகிறார். தாழ்நிலையில் உள்ளவர்களுக்கோ கருணை காட்டுவார்" என்று மறைநூல் உரைக்கிறது.

யாக்கோபு 4: 10 – ஆண்டவர் முன் உங்களைத் தாழ்த்துங்கள்; அவர் உங்களை உயர்த்துவார்.

இப்படி நம்மை தாழ்த்தும் போது ஆண்டவருடைய அருளை நாம் பெறுகின்றோம். நம்முடைய பெலவீனம் கடவுளுடைய அருளை அடைவதற்கே. நம்மை தாழ்த்தும் போது, கடவுளுடைய அருள் நம்மை நிரப்பும், இந்த பெலவீனமே நம்மை பெலவானாய் மாற்றும். ஆகவே தான் பவுல், "ஆதலால் நான் என் வலுவின்மையைப் பற்றித்தான் மனமுவந்து பெருமைப் பாராட்டுவேன். அப்போது கிறிஸ்துவின் வல்லமை என்னுள் தங்கும்" என கூறுகின்றார். நாமும் பெலவீனத்தைக் குறித்து பெருமைப் பாராட்ட வேண்டும், "அப்பொழுதுதான் கிறிஸ்துவின் வல்லமை நமக்குள் தங்கும்". “நான் இப்படித்தான் இருந்தேன் ஆனால், ஆண்டவர் என்னை உயர்த்தினார்” என பெருமை பாராட்ட வேண்டும். அப்பொழுது நம்மைப்போல யாரெல்லாம் அந்த பெலவீனத்திலே, இருக்கின்றார்களோ அவர்களை தூக்கிவிட நமக்கு அருள் கிடைக்கும்.

சாட்சியாய் மாற்றும் பெலவீனம் !

நிறைய நேரங்களில் பலவீனத்தைக் குறித்து நாம் புலம்புகின்றோம். அப்படி புலம்புவதற்கு பதிலாக நம்முடைய நிலையை உணர்ந்து நம்மை தாழ்த்தும் போது, கடவுளின் அருள் நம்மை நிறைவாய் நிரப்பும். அப்பொழுது அந்த பெலவீனமே நமக்கு பெலமாய் மாறும். அதன் பிறகு நம்முடைய பெலவீனத்தைக் குறித்தே நாம் பெருமை பாராட்டக் கூடும்.

இதுதான் கடவுளுக்கு உண்மையுள்ள சாட்சியாக இருக்கும். அதன் வழியாக கடவுள் மகிமை அடைவார். பெலவீனத்தால் சோர்ந்து போகாதீர்கள். “தீர்மானம் எடுத்துவிட்டு விழுந்து விடுகின்றேன்” என்று துவண்டு போகாதீர்கள். உங்களை தாழ்த்துவதற்காக தான்

இன்னும் சில பெருமைகள் ஒட்டிக்கொண்டே இருக்கின்றது, இன்னும் உங்களுக்குள் பெலவீனம் இருக்கின்றது. நம்மை கீழே விழ வைப்பது இந்த பெருமையே, இந்த பெருமைதான் மற்றவர்களை ஏற்றுக் கொள்ள முடியாமல், மதிக்காமல், ஏளனமாக, பரிசேயரைப் போல குறைவாக பேச வைப்பது, அப்படி அந்த பெருமையை கண்டுபிடித்து நம்மை தாழ்த்தும் போது, கடவுளுடைய அருள் நம்மை கீழே விழ விடாமல் நம்மை தாங்கும்.

கடவுளின் அருளை எப்படி அடைவது!

யோசித்துப் பார்ப்போம்! சிலர் இந்த பெலவீனத்தினாலே சோர்ந்து போகின்றோம். ஆனால், நாம் சோர்ந்து போகாமல் நமது பெருமையை குறித்து ஆராய வேண்டும், அவர் காலம் தாழ்த்துகின்ற தேவன் அல்ல, நம்மை முழு இதயத்தோடு தாழ்த்தி அவர் பாதத்தில் நம்மை ஒப்புக்கொடுத்தால், கட்டாயம் சீக்கிரமாய் அவரது அருள் நம்மை நிறைவாய் நிரப்பும்.

1 **கொரிந்தியர் 12: 10 - எனவே தாம் நிலையாக நிற்பதாக நினைத்துக் கொண்டிருப்பவர் விழுந்து விடாதபடி பார்த்துக் கொள்ளட்டும்.**

“நான் நிற்கிறேன்” என்று நினைத்தால் நாம் விழுந்து விடுவோம், அந்த பெருமைக்கூட நமக்கு வரக்கூடாது. கடவுளுடைய கரம் தான் நம்மை தங்குகின்றது என்பதை உணர வேண்டும். அவருடைய கரம் என்னை தாங்குவதால் நான் விழவில்லை என்பது தான் தாழ்ச்சி. நாம் மற்றவர்களை விட சிறந்தவர்கள் என என்றைக்கும் நினைக்கக் கூடாது, கடவுளுடைய கரம், அவருடைய அருள் என்னை தாங்குகின்றது என்று எண்ணும் பொழுது நாம் பெருமை என்னும் பாவத்தில் விழாமல் தப்பித்துக் கொள்வோம். அப்படியில்லை என்றால் இதைவிட கேடான பாவத்தில் விழ நேரிடும். உங்கள் பெலத்தில் நம்பிக்கை வைப்பதை விட தேவனுடைய கிருபையின் மேல் நம்பிக்கை வையுங்கள் அதுவே நல்லது. நம்முடைய பெலவீனத்தை அறிக்கை செய்ய, செய்ய கடவுளுடைய அருள் நம்மை நிறைவாய் நிரப்பும். இதை தான் பவுல் கூறுகின்றார், "ஆதலால் நான் என் வலுவின்மையைப் பற்றித்தான் மனமுவந்து பெருமை பாராட்டுவேன். அப்போது கிறிஸ்துவின் வல்லமை என்னுள் தங்கும்".

பெலவீனமே பெலம் !

பெலவீனத்தினால் ஒருவர் விழுவதில்லை, பெருமையினால் தான் விழுகின்றனர். நாம் பெருமை அடையும் போது கடவுளுடைய அருளை இழக்கின்றோம், அவருடைய அருளை இழக்கும்போது தான் விழுகின்றோம். ஆகவே, நமது பெலவீனத்துடன் நாம் போராட வேண்டிய அவசியமில்லை. நமக்குள் இருக்கும் பெருமையோடு தான் போராட வேண்டும். இன்று நம்மை ஆராய்ந்து பார்ப்போம் நம்மில் இருக்கும் பெருமைகளை கண்டுணர்ந்து, நம்மை தைரியமாக, சந்தோஷமாக கடவுள் முன்பாக தாழ்த்தி ஒப்புக்கொடுப்போம், அதுவே நமக்கு பெலமாக மாறும். அப்போது நாம் பயனுள்ள பாத்திரமாய் மாறுவோம். எல்லோருக்கும் தெரியும், ஒரு மனிதனுக்குள் பெருமை இருந்தால் அதனை அவனால் கண்டுப்பிடிக்க முடியாது, அதுவே பெருமையின் இயல்பு. இந்த பெருமையைக் கண்டுப்பிடிக்க இறைவனின் பெலத்தை கேளுங்கள். அதை கண்டுப்பிடித்து உங்களை தாழ்த்துங்கள். கடவுளின் அருள் நம்மை நிறைவாய் நிரப்பும். கடவுள் நம்மை பெலவானாய் மாற்றுவார். இதை உணர்ந்தவர்களாய் கடவுள் முன்பாக நம்மை முழுவதும் தாழ்த்தி ஒப்புக்கொடுப்போம். ஆமென்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!

18/05/2020

விசுவாசத்தின் வழியாகத்தான் மீட்பு

உரோமையர் 3:20-21 - ஏனெனில், திருச்சட்டம் சார்ந்த செயல்களால் எவரும் கடவுள் முன்னிலையில் ஏற்புடையவர் ஆவதில்லை. மனிதர்கள் பாவிகள் என்பதையே சட்டம் அவர்களுக்கு உணர்த்துகிறது. இப்பொழுதோ கடவுள் மனிதரைத் தமக்கு ஏற்புடையவராக்கும் செயலுக்கும் திருச்சட்டத்துக்கும் தொடர்பில்லை என்பது வெளியாக்கப்பட்டுள்ளது;

மீட்பில் திருச்சட்டத்திற்கு தொடர்பில்லை

திருச்சட்டத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்று நினைக்கும் வரை பழைய ஏற்பாட்டில் உள்ள ஒரு யூதரை போலத்தான் நாமும் இருப்போம். ஒரு கிறிஸ்தவ விசுவாசி போல நாம் இருக்க முடியாது. திருச்சட்டமும் இறைவாக்கும் இதற்கு சான்று பகர்கிறது. எதற்கு சான்று பகர்கிறது என்றால், கடவுள் மனிதரை தமக்கு ஏற்புடையவராக்குவதற்கும் திருச்சட்டத்திற்கும் தொடர்பில்லை என்பதற்கு இறைவாக்குகளும் திருச்சட்டமும் சான்று பகர்கின்றது.

உரோமையர் 3:22ல் இயேசு கிறிஸ்துவின் மீது கொள்ளும் நம்பிக்கை வழியாகக் கடவுள் மனிதரை தமக்கு ஏற்புடையவராக்குகிறார்.

இயேசு மீது வைக்கிற நம்பிக்கையின் வழியாகத்தான் கடவுள் மனிதரை தமக்கு ஏற்புடையவராக்குகிறார். நம்பிக்கை கொள்வோர் அனைவரையுமே அவர் ஏற்புடையவராக்குகிறார். அவர் வேறுபாடு காட்டுவதில்லை என்று வாசிக்கிறோம். ஆனால் இன்று கிறிஸ்தவர்கள் பத்து கட்டளையை எப்படியாவது கடைப்பிடிக்க வேண்டும் என்று பார்க்கிறார்கள். பத்து கட்டளைகளை ஒரு மனிதன் கடைப்பிடிக்க வேண்டும் என்று நினைத்தால் கடைப்பிடிக்க முடியாது, அந்தக் கட்டளையை கடைப்பிடித்து நீதிமானாக வேண்டும் என்று நினைத்தால் நீதிமானாகவும் முடியாது. **திருச்சட்டத்தை கடைப்பிடித்து யாராவது நீதிமானாக வேண்டும் என்று விரும்பினால் அது முடியாது. அதற்கு பதில் இயேசுகிறிஸ்துவின் மீது வைக்கின்ற நம்பிக்கையினால் கடவுளுக்கு ஏற்புடையவராக்கப்படுகிறோம்.**

விசுவாசத்தின் வழியாகத்தான் மீட்பு

விசுவாசிக்கிற எல்லாரையும் தேவன் கடவுளுக்கு ஏற்புடையவராக மாற்றுகிறார். விசுவாசத்தினாலே கடவுளுக்கு ஏற்புடையவராக்கப்பட வேண்டும். விசுவாசம் என்றவுடன் “இயேசுவை நம்புகிறேன், இயேசுவை விசுவாசிக்கிறேன்” என்று எல்லாருமே சொல்கிறார்கள். ஆனால் உண்மையிலேயே இயேசுவை நம்புகிறார்களா என்றால் இல்லை. நிறைய பேர் இயேசுவை தான் நம்பி இருக்கிறேன் என்று சொல்கிறார்கள். அது எல்லாம் உண்மை இல்லை “நம்புகிறேன் விசுவாசிக்கிறேன்” என்று சொல்லும்பொழுது, எதையெல்லாம் நாம் நம்புகிறோம் என்பது நமக்கு தெளிவாக தெரிய வேண்டும். பிசாசு கூட இயேசுவை நம்புகிறது .

யாக்கோபு 2:19 ல் கடவுள் ஒருவரே என்பதை நீங்கள் நம்புகிறீர்கள்; நல்லதுதான் பேய்களும் கூட அவ்வாறு நம்பி அச்சத்தால் நடுங்குகின்றன.

நம்பிக்கை, விசுவாசம் என்பது என்ன? மீட்பை பெற்றுக் கொள்ளக்கூடிய விசுவாசம் என்பது என்ன? அதுதான் இறைவார்த்தையின் மீது வைக்கிற நம்பிக்கை; இறை வார்த்தையின் மீது வைக்கிற விசுவாசம். ஏனென்றால், இயேசு வார்த்தையாக இருந்தார்; வார்த்தை மனுவுருவானார்; நம்மிடையே குடிக்கொண்டார்; ஆகவே, **இயேசுவை நம்புகிறேன் என்றால் விவிலியத்தில் சொல்லப்பட்டிருக்கிற வார்த்தைகளை நம்புகிறேன் என்று அர்த்தம். அதை நம்பும் பொழுதுதான் மீட்பை பெறுகிறோம்.** நிறைய பேருக்கு இறைவார்த்தை தெரியாது, பைபிள் படிக்க தெரியாது, எதை நம்ப வேண்டும் என்று தெரியாது. ஆனால், “இயேசுவை நம்புகிறேன்; பூசைக்கு போகிறேன்; ஞாயிறு கோயிலுக்குப் போகிறேன்” என்பார்கள். இது மீட்பு இல்லை. **கடவுளுடைய வார்த்தை மீது வைக்கிற விசுவாசம் அந்த விசுவாசத்தின் மூலமாக கடவுள் ஒரு மனிதனை தமக்கு ஏற்புடையவராக்குகிறார்.** விசுவாசிக்கிற எல்லாரையுமே ஏற்புடையவராக்குகிறார் அப்படியென்றால் 100% உறுதி என்று அர்த்தம். விசுவாசிக்கிற எல்லாரையுமே கடவுள் தமக்கு ஏற்புடையவராக மாற்றுகிறார். திருச்சட்டத்தை கடைப்பிடிப்பதால் நீதிமானாகவில்லை. இறைவார்த்தை மீது வைக்கிற விசுவாசத்தினால் கடவுள் பார்வையில் நீதிமான் ஆக்கப்படுகிறோம். கடவுளே ஒரு மனிதனை அவருக்கு ஏற்புடையவர் ஆக்குகிறார். அப்படியென்றால், வெறும் நம்பிக்கை இல்லை; நம்பிக்கையின் வழியாக ஏற்புடையவராக்கப்படுகிறோம்.

உரோமையர் 8:4ல் பழைய மொழிபெயர்ப்பில் “ஊனியல்புக்கு ஏற்ப நடவாமல், ஆவியானவரின் ஏவுதலுக்குக்கேற்ப நடக்கும் நம்மில் சட்டம் கட்டளையிட்டது நிறைவுறும் படி அவ்வாறு செய்தார்”.

திருச்சட்டத்தில் காணப்படுவது எல்லாமே விசுவாசிக்கிறவர்களின் வாழ்க்கையில் தானாகவே நிறைவேறிவிடுகிறது. **இறைவார்த்தையை விசுவாசிக்கும் போது திருச்சட்டத்தில் உள்ளவை எல்லாம் நம்முடைய வாழ்க்கையில் நிறைவேறி விடுகிறது.** எப்போது நாம் திருச்சட்டத்தை நிறைவேற்றுகிறோம், எப்போது நாம்

நீதிமானாக்கப்படுகிறோம் என்றால் விசுவாசத்தினாலே தான் நீதிமானாக்கப்படுகிறோம். கடவுள் நம்மை நீதிமானாக்குகிறார். திருச்சட்டத்தை விசுவாசிக்கும்படி நம்மை நீதிமானாக்குகிறார். நம் வாழ்க்கையிலே விசுவாசத்தினாலே திருச்சட்டங்கள் தானாக நிறைவேறும்படி செய்கிறார். இரண்டு விதமான இரசாயனப் பொருள்கள் (Chemicals) சேரும் போது எப்படி ஒரு புதிய பொருள் உருவாகிறதோ, தேவன் மீது கொண்டிருக்கிற விசுவாசத்தினாலே, ஒருவனுக்குள்ளே ஒரு மாற்றம் உருவாகிறது. கடவுளுக்கு ஏற்புடையவராக மாற இந்த மாற்றம் நமக்குள்ளே நடக்க வேண்டும்.

விசுவாசம் ஐம்புலன்களுக்கும் அப்பாற்பட்டது

யாக்கோபு 2:26ல் செயல்கள் இல்லாத விசுவாசம் செத்த விசுவாசம்.

விசுவாசிக்கும் போது எதை விசுவாசிக்கிறோமோ அதை செயலில் கொண்டு வர வேண்டும். விசுவாசம் என்று சொல்லும் போது அங்கே ஐம்புலன்களுக்கு வேலை இல்லை. இறைவார்த்தையில் சொல்லப்பட்டிருக்கிற எல்லாவற்றையும் இந்த ஐம்புலன்களால் பார்க்க முடியாது; கேட்க முடியாது; ஏனென்றால், இறைவார்த்தையானது, “கடவுள் இருக்கிறார்; வானதூதர் இருக்கிறார்; என்றெல்லாம் சொல்கிறது”. இது எல்லாம் பார்க்கவோ; கேட்கவோ; முடியாதவை. அவர்கள் பேசுவதை காதில் கேட்கவோ; அவர்களை தொடவோ, உணரவோ முடியாது. இந்த புலன்களுக்கு அப்பாற்பட்ட விதத்திலே இறைவார்த்தையை நம்புகிறோம். **புலன்களாலே பார்க்க முடியாத கேட்க முடியாத உணர முடியாததை இறைவார்த்தை சொல்கிறது.** அதை நம்புவதுதான் விசுவாசம். திருவிவிலியம் பல காரியங்களை அப்படி சொல்கிறது. ஆவிக்குரிய தூதர்களையோ ஆண்டவரையோ அல்லது வேறு உயிரினங்களை கூட அப்படி சொல்கிறது. அதுமட்டுமல்ல ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் நடக்கக்கூடிய ஆவிக்குரிய காரியங்களை கூட சொல்கிறது. இதை நாம் என்ன செய்ய முடியும். நம் அறிவில் அறிந்து கொள்ள முடிவதில்லை, கண்ணால் பார்க்க முடிவதில்லை, காதால் கேட்க முடிவதில்லை, உடலால் உணர முடிவதில்லை. இதற்கு ஒரே வழி என்ன? விசுவாசிப்பது. நற்கருணையில் இயேசு இருக்கிறார் என்று சொல்லும்போது பார்க்க முடியவில்லை, தொட்டால் அப்பம் தான் இருக்கிறது. அதை ஐம்புலன்களை கொண்டு அறிந்து கொள்ள முடியவில்லை; அறிவைக்கொண்டு விளங்கிக் கொள்ளவும்

முடியவில்லை; ஆனால் என்ன செய்கிறோம்? வார்த்தையை நம்புகிறோம். ஆவிக்குரியவை எல்லாமே இப்படித்தான். ஆனால் நற்கருணையை மட்டும் தான் நிறைய பேர் நம்புகிறார்கள். அதோடு அவர்கள் நம்பிக்கை முடிந்துவிடுகிறது. இதற்கு மேல் பைபிளில் சொல்லப்பட்டிருக்கிற காரியங்களை எல்லாம் அவர்கள் நம்புவதில்லை. அதனால் அவர்கள் வாழ்க்கையில் ஒரு மாற்றம் இல்லாமல் போகிறது. அந்த வார்த்தைகளை விசுவாசிக்கும் போது நாம் கடவுளுக்கு ஏற்புடையவராக்கப்படுகிறோம். **புலன்களுக்கு அப்பாற்பட்டு வேதவசனம் சொல்லக்கூடிய ஒவ்வொரு காரியங்களையும் நீங்கள் விசுவாசிக்க விசுவாசிக்க உங்கள் வாழ்க்கை அப்படியே மாறிவிடும். தேவனுக்கு உகந்த வாழ்க்கையாக மாறிவிடும். தேவன் நம்முடைய வாழ்வை அப்படி மாற்றிவிடுவார்.** அப்படி விசுவாசிக்கும் போது நாம் நீதிமான் ஆக்கப்படுவது நூற்றுக்கு நூறு நிச்சயிக்கப்பட்டு இருக்கிறது. ஏனென்றால், விசுவாசத்தில் கடவுள் பாரபட்சம் பார்ப்பதில்லை; விசுவாசிக்கிற எல்லாரையுமே தமக்கு ஏற்புடையவர் ஆக்குகிறார். செயல்களால் யாரும் நீதிமானாக முடியாது; திருச்சட்டத்தினால் யாரும் கடவுளுக்கு ஏற்புடையவர் ஆவதில்லை. ஆனால், விசுவாசத்தின் வழியாக திருச்சட்டத்தை நிறைவேற்றிவிடுகிறோம்.

விசுவாசத்தின் சட்டம் ஆவிக்குரியது

தேவனுடைய வார்த்தைகளை விசுவாசிக்க விசுவாசிக்க திருச்சட்டத்தை நாம் நிறைவேற்றி விடுகிறோம். திருச்சட்டம் ஒரு விளிம்பு நிலை தான்; விளிம்புநிலை என்றால் கடவுள் கொடுத்திருக்கிற கட்டளைகளில் கடவுள் தான் மையப்பகுதி திருச்சட்டம் அதில் ஒரு விளிம்பு; அதாவது திருச்சட்டத்தில் கொலை செய்யாதே, என்று போடப்பட்டிருக்கும். கொலை என்பது ஒரு செயல் ஆனால், புதிய ஏற்பாட்டில் ஆவிக்குரிய சட்டம் என்பது அன்பு; "கொலை செய்யாதே" என்றால் "உனக்குத் தீமை செய்கிறவர்களுக்கு நன்மை செய்" அவ்வளவுதான் எங்கேயோ போக வேண்டியதில்லை. "விபச்சாரம் செய்யாதே" என்பது திருச்சட்டம், புதிய ஏற்பாட்டில் ஆவிக்குரிய சட்டமாக இருப்பதினால் "எந்த பெண்ணையும் இச்சையோடு பார்க்காதே" என்று இருக்கிறது. அதனால் அந்தப் பார்வை மாறிப் போய் விடுகிறது. விசுவாசத்தினாலே அந்த விளிம்பு வரை போக வேண்டியதில்லை. இச்சைக்குரிய எண்ணங்களை நாம் மேற்கொள்ள

ஆரம்பித்துவிடுவோம். பாவ காரியங்களை நம் உள்ளத்திலேயே சிந்தனையிலேயே மேற்கொள்ள ஆரம்பித்துவிடுவோம். பழைய ஏற்பாட்டில் மக்கள் முரட்டு சுபாவத்துடன் இருந்ததினாலே ஊனியல்புக்கு உட்பட்டவர்களாக இருந்ததினாலே அப்படி ஒரு விளிம்பான திருச்சட்டத்தை கொடுத்திருக்கிறார். ஆகவே, அப்படி விளிம்பு திருச்சட்டத்தை எப்படியாவது கடைப்பிடிக்க வேண்டுமென்று போனதினால், அவர்கள் விழுந்து போனார்கள்; அது தூய்மையைக் கொண்டு வரவில்லை.

புதிய ஏற்பாட்டில் தூய ஆவியானவர் நமக்கு அருளப்படுவதினாலே ஒரு ஆவிக்குரிய வாழ்க்கைக்கு அவர் நம்மை கொண்டு போகிறார். ஊனியல்புக்குரியவர்களாக இருந்த நம்மை ஆவிக்குரியவர்களாக மாற்றுகிறார். ஆதலால், விசுவாசத்தினாலே திருச்சட்டத்தை நிறைவேற்றிவிடுகிறோம். விசுவாசத்தில் நீங்கள் வளர வளர திருச்சட்டத்தின் செயல்கள் தானாகவே உங்கள் வாழ்க்கையில் நிறைவேறிவிடும். அதைவிட ஆழமாகவே நிறைவேறிவிடும். **திருச்சட்டம் வெளிப்புறமாக செய்யக்கூடிய காரியங்களை குறிக்கும். ஆவிக்குரிய சட்டம் உள்ளே நம்மை தூய்மையாக்குகிறது.** பணக்கார வாலிபன் ஒருவன் இருந்தான் அவன் சிறு வயதிலிருந்தே திருச்சட்டத்தை கடைப்பிடிப்பவனாக இருந்தான். அதுபோதாது. விசுவாசத்திலே ஆவிக்குரியவர்களாக மாறுவது, ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது. அறிவுக்கு அப்பாற்பட்டது என்று விவிலியத்தில் சொல்லப்பட்டுள்ளது. கன்னி வயிற்றில் இயேசு பிறந்தார் இது அறிவுக்கு அப்பாற்பட்டது; அறிவியலுக்கும் அப்பாற்பட்டது.

ஆவிக்குரிய சட்டம் என்பது இறைவார்த்தையின் மீது விசுவாசம்

அதில் மட்டுமல்ல, இறைவார்த்தையில் விசுவாசம் வைக்க வேண்டும். “அறிவுக்கு எட்டாத காரியங்களை உனக்கு விளக்கிக் காட்டுவேன்” என்கிறார் ஆண்டவர்; அதில் நம்பிக்கை வையுங்கள். அறிவுக்கு எட்டாத காரியங்களை எப்படி விளக்கிக் காட்ட முடியும் என்றால் அது ஆவிக்குரியது; ஆண்டவர் விளக்கிக் காட்டுவார். இப்படி ஒவ்வொரு வார்த்தையையும் எடுத்தோம் என்றால் அது ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்டதாகவும் அறிவுக்கு

அப்பாற்பட்டதாகவும் இருக்கும். ஆவிக்குரியதாக இருக்கிறதை அதை விசுவாசிக்க விசுவாசிக்க நாம் ஆவிக்குரியவர்களாக மாறிவிடுகிறோம். ஊனியல்பின் செயல்களை நிறைவேற்றாமல் போய்விடுகிறோம். இதை யாரெல்லாம் விசுவாசிக்கிறார்களோ அவர்கள் அத்தனை பேருடைய வாழ்க்கையிலும் இவை நடக்கிறது. ஆண்டவர் வேறுபாடு காட்டுவதில்லை பாரபட்சம் பார்ப்பதில்லை என்று போடப்பட்டிருக்கிறது. அதனால்தான்,

எபிரேயர்11:6ல் விசுவாசத்தினாலன்றி வேறு எதனாலும் கடவுளுக்கு உகந்தவர்களாக முடியாது.

விசுவாசம் நம் செயல்களில் வெளிப்பட வேண்டும். விசுவாசத்தினாலே நம்முடைய செயல்கள் பரிசுத்தம் ஆக்கப்பட வேண்டும். தேவன் அப்படி ஆக்குகிறார். விசுவாசிக்கிற எல்லாரையும் அப்படி மாற்றுகிறார். விசுவாசத்தினாலே நம் எண்ணங்களை தூய்மையாக்குகிறார்; **ஆவிக்குரிய எண்ணங்கள் வரும்போது மாம்சத்திற்குரிய எண்ணங்கள் நம்மை விட்டு போய்விடுகிறது.** நம்முடைய மனம் ஆவிக்குரிய ரீதியிலே புது பிறப்பு அடைகிறது. நம்முடைய சிந்தனைகள் ஆவிக்குரிய விதத்தில் மாறும்போது ஊனியல்பின் செயல்கள் நம்முடைய வாழ்க்கையில் இல்லாமல் போய்விடுகிறது. **இறைவார்த்தையை மீண்டும் மீண்டும் அறிக்கை செய்து அதன் மீது நம்பிக்கை வைக்கும் போது நம்முடைய சிந்தனைகளும் செயல்களும் ஆவிக்குரியவையாக மாறிவிடுகிறது.** எளிதாக ஊனியல்பின் காரியங்களை மேற்கொண்டுவிடுகிறது. “**கலாத்தியர் 5:19-20”** வரை ஊனியல்பின் செயல்களை வாசிக்கிறோம் “இதில் ஈடுபடுகிறவர்கள் இறையாட்சியை உரிமைப் பேறாக அடைய முடிவதில்லை” என்று போடப்பட்டுள்ளது. ஒரு ஊழியர் இவ்வாறு சொன்னார், “ஒரு காலத்தில் கோபக்காரனாக இருந்தேன். இப்பொழுது ஆவிக்குரியவனாக இருப்பதால் யார் என்ன செய்தாலும் கோபமே வராது” என்று சொன்னார்.

சிந்தித்துப் பாருங்கள் விசுவாசத்தின் செயல்கள் அவரிடத்தில் வெளிப்படுவதை பார்க்கிறோம். “விசுவாசிக்கிறேன்” என்று மட்டும் சொல்லவில்லை. விசுவாசம் நம்முடைய வாழ்க்கையிலே ஆவிக்குரிய செயல்பாடுகளுக்குள் கொண்டு செல்ல வேண்டும். அதுதான் விசுவாசத்தினுடைய செயல். அதனாலே விசுவாசத்தின்

மூலமாக நாம் மீட்கப்பட வேண்டும். விசுவாசத்தின் மூலமாக தேவன் நம்மை புதுப்படைப்பாக மாற்றுகிறார். அவருக்கு ஏற்புடையவராக மாற்றுகிறார். அதனால்தான் **1 கொரிந்தியர் 3:1ல் பவுல் சொல்கிறார், “ஆவிக்குரியவர்களிடம் பேசுவதுபோல உங்களிடம் பேச முடியவில்லை; நீங்கள் ஊனியல்பு கொண்டவர்கள் எனவும் கடவுளோடுள்ள உறவில் குழந்தைகள் எனவும் எண்ணி பேசுகிறேன்”** என்கிறார். கடவுளுடைய உறவில் மேம்பட மேம்பட ஆவிக்குரியவர்களாக நாம் மாற வேண்டும். ஆவிக்குரிய வாழ்க்கையில் அது தான் முழுமை. முழுமை அடையும் போது பாவம் நம் சிந்தனைகளை விட்டும் எண்ணங்களை விட்டும் போய்விடுகிறது. தேவனுக்கு ஏற்புடைய ஒரு வாழ்க்கை வாழ நம்மை தயாரிக்க வேண்டும். அந்த வாழ்வுக்கு அது நம்மை கொண்டு போகும். விசுவாசிக்கிற எல்லாரையும் கொண்டுபோகும். ஆனால், தேவனுடைய வார்த்தையிலே விசுவாசம் வைக்க வேண்டும். நிறையபேர் அறிவுப்பிரகாரமாக நம்பிக்கையை வைக்கிறார்கள்; அவர்கள் அறிவு என்ன சொல்கிறதோ அதை நம்புகிறார்கள். பெரும்பாலும் பார்க்கிறதை, கேட்கிறதை, அனுபவிக்கிறதை, ஐம்புலன்கள் சொல்வதை நம்புகிறார்கள். விசுவாசத்திற்கும் ஐம்புலன்களுக்கும், விசுவாசத்திற்கும் அறிவுக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. அது முழுக்க முழுக்க ஆவிக்குரியது. நம் அறிவினாலோ ஐம்புலன்களினாலோ உணரவோ அறியவோ முடியாது என்பதன் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். இப்படி நம்பிக்கை வைக்க வைக்க நாம் ஆவிக்குரியவர்களாக மாறிவிடுவோம். **நம்முடைய சிந்தனைகள் எல்லாம் ஆவிக்குரியவைகளாக மாறும் பொழுது நம்முடைய செயல்களும் ஆவிக்குரியவைகளாக மாறும். தேவன் நிச்சயமாக அப்படி மாற்றுகிறார் அதுதான் கடவுளுக்கு ஏற்புடைய ஒரு வாழ்க்கை.**

யோசித்துப் பாருங்கள்; ஆவிக்குரிய வாழ்வில் எந்த அளவுக்கு வந்திருக்கிறோம் இன்னும் ஊனியல்பு எவ்வளவு காணப்படுகிறது. சில பேர் பாதி ஆவிக்குரிய வாழ்க்கை, பாதி ஊனியல்புக்குரிய வாழ்க்கை என்பார்கள். அப்படியெல்லாம் இருக்க முடியாது. ஆவியால் பிறப்பது ஆவியாய் இருக்கும். இந்த ஊனியல்பை முழுக்க முழுக்க மேற்கொள்ளும் அளவுக்கு ஆவிக்குரியவர்களாக நாம் மாற்றமடைய வேண்டும். அதுதான் சிறந்த ஒரு ஆவிக்குரிய வளர்ச்சி. எந்த அளவுக்கு நாம் வளர்ந்திருக்கிறோம்? இன்னும்

ஊனியல்பின் செயல்கள் நம்மிடத்தில் காணப்பட்டால் அதற்காக மனஸ்தாபப்படுவோம். அதிலே நின்றுவிடாமல் ஒவ்வொரு வார்த்தையையும் விசுவாசித்து, ஆவிக்குரியவர்களாக மாற்றமடைய ஒப்புக்கொடுப்போம். ஆமென்!

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவிக்கும் மகிமை உண்டாவதாக!!!

24/04/2020

விண்ணக ஞானம்

யாக்கோபு 3: 12 - 18 : என் அன்பர்களே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும் திராட்சைச் செடி அத்திப் பழங்களையும் கொடுக்குமா? அவ்வாறே, உப்பு நீர்ச் சுனையிலிருந்து நன்னீர் கிடைக்காது. உங்களிடையே ஞானமும் அறிவாற்றலும் உடையவர் யாராவது இருந்தால், ஞானம் தரும் பணிவாலும் நன்னடத்தையாலும் அவற்றைக் காட்டட்டும். உங்கள் உள்ளத்தில் பொறாமையும் மனக்கசப்பும் கட்சி மனப்பான்மையும் இருக்குமானால் அதைப்பற்றிப் பெருமை பாராட்ட வேண்டாம். உண்மையை எதிர்த்துப் பொய் பேசவேண்டாம். இத்தகைய ஞானம் விண்ணிலிருந்து வருவது அல்ல; மாறாக, மண்ணுலகைச் சார்ந்தது. அது மனித இயல்பு சார்ந்தது; பேய்த் தன்மை வாய்ந்தது. பொறாமையும் கட்சி மனப்பான்மையும் உள்ள இடத்தில் குழப்பமும் எல்லாக் கொடுஞ் செயல்களும் நடக்கும். விண்ணிலிருந்து வரும் ஞானத்தின் தலையாய பண்பு அதன் தூய்மையாகும். மேலும் அது அமைதியை நாடும்; பொறுமை கொள்ளும்; இணங்கிப் போகும் தன்மையுடையது; இரக்கமும் நற்செயல்களும் நிறைந்தது; நடுநிலை தவறாதது; வெளிவேடமற்றது. அமைதி ஏற்படுத்துவோர் விதைத்த அமைதி என்னும் விதையிலிருந்து நீதியென்னும் கனி விளைகிறது.

யாக்கோபு 3: 12 - இயேசுவும் இதையே தான் கூறுகின்றார், "மரத்தை அதன் கனிகளை கொண்டே அறிந்துக் கொள்வீர்கள்". அநேகர்

ஜெபிக்கின்றனர், ஊழியம் செய்கின்றனர் அவர்கள் ஆவிக்குரிய ஞானத்தை விட உலக ஞானத்தையே விரும்புகின்றனர். உலக ரீதியான சூதுவாது, அன்பில்லா தன்மை போன்ற அநேக காரியங்களை கடைப்பிடிக்கின்றனர்.

யாக்கோபு 3: 13 - யாக்கோபு இங்கு இரண்டு ஞானத்தை குறித்து பேசுகிறார், விண்ணக ஞானம் மற்றும் உலக ஞானம். உண்மையான ஞானம் பணிவையும், நன்னடத்தையையும் கொடுக்கும்.

யாக்கோபு 3: 14 - 15 : பொறாமையும், மனக்கசப்பும், கட்சி மனப்பான்மை இவையெல்லாம் ஒரு மனிதனிடம் இருந்தால் அவர் விண்ணக ஞானத்தால் நிரப்பப்படவில்லை, மாறாக உலக ஞானமே அவரிடம் உள்ளது. இவர்கள் ஜெபிக்கின்றார்கள், நன்றாக ஊழியம் செய்கின்றனர், மற்றவர்களுக்கு அருமையான ஆலோசனை கூட தருகின்றனர். ஆனால் அவர்கள் மனித ஞானத்தையே கொண்டுள்ளனர், இது மனித இயல்பை சார்ந்தது.

யாக்கோபு 3: 16 - இத்தகைய மனித ஞானம் பேய்த் தன்மை வாய்ந்தது. சிலர் நினைக்கலாம் நாம் புத்திசாலியாக இருக்கின்றோம் என்று, ஆனால் அது பேய்த் தன்மை வாய்ந்தது. கடவுளுடைய பிள்ளைகள் உலக ஞானத்தால் அல்ல, விண்ணக ஞானத்தால் நிறைந்திருக்க வேண்டும். விண்ணக ஞானத்தின் செயல்கள் முட்டாள்தனமாக தோன்றலாம், உலக ஞானத்தின் செயல்கள் புத்திசாலித்தனமாக தோன்றலாம். ஆனால் உலக ஞானம் எல்லையில்லாத கொடுஞ்செயல்களை செய்யும்.

சவுல் தீமை செய்ததற்கு காரணம் உலக ஞானம், தாவீது அரசனாகக் கூடாது, தன் மகன் அரசனாக வேண்டும் என்ற பொறாமை அவனுள் வந்தது. தானியேலை சிங்க குகையில் போடக் காரணம், உலக ஞானத்தால் அரசியல் தந்திரத்தால் மற்றவர்களுக்கு உண்டான பொறாமை தான். ஆகவே தான் இந்த உலக ஞானம் பேய்த் தன்மை வாய்ந்தது. அடுத்தவர்களுடைய கஷ்டங்களை, வேதனைகளை புரிந்துக் கொள்ள, அவர்களை அன்பு செய்ய அங்கு இடமில்லை. நன்றாக ஜெபிக்கின்றவர்கள், ஊழியர்களிடம் கூட இந்த உலக ஞானம் (cunningness) கபடத்தனம் உள்ளது.

யாக்கோபு 3: 17 - கடவுள் தருகின்ற விண்ணக ஞானம், மனிதனுக்கு தூய்மையைக் கொடுக்கும். பிசாசு கூட புத்திசாலியாகத்தான் இருந்தான். அவனுடைய ஞானம், கபடத்தனமாக சூழ்ச்சிமிக்க ஞானமாக இருந்தது. பிசாசை சார்ந்தவர்களும் இப்படிப்பட்ட சூழ்ச்சிமிக்க ஞானத்தையே கொண்டுள்ளார். விண்ணக ஞானம் நமக்கு தீமை செய்தவர்களிடம் கூட சமாதானத்தை நாடும். ஆனால், உலக ஞானம் ஆதாயம் இருந்தால் சமாதானத்தை நாடும். விண்ணக ஞானம் வெளிவேடமற்றது, "வீட்டுக்குள் இல்லாத அட்டகாசம் செய்வார்கள்" ஆனால், வெளியில் ஊழியரிடம் பேசலாம் என்றால் வரமாட்டார்கள். ஏனென்றால் வெளிவேடம். இவர்கள் சமாதானத்திற்கு வர மாட்டார்கள். விண்ணக ஞானம், ஒரு பக்கமாய் நம்மை சாய விடாது, நடுநிலை தவறாதது, இரக்கமும் நற்செயல்களும் உடையது.

யாக்கோபு 3: 18 - அமைதியிலிருந்து நீதி வருகின்றது. நீதி என்றால் நடுநிலை தவறாதது, நடுநிலை என்றால் வேண்டியவருக்கு ஒன்று, வேண்டாதவர்களுக்கு வேறு ஒன்று என்பது அல்ல. நடுநிலை என்றால் எல்லாரையும் சமமாக நடத்துவது, யார் செய்தாலும் தவறை சுட்டிக் காட்டுவது. நாமும் பல வேளைகளில் இந்த உலக ஞானத்தையே பயன்படுத்தப் பார்க்கின்றோம். கடவுள் நம்மில் செயல்பட வேண்டுமென்றால், இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆவிக்குரிய கொடைகளில் நிரப்பப்பட வேண்டுமென்றால், நாம் பணிவுடன் இருக்க வேண்டும். விவிலியத்தில் திருக்குடும்பத்தை நாம் பார்த்தோமென்றால், அவர்கள் விண்ணக ஞானத்தால் நிரம்பி இருந்தார்கள்.

அதில் மிக அதிகமாய் நிரப்பப்பட்டவர் ஆண்டவர் இயேசு கிறிஸ்து, இயேசுவுக்கு அடுத்தபடியாக, அன்னை மரியாள், அதற்கு அடுத்தபடியாக, சூசையப்பர் நிரம்பிருந்தார். வானதூதர் சூசையப்பருக்கு கனவில் தோன்றி, “மரியாவையும், குழந்தையையும் எகிப்திற்கு அழைத்துக் கொண்டு செல்” என்று வெளிப்படுத்தினார். ஆனால், மரியாள் சூசையப்பரை விட அதிகமாய் ஆவியில் நிரப்பப்பட்டவர். "Mystical city of God" என்ற புத்தகத்திலே, பன்னிரண்டு வானதூதர்கள், அன்னை மரியாள் பார்க்கக் கூடிய விதத்தில் இருப்பார்கள். ஆனால், சூசையப்பருக்கு அப்படி அல்ல, கனவில் தான் வானதூதர் அவருக்கு வெளிப்படுத்துகிறார். அப்படி

நடு இரவிலும் கூட அன்னை மரியாள் கணவருக்கு கீழ்ப்படிகிறார். இதுவே விண்ணக ஞானத்தின் இயல்பு. திருக்குடும்பத்திலே சூசையப்பர் விண்ணக ஞானத்தில் குறையுடையவராய் இருந்தாலும் அன்னை மரியாள் கீழ்ப்படிந்து உடன் போகிறார்.

இயேசுவை பாருங்கள் அவர் தான் ஞானம். பன்னிரண்டு வயதில் அவர் காணாமல் போன போது, மாதாவும் சூசையப்பரும், "மகனே, நீ ஏன் இப்படி செய்தாய் " என்று கேட்டப்போது, இயேசு, "நான் என் தந்தையின் அலுவலில் இருக்கவேண்டும் என்பது உங்களுக்கு தெரியாதா" என்கின்றார். விவிலியத்தில் அடுத்த வசனம் என்னவென்றால், "அவர் சொன்னதை அவர்களால் புரிந்துக்கொள்ள முடியவில்லை". இயேசு பேசியது மாதாவுக்கும் புரியவில்லை, சூசையப்பருக்கும் புரியவில்லை. ஆனால், அடுத்த வசனத்தில் பார்க்கின்றோம், "அவர் அவர்களோடு சென்று அவர்களுக்கு பணிந்து இருந்தார்". இயேசு தான் ஞானம், பன்னிரண்டு வயதில் அவர் ஞானத்தால் நிறைந்து இருந்தும் அவர் பணிந்து இருந்தார். இன்று பிள்ளைகள் சிறிது படித்தவுடனே "பெற்றோர்க்கு என்ன தெரியும்" என்று பெற்றோரை மதிப்பதில்லை. நமது படிப்பு, அறிவு, திறமை இவையனைத்தும் நம்மை பணிவுக்கு இட்டுச்செல்லாமல், பொறாமைக்கும், ஆணவத்திற்கும் இட்டுச்சென்றால் அது விண்ணக ஞானம் இல்லை.

யார் வேண்டுமானாலும் ஊழியம் செய்யலாம், யார் வேண்டுமானாலும் ஜெபிக்கலாம், பாவிகளுக்கு கூட இயேசுவின் கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கின்றது. கடவுள் நமக்கு அளித்திருக்கும் ஞானம் கபடத்தனமாக பயன்படுத்தக் கூடாது, அது கடவுளுடைய திருவுளத்தை நிறைவேற்ற பயன்படுத்த வேண்டும், கடவுளுக்கு விருப்பமானதை நிறைவேற்றுவதே விண்ணக ஞானம். நமக்கு எந்த ஒரு கஷ்டமும் வந்துவிடக் கூடாது என்பதற்கு ஞானத்தை பயன்படுத்துவது தான் இவ்வுலக ஞானம். இன்றைக்கு நாம் யோசித்து பார்ப்போம் உலக ஞானத்தினால் நாம் நடத்தப்படுகின்றோம் என்றால் விண்ணகத்தை நாம் அடைய முடியாது. அதற்காக மன்னிப்பு கேட்போம், உலக ஞானம் இல்லை என்றால் நமக்கு ஒன்றும் குறைவுபடாது, ஆனால், விண்ணக ஞானம் இல்லை என்றால் அனைத்தையும் இழந்துவிடுவோம். ஆகவே, விண்ணக ஞானத்தால் நிரப்பப்பட ஒப்புக்கொடுப்போம்.

யாக்கோபு 1: 5 - உங்களிடையே குறைவான ஞானம் கொண்டிருப்போர் கடவுளிடத்தில் கேட்கட்டும் அப்போது அவரும் ஞானத்தைக் கொடுப்பார். அவர் முகம் கோணாமல் தாராளமாய் எல்லாருக்கும் கொடுப்பவர்.

விண்ணக ஞானம் நம்மில் குறைவாய் இருந்தால், உலக ஞானம் நம்மை மேற்கொண்டிருந்தால், நம்மையே தாழ்த்தி இறைவனிடம் ஒப்புக்கொடுப்போம், இறைவனிடம் கேட்போம்.

இயேசுவை பார்த்த பொழுது அவருடைய சீடர்களுக்கு, உறவினர்களுக்கு கூட முட்டாள்தனமாக தான் தோன்றியது, "இந்த அற்புதங்களை எல்லாம் எருசலேமிலே, திருவிழாவிலே சென்று காட்டலாமே, அப்பொழுது தானே மக்கள் உன்னை மதிப்பார்கள்" என்றும், “இயேசு புத்தியில்லாமல் நடக்கின்றார்” என்றும், “அவருக்கு பைத்தியம் பிடித்துவிட்டது” என்றும் கூட சொன்னார்கள்.

இந்த உலக ஞானம், விண்ணக ஞானத்தை பைத்தியம் என்றுதான் நினைக்கும். இன்று ஒப்புக்கொடுப்போம்! திருத்தூதர்களை போல, அன்னை மரியாளை போல, இயேசுவை போல, விண்ணக ஞானத்தால் வழிநடத்த ஒப்புக்கொடுப்போம்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!

13/05/2020

கடவுளின் பார்வையில் நான் அருவருப்பானவனா(ளா)?

லூக்கா 16:15 - இயேசு அவர்களிடம் கூறியது: “நீங்கள் உங்களை மக்கள் முன் நேர்மையாளராகக் காட்டிக் கொள்கிறீர்கள். கடவுள் உங்கள் உள்ளங்களை அறிவார். நீங்கள் உங்களை மக்கள் முன் உயர்ந்தவர்களாகக் காட்டிக் கொள்வது கடவுள் பார்வையில் அருவருப்பாகும்.

யாரைப் பார்த்து சொல்கிறார் என்றால்14வது வசனத்தில் இயேசுவை ஏளனம் செய்த பண ஆசை உள்ள பரிசேயர்களைப் பார்த்து இப்படி சொல்கிறார். மனிதர்கள் தங்களை உயர்ந்தவர்களாகக் காட்டிக்

கொள்ள முயற்சி செய்கின்றனர். ஜெபிக்கிறவர்களாகவோ கடவுளுக்கு நெருக்கமானவர்களாகவோ இறைவாக்கினராகவோ தீர்க்கதரிசிகளாகவோ அல்லது வேறு எந்த விதத்திலாவது நாம் நம்மை உயர்ந்தவர்களாக காட்டிக் கொள்வது கடவுள் பார்வையில் அருவருப்பாகும். பரிசேயர்கள் இதைத்தான் செய்தார்கள். தங்களை உயர்ந்தவர்களாகக் காட்டிக் கொள்வதற்கு பெரும் முயற்சி எடுத்தார்கள். தங்களை நல்லவர்களாக, நேர்மையாளர்களாக, அதிகம் ஜெபிப்பவர்களாக, ஏழைகளுக்கு அதிகமாக உதவி செய்கிறவர்களாக, இறைவாக்கு உரைப்பவர்களாக என்று மக்களுக்கு முன்பாக தங்களை உயர்ந்தவர்களாகக் காட்டிக் கொண்டார்கள். இது கடவுளுடைய பார்வையிலே அருவருப்பாகும்.

பொதுவாக ஊழியர்களுக்கு வரக்கூடிய ஒரு பெரிய சோதனை, மற்றவர்களுக்கு முன்பாக மற்ற ஊழியர்களை விட, தான் நேர்மையானவர் என்று காட்டிக் கொள்ள முயற்சி செய்வது; மற்றவர்களை விட தாம் நல்லவர்களாக இருப்பதாக காட்டிக் கொள்ள முயற்சி செய்வது; மற்றவர்களை விட அதிகமாக இரக்க குணம் உள்ளவர்களாக காட்டிக்கொள்ள முயற்சி செய்வது. இதெல்லாம் கடவுள் உங்களுக்கு கொடுத்திருக்கலாம்; சில நல்ல குணங்கள் இருக்கலாம் ஆனால், நம்முடைய தீயகுணங்கள் இப்படி எல்லாம் இருக்கிறது என்று மற்றவர்களிடத்தில் காட்டிக் கொள்கிறோமா? இல்லை நம்மிடத்தில் நல்ல குணங்களை எல்லாம் காட்டிக் கொள்ள விரும்புகிறோம் நம்மிடத்தில் உள்ள நன்மை தனங்களை எல்லாம் மற்றவர்கள் காண வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். ஆனால், நம்மிடத்தில் உள்ள குறைகளை மறைத்துக் கொள்கிறோம். இதுதான் கடவுளுடைய பார்வையில் அருவருப்பானதாகும்.

ஜெபக்குழுக்களில் வரும் ஒரு பெரிய சோதனை

அருங்கொடை ஜெபக்குழுக்களில் இது அதிகமாக காணப்படுகிறது. சிலர் தீர்க்கதரிசனங்கள் சொல்லியிருக்கலாம். தங்கள் தீர்க்கதரிசனங்கள் அப்படியே நிறைவேறுகிறது என்று காட்டிக் கொள்வதற்காக நிறைய பேர் முயற்சி செய்கிறார்கள். ஆனால், அவர்கள் சொன்ன எத்தனையோ காரியங்கள் நிறைவேறாமல் இருக்கிறது. ஆனால், அதைப்பற்றி பேசுவதில்லை. நீங்கள் கூட

இறைவாக்கு உரைக்கலாம், சில வெளிப்பாடுகள் கொடுக்கலாம், எல்லா வார்த்தைகளும் நிறைவேறுகிறதா என்று கேட்டால் பல காரியங்களை தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துகிறார். சில காரியங்கள் இல்லாமல் கூட இருக்கலாம். நமக்கு வருகிற ஒரு பெரிய சோதனையே நாம் நம்மை ஒரு நீதிமானாக நேர்மையாளராக காட்டிக் கொள்ள விரும்புகிறோம்.

சாமுவேலை குறித்து வேதத்தில் வாசிக்கும்போது, அவர் சொன்ன வார்த்தை ஒன்றுகூட தரையில் வீணாக விழவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது. எல்லா வார்த்தைகளையும் தேவன் கனப்படுத்துகிறார். நம்முடைய வார்த்தைகள் அந்த அளவுக்கு சரியானதாக இல்லை ஆகையினாலே தான் பவுல் சொல்கிறார், நாம் உரைக்கிற இறைவாக்கு குறை உள்ளது. இறை வாக்குகள் எல்லாவற்றையும் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டாம். அதை சீர்தூக்கிப் பார்த்து நல்லதை மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள். எங்கே பார்த்தாலும் நாம் என்ன பார்க்கிறோம் என்றால் ஒவ்வொரு வருடமும் தொடக்கத்திலேயே நிறையபேர் தீர்க்கதரிசனங்கள் சொல்கிறார்கள். வருட முடிவில் அதில் எவ்வளவு நிறைவேறி இருக்கிறது எவ்வளவு நிறைவேறவில்லை என்று பார்ப்பதில்லை. அதில் ஏதாவது ஒன்று நிறைவேறிவிட்டால் அதை விளம்பரப்படுத்தி, “நாங்கள் இதை சொன்னோம் அதை சொன்னோம்” என்கிறார்கள். நாம் அப்படிப்பட்ட வலையிலே விழுந்து விடக் கூடாது. ஏனென்றால் நமக்கும் இதே சோதனைகள் வரும். இதையெல்லாம் பார்க்கிற போது நாம் சோதனைக்கு உள்ளாக நேரிடும்.

நம் குறைகளை வெளிப்படுத்துகிறோமா?

நீங்கள் உங்களை மக்கள் முன் நேர்மையாளராக காட்டிக் கொள்கிறீர்கள் கடவுள் உங்கள் உள்ளங்களை அறிவார். நீங்கள் உங்களை மக்கள் முன் உயர்ந்தவராக காட்டிக் கொள்வது கடவுள் பார்வையில் அருவருப்பாகும். மக்கள் நம்மை பார்க்கிற அளவுக்கு அல்லது மக்களிடம் நாம் நம்மை நேர்மையானவர்களாக காட்டிக் கொள்கிற அளவுக்கு இருக்கிறோமா? அல்லது உண்மையிலே இல்லாத ஒன்றை மற்றவர்களுக்கு முன்பாக நம்மையே குறித்து காட்டிக் கொள்கிறவர்களாக இருக்கிறோமா? அப்படியே நாம்

இருந்தால் அதிலே வருத்தப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால் மக்களுக்கு முன்பாக ஒரு தோற்றத்தை கொடுத்துவிட்டு நம் வாழ்க்கையில் நம் உள்ளம் அப்படி இல்லாமல் இருந்தால் அதுதான் பரிதாபத்துக்குரியது அருவருப்பானது என்று வேதத்தில் போடப்பட்டிருக்கிறது. எங்கே போனாலும் மக்கள் நம்மை மதிக்க வேண்டும் என்பதற்காகவே நம்மிடத்தில் இருக்கிற நன்மைகளை வெளிப்படுத்துகிறோம். ஆனால், நம்மிடத்தில் இருக்கிற குறைகளை வெளிப்படுத்தக் கூடியவர்களாக இருக்கிறோமா?

ஜெபிப்பதை குறித்து நிறையபேர் பேசுவார்கள் “நான் இப்படி ஜெபிப்பேன் அப்படி ஜெபிப்பேன்” என்றும், சிலர் தங்களுடைய விசுவாசத்தை குறித்து “இப்படி விசுவாசித்தேன் அப்படி விசுவாசித்தேன்” என்றும், “நான் இப்படியெல்லாம் தியாகம் பண்ணினேன்” என்று அவர்கள் செய்த தியாகத்தை குறித்து பேசுவார்கள் மற்றவர்களுக்கு உதவி செய்த காரியத்தை குறித்தெல்லாம் பேசுவார்கள் தம்மிடத்தில் உள்ள நல்லவற்றை எல்லாம் பேசி மக்களிடத்திலே நேர்மையாளர்களாக தங்களை காட்டிக் கொள்வார்கள். நம்முடைய நன்மைத்தனங்களை எல்லாம் அப்படி காட்டிக் கொள்ளும்போது நம்மிடத்தில் உள்ள தீமைகளை அல்லது பாவங்களை காட்டிக் கொள்ள முடிகிறதா? இரண்டையும் காட்டிக் கொள்ள முடிந்தால் பிரச்சினை இல்லை. கொஞ்சம் நல்லவர்களாக இருக்கிறார்கள் கொஞ்சம் கெட்டவர்களாக இருக்கிறார்கள் என்று மக்கள் நம்மை புரிந்து கொள்வார்கள். ஆனால், நம்முடைய குறைகளை எல்லாம் மறைத்துக் கொண்டு நம்முடைய நன்மைத்தனங்களை மட்டும் வெளியில் காட்டி நம்மை நேர்மையுள்ளவர்களாக காட்டிக் கொள்வது. இதுதான் கடவுளுடைய பார்வையில் அருவருப்பானது. இதில் ஜெபக்கூட்டம் நடத்துகிறவர்கள், செய்தி கொடுப்பவர்கள், ஊழியம் செய்கிறவர்கள் என்று நிறையபேர் இப்படித் தான் இருக்கிறார்கள்.

இதிலே ஒவ்வொருவரும் தங்களை யோசித்துப் பாருங்கள் மக்களிடத்திலே உங்களை காட்டிக் கொள்கிற படி நீங்கள் இருக்கிறீர்களா? இந்த செய்தியில் ஆண்டவர் சொல்லக் கூடிய காரியங்கள் எல்லாம் ஊழியர்களுக்கு ஒரு அச்சம் தரக்கூடியது. நாம் எந்த ஊழியர்களையும் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. பல நேரங்களிலே மற்ற ஊழியர்களைப் பார்த்து காப்பியடிக்க (Copy) கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆனால் தேவனுடைய வசனம்

இப்படிச் சொல்கிறது. நீங்கள் மக்கள் முன் உங்களை நேர்மையானவர்களாக காட்டிக் கொள்கிறீர்கள் கடவுள் உங்கள் உள்ளங்களை அறிவார். மக்கள் முன் உங்களை அவ்வாறு காட்டிக்கொள்வது கடவுள் பார்வையில் அருவருப்பானது. நம்மை மற்றவர்கள் முன் உயர்ந்தவர்களாகக் காட்டிக் கொள்வது தேவனுடைய பார்வையில் அருவருப்பானது.

தேவனுக்கு முன்பாக நீதிமான்களாய் மாறுவோம்

இந்த சோதனையிலிருந்து நாம் வெளிவர வேண்டும். ஏன் நம்முடைய நற்செயல்களை மனிதர்கள் முன் காட்டிக் கொள்ளாமல் மறைவாக வைக்க வேண்டும் என்றால் நம்முடைய பாவங்களை குறைகளை மறைவாகத்தானே வைத்திருக்கிறோம். அதையெல்லாம் வெளிப்படையாக மனிதர்கள் முன்பாக நான் இவ்வளவு மோசமாக இருக்கிறேன் என்று சொல்வதில்லையே. நம்முடைய உள்ளத்திலே இருக்கிற குறைகளை வெளிப்படையாக அடுத்தவர்களுக்கு காட்டுவது இல்லையே, மக்களுக்கு முன்பாக அவைகளை காட்டுவதில்லையே, நம்மிடத்திலே இருக்கக் கூடிய நன்மைகளை மட்டும் ஏன் காட்ட வேண்டும்? குறிப்பாக பொது வாழ்க்கையில் ஈடுபடக்கூடிய எல்லாருக்கும் வரக்கூடிய ஒரு சோதனை. பரிசேயர்களிடத்திலே இந்த செயல் அதிகமாக காணப்பட்டது.

நாம் நம்மை நேர்மையாளராக மற்றவர்களுக்கு முன்பாக நிரூபிக்கவோ காட்டிக்கொள்ளவோ அவசியமில்லை. அது மறைவாக இருந்தாலும் தேவன் அதை கூர்ந்து பார்க்கிறார். வெளியரங்கமாய் பதில் தருகிறார். ஆகையினாலே, நம்மை குறித்த பெருமைகளை மற்றவருக்கு முன்பாக காட்டுவதை தவிர்த்து முடிந்த வரைக்கும் ஒளிந்து கொள்ள வேண்டும். நம்முடைய குறைகளை நாம் வெளியில் கொண்டு வரலாம். அதனால் நமக்கு ஆபத்து இல்லை. மனிதர்கள் வேண்டுமானால் நம்மை, “என்ன ஊழியம் பண்ணுகிறார்கள்? இவர்களே இப்படி இருக்கிறார்கள் என்று நம்மை நினைத்துக் கொண்டு போகலாம்”. ஆனால், தேவனுக்கு முன்பாக நாம் நீதிமான்களாக இருப்போம்; அருவருப்பானவர்களாக இருக்க மாட்டோம். ஆனால், மக்களுக்கு முன்பாக நம்மை நேர்மையானவர்களாக காட்ட விரும்பும் போதெல்லாம், நம்முடைய

நன்மை தனங்களை காட்ட விரும்பும் போதெல்லாம், கடவுளுடைய பார்வையில் அருவருப்புக்குரியவர்களாக இருக்கிறோம்.

பரிசேயர்களிடத்திலிருந்த பாவம்

யோசித்துப் பாருங்கள் தேவனுடைய பார்வையிலே அருவருப்பான பாவங்களிலேயே இதுவும் ஒன்று. இதை ஏதோ சாதாரணமாக எடுக்க முடியாது. கடவுளுடைய பார்வையில் இது அருவருப்பாகும். ஆண்டவர் இயேசு கிறிஸ்து, அப்போஸ்தலர்களுக்கு இதைச் சொல்லும்போது, “பரிசேயர்கள் பக்தி உள்ளவர்கள் நன்றாக ஜெபிக்க கூடியவர்கள் தான், தர்மங்களை எல்லாம் செய்யக்கூடியவர்கள் தான், நோன்பிருந்து ஜெபிக்க கூடியவர்கள் தான் ஆனால், தங்களை நீதிமான்களாக காட்டிக் கொள்ளவே விரும்பினார்கள்” என்று கூறினார். தங்கள் உள்ளங்களை சீர்ப்படுத்துவதற்கு பதிலாக தங்கள் குறைகளை மறைத்து நேர்மையானவர்களாக காட்டிக் கொள்ள விரும்பினார்கள். இதுதான் பரிசேயர்களிடத்திலிருந்த பாவம். மனிதர்களுக்கு முன்பாக தங்களை நேர்மையானவர்களாக காட்டிக் கொள்ள விரும்பினார்கள்.

தியானிப்போமாக

இந்த சோதனைகள் எல்லாம் நமக்கு வரவில்லையா? இந்த சோதனைகளில் எத்தனை முறை நாம் விழுந்து போகிறோம்? எத்தனை முறை இந்த சோதனைகளில் சிக்கிக்கொள்கிறோம்? எத்தனை முறை கடவுளுடைய பார்வையில் இப்படி அருவருப்பாக இருந்திருக்கிறோம்? தேவனுடைய பிள்ளைகள் தேவனுக்குள்ளே உண்மையாக வளர வேண்டும், கனி தர வேண்டும் என்றால் இப்படிப்பட்ட அருவருப்புகளில் இருந்து நாம் வெளிவர வேண்டும். இது ஒரு வெளிவேடம். இந்த கண்ணிகளில் பல நேரம் விழுந்து விடுகிறோம். கடவுளுடைய பார்வையில் இது அருவருப்பாக இருக்கிறது என்றால் பிசாசு இந்த காரியங்களை செய்வதற்கு ஒத்துழைக்கிறான் என்று அர்த்தம். தேவனுடைய பார்வையிலே எதெல்லாம் அருவருப்பாக இருக்கிறதோ அதைச் செய்யும் படி பிசாசானவன் தூண்டுவான். இந்த காரியங்களை நாம் செய்யும்

போதெல்லாம் பிசாசு நம்மை தூண்டுகிறான் என்பதை நாம் அறியவேண்டும்.

பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதும் உண்மையை மாற்றி பொய்யை கொடுக்கிறவர் அல்ல. அவர் உண்மையை வெளிப்படுத்துகிற ஆவியானவர். ஆகையினாலே நாம் நேர்மையாளராக காணப்படுவதை விட நேர்மையானவர்களாக நம் மனம் மாற வேண்டும். மற்றவர்கள் நம்மை நேர்மையானவர்களாக நினைக்கும்படி நம்முடைய உள்ளம் நேர்மையாக இருக்கிறதா? இல்லையே! தானியேல் போன்ற பெரிய பெரிய இறைவாக்கினர்கள், ஊழியர்கள் தாங்கள் நேர்மையானவர்களாக இப்படி காணப்படுவதற்கு பயப்படுகிறார்கள்.

தானியேல் கொண்டிருந்த மனத்தாழ்மை

தானியேல் 2வது அதிகாரத்தில் இதை வாசிக்கிறோம். பாரசீக மன்னன் ஒரு கனவு காண்கிறான். தன்னுடைய ஞானிகளை எல்லாம் அழைத்து நான் கண்ட கனவையும் அதனுடைய பொருளையும் நீங்கள் சொல்ல வேண்டும். இல்லையென்றால் உங்களை கொன்றுவிடுவேன் என்று சொல்கிறான். அங்கே உள்ள ஞானிகள் எல்லாம் பயப்படுகிறார்கள். அரசனிடம் நீர் கனவை சொல்லும் நாங்கள் பொருளை சொல்கிறோம் என்றார்கள். ஆனால் அரசனோ கனவை சொல்ல மாட்டேன் நீங்கள் பொருளை சொல்லுங்கள் இல்லையென்றால் கொன்று விடுவேன் என்று சொல்கிறான். தானியேலோ தம் நண்பர்களோடு சேர்ந்து ஜெபிக்கிறார். அப்படி ஜெபிக்கும் போது தானியேலுக்கு அது வெளிப்படுத்தப்படுகிறது. அரசனை சந்திக்கும் படியாக தானியேல் போகிறார். அரசன் நான் கண்ட கனவையும் பொருளையும் உன்னால் சொல்ல முடியுமா என்று கேட்கிறான். தானியேல் சொன்ன பதில் என்ன? **“தானியேல் 2:30 - ஆனால் என்னைப் பொறுத்தமட்டில் மற்றெல்லா உயிர்களையும் விட நான் ஞானம் மிக்கவன் என்பதால் எனக்கு வெளிப்படுத்தப்படவில்லை**”. தானியேல் தன்னை எப்படி தாழ்த்துகிறார் என்று பாருங்கள். அந்த அரசன் தன்னை ஞானி என்று நினைத்துவிடக் கூடாது என்பதற்காகவே இப்படி தாழ்த்துகிறார். தானியேல் உண்மையாகவே ஒரு ஞானி; மறைபொருள்களை எல்லாம் வெளிப்படுத்துகிற ஆற்றல் பெற்ற ஒரு ஞானியாகவே

தானியேல் இருந்தார். ஆனாலும் அரசன் தன்னை ஞானி என்று நினைத்து விடக்கூடாது என்பதற்காக அவ்வாறு சொல்கிறார். அரசன் தன்னை ஞானியாக நினைத்து விடுவாரோ என்று பயந்து தன்னை ஒளித்துக் கொள்கிறார். இதுதான் தேவனுடைய பார்வையிலே சிறந்தது.

ஆனால், இன்று பாருங்கள் நிறைய தீர்க்கதரிசனங்களை சொல்கிறோம். நிறைய பார்க்கிறோம். நாங்கள் சொன்னது நிறைவேறிவிட்டது என்று பலர் சொல்கின்றனர். தேவனுடைய பார்வையிலே இது அருவருப்பான ஒன்றுதான். நம்மை ஒரு நேர்மையாளராகவோ அல்லது நம்மை ஞானமிக்கவர்களாகவோ மிகவும் பரிசுத்தவான்களாகவோ அல்லது நிறைய தாராள குணம் உள்ளவர்களாகவோ இரக்கம் உள்ளவர்களாகவோ மற்றவர்களுக்கு முன்பாக நம்மை காட்டிக் கொள்ளக் கூடாது.

இயேசு கிறிஸ்துவின் மனத்தாழ்மை!

இயேசு கிறிஸ்துவின் போதனைகளிலே இது மிக முக்கியமானது. அவர் வாழ்ந்த வாழ்க்கையும் இதுதான். "நீர் ஏன் ஒளிந்து கொள்கிறீர் மக்களுக்கு உம்மை வெளிப்படுத்தலாமே" என்று தான் அவருக்கு ஆலோசனை சொன்னார்கள். ஆனால் அவரோ மறைந்து ஓடிப்போனார். அவர்கள் நடுவிலே நிற்காமல் ஓடி போய் விடுகிறார். ஆகையினால் தான் அவர் செய்த அற்புதங்களை கூட வெளியில் சொல்லாதீர்கள் என்றார். அந்த அளவுக்கு அவர் தன்னை ஒளித்துக் கொள்கிறார். கடவுளுடைய மாட்சிக்காக அற்புதங்களை சொல்லலாம்; அந்த அற்புதங்களுக்கு நாம் காரணமானவர்கள் அல்ல; நமக்கு பின்னால் நம் கண்களுக்கு பார்க்க முடியாத எத்தனையோ பேர் இதற்காக ஜெபிக்கிறார்கள்.

நாம் ஒருவேளை முன்னாலே நிற்கிறவர்களாக இருக்கலாம் அவ்வளவுதான். இதற்காக ஜெபிக்கிறவர்கள் எத்தனையோ பேர் நமக்கு மறைவாக ஜெபித்துக் கொண்டே இருக்கிறார்கள். ஆகையினாலே அந்த அற்புதங்கள் நடக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆகையினாலே, மனிதர்கள் முன்பாக நேர்மையானவர்களாக காணப்படுவதற்கு பயப்படுங்கள். ஏனென்றால் நாம் ஒரு நேர்மையானவர்களாக இல்லை. நாம் செய்த காரியங்கள் எல்லாம் வெளிப்படையாக தெரிந்தால் நம்மை யாரும்

மதிக்க மாட்டார்கள். காரி துப்பிவிட்டு போய் விடுவார்கள். நீங்கள் ஒருவேளை நல்லவர்களாக இருந்திருக்கலாம். அதனாலேயே உங்களுக்கு அது சோதனையாக தெரியவில்லை. அப்படி இல்லாதவர்களுக்கு அது சோதனையாக தெரிகிறது. உங்களை மக்கள் முன் நேர்மையாளராக காட்டிக்கொள்வது கடவுள் பார்வையில் அருவருப்பாகும்.

அற்புதங்களை செய்வதினாலே நாம் உயர்ந்தவர்கள் அல்ல

எந்த விதத்திலும் மற்றவர்களைவிட நாம் உயர்ந்தவர்கள் அல்ல சில வரங்களை தேவன் கொடுத்திருப்பதால் மற்றவர்களை விட நாம் உயர்ந்தவர்கள் அல்ல. தேவன் நம்முடைய வாழ்க்கையிலே பெரிய நன்மைகளை அற்புதங்களை செய்வதினாலே மற்றவர்களை விட நாம் உயர்ந்தவர்கள் அல்ல அப்படி உயர்ந்தவர்களாக காட்டிக் கொள்ள விரும்பினால் அது தேவனுடைய பார்வையில் அருவருப்பு. தாழ்த்துக்கள்; சிலபேருக்கு ஊழியம் செய்ய போனவுடன் இரண்டு கொம்பு முளைத்து விடுகிறது. இன்னும் நாம் அதே உடலில் தான் இருக்கிறோம். இன்னும் பாவம் செய்வதற்கோ பாவத்தில் விழுவதற்கோ எவ்வளவோ வழிகள் உண்டு. ஆண்டவர் கிருபையாலே நிலைநிற்கிறோம்; அவர் கிருபை நம்மைத் தாங்கி கொண்டுள்ளது. எந்த விதத்திலும் மற்றவர்களை விட நாம் உயர்ந்தவர்கள் அல்ல. இதை எப்போதும் நம் மனதிலே வைத்திருக்க வேண்டும். மற்றவர்களை விட நம்மை உயர்ந்தவர்களாகவோ நேர்மையாளர்களாகவோ காட்டக் கூடாது. இதனால் ஊழியம் செய்யப்போகிற இடங்களில் மக்கள் உங்களை பலவாறு பேசுவார்கள். அந்த காலகட்டத்திலே இறைவாக்கினர்களை எல்லாம் கல்லால் எறிந்தார்கள். ஆனால் இன்று அப்படி இல்லை. இன்று எங்கு போனாலும் ஒரே பாராட்டு மழைதான் விழுகிறது. நம்மை பாராட்டி பாராட்டி மாலை போடலாம். ஆனால், ஒருநாளும் மறந்து போய் விடாதீர்கள்.

புனிதர்களின் மனத்தாழ்மை

கழுதையை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். இயேசு கழுதை மேல் ஏறி போனார். அங்கு இயேசுவுக்காக என்ன விரித்தாலும் கழுதை தான் அதன் மேல் நடந்து போனது. விரித்தது கழுதைக்காக அல்ல; இயேசு நம்மோடு வருவதால் விரிக்கிறார்களே தவிர நாம் வெறும்

கழுதைதான். திருமுழுக்கு யோவான் எவ்வளவு வெளிப்படையாக சொல்கிறார். **யோவான் 1:21- “நீர் எலியாவா?” என்று அவர்கள் கேட்க, அவர், “நானல்ல” என்றார் “நீர் தாம் வர வேண்டிய இறைவாக்கினரா?” என்று கேட்டபோதும், அவர், “இல்லை”** என்று மறுமொழி கூறினார். ஏனென்றால் எல்லாரும் அவரை மெசியா என்று நினைத்தார்கள். நாம் நேர்மையாளரோ நீதிமான்களோ தீர்க்கதரிசியோ இல்லை. அதனால் எப்பொழுதும் இதில் கவனமாக இருங்கள். மக்களுக்கு முன்பாக நேர்மையாளராக நீதிமானாக காட்டிக் கொள்கிற சோதனை நமக்குள்ளே உண்டாகும் போது கவனமாக இருங்கள். நம்மை ஏன் நீதிமான்களாக உயர்த்திக் காட்டக் கூடாது. எப்பொழுது நம்முடைய நல்ல காரியங்களை நற்செயல்களை உயர்த்திக் காட்டுகிறோமோ அப்போது இன்னும் நம்முடைய குறைகளை உயர்த்திக் காட்டிப் பார்ப்போம். அப்போது சமமாகிவிடும். இதற்குத்தான் புனிதர்கள் எல்லாம் பயந்து ஓடினார்கள்; புனிதர்கள் முட்டாள்கள் அல்ல; கடவுளுடைய வார்த்தைகள் தெரியாதவர்களும் அல்ல; பிறகு ஏன் பயந்தார்கள் என்றால் தேவனுடைய பார்வையில் அருவருப்பானவர்களாக மாறி விடக்கூடாது என்பதால் தான்.

இன்று அருங்கொடை குழுக்களில் அல்லது பிற சபை குழுக்களில் இந்த வார்த்தையை சரியாக அறிந்து கொள்ளாமல் புரிந்து கொள்ளாமல் நிறைய காரியங்களை செய்கிறார்கள். அதனால்தான் திருச்சபை புனிதர்களை உயர்த்திக் காட்டுகிறது. புனிதர்கள் இறைவார்த்தையை வாழ்ந்து காண்பித்தார்கள். இறைவார்த்தையை எப்படி வாழ்வது என்றால் புனிதர்களுடைய வாழ்க்கையில் நாம் கண்டு பாவிக்கலாம். புனிதர்கள் வாழ்ந்து காட்டினார்கள். அவர்கள் வாழ்க்கையை வாசிக்கும் போதுதான் இறைவார்த்தையின் பொருளை நாம் உணர்ந்து கொள்கிறோம்; இல்லையென்றால் இந்த பொருளை நாம் சரியாக உணர்ந்து கொள்ள மாட்டோம்.

இறை வார்த்தையை வாழ்ந்து காட்டிய புனிதர்கள்

இன்று இணையதளத்தில் பல செய்திகளை நீங்கள் கேட்க நேரிடும்; பல காரியங்களை பார்க்க நேரிடும்; பல பிரசங்கங்களை கேட்க வேண்டிய சூழ்நிலை வரலாம். ஆனாலும், புனிதர்கள் வாழ்ந்த வாழ்க்கையை முன் உதாரணமாக வைக்கிறோம் என்றால் அவர்கள்

தான் இந்த வார்த்தையை வாழ்ந்து காட்டுவது எப்படி என்று செய்து காட்டினார்கள். இயேசு எப்படி வாழ்ந்து காண்பித்தாரோ அவருக்குப் பின்னாலே இவர்கள் வாழ்ந்து காண்பித்தார்கள். ஏதோ இறைவார்த்தையை எடுத்து அழகாக அதை பிரசங்கம் பண்ணுகிறவர்களாக அவர்கள் இல்லை; இறை வார்த்தையை வாழ்ந்து காண்பிக்கிறவர்களாக அவர்கள் இருந்தார்கள். அதனாலே அவர்களைத் தான் நாம் பின்பற்ற வேண்டும். இதனால் தான் புனிதர்கள் அவர்களுக்கு பெயர் வந்துவிடுமோ புகழ் வந்துவிடுமோ என்று பயந்து ஓடினார்கள். சிலர் காடுகளுக்குள் ஒளிந்து போய் கொண்டார்கள் இந்த உலகத்தில் இருந்தால் நம்மை புகழ்ந்து விடுவார்கள் என்று வனவாசம் ஓடினார்கள். காடுகளுக்குள்ளே ஓடிப்போனார்கள். மனிதர்களுடைய சகவாசத்தை தவிர்த்துவிட்டு குகைகளில் கூட போயிருந்தார்கள். மிகப்பெரிய புனிதர்கள் அப்படி செய்தார்கள். புனிதர்கள் ஒன்றும் தெரியாதவர்களோ முட்டாள்களோ அல்ல மனிதர்களுக்கு முன்பாக நாம் நேர்மையாளராக காட்டி விடுவோமோ என்று பயந்து ஓடினார்கள். அந்த பயம் தான் அன்னை மரியாளுக்கு இருந்தது. வானதூதர் வந்து "மரியே வாழ்க! அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க"! என்று சொன்னவுடனே பயந்தார்கள். வாழ்த்தை கேட்டவுடன் ஒரு பயம் ஒரு கலக்கம் அவர்களுக்குள்ளே வந்தது.

நாம் எப்படி இருக்கிறோம்?

மற்றவர்கள் நம்மை நீதிமான்கள் என்று சொல்ல வேண்டும், தீர்க்கதரிசிகள் என்று சொல்ல வேண்டும், அப்போஸ்தலர்கள் என்று சொல்ல வேண்டும் என்று நாம் ஆசைப்படுகிறோம். ஆனால் இவைகள் எல்லாம் ஆபத்தானவை. இறைவாக்கினருடைய வாழ்க்கைக்கும் என்னுடைய வாழ்க்கைக்கும் எவ்வளவு வித்தியாசம் புனிதர்களுடைய வாழ்க்கைக்கும் என்னுடைய வாழ்க்கைக்கும் எவ்வளவோ தூரம் இருக்கிறது. நாம் நடிக்கவோ பேர் வாங்கவோ காட்டிக்கொள்ளவோ இல்லாமல் இருப்பதுதான் நல்லது. புனிதர்கள் தங்களை ஒடுக்கி தேவனுக்கு முன்பாக கிடந்த செயல்களுக்கும், தியாகங்களுக்கும் முன்பாக நாம் செய்யக்கூடிய காரியங்கள் எல்லாம் ஒன்றுமே இல்லை, ஆனால், அவர்களைப் போல பேர் வாங்குவதற்கும் நேர்மையாளராக காட்டிக் கொள்வதற்கும் பல

நேரங்களிலே விரும்பி வெற்றியும் அடைந்து விட்டோம் என்றால், அது கடவுளுடைய பார்வையில் அருவருப்பு.

மன்னிப்பு கேட்போம் மனம் திரும்புவோம்

யோசித்துப் பாருங்கள் இப்படிப்பட்ட சோதனைகளில் எத்தனை முறை நான் விழுந்திருக்கிறேன்? எத்தனை முறை இந்த சோதனைகளிலே அலைக்கழிக்கப் படுகிறேன்? இனியாவது இப்படிப்பட்ட காரியங்களை புரிந்துகொண்டு இந்த சோதனைகளில் விழாதபடிக்கு கவனமாக இருங்கள். இத்தகைய காரியங்களை முற்றிலும் மேற்கொள்பவர்கள் ஆக இருந்தால் தான் கடவுளுடைய பார்வையில் அருவருப்பானவர்களாக இருக்க மாட்டோம். ஆகையால் நம்மை ஆராய்ந்து பார்த்து இது போன்ற காரியங்களில் நாம் விடுதலை பெறும்படி ஒப்புக் கொடுப்போம். இதுபோன்ற சோதனைகளில் விழுந்த நேரத்திற்காக ஆண்டவரிடத்தில் மன்னிப்பு கேட்போம் இனி விழுந்தாலும் சோதனையை மேற்கொள்ள ஆண்டவரிடத்தில் உதவி கேட்டு ஜெபிப்போம்.

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவிக்கும் மகிமை உண்டாவதாக!